# செங்கதிர்



16394

378.05
திசங்
SL/PR

# இளங்கதிர்

## 30வது ஆண்டு மலர் (96/97)

*"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்*
*மங்காத தமிழென்று சங்கே முழங்கு"*

*இதழாசிரியர்:*
**செல்வன். இராசரத்தினம் இரவிசங்கர்**

*வெளியீடு:*
**தமிழ்ச் சங்கம்,**
**பேராதனைப் பல்கலைக் கழகம்,**
**பேராதனை.**

## தமிழ்ச் சங்கக் கீதம்

புகழ் திகழ் தமிழ் மகள் புவிமீ தாளும்
பொன்னாள் வருக! வருக!!
மகிழ்வுறு தமிழ்நில மாந்தர்கள் பண்பு
மலைவிளக் காகவே ஒளிர்க
சகலரும் ஒருதாய் தன்பிள்ளை கள்போல்
சமத்துவ மாகவே வாழ்க
தனித்துவம் காத்திட எழுக! எங்கள்
தமிழ்க் குற ளறநெறி தழைக்க
தாயக மணிக்கொடி துலங்க
பனித்திடு மலைசூழ் பழநகர் பேரா
தனையுயர் தமிழ்க்கலை மன்றம்
வளர்க! வளர்க! வளர்க!
மாநிலம் போற்றிட வளர்க!!

வளம்தரு மாவலி நதிமருங் கமைந்தபே
ராதனைப் பல்கலை மன்றில்
விளைந்திடு பயிரராய் விளங்கிடு சங்கம்
வீறு கொண் டிலங்கி மிளிர்க
இளந்தமிழ் மாணவர் இன்கலைக் கோட்டம்
இவ்வுலக குளவரை துலங்க
ஈழமணி நாடுயுர்க! எங்கள்
நாளைய வாழ்வும் உயர்க
நமதிறை அருண்வழி பொலிக
பாளையின் குளிர்தரு மலைசூழ் பேரா
தனைத் தமிழ்ப் பணியகம் வாழ்க!
வாழ்க! வாழ்க! வாழ்க!
பல்லாண் டுயர்வுடன் வாழ்க.

**மெட்டு** : **"ஜன கண மன'' எனும் இந்திய தேசிய கீதம்**
**ஆக்கம்** : **சக்திதாசன்.**

# *A Message from our Vice - Chancellor*

*I am pleased to issue message of greetings once again to the Annual Magazine of the Tamil Society - Illankathir*

*The tamil Society of Peradeniya Campus has emerged as an outstanding society this year because of its ability in organizing many useful programmes and cultural events to enrich the academic and aesthetic life of the Campus.*

*Illankathir has a proud record since it has maintained high standards and fostered noble values and attitudes to sustain social harmony, cultural upliftment and national development. It gives a sense of achievement to find that some of its editors have in later years become the editors of national daily newspapers and a few of the known Tamil scholars had their maiden attempts published in this journal.*

*I am perticularly happy to note the enormous effort it had taken to urge amity and understanding among the various social, cultural and political group that co-exist in this campus. These are efforts that would go a long way in achieving the much needed national integration.*

*I congratulate the Editor, and the Working Committee for their contribution.*

**UNIVERSITY OF PERADENIYA.**

**MARCH 10 -1997**

**PROF. C.M. MADDUMA BANDARA**

**VICE - CHANCELLOR**

# பெருந்தலைவர் வாழ்த்துகின்றார்....

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பழம் பெரும் சங்கங்களுள் ஒன்றாகத் திகழும் தமிழ்ச்சங்கம் மேற்கொண்டு வரும் மிக முக்கியமான பணிகளுள் முதன்மையானதாக விளங்குவது வருடாந்த மலரான இளங்கதிரை அது வெளியிடுவதேயாகும்.

தமிழச்சங்கம் ஆரம்பிக்கப்பட்டு இருபத்திரண்டு ஆண்டுகளின் பின்பே முதலாவது இளங்கதிர் இதழ் வெளிவந்ததும் அதனைத் தொடர்ந்து இற்றை வரையிலான நாற்பத்தொன்பது ஆண்டுகள் காலப்பகுதியில் எல்லாமாக முப்பது இதழ்களே வெளிவந்துள்ளமையும் ஆழமாகச் சிந்திக்க வைக்கின்றன.

எமது நாட்டில் 1950களின் பிற்பகுதியிலிருந்து இற்றைவரை "நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும்" முனைப்புடன் வளர்ந்து வரும் பல்வேறு துறைகளிலான முரண்பாடுகள், நெருக்கடிகள் முதலியவை ஒருபுறம், இந்நாட்டில் தமிழ்மொழி மூலமான பிரசுர வெளியீட்டு வசதிக்குறைபாடுகள் அன்று தொட்டு இன்றுவரை எம்மை உறுத்துதல் மறுபுறம்.

இவற்றுக்கு மத்தியிலேயே இளமைத்துடிப்பும் செயல்வேகமும் அர்ப்பண சிந்தையும் கொண்ட பல்கலைக்கழ மாணவர்களது அயரா உழைப்பின் அறுவடையாக 1948 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை - இடையிடையே சில இதழ்கள் வெளிவராதபோதும் - இளங்கதிர் மலர்ந்து ஒளிபரப்பிக் கொண்டிருக்கின்றது.

"பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கத்தின் வரலாற்றையும் அதன் வளர்ச்சியையும் செயற்பாடுகளையும் சாதனைகளையும், அதன் வளர்ச்சிப் பாதையில் ஏற்பட்ட இடையூறுகளையும் அதற்கான காரணங்களையும் தக்கமுறையில் அவ்வப்போது பதிந்து வைத்துள்ளமை இளங்கதிர் ஏட்டின் தனிச்சிறப்பாகும். பேராதனைப் பல்கலைக்கழக வரலாறு, அதன் வளர்ச்சி, தமிழ்ச் சங்க வரலாறு, தமிழ்பேசும் மக்களது வரலாறு, ஈழத்து இலக்கிய வரலாறு, ஈழத்துத் தமிழியல் ஆய்வு முயற்சிகள் முதலியவற்றை எழுதுவோரோ ஆராயப்புகுவோரோ இளங்கதிர் இதழ்களைப் புரட்டாது தமது முயற்சியை முழுமையாக்க முடியாது" என்ற உண்மையை வெளிப்படுத்தும்வகையில் இவ்வாண்டும் வெளிவந்துள்ள 'இளங்கதிர்' இதழ் புலப்படுத்தி நிற்றல் மனங்கொளத்தக்கது.

பல்கலைக்கழக மாணவியரதும் மாணவர்களதும், அயராமுயற்சியையும் தீவிர ஆர்வத்தையும் தன்நம்பிக்கையையும் ஆற்றலையும் போற்றுகின்றோம், பாராட்டுகின்றோம், வாழ்த்துகின்றோம்.

தொடர்ந்தும் எதிர்காலத்தில் இளங்கதிரின் இதழ்கள் காத்திரமாகவும் பயன்மிக்கனவாகவும் வெளிவர வேண்டுமென ஆசைப்படுகின்றோம். இது பேராசையல்ல.

***கலாநிதி. க. அருணாசலம்***
***பெருந்தலைவர்,***
***தமிழ்ச் சங்கம்.***

***தமிழ்த்துறைத் தலைவர்,***
***பேராதனைப் பல்கலைக் கழகம்,***
***பேராதனை***

## பெரும்பொருளாளர் வாழ்த்துகின்றார்.......

அரை நூற்றாண்டிற்கு மேலாக, பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச்சங்கம் தன் சேவையால் செந்தமிழின் இனிமையையும், அழகையும், செவ்வையையும் பேணி, காத்து, வரும் ஆண்டு மலரான 'இளங்கதிர்' முப்பது இதழ்களை இதுவரை மலர்வித்துள்ளது.

தமிழ்ச் சங்கத்தின் கலைவிழாவும், இளங்கதிர் வெளியீடும் காலங்காலமாக பல்கலைக்கழகத்தின் பாரம்பரிய கலாச்சார நிகழ்வாக இடம்பெற்று வருகின்றன. இவ்விழாவின்போது தமிழ்ச் சங்கத்தின் கொடி ஏற்றப்படுவதுடன், விழா ஆரம்பமாவது வழமையாகும். எனினும் கடந்த அரை நூற்றாண்டு காலத்தில் எதிர்கொள்ளாத ஒரு துர்ப்பாக்கிய நிலைமையினை கடந்த ஆண்டில் தமிழ்ச்சங்கம் எதிர்கொள்ள நேர்ந்தது. நிர்வாகத்தினர் தமிழ்ச்சங்கக் கொடியினை ஏற்றுவதற்கான அனுமதியினை வழங்கத்தவறியமையால் கொடியேற்ற முடியாமற் போனது தமிழ்ச்சங்க இளங்கதிர் வெளியீட்டு விழாவின் கறைபடிந்த நிகழ்வாகக் கொள்ளவேண்டியுள்ளது. எனினும், விரிவுரையாளரினதும், மாணவர்களினதும் தூரதிருஷ்டி செயற்பாட்டினால் கொடியேற்றப்படாது போனாலும் ஏனைய நிகழ்வுகள் இனிது நிறைவுற்றமையை பாராட்டாமல் இருக்கமுடியாது. இவ்வாறு தமிழ்ச்சங்கம் காலாகாலம் பலதரப்பட்ட இடர்களை எதிர்கொள்கின்ற போதெல்லாம் அவற்றை ஒரு படிக்கல்லாக அமைத்து தமது பணியினை நிதானமாகவும், செயற்றிறன் மிக்கதாகவும் ஆற்றிவருவதை பாராட்டாமல் இருக்க முடியாது.

தமிழ்ச் சங்கத்தின் பணி சிறக்க, மேலும் பல இளங்கதிர்கள் வெளிவர மனமுவந்து வாழ்த்துகின்றேன்.

**வை.நந்தகுமார்,**
**பெரும்பொருளாளர்,**
**தமிழ்ச் சங்கம்**

**புவியியல்துறை,**
**பேராதனைப் பல்கலைக் கழகம்,**
**பேராதனை.**

## "இளங்கதிருக்கு இனி வானமே எல்லை"

பேராதனை வளாகத் தமிழ்பேசும் மாணவரின் தலையாய சஞ்சிகையான இளங்கதிர், காலக் கண்ணாடியில் தனது முப்பதாம் முகம் காட்டுவதையிட்டு உண்மையில் நாம் சந்தோசப்படத்தான் வேண்டும். எந்தவொரு பண்பாடோ, சமயமோ, நிறுவனமோ, நிலைத்திருக்க வேண்டுமாயின் காலத்துக்குக் காலம் தோன்றும் மாறுதல்களுக்கும் தேவைகளுக்கும் முகங்கொடுக்கும் ஆற்றல் பெற்றதாயிருத்தல் வேண்டும். அந்தவகையில் இன்றைய தகவற் புரட்சி யுகத்தில் நம் இளங்கதிர் இன்ரநெற்றிலும் தன் தடம் பதித்து வெளிவருவது இன்னும் கூடுதல் சந்தோஷத்திற்குரியது. தமிழ்ச் சங்கத்தைப் பொறுத்தவரையில் இதனையொரு முன்னேற்றப் பாய்ச்சல் என்று நான் கருதுகின்றேன்.

இளைய தலைமுறைச் சிறப்பிதழாக வெளிவரும் இவ் இளங்கதிர் நிச்சயமாய் உங்களுக்குப் பயன்படும் என்பது எனது எண்ணம். அப்பயன்பாட்டின் அளவிலேயே இவ்விதழின் வெற்றியும் அதற்காயுழைத்த எம் தோழர்களின் ஆத்ம திருப்தியும் அடங்கியுள்ளன.

இவ்விதழ் வெளியீட்டுக்காக திருமலையில் நடாத்திய 'குறிஞ்சி நாதம்' நிகழ்வை நிஜமாக்கிக் காட்டிய அந்நிகழ்வின் அனைத்துப் பங்காளிகளும் உண்மையில் போற்றுதற்குரியவர்கள். எமது ஒவ்வொரு செயற்பாடுகளிலும், நிகழ்வுகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய விரிவுரையாளர்களும், மாணவர்களும், பெருமைக்குரியவர்கள். இவ்வாறாக தமிழ்ச்சங்கத்தின் ஒவ்வொரு நிகழ்விலும் தோள் கொடுத்த எல்லாத் தோழர்களினதும் சார்பாய் வாழ்த்துகிறேன் "இளங்கதிருக்கு இனி வானமே எல்லை".

**பொறியியற் பீடம்**
**பேராதனைப் பல்கலைக் கழகம்,**
**பேராதனை**

**பரமானந்தன் பிரதீபன்**
**தலைவர்,**
**தமிழ்ச் சங்கம்**

## *இளங்கதிரின் இன்முகம் என்றென்றும் வாழ்க !*

பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச் சங்கத்தின் அறுபத்திரண்டாவது செயற்குழுவாம் நாம், எமது ஆண்டு மலராம் "இளங்கதிர்" இனை உங்கள் முன் சமர்ப்பிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகிறோம்.

பல்கலை பயில நாட்டின் பல்திசையிலிருந்தும் கூடும் தமிழ் பேசும் மாணவர்களின் கலை, இலக்கிய சேவை இலை மறைகாயாகப் போய்விடாது அவற்றை வெளிக் கொணர நாமும் ஒரு ஊடகமாக இருப்பதை எண்ணி பெருமையும், பேருவகையும் அடைகிறேன். எமது ஆண்டு மலராம் இளம் கதிர் இதற்கு சான்று பகிரப் போவது திண்ணம்.

பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் எம்முடன் அயராது ஆக்கமும் ஊக்கமும் தந்து இவ்விதழைச் சிறப்புடன் வெளியிட உழைத்த அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியினைச் செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

இதே போல் என்றென்றும் தமிழ்ச் சங்கம் தனது கலை, கலாசார, இலக்கிய சேவை பணிகளினின்றும் நழுவாது வெற்றியுடன் வீறு நடை போடும் என்பது எனது உறுதியான நம்பிக்கை.

எமது முப்பதாவது இளங்கதிரின் இன்முகம் உங்கள் இதயங்களுடன் உறவாடி வாழ மகிழ்வுடன் வாழ்த்துகிறேன்.

***மருத்துவ பீடம்***

***பேராதனைப் பல்கலைக் கழகம்,***

***பேராதனை***

***சி. பரணீஸ்வரன்***

***செயலாளர்***

***தமிழ்ச் சங்கம்***

## *தமிழ் உலகு பெருமைப்பட*

பேராதனை வளாக தமிழ்ச்சங்கத்தின் 50வது ஆண்டுமலராக, பொற்கரம் நீட்டி வீறுநடைபோட்டு உதயமாகிய 'இளங்கதிர்' ஆனது தனது கதிர்களுடன் உங்கள் கரங்களில் சுடர்வது கண்டு பெருமகிழ்வடைகின்றேன். தமிழரின் கலை, பண்பாட்டுவிழுமியங்கள் மங்கிப்போகாமல் அவர்களின் ஆற்றல்களை, இலக்கிய ஆர்வங்களை தனது பொற்கதிர்களாக்கி பவனிவருவதில் இளங்கதிரின் பங்கு பெருமைப்படவேண்டியதொன்றாகும்.

காலத்தின் அவசரத்துடனும் செயற்பாடுகளின் அவசியத்தையும் உணர்ந்துகொண்டு தமிழ்ச்சங்க செயற்பாடுகளை விரிவுப்படுத்தவேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டோம். இளங்கதிர் உதயத்திற்கு உந்துவிசையாகவும் ஏறிவரும் விலைவாசிகளுக்கு ஏற்ப நாமும் மாறவேண்டிய கட்டாய சூழலில் விளம்பரங்களை எமக்கு சாதகமாக்க வேண்டிய நிலையில் உள்ளோம். அந்த வகையில் எங்களிற்கு உறுதுணையாகிய அனைத்து உள்ளங்களுக்கும் எனது நன்றிகள்.

தமிழ்ச்சங்க செயற்பாடுகளில் குறிப்பிட்டதக்கதாக எங்களது நிதிச்சுமையை குறைக்கவும் தமிழ் மணம் சிறப்புற பரவவும் ஏற்பாடு செய்திருந்த "குறிஞ்சி நாதம்" எங்களிற்கு பெரும் பலமாக இருந்ததை மறக்கமுடியாது. அந்த வகையில் சென்ற ஆண்டின் இறுதியில் திருமலை நகரில் இடம்பெற்ற இந்த நிகழ்விற்கு பலவழிகளிலும் உதவிய சகல அன்பர்களிற்கும், நண்பர்களுக்கும் நாங்கள் என்றும் கடமைப்பட்டுள்ளோம்.

எனவே வரும் கால்களிலும் இளங்கதிர் உதயமாக வேண்டும், அதன் பொற்கதிர்கள்பட்டு தமிழ் உலகு பெருமைப்படவேண்டும், தமிழரின் கலைகள் வளர இப்பெரும் பணி தொடர வேண்டும் என வாழ்த்தி நிற்கின்றேன்.

**பொறியியற்பீடம்**
**பேராதனைப் பல்கலைக் கழகம்,**
**பேராதனை**

**தா. ஸ்ரீ ராமநாதன்**
**இளம் பொருளாளர்,**
**தமிழ்ச் சங்கம்**

# எதிர்பார்ப்புகளுடன் .......

நமது நாட்டில் ஏற்பட்டுவரும் பல சமூக பொருளாதார அரசியல் மாற்றங்களுக்கு மத்தியில் இந்த 30வது இளங்கதிர் தன்னை வெளிப்படுத்துகிறது. இம்மாற்றங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றனவோ இல்லையோ ஒரு எதிர்பார்ப்பு மட்டும் நிம்மதி, சுதந்திரம்,சமத்துவம், என்ற கிளைகளைத்தாங்கி ஒரு பெரிய விருட்சமாக வளர்ந்து வருவதை காண்கிறோம்.

தமிழர்கள் மீதான ஒடுக்குமுறைகளும் மிலேச்சத்தன்மையான தாக்குதல் நடவடிக்கைகளும், தலைவர்களின் புளித்துப்போன வாக்குறுதிகளும் அல்லது பாராமுகமான தன்மைகளும் இன்னும் எத்தனை நாட்களுக்குத்தான்? இதனால் இன்றும்கூட வழமைபோல் அகதி, இடம்பெயர்வு, பதியுதல், செல்லடி போன்றவற்றையே மீண்டும் மீண்டும் பேசுகிறோம், பார்க்கிறோம், எழுதுகிறோம்.

இவற்றிற்கு ஒரு முற்றுப்புள்ளி ஏற்படாதா என்ற ஏக்கப்பெருமூச்சு ஒருபக்கம், பல மாற்றங்களை கண்டும், எதிர்ப்பார்த்தும், ஒன்றுமே நிறைவேறாது, தோல்விகளையும் விரக்தியையும் நிம்மதியின்மையையும் வாழ்வின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொண்டு விட்ட சலிப்பு ஒருபக்கமுமாய் எங்கள் வாழ்க்கைப்பயணம்!

21ம் நூற்றாண்டு எதிர்கொள்ள இருக்கும் பாரிய உணவு நெருக்கடியைப்பற்றி உலக நாடுகள் கவலைப்பட்டுக்கொண்டிருக்க, நாம் இன்னும் எமது பிரச்சனைகளிலிருந்து விடுபடாது, அதன் காரணமாக எதிர்கொள்ளக்கூடிய ஆபத்தை உணராது வழமைபோல் நம்பிக்கை கீற்றுகளை எதிர்பார்த்தபடி இருக்கிறோம்.

21ம் நூற்றாண்டை அண்மித்த நாம் இன்னும் பழைய கறைபடிந்த நூற்றாண்டிலேயே தேங்கி நிற்க, எம்மோடு ஒன்றாய் நின்ற அயல் நாடுகள் எல்லாம் உயர்ந்து செல்கின்றன. பக்கத்து அறை நண்பர்களின் சந்தேகப்பார்வைக்கு மத்தியில் இளங்கதிரை வெளிக்கொணர்வதற்கே சிரமப்படும் நாம் என்றுதான் அறிவியலிலும் தொழில்நுட்பத்திலும் ஏனைய நாடுகளைப்போல் வளரப் போகிறோமோ தெரியவில்லை.

எமது உடனடித்தேவைகள் என்ன, எதிர்கால வியூகங்கள் என்ன, எது சரி, எது பிழை என்று எதையுமே பகுத்துப்பார்த்து ஆராய்ந்து ஒரு முடிவை எடுக்கும் இயல்பினை நாம் இழந்துள்ளதால் ஒரு குறுகிய சிந்தனை வட்டத்திற்குள் எம்மைநாமே சிறைப்படுத்தியவர்களாக உள்ளோம். எனவே இதிலிருந்து விடுபட அதாவது அகதி, இடம்பெயர்வு, செல்லடி என்பவற்றை சிறிது ஒதுக்கிவிட்டு சற்று வித்தியாசமாக சிந்தித்தால் என்ன என்ற கேள்விக்குறி இம்முறை இளங்கதிரை ஒரு புதிய கோணத்தில் பிரசவிக்கச்செய்தது. அதன்மூலம் இளையதலைமுறை என்ற வரையறைக்குள் இவற்றையும் இவைதவிர்ந்த வேறு விடயங்களையும் ஆராய முற்பட்டது.

அந்தவகையில், இம்முறை இளங்கதிரின் முதற்பகுதி சமூக, கலை இலக்கிய அறிவியற் பகுதியாக மலருகிறது. வலைத்தொடர்பி, உயிரியல் தொழில்நுட்பம் போன்ற அறிவியற் கட்டுரைகள் முதன்முறையாக உங்களை நாடி வருகின்றன.

இரண்டாவது பகுதியான இளைய தலைமுறைச் சிறப்புப்பகுதி மூலம் இளையதலைமுறை என்ற ஒரு வரையறைக்குள் பல வித்தியாசமான, புதிய ஆக்கபூர்வமான சிந்தனைகளை கொண்டுவருவதே எமது நோக்கம். நாம் எதிர்ப்பார்த்ததைப்போல இளந்தலைமுறையினரின் பங்களிப்பு பெருமளவில் இதற்கு கிடைக்காதபோதிலும் எமது இந்த முயற்சி இளந்தலைமுறை-யினருக்கு ஒரு விழிப்புணர்வையும் அதனைத்தொடர்ந்த ஒரு ஆக்க முயற்சியையும் உத்வேகத்தையும் அளிக்கும் என்பது எனது நம்பிக்கை. இப்பகுதி இளங்கதிரின் இடப்பற்றாக்குறை காரணமாகவும் மாணவர்களின் சிந்தனைப் பற்றாக்குறை காரணமாகவும் பூரணப்படுத்தப்படவில்லையாயினும் இந்த புதிய முயற்சிக்கு வரவேற்பு கிடைக்கும் என எதிர்பார்க்கிறேன். சகல சிறுகதைகளும், கவிதைகளும் அவை தலைப்போடு ஒன்றியனவோ இல்லையோ, இளங்கதிரின் பிரதான பகுதியான இப்பகுதிக்குள்ளேயே அடக்கப்பட்டிருக்கின்றன.

கடைசியாக, சங்கமும் அதன் நிகழ்வுகளுடன் சம்பந்தமான விடயங்களும் சங்க நிகழ்வுகளுடன் ஒரு சங்கமம் என்ற பகுதிக்குள் அடக்கப்பட்டிருக்கின்றன.

இம்முறை இளங்கதிர் தரமானதாகவும் காத்திரமாகவும் அமையவேண்டும் என்ற எனது அவா பல கருத்துமுரண்பாடுகளையும் பிரச்சனைகளையும் எதிர்கொண்டது எனக்கு ஒரு சவாலாகவே அமைந்தது. எனது அவா எவ்வளவு தூரம் நிறைவேறியுள்ளது என்பதை இதனைப் படிக்கும்போது நீங்களே புரிந்து கொள்வீர்கள். இனிவரும் காலங்களிலும் இளங்கதிர் புதிய சிந்தனைகளுடன் புகழ்மணத்துடன் ஒளி வீசவேண்டும் என்பதே எனது அவா.

**விவசாயபீடம்**
**இறுதி வருடம்,**
**பேராதனைப் பல்கலைக் கழகம்.**

**இரா. இரவிசங்கர்**
**இதழாசிரியர்,**
**தமிழ்ச் சங்கம்.**

## அட்டைப்படக் கவிதை......

### தகர்த்தெறிவோம் தடைகளை

தடைகள் எத்துணை
பெரிதாயினும்
கதிரவன் துணையால்
வெளிவரும் இளங்கதிராய்
அறிவின் துணையால்
எழுந்து நிற்போம் - பெற்ற
வலுவின் துணையால்
துணிந்து செல்வோம்
இன்னல்கள் கண்டு
இடர்ப்படோம் - கொண்ட
குறியினில் என்றும்
தவறிடோம் - வரும்
தடைகளை தகர்த்தெறிந்து
யுகங்கள் பல
புதிதாய் படைப்போம்.

**அட்டைப்படம்**
எம்.எச்.எம். ரினோஸ்
விவசாய பீடம்

**அட்டைப்படக் கவிதை**
ந. சந்திரிகா
மிருக வைத்திய பீடம்

**அட்டைப்பட எழுத்தமைப்பு**
இ. ருஷாந்தன்
மிருகவைத்திய பீடம்

ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியவர்களே பொறுப்பு

- *ஆசிரியர்*

# உள்ளே ...

**பகுதி 1**

**சமூக கலை இலக்கிய அறிவியற் பகுதி**


எல்லாமே போலிகளா ...1

மட்டக்களப்பும் தமிழர்களும் - ஓர் நோக்கு ...4

இனிவரும் தசாப்தம் என்ன கொண்டு வரும் ...9

1970களில் ஈழத்தின் இலக்கியப் போக்கு ...15

கணனிக்கும் தமிழுக்கும் பாலமமைப்போம் ...18

பத்திரிகைத்துறை - ஒரு வெட்டுமுகம் ...22

பித்தன் கதைகளிற் சமூக நோக்கு ...25

இன்ரநெற்றும் தமிழும் ...28

உயிரியல் தொழில்நுட்பம் - ஓர் அறிமுகம் ...32


**பகுதி 11**

**இளையதலைமுறைச் சிறப்புப்பகுதி**


**கட்டுரை**

இளைஞர் பண்பாடு - சில குறிப்புகள் ...37

இளைய தலைமுறையினரும் கலை இலக்கிய ஈடுபாடும் ...39

தலைமுறை முரண்பாடு ...57

போதையின் பிடிக்குள் எமது நாடு ...64

விழுமியங்களின் பொதுமையும் மெய்யியலும் ...67

இலங்கையில் இளைஞர் அமைதியின்மைக்கான காரணங்கள்
பற்றியதோர் ஆரம்ப உசாவல் ...70

பல்கலைக்கழக மாணவர்களின்
அமைதியைக் குலைக்கும் புல்லுருவி ...77

தற்கொலையின் ஆரம்பங்கள் ...89

காலம் உனக்கொரு வாழ்வு தரும் ...96

உளவியல் நோக்கில் இளையோர் பிரச்சனைகள் ...98

வளாகத்தின் வசந்தத்தில் தொங்கி நிற்கும் தொடர்பாடல் ...116

**சிறுகதை**

விடை காணா வினா ..61

அவள் தாயாகிறாள் ...74

பார்வதி ஒரு பாடம் ...85

கொலைகள் ...104

கனவு சிதைந்ததொரு வாழ்வு ...119

கவிதை

வண்டித்தடம் ...69

எட்டத்தொலைவிலிருந்தோர் கீதம் ...79

என்னை நான் மீட்க ...95

தணியுமா சுதந்திர தாகம் ...103

நான் அகதியாயிருக்கலாம் ...115

அகதி ...115

நேர்காணல்

இவர்களின் பார்வையில் ...46

பெண்ணியம் - தெளிவை நோக்கிய ஒரு முயற்சி ...80

கல்வியியற் பேராசிரியருடன் ஒரு நேர்காணல் ...110

பகுதி 111

சங்க நிகழ்வுகளுடன் ஓர் சங்கமம்

தமிழ் நாட்டுக்கூத்து மரபை ஆராய்ந்தே மனமே நாடகம் எழுதப்பட்டது ...123

தமிழ்ச்சங்க செயற்குழு ...125

தமிழ்ச்சங்க நாடகவிழா - சில குறிப்புகள் ...126

பங்கேற்றோர் விபரம் ...129

நாடகப்பட்டறையும் அதன் எதிரொலிகளும் ...131

கவிதை பற்றி கதைப்போம் வாருங்கள் ...134

இலங்கையில் தமிழ் - முஸ்லிம் உறவு ...137

சங்கத்தின் பாதையிலே ...140

செயலாளர் அறிக்கை ...142

என்றும் நன்றியுடன் ...148

# சமூக கலை இலக்கிய அறிவியற் பகுதி

ஓவியம் : மஞ்சுளா இராசரத்தினம்,
பல்மருத்துவ பீடம்



With Best Compliments

From

**NATIONAL TEX**

**dealers in Textiles**

**180, Bazaar Street**
**vavuniya**
**T.P. 024 - 22620**

With Best Compliments

From

**Shris**

**Communication**

I.D.D Local Calls, Fax, Laminating and Photocopying Services

186, Mannar Road
Kurumankadu junction,
Vavuniya.
Tel : 024 - 22470, 024 - 22410
024 - 22515 Fax : 9424 - 22470
Tlx : 23483 Antony CE

With Best Compliments

From

**Siva Brothers**

*Communication, Fax,*
*Photo copy and*
*Laminating Centre*

**Bazaar Street,**
**Vavuniya**
**T.P. 024 - 2021, 024 - 2022, 024 - 2213**
**Fax : 9424 2021**

நல்வாழ்த்துக்கள்

**Kalaimagal Printers**

**50, Market Circular Road**
**Vavuniya.**
**T.P. 024 - 22545**

&

**Thirumahl's**
**Centre**

**50, Tharmalingam Road**
**Vavuniya**
**T.P : 024 - 22549**

***"மாந்தர்கள் உண்மையை அறிந்து கொள்ள விருப்பம் கொள்வதில்லை. ஏன் என்றால் உண்மை கசக்கும் என்பதால். உண்மையாக உலகத்தில் நடக்கின்ற பரிதாபகரமான கொலைகள், கொள்ளைகள், கற்பழிப்புகள், மரணங்கள், அகதிகளின் சோக வரலாறு பற்றியெல்லாம் நிறைய பத்திரிகைகளில் வாசிக்கின்றோம். நாம் கண்கலங்குவதில்லை. கண்ணீர் விடுவதில்லை. ஆனால் சினிமாப் படத்தில் ஒரு நடிகை கண்களுக்கு கிளிசரீனைப் பூசி போலியான கண்ணீரை வரவழைப்பதைப் பார்த்து நாமும் கண்ணீர் சிந்தி அழுகின்றோம், ஆர்ப்பரிக்கின்றோம்."***

## எல்லாமே போலிகளா!

*வைத்தியகலாநிதி தி.ஆனந்தமூர்த்தி*

உண்மையான ஒன்றைப் போல் தோன்றும் ஒன்றே போலி எனலாம். போல தோன்றுவதுதான் போலி. உண்மையான ஒன்றை நாம் அறிய முடியாமல் இருப்பது பல போலிகள் எம் மத்தியில் இருப்பதனால் தான் என்பது மறுக்க முடியாத விடயம்.

இன்றைய உலகில் போலிகள் மலிந்து காணப்படுவதனால் தான் மானிடர்களுக்கு பல இடர்கள் ஏற்படுகின்றன என்பதும் ஒரு போலியற்ற உண்மை. பிச்சைக்காரன் முதல் பேர் அரசன் வரை போலிகளையே இன்றைய உலகில் காண்கின்றோம். உண்மை என்பது உறங்கிக் கொண்டிருக்கும் வேளையில் போலிகள்தான் எழுந்து நடமாடுகின்றன.

தெரு ஓரத்தில் பிச்சைப் பாத்திரத்துடன் காணப்படுகின்ற பிச்சைக்காரன் போலியாக நடித்து பிச்சை கேட்கின்றான். மக்களை ஏமாற்றி பண உதவி பெறுகின்றான். பிச்சைக்காரர்களை வைத்தே பிழைக்கின்ற முதலாளிகளும் பலர் உளர்.

அது ஒருபுறம் இருக்க பணக்காரனாக நடித்து பலரை ஏமாற்றுபவர்களும் உளர். திருமண விடயங்களில் பணக்காரர் வேடமிட்டு ஏமாற்றி மணந்து கொள்ளும் போலிகளும் பலர் உளர். பல மனிதர்கள் போலிகளையே விரும்புகின்றனர்.

மாந்தர்கள் உண்மையை அறிந்து கொள்ள விருப்பம் கொள்வதில்லை. ஏன் என்றால் உண்மை கசக்கும் என்பதால். உண்மையாக உலகத்தில் நடக்கின்ற பரிதாபகரமான கொலைகள், கொள்ளைகள், கற்பழிப்புகள், மரணங்கள், அகதிகளின் சோக வரலாறு பற்றியெல்லாம் நிறைய பத்திரிகைகளில் வாசிக்கின்றோம். நாம் கண்கலங்குவதில்லை. கண்ணீர் விடுவதில்லை. ஆனால் சினிமாப் படத்தில் ஒரு நடிகை கண்களுக்கு கிளிசரீனைப் பூசி போலியான கண்ணீரை வரவழைப்பதைப் பார்த்து நாமும் கண்ணீர் சிந்தி அழுகின்றோம், ஆர்ப்பரிக்கின்றோம். இது போலியில்லையா, உண்மையை பார்த்து, உண்மையை கேட்டு உருகாத உள்ளங்கள் வெறும் நடிப்பைப் பார்த்து வாடி வதங்குவது ஏன்?

நாம் வெறும் வெளித் தோற்றத்தைக் கொண்டு மற்ற மனிதர்களை எடைபோடுகின்றோம். மற்றவர்களை மதிக்கின்றோம், போற்றுகின்றோம், அவர்கள் எவ்வளவு போலியாக இருக்கிறார்கள் என்பதை உணர்வதில்லை.

கண்கொடிது, யாழ்கோடு செவ்விது ஆங்கு அன்ன
வினைபடு பாலால் கொளல் -**திருக்குறள்**

அம்பு தோற்றத்தால் அழகானது. ஆனால் செயலால் கொடியது. யாழ் கோட்டால் வளைந்திருந்தாலும் செயலால் இனியது. எனவே வெறும் தோற்றத்தைக் கொண்டு ஒருவரை எடை போடுவது மதியீனம். இதனால் நாம் போலிகளால் ஏமாற்றப்படுவது நிச்சயம்.

மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழத்தது ஒழித்து விடின் - **திருக்குறள்.**

தவம் செய்கின்ற ஒருவருக்கு தலைமயிரை மழித்தலும் சடை வளர்த்தலும் வேண்டியதில்லை- உயர்ந்தோர் தவத்திற்கு ஆகாதது என்பவற்றை கடிந்துவிடின். ஆனால் இன்றைய உலகில் பல போலிச் சாமிகள் நம்மத்தியில் உலாவுகின்றார்கள். நாம் வெளிவேடத்தை மட்டும் பார்த்து சாமி என போற்றுகின்றோம். ஆனால் அது பொய்யான போலியான வேடம் என்பது பின்னர்தான் புரியவரும்.

மனிதர்களில் பலர் போலிகளை இன்றும் விரும்புகின்றனர். தங்கம் விலையுயர்ந்தது. அதனால் பொன் ஆபரணம் மதிப்புமிக்கது. அதனால்தான் பொன்முலாம் பூசிய போலிகைகளை மக்கள் அணிகின்றனர். அந்தபோலிகள் கண்டுபிடிக்க பலமுறைகளை பயன்படுத்துகின்றனர். நாம் போலிகளைப் பற்றி நன்கு விளிப்பாக இருத்தல் வேண்டும்.

நகை மட்டுமா போலியாகத் தோன்றுகிறது. நட்பும்கூட இன்று போலியாகி வருகிறது. பலர் நண்பன் போல நடித்து இறுதியில் எம்மை வஞ்சித்தும் விடுகின்றனர். இது பலர் அறிந்த உண்மை. நகையையாவது உரைத்துப் பார்க்கலாம் நண்பனை எப்படி உரைப்பது. கொஞ்சம் பணத்தைக் கொடுத்துப் பார்த்தால் உண்மை புரியும்.

எளிமையாக வாழ்பவரை இன்று உலகம் மதிப்பதில்லை. மகாத்மா காந்தி எளிமையாக வாழ்ந்தார் என்று போற்றுகின்றோம். எளிமை வாழ்க்கையைப் பாராட்டுகின்றோம். நாம் வாழ்ந்தால் அதனை குறை கூறுகின்ற உலகம் அத்துடன் விட்டுவிடுவதில்லை, அப்படி வாழ்பவனிடம் குறைகாண முற்படுகின்றது. அவன் கஞ்சன் என்கின்றது. ஆனால் ஊதாரியாக வாழ்ந்து பகட்டாக உடுத்தித் திரிபவனை மதிக்கின்றனர். இதுவும் போலிதானே!

சிலர் நன்றாக இனிக்க இனிக்கப் பேசுவார்கள். அவர்கள் பேச்சில் தேன் ஒழுகும் - ஆனால் அவர்கள் செய்கின்ற செயல்களோ மிகவும் மோசமானதாக இருக்கும். பலராலும் வெறுக்கக் கூடியதாக இருக்கும்.

கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு -**திருக்குறள்.**

வினையும் சொல்லும் வேறுபட்டவர்களின் தொடர்பு நனவில் மட்டும் அல்ல கனவிலேயும் இன்னாது. எனவே போலியாக நல்லவர் போல, எம்மீது அன்பு உள்ளவர் போலப் பேசி, எமக்கு துரோகம் செய்யும் போலிகளையும் நாம் கண்டு ஏமாந்து விடாமல் இருத்தல் அவசியம்

அது மட்டுமல்ல பணம் கொடுப்பவரை விரும்பாது அவர் பணத்தையே விரும்பி அவரை சேர்ந்து கொள்ளும் விலைமாதரின் பொய்மை நிரம்பிய தழுவலை இப்பட்டறையில் முன்னறியாத பணத்தைத் தழுவியது போன்றது என்கின்றாள் திருவள்ளுவர்.

பொருட்பெண்டிர் பொய்மை முயக்கம் இருட்டறையில்
ஏதில் பிணந்தழீஇ யற்று -**திருக்குறள்**

இவற்றைவிட மிகவும் மோசமான போலிகள் எம்மை வழிநடத்திச் செல்ல, எமக்கு தலைவர்களாக பாடுபட்டுழைக்க எம்மத்தியில் இன்று நாட்டில் தோன்றுகின்ற தலைவர்கள்தான். இவர்களை எல்லாம் நடிப்புச் சுதேசிகள் என பாரதியார் இனங்காட்டுகின்றார்.

கூட்டத்தில் கூடிநின்று கூவிப் பிதற்றல் அன்றி
நாட்டத்தில் கொள்ளாரடி -கிளியே
நாளில் மறப்பாரடி - **பாரதியார்**

மேடைமேடையாக, பேசுவார்கள் வாக்குறுதிகளை வாரி வாரி வழங்குவார்கள். வாக்குகளைத் தாருங்கள் வறுமையை ஒழித்துக் கட்டுவோம் என்று சூழ் உரைப்பர். ஆனால் எமது வாக்குச் சீட்டுக்களைப் பெற்றுவிட்டால் பின்னர் அவர்களை மக்கள் சந்திக்கவே முடிவதில்லை. வாரி வழங்கிய வாக்குறுதிகளும் காற்றோடு போய்விடும். இத்தகைய போலித் தலைவர்கள் மலிந்துள்ள நாடு நம்நாடு. மக்களுக்காக கண்ணீர் வடித்த தலைவர்கள் மக்கள் பலர் கண்ணீர் வடிக்க, மாடமாளிகைகளில், சுகபோக வாழ்க்கை வாழ்வர். இத்தகைய தலைவர்களால்தான் இன்றைய உலகில் உண்மையை காண்பது அரிதாகிறது. அதர்மம் தலை தூக்குகின்றது. இது கலியுகம் அல்லவா!

இன்னும் பிறப்புச் சாட்சிப் பத்திரம் போலியாகின்றது. அடையாள அட்டை, கடவுச்சீட்டு மட்டுமல்ல அதில் உள்ள புகைப்படமும், புகைப்படம் மட்டும் அல்ல அதில் உள்ள தலையுமே பொய்யாக, போலியாக உள்ளது.

இவை மட்டுமா, மனிதனின் உடல், உறுப்புக்களுமே போலிகளாகின்றன. காது, மூக்கு, கண்கள் கூட போலிகளாக செயற்கையாக செய்யப்படுகின்றன. மங்கையரின் கூந்தல் அழகாக இருக்கும் ஆனால் போலிக் கொண்டையே. மார்பகங்கள் கூடவே போலிகளாக அமைக்கக் கூடியவையாக இருக்கின்றன.

ஆண்களின் தாடி மீசைகளும், சிலரின் தலைமுடி கூட போலிகளாக இருக்கின்றன. இப்படியே மனிதனின் சகல உறுப்புக்களும், கை,கால்கள் கூட போலிகளாக செய்யப்படலாம். ஆனால் மூளை மட்டும் போலியாக இல்லாது காலியாக இருக்கும்.

சில இல்லங்களில் அழகான செடிகளும் பூக்களும் அலங்காரத்திற்காக வைக்கப்பட்டிருக்கும். ஆனால் அவை உண்மையான மலர்கள் அல்ல. போலியான புஸ்பங்கள் என்பதை அறிய முடியும். ஆனால் இயற்கையானவை போல் தோன்றும். வாசனை இல்லை மதுவும் இல்லை.

இன்று மக்கள் வடிக்கின்ற கண்ணீர் மட்டுமல்ல போலியானது. அவர்கள் குடிக்கின்ற தண்ணீரும் போலியானதுதான் என்றால் ஆச்சரியம்தான். உண்மையில் குடிப்பதற்கு உகந்த சுத்தமான தண்ணீரை இன்று போத்தல்களில் அடைத்து ''சீல்'' வைத்து விற்கிறார்கள். அவற்றில் எத்தனை தூரம் அசுத்தம், கிருமிகள் இருக்கின்றன என்பது பலருக்குத் தெரியாத விடயம். குடிக்கும் தண்ணீரிலும் போலிகளே இன்று அதிகம்.

சில நேரங்களில் துப்பாக்கிகளுமே போலிகளாகி விடுகின்றன. பொய்யான துப்பாக்கியைக் காட்டி பயமுறுத்தி கொள்ளை அடிக்கப்பட்டது என பத்திரிகைகளில் பரபரப்பான செய்திகளையும் நாம் படிக்க நேரிடுகின்றன.

மனிதர் மட்டுமல்ல இன்று போலிகள், பணமும் போலி நோட்டுக்களாகி விட்டன. எது உண்மையான நோட்டு எது போலி நோட்டு என்பதை பிரித்து அறிவதே சிரமம். மனிதன் இன்று பணம் பணம் என்று அல்லும் பகலும் ஊண் உறக்கம் இன்றி அலைகிறான். அந்தப் பணத்துக்காக படாத பாடேபடுகிறான். அந்தப் பணமே போலியானால்? அவன் என் செய்வான்.

உணவுப் பொருட்களில் போலிகள், உடுப்பில் போலிகள், உடமைகளில் போலிகள். அதுமட்டுமல்ல நோய்க்கு நாம் பணம் கொடுத்து வாங்குகின்ற மருந்திலும் போலிகளே ஏராளம். நல்ல விலையுயர்ந்த மருந்தென்று கூறி பல மலிவான மருந்துகளை விற்கிறார்கள்.

மருந்து ஒருபுறம் இருக்க, மருத்துவனுமே போலியாக இருக்கிறான். பலர் தாம் டாக்டர்கள் என்று கூறிக் கொண்டு போலியாக நடித்து பல மக்களை ஏமாற்றுகிறார்கள்.

இப்படியே பல போலிகளை பற்றி பல பக்கம் பக்கமாக எழுதலாம். ஆனால் இதை விரும்பி வாசிக்கின்ற உங்களுக்கு அலுப்புத் தட்டக்கூடாது என்பதால் எனது பேனா காகிதத்தில் எழுத்துக்களை சொற்களாக்கி சொற்களை வசனங்களாக்கி விடும் செயலை நிறுத்த வேண்டியுள்ளது.

இறுதியில் நானும் ஒரு போலி வேலை செய்பவன் என்பதை உங்களுக்கு கூறாமல் இருக்கவும் எனது மனத்தில் எழுகின்ற குற்ற உணர்வு இடம் தருவதாக இல்லை. உண்மையை கூறித்தானே ஆகவேண்டும்.

தன் நெஞ்சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன் நெஞ்சே தன்னைச் சுடும் -**திருக்குறள்**

அது என்னவென்றால் இயற்கையான பற்களை இழந்துவருகின்ற மாந்தருக்கு நான் பொய்யான செயற்கைப் பற்களை பொருத்தி விடுகின்றேன். அப்பற்கள் போலிகள் என்பதனை உணராமல் உண்மையானவை என்று நினைத்து இதுவரை எத்தனை திருமணங்கள் நடந்தேறி விட்டன என்பது ஆண்டவனுக்குத்தான் தெரியும்.

எவை எப்படி இருப்பினும்

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு -**திருக்குறள்**

உங்களுக்கு எனது உண்மையான போலியற்ற வணக்கங்கள்.

*"மட்டக்களப்புத் தமிழர்களின் மந்திர ஆற்றல் புகழ்பெற்ற ஒன்றாக விளங்கத்தக்கவாறு மந்திர வழக்கும், மந்திரம் கலந்த மருந்துப் பயிற்சிகளும் இம்மக்களின் வாழ்வில் பின்னிப் பிணைந்திருந்தன என்பதை இன்றும் வேறு பகுதி மக்களின் மட்டக்களப்பு நாட்டினர் மந்திரத்தால் எதையும் செய்து விடுவார்கள் என அச்சத்துடன் கூடிய கேலிக் கதையிலிருந்து நாம் அறியக்கூடியதாகவிருக்கிறது. இன்றைய நவீன விஞ்ஞான வளர்ச்சியினால் இவைகள் மருவிக் கொண்டிருந்தாலும் கிராமப்புறங்களிலே பாதுகாக்கப்பட்டு வருவதையும் காணலாம்."*

## மட்டக்களப்பும் தமிழர்களும் -ஓர் நோக்கு

சிவசண்முகம் சுதாகரன், இறுதி வருடம், பொறியியல் பீடம்

*"ஆரியர் போற்றும் அணிசால் இலங்கையிலே*
*சீரார் குணதிசையைச் சேர்ந்து வளர்புகழும்*
*ஏரால் இயன்றசெந்நெல் இன்சுவைத்தீங் கன்னலொடு*
*தெங்கி னிளநீரும் தீம்பலவி னள்ளமிர்தும்*
*எங்குங் குறையா இயலுடைய நன்னாடு*
*மட்டக் களப்பென்னும் மாநாடு..."*

என முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தரால் போற்றப்படுவது மட்டக்களப்பாகும். கடல் கொண்ட தென்னாடாம் குமரிக்கண்டம் எனப்பேர் பெறும் நிலத்திணிவு தொடர்ந்து ஏற்பட்ட கடற்கோள்களிலே பழந் தமிழகம் துண்டாடப்பட்ட போது எஞ்சிய நிலத்திணிவுகளிலே ஒன்றாம் ஈழம் எனப்படும் இன்றைய இலங்கைத் தீவாகும். ஆதலால் இதன் கிழக்குக் கரையிலே அமைந்துள்ள மட்டக்களப்பெனும் மாநாடும் அங்குள்ள தமிழ் மக்களும் பழமையான வரலாற்றினைக் கொண்டுள்ளனர்.

### மட்டக்களப்பின் எல்லைகளும் புவியியல் தொன்மையும்

பண்டு மட்டக்களப்பென்பது கிழக்கே வங்காள விரிகுடா வரையும் வடக்கே வெருகல் ஆறு (மகாவலியின் கிளையாறு) தொடக்கம் தெற்கே குமுக்கன் ஆறு (Kumbukkanoya) வரை நீண்டு பரந்த பிரதேசமாகும். இம்மட்டக்களப்பென்னும் பெயரானது இங்குள்ள நீண்ட களப்பை ஆதியிலே மக்கள் "மட்டமான (ஆழமற்ற) களப்பு" என அழைக்க அது திரிபு பெற்று வந்துள்ளது என அறிஞர்கள் கூறுவர். இதற்கு ஆதாரமாக இங்குள்ள பெரும்பாலான ஊர்களின் பெயர்கள் இயற்கை நில உறுப்புக்களுடன் இயைபு பெற்ற இடப்பெயர்களாக உள்ளதையும் கொள்ளலாம்.

தற்போதைய மட்டக்களப்புப் பிரதேசம் பண்டு சிறப்புற்றிருக்கவில்லையாயினும் பண்டைய தலைநகர்களும் இராச்சியமும் இதன் தெற்குப் பகுதியில் உன்னரசிகிரி எனும் இராச்சியத்தில் காணப்பட்டன. மட்டக்களப்பு என்பதில் மட்டம் களப்பு என்பது தனித்தமிழ் சொற்றொடர் பெயர். இதனை சிங்கள மக்கள் தீக-மதுள (Diga Madulla) என அழைத்தனரென மகாவம்சம் கூறுகிறது. (Monograph of Batticaloa District S.O. கனகரெத்தினம், பக்.5) இன்று பண்டைய மட்டக்களப்பின் தென்பகுதியாகவிருந்து ''அம்பாறை மாவட்டம்'' என மாற்றப்பட்ட பகுதியினைத் ''திகாமடுல்ல மாவட்டம்'' எனக் குறிப்பிடப்படுவது நோக்கற்பாலது. இவ்வாறாக அரசியல் விழிப்புணர்ச்சியால் திருத்தி அமைக்கப்பட்ட இன்றைய மட்டக்களப்பானது வடக்கே வெருகல் தொடக்கம் தெற்கே துறைநீலாவணை வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது மட்டக்களப்பு வாவியின் கிழக்குப் பிரதேசமானது ''எழுவான் கரை'' எனவும், மேற்குப் பிரதேசம் ''படுவான்கரை'' எனவும் சூரியன் ''எழும்'' திசையையும் ''படும்'' திசையையும் வைத்துக் காரணப்பெயர்களாக அமைந்துவிட்டன.

புவிச்சரிதவியலின்படி, இலங்கைத்தீவு முதற்கேம்பிரியன் (Precambrian) காலத்தில் மூன்று தடவை மேலுயர்த்தப்பட்டுத் தாழ்த்தப்பட்டுள்ளது என அறிய முடிகிறது.

(The Three Superposed Peneplains of Ceylon- by D.N.Wadia, "Geology of Ceylon - by F.D.Adams) இதனால் ஏற்பட்ட பாறைப்போக்குகள், ஆற்றுப்பள்ளத்தாக்குகள், கொண்டலைற் பாறைப் படிவுகள் என்பன இலங்கையின் தென்மேற்கிலிருந்து, வடகிழக்கு நோக்கிக் காணப்படுகின்றன. மட்டக்களப்பைப் பொறுத்தமட்டில் இங்கு மேலரும்பிக் கிடப்பது ''நைசுப்'' (Gneiss) பாறையாகவும் கரையோரப்படிவுகள் ''வண்டற்''(Sedimentary) பாறைகளாகவும் காணப்படுகின்றன.

### மக்கட் குடியேற்றம்:

இலங்கை வரலாற்றிலே மட்டக்களப்புத் தமிழ் மக்களின் குடியேற்றமும் தனிப்பெருமை வாய்ந்ததும் மிகப் பழமை வாய்ந்ததுமாகும். இன்று மட்டக்களப்பின் பல இடங்களிலும் வாழும் வேடர்கள் பண்டைய பழங்குடியினரான ''ஓஸ்ரலோயிட்'' என்போரின் சந்ததியினர் எனப் பல ஆய்வாளர்கள் ஒப்புக்கொள்கின்றனர். (The Vaddahs -by C.G.Shligman 1911 -Cambridge) எனவே ஈழத்தின் பழங்குடிகள் எனப்படும் இயக்கர், நாகர் மட்டக்களப்பின் பண்டைய குடிகள் என்பதில் ஐயமில்லை. இதைத் தொடர்ந்து வாழ்ந்த ஆதித் திராவிடரின் நாகரீகமான பெருநிலப்பண்பாடு, மட்டுநகரின் வடபகுதியான கதிரவெளி போன்ற இடங்களில் காணப்பட்ட இடுகாடுகளில் காணமுடிகிறது. மற்றும் இங்குள்ள பண்டைய ஆலயங்களான தான்தோன்றீச்சரம், சித்தாண்டி முருகன் ஆலயம், மாமாங்கேஸ்வரர் ஆலயம், மண்டூர் முருகன் ஆலயம் போன்றவகைகளில் சாதிவரலாறு பழங்குடியினரான வேடர்களின் சாதியமைப்புடன் தொடர்புபடுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. இதற்கு மேலும் சான்றாக, தேசத்துக் கோயில் எனப் போற்றப்படும் கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீஸ்வரர் ஆலயம், வேடர்கள் கொக்கு நெட்டி மரத்தைத் தேனுக்காக வெட்டியபோது அதனுள் இருந்த லிங்கமானது வெட்டப்பட்டு அதிலிருந்து இரத்தம் சிந்திய வரலாற்றை எமக்குத் தருகிறது. இவைகளை நோக்கும் போது தமிழ் மக்கள் மட்டக்களப்பின் பழங்குடிகள் எனக் கொள்ளலாம்.

அடுத்து மட்டக்களப்பு மாநிலப்பகுதிக்கு இடப்பட்ட பெயர்கள் மூலம் இந்தியாவின் பல இடங்களிலிருந்து வந்த மக்கள் இங்கு பரவலாகக் குடியேறினர் எனலாம்.

உ+ம் ஆக, மலையாளர் -மலையர் குகநாடு; நாகர் இயக்கர் - நாகமுனை;

வங்கர் - மட்டக்களப்பு; கலிங்கர் -உன்னரசிகிரி; சிங்கர் -மண்முனை

மற்றும், இன்றும் இம்மக்களிடையே நிலவும் தென்சேரி வடசேரிப்பிரிவு, தாய்வழிப் பாரம்பரியம், மந்திரதந்திர முறைகள், பெண்களுக்கு சீதனம் கொடுக்கும் முறை , மங்கள விழாக்களில் பெண்கள் குரவையிடும் வழக்கம் போன்றன மலையாள முற்குகர் இங்கு வந்து குடியேறினர் என்பதற்கு சான்று பகர்கின்றது. எனவே இயக்கர், நாகரைத் தொடர்ந்து கலிங்கர், வங்கர், சிங்கர், முற்குகர் முக்கியம் பெற்றதுடன் இம்மக்கள் கண்டி மன்னன் காலத்தில் கண்டியுடன் நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருந்தனர். அத்துடன் யாழ்ப்பாண மக்களுடன் நெருங்கிய தொடர்புகளை வைத்திருந்தார்கள் என்பதற்கு கண்ணகி வழக்குரைக் காவியம் சான்றுபகரும்.

***சமூகம்:***

*ஆதியிலே குழுக்களாக வாழ்ந்த மக்கள், தங்களது தொழிலை மையமாக வைத்து சாதிகளாகப் பிரிந்து கொண்டதும், ஒவ்வொரு சாதியினரிடையேயும் ''குடிகள்'' எனும் பாகுபாடு தானாகவே தோன்றின எனலாம். சாதிகள் எனும்போது வெள்ளாளர் (வேளாண்மை செய்வோர்) கரையார் (மீன்பிடித் தொழில்), முக்குவர், தனக்காரர், பள்ளர், கைக்குளவர், சாணார், அம்பட்டர், வேடர், கொல்லர், தட்டார், தச்சர், பறையர் என பல சாதியினர் உருவாகினர். இவ்வாறுள்ள ஒவ்வொரு சாதியினரும் தங்களை ஏழு குடிகளாக வகுத்துள்ளதையும் இன்றும் காணலாம். இக் குடிமரபு தொடர்ச்சியானது தாயானவள் எக்குடியைச் சேர்ந்தவளோ பிள்ளைகளும் அக்குடியைச் சேர்ந்தவர்களே என வகுக்கப்படுவதால் தாயானவள் முதன்மை பெறுவது நோக்கற்பாலது. இவ்வாறாக குடிகளாகப் பிரிந்து இருந்த உறவுடையோராக விளங்கும்போது அவர்கள் ''தத்தியார்'', ''கத்தறையார்'' அல்லது ''வகுத்துவார்'' என அழைக்கப்படுவதை மட்டக்களப்பின் கிராமப்புறங்களில் இன்றும் காணலாம். எனவே குழுக்களாகவும் கோத்திரங்களாகவும் பின்பு சாதிகளாகவும் குடிகளாகவும் வாழ்ந்து வந்த மக்கட் சமூகம் காலகெதியிற் தமது கடமைகளை ஒன்றிணைத்து பகிர்ந்து கொண்டு வாழ்வதை நாம் கண்கூடாகக் காணலாம்.*

***சமயம்:***

*பொதுவாக மட்டக்களப்பில் வாழ்கின்ற இந்து சமயத்தவரை நோக்கின், அவர்களது வழிபாட்டுமுறை பண்டைய இயக்கர், நாகர் வழிபாட்டுடன் தொடர்புடையதாயும் தொடர்ந்து வந்த திராவிட வழிபாட்டுடன் தொடர்புடையதாகவும், இன்னும் பல தெய்வ வழிபாடுகளும் காணப்படுகின்றன. பெருந் தெய்வங்களாக முருகன் (திருக்கோவில் சித்திரவேலாயுத சுவாமி ஆலயம், வெருகல் முருகன் ஆலயம், சின்னக்கதிர்காமம் எனும் தாந்தாமலை...) விநாயகர் கடவுள் ( மாமாங்கப் பிள்ளையார் ஆலயம்) சிவன் (கொக்.தான்தோன்றீஸ்வரர் ஆலயம்) கண்ணகி வழிபாடு என்பனவும் சிறு தெய்வ வழிபாட்டில் மாரியம்மன், பேச்சி அம்மன், பத்திரகாளி அம்மன், திரௌபதி அம்மன் போன்றவையும் வீரபத்திரன், வைரவர், கிருஷ்ணர், நாகதம்பிரான் வழிபாடு மற்றும் வேடத் தெய்வங்களான சுடலைக்காளி, காட்டேறி என்பனவும் வழக்கத்திலுள்ளன. இவற்றுள் சிங்கள மக்களால் ''பத்தினித் தெய்யோ'' என வழிபடப்படும் கண்ணகி வழிபாடு மிகச்சிறப்பாக நடைபெறுவது ஈழத்திலே மட்டக்களப் பிலேயாகும். ஒவ்வொரு வைகாசி மாதமும் இத்தமிழகத்தில் கொடிய வெயிலினால் ஏற்படும் கண்நோய், அம்மை எனும் நோய்கள் வராமலிருக்க வேண்டுவோரும் மற்றும் இன்னோரன்ன விடயங்களுக்காக நேர்த்திக்கடன் வைத்தோரும் ''குளித்தல் சடங்கு'' என கண்ணகி அம்மனுக்கு பெருவிழா எடுப்பர். இத்துடன் ஐரோப்பியர் வருகையால் இங்கிருந்த தமிழரிடையே கிறிஸ்தவ மதம் பரவி பல கிறிஸ்தவ கோயில்களும், 8 ம் நூற்றாண்டின் பின் முஸ்லீம்களின் வருகையால் இஸ்லாமிய மதமும், இவ்வையக மக்களை நல்வழிப்படுத்த என உதித்த புத்தர் பெருமானுக்கென சில விகாரைகளும் காணப்படுவதால் இங்குள்ள தமிழ் மக்கள் மதம் எனும் பிரிவினையற்று எல்லா மத சடங்குகளிலும் கலந்து சமய சமரசம் நிலவும் இடமாக மாற்றியுள்ளனரென்றால் அது மிகையாகாது.*

***பாரம்பரிய கலைகள்:***

*மட்டக்களப்பின் அரசியலைப் பொறுத்தமட்டில் யாழ்ப்பாணத் தமிழரசிற் காணப்படுவது போன்ற திட்டமான அரசியலாதிக்கம் இங்குள்ளாருக்கு இருந்ததாகக் கூறுதல் முடியாது. எனினும் பழந்தமிழ்க்குடிகளாய் இங்கு வாழ்ந்த மக்களும் தமிழ்ச் சிற்றரசர்களும் தமிழ்க் கலைத்தொடர்பு, பண்பாட்டுத் தொடர்பு முதலானவை தம் நாட்டைவிட்டு நீங்காதவாறு பாதுகாத்து வந்திருக்கின்றனர். சங்ககாலம் தொடக்கம் நிலவி வரும் ''கூத்து'' எனும் கலையானது இன்றும் பழமை மாறாமல், மரபு மாறாமல் ''வடமோடி'', ''தென்மோடி'' என ஆடப்படுவது மட்டக்களப்பு மண்ணிலே என்றால் மிகையாகாது. இவற்றுள் ஆரியம், தமிழ் என்ற பண்டைய இருவகைக் கூத்துக்கள் தான் தற்காலத்து வடமோடி, தென்மோடி எனப்படலாயின என்பர். இவைகளில் வரும் ''மோடி'' என்ற சொல் பகுப்பு, வகை, விதம் அல்லது பாணி* **(Style)** *எனப் பொருள்கொள்ள இங்குள்ள தமிழ் மக்களது பேச்சு வழக்கில் வழங்குகிறது. யாழ்ப்பாணத்தில் இவை கருநாடகம், நாடகம் எனவும் மன்னாரில் வடபாங்கு, தென்பாங்கு எனவும் அழைக்கப்படுகிறது.*

*கிராமங்கள் தோறும் வேளாண்மை செய்வோரும் மற்றும் தொழில் புரிவோரும் தம் ஓய்வுநேரங்களிலே கூத்துப்பழகி, அறுவடை முடிந்து காசு கையில் புழக்கத்திலுள்ள போது அரங்கேற்றுவர். இங்கு ஆண்கள் மட்டுமே பங்குகொண்டு*

(பெண் வேடத்துக்கும்) ஆடுவதுடன் ஆடப்படும் இடத்தை களரி (அதிகமாக வட்ட வடிவம்) எனவும் ஒருநாள் பழகியதை ஒரு களரி எனவும் அழைப்பர். மட்டக்களப்பில் கூத்துப் பழக ஆரம்பிக்கும் நாளில் ''சட்டங் கொடுத்தல்'' (இதில் பாத்திரங்களைத் தெரிதலும் பாட்டுக்களை எழுதிக் கொடுத்தலும்) எனும் நிகழ்ச்சியும் நான்கைந்து, களரி பழக்கிய பின்னர் ''சதங்கை அணி விழா'' (இதில் நடிகர்கள் ஒவ்வொருவருக்கும் காலில் சதங்கை கட்டப்படும்) எனும் நிகழ்ச்சியும் இதைத் தொடர்ந்து இரண்டு மூன்று களரி பழகிய பின்னர் ''அடுக்குப் பார்த்தல்'' (ஒத்திகை) நிகழ்ச்சியும் இடம்பெறும். இதனைத் தொடர்ந்து நல்லதொரு தினத்தில் தமது ஊரிலிலுள்ள கோயில் முன்றலில் அல்லது பொது இடத்தில் அரங்கேற்று விழா மிகவும் சிறப்பாக நடைபெறும். அரங்கேற்று விழா மாலை தொடக்கம் அடுத்த நாள் விடியும் வரை இடம்பெறுவதால் அப்பகுதியிலுள்ள பல ஊர்மக்கள் ஒன்றாகத் திரண்டு கூடியிருப்பர். இவற்றினிடையே இதில் பங்கேற்கும் நடிகர்களையும் அண்ணாவியையும் ஊக்குவிக்கவென களரியினுள் புகுந்து காசு மாலைகளை அணிவிப்பது, சால்வைகள் கட்டுவது, காசைக் கையில் கொடுப்பது என பலவகைகளிலும் ரசிகர்கள் விடியும் வரை செய்து கொண்டிருப்பர். அரங்கேற்றக் களரி முடிந்த அடுத்தநாள் ஊருக்குள் சென்று வீடு வீடாக ஆடி மகிழ்விப்பதுடன் கிடைக்கும் சன்மானங்களை கூத்தைப் பழக்கியவரான அண்ணாவியாருக்கு வழங்கி ஊக்குவிப்பர். இந்நாட்டுக் கூத்துக்கள் தமிழர்களால் போற்றப்படும் பண்டைய இலக்கணங்களான மகாபாரதம், இராமாயணம் போன்ற கதைகளை நடித்துக் காட்டி பள்ளிக்குச் செல்லாத பல கிராம மக்களின் பண்பையும் பழக்கவழக்கங்களையும் வளர்க்கிறது என்றே கூறவேண்டும்.

இக்கூத்துக்கலை தவிர கண்ணகி வழிபாட்டுடன் நெருங்கிய தொடர்புடைய சமயக் கலையாக கொம்புமுறி விளையாட்டு கண்ணகியம்மன் சடங்கு நடைபெறும் காலப்பகுதியில் இடம்பெறும். செங்கோல் கோடியவனாய்க் கோவலனை கொலை செய்த பாண்டிய மன்னனைப் பழிவாங்கி அவன் அரசியற்றிய மதுரையினை எரித்தும் கோபந் தணியாத கண்ணகி முன்னர் இடையர் குல இளைஞர்கள் ஒரு காதல் கலந்த விளையாட்டாகச் செய்து அவளைக் குளிர்வித்தனர் என்றும் அவ்விளையாட்டே இங்கு கொம்புமுறி விளையாட்டாக எழுந்தது எனக் கூறுவர். காலத்தின் வேகத்தால் தற்போது இல்லாமல் போன இவ்விளையாட்டை இத்தமிழ் மக்கள் மழை வளமும் செல்வமும் வேண்டியே விளையாடினர் எனலாம்.

வசந்தன் அல்லது வசந்தன் கூத்து எனும் கலையாடல் கண்ணகி வழிபாட்டுடன் தொடர்புள்ளதாக இன்றும் ஆடப்படுகிறது. இதில் இளம்பராயத்தினர் (ஆண்கள்) வட்டமாக நின்று கோல் கொண்டு தாள அமைதி பிசகாது ஆடுவதுடன், ஆடல்களின் செயலால் அப்பாடல்கள் பெயர் பெறுவதுடன் இக்கூத்து தென்மோடி நாட்டுக்கூத்து வகையினைச் சார்ந்திருப்பதைக் கண்டுகொள்ளலாம். இவ் வசந்தன் கவிகளைப் பற்றி விபுலானந்த அடிகளார் குறிப்பிடும் பொழுது, சங்ககாலத்து ஒழுக்கங்களும் ஆடலும், பாடலும் இன்றும் ஈழத்தில் நின்று நிலவுகின்றன எனக் கூறியுள்ளார். இம்மண்ணின் மகளிரும் கரகம், கும்மி, கோலாட்டம் போன்றவற்றை ஆடி தமிழர்களின் கலைப்பொக்கிஷங்கள் மறையாது பாதுகாத்து வருகின்றனர்.

மட்டக்களப்பின் கிராமங்களில் நடைபெறும் திருவிழாக்கள், மங்கள விழாக்கள் (கல்யாண வீடு, பூப்பு நீராட்டு விழா...) போன்றவைகளில் பல பெண்கள் ஒன்று சேர்ந்து வாயினால் ஒருவித மகிழ்ச்சியொலி எழுப்புவதை (குரவை இடல்) இன்றும் நாம் காணலாம். மற்றும் இந்துக்கள் தங்கள் நேர்த்திக்கடனை நிறைவேற்றும் பொருட்டு ஆண்கள் பால்காவடி, முட்காவடி, பறவைக்காவடி என்பன எடுப்பதையும் பெண்கள் வாயில் அலகு பாய்ச்சி கோயில்களை நோக்கிச் செல்வதும் திருவிழாக் காலங்களில் மக்கள் காணும் பக்திப்பரவசமூட்டும் காட்சியாகும்.

### நாட்டார் பாடல்கள்

மட்டக்களப்பு தமிழகமானது நெற்களனிகளால் நிறைந்தும் கடல்வளத்தால் சூழப்பட்டிருப்பதாலும் இவற்றிலே உடல் உழைப்பை மூலதனமாக இட்டு வியர்வை சிந்த உழைத்துண்ணும் மக்கள் தங்கள் உற்சாகத்துக்கென பல நம்முன்னோர்கள் விட்டுச் சென்ற நாட்டார் பாடல்களைப் பாடி உழைப்பதைக் கண்டு மகிழலாம். உழவர்கள், வீசும் காற்றின் ஓசையையும், ஓடையில் பாயும் நீரின் சலசலப்பையும் மீனவர்கள் பொங்கி எழும் அலையின் ஓசையையும் இசையாக்கித் தான் பாடுகின்றார்களோ என வியக்கவைக்கிறது. மற்றும், கேலிப்பாட்டுக்களாகவும் இந்நாட்டார் பாடல்கள் பாடப்பட்டு வருவதை இங்கு வாழும் முதியவர்களின் நாட்டுக்கவியுடன் கூடிய கேலிகளில் இருந்து நாம் அறியலாம். இங்கு நாட்டார் பாடல்களில் காணப்படும் கொச்சைச் சொல்வளத்தை ''தென்தமிழ்ச் சிறப்பு'' எனப் பண்டிதர் வி.சீ.கந்தையா அவர்கள் குறிப்பிடுகிறார். எடுத்துக்காட்டாக இப்பாடலை நோக்கின்,

''புள்ளலெக்கா புள்ளலெக்கா -உன்ர
புருசனெங்க போனதுகா
கல்லூட்டுத திண்ணையிலே
கதை பழகப் போனதுகா''

இதில் வரும் ''கா'' உடன் கூடிய சொற்கள் இவைகளில் அழகே அழகு. தற்போதும் கூட இங்குள்ள கிராமப்புறத் தமிழரிடையே உள்ள இப்படியான கொச்சைச் சொற்களினால் செந்தமிழ்ச் சொல்வளத்தை உணரமுடியும்.

### மந்திரம் -மருந்து

மட்டக்களப்புத் தமிழர்களின் மந்திர ஆற்றல் புகழ்பெற்ற ஒன்றாக விளங்கத்தக்கவாறு மந்திர வழக்கும், மந்திரம் கலந்த மருந்துப் பயிற்சிகளும் இம்மக்களின் வாழ்வில் பின்னிப் பிணைந்திருந்தன என்பதை இன்றும் வேறு பகுதி மக்களின் மட்டக்களப்பு நாட்டினர் மந்திரத்தால் எதையும் செய்து விடுவார்கள் என அச்சத்துடன் கூடிய கேலிக்கதையிலிருந்து நாம் அறியக்கூடியதாகவிருக்கிறது. இன்றைய நவீன விஞ்ஞான வளர்ச்சியினால் இவைகள் மருவிக் கொண்டிருந்தாலும் கிராமப்புறங்களிலே பாதுகாக்கப்பட்டு வருவதையும் காணலாம்.

மந்திரம் என்பதை மறைத்துச் சொல்லப்படுவது என்பதுடன் ஆற்றல் வாய்ந்த சொற்களின் கோப்பினைப் பலதடவை உருப்படுத்துதல் (திருப்பித் திருப்பிச் சொல்லுதல்) மூலம் மந்திரவாதி தான் நினைத்ததை செய்து முடிக்கிறான் என்பர். பெரும்பாலான மக்கள் தீராத நோய்களைப் போக்க ''திருநீறு போடுதல்'' (திருநீறை மந்திரித்து நோயாளிக்குப் பூசுவது) ''தண்ணீர் ஓதுதல்'' (மந்திரித்த தண்ணீரைக் குடித்தல் அல்லது முகம் கழுவுதல்) என இவைகளை நாடுவதுடன் நோயின் காரணத்தை அறிய 'குறி' பார்த்தல் எனும் வழக்குமுள்ளது. இவை தவிர தொலைந்து போன பொருட்களைக் கண்டறிய 'கெடுதி கேட்டல்' களவு போன பொருட்களை கண்டறிய ''அஞ்சனம் போடுதல்'' மற்றும் நல்ல மிருகங்களை வேட்டையாட, மதம் பிடித்த யானைகளை அடக்க, கடிக்க வரும் நாயினை அடக்க, மாடுகள் மேய்க்க, பயிர்களைப் பூச்சி புழுக்கள் அழிக்காதிருக்க எனப் பல விடயங்களில் மக்களுக்கு அனுகூலமானவையாகக் காணப்படுகின்றது. இத்துடன் ஒருவன் தன் எதிரிக்கு ஊறுவிளைவிக்கவெனச் செய்வது ''சூனியம்'' எனப்படும் செய்கையும் மற்றவரை வசியப்படுத்த வசீக மந்திரமும் இவற்றுள் பிறருக்கு அசௌகரியங்களை ஏற்படுத்துவனவே எனலாம். ஆகவே மந்திரமானது ஆக்கத்திற்கும் அழிவைத் தடுப்பதற்கும் சிறந்தது ஆயினும் மந்திரம் என்ற சொல் பெரும்பாலும் அழிவையும் அச்சத்தையுமே எங்கும் குறிப்பதாயுள்ளது.

### சுவாமி விபுலானந்தர் கண்ட நீரர மகளிர்

இச்சிறிய இலங்கைத் தீவினில் அமைந்துள்ள மட்டக்களப்பெனும் தமிழகம் பல்வேறு நாட்டவர்களால் ஆவலுடன் அறியப்படக் காரணமாய் அமைபவைகளில் ஒன்றாக விளங்குவது சுவாமி விபுலானந்தர் கண்ட நீரர மகளிர் ஆகும். இதனை மட்டக்களப்பு வாவியின் நடுவிலே இளவேனிற்காலத்தின் பூரணை நாளிலும் அதற்கு முன்னும் பின்னுமுள்ள நாட்களிலும், வானம் களங்கமற்றிருக்கும் போது ஆர்ப்பரவமின்றி அமைதி நிலையிலிருந்து உற்றுக் கேட்டால் நீரினுள்ளிருந்தெழுகின்ற அற்புதமாகிய இன்னிசையொலி செவிவழிப்புகுந்து உள்ளத்தையுருக்கும் என சுவாமி விபுலானந்தர் நீரரமகளிரின்னிசைப் பாடலிலே குறிப்பிட்டுள்ளார். இத்தகைய அற்புத இசையொலியானது வடஅமெரிக்காவின் கலிபோர்னியாவிலும் ஈழத்தின் மட்டக்களப்பிலுமே கேட்கக் கூடியதாகவுள்ளது. இதனையே அறிஞர்கள் 'பாடும் மீன்'' **(Singing Fish)** இசையென்பர்.

எனவே, பன்னெடுங்கால வரலாற்றினைக் கொண்ட மட்டக்களப்பெனும் இத் தமிழகத்தில் வாழும் தமிழர்களின் பண்டைப் பெருமைகளையும் பாரம்பரியங்களையும் துருவி ஆராய்ந்து புதுமெருகூட்டி எம் வருங்காலச் சந்ததியினரும், மற்றோரும் அறியும் வண்ணம் நிலைநிறுத்துவது செயல்வீரர்களின் மீது சுமத்தப்பட்ட சுமை என்பதை மறுக்க முடியாது.

#### உசாத்துணை நூல்கள்

1. வித்துவான் F.X.C. நடராசா- மட்டக்களப்பு மக்கள் வளமும் வாழ்க்கையும்- 1980
2. வித்துவான், பண்டித வி.சீ.கந்தையா - மட்டக்களப்புத் தமிழகம் -1964
3. விபுலானந்த சுவாமிகள் - யாழ் நூல் -1947

# இனிவரும் தசாப்தம் என்ன கொண்டு வரும்?

பா.மணிமாறன், 2 ம் வருடம், பொறியியற்பீடம்

ஒரு ஓட்டப்பந்தயக் காரானது பத்து செக்கன்களில், பூச்சியத்தில் இருந்து 275 Km/h எனும் வேகத்தை அடைகின்றது என்று குறிப்பிடும் போதோ, ஒரு விண்கலமானது ஏவப்பட்ட எட்டு நிமிடங்களில் 28000 Km/h எனும் சுற்றல் வேகத்தை (Orbital Speed) அடைகிறது எனும் போதோ அவற்றின் ஆர்முடுகலை - அவற்றின் வேகவளர்ச்சியை -எண்ணி வியப்படைகிறோம். எனினும் சற்றும் நம்பமுடியாத வளர்ச்சியானது தொழில்நுட்ப வளர்ச்சியாகவே காணப்படுகிறது. மனித இனமானது முதன்முதலில் சக்கரத்தைக் கண்டுபிடிக்க இரண்டு மில்லியன் ஆண்டுகளை எடுத்துக்கொண்டது; எனினும் அதை ஒரு நீராவி இயந்திரத்தில் பயன்படுத்த 5000 ஆண்டுகளையே எடுத்துக்கொண்டது. உலகின் முதற் கணணி ஒரு அறையையே நிரப்பியது. அதை ஒரு மேசையின் மேல் அடக்க 35 வருஷமே தேவைப்பட்டது; மேசையின் மேல் இருந்தது மடியின் மேல் வர 10 வருடங்களே போதுமாக இருந்தது. இந்த நூற்றாண்டின் தொலைத்தொடர்பு பெரும்பாலும் கடிதத்திலும் தொலைபேசியிலுமே சார்ந்திருந்தது; ஆனால் கடந்த குறுகிய தசாப்தத்தினுள் இது ஃபக்ஸ் (fax), E-mail, Voice mail என விரிவடைந்திருக்கிறது. புதிய நூற்றாண்டிற்குள் காலடி எடுத்து வைக்கப்போகும் எமக்கு இனிவரும் தசாப்தம் என்ன கொண்டு வரும்? இவ் வினாவிற்கான விடையை எதிர்வுகூறல் வரவர கடினமாகிக் கொண்டே வருகிறது. அந்தளவிற்கு தொழில் நுட்பத்தில் மாற்றங்கள் வெகுவிரைவாக ஏற்பட்டு வருகின்றன. இப்போது வெறும் வரைபடத்திலேயோ அல்லது எங்கோ ஒரு மேதையின் மூளையிலேயோ இருக்கும் ஒரு புதிய எண்ணக்கரு சில வருடங்களில் எமது நித்திய பாவனையில் இருக்கும் Time சர்வதேச வார இதழானது எதிர்கால சமூகத்தில் பெரும் தாக்கத்தைக் கொடுக்கக்கூடிய நவீன விஞ்ஞானத்தின் பத்துப் புதிய துறைகளை சிறப்பாக முன்வைக்கிறது. இவற்றிற் சில (ஐதரசன் எரிபொருட்கலம் போன்றன) இற்றைவரைக்கும் நடைமுறைச் சாத்தியமுள்ளனவாக உருவாக்கப்படவில்லை. எனினும் மற்றவை (பரம்பரையியற் தொழில்நுட்பம் போன்றன) ஏற்கனவே தமது முக்கியத்துவத்தை செயன்முறையில் நிரூபித்திருக்கின்றன. இந்த நவீன விஞ்ஞானத்தின் பத்துத் துறைகளையும் மேலோட்டமாகப் பார்ப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## 1. ஐதரசன் எரிபொருட்கல வாகனங்கள் (Hydrogen Fuel-cell Vehicles)

தொழில்நுட்பம் எதிர்நோக்கும் பாரிய பிரச்சினைகளில் ஒன்று தான் மாசுபடுத்திய சுற்றாடலைத் தானே துப்புரவு செய்வதாகும். விஞ்ஞானம் வளர்த்த மாசுபடுத்தல் காரணிகளில் பாரியதொன்று வாகனங்கள் ஏற்படுத்தும் மாசுக்களாகும். எந்தக் கம்பனி வளியை மாசுபடுத்தாத வாகனங்களை உற்பத்திசெய்யத் தொடங்குகிறதோ அது சந்தைப் போட்டியில் மற்றைய கம்பனிகளை விரைவில் பின்தள்ளி முன்னேறிவிடும் என்பது உண்மை. இதற்காகப் பல வருட ஆராய்ச்சி மின்சார வாகனங்களை (Electric car) உருவாக்கச் செலவிடப்பட்டது. எனினும் இவ் ஆராய்ச்சியில் பெரிய தடையாக இருந்தது ஒரு மின்சார வாகனத்தை உருவாக்கப் பொருத்தமான -சக்திமிக்கதும் மலிவானதுமான -ஒரு மின்கலம் (Battery) இன்னும் கண்டுபிடிக்கப்படாமையேயாகும். மேலும் அப்படியான ஒரு மின்கலம் கண்டுபிடிக்கப்படலாம் என்பதற்கான சாத்தியக்கூறும் இன்னும் உறுதிப்படுத்தப்படவுமில்லை.

எனவே பல பொறியியலாளரின் கவனம் ஐதரசன் எரிபொருட்கல வாகனங்களின் பக்கம் திரும்பியது. இவை மின்சார வாகனங்கள் போலவே மாசுபடுத்தலை ஏற்படுத்தாதவை; அதைவிட மின்சார வாகனங்களைவிட நடைமுறைச்சாத்தியம் கூடியவை. ஒரு ஐதரசன் எரிபொருட் கலம் என்பது ஐதரசனும் ஒட்சிசனும் சேரும்போது பெறப்படும் வெடிப்புச்சக்தியால் (explosive energy) உந்தப்படும் றொக்கற் என்ஜின் போன்றது. எனினும் நேரே ஐதரசனும் ஒட்சிசனும் சேர்க்கப்பட்டு வெடிக்கவிடுவதை விடுத்து இவை இங்கு ஒரு பகுதி ஊடுபுகவிடும் மென்சவ்வினால் (semipermeable membrane) பிரித்துவைக்கப்படுகிறது. இப்போதும் தாக்கம் நடைபெறும், எனினும் மெதுவாக இங்கு இவ்வாறான தாக்கம் மின்சக்தி, வெப்பம் (கிட்டத்தட்ட 80° C யில்) நீராவி

என்பவனவற்றைப் பிறப்பிக்கிறது. 1937 ம் ஆண்டு ஹின்டன்பேர்க் **(Hinden burg)** ஐதரசன் நிரப்பப்பட்ட பயணிகள் பலூன் வெடித்து ஏற்பட்ட பாரிய அனர்த்தம் நினைவில் இன்னும் இருப்பினும் ஐதரசன் வாயுவானது இப்போது பயன்படுத்தப்படும் பெற்றோலிலும் விட பயங்கரமானது அல்ல என்றே விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

ஐதரசனானது உற்பத்தி செய்யப்பட இலகுவானது.; மின்பகுப்பு முறைமூலம் நீரிலிருந்தோ, வெப்ப முறைமூலம் இயற்கைவாயு மற்றும் நகரக் கழிவுகளில் இருந்தோ இது பெறப்படலாம். ஐதரசனை உற்பத்தி செய்யப் பயன்படுத்தப்படும் வலுமுதல் மாசு ஏற்படுத்தாத ஒன்றாக இருப்பின் (இதற்கு சூரிய மின்கலத்தை பயன்படுத்தல் சிபார்சுசெய்யப்படுகிறது) முழுவட்டமும் -உற்பத்தி செய்யப்படுதலில் இருந்து பயன்படுத்தல் வரை -மாசற்றதாக இருக்கும். ஐக்கிய அமெரிக்காவின் 'பிக் த்ரீ' **(Big three)** ஜேர்மனியின் 'டெய்ம்லெர் பென்ஸ்' **(Daimiler Benz)** ஜப்பானின் 'மஸ்டா' **(Mazda)** மற்றும் 'நிஸான்' **(Nissan)** போன்ற வாகன உற்பத்தி செய்யும் கம்பனிகள் ஐதரசன் எரிபொருட்கல வாகனங்களை அபிவிருத்திசெய்வதில் இறங்கியுள்ளன. இப்போது சில ஆயிரம் அமெரிக்க டொலர் அளவு காசு உறிஞ்சுகின்ற இவ் ஐதரசன் எரிபொருட்கல எந்திரங்கள் மலிவாக உற்பத்தி செய்யப்படக் கூடிய நிலைக்குக் கொண்டு வரப்படும் எனின் (இது சாத்தியமே என்று பொறியியலாளர் கூறுகின்றனர்) இனிவரும் சில ஆண்டுகளினுள் ஐதரசனால் இயக்கப்படும் வாகனங்கள் வீதிகளில் பாவனையில் இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

### 2. உயர்வெப்ப நிலையில் மிகுகடத்துதிறன் (High-Temperature super Conductivity)

மின்சக்தியைக் கடத்துவதற்குப் பயன்படுத்தப்படும் கடத்திகளின் வழியே மிகப் பெரியளவிலான சக்தி இழக்கப்படுகிறது. கடத்திகளில் காணப்படும் தடையினால் மின்மோட்டார், மின்விளக்கு போன்ற மின்சாதனங்களில் பெருமளவு சக்தி வெப்பமாக விரயமாகிறது. இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மிகுகடத்து திறன் கடத்திகளின் **(Super Conductors)** பயன்பாடு எதிர்பார்க்கப்படுகிறது- இவை எவ்வித தடையுமின்றி மின்னைக் கடத்தக்கூடியன.

1986 ம் ஆண்டுவரை, விஞ்ஞானம் அறிந்திருந்த மிகு கடத்துதிறன் கடத்திகள் தனிப்பூச்சிய வெப்பநிலைக்கு **(absolute zero temperature = -273° c)** அண்மித்த வெப்பநிலைகளிலேயே உரிய பயனைத்தந்தன. மேலும் இவ்வெப்பநிலையானது விலையுயர்ந்ததும் கையாளக் கடினமானதுமான திரவ ஹிலியத்தின் உதவியுடனேயே பெறப்பட வேண்டியிருந்தது. பின்பு ஒரு புதுவகையான செரமிக் **(Ceramic)** மிகுகடத்துதிறன் கடத்தி கண்டுபிடிக்கப்பட்டது. (முன்னையவை உலோகத்தினாலானவை) இந்த செரமிக் வகையானது **(180° c)** போன்ற சிறிது உயர் வெப்பநிலைகளில் இயங்கக் கூடியதாக இருந்தது. இவ்வெப்பநிலை கூட விலை குறைந்த திரவ நைதரசன் கொண்டு பெறப்படக் கூடியதாக இருந்தது.

எனினும் நொருங்கக்கூடிய இந்த செரமிக் கடத்திகளை எவ்வாறு பாவிப்பது என்று எவராலும் எவ்விதமான முடிவையும் எடுக்க முடியவில்லை. இந்நிலையில் ஐக்கிய அமெரிக்காவின் லொஸ் அலாமெஸ் தேசிய ஆய்வுகூட விஞ்ஞானிகள் **(Los Alamos National Laboratory, USA)** தாம் புதியதொரு உயர்வெப்பநிலை-மிகுகடத்துதிறன் கடத்தியைக் கண்டுபிடித்திருப்பதாக அறிவித்துள்ளனர். இது ஒரு வளையக் கூடிய மெல்லிய நாடாவடிவில் வார்க்கப்பட்டுள்ளது. இது சாதாரண வீட்டு செப்புக்கம்பிகளை விட 1200 மடங்கு அதிகமான மின் ஓட்டத்தை எவ்வித தடையுமின்றி எடுத்துச் செல்லக்கூடியது. ஜப்பானிய ஆய்வுகூடங்களும் இவ்வாறான ஒன்றை அறிமுகப்படுத்துவதன் இறுதிக்கட்டத்திற்கு வந்து விட்டதாகக் கூறப்படுகின்றது. எனவே எதிர்காலக் கனவாக இருந்த இந்த உயர்வெப்பநிலை-மிகுகடத்துதிறன் இப்போது மிகவும் அண்மித்துவிட்டது. இது எதிர்காலத்தில் மிகுந்த வினைத்திறன் மிக்க மின்காவும் கம்பிகள் **(power lines)** சிறிய ஆனால் சக்திவாய்ந்த மின்னோட்டங்கள், மின்காந்த சக்திப் படுக்கையில் விரையும் புகையிரதங்கள், கையடக்கமான ஸ்கானர்கள் **(Scaner)** போன்றவற்றை விரைவில் உருவாக்கித்தரும்.

### 3.பரம்பரையியற் பொறியியல் (Genetic Engineering)

1970ம் ஆண்டுகளில் உயிரியலாளர்கள் DNAகளை (பரம்பரை அலகு) வெட்டவும் ஒட்டவும் தெரிந்து கொண்டதிலிருந்து இதன் பயன்பாடுகள் எல்லைகளற்றதாவே இருந்து வருகிறது: இன்சுலின் வளர்ச்சிக்கான ஓமோன்கள், BST (பசுக்களில் பால் பெறப்படும் வீதத்தை கூட்டும் ஒரு இரசாயனம்) போன்ற இரசாயனங்கள், கலநிலையில் சில அடிப்படை மாற்றங்கள் செய்யப்பட்ட பக்றீரியாக்களில் இருந்து உற்பத்தி செய்யப்படுகின்றன. பீடைகளிலிருந்தும் நோய்களிலிருந்தும் பாதுகாப்புத் தரக்கூடிய மேலதிக ஜீன்களுடன் பலவிதப் பயிரினங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன; கடந்த சில வருடங்களில் உயிராபத்து விளைவிக்கக் கூடிய சில சுரப்புக்குறைபாடுகள்

*(Enzymes deficiencies)* இப்புதிய தொழில்நுட்பத்தால் வைத்தியர்களால் திருத்தப்பட்டுள்ளன.

இவைவெறும் ஆரம்பமே. இத்துறையில் மேலும் மேலும் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வரும் ஆய்வாளர்கள் குறைபாடுகள் உள்ள ஜீன்களை மாத்திரம் கண்டுபிடிக்காது குறைகளைத் திருத்தும் முறைகளையும் கண்டுகொள்ள ஆரம்பித்துள்ளனர். இதன்மூலம் வளர்வதை நிறுத்த மறந்த புற்றுநோய்க்கலங்களிற்கு வளர்ச்சியை நிறுத்தச் சொல்லிக் கொடுக்கலாம்; அதேபோல் வளர மறந்த கலங்களையும் -மயிர்க்கலங்கள் போன்றன- வளரச் செய்யலாம். மேலும் இது ஜீன் சம்பந்தப்படாத சேதங்களையும் திருத்தப்பயன்படலாம் - உதாரணமாக மீண்டும் தாமாக புத்துயிர் பெறும் தன்மையற்ற நரம்புக்கலங்களின் இத்தன்மை மாற்றுவதன் மூலம் முண்ணாண் அல்லது மூளை சம்பந்தப்பட்ட அறுவைச் சிகிச்சையின் பின்னர், பாதிக்கப்பட்ட நரம்புகலங்களை மீண்டும் புத்துயிர் பெறச் செய்யலாம்.

மேலும், இந்தப் பரம்பரையியல் மாற்றங்கள் எமது உணவு உற்பத்தியில் பெரும் பங்களிப்பைச் செய்யப்போகிறது. இப்போது உலகின் உணவு உற்பத்தி வளர்ச்சியானது சனத்தொகை வளர்ச்சியிலும் சிறிதளவே முன்நிற்கிறது, தவிர இவ்வுணவு வளர்ச்சியானது குறைந்து கொண்டும் வருகிறது. ஆனால் இப்போது பல பரம்பரையியல் ஆய்வுகூடங்களில் அதியுயர் சாகுபடி தரும் நெல்போன்ற பயிரினங்கள், இரண்டாவது 'பசுமைப் புரட்சி'யைத் தோற்றுவிக்கும் என்று நம்பவைக்கும் அளவிற்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. DNA மாற்றங்கள் மூலம் பெறப்படும் நோய் எதிர்ப்பு, விவசாய முன்னேற்றங்கள் மனித நலத்தின் முன்னேற்றத்திற்கும் வழிவகுக்கும்.

### 4. Bionics

முற்றுமுழுதான செயற்கை மனிதன் என்ற கனவு நிறைவேற இன்னும் நீண்டகாலம் உண்டு. என்னதான் கணணி விஞ்ஞானிகள் கனவு கண்டபோதிலும் ஒரு செயற்கை மூளையை (bionic brain) உருவாக்குவது எப்போது கைகூடும் என்பது ஒருவர்க்கும் இன்னும் தெரியவில்லை. எனினும் மூளை தவிர்ந்த மற்றைய பாகங்களின் இடங்களை நிரப்பும் முயற்சிகளில் உயிரியல் மருத்துவப் பொறியியலாளர்கள் (biomedical engineers) மிகவும் முன்னேறியுள்ளனர். செயற்கை அவயவங்கள் இதுகாறும் முற்றுமுழுதாக பொறியியல் (Mechanical) சார்ந்ததாகவே இருந்துவந்தது. ஆனால் கடந்த தசாப்தத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மாற்றீட்டு அவயவங்கள் பாவனையாளரின் உடலின் நரம்புத் தொகுதியுடன் இணைக்கப்பட்டு, பாவனையாளர்கள் இதன் துணைகொண்டு ஒரு வாத்தியக் கருவியை இலாவகமாக இசைக்கக் கூடியளவு சிறப்பாகத் தொழிற்படுகின்றன. இப்போது ஒரு அமெரிக்கத் தாபனம் (the Sabolich Prosthetic & Research Centre) அமுக்க மற்றும் வெப்பநிலை உணரிகளைக் கொண்டு (Sencors) இயங்கும் உணர்வுகளையும் கடத்தக்கூடிய செயற்கைக் கையைக் கண்டுபிடித்துள்ளது.

மற்றைய புலனுறுப்புக்களும் பொறியியல் முன்னேற்றத்தின் பயனைப் பெற ஆரம்பித்துள்ளன. நத்தைச்சுருளி (Cochlea -காதின், ஒலி அதிர்வுகளை மின்னலைத் துடிப்புக்களாக மாற்றும் ஒரு பகுதி) மாற்றுச் சிகிச்சை வெற்றிகரமாக முடிந்ததைத் தொடர்ந்து, ஐக்கிய அமெரிக்க விஞ்ஞானிகள் செயற்கைக் கண்ணைப் பரிசோதித்துக் கொண்டு இருக்கின்றனர். ஒரு பார்வையற்ற மனிதன் கட்குழிக்குள் பொருத்தப்படும் சிறிய கமராவுடன் வயர்மூலம் இணைக்கப்படுவான் எனின் அவனால் ஆகக்குறைந்தது சில தெளிவற்ற உருவங்களையாவது உணரமுடியும் -அத்துடன் வீடியோ கமரா, செய்மதி அன்ரெனா போன்ற மூலங்களில் இருந்து வீடியோ சிக்னல்களையும் உணரமுடியும்.

இவை தவிர உலகெங்கும் உள்ள பல்வேறு பொறியியலாளர்கள் தோல், எலும்பு, இரத்தம், மூட்டுக்கள் -உள்ளுறுப்புக்கள் போன்ற மனிதனின் பல்வேறு பாகங்களிற்கும் செயற்கைவடிவம் கொடுக்க முயன்றுகொண்டிருப்பதைப் பார்க்கும்போது முற்றுமுழுதான 'உற்பத்தி செய்யப்பட்ட' மனிதன் வர அதிகநாட்கள் தேவையில்லை எனவும் எண்ணத் தோன்றுகிறது.

### 5. உலகளாவிய தனிநபர் தொலைபேசிகள் (Universal Personal Telephones)

அமேசன் நதியிலிருந்து இமயமலை உச்சிவரை என்று எவ்விடம் இருந்துகொண்டும் பாவிக்கக்கூடிய மணிக்கட்டில் பொருத்தப்பட்ட தொலைபேசி என்பது பல ஆண்டுகளாக புனைகதைகளிலேயே இருந்துவந்தது. எனினும் இது இன்னும் சில வருடங்களில் உண்மையாகி விடலாம். ஏற்கனவே செலூலர் ஃபோன்கள் (Cellular Phones) சேட் பொக்கற்றினுள் பொருந்துமளவிற்கு சிறியனவாகவும், சில கம்பனிகள் தமது வாடிக்கையாளரிற்கு பரிசாகத் தருமளவிற்கு மலிவானதாகவும் ஆகிவிட்டது. இன்று பொக்கற்றினுள் இருப்பது நாளை மணிக்கட்டில் ஏறிவிடும்.

உலகளாவிய தனிநபர் நேரத் தொடர்பைப் பொறுத்தவரை தடையாக இருப்பது தொழில்நுட்பமல்ல - சில சட்ட நடவடிக்கைகளும் வான் அலைகள் (Airwaves) வரையறுக்கப்பட்டிருப்பதுவுமேயாகும். இப்போது ஆறிற்குக் குறையாத சர்வதேச தொலைத்தொடர்பு சம்பந்தப்பட்ட கூட்டமைப்புகள் உலகளாவிய தொலைத் தொடர்பு சேவையினை வழங்கும் உரிமையினைப் பெறுவதற்காக தனித்தனி நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடாத்திக் கொண்டிருக்கின்றன. இச்சேவைக்காக இவ்வமைப்புக்கள் ஒவ்வொன்றும் நூற்றுக் கணக்கான மில்லியன் டொலர்களை செலவழிக்கத் தயாராகவுள்ளன. இக் காசில் பெரும்பகுதி செய்மதிகளிற்கே கூடியளவு செலவழிக்கப்படும்- எப்போதும் ஒரு செய்மதி எமது தலைக்குக் கிட்டத்தட்ட மேலே இருந்தால்தான் வயர்களோ வேறு பெற்றுக் கொள்ளும் நிலையங்களோ (receiving station) இன்றி உலகளாவிய தனிநபர் தொலைபேசிச் சேவை சாத்தியமாகும்.

இவ்வகையான தொலைத்தொடர்பு வசதியே எதிர்கால சர்வதேச வியாபாரத்தில் நியமத் தேவையாக இருக்கப் போகிறது என்பது தவிர இதுவே வளர்ந்துவரும் நாடுகளிற்கு தொலைபேசி சேவையை வழங்க மலிவான வழியுமாகும். இந்தியாவில் இருந்து இயங்கும் ஆபிரிக்க -ஆசிய செய்மதித் தொடர்பு அமைப்பு (India based Afro-Asian Satellite Communication) இன்னும் மூன்று வருடத்தில் முழு அளவில் செயற்படும் அளவிற்கு வளர்ந்து வருகிறது. உலகின் மிகுதிப் பகுதியும் இக்காலப்பகுதியில் தனது சொந்தத் தொடர்பு வசதியைக் கொண்டிருக்கும் - இன்னும் ஓரிரு தசாப்தங்களில் 'தொடர்பற்றுப்போதல்' என்ற சொற்பதமே வழக்கொழிந்து போகும்.

### 6. குரலால் தொழிற்படும் கணணிகள் (Voice- Activated Computers)

இப்போது IBM அப்பிள்(Apple) மைக்ரோசொஃப்ற் (Microsoft) போன்ற நிறுவனங்களில் அபிவிருத்தி நிலையில் இருந்துவரும் குரல் இனம் காணும் தொழில்நுட்பம் (Voice - Recognition technology) இன்னும் சில வருடங்களில் சந்தைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இப்போது இருக்கும் - இத் தொழில்நுட்பத்தின் ஆரம்பக்கட்டத்தில் வெளியிடப்பட்ட -மெதுவாகத் தொழிற்படும், பிழை விடுவதற்குச் சாத்தியமான கணணிகள் போலன்றி எதிர்கால வகைகள் உயர் தராதரம் உடையனவாக விருக்கும். இவை சாதாரண உரையாடல்களை விளங்கக் கூடியதாகவும், அசையழுத்தத்தில் (accent) ஏற்படும் வேறுபாடுகளையோ உரையாடல்களில் உள்ள தாளவேறுபாடுகளையோ (rhythm) ஏற்கக் கூடியதாகவும் இருக்கும். மேலும் நாம் கணணிக்கு இடும் கட்டளைகளில் உள்ள உள்ளார்த்தங்களை புரிந்துகொள்ளக் கூடிய புத்திசாலித்தனத்தையும் (Intelligent) எதிர்கால வகைகள் கொண்டிருக்கும்.

இத்தொழில்நுட்பம் தனியே கணணிகளில் மட்டுமன்றி எல்லாவித இலத்திரனியல் தகவற் சாதனங்களிலும் (Electronic Information -Precessing devices) பயன்படுத்தப்படும். இதன்மூலம் தொலைபேசியில் இலக்கத்தைத் தட்டுவதை விடுத்து குறிப்பிட்ட இலக்கத்தை வாயினால் கூறி தொடர்பு ஏற்படுத்தலாம்; TV ஐயோ VCR ஐயோ இயக்கும் தொலை இயக்கு கருவிகளையும் (Remote) எமது வாய் வார்த்தை பிரதியீடு செய்யும். இப்படிப்பல திருப்பங்களை எதிர்காலத்தில் எதிர்பார்க்கலாம்.

### 7. நனோ தொழில்நுட்பம் (Nano Technology)

1980களின் பிற்பகுதியில், அணுக்களின் தன்மையை ஆராய்வதற்கென IBM நிறுவன ஆராய்ச்சியாளர்கள் வடிவமைத்த இலத்திரனியல் நுணுக்குக் காட்டியானது (electronic microscope) பதார்த்தங்களின் மிகநுண்ணிய கட்டமைப்புக்களைத் தனித்தனியே எடுக்கவும் அவற்றை விரும்பியபடி இடம்பெயர்க்கவும் வல்லதாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதை நிரூபிப்பதற்காக IBM விஞ்ஞானிகள் 35 செனன் (xenon) அணுக்களை மாத்திரம் எடுத்து அவற்றைக்கொண்டு "IBM" என்ற எழுத்துக்கூட்டத்தை மிக நுண்ணியவடிவில் அமைத்துக் காட்டினர். விரைவிலேயே இவ்வாறான பல செயற்பாடுகள் பொதுவாயின- ஒரு பொன் துளியின் முனையிலே உலக வரைபடத்தை ட்ரில்லியனில் ஒரு பங்கு ($10^{-12}$) என்ற அளவுத் திட்டத்தில் IBM வரைந்து காட்டியது; ஸ்ரான்ஃபோட் (Stanford) விஞ்ஞானிகள் "A Tale of Two Cities" என்ற கதையின் முதற்பக்கத்தை 25000 மடங்காகச் சிறுப்பித்துக் காட்டினர். இதேசமயம், பொறியியலாளர் இம்முன்னேற்றத்தைப் பாவித்து மிக நுண்ணிய மின்சுற்றுக்களை சிலிங்கன் சில்லில் செய்ய ஆரம்பித்தனர். விரைவிலேயே நுண்ணியளவிலான பற்சில்லுகள் (gears) காற்றாடிகள் (Rotors) போன்றவற்றையும் செய்து அவற்றை இயங்கச் செய்வதிலும் ஈடுபட்டனர்.

இவை வெறும் விஞ்ஞான விளையாட்டுக்களாகத் தென்படினும் விஞ்ஞானிகள் இதை நனோ தொழில்நுட்பம் (Nano Technology) எனும் புதியதுறையின் ஆரம்பப்படிகள் என்றே கூறுகின்றனர். இத்தொழில்நுட்பம் பொருட்களையும்

இயந்திரங்களையும் எதிர்காலத்தில் மூலக்கூற்று அளவிலேயோ அல்லது அணு அளவு சிறிதாகவோ உற்பத்தி செய்யப்பயன்படும். இப்போது இத்தொழில் நுட்பத்தினால் கண்டுபிடிக்கப்பட்ட பயனுள்ள பொருட்கள் இல்லை எனினும் இத்துறையில் முன்னோடிகளான விஞ்ஞானிகள், விரைவில் மிக அதிசயமான பொருட்களை எதிர்பார்க்கலாம் என்கின்றார்கள் - கல அளவிலான இயந்திரமனிதர் (Cell-size robots) மனித குருதிக் கலன்களினுள் ஓடி கொழுப்புப் படைகளைச் சுரண்டி எடுக்கும்; மிகச் சிறியளவிலான சுப்பர் கம்பூட்டர்கள் (Supercomputer -on-a-chip) பாவனைக்கு வரும்; புதிய கலப்புலோகங்களை, இதுவரை கனவு கண்டிராத வழியில், ஒவ்வொரு அணுஅணுவாக இணைத்து உருவாக்கலாம் - இப்படிப்பல.

## 8. ஒளி இலத்திரனியல் (Optical Electronics)

இதுவரைகாலமும், ஒரு கணணியின் வேகம் மற்றும் திறன் என்பது எவ்வளவுக்கெவ்வளவு நுண்ணியதாக இலத்திரனியல் சுற்றுக்களை ஒரு சிலிக்கன் சில்லில் (Silicon Chip) பதிக்க முடிகிறது என்பதிலேயே தங்கியிருந்தது. இச்சவாலை இன்றைய பொறியியலாளர் மிகுந்த சாதுரியத்துடன் கையாளுகின்றனர். எனினும் மேலும் முன்னேற்றங்களிற்கு சில அடிப்படைப் பௌதிக விதிகள் அவர்களிற்கு தடைகளாகவே இருக்கின்றன. ஒரு சுற்றில் ஓடும் மின்னோட்டம் ஒரு மின்னலளவு வேகத்தில் ஓடினாலும் அது இப்போது போதியதாகஇல்லை, மேலும் மின்னோட்டத்தில் பாயும் இலத்திரன்கள் பெருமளவு வெப்பத்தை வெளிவிடுவதோடு, ஒவ்வொரு ஓட்டமும் மற்றையதோடு குறுக்கிடும்போது ஏற்படும் தலையீட்டைத் (Interfere) தவிர்ப்பதற்கு அவற்றைத் தனித்தனியே பேண வேண்டிய தேவையும் ஏற்படுகிறது.

எனவே இன்றைய கணணி வடிவமைப்பாளர் சுற்றுக்களில் மின்சாரத்தைப் பயன்படுத்துவதை விடுத்து ஒளியைப் பயன்படுத்துவதற்குத் தயாராகி வருகின்றனர். ஒளியானது மின்சாரத்தைவிட வேகமானது, வெப்பம் விடுவிக்காதது, தலையீடு அற்றது (Interference free) ஏற்கனவேயே ஒளியானது ஒளிநார்கள் மூலம் (Optical fiber) தொலைபேசி உரையாடல்களையும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையும் ஊடுகடத்தப் பயன்பட்டு வருகின்றது. இப்போது ஒளியினை தகவல்களைச் சேகரிக்கவும், ஆளிகளை (On-off switch) இயக்குவதற்கும் பயன்படுத்தும் வழிமுறைகளை விஞ்ஞானிகள் கண்டுபிடித்து வருகின்றனர். கொலரடோ (Colorado, USA) பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் முற்றுமுழுதாக ஒளியைப் பாவித்துச் செயற்படும் கணணியை (Optical computer) உருவாக்கியுள்ளனர். (எனினும் இது முதல் வளர்ச்சிக் கட்டத்திலேயே உள்ளது) தவிர IBM, AT & T Bell ஆராய்ச்சிக் கூடம் ஜப்பானின் NEC போன்ற நிறுவனங்களும் இவ்வாறான கணணிகளை உருவாக்க முனைந்து வருகின்றன. எனவே இன்னும் ஒரு தசாப்தத்தில் தரம் வாய்ந்த, முற்றுமுழுதாக ஒளியால் இயங்கும் கணணிகள் சந்தைக்கு வந்துவிடும் என எதிர்பார்க்கலாம். அப்போது இன்றைய கணணிகள் 1950 ம் ஆண்டுகால பாரியகிழட்டுக் கம்பூட்டர்கள் போலக் கணிக்கப்படத் தொடங்கிவிடும்.

## 9. Virtual Reality

இப்பதமானது அண்மைக்காலங்களில் பலவிதமான கருத்தில் பாவிக்கப்படுகிறது. உண்மையில் வெர்ச்சுவல் ரியாலிட்டி என்பது ஒரு செயற்கையான சூழலை அது நிஜமானதுதான் என்று எண்ணும்படியாக உருவாக்குவது ஆகும். இவ்வரைவிலக்கணப்படி VRற்கு மிகக் குறைந்தளவு உதாரணங்களே இப்போது உள்ளன. விமானிகளிற்கு பயிற்சி அளிக்கப் பயன்படும் சிமூலேசன் (Simulation) சாதனம் இவ்வாறான ஒன்றாகும். இதன்மூலம் பயிற்றப்படும் விமானிகள் முதன்முறை உண்மையான விமானத்தில் பறக்கும்போது பயணிகளை ஏற்றிச்செல்லவும் அனுமதிக்குமளவிற்கு இந்த சிமுலேசனில் உள்ள VR உண்மைத்தன்மையுடையதாகவிருக்கிறது.

எனினும் VR என்பதை ஒரு பகுதியாக எடுக்கும்போது கூட அது ஒரு சக்திவாய்ந்த தொழில்நுட்பமாகக் கருதப்படலாம். வட கரோலினாவின் போவ்மான் கிரே மருத்துவக் கல்லூரியின் (Bowman Gray Medical School in North Carolina, USA) டாக்டர் டேவிட் வைனிங் (Dr. David Wining) என்பவர் தலைமையிலான ஆய்வாளர்கள் * CAT ஸ்கானர் கொண்டு மனித உடலின் உட்பகுதிகளின் முப்பரிமாணத் தோற்றத்தைப் பெறும் வழியைக் கண்டுபிடித்துள்ளனர். இதன் விரைவான வளர்ச்சியினால் வைத்தியர்கள் மனித உடலினுள் 'பறந்து' சென்று புற்றுநோய்க்கலங்களை இனங் காண்கின்றனர். (இது இன்றுவரை பயன்படுத்தி வந்த எக்ஸ்ரே முறையிலும் இலகுவானது) ஜோர்ஜியா தொழில்நுட்பக் கல்லூரியிலும் எமோரி பல்கலைக்கழகத்திலுமுள்ள உளவியலாளர்

---

*CAT Computerized Axial Tomography - a Computerized X-ray process - 50 times higher sensititive than ordinary X-rays.*

உயரம் பற்றிய பயம்கொண்ட நோயாளிகளைக் குணப்படுத்த ஒரு பொய்யான கண்ணாடியாலான உயர்த்தியை (Virtual glass elevator) வெற்றிகரமாகப் பயன்படுத்தியுள்ளனர். கட்டட வரைஞர்கள் VR program களைக் கொண்டு தமது வாடிக்கையாளர்களை, ஒரு துளி சீமெந்தை இடமுன்னரேயே நாம் வடிவமைத்த கட்டங்களிற்குள் சுற்றிக் காட்டுகின்றனர். கணணி விளையாட்டு வடிவமைப்பாளர்கள் இத்தொழில்நுட்பத்தைக் கொண்டு பிரமிக்கத்தக்க புதிய உலகங்களையே உருவாக்கிக் காட்டுகின்றனர்.

ஆனால் இச்சாதனைகள் விரைவில் பழையனவாகப் போய்விடும். MIT Media Lab போன்ற பல ஆய்வுகூடங்களில் புதுவித தலைக்கவசத்தையும் காப்பு மூக்குக் கண்ணாடியையும் (Helmet & Goggles) பரிசோதிக்க ஆரம்பித்துள்ளனர். இதை அணிந்துகொள்ளும் பாவனையாளர் செயற்கையாக அமைக்கப்பட்ட உண்மை உலகத்தினுள் ஆழ்ந்து போவார். மேலும் மேலும் மலிந்துவரும் கணணித்திறனினால் இத்தொழில்நுட்பம் வெகுவிரைவில் அன்றாட வாழ்வில் புகுந்து விடும். இதன் மூலம் இன்னும் ஒரு தசாப்தத்தினுள் மனிதர்கள் வீட்டினினுள் இருந்து கொண்டே வெவ்வேறு நாடுகளிற்கு -ஏன் வெவ்வேறு உலகங்களிற்குக் கூட விடுமுறையில் சென்றுவருவர். (realistic virtual Vacation); சிக்கலான இயந்திரங்களை அவற்றைத் தொடாமலேயே இயக்கப் பழகிக் கொள்வர்; மேலும், சிறுவர்களிற்கு எல்லையற்ற ஆர்வத்தைத்தரும் புதியவகை விளையாட்டுக்களும் கிடைக்கும்.

### *10. புதிய பொருட்கள் (New Materials)*

இயற்கை எண்ணியே பார்த்திராத பல புதிய பதார்த்தங்களை விஞ்ஞானம் கண்டுபிடித்திராவிடின் இன்றைய நவீன விஞ்ஞானம் இப்போதுள்ள அளவு முன்னேற்றம் கண்டிராது: ரைற்றானியம் - இரும்பு கலப்புலோகமும் கிரபைட் -எபொக்ஸ்ஸி சேர்மானமும் கண்டுபிடிக்கப்பட்டிராவிடில் அதி செயற்பாடு மிக்க மீயொலி விமானங்கள் (Super-sonic high-Performance jets) தோன்றியிருக்கமாட்டா; சிலிக்கனில் தேவையான மாற்றங்கள் செய்து புதிய வடிவத்தைப் doped silicon) பெற்றிராவிடின் இன்னும் கணணிகள் அறைகளை நிரம்புவதாகவேயிருக்கும்; பிளாஸ்டிக்குகள் இல்லாவிடின் இப்போது உற்பத்தி செய்யப்படும் பல பொருட்கள் பாவனைக்காலம் குறைந்ததாகவும் பாரமானதாகவும் விலையுயர்ந்ததுமாகவேயிருக்கும்.

21ம் நூற்றாண்டு மேற்கூறப்பட்ட நன்மைகளை தொடர்ந்து பாவிக்கும் அதேவேளை புதிய பதார்த்தங்களும் அறிமுகமாகும். வாகன இயந்திரங்களின் எடையைக் குறைக்கும் முயற்சியில் இப்போது அதற்காக அலுமினியத்தைப் பயன்படுத்திவரும் பொறியியலாளர் விரைவில் செரமிக் (Ceramic) பதார்த்தத்தைப் பாவிக்கத் தொடங்குவர். செரமிக் ஆனது மேலும் எடை குறைந்ததாகவும் அதிகளவு வெப்பத்தை உள்ளடக்கக்கூடியதாகவும் இருக்கும். இது இயந்திரங்களை மேலும் வெப்பமாக இயங்கச் செய்வதனால் இயந்திரங்களின் திறன் கூடுவதுடன் மாசுக்களை வெளிவிடாததாகவும் இருக்கும். கிட்டத்தட்ட எடையே இல்லாததாகவும் சிறந்த வெப்பக்காவலியாகவும் இருக்கும். ஸ்றைரோஃபோம் (Styroform) எனப்படும் பதார்த்தம் செரமிக் நுரை போன்றது -எடைகுறைந்த காவலி தேவைப்படும் இடங்களில் இப்போது பாவனையில் உள்ள நுரை பிளாஸ்டிக்கை (Foam Plastic) பிரதியீடு செய்யும்.

எல்லாவற்றிற்கும் மேலாக விஞ்ஞானிகள் இப்போது உயிரியற் பொருட்களின் (Biological materials) ரகசியங்களை ஆராய ஆரம்பித்துள்ளனர். இவை மனிதன் எண்ணிப்பார்த்திராதளவு பயனுள்ளதாக இருக்கும். வளையக்கூடியதும் அதேசமயம் எடைக்கு எடை விகிதாசாரப்படி இரும்பிலும் விட ஐந்து மடங்கு வலிமை மிக்கதுமான சிலந்திநூல் வாஷிங்டன் மற்றும் வியோமிங் (wyoming, USA) பல்கலைக்கழக ஆய்வுகூடங்களில் ஆராயப்பட்டு வருகிறது. அபலோன் ஓடும் (Abalone Shell) விஞ்ஞானிகளின் கவனத்தை ஈர்த்து, மெல்லியதும் பலமானதுமான இவ்வோட்டைப் போன்ற செயற்கை ஓடுகளை உருவாக்க முயன்று வருகின்றனர். ஐரோப்பிய மற்றும் ஜப்பானிய விஞ்ஞானிகள் நண்டு மற்றும் பிற பூச்சி இன ஓடுகளில் இருக்கும் கைற்றின் (Chitin) என்ற பதார்த்தத்தை பன்டேஜ், உயிரியற் சிதைவுக்கு உட்படக்கூடிய, உணவுவகைகளை சுற்றப்பயன்படுத்தக்கூடிய பதார்த்தம் (biodegrable food wrap) உடை போன்ற பொருட்களின் உற்பத்திக்குப் பயன்படுத்தக் கூடிய வழிவகைகளை ஆராய்ந்து வருகின்றார். இயற்கை தனது அற்புதங்களைப் பேணும்வரை, இவ்வாறான புதிய பதார்த்தங்களிற்கான ஆய்வும் தொடர்ந்து முன்னேறி வரும் என எதிர்பார்க்கலாம்.

**நன்றி : Times வாரஇதழ், 17 July 1995**

***''பிறந்த மண்ணையும் அங்கு வாழும் மக்களையும் காதலிப்பதென்பது பிறந்து வாழ்ந்து பழகிய சூழலிலும், அதன் பண்பாட்டு மரபுகளிலும் ஒருவன் இயல்பாகக் கொண்டிருக்கக் கூடிய பற்றையும், பாசத்தையுமே சுட்டி நிற்கின்றது. எழுத்தாளன் ஒருவனை இப்பாசமும் பற்றும் தூண்டிநின்றால் அதன் விளைவு அதன் சூழலும் பண்பாட்டு மரபுகளும் இலக்கிய அந்தஸ்துப் பெறுவதாக அமையும். அச்சூழலுக்கே பிரத்தியேகமாக அமையும் குணாம்சங்களின் அடியாக உருவாகும்.''***

## 1970களில் ஈழத்தின் இலக்கியப்போக்கு

**சிறப்பாக நாவல் இலக்கியம் இக்காலப்பகுதியில் கொண்டிருந்த பிரதான பண்பு**

**உமா.கிருஷ்ணசாமி, தமிழ் சிறப்புக்கலை, மூன்றாம் வருடம்.**

*ஈழத்துத் தமிழ் இலக்கியப் போக்கினை எடுத்துக் கொண்டால் அது ஏனைய காலங்களைவிட 70 களில் தனக்கெனத் தனித்துவமான பண்புகளைக்கொண்டு அமைந்துள்ளமை தெளிவு. இக்காலப்பகுதியில் இங்கு பல நாவல்கள் வெளிவந்துள்ளன. அவை தமது கதைகளினூடாக பல்வேறு வகையான விடயங்களைப் பிரதிபலிப்பனவாக அமைந்திருப்பதைக் காணலாம். இந்தவகையில் நோக்கும்போது இக்காலப்பகுதியில் மொழிபெயர்ப்பு நாவல்கள், நகைச்சுவை நாவல்கள், குடும்பநாவல்கள், மர்மநாவல்கள் போன்றனவும் தோற்றம் பெற்றன எனினும் இவற்றுடன் இக்காலப் பகுதிக்கென்றே தனித்தன்மையுடன் பிரதேச உணர்வு கொண்ட பல நாவல்களும் இக்காலப்பகுதியிலேயே எழுதப்பட்டிருப்பதைக் காண முடிகின்றது.*

*ஈழத்தில் தோன்றிய நாவல் இலக்கிய வரலாற்றை நோக்கின் ஏனைய காலப் பகுதிகளிலும் அதாவது 70 களிற்கு முன்னரும் ஈழத்தில் பல நகைச்சுவை நாவல்கள், மொழி பெயர்ப்பு நாவல்கள், குடும்ப நாவல்கள், மர்ம நாவல்கள் மற்றும் வரலாற்று நாவல்கள் கூட எழுதப்பட்டிருக்கின்றன. ஆனால் பிரதேசப்பண்பை உள்ளதை உள்ளபடி படம்பிடித்துக் காட்டும் ஒரு தனித்தன்மையான போக்கு உச்சநிலை அடைந்த காலகட்டமாக 1970 விளங்குகின்றது.*

*மேலும் 70 களில் தோன்றிய நாவல்களை நோக்கின் இக்காலப்பகுதியில் தோன்றிய நகைச்சுவை நாவல்களுக்கு எடுத்துக்காட்டாக செங்கைஆழியனால் வண்ணார்பண்ணைக் கிராமத்தைக் களமாகக் கொண்டு அங்கு பாரம்பரியமாக நிலவிவரும் ''காற்றாடிக்கலை''யின் பெருமையைப் புலப்படுத்தும் வகையில் எழுதப்பட்ட ''முற்றத்து ஒற்றைப் பனை'' (1972) மற்றும் இவரின் ''கொத்தியின் காதல்'' (1975) என்பவற்றையும் பேச்சுவழக்கில் நகைச்சுவை ததும்பக் கண்முன் நிறுத்தியுள்ளார்.*

மேலும் இக்காலப்பகுதியில் வெளிவந்த மொழி பெயர்ப்பு நாவல்களாக திருமதி சரோஜினிதேவியின் 'இணைபிரியாத தோழன்' (1973), தம்பிஐயாதேவதாஸின் 'நெஞ்சிலோர் இரகசியம்' என்பவற்றையும், குடும்பநாவல்களுக்கு எடுத்துக்காட்டாக ந.பாலேஸ்வரியின் 'பூஜைக்கு வந்த மலர்' (1973) 'உறவுக்கப்பால்', கே.எஸ்.ஆனந்தனின் 'தீக்குள் விரலைவைத்தால்', 'கர்ப்பக்கிரகம்' (1974), 'காகித ஓடம்' (1974) போன்றவற்றையும் மேலும் மர்மநாவல்களாக ஜினா (1973), பட்லி (1974) கறுப்புராஜா (1975), அலிமாராணி (1975) என்பனவற்றையும் குறிப்பிட்டுக் கொள்ளலாம். இவைபோன்ற மேலும் பல நாவல்கள் இக்காலப்பகுதியில் எழுதப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவை தவிர இக்காலப்பகுதிக்கே உரிய தனிச்சிறப்பு வாய்ந்த தன்மை கொண்ட பிரதேச நாவல்கள் பலவும், இக்காலப்பகுதியிலேயே தோன்றியுள்ளன.

பிறந்த மண்ணையும் அங்கு வாழும் மக்களையும் காதலிப்பதென்பது பிறந்து வாழ்ந்து பழகிய சூழலிலும், அதன் பண்பாட்டு மரபுகளிலும் ஒருவன் இயல்பாகக் கொண்டிருக்கக் கூடிய பற்றையும், பாசத்தையுமே சுட்டி நிற்கின்றது. எழுத்தாளன் ஒருவனை இப்பாசமும் பற்றும் தூண்டிநின்றால் அதன் விளைவு அதன் சூழலும் பண்பாட்டு மரபுகளும் இலக்கிய அந்தஸ்துப் பெறுவதாக அமையும். அச்சூழலுக்கே பிரத்தியேகமாக அமையும் குணாம்சங்களின் அடியாக உருவாகும். அவ்வாறான இலக்கியமே பிரதேச இலக்கியம், மண்வாசனை இலக்கியம் என்ற பெயரால் வழங்கப்படுகின்றது.

இதனடிப்படையில் ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியத்தை நோக்கின் ''இப்பண்பு இங்கு 40 களில் இருந்தே அரும்புகின்றது. ஆனால் அக்காலம் தொடக்கம் 70 வரையிலும் பிரதேசப்பண்பு என்று கொண்டு பல நாவல்கள் படைக்கப்பட்டிருப்பினும் அவை உண்மையில் ஒரு பிரதேசத்திற்குரிய முழுப்பண்பினையும் கொண்டு விளங்குகின்றன என்று கூறமுடியாது'' என நா.சுப்பிரமணிய ஐயர் அவர்கள் கூறுகின்றார். இவர் 1962 ல் எழுந்த மலைக்கொழுந்து முதல் 1972 ல் வந்த டானியலின் 'பஞ்சமர்' வரையான பல நாவல்களை நோக்கி அவற்றில் எந்தளவுக்குப் பிரதேசப்பண்பு காணப்படுகின்றது என்பதை விளக்கியுள்ளார். இதன் விளைவாக இவரின் இறுதிக்கருத்து இக்காலப்பகுதியில் எழுந்த இந்த நாவல்களில் ஒன்றிலுமே முழுமையான பிரதேசப் பண்பைக் காணமுடியவில்லை என்கின்றார்.

மேலும் இந்நாவல்களைத் தொடர்ந்தும் இக்காலப்பகுதியில் ஈழத்திற் பல நாவல்கள் எழுதப்பட்டன. இதில் குறிப்பாக வன்னிப்பிரதேசத்தைப் படம் பிடித்துக்காட்டும் பாலமனோகரனின் ''நிலக்கிளி''யும் செங்கை ஆழியனின் காட்டாறும், மற்றும் யானை, செந்தமிழ்ச் செல்வியின் 'சுமைகள்' (1977) மற்றும் கிழக்குப் பகுதியில் வெளிவந்த 'நான் கெடமாட்டேன்' இது திருகோணமலைப் பிரதேசத்தைப் பகைப்புலமாகக் கொண்டது. மற்றும் 'அக்கரையில் பச்சை இல்லை' (1977) புதிய தலைமுறைகள் (1976) என்பனவும் யாழ்ப்பாணப் பிரதேசத்தையும், தீவுப்பகுதியையும் பகைப்புலமாகக் கொண்டு அமைந்த வாடைக்காற்று, போராளிகள் காத்திருக்கின்றனர் (1975) கடற்காற்று, கமலினி (1977) என்பனவும் இவற்றைவிடவும் இக்காலப்பகுதியில் மலையக மக்களின் வாழ்க்கையில் ஏற்படும் இன்னல்களின் வெளிப்பாடாக அமைந்த கே.ஆர்.டேவிட்டின் 'வரலாறு அவளைத் தோற்றுவிட்டது' (1976), கே.விஜயனின் 'விடிவு கால நட்சத்திரம்' (1976) என்பனவும் இவற்றுடன் அண்மையில் வெளிவந்த இந்து மஜேஸ் எழுதிய 'இங்கேயும் மனிதர்கள்' ஞானரதனின் 'புதிய பூமி' என்பனவற்றையும் குறிப்பிடலாம்.

இவையாவும் இக்காலப்பகுதியில் தோன்றிய பிரதேச நாவல் என்றவகையில் அடக்கப்பட்டவை. எனினும் இவை அனைத்தும் பிரதேச நாவலுக்குரிய சிறப்புத்தன்மைகளை முழுமையாகப் பெற்றிருந்ததாகக் கூறமுடியாது. இவற்றில் பாலமனோகரனால் எழுதப்பட்ட 'நிலக்கிளி' என்னும் நாவலே முழுமையான பிரதேசப் பண்பினைக் கொண்டு மிளிர்கின்றது, என்பதும் ஐயர் அவர்களின் கருத்தாகும். மேலும் அவர் இந்நாவலுக்குரிய சிறந்த பண்புகளைக் கூறும்போது.

'நிலக்கிளி' என்ற பறவைபோல ஒரு பெண் பதஞ்சலி. வெளி உலக வாழ்வு பற்றி எதுவுமே தெரியாதவள். கள்ளங்கபடமற்ற படியாத அந்த இளம் பெண்ணிற்கு தன் கணவனைத் தவிர பிற ஆடவர்களைத் தொட்டுப் பழகுவது தவறு என்று உணரத் தெரியாது. கணவன் கதிராமன் அருகில் இல்லாத சமயம் ஆசிரியர் சுந்தர்லிங்கத்தால்

தழுவப்படுகிறாள். புயல் ஒன்றின் தாக்கத்தால் ஏற்பட்ட சோதனை அது. அந்த நிகழ்வை எண்ணித்துடித்துக்குமுறி அழுதபின் பல விடயங்களைப் பற்றிப் புரிந்து கொள்ளத்தலைப்படுகிறாள். இக்கதையில் சமூகத்தின் பொய்யும் வழுவும் அந்தக் குழந்தை உள்ளம் பெறும் அனுபவ உணர்வின் பரிணாமமே கதையாக விரிகின்றது.

இந்நாவலில் தண்ணி முறிப்புப்பிரதேசமும் அங்கு காணப்படும் இயற்கை வர்ணனைகள், பாத்திரங்களின் உண்மைத்தன்மை, அதாவது அப்பிரதேசத்திற்குரிய பேச்சு வழக்கு, பழக்கவழக்கங்கள் போன்றவற்றினையும் உள்ளதை உள்ளவாறே எடுத்துக் காட்டப்படுகின்றது. இந்த நாவலில் காணப்படும் தண்ணி முறிப்புப் பிரதேசத்தையும் பாத்திரங்களையும் எந்தவகையிலும் அந்த இடத்தைவிட்டுப் பிரிக்கமுடியாத வகையில் அவ்வாறே பிரதிபலிப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது என்பதும் இவரது கருத்தாகும்.

மேலும் இதனுடைய சிறப்புத்தன்மையும் மண்வாசனை இலக்கியம் என்றரீதியில் இதனை எந்தளவுக்கு ஏற்றுக்கொள்ள முடியும் என்பதற்கு இன்னொரு எடுத்துக்காட்டாக இதற்கு ஆய்வுரை வழங்கிய யாழ்.தேவன் அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார்.

''மண்வாசனை மண்வாசனை என்று ஏதோ கூறுவார்கள் அவர்கள் அப்படிக் கூறுவதைவிட இந்த நிலக்கிளி நாவலைக் காட்டியிருந்தால் அந்த மண்வாசனை என்பது என்ன எனப் புரிந்திருக்கும். முன்பின் பழகியறியாத வன்னி மண்ணைத் தெளிவாக மனக்கண்ணிற் கொணர்ந்து நின்றுள்ள இந்நாவலாசிரியர் பேச்சுமொழியிலும் கனதியான இலக்கியச் சொற்களையும் கலந்து கனதியான வகையில் இந்நாவலை வடித்துள்ளார்'' எனக் கூறுகின்றார்.

இதன் அடிப்படையில் பார்க்கின்ற போது ஈழத்தில் பல ஆண்டுகளுக்கு முன்னிருந்தே பல்வேறு பிரச்சனைகளையும் பிரதிபலிக்கும் நாவல்கள் எழுதப்பட்டிருக்கின்றன. எனினும் இவற்றில் எல்லோரும் பிரதேச நாவல் என்ற ரீதியில் முழுமையான பண்புடன் விளங்குவதாக இந்நூல் அமைந்திருப்பதும் மேலும் ஏனைய காலங்களை விட இக்காலப்பகுதியில் பெரும்பாலான நாவல்கள் பிரதேசப் பண்பு என்றதன் அடிப்படையிலேயே தோன்ற ஆரம்பித்தன என்பதும் இக்கால நாவல் இலக்கியப் போக்கின் ஓர் முக்கியமான அம்சமாகக் கொள்ளப்படுகின்றது.

மேலும் ஏனைய இலக்கிய வடிவங்களைநோக்குகின்ற போதும் 1970 களில் வெளிவந்த சில சிறுகதைகளும் பிரதேச உணர்வுடையவாகக் காணப்படுகின்றன. மண்வாசனை என்பது கருப்பொருளையும் களத்தையும் மட்டுமன்றிச் சமூக உறவுகளின் பின்புலத்திலும் தோன்றலாம் தோற்றுவிக்கப்படலாம் என்பதற்கு இக்கதைகள் சிறந்த சான்றுகளாகும். இவ்வகையில் எஸ்.பொன்னுத்துரையின் 'சடங்குகள்', சிறுகதையும், இலங்கையர்கோணின் 'வெள்ளிப் பாத சரமும்' ஓரளவு மண்வாசனையைப் பிரதிபலிப்பது எனலாம்.

அடுத்து கவிதை இலக்கியத்தை எடுத்து நோக்கினால் ஈழத்துக் கவிதை இலக்கியத்தில் இங்கு தோன்றிய ஆரம்பகால இலக்கியங்கள் அரசசார்பாகவும், சமயச்சார்பாகவும் காணப்பட்டு பின்னர் தமிழ்ப்பற்று தேசியப்பற்று, சமூக சீர்திருத்தங்கள் போன்றவற்றையும் கொண்டு அமைந்த இப்போக்கானது இவற்றை மண்வாசனைப் பண்புகள் கொண்ட கவிதைகள் ஆக்கின. இந்த வகையில் ஈழத்துப் பூதந்தேவனார் தொடக்கம் - புதுவை இரத்தினதுரைவரை பல புலவர்கள் ஈழத்துக்கவிதை இலக்கியப் படைப்பில் சிறப்பாக ஈடுபட்டு வந்துள்ளனர். இவர்களில் மண்வாசனைப் பண்பைத் தமது கவிதைகள் வாயிலாக வழங்கியவர்களாக பாவலர் துரையப்பாப்பிள்ளை, நாவற்குழியூர் நடராசன், மகாகவி, சாரதா, அ.ந.கந்தசாமி, கதிரேசன், முருகையன், பேராசிரியர் கணபதிப்பிள்ளை போன்றவர்களும் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர். இவற்றில் சிறப்பான மண்வாசனைக் கவிதைகளாக பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் காதலியாற்றுப் படையைக் குறிப்பிடலாம். அத்துடன் தற்போதைய போர்க்காலத்தைப் பிரதிபலிக்கும் புதுவை இரத்தினதுரையில் கவிதைகளிலும் மண்வாசனைப் பண்பு சிறப்பாகவே அமைந்து காணப்படுவதனைக் கூறலாம்.

இவற்றையெல்லாம் அடிப்படையாகக் கொண்டு ஏனைய காலங்களுடன் இக்காலப்பகுதியை ஒப்பிட்டுப் பார்த்தால் 1970 களில் ஈழத்தின் இலக்கியப் போக்கில் மண்வாசனைப் பண்பு ஓர் முக்கிய இடத்தினை வகித்திருக்கின்றமை புலனாகின்றது.

# தமிழுக்கும் கணணிக்கும் பாலமமைப்போம்

வே.ஏ.மனோராஜ், இறுதி வருடம், பொறியியற்பீடம்

**மெல்லத் தமிழ் இனிச்சாகும் - அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை ஓங்கும்**

எந்தச் சமுதாய வளர்ச்சியிலும் மாற்றத்திலும் மொழி ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. அதேவேளை சமூக வளர்ச்சியினால் மொழி பாதிக்கப்படுவதும் தவிர்க்க முடியாத ஒரு நிகழ்வாகும். ஒரு மொழி அதன் சமுதாய வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கத் தவறுகையில் அல்லது வாழ்க்கையை கொண்டு செலுத்த உதவாதபோது தன் மரணத்தை எதிர்கொள்கிறது, அல்லது கைவிடப்படுகிறது. புலம்பெயர்ந்த எம்மவரில் பலர் இன்று மெதுமெதுவாய் தமிழை கைவிடுதலை இதற்கு உதாரணமாக கூறலாம். இவ்வேளைகளில் கண்மூடித்தனமாய் பழமை பேணுவோர், ஏன் புதுமை புகுத்த முயற்சி எடுக்காதோர்கூட மொழியின் வளர்ச்சிக்கு தடை மட்டும் போடவில்லை. அதன் மூலமாய் மொழியை சாகடிக்கவும் உதவுகின்றனர். நடைமுறை நிதர்சனங்களே மொழியின் வளத்தையும், வளர்ச்சியையும் தீர்மானிக்கிறது. தமிழ் மொழியின் உயர்வை அதன் பழமையிலும், அதன் சிறப்புவாய்ந்த இலக்கியங்களிலும் காண்போர் இன்றைய சமூகத்தில் நவீன அறிவியலின், சமூக மாற்றத்தின் தேவைகளுக்கு எவ்வாறு முகம் கொடுக்கலாம் என்பதுபற்றி அதிக கவனம் எடுப்பதில்லை. அதேவேளை புதுமைவாதம் போர்வையினால் கண்களைக் கட்டிக் கொண்டு அயலிலிருந்து வரும் அனைத்தையும் தமிழ் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும் என்று பேசிக்கொண்டிருப்பதிலும் அர்த்தமில்லை. அயலின், அன்னியரின், அறிவியலின் எம் தமிழ் தன் தேவைக்கும், தன் இயல்பிற்கும் ஏற்பவே உள்வாங்கிக்கொள்ள முடியும். அயலிலிருந்து தமிழ் அழகிய பல விடயங்களை எடுத்துக் கொண்டுள்ளது. ஏன் அயலுக்கு அரியபல விடையங்களை கொடுத்துமிருக்கிறது. விளைவாய் எம் தமிழ் இன்னும் இனியதாய், ஆற்றலுள்ளதாய் மாறியும் இருக்கிறது. சில விடயங்களில் இவ்வாறான சுவீகார ஆற்றல்கள் தமிழுக்கு பல சிக்கல்களையும் உருவாக்கித் தந்திருக்கிறது. எவ்வாறிருப்பினும் அன்னிய அலைவீசலுக்கும், அறியாமைக்கும் இடையே எம் தமிழின் வளர்ச்சி நோக்கிய வழிநடத்துகையானது கடினமான ஒன்றாயினும் கூட அதன் வளர்ச்சிப்பாதையில் தடையரண்களிட்டு அதன் படிப்படியான மாறுகைக்கு துணைபோகாது இருப்பது எம் தமிழிற்கு இச் சமகாலத்தில் நாம் செய்ய வேண்டிய மிகப் பெரிய பணியாக இருக்குமென்பதில் சிறிதும் ஐயமில்லை.

21ம் நூற்றாண்டின் வாசலை அண்மித்துக் கொண்டிருக்கின்ற நாம், நவீன அறிவியலின் சமகால அசுரப் பாய்ச்சலிற்கீடாக, நம் தமிழ் அறிவியலிலே ஒரு சிற்றடியாவது முன்னோக்கி வைத்திருக்கிறோமா?... உலக அறிவியல் வளர்ச்சியில் தமிழர்கள் பணி மிகச் சிறப்பானது என்று கூறமுடியாவிடினும் கூட குறிப்பிடத்தக்க தொன்றுதான். ஆனால் எம் தமிழின் பணி?.... பக்திக்கு தமிழ், அறிவியலிற்கு ஆங்கிலம், காதலிற்கு பிரெஞ்சு என்று பண்பியல் ரீதியான பாகுபாடு ஏதாவது மொழிகளுக்கிடையிலும் இருக்கிறதா? அவ்வாறெனின் தமிழில் அறிவியல் பணிகள் எவையேனும் என்றுமே ஆற்ற முடியாதா? எமது இனத்தின் வரலாற்றுத் தவறுகள் வரிசையில் இந்த அறிவியல் சாரா வளர்ச்சித்தன்மையும் மேலும் ஒரு மிகப்பெரும் தவறாக பரிணமிப்பது தெரியாமல், உணராமல் எமது தமிழினம் இன்னும் பழம்பெருமையும், அரசியல் உரிமையும் பற்றி மட்டும் பேசிக்கொண்டிருக்கின்றது.

இந்நிலையில் கணணியில் தமிழ் பண்பாடு... இல்லையில்லை... எம் பழம்பெரும் தமிழ் வளர்ச்சியில், எம் எதிர்கால நிர்வாக மொழியின் உயர்ச்சியில், இந்த நூற்றாண்டின் அதிமுக்கிய மனித நாகரீகச் சின்னம் எனப்படும் கணணிகளின் பங்கு என்பது ஆய்வுக்குட்பட வேண்டிய ஒரு விடயமே.

மனித வரலாற்றில் விவசாய, கைத்தொழில் புரட்சிகளின் பாதையில் தற்போது தகவல் பரிமாற்றப் புரட்சி நிகழ்ந்து கொண்டிருக்கிறது. முன்னைய புரட்சிகளுக்கு காரணங்கள் எதுவாயினும் இறுதிப் புரட்சிக்கு... காரணம் இன்றைய கணணியும் அதன் வழிசார் வளர்ச்சியும் தான்.

மனிதன் கருவிகளை உபயோகிக்கும் விலங்கு. கருவிகள் இல்லாமல் அவன் எதுவுமேயில்லை. கருவிகளுடன் அவன் அனைத்துமாயிருக்கிறான். அவனது கருவிகள் அளவுகளில் சிறிதாக அவற்றின் ஆற்றல் பலமடங்காய் அதிகரித்து வருகிறது. அவ்வாறான இன்றைய ஆயுதங்களில் ஒன்றுதான் கணணி. ஏனைய ஆயுதங்களால் ஏற்பட்ட

யுத்த வடுக்கள் மனிதவரலாற்றுப் பாதையில் ஆங்காங்கே காணப்படினும் அவற்றையெல்லாம் மறைக்கும் வலுவுள்ள அழகிய கேடயமாய் கணணியைக் கொண்டு 21 ம் நூற்றாண்டு மனிதன் வீறுடன் நடைபயிலப் போகிறான்.

***கணணி -*** மிக அற்புதமான, அணுவேனும் அளவுபிசகாத, மிக வேகமான ஆனால் சுயமாக சிந்திக்கத் தெரியாத அப்பாவி.

***மனிதன் -*** அற்புதமானவன் தான். ஆனால் அடிக்கடி தவறிக்கொண்டும் குறைவான ஞாபகசக்தியுடன் (ஒருவகையில் அதுவும் அவனது பலம்தான்) மெதுவாக கணக்கிடும் ஆற்றலுமுள்ள ஆனால் சுயமாக சிந்திக்கும் ஆற்றலுமுள்ள புத்திசாலி.

இவ்விருவருக்கிடையான, கவர்ச்சிதான் நாளைய மனித இன வளர்ச்சியை தீர்மானிக்கப் போகும் முக்கிய காரணியாகும். எதிர் தரப்புக்குறைகளைந்து தம் தரப்பு நிறைகளை இணைக்க மிகப்பெரும் ஆற்றல் உருவாகிறது. இவ் ஆற்றல்தான் மனித இனத்தின் மிகப் பெரும் சக்தியாக இருக்கும். உலகப்புகழ்பெற்ற கணணி நிறுவனமான IBM நிறுவன இலட்சிய வாக்குக் கூட ***''இயந்திரங்கள் வேலை செய்ய வேண்டும்; மனிதர்கள் சிந்திக்க வேண்டும்''*** என்பதுதான்.

மனிதர்களின் சிந்தனை நிச்சயமாக மொழிவயப்பட்டதல்ல. எந்தத் தடைகள், கட்டுக்களையும் தாண்டியது. ஆனால் அதை வெளிப்படுத்த முயலும் போதுதான் மொழிவந்து முன் நிற்கிறது. தான் சிந்தித்ததை கணணிக்கு அதன் 1, 0 என்ற இரண்டே எழுத்துக்கள் கொண்ட அதன் தாய்மொழியான இயந்திர மொழியில் மனிதனில் அமெரிக்கனாயின் 26 எழுத்துக்கள் கொண்ட தம் மொழியிலும் தமிழனாயின் 247 எழுத்துக்கள் கொண்ட எம் மொழியையும் பயன்படுத்தி விளங்கப்படுத்த வேண்டும். பின்னைய தொடர் செயற்பாடுகளை கணணிகள் தாமாகவே செய்துகொள்ளும். இந்த மொழிமாற்றம் தான் கணணியின் இயந்திரமொழிக்கும், தம் பாவனை மொழிக்கும் இடையே இருந்த அகன்ற இடைவெளியை குறைக்க இணைப்பு மொழிகளை உருவாக்கி படிப்படியாய் தம் மொழிக்கு சாதகமான வகையில் வளர்ச்சியுற வைத்து அதில் இன்று வெற்றியும் கண்டுள்ளனர். கணணியின் கர்த்தாக்கள் எனப்படும் மேற்கு நாட்டோர் இதன்விளைவாகவே அறிவியலின் உச்சியில் நிற்கும் அனேகமான ஐரோப்பிய மொழிகளில் இயங்கும் கணணிகள் அம்மொழி மக்கள் மத்தியில் பரவலாக காணப்படுகிறது.

கணணித் தொழில்நுட்பம் மிக வேகமாக வளர்ந்துவருகிறது. கணணியியல் விதிகளில் ஒன்றான 'மூர் விதி', ஒவ்வொரு 18 மாதங்களிலும் கணணியின் ஆற்றல் இருமடங்காகும் என்கிறது. அவ்வாறே இதுவரை மாறிக்கொண்டும் வந்திருக்கிறது. நினைவகம் **(memory)**, துணைநினைவகம் என்பவற்றின் ஆற்றல் அதிகரிப்பு மூர் விதிக்கமைய செல்ல அதே காலத்தில் கணணியின் மைய செயலாக்க அலகு **(C.P.U.)** இன் ஆற்றல் 3,4 மடங்காக அதிகரித்து வந்திருக்கிறது. இவ் ஆற்றல் அதிகரிப்பு வீதம் மேலும் 20 ஆண்டுகளுக்கு தொடரும் என்று பொதுவான அபிப்பிராயமும் கணணியியலாளர்களிடையே நிலவுகிறது. அதேவேளை கணணிகளின் விலை மதிப்போ எதிர் மாறாய் சரிந்தும் வருகிறது. வெகு விரைவிலேயே அனைவருக்கும் ஏற்ற கையடக்கவிலையில் ஆற்றல் மிக்க கணணிகளின் வருகையும் எதிர்பார்க்கப்படுகிறது. எனவே கணணிகளின் பாவனை உலகெங்கும் மிக விரைவாக அதிகரிக்கும். 1995இல் உலக அளவில் 39 கணணிகள் / 1000 நபர்களுக்கு என்ற வீதத்தில் இருப்பினும் (அமெரிக்காவில் 319 கணணிகள் / 1000 நபர்கள்) இவ் விகிதாசாரம் மிக வேகமாக வளர்ந்து வருகிறது. வெகுவிரைவில் நாமும் கணணிகளின் திரையிலுள்ள சாளரங்களூடாகத்தான் அயல்வீட்டைப் பார்க்கும் நிலைவரப் போகிறது.

எமக்கு கணணி இப்போது வேண்டாமே. அது அடுத்த தலைமுறையின் தேவை என்று கூறுபவர்களுக்கு ஒரு வார்த்தை! நாம் எல்லோருமே, ஆம் எல்லோரும்தான் ஏற்கனவே கண்ணுக்கு தெரியாத மாயக் கணணிவலைத் தொகுப்பில் சிக்கிவிட்டோம். தொலைபேசி, தொலைக்காட்சி, வங்கி, ஏன் அரசியல் என்று எல்லாப் பக்கமும் கணணிகளின் பிரயோகம் தான்.

கணணிவலையில் சிக்கிக் கொண்ட எம்மில் பலரும் கணணியைக் கற்றுக்கொண்டோம். அதில் பலரும் சிறப்புடன் இயக்கியும் வருகிறார்கள். எம் தமிழரில் பலர் கணணித் தொகுப்புகள் உருவாக்குவதில் விற்பன்னர்கள். ஆனால் கணணிகளைத் தமிழுக்கு அருகில் கொண்டுவருவது குறித்து எவரும் சிந்தித்ததாகத் தெரியவில்லை. தமிழ் - கணணி இணைப்பு கடினமானது என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். அதற்கு தீர்வு இருப்பதைப் போல், முயன்றால் முடியாதது, தமிழால் இயலாதது என்று ஒன்றுமேயில்லை என்பது வார்த்தைகளில் மட்டுமல்ல, செயலிலும் காட்டப்பட வேண்டும்.

கணணி, தமிழ் இடைவெளிக் குறைப்பில் நடைமுறைச் சிக்கல்கள் அதிகம் என்பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். அதேவேளை அதற்கான தீர்வுகளும் உண்டு. எடுத்துக்காட்டாக மிகச் சில பேசப்படும் பிரச்சினைகள் மேலோட்டமாய் இங்கு ஆராயப்படுகிறது.

மிக முக்கியமான பிரச்சினையாக பலரும் முதலில் சிந்திப்பது தமிழில் உள்ள மிக அதிகமான 247 எழுத்துக்கள்தான். ஆங்கிலத்தின் 26 எழுத்துக்களும் இலகுவாய் கணணிக்கு உணர்த்தப்படலாம். கணணிக்கு வெளியே மேலோட்டமாய் தெரியும் மொழி அவசியமல்ல கணணிக்கு தமிழ், ஆங்கிலம் எல்லாம் ஒன்றுதான். அம் மொழிகளின் வரிவடிவங்கள் கணணியை பொறுத்தவரை கிறுக்கல்தான். ஆனால் கணணிக்கு உள்ளீடுகளை வழங்கும் போதுதான் சிக்கல் எழுகிறது. கணணியின் பாரம்பரிய (ஆம் பாரம்பரியம் தான்) உள்ளீட்டு முறையான விசைப்பலகை **(Key Board)** கொண்டிருக்கும் குறைவான எண்ணிக்கையான எழுத்துக்களால் தமிழின் அனைத்து எழுத்துக்களையும் பிரதிநிதித்துவப்படுத்த முடியுமா? முதலில் ஒன்று சொல்லவேண்டும். விசைப் பலகை ஏன் கணணிகூட எமக்காக வடிவமைக்கப்படவில்லை. நாம்தான் அதேவடிவில் அவற்றை உபயோகித்து வருகிறோம். மேற்கண்ட விசைப் பலகை பிரச்சினைக்கு பல தீர்வுகள் முன்மொழியப்படலாம். ஆங்கில தட்டெழுத்தையே தமிழுக்கு ஒலி மாற்றம் செய்வது என்பது ஒரு தீர்வு. உதாரணமாய் அ என்பது **A** இனாலும், ம என்பது **M** இனாலும் என ஆங்கில ஒலி அடிப்படையில் தமிழ் எழுத்துக்கள் அமைக்கப்படலாம். இவற்றுடன் செயற்பாடற்ற எழுத்துக்களும் **(dend key)** அதாவது ே,ெ,ா போன்றனவும் இணைந்து தமிழ் எழுத்துக்கள் அனைத்தையும் உருவாக்கலாம். இன்னொரு தீர்வாக தமிழ் முதலெழுத்துக்கள் மட்டும் கொண்டு உருவாக்கப்படும் விசைப்பலகைகள் பிரேரிக்கப்படுகின்றது. உதாரணமாய் கா எனும் உயிர்மெய் எழுத்து க்+ஆ எனும் உயிர், மெய் எழுத்துக்களின் சேர்க்கையால் உருவாக்கப்படலாம். இவ்வாறான விசைப்பலகை பிரச்சினை கணனியில் ஒரு பிரயோகமான சொல்செயலாக்கிகளை **(Word Processors)** பொறுத்த வரையில் மட்டும்தான். கணணிகளை பொறுத்தவரை இது ஒரு பிரச்சினையே அல்ல மேலும் தற்போது தனிநபர் சிலரால் உருவாக்கப்படுகின்ற பிரயோக செயற்பாட்டுத் தொகுப்புகளில் **(Application packages)** கூட வெவ்வேறு விசைப்பலகை அமைப்புகள் நிறுவப்படுகின்றன. இதை தவிர்க்க விரைவிலேயே அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படும் வகையில் நியம கணணி விசைப்பலகைகள் துறைபோனோரால் வடிவமைக்கப்பட வேண்டும்.

அடுத்த பிரச்சினையாய் பேசப்படுவது தமிழ் எழுத்துகளின் சிக்கலான வடிவம். இதுவும் சொல் செயலாக்கிகள் பார்வையில் தான் சிக்கல்களை உருவாக்குகின்றன. ஆங்கிலமோ, ஐரோப்பிய மொழிகளோ, பொதுவாக வரிவடிவத்தில் சதுர எழுத்துக்களை (நேர்கோடுகள்) கொண்டிருக்கிறது. மேலும் கொம்பு (ெ), சுழி (ழி), புள்ளி (ள்), அரவு (தூ) போன்ற வடிவங்களும் மிகக்குறைவு. எழுத்துக்களின் அளவுகள் ஏறக்குறைய சதுரமாய் இருப்பதால் எழுத்துக்களிடையான இடைவெளி சமனாயும் அதனால் பதியப்படும் விடயம் அழகாயும் இருக்கும். எழுத்தின் வடிவத்தில் கூடப் பல பிரச்சினைகள். தமிழ் வல்லுனர்களால் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் இவை. கணணிகளை பொறுத்தவரை எமது எழுத்துக்கள், ஆங்கில எழுத்துக்கள் எல்லாம் ஒன்றுதான்.

தமிழில் கணணிநூல்கள் இன்மை பெரிய குறைபாடு. தமிழ் கணணியை எதிர்ப்போரால் சுட்டிக்காட்டப்படுகிறது. உண்மைதான் எனினும் இப்போது கொஞ்சமாய் வெளிவரத் தொடங்கிவிட்டன. ஆனாலும் இதுவரை வெளியான நூல்கள் கூட கணணி வளர்ந்த கதை, அதன் வரலாற்று மாற்றங்கள், செயற்பாட்டு அடிப்படை, கணணி மொழி குறித்த பொதுவான குறிப்புகள், மொழிகளின் விளக்கம் என்றவாறாக தான் இருக்கின்றன. ஆங்கிலத்திலும் ஆரம்பத்தில் இவ்வகையில்தான் நூல்கள் வெளிவந்தமை இதற்கு காரணமாக இருக்கலாம். ஆனால் இன்று கணணியியலும் அதன் பயன்பாடும் மிக மிக வேகமாய் வளர்ந்து வருகின்றது. இன்று கணணிக்கு அறிமுகமாகும் ஒருவர் அதன் பயன்பாட்டு இயக்கத்தின் சுவடுகளைத்தான் நூல்களில் காணலாம். அதாவது நூல்களால் அவர்கள் தேடுவதை காட்ட முடிவதில்லை, மிக முக்கியமான பிரச்சினை ஒன்றும் ஆராயப்பட வேண்டும். தமிழில் கணணி நூல்களின் மொழிநடை பற்றி தமிழில் மட்டும் எழுதப்படும் கணணி நூல்கள், தமிழ் கலைச் சொற்கள் மட்டும் உபயோகிக்கும் போது வாசிப்பவரை எழுதும் பொருளிலிருந்து அன்னியப்படுத்தக் கூடும். ஆங்கில ஒலி பெயர்ப்பு சொற்கள் உபயோகிக்கப்படும் போது நூல்கள் எதற்காக, யாருக்காக எழுதப்பட்டது என்பது தெரியாமலே போய்விடலாம். எனவே தமிழ்க் கலைச் சொற்களுடன் ஆங்கில ஒலி பெயர்ப்புச் சொற்கள் கலந்த நடையானது இதற்கு தீர்வாக அமையலாம்.

கணணியைப் பொறுத்தவரையில் தமிழ் மொழி மிகவும் பின்தங்கிய நிலையிலேயே நிற்கிறது. ஆனால் கணணியோ எதிர்காலத்தை நோக்கி பாரிய அளவில் தன் ஆற்றலை விருத்தி செய்துவருகிறது. எனவே எதிர்காலத்திலாவது தமிழ்

புகுத்தப்படலாமா என்பது ஆராயப்படவேண்டும். எதிர்கால கணணி ஆற்றல் அதிகரிப்பு அதன் தகவல் உட்புகுத்தும் விசைப்பலகை முறையினை இல்லாதொழிக்கும் என கணணியியலாளர்கள் எதிர்வு கூறுகின்றனர். எதிர்காலத்தில் ஒலிவடிவ உள்ளீடுகளே கணணி ஏற்றுக் கொள்ளும் என்றும் கூறப்படுகிறது. அவ்வாறான ஒலிவடிவ உள்ளீடுகளை கணணி ஏற்றுக்கொள்ள ஆரம்பிக்கும்போது ஆங்கிலம், தமிழ் என எல்லா மொழிகளும் அவற்றின் அரிச்சுவட்டிலிருந்து இம்முறையை பின்பற்ற ஆரம்பிக்க வேண்டியிருக்கும். நாமும் அந்த அன்னிய தொழில்நுட்பத்திற்கு மேலாக எம் தமிழை கட்டியெழுப்ப வேண்டும். இதற்கு உச்சரிப்பு **(Phonetic)** மொழி உணர் திறன் **(Laguage recognition)** எனப்படும் ஒலியிலிருந்து மொழிபெயர்ப்பு துறையில் ஆய்வுகள் அவசியமாகின்றன. தமிழ் தன் சுயமெருகு குன்றாமல் எதிர்கால தொழில்நுட்பம் உள்வாங்கிக் கொள்ளும்வகையில் தன்னை தயார் படுத்திக் கொள்ள வேண்டும். தமிழ் மொழியின் அமைப்பு ஒருவகையில் சிக்கலானதாகவும் (சிக்கலான மரபுத் தொடர்கள், உவமான உவமேயங்கள்... என) விதவிதமான உச்சரிப்புக்களை கொண்டதாயும் (இவ்விடயத்தில் ஆங்கிலம் தமிழை விட சிக்கலானது) இருப்பதால் ஒலிவடிவிலிருந்து மொழியை பிரித்தெடுப்பது கடினமான பணிதான். ஏனைய மொழிகளைப் பொறுத்தவரை குறிப்பாக ஆங்கிலத்தைப் பொறுத்தவரை இவ் ஆய்வுகள் பரந்த அளவில் நடைபெற்று வருகிறது. இத்திசையில் எம்தமிழை நாமும் தயார்படுத்த வேண்டும்.

எவ்வளவுதான் நாம் மறைமுக கணணி வலையமைப்பில் சிக்கியிருப்பினும் கணணிகளை நேரடியாக உபயோகிப்போர் எம்சமூகத்தில் மிகக் குறைவு. இதற்கு முதன்மைக் காரணியாய் எம் சமூகத்தின் 'புதுமை ஒவ்வாமை'யை கூறலாம். பழமைக்கு பாதுகாப்பு, புதுமைக்கு அங்கீகாரமின்மை, புதுமைப் பயம் என என்னதான் மனோவியல் காரணங்கள் கூறப்படினும் எதிர்காலத்தில் எம் பழமை மரபுகள் காக்கப்படப் போவது புதுமை தொழில் நுட்பங்களால் தான். இதைவிட கணணி ஒரு துல்லிதக்கருவி கைவைத்தால் பிழைவிட்டால் பிரளயமே உருவாகும் என்ற மனப்பயமும் பொதுவாக நிலவுகிறது. இந்த துல்லித கருவியின் இயல்பை புரிந்துகொண்டால் மிக மகிழ்வுகொடுக்கும் நண்பனாவான் கணணி. இதைவிட கணணி மேல்தட்டு வர்க்கத்தின் உயர்தரக் கருவி என்ற மனப்போக்கும் காணப்படுகிறது. சாதாரணனை பொறுத்தவரை மொழித்தடையுடன் கூடிய மனத்தடை இந்த உயர்சாதி மனப்போக்குதான். ஆனாலும் கணணிகளின் விலைச்சரிவு இதற்கு மறைமுகத் தீர்வை உருவாக்கும்.

கணணியுலகில் தமிழ் வலிந்து புகுத்தப்பட முடியாது. அவ்வாறு புகுத்தப்படினும் அது நிலைக்காது. **Internet** எனப்படும் சர்வதேச இணையம் இன்று மிகப் பெரும் வளர்ச்சியடைந்திருப்பதற்கு அது வர்த்தகமயமாக்கப்பட்டது தான் காரணமெனப்படுகிறது. இவ்வாறே தமிழ் கணணியும் வர்த்தகமயப்படுத்தப்பட வேண்டும். யாருக்கு? உதாரணமாய் புலம் பெயர்ந்த பலர் தாம் இழந்துவிட்ட சுய அடையாளத்தை அங்கு தாம் ஒதுக்கப்படும் வேளைகளில் (வெகுவிரைவில்) தேடுவர். அனைவருக்கும் தமிழ் கணணிகளின் விளைவுகள் உணரவைக்கப்பட வேண்டும். அவ்வேளைகளில் இவ்வாறான தமிழ் முயற்சிகள் வெற்றியளிக்கும்.

எல்லாம் சரி! இவை எல்லாம் செய்யப் போவது யார்? பரந்த கணணி அறிவும், இன்றைய வளர்ச்சிப் போக்கில் சிந்திக்கும் ஆற்றலும் ஆர்வமும் பலமான மொழிப்பற்றும் கொண்ட தமிழ் வல்லுனர்கள் இதுபற்றி இப்போதே கனவு காண ஆரம்பிக்கலாம்.

இது ஒரு முடிந்த ஆய்வல்ல. ஆய்வொன்றின் ஆரம்பம். இதிலுள்ள விடயங்கள் நிச்சயமாக விமர்சிக்கப்பட வேண்டும், விவாதிக்கப்படவும் வேண்டும். தவறுகள் ஏற்றுக் கொள்ளப்படவும் வேண்டும் இதிலுள்ள நியாயங்களைப் போல.

இறுதியாய் இதனுடன் தொடர்பில்லாமல் ஒரு விடயம் **'Fortran'** கணணி மொழி அமைப்புக்குழுத் தலைவர் 'யோன் பக்கஸ்' ன் கருத்து.

''அனேகமான அறிவியலாளர்கள் அறிவியலாளர்களாக மட்டுமே இருக்க விரும்புகின்றனர். அறிவியலின் ஆக்கத்திறனுடன் இருப்பது மிக மகிழ்வுக்குரியது. ஏனென்றால் மக்களுடன் மோதாமல், உறவுகளின் வலிகளினால் பாதிக்கப்படாமல், உங்கள் வழியை உருவாக்கிக் கொள்ளலாம். உனது ஆற்றல்கள், வளங்களை எந்த வலிகாரமின்றி இலகுவாய் உபயோகிக்கலாம். ஏதோ ஒரு கணித, அறிவியல் பிரச்சினை தீர்ப்பது மிக மிக இலகுவானது, எமது நடைமுறை வாழ்க்கைப் பிரச்சினைகளுடன் ஒப்பிடும் போது...''

உண்மைதானா?

## பத்திரிகை - பத்திரிகைத்துறை ஒரு வெட்டுமுகம்

எம்.என்.எம் நவ்ரஜி, விடுகை வருடம், கலைப்பீடம்

விஞ்ஞானத் துறையின் வளர்ச்சியே பொதுசனத் தொடர்பு சாதனங்களின் அபரிமிதமான முன்னேற்றத்திற்கும் அதன் வியாபித்த தன்மைக்கும் காரணமாகும். சமூக உறுப்பினன் என்ற வகையில் ஒவ்வொரு தனிமனிதனுக்கும் அடுத்தவருடன் கருத்துக்களைப் பகிர்ந்து செயற்பட வேண்டிய தேவை இயல்பான ஒன்றாகும். இதற்கு ஐம்புலன்களும் ஐம்பொறிகளும் துணை செய்கின்றன. இக்கருத்துப் பரிமாற்றம் அல்லது வெளிப்பாட்டுத் தன்மையை சரித்திரத்திற்கு முற்பட்ட கால குகைச்சித்திரங்களிலிருந்தே நாம் அறிந்து கொள்ள முடியும். ஆனால் நாகரிக வளர்ச்சி அதனுடன் இணைந்து அறிவியல் துறையின் எழுச்சி என்பன மக்கள் குழுக்களுக்கு இடையிலான தொடர்புகளை இறுக்கமாக்கவும் இலகுவாக்கவும் துணை செய்தன. இவ்வகையில் இன்று பொதுசனத் தொடர்பு சாதனங்களாகக் கணிக்கப்படுகின்ற தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகை ஏனைய இலத்திரனியல் தொடர்பூடகங்களின் செயற்பாடு இவற்றின் தேவை என்பன உலகத்திற்கு 'பூலோகக் கிராமம்' (Global Village) என்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தியமை வியத்தகு முன்னேற்றமாகும். உண்மையில் இது தகவல் துறையில் ஒரு புரட்சியாகும்.

தொடர்புசாதனங்களின் சேவை ஒரு நாற்கோணச் செயற்பாடாகும்.

1. Communicator - தொடர்பாளர்
2. Medium - ஊடகமுறை
3. Message - செய்தி / தகவல்
4. Receiver - செய்தியை / தகவலைப் பெறுபவர்.

எந்தவொரு தொடர்புசாதன செயற்பாட்டிலும் மேற்கூறிய நான்கு தொழிற்பாடுகளும் நிகழும்.

மனித வரலாற்றைப் பொறுத்தவரை எழுத்துக்கள் குறிகள் மூலம் மற்றவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்த முனைந்தமை மாபெரும் சாதனையாகவும் திருப்புமுனையாகவும் கொள்ளப்படுகின்றது. இது குறியீடுகள், சமிக்ஞைகள் என்று வளர்ச்சி பெற்று நவீன மொழியியல்களாக தோற்றம் பெற்றுள்ளது. தொடர்ந்து சீனர்கள் கடதாசியைக் கண்டு பிடித்தமை, எழுத்துத்துறையின் விருத்திக்கு வழிகோல அது 15 ஆம் நூற்றாண்டில் ஜேர்மனியைச் சேர்ந்த குட்டர்ன் பேர்க்கினால் அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டவுடன் இன்னும் விரைவுபட்டது. 15 ஆம் நூற்றாண்டின் இறுதிக் கட்டத்தில் ஐரோப்பாக் கண்டமெங்கும் முக்கிய நகரங்களில் அச்சகங்கள் தோன்றின. இது பத்திரிகைத்துறையின் வளர்ச்சிக்கு துணை செய்தது. மேலும் தொலைபேசிகள், தொலைத்தொடர்புகள் என்பனவும் பத்திரிகைத்துறைக்குப் பங்களிப்பு நல்கியதை சுட்டிக்காட்டலாம். பத்திரிகைகளின் வளர்ச்சிக் கட்டத்தில் கண்டங்களுக்கு மற்றும் தூர இடத் தொடர்புகளுக்கு என்ற ரீதியில் செய்திச் சேவைகள் தோற்றம் பெற்றன. நவீன காலத்தில் BBC, CNN, AFP ரோயிட்டர் போன்ற செய்திச் சேவைகளை நாம் குறிப்பாகச் சொல்லலாம். இவற்றின் அரும்பணியால் மக்களுக்கு இடையிலான தொடர்புகள் அதிகமாயின.

மேலும் நவீன காலத்தில் பத்திரிகைத்துறை பன்முகத்தன்மை கொண்டது; துறை ரீதியானது -விளையாட்டு, அரசியல், சினிமா, பாலியல், வர்த்தகம் என்று துறைரீதியாக பத்திரிகைகள் வெளிவருகின்றமை பத்திரிகைத் துறையின் வளர்ச்சியேயாகும்.

வளர்முக நாடான இலங்கையைப் பொறுத்தவரை பொதுசனத் தொடர்பு சாதனங்களில் தொலைக்காட்சி, வானொலி என்பவற்றை விட பத்திரிகையே காலத்தால் முந்தியது. இலங்கையின் சமூக, கலாசார விழுமியங்களின் படி ஆரம்பகாலங்களில் மதகுருமாரிடமும் பின்னர் பிரபுக்களிடமும் வாசிப்பு அறிவு காணப்பட்டது. அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட 'கஸட்' வெளியீடே மக்களுக்கு வாசிக்கக் கிடைத்த முதல் புத்தகம் தவிர்ந்த பத்திரிகையாகும். உண்மையில் இதில் அரச அறிவித்தல்கள் பெரிதும் பிரசுரமாயின. அத்துடன் இலக்கிய, அரசியல் கட்டுரைகளும் சிறுபான்மையாகப் பிரசுரமாயின.

ஆங்கிலப் பத்திரிகைகளைப் பொறுத்தவரை 1832 ல் வெளியான 'களம்பு ஜர்னல்' என்பதிலிருந்து ஆரம்பமாகிறது. சிங்களப் பத்திரிகை வரலாறு 1860 ல் வெளியான 'லங்கா லோகய' (இது பதிவு செய்யப்படவில்லை. பதிவு செய்யப்பட்ட முதல் பத்திரிகை லக்பஹன - 1862) இலிருந்து ஆரம்பமாகிறது. 1841 இல் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரால் வெளியிடப்பட்ட த மோர்னிங் ஸ்டார் (உதய தாரகை) என்பது முதல் தமிழ்ப்பத்திரிகையாகக் கருதப்படுகின்றது.

சம காலத்தைப் பொறுத்தவரையில் இலங்கையில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் பத்திரிகைகள் வெளிவருகின்றன. எனினும் இவற்றின் குறிக்கோள், கொள்கைகளில் வேறுபட்ட தன்மையை அவதானிக்கலாம். பத்திரிகைகளின் தகவல்களை வழங்கும் பொறுப்புக்கு அப்பால் தற்கால அரசியல், இன முரண்பாட்டுச் சூழலில் சிக்கித் தவிக்கும் போக்கே இப்பத்திரிகைகளிடம் நாம் காணக்கூடிய பொதுப்பண்பாகும்.

அத்துடன் பத்திரிகைகளின் வலிமை சரியாகப் புரிந்து கொள்ளப்பட்ட ஒரு சூழலாக, தற்காலத்தை நாம் நோக்கலாம். பத்திரிகைகள் மக்களின் கருத்தை திரட்டித் தருவனவாகவும் அத்துடன் மக்களிடம் கருத்துக்களை வளர்த்துவிடுவனவாகவும் தகவல்களை வழங்குவதற்கு அப்பால் தொழிற்பட்டு வருகின்றன. குறிப்பாக 1994 இற்கு முன்னர் இலங்கையில் பத்திரிகையாளர்களும், பத்திரிகைகளும் அடைந்த இன்னல்கள், தொடர்ந்து ஏற்பட்ட அரசியல் மாற்றத்திற்கு பத்திரிகைகளும் பொதுசனத் தொடர்பு சாதனங்களினதும் சுயாதீனப் போக்குகள் காரணமாக அமைந்தமை சுட்டிக்காட்டுதற்குரியன. (இலங்கை உட்பட ஏனைய நாடுகள் பலவற்றினது சமூக மாற்றத்திற்கு எழுத்துத்துறையும் பத்திரிகைகளும் அரும்பணி புரிந்துள்ளன.)

இலங்கையில் வெளிவரும் சகல தேசிய பத்திரிகைகளையும் இரண்டு வகைக்குள் அடக்கி விடலாம்.

1. அரசு சார்ந்தவை
2. அரசு சார்பற்றவை

மும்மொழிப் பத்திரிகைகளிலும் அரசு சார்ந்த பத்திரிகைகள் வெளிவருகின்றன. அரசாங்கம் பத்திரிகைகளுக்குப் பூரண சுதந்திரம் வழங்கியதாகக் கூறினாலும் அரசு சார்ந்த பத்திரிகை நிறுவனங்களுக்கு இச்சுதந்திரம் வரையறைக்கு உட்பட்டதாகவே உள்ளது.

இந்த வகையில் தற்போதைய இனமுரண்பாடுகளில் தமிழ் - சிங்கள - ஆங்கில பத்திரிகைகள் வேறுபட்ட கருத்துப் போக்கினையே கொண்டுள்ளன. அரசு சார்ந்த பத்திரிகைகள் அரச கொள்கையை மையமாகக் கொண்டு கருத்துக்களை வெளியிட்டு வருகின்றன. ஏனைய சுயாதீன -தனியார் பத்திரிகைகள் நடுவு நிலைமை, பக்கச்சார்ப்புப் போக்குகளைக் கொண்டுள்ளன. சிங்களப் பத்திரிகைகள் பேரினம் சார்பாக எழுதி வந்தாலும் பேரினவாதத்தை தூண்டுவனவாக ஓரிரு பத்திரிகைகளே உள்ளன. தமிழ்ப் பத்திரிகைகளைப் பொறுத்தவரை அரசு, கட்சி தனியார் சார்பானவையாகவும் சிறுபான்மை இனத்திற்குக் குரல் கொடுப்பனவாகவும் உள்ளன. எவ்வாறென்றாலும் கட்சிச் செல்வாக்கு அரசின் செல்வாக்கு என்பவற்றைத் தவிர்க்கவியலாத நிலையிலேயே தமிழ்ப்பத்திரிகைகள் உள்ளன.

பத்திரிகைகளின் பணி உணரப்பட்ட இக்காலத்தில் இலங்கையில் தேசியத் தமிழ்ப் பத்திரிகை என்ற பகுதிக்குள் சமகாலத்தில் கீழ்வரும் பத்திரிகைகள் அடங்குகின்றன.

| | **பத்திரிகை** | **வெளியிடுபவர்கள்** |
|---|---|---|
| 1. | ✱ தினகரன் (நாளிதழ்) | அஸோஸியேட் நியூஸ் பேப்பர்ஸ் சிலோன் லிமிடெட் |
| | ✱ தினகரன் வாரமஞ்சரி (வார இதழ்) | |
| 2. | ✱ வீரகேசரி (நாளிதழ்) | எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் சிலோன் லிமிடெட் |
| | ✱ வீரகேசரி வாரவெளியீடு (வார இதழ்) | |
| 3. | ✱ நவமணி (வார இதழ்) | ப்ரீ லங்கா நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் |

இவற்றில் எல்லா வார இதழ்களும் அரசியல் கருத்துக்களைத் தாங்கி வெளிவருகின்றன.

இண்டிபெண்டட் நியூஸ் பேப்பர்ஸினால் நீண்டகாலமாக வெளியிடப்பட்ட தினபதி - (நாளிதழ்) சிந்தாமணி (வார இதழ்) 1990 களில் இடைநிறுத்தப்பட்டன என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

மேலும் தேசியப் பத்திரிகைகளின் குறைபாடுகளின் விளைவாக சிறிய அளவிலான 'ரப்லோயிட்' **(Tabloid)** எனும் பத்திரிகைகள் தமிழ்- சிங்கள மொழிகளில் தோன்றின. மேற்கத்தைய நாடுகளில் இவ்வகைப் பத்திரிகைகள் பெரு வரவேற்பைப் பெற்றனவாகும். இலங்கையைப் பொறுத்தவரை இவை புதியன.

'ரப்லோயிட்' பத்திரிகைகள் சிங்கள மொழியில் அரசியல் கட்சி, பாலியல், பொழுதுபோக்கு அம்சம் என்ற ரீதியில் வெளிவருகின்றன. ஆனால் தமிழ்ப் பத்திரிகை உலகில் இவை அரசியல் மற்றும் பொழுதுபோக்கு அம்சம் என்ற ரீதியில் வெளிவருகின்றன. இவற்றை நோக்கின்.

1. சரிநிகர் (இருவார இதழ்)
2. தினமுரசு (வார இதழ்)
3. சூடாமணி (வார இதழ்)
4. மித்திரன் (வார இதழ்)
5. ஜனனி (வார இதழ்)

'சரிநிகர்' என்ற ரப்லோயிட்' வகைப் பத்திரிகை ஒரு மாற்றுப் பத்திரிகையாக தன்னை இனங்காட்ட முனைந்து வெளிவருவதாகும். இது ஒரு அரசியல் மற்றும் நீதிக்குமான பத்திரிகையாகக் கருதப்படுகின்றது.

ஏனையவை அரசியல் ரீதியான ஆய்வுக்கட்டுரைகள், செய்திகள், பொழுது போக்கு பல்சுவை அம்சங்களுடன் வெளிவருகின்றன.

எவ்வாறெனினும் வார இதழ்கள் தமிழ்பேசும் வாசகரிடையே பரபரப்பாக விற்பனையாகும் தன்மை அவதானிக்கப்படுகின்றது. இப்பத்திரிகைகள் குறிப்பாக கணனி மயப்படுத்தப்பட்டமை, தகவல்கள் வழங்கும் முறை, அமைப்பு என்ற வகையில் தனித்துவம் வாய்ந்தவையாக மிளிர்கின்றன.

அத்துடன் பிராந்திய பத்திரிகைகளும் சுட்டிக் காட்டத்தக்கன. யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு சில பத்திரிகைகள் வெளிவருகின்றன. இவை முற்றுமுழுதாக சிறுபான்மை விடுதலைப் போராட்டத்தை மையமாகக் கொண்டவை. யுத்த நிலைமை காரணமாக இப்பிரதேச பத்திரிகைகள் ஏனைய பிரதேச வாசகர் பெற்று வாசிக்கும் நிலைமை இல்லை.

எவ்வாறென்றாலும் ஒரு வளர்ச்சிக் கட்டத்தை அடைந்து விட்ட இலங்கைத் தமிழ்ப்பத்திரிகைத்துறை சில குறைபாடுகளையும் கொண்டுள்ளன.

1. ஸ்திரமற்ற போக்கு -தனித்துவமான பண்புகள் குறைவு.
2. விசாரணையுடன் கூடிய செய்தி வழங்காமை.
3. முற்றுமுழுதான வர்த்தக ரீதியான போக்கு.
4. எழுத்தாளர்களைப் பூரணமாகப் பயன்படுத்தாமை
5. நாடாளவிய தன்மை இல்லை.
6. ஏனையவை.

மேற்சொன்னவை ஒரு பத்திரிகையைக் குறிப்பிட்டுச் சொன்னவையல்ல. பொதுவாக அவதானிக்கப்பட்டவையாகும்.

ஒரு பத்திரிகை நிலைத்திருப்பது வாசகர்களையும் பொறுத்தது. இலங்கையில் எழுத்தறிவு 87% ஆகக் காணப்பட்டாலும் தமிழ் பேசும் மக்கள் எவ்வளவு தூரம் பத்திரிகைகள் வாசிக்கின்றனர் என்பது கேள்விக்குரியது.

தமிழ்வாசகர் வட்டம் இன்னும் விரிவுபட வேண்டும். அது பொழுதுபோக்கு வாசிக்கும் பண்பிலிருந்து விடுபட்டு தற்கால அரசியல் நிலைமைகளை உள்வாங்கவும் பொருத்தமான துலங்கல்களைக் காட்டவும் முனையக் கூடியதாக மாற வேண்டும். நவீன பத்திரிகைத்துறை விருத்திகளையும் தன்னகத்தே ஏற்க வேண்டும். பத்திரிகைத்துறை என்பது கடினமான பணி என்பதை மறுக்க முடியாது. எனினும் தமிழ்ப் பத்திரிகைத் தாபனங்கள் தார்மீக ரீதியாகச் சிந்திப்பது அவசியம்.

அத்துடன் தமிழ்ப் பத்திரிகை உலகைப் பொறுத்தமட்டில் இத்துறையில் ஈடுபட முனையும் இளைய தலைமையினருக்குப் போதுமான வழிகாட்டல்கள் இல்லை. தமிழ் தவிர்ந்த ஏனைய மொழிகளில் பத்திரிகைத்துறை சார்ந்த கற்கை நெறிகள் உண்டு. இவற்றை உயர்கல்வி நிலையங்கள் வழங்குகின்றன. தமிழ்ப்பத்திரிகை உலகத்தவர் அனுபவ அறிவையே பெரும்பாலும் மூலதனமாகக் கொள்ள வேண்டி உள்ளது. எனினும் கற்கை நெறிகளைப் பயின்ற பத்திரிகையாளர்களை உள்வாங்குவதும் தமிழ்ப்பத்திரிகை உலகு வேண்டி நிற்கின்றது.

"..... ஆண்மக்களின் தாய் தந்தையர்கள் என்ன நினைக்கின்றார்களோ அதுதான் இறைவன் கட்டளை. அந்தக் கட்டளை காதரைப் பணிய வைத்தது. ரகுமத்தைப் பலி வாங்கி விட்டது"

என்று குறிப்பிடுவதன் வாயிலாகப் பெற்றோரின் பண ஆசை பிள்ளைகளின் விருப்பு வெறுப்புகளைப் பொருட்படுத்துவதில்லை என்பதையும் யார் சீதனம் அதிகளவு கொடுக்கின்றார்களோ அவர்களுக்கே மகளைக் கொடுத்து விடும் பெற்றோரின் மனநிலை ஏழைப் பெண்களின் வாழ்வில் மண்ணைப் போடுவதாக அமைகின்றது என்பதையும் புலப்படுத்துகின்றார்.....

## பித்தன் (கே.எம்.எம்.ஷா) கதைகளிற் சமூக நோக்கு

தா.மணிமேகலா, தமிழ் (சிறப்பு),விடுகை வருடம், கலைப்பீடம்

கிழக்கிலங்கை முஸ்லிம் எழுத்தாளர்களின் தந்தையும் மூத்த சிறுகதை எழுத்தாளருமான மீராஷா, மட்டக்களப்பில் கோட்டைமுனை என்னும் பகுதியில் 1921 ம் ஆண்டு ஜுலை மாதம் 31 ஆம் திகதி பிறந்தார். மட்டக்களப்பு நகரத்தின் வட எல்லையில் அமைந்துள்ள கல்வியங்காடு (வெட்டுக்காடு) என்னும் பகுதியிலுள்ள முஸ்லிம் கொலனியில் அவர் வசித்து வந்தார். சிறிது காலம் சென்னையில் அங்கப்ப நாயக்க தெருவிலும் வசித்து வந்தார். அப்பொழுது தான் புதுமைப்பித்தனைச் சந்தித்து அவருடன் தனது நெருங்கிய நட்பினை வளர்த்துக் கொண்டார். இந் நட்பின் விளைவாகவே எழுத்துலகில் பிரவேசித்து பித்தன் என்னும் புனை பெயரையும் சூடிக் கொண்டார்.

வாழ்க்கையில் பல இடர்பாடுகளைச் சந்தித்த போதும் இலக்கிய முயற்சியைக் கைவிடாது தொடர்ந்து எழுதி வந்தார். இவரது முதலாவது சிறுகதை, 1942 இல் தினகரனில் வெளிவந்த 'கலைஞனின் தியாகம்' என்பதாகும். வாசித்த எஸ்.ரி.சிவநாயகம் அவர்கள் "தமிழகத்தில் புதுமைப் பித்தன் இறந்து விட்டார். இனி நம் இலங்கையில் ஒரு பித்தன் பிறந்து விட்டான்" என்று கூறினார்.

இவரது படைப்புகளாக பயங்கரப்பாதை (1950) ஆண்மகன் (1951), பாதிக்குழந்தை (1952), அமைதி (1952), தாம்பத்தியம் (1952), பைத்தியக்காரன் (1952), மயானத்தின் மர்மம் (1952), அறுந்த கயிறு (1952), இருட்டறை (1953), நத்தார்ப் பண்டிகை (1953), சாந்தி (1958), சோதனை (1960), திருவிழா (1961), ஊதுகுழல் (1962), ஊர்வலம் (1967), தாகம் (1968), ஒருநாள் ஒரு பொழுது (1981), மனச்சாந்தி, விடுதலை, தாலிக்கொடி ஆகிய சிறுகதைகள் வெளிவந்துள்ளன. இச்சிறுகதைகள் சுதந்திரன், வீரகேசரி, கலைச்செல்வி, சிந்தாமணி ஆகிய பத்திரிகைகளில் வெளிவந்தன. இவர் எழுதிய சிறுகதைகளிற் சில "பித்தன் கதைகள்" என்னும் சிறுகதைத் தொகுதியாக வெளிவந்துள்ளது. அதில் பதினாறு சிறுகதைகள் அடங்குகின்றன.

கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட வன்செயல்களின் விளைவாக, அகதியாக திஹாரிய அகதி முகாமில் சில காலம் வாழ்ந்த இவர் 15 -12-1994 ஆம் ஆண்டு இவ்வுலக வாழ்வை நீத்தார்.

பித்தனுடைய கதைகள் பெரும்பாலும் சமூக நோக்குடையவையாகவே காணப்படுகின்றன. சமூகம் எனும் போது ஒரு குறித்த பிரதேசத்தில் வாழும் மக்கட்குழுவினரையே குறிக்கும். அச்சமூகத்தின் அடித்தளத்தில் வாழுகின்ற

மக்களின் பல்வேறுபட்ட பிரச்சினைகளை மையமாகக் கொண்டதாக அவருடைய சிறுகதைகள் அமைந்துள்ளன. குறிப்பாக பெண்களின் சீதனமுறை, கட்டுப்பாடுகள், பதவி, ஏழ்மை முதலியன காரணமாக அனுபவிக்கும் துன்பங்களையும், சமூகப் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், பெண்களின் திருமணம், காதல் போன்றவற்றிக்குத் தடையாக அமைவதையும் அதனால் அவர்கள் அடையும் வேதனைகளையும் பொருளாகக் கொண்டு, சிறுகதைகள் படைக்கப்பட்டுள்ளன.

வறுமையின் கொடூரத்தால் ஏழைப்பெண்கள் அடையும் இன்னல்களையும், பணம் படைத்த சிலர் தமது பணபலத்தினாலும் செல்வாக்கினாலும் ஏழைப் பெண்களைத் தமது காம வெறிக்குப் பலியாக்கிய பின் கைவிடும் அரக்கத்தனத்தையும் காட்டுவதுடன் ஏழைப் பெண்களின் மீது இரக்கத்தை ஏற்படுத்தும் வகையிற் 'பாதிக்குழந்தை' எனும் கதையைப் படைத்துள்ளார். ஹாஜியாரின் காம இச்சையையும் பணத்தினாலும் செல்வாக்கினாலும் ஏழைப் பெண்களுக்கு அவர் இழைக்கும் கொடுமைகளையும்.

> ''ஹாஜியார் உமரு லெப்பை அந்தக் கிராமத்துக்கே பெரிய மனிதனாக்கி விட்டது. வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுப்பது போலச் செய்த பாவங்களைத் தீர்ப்பதற்காக ஒருமுறை மக்காவுக்குப் போய் வந்தார். வீட்டிலே மனைவி, தென்னந் தோட்டத்திலே ஒரு ஆசை நாயகி, ஊருக்குக் கடைசியிலே ஒரு கள்ளக் காதலி இவைகளை எல்லாம் விட சந்தர்ப்பத்துக்கேற்ப பகல் காட்சிகள் பல, அவருடைய பணத்திற்கும் பருத்த உடலுக்கும் பணிந்து போகாத பருவப் பெண்களே இருக்க முடியாது. அந்த வட்டாரத்தில் வேலை செய்த களைப்பால் தன்னிச்சையாக உறக்கத்தில் கிடந்த சுபைதாவின்... அவயவங்கள் நிலையழிந்த ஒருவித போதையை ஏற்படுத்தி விட்டன அவருக்கு. நடு இரவும் சுடு காட்டமைதியும், இச்சையின் சுறுசுறுப்பும் எல்லாமாகச் சேர்ந்து சுபைதாவின் எதிர் காலத்தைப் பாழ்படுத்தி விட்டன. அவள் அநாதை...''

என இக்கதையில் பித்தன் வெளிப்படுத்தியுள்ளார்.

பெண்களின் திருமணத்துக்குத் தடையாக இருக்கின்ற சீதனப்பிரச்சினையை மையமாகக் கொண்டு ''தாகம்'' எனும் சிறுகதை படைக்கப்பட்டுள்ளது. சீதனப் பிரச்சினையானது இருக்கின்ற பணத்தைக் கொடுத்துப் பெண்மக்களைக் கரைசேர்த்து விட நினைக்கும் பெற்றோரின் ஆசையை நிராசை ஆக்கி விடுகின்றது.

> ''மஹர்ப்பணம் கொடுத்த பின்னர் தான் கணவன் என்ற உரிமையோடு ஒரு பெண்ணின் கையைப் பிடிக்க வேண்டும் என்று குர்ஆன் கூறுவதாக ஹதீஸ் சொல்லுகிறார்கள்...''

இவ்வாறு தாகம் எனும் கதையின் மூலம் வெளிப்படுத்துவதிலிருந்து, மதமும் வாழ்க்கையும் இரண்டறக் கலந்திருந்தாலும், மதம் கூறும் எல்லாக் கருத்துக்களையும் மனிதன் கடைப்பிடிப்பதில்லை என்பதையும், பெண்கள் தான் மஹர்ப்பணம் கொடுத்து ஆண்களின் கையைப் பிடிக்க வேண்டும் என்பதையும் மன உழைச்சலுடன் பித்தன் வெளிப்படுத்துகின்றார்; சமூகத்தில் வாழத் துடிக்கும் பெண்ணின் மன நிலையைத் தத்ரூபமாக வெளிக்காட்டுகின்றார்.

இது போன்றே 'ஊர்வலம்' எனும் சிறு கதையிலும் சீதனப் பிரச்சினை எடுத்துக்காட்டப் படுகின்றது.

> ''..... ஆண்மக்களின் தாய் தந்தையர்கள் என்ன நினைக்கின்றார்களோ அதுதான் இறைவன் கட்டளை. அந்தக் கட்டளை காதரைப் பணிய வைத்தது. ரகுமத்தைப் பலி வாங்கி விட்டது''

என்று குறிப்பிடுவதன் வாயிலாகப் பெற்றோரின் பண ஆசை பிள்ளைகளின் விருப்பு வெறுப்புகளைப் பொருட்படுத்துவதில்லை என்பதையும் யார் சீதனம் அதிகளவு கொடுக்கின்றார்களோ அவர்களுக்கே மகளைக் கொடுத்து விடும் பெற்றோரின் மனநிலை ஏழைப் பெண்களின் வாழ்வில் மண்ணைப் போடுவதாக அமைகின்றது என்பதையும் புலப்படுத்துகின்றார்.

'இருட்டறை'' எனும் சிறுகதையில் சமூகத்தில் பெண்கள் மீது விதிக்கப்பட்டிருக்கின்ற கட்டுப்பாடுகளை மையமாகக் கொண்டு சுகீனாக் கிழவியின் வாழ்க்கையை எடுத்துக் காட்டுகின்றார். வீடுதான் உலகம் என்று இராமல் வெளி உலகையும் பெண்கள் அறிந்தவர்களாக இருக்க வேண்டுமானால் இறுக்கமான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட வேண்டும் என்பதை வெளிக் காட்டுகின்றது.

மேலும், 'ஆண்மகன்' எனும் சிறுகதையில் சலவைத் தொழில் செய்யும் சமூகத்தைச் சேர்ந்த வதனி எனும் பெண்ணை

உயர் சாதியைச் சேர்ந்த தெய்வநாயகம் காதலிக்கின்றான். ஆனால் திருமணம் செய்து கொள்ள விரும்பவில்லை. காரணம் சாதியிற் குறைந்தவள் என்பதற்காகவே என்பதன் மூலம் சாதிப்பிரச்சினைகளையும் எடுத்துக் காட்டுகின்றார்.

அன்றாடம் உழைத்து வாழ்க்கை நடாத்தும் சாதாரண மக்களின் வாழ்க்கையில் ஏற்படுகின்ற கஷ்டங்களையும் அவர்களது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாத நிலையில் இருப்பதையும் ''திருவிழா'' எனும் கதை ஹோட்டல் சமையற்காரனான முருகப்பனின் வாழ்க்கையை சித்திரிக்கின்றது. இதே போன்று தான் மூட்டை தூக்கும் கூலியாளான, கந்தசாமியின் வாழ்க்கையும் ''அறுந்தகயிறு' எனும் சிறுகதை மூலம் எடுத்துக்காட்டப்படுகின்றது.

எழுத்தாளரான பரப்பிரமத்தின் வாழ்க்கையும் வறுமையில் தான் செல்கின்றது. சமையலுக்கு மனைவி பணம் கேட்கின்றாள். மகன் பாடசாலையில் தவணைப் பணம் கட்டுவதற்குப் பணம் கேட்கின்றான். இரண்டுக்கும் மத்தியில் பரப்பிரம்மம் இருந்து கொண்டு இன்றைய பொழுது எவ்வாறு கழியும் என்ற சிந்தனையில் இருக்கின்றார்; என்பதை ''ஒருநாள் ஒரு பொழுது'' எனும் கதையின் மூலம் எடுத்துக் காட்டுகின்றார்.

இவ்வாறே இவருடைய சிறுகதைகள் அனைத்தும் அடித்தளமக்களுடைய வாழ்க்கைப் பிரச்சினைகளை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட கதைகளாகவே காணப்படுகின்றன.

பொதுவாகச் சிறுகதையைப் பொறுத்தவரையில் பின்னணியும் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. அந்த வகையில் பித்தன் தான் பிறந்து வளர்ந்த சமூகத்தையே களமாகக் கொண்டு பின்னணியை அமைத்துள்ளார். இவரது கதைகளுள் 'ஆண்மகன்' எனும் கதையானது நகரப்புறப் பின்னணியிலே சலவைத் தொழிலாளர்களின் வாழ்க்கையையும், அவர்களது குடிசைகள் அமைந்திருக்கின்ற மணற்புட்டி எனும் தனிமைப்படுத்தப்பட்ட இடத்தினையும் கதையின் களமாகக் கொண்டுள்ளார்.

> ''துணிகளில் இருந்து அப்புறப்படுத்தப்பட்ட அழுக்குகள் அவர்கள் வாழ்க்கையில் ஒட்டிக் கொண்டதாலோ என்னவோ குடிசை என்ற பெயரில் அந்த குப்பை மேட்டில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் அவர்கள்''

இங்கே மணற்புட்டிச் சலவைத் தொழிலாளர்களின் குடிசைகள் இருக்கின்ற சூழலானது எவ்வாறு அழுக்கடைந்து போயிருக்கின்றது என்பதை எடுத்துக் காட்டுகின்றார்.

பித்தன் தமது கதைகளில் நகரப்புறங்களை விடக் கிராமப்புறங்களையே மையமாகக் கொண்டுள்ளார். கிராமப் புறங்களில் பொதுவாக குடிசை வீடுகள் தான் அதிகமாக இருக்கும். மின்சாரவசதி இல்லாத காரணத்தினால், தெருக்கள் வீதிகள் எல்லாம் இருள் மயமாகத்தான் இருக்கும் அந்தவகையில்,

> ''கிராமத்தை விட்டு ஒதுங்கித் தனியாக இருந்தது கிழவி சகீனாவின் குடிசை. இருட்டறைக்குள்ளே இருளை அடக்கிக் குருட்டுத் தவம் செய்து கொண்டிருந்த அந்தக் குடிசையின்....''

என்று 'இருட்டறை'' என்ற கதையிற் காட்டியுள்ளார்.

வாழ்க்கையிற் பல துன்பங்களை அடைந்த மக்களின் நிலையையும், அவர்கள் வாழும் வீட்டின் தன்மையையும் 'தாகம்' எனும் கதையில்

> ''அணைந்து போவதற்காக எரிந்து கொண்டிருந்த ஒரு தகர விளக்கு, அதற்குச் சற்று அப்பால் நாலைந்து மண்பானைகள் சேர்ந்து ஒரு அடுக்கு, பக்கத்திலே சிறட்டையால் மூடிய தண்ணீர் குடம், ஒரு மரப்பெட்டி, மூலையிலே இழுத்துக் கட்டிய கயிற்றுக் கொடி, அதிலே கந்தைத் துணிகள். இவைகள் தாம் அந்த வீட்டின் வாழ்க்கையின் நடுவிலே பிதுங்கிய சம்பத்து''

இவ்வாறு கூறுவதன் மூலம் சமூகத்தின் அடித்தள மக்களது அவலங்களையும், வேதனைகளையும் தத்ரூபமாகத் தமது கதைகள் மூலம் வடித்துக் காட்டியுள்ளமை மனங்கொள்ளத்தக்கது.

பொதுவாகப் பித்தன் தமது கதைகளில் மேல்மட்ட மக்களை, மையமாகக் கொள்ளாது சமூகத்தின் யதார்த்தத்தையும் அடித்தள மக்களின் நிலைமைகளையும் தமது கதைகளிற் காட்டியுள்ளார் என்பதில் ஐயமில்லை. குறிப்பாகச் சுரண்டல், பொருளாதாரம், பிரச்சினைகள் இறுக்கமான சமூகக் கட்டுப்பாடுகள் வர்க்க முரண்பாடுகள் முதலிய பலவற்றையும் சமூகத்தை மையமாகக் கொண்டு எடுத்துக் காட்டியுள்ளார் எனலாம்.

*''எதிர்காலத்தில் இன்ரநெற் மூலமான வர்த்தகம் பெருகுகையில் மோசடிக் கும்பல்கள் தில்லுமுல்லுகளில் ஈடுபடுவதும் தவிர்க்க முடியாததே. போர்க்காலங்களில் எதிரிநாடுகளின் தகவல் தொடர்பு மையங்களை இன்ரநெற் மூலம் தாக்கியழிக்கும் நவீன போர்முறையும் உருவாகியுள்ளது.''*

# இன்ர நெற்றும் தமிழும்

து. வசீகரன் , இறுதி வருடம், பொறியியல் பீடம்.

நேரம் : மாலை 7.01, மாசி 11, 1998

நிகழ்வு : கவியரங்கம் 'அறிவுக் கதவை சரியாய் திறந்தால் ?'

பேராதனை மாணவரொருவர் 'பசு மாட்டின் பார்வையில் அறிவியல்' பற்றிக் கவி மழை பொழிகிறார். தனது அறிவுக் குழந்தையுடன் நடந்த மானசீக உரையாடலை எடுத்துரைக்கிறார் ஒரு கனடா அன்பர். அமெரிக்காவிலிருக்கும் கவியரங்கத் தலைவர், ''அடுத்து வரும் கவிதையை அவுஸ்திரேலிய ஆரணங்கு வழங்குவார்'' என அறிவிக்க, சலிப்படைந்த பார்வையாளர் (!) ஒருவர் (முன்னாள் ஈ. ஓ. ஈ. அரங்க பின்வரிசை ரசிகர்) சொல்கிறார் '' எனக்கு பசிக்குது...!''

இந்நிகழ்வு கற்பனையா? இல்லை. சாத்தியமே, என ஆணித்தரமாகப் பதிலிறுக்கிறது இன்றைய அறிவியல். இன்ரநெற் என்ற கணணி வலை தான் இந்நிகழ்வுகளை நிதர்சனமாக்கி வருகிறது. வரும் நூற்றாண்டின் உலகளாவிய தொடர்புசாதனமாக இன்ரநெற் விளங்கப்போகிறது என்பது புலனாகி வருகின்ற இவ்வேளையில், தமிழ் வளர்ச்சியிலும், தமிழர் தம் வாழ்விலும் வியத்தகு இவ்வூடகத்தை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பது ஆராயப்பட வேண்டிய விடயமாகும்.

### இன்ர நெற் என்பது என்ன?

பல நாடுகளிலுள்ள, பல்லாயிரக்கணக்கான கணணி வலைகளின் இணையம் தான் இந்த இன்ர நெற். ''கணணி வலைகளின் வலை'' (**Network of Computer networks**) எனவும் இதனைக் கூறலாம்.

நான்கே நான்கு கணணிகளைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இக்கணணி வலைத்தொகுதி இன்று 40 மில்லியனுக்கு மேற்பட்ட கணணிகளை தம் இணைப்பில் கொண்டுள்ளதன் மூலம் 150இற்கு மேற்பட்ட நாடுகளில் உள்ள ஒரு பில்லியனுக்கு மேற்பட்ட பாவனையாளர்களைத் தம் வசம் கொண்டுள்ளது. சாதாரண தொலைபேசி இணைப்புக்களினால் கணணிகளைத் தொடர்புபடுத்தி இன்ரநெற் உருவாக்கப்பட்டுள்ளது. இன்ரநெற் எவருக்கும் சொந்தமானதல்ல. எந்தவொரு நாட்டு அரசோ, அமைப்போ இன்ரநெற்றில் ஒருவர் இணை[illegible]தைக் கட்டுப்படுத்த முடியாது. உலக மக்களுக்கிடையேயான தொடர்பாடலை 'சனநாயகப்படுத்திய' பெருமையை இன்ரநெற் கொண்டுள்ளது.

இன்ரநெற், 1969 இல் அமெரிக்காவின் அரச பாதுகாப்பு ஆய்வு நிறுவனமொன்றினால் உருவாக்கப்பட்டது. பல்வேறு மாநிலங்களில் இருந்து அந்நிறுவன விஞ்ஞானிகள் தமது ஆராய்ச்சித் தரவுகளைப் பரிமாற இது பயன்பட்டது. 1970களில் அமெரிக்க பல்கலைக்கழகங்கள் இன்ரநெற் இல் இணைந்தன. ஆய்வு கூட விந்தைகளாகவும், பெரிய நிறுவனங்களின் ஏகபோக உரிமையாயும் இருந்த கணணிகள், 1980களில் வீடுகளை நோக்கிப் படையெடுத்தன. இன்ரநெற்றின் பிரம்மாண்டமான வளர்ச்சிக்கு இது அடிகோலிற்று.

### இன்ரநெற்றில் இணைவது எவ்வாறு?

கணணியொன்று, தொலைபேசி, மொடெம்(Modem) எனும் கருவி மூன்றும் போதும் இன்ரநெற் இல் இணைவதற்கு. இன்ரநெற் சேவைகளைப் பயன்படுத்த, கணணி அமைப்புத்திட்ட (Programming) அறிவெதுவும் அத்தியாவசியமில்லை. இணைப்புக் கட்டணமும் அதிகமில்லை. இன்று ரூபா மூவாயிரத்திற்குக் கூட இன்ரநெற் இணைப்புக்களை Lanka Internet, Ceycom, Eureka @ Com, Telecom போன்ற நிறுவனங்கள் வழங்குகின்றன

கணணி இல்லாதவர்கள் கவலைப்பட வேண்டியதில்லை. தற்போது பிரபலமாகி வரும் Cyber Cafe போன்ற கணணி விடுதிகளில் சிற்றுண்டி அருந்தியபடி இன்ரநெற் சேவைகளை பெற்று கொள்ளலாம். (கட்டணம் 1/2மணிக்கு 80/-) இவை இன்ரநெற் ஆனது ஒரு சாதாரணனின் கைக்கெட்டிய நிலையில் உள்ளதையே கோடிட்டுக் காட்டுகின்றன.

### இன்ரநெற்றில் அப்படி என்னதான் இருக்கிறது?

இன்ர நெற்றில் பல்வேறு சேவைகள் உள்ளன. புதுப்புதுச் சேவைகள் தினந்தோறும் முளைத்த வண்ணமுள்ளன. இவற்றில் சில :

#### மின் அஞ்சல் (E-mail)

உலகெங்கிலுமுள்ள மக்கள் ஒருவருடன் ஒருவர் கணணி மூலம் கடிதத் தொடர்பு கொள்ள மின் அஞ்சல் வழிவகை செய்கிறது. கணணியின் விசைப்பலகையில்(Key Board) அல்லது எலியில்(Mouse) உரிய விசையை அழுத்திய சில வினாடிகளில் உலகின் மறுகோடியிலுள்ள ஒருவரினை மின்னஞ்சல் சென்றடைந்து விடுகிறது. இதற்காகும் செலவு ஒரு உள்ளூர் தொலைபேசிக் கட்டணம் மட்டுமே.

#### அகில இணையம் (WWW - World Wide Web)

இன்ரநெற் சேவைகளில் மிகப் பிரபல்யம் வாய்ந்தது WWW ஆகும் இதன் முக்கியத்துவம் யாதெனில் உலகெங்குமுள்ள ஆயிரக்கணக்கான கணணித் தரவுத் தளங்களை (Data Bases) விடய ரீதியாக ஒழுங்குபடுத்தி வேண்டிய விடயத்தை இலகுவாக பெற்றுத் தரும் அமைப்பினை இது கொண்டுள்ளதாகும். இதனில் சாதாரண தட்டெழுத்தை (Text) விட, படங்கள், புகைப்படங்கள், ஒலி, திரைப்படங்கள், போன்றவற்றையும் இணைக்க முடியும், இக்காரணத்தால் இன்று பல வர்த்தக நிறுவனங்கள் தமது விளம்பரங்களையும், அரசியல், சமூக பொருளாதார, கல்வியியல்,நிறுவனங்கள் தமது நடவடிக்கைகள் பற்றிய தகவல்களையும், அகில இணையம் மூலம் வழங்குவதில் பேரார்வம் காட்டுகின்றன. இன்று இலங்கையில் Sunday Times, இந்தியாவில் ஆனந்த விகடன் போன்ற வார இதழ்கள் அகில இணையத்தின் மூலமே இன்ரநெற்றில் இணைந்துள்ளன. பிரபல நிறுவனங்கள் தங்கள் விளம்பரங்களில் தொலைபேசி, தொலைஅச்சுப்பிரதி (Fax) என்பவற்றுடன் இணைய முகவரியையும் (Web Site address) குறிப்பிடுவது இன்று சர்வசாதாரணமான ஒன்று.

தொலை தூரத்திலுள்ள ஒரு கணணியில் வதியும் தகவற் திரட்டுக்களை(Files) எமது கணணிற்கு பிரதி செய்யும் முறை Etp எனப்படுகிறது இன்ரநெற்றில் ஆய்வாளர்கள் தகவற்பரிமாற்றம் செய்ய Etp இனைப் பயன்படுத்துவது வழக்கமாகிவிட்டது.

#### Telnet

அமெரிக்காவில் ஒரு சக்திவாய்ந்த கணணி உள்ளது என வைத்துக் கொள்வோம். இலங்கையிலுள்ள ஆய்வாளர் ஒருவர் அக்கணணியில் கணிப்பொன்றை செய்ய வேண்டியுள்ளது. முன்பெல்லாம் ஒன்று ஆய்வாளர் அமெரிக்கா செல்ல வேண்டும் அல்லது கணணியை இலங்கைக்குக் கொண்டுவர வேண்டும்.

ஆனால் **Telnet** மூலம் அதே ஆய்வாளர் இங்கிருந்தபடியே அமெரிக்க கணணிக்கு தனது கணணி மூலம் கட்டளைகளை வழங்க, முடிவுகளை தனது கணணி வாயிலாகவே பெற்றுக் கொள்ள முடிகிறது.

#### செய்திக் குழுக்கள் (News Groups)

குறித்ததோர் துறையில் ஈடுபடுவோர் அத்துறைசார்ந்த விடயங்களைப் பற்றி கலந்துரையாடுவது, கருத்தரங்குகள் நடாத்துவது வழக்கம். இன்ரநெற்றிலும் இத்தகைய கருத்தரங்குகள் இடம்பெறுகின்றன. ஒரேயொரு வித்தியாசம் இவை மாலையானதும் முடிவடைவதில்லை. செய்திக் குழுவொன்றில் இணைவதன் மூலம் அத்துறைசார்ந்த புதிய விடயங்களை அறியவும், ஏற்படும் பிரச்சனைகள், சந்தேகங்களிற்கு உலகளாவிய ரீதியில் வல்லுனர்களிடமிருந்து

ஆலோசனை பெறவும் முடியும், இணைவதும் சுலபம். அக்குழுவின் மேற்பார்வையாளருக்கு ஒரு மின்னஞ்சல் போதும்.

***Internet Relay Chat (IRC) & Talk***

ஒரே சமயத்தில் பலருடன் குறித்தவொரு விடயம் பற்றி கணணி மூலம் உரையாடுவதற்கு *IRC* உதவுகிறது. இதன் மூலம் (பத்திரிகைகளின் பேனா நண்பர் பகுதியை அலசாமலே) உலகெங்கும் நண்பர்களைப் பெற்றுக் கொள்ள முடியும். *Talk* மூலம் குறிப்பிட்ட நபருடன் மட்டும் உரையாடலாம். நவீன காதலர்களுக்கு இதுவொரு இனிப்பான சேவையாகும்.

***Archie & Gopher, WAIS, MOSAIC*** போன்ற பல சேவைகளும் உள்ளன. இவை யாவும் தகவற்தளங்களை ஆராய்ந்து வேண்டிய தரவுகளை பெற்றுத்தரக் கூடிய வல்லமை படைத்தவை. எதிர்காலத்தில் முக்கியத்துவம் பெறப் போகும் சேவைகள் பல்லூடக தன்மை (*Multimedia Based*) வாய்ந்தன. இன்ரநெற் தொலைபேசி, வீடியோ மாநாடுகள், வங்கிச்சேவைகள், வியாபாரம் என்பன இவற்றுட் சில.

இவ்வளவு சேவைகளையும் எவ்வாறு பயன்படுத்துவது? எமக்குத் தேவையான தகவல்களை எவ்வாறு சரியாகப் பெறுவது? என்ற கேள்விகள் எழலாம். இதற்கென்று பிரத்தியேகமாக கணணியியல் எதுவும் கற்கத் தேவையில்லை. *Netscape, Navigator, Explorer* போன்ற இலகுவாக பயன்படுத்தவல்ல எளிதாகப் புரிந்து கொள்ளக்கூடிய தேடல் அமைப்புக் கருவிகளின் (*Brouser*) உதவியுடன் இவ்வாறான பல்வேறு சேவைகளை இணையத்தில் தேடிப் பெற்றுக் கொள்ள முடியும். இச்சேவைகளை எமது கணணியிலிருந்து பெற்றுக் கொள்ள முடியும்.

## *எங்கள் தமிழுக்கும் இந்த இன்ரநெற்றுக்கும் என்ன சம்பந்தம்?*

இன்ரநெற் சேவைகள் / வளங்கள் ஆங்கிலத்திலோ, ஐரோப்பிய மொழிகளிலோ, அன்றி ஐப்பானிய மொழியிலோ மாத்திரம் தான் இருக்க வேண்டும் என்பதில்லை. தமிழிலும் முடியும் என்பது தொழில்நுட்ப ரீதியில் சாத்தியமே. ஆனால் எத்தனை தூரம் தமிழ் இன்ரநெற்றில் உள்ளது என்பது கேள்விக்குறி. தமிழ் மக்களின் இன்ரநெற் சம்பந்தமான அறிவும் குறைவாகவே காணப்படுகிறது.

தமிழிலுள்ள நூல்கள், இலக்கியகருவூலங்கள் ஆராய்ச்சி முடிவுகள், கட்டுரைகள் சஞ்சிகைகள், புதினப் பத்திரிகைகள் சொற்பொழிவுகள் என்பனவற்றை கணணி தரவுத் தளங்களில் பேண வேண்டியது இன்றைய காலத் தேவையாகும். பல்கலைக்கழகங்கள், தமிழர் அமைப்புகள் என்பன இதில் முனைப்புடன் செயற்பட வேண்டியது அவசியம், ஒவ்வொருவரும் தத்தமது கைவசமுள்ள தரவுகளையேனும் இன்ரநெற்றில் இட்டால், உலகின் எந்த மூலையிலிருந்தும் ஒருவர் அத்தகவலைப் பெற முடியும். தனித்தனி தீவுகளாக உள்ள தகவல்களை இணைக்கும் பாலமாக இன்ரநெற் இங்கு செயற்படுகிறது.

இத்தகைய்தோர் தரவுத்தளமானது தமிழ் ஆராய்ச்சியாளர்களுக்கும் தமிழ் ஆர்வலர்களுக்கும் பேருதவியாயிருக்கும் அதேவேளை, புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் தமது பண்பாட்டின் ஆணிவேர்களை அடையாளம் கண்டுகொள்ளவும் பணியாற்றும் என்பது வெளிப்படை.

இன்றைய ஈழத் தமிழிலக்கிய கர்த்தாக்களைப் பொறுத்த வரை தமது படைப்புக்கள் அச்சு வாகனமேற்றல் ஒரு அரிய செயலாகவே உள்ளது. இன்ரநெற் இதற்கு ஒரு வரப்பிரசாதமாகும். இவ்வெழுத்தாளர்களின் படைப்புக்களை ஏற்ற முறையில் வடிவமைத்து தம் அகில இணையத்தில் இடுவதன் மூலம், பல்கலைக்கழகங்களோ, வெளியீட்டு நிறுவனங்களோ, மேற்படி படைப்புக்களுக்கு உலகளாவிய சந்தை வாய்ப்பைப் பெற்றுத் தரலாம். குடத்திலிட்ட குத்துவிளக்காக இருக்கும் ஈழத்தமிழ் இலக்கியம் சர்வதேச அந்தஸ்து பெறுவதற்கு இது ஊன்றுகோலாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் மத்தியில் இந்நாட்டு படைப்புக்கள் சென்றடையவும், அங்கு எழும் படைப்புக்களை உள்வாங்கவும் இன்ரநெற் சிறந்த சாதனமாகும்.

இம்மக்களின் வழித்தோன்றல்கள் தமது இனத்துவ அடையாளங்களை இழந்துவிடும் ஆபத்தினை எதிர்நோக்குகின்றனர். அவர்கள் தம் வேர்களைத் தேடும் நிலைவரும் போது இன்ர நெற்றிலுள்ள தமிழ் அவர்களுக்கு அவ்வேர்களை அடையாளம் காட்டுமளவிற்கு காத்திரமான நிலையில் இருத்தல் வேண்டும்.

பல்லூடக இன்ரநெற்றின் மூலம் பல விந்தைகள் சாத்தியமாகலாம். இலக்கிய நிகழ்வுகள், பட்டிமன்றங்கள்,

கவியரங்குகள் போன்றவை அல்லது *Video Conferencing* அல்லது *Internet Audio* போன்ற சேவைகள் வாயிலாக நடாத்தப்படலாம். இவ்வகையிலான நிகழ்வுகள் மிகப் பெரிய மக்கட் கூட்டத்தை சென்றடையும் அதேவேளை மிகச்சிறந்த ஆற்றல் பெற்றவர்களையும் அவர்கள் உலகின் வெவ்வேறு மூலைகளில் இருந்தால் கூட பங்கேற்கச் செய்ய முடியும். இதற்காகும் செலவும் மிகச் குறைவாகும்.

தமிழாராச்சி மாநாடொன்றை இன்ரநெற்றில் நடத்துவதை சற்றுக் கற்பனைசெய்து பாருங்கள். இன்னும் எத்தனை அறிஞர்கள் பங்குபற்றலாம். எத்தனை கோடி மக்களை அது சென்றடையும் என்று. அத்துடன் 1974 போன்ற கசப்பான சரித்திரங்களையும் தவிர்த்துக் கொள்ளலாம்.

தமிழ்த்துறை இயல் இசை நாடக வளர்ச்சிக்கு செய்திக் குழுக்கள் (*User groups*) பெரும்பணியாற்றலாம்.

புதிய ஆய்வுகள், புதிய கருத்துக்கள், சிந்தனைகள் என்பவற்றை அரங்கேறச் செய்யவும். கேள்விக்கணைகளை எழுப்பி, தேடலுக்கு வழிவகுத்து, புதிய முடிவுகளை பெறுபேறுகளை எட்டவும் இக்குழுக்களின் பணி அவசியம்.

### இன்ர நெற்றின் விளைவுகள் என்ன?

இன்ரநெற்றின் வருகை, தகவல் பெருவீதியை எமக்கு திறந்து விட்டுள்ளது. இது எமது பண்பாட்டில் ஏற்படுத்தக்கூடிய தாக்கம் எத்தகையது என்பது கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும். இன்று இன்ரநெற்றில் ஆபாச இலக்கியங்களின் பெருக்கம் பாரிய பிரச்சனையாகவுள்ளது. இதனால் சிங்கப்பூர் போன்ற சில நாடுகள் தமது மக்களின் இன்ரநெற் தொடர்பாடல்களை கண்காணிக்கத்தலைப்பட்டமை, அந்தரங்கத்தன்மை தொடர்பான சர்ச்சைகளை கிளப்பி விட்டுள்ளது. இலங்கைக்கு சர்வதேசப் 'புகழ்' தேடித்தந்த சிறுவர் பாலியல் துஷ்பிரயோகிகள் தமது நடவடிக்கைகளுக்கு இன்ரநெற்றை பாவித்து வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இத்தகைய விடயங்கள் எமது கலாச்சாரத்தின் வளர்ச்சிக்கா, வீழ்ச்சிக்கா அடிகோலும் என்பதை சிந்திக்க வேண்டும்.

கணனிகளைசெயலிழக்க வைக்கும் செயற்திட்டங்களை (*Programs*) *Virus* என அழைப்பர். இவை இன்ரநெற்றில் பல பாதிப்புக்களை ஏற்படுத்தலாம். அண்மையில் அமெரிக்க நீதித் திணைக்களத்தின் இணையத்தை (*Website*) தாக்கிய ஒரு வைரஸ் அதன் தலைப்பை அமெரிக்க அநீதித் திணைக்களம் என்று மாற்றியதோடல்லாமல் அமெரிக்காவின் கழுகுச் சின்னத்திற்குப் பதிலாக நாசி ஜேர்மனியின் ''ஸ்வஸ்திக்கா'' சின்னத்தை இட்டும் விட்டது.

எதிர்காலத்தில் இன்ரநெற் மூலமான வர்த்தகம் பெருகுகையில் மோசடிக் கும்பல்கள் தில்லுமுல்லுகளில் ஈடுபடுவதும் தவிர்க்க முடியாததே. போர்க்காலங்களில் எதிரிநாடுகளின் தகவல் தொடர்பு மையங்களை இன்ரநெற் மூலம் தாக்கியழிக்கும் நவீன போர்முறையும் உருவாகியுள்ளது. கடந்த வளைகுடாப் போரில் அமெரிக்கா ஈராக்கிற்கெதிராக இத்தகைய போர்முறையை பிரயோகித்ததும் தரைப்போரில் அமோக வெற்றியீட்டியதன் பின்னணியில் இருந்தது. இன்ரநெற்றின் மிகப்பெரிய பலமான அதன் கட்டுப்பாடற்ற தன்மையே அதன் மிகப் பெரிய பலவீனமாகவும் உள்ளது. இன்ரநெற் தொடர்பான சட்டவரைவுகள், சர்வதேச நிர்ணயங்களை மேற்கொள்வது அதன் வளர்ச்சி வேகம் காரணமாக மிகக் கடினமான காரியமாயுள்ளது.

இறுதியாக, இன்ரநெற் நாம் வாழும் காலத்திலேயே எமது வாழ்விலும் வேலைத் தளங்களிலும் பாரிய மாற்றங்களை கொண்டு வரப்போகிறது. நாம் விரும்பியோ விரும்பாமலோ எமது வாழ்வில் இன்ரநெற் ஒரு அங்கமாகும் நாள் வெகு தொலைவில் இல்லை. அதிலே மாற்றம் என்பதே நிரந்தரமானது.

''இன்ரநெற் என்பது ஒரு சாதாரண விடயமல்ல. தொலைக்காட்சி நிகழ்ச்சி போல அதனை மதிப்பிடக்கூடாது. நாடுகளையும் இயற்கை விதித்த எல்லைக் கோடுகளையும் தாண்டி மனித குலத்தை இணைத்திடும் ஒரு அரிய மேடை. எனவே ஒரு மேம்பட்ட உலகை நோக்கி நாம் நடைபோட இன்ரநெற் வழி சமைக்கும்'' என்கிறார் அறிவியல் புதின எழுத்தாளர் வில்லியம் கிப்சன்.

இதேவேளை ஆனந்தவிகடனில் அண்மையில் இடம்பெற்ற நகைச்சுவைத் துணுக்கொன்று ஞாபகத்திற்கு வருகிறது. ஒரு அரசியல்வாதி கூறுகிறார் ''நான் ஆட்சிக்கு வந்தால் எமது மீனவர்களுக்கெல்லாம் மீன்பிடிக்க இன்ரநெற் வழங்குவேன் என உறுதியளிக்கிறேன்'' என்று. எமது இன்ரநெற் அறிவு இவற்றுள் எந்நிலையில் உள்ளது என்ற வினாவை எம்மை நாமே கேட்டுக் கொள்வோம்.

## உயிரியல் தொழில்நுட்பம் (Bio technology) ஓர் அறிமுகம்

P.சுரேந்திரன், இறுதி வருடம், விவசாய பீடம்

ஏறத்தாள 5 பில்லியன் வருடங்களிற்கு முன் தோன்றிய இப் பூமியில் ஏறத்தாள 2 பில்லியன் வருடங்கள் வரை உயிரினத் தோற்றம் நிகழவில்லை. பின்பு படிப்படியாக இரசாயனக் கூர்ப்பினதும் அதனைத் தொடர்ந்து நிகழ்ந்த அங்கிக் கூர்ப்பினதும் விளைவாக பற்பல உயிரினங்கள் தோன்றி, மனிதக் கூர்ப்பின் விளைவாக மனிதன் தோன்றினான் என்கிறது பரிணாமம் (Evolution). மரபு ஒற்றுமைகள் (Heredity) காணப்படும் கூட்ட உயிரினங்கள் தனித்தனி கூட்டங்களாகின. உயிர்களிடையே காணப்படும் மாறுபாடுகளில் (Variation) அடிப்படையே பரிணாமம் ஆகும். இந்த மாறுபாடு, ஒற்றுமைகளை நிர்ணயிப்பவையே gene எனப்படுகின்ற அடிப்படை காரணியாகும். இந்த மரபியல் நுணுக்கங்களைப் பற்றிய அறிவே பிறப்புரிமையியலாகும் (Genetics). இம் மரபியல் துறையில் 21 ம் நூற்றாண்டை நோக்கி வீறு நடை போடும் மனிதன் பல மாற்றங்களை செய்ய வழியமைத்துவிட்டான்.

கருமைநிற ரோசாப்பூ.....

புணரிச் சேர்க்கையில்லாது உடற்கலங்களில் (Somatic cells) இருந்து விலங்கினங்களை உருவாக்கல்....

மனிதப் பாலின் தன்மையைக் கொண்ட மாட்டுப்பால்.....

வயோதிபத்தை தள்ளிப்போடுதல்.....

மீண்டும் உலகில் டைனோசர் (Dinosaur)போன்ற உயிரினங்கள்.....

இவை சாத்தியமா! ஆம் என்கிறார்கள் தற்கால மூலக்கூற்று உயிரியல் துறை விஞ்ஞானிகள். இது எப்படி நிகழலாம் இதோ மேற்கொண்டு படியுங்கள்...

Deoxyribo Nucleic Acid என்பதன் சுருக்க வடிவமே DNA ஆகும். DNA உயிரியலின் பிரதான மூலக்கூறாகும். பாரம்பரிய இயல்புகளை சந்ததிக்கு சந்ததி கடத்துவதிலும், ஒரு உயிரின் இயல்புகளை வேறுபட்ட புரதங்களை தொகுப்பதன் மூலம் வெளிப்படுத்துவதிலும் (Expression), உயிர் தொழிற்பாடுகளை கட்டுப்படுத்துவதிலும் பிரதான பங்கு வகிக்கும் உயிரியலின் அடிப்படை அமைப்பாக DNA காணப்படுகின்றது. ஒரு உயிரியில் காணப்படும் பிறப்புரிமையியல் வெளிப்பாடுகளிற்கு பொறுப்பான மொத்த DNA genome எனப்படும். genome இன் அளவு அங்கிகளிற்கு அங்கி வேறுபடும்.

DNA ஆனது Deoxyribose எனப்படும் 5C வெல்லத்தினாலும் ஒரு பொசுப்பேற்று மூலிகத்தினாலும், ஒரு நைதரசன் உப்பு மூலத்தினாலும் (Adenine or guanine or Cytocine or Thymine) ஆன Nucleotide எனும் சேர்வையின் பல்பாத்தாகும். இது நீண்ட இரட்டை விரிபரப்பு சுருள் சங்கிலி அமைப்பாக உயிர்க் கலங்களில் காணப்படும். இப்பல்பாத்து சங்கிலியில் நைதரசன் உப்பு மூலங்களின் ஒழுங்கு (Sequence ) இயல்புகளை நிர்ணயிப்பதில் பிரதான பங்கை வகிக்கின்றது. இத் தொடரில் (Sequence இல்) அடுத்தடுத்த 3 நைதரசன் மூலங்கள் ஒருங்கே கோடோன் (Codone) என அழைக்கப்படும். ஒவ்வொரு Codone உம் ஒரு அமினோ அமிலத்தை பிரதிநிதித்துவப்படுத்தும். கோடோன்களின் ஒழுங்கிற்கேட்ப வெவ்வேறு அமினோ அமிலங்கள் அடுக்கப்பட்டு, அவற்றிடையே பெப்டைட் பிணைப்பு (Peptide bond) தோன்றுவதால் (புரதத் தொகுப்பு) புரதங்கள் உருவாக்கப்பட்டு இயல்பு வெளிப்படுத்தப்படும் (gene expression). ஒரு குறித்த இயல்பை வெளிப்படுத்துவதற்கு பொறுப்பான DNA காரத் தொடர் (DNA sequence) மொத்தமாக பரம்பரை அலகு ஜீன் (gene) எனப்படும். எனவே ஒரு இயல்பு வெளிப்படுத்தப்படுவது ஜீன் இன் தாக்கத்தினால் ஆகும்.

தற்கால மூலக்கூற்றியல் தொழில்நுட்ப அறிவியல் வளர்ச்சியின் பயனாக தற்போது கலங்களில் இருந்து DNA பிரித்தெடுப்பு (DNA Extraction), DNA இலுள்ள மூலத்தொடரை இனம்காணல் (Sequencing of DNA), geneகளை தனிப்படுத்துதல் (Isolation of genes), geneகளின் தொழிற்பாட்டை அகற்றல் (Study the function of genes), geneகளை மாற்றியமைத்தல் (Modification of genes), வெளியில் இருந்து வேறு geneகளை நுண்ணங்கிகள், தாவரங்கள், விலங்குகள், மனிதன் ஆகிய அங்கிகளில் அறிமுகப்படுத்தல் (Introduce foreign genes) மனிதனில் பரம்பரையலகு ரீதியான சிகிச்சை (gene therapy in humans), தாவர விலங்குகளில் பிறப்புரிமைப் பொறியியல் (genetic engineering) ஆகியவை சாத்தியமாக உள்ளன. இதன் விளைவாக பாரியளவில் உயிரியல் விஞ்ஞானப் புரட்சி எதிர்காலத்தில் நிகழலாம் என்பது தற்போது நிதர்சனமாகியுள்ளதைக் காண்கின்றோம்.

மேற்குறித்த உயிரியல் தொழிநுட்ப செயன்முறைகளில் தற்போது விரைவாகப் பரிணாமம் அடைந்து வருவதும், தற்போது உலகில் உயிரியல் முக்கிய பிறப்புரிமையியல் சாதனைகளை நிகழ்த்தி வருவதுமான தொழில்நுட்பம் பிறப்புரிமை பொறியியல் (Genetic engineering) ஆகும். முதன் முதலில் இத் தொழில்நுட்பம் Jackson (1972) என்பவரால் செயல் வடிவம் பெற்றது. இத் தொழில் நுட்பத்தின் அடிப்படை தத்துவம் ஒரு அங்கியில் உள்ள geneஐ (donor gene) இன்னுமொரு அங்கிக்கு மாற்றி வெளிப்பாடுகளை (expression) பெறுவதாகும். இது Agrobacterium tumefaciens எனும் ஒருவகை ஒட்டுண்ணி bacteria இன் தொற்றுகை பொறிமுறையை மையமாகக் கொண்டே விருத்தியடைந்தது எனலாம். இப் bacteria தாவரங்களில் கொப்புளங்களை (tumers) உருவாக்குகின்றன. (Crown gall disease) bacteria களில் மைய குரோமோசோம்களிற்கு புறம்பாக plasmid எனப்படும் வளையவுருவான இரட்டை இழையமைப்புடைய மூடிய DNA காணப்படும். இது 200kb நீளம் கொண்டதாகவும், பல geneகளை கொண்டதாகவும் காணப்படும். இதிலுள்ள குறித்த ஒரு நீளமான பல gene களை கொண்ட பிரதேசமே (T-DNA region) tumer உருவாவதற்கு பொறுப்புடையதாகும். காயமடைந்த தாவர பகுதியினூடாக தொற்றுதலடையும் bacteria இன் plasmid இலுள்ள t.DNA பகுதியானது தாவர கலத்தின் கருவிலுள்ள தாவர குரோமோசோம் -DNA (Chromosomal DNA) உடன் இணைக்கப்படும். இதன் தொழிற்பாட்டால் tumer உருவாகும். இத் தொழில் நுட்பமே பிறப்புரிமை பொறியியல் துறையில் பயன்படுத்தப்படுகின்றது. இங்கு Plasmidகளை bacteria கலங்களில் இருந்து வேறாக்கப்பட்டு காவிகளாக (vector) பயன்படுத்தப்படுகின்றது.

பிறப்புரிமை பொறியியல் பின்வரும் பொதுவான படிமுறைகளைக் கொண்டு நிகழ்த்தப்படுகின்றது.

- மாற்றியமைக்கப்பட வேண்டிய / கருத்திற் கொள்ளப்படும் gene அல்லது DNA பாகம் (foreign gene / DNA Fragment ) வழங்கி உயிரியில் (Donor organism) இருந்து நொதியங்களின் உதவியுடன் வேறாக்கப்படும்.
- தகுதியான காவி (plasmid) தெரிவு செய்யப்பட்டு நொதியங்களின் உதவியுடன் வெட்டி திறக்கப்பட்டு T.DNA பகுதி அகற்றப்பட்டு அதற்கு பதிலாக தேவையான gene (target gene / Foreign gene / DNA fragment) இணைக்கப்படும்.
- பின்னர் இக்காவி விருந்து வழங்கி கலத்தினுள் (host cell) தொற்றுதலடையச் செய்யப்படும்.
- இக் காவி மாற்றியமைக்கப்பட்ட புதிய gene ஐ (foreign gene) விருந்து வழங்கியின் genome / Chromogeme உடன் இணைத்து விடுவதன் மூலம் புதிய gene இன் தொழிற்பாடு விருந்து வழங்கியில் (host) வெளிப்படுத்தப்படும் (expression).

தற்போது காவிகளாக (vectors) சிறப்பாக தொகுக்கப்பட்ட plasmid கள், bacteria phage எனப்படும் virus, மதுவத்தில் இருந்து பெறப்படும். YAC காவிகள் (YAC-Vectors) செயற்கையாக தொகுக்கப்பட்ட Plasmid கள் (synthetic plasmids) என்பன பயன்படுத்தப்படுகின்றன. இத் தொழில் நுட்பத்தின் அடிப்படையில் பிறப்புரிமைப் பொறியியல் முறையினால் உருவாக்கப்பட்ட நுண்ணங்கிகள் மூலம் மருந்துகள் (Drugs & Pharmaceuticals), ஓமோன்கள், புரதங்கள் என்பவை வர்த்தகரீதியில் உற்பத்தி செய்யப்படுகின்றது. மனித குருதியமைப்பிற்கு பொறுப்பான gene களை மாற்றீடு செய்வதன் மூலம் பெறப்பட்ட விலங்குகளில் (Transgenic animals) இருந்து மனித குருதி (human blood) பெறப்பட்டு இரத்த வங்கிகளில் சேமிக்கப்படக் கூடியதாக உள்ளது. கால் நடைகளின் பாலில் மனித அத்தியாவசிய புரதங்களை உருவாக்கி பெறக்கூடியதாக உள்ளது. மேலும் gene களை சிறப்பாக கையாளுவதன் மூலம் நோய் விளைவிக்கும் நுண்ணங்கிகளின் தாக்கத்திற்கெதிரான தடைப்பால் (vaccines) தயாரிக்கப்படுகின்றது. இவ்வகையான மனிதனிற்கு தேவையான vaccineகளை உண்ணத்தக்க பழங்களிலும் தோற்றுவிக்கக் கூடியதாக உள்ளது. தற்போது பூங்காவியல் துறையிலும் (Floriculture) பிறப்புரிமைப் பொறியியல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் பலவிதமான பூக்களின் நிறங்களை மாற்றக் கூடியதாகவும், புதிய நிறபூக்களை வெளியில் இருந்து வேறு gene (Foreign gene) இணைக்கப்படுவதன் மூலம் பெறக்கூடியதாகவும், பூக்களின் வடிவங்கள் (shape) மாற்றக் கூடியதாகவும் உள்ளது. தற்போது அவுஸ்ரேலியா போன்ற நாடுகளில் நீல, கறுப்பு நிற 'ரோசா பூக்களை தோற்றுவிக்கும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தக்காளி போன்ற விரைவில் சிதைவடையும்/ பழுதடையும் பழங்களை நீண்ட காலத்திற்கு வைத்திருக்க கூடிய நிலைக்கு மாற்றுதல் செய்யக்கூடியதாகவும் உள்ளது. சூழல் பாதுகாப்பு துறையிலும் பிறப்புரிமை பொறியியல் துறை கால் பதித்துள்ளது, கைத்தொழில் துறை விவசாயத்துறை மற்றும் பல இன்னோரன்ன துறைகளில் பக்க விளைவாக தோன்றும் இயற்கையல்லாத இரசாயனங்கள் (Xenobiotic Chemicals) சூழல் சுமைகளாக காணப்படுவதோடல்லாது பல


பாதகமான விளைவுகளையும் சூழலில் ஏற்படுத்துகின்றன. இவ்வாறான இரசாயனங்களை பிரிந்தழியச் செய்யக்கூடிய தன்மை நுண்ணங்கிகளில் குறிப்பாக *Pseudomonas* போன்ற *bacteria* களில் காணப்படுகின்றன. இவ்வாறான *bacteria*களில் இவ்வியல்பிற்கு பொறுப்பான *gene* கள் அவற்றின் *Chromosomal DNA* இல் அல்லது *Plasmid DNA* இல் காணப்படலாம்.

எனினும் குறித்த ஒருவகை *bacteria* ஒரு அல்லது சில இரசாயங்களை பிரிந்தழியச் செய்யக் கூடிய *gene*களையே கொண்டிருக்கும். முதன் முதலில் 1970 இல் *Chankrabarty* உம் அவரது உதவியாளர்களும் பல இரசாயனங்களை பிரிந்தழியச் செய்யக் கூடிய பல *plasmid* கள் ஒரே *bacteria* இல் அமையத்தக்கதாக - இணைதல் *(fusion)* முறையில் *"Super bug" bacteria*களை உருவாக்கினர். தற்போது உயிரியல் தொழிநுட்ப முறைகளைப் பயன்படுத்தி பல பிரிந்தழிகைக்குரிய *plasmid gene*கள் குறித்த ஒரு பற்றீரியாவிற்குள் அறிமுகம் செய்யப்பட்டு *gene* மாற்றியமைக்கப்பட்ட பற்றீரியாக்கள் *(transgenic bacteria*க்கள்) உருவாக்கப்படுகின்றன. எனவே தனி ஒரு வகை *bacteria* பல இரசாயனங்களை பிரிந்தழிய செய்யக்கூடிய நிலைக்கு மாற்றியமைக்கப்படுவதால் சூழல் பாதுகாப்பில் இவை பெருமளவில் தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

உயிரினங்கள் பாகுபடுத்தல், இனங்களை *(Species)* வேறுபடுத்தல், தனியன்களை வேறுபடுத்தி இனம் காணல் போன்ற உயிரியல் பாகுபாட்டு துறையில் *(Toxonomy) DNA* தொழில் நுட்பம் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இது *DNA* விரல் அடையாளம் *(DNA -finger printing)* எனப்படுகின்றது. இது பின்வரும் செயன்முறை படிகளைக் கொண்டது.

- *DNA* தனிப்படுத்தப்படல் - உயிரியின் கலத்தில் இருந்து *DNA* வேறாக்கப்படல்.
- நொதியங்களை *(Restriction enzymes)* பயன்படுத்தி *DNA* சங்கிலி துண்டுகளாக்கப்படும். இதற்கு *Ecor I, Ecor II, Sam I, Sam II* போன்ற பல்வேறு நொதியங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

  ஒரு குறித்த நொதியம் ஒரு குறித்த உயிரியின் *DNA* இல் ஒரு குறித்த வெட்டும் ஸ்தானங்களை *(Cutting sites)* கொண்டுள்ளதால் குறித்த எண்ணிக்கையான *DNA* துண்டங்கள் *(DNA -fragments)* பெறப்படும்.
- பெறப்பட்ட *DNA* துண்டங்கள் *(DNA fragments)* சாயமூட்டப்பட்டு *Agarose gel* இல் குறித்த மின்னழுத்தத்தை பயன்படுத்தி ஓட விடப்படும். இச் செயன்முறை *Electrophorosis* எனப்படும். சிறிது நேரத்தின் பின் *gel* ஐ அவதானிப்பின் சிறிய *DNA* துண்டுகள் சேய்மையாகவும் பெரிய *DNA* துண்டுகள் அண்மையாகவும் இருக்கத்தக்கதாக ஒழுங்கு படுத்தப்பட்டிருப்பதைக் காணலாம்.




பயன்படுத்தப்பட்ட *Restriction enzyme Ecor I* எனின் *A,B,C,D,* ஆகிய வெவ்வேறு வகைகளில் *DNA sequences* வேறுபடுவதால் வேறுபட்ட துண்டங்களை *(DNA Fragments)* உருவாக்கும். எனவே அவை அசையும் ஸ்தானங்கள்

வேறுபடும். மேற்கூறிய உதாரணத்தில் வகை A, வகை C என்பன ஒரு வகையானவை என முடிவு செய்யலாம். காரணம் ஒரேயளவான துண்டங்கள் பெறப்பட்டுள்ளன. ஆனால் A,B,D வேறுபட்ட வகைகளாகும். Ecor I போன்ற வேறு பல வெவ்வேறு வெட்டும் ஸ்தானங்களை (cutting sites) கொண்ட நொதியங்களை பயன்படுத்தி மேற்குறித்த Electrophorosis செயன்முறைக்கு உட்படுத்துவதன் மூலம் A,C ஒரே வகைக்குரியவை, A,B,D வேறுபட்ட வகைக்குரியவை என்பதை மேலும் உறுதிப்படுத்தலாம். இவ்வகையான DNA -Finger printing தொழில் நுட்பம் சட்ட வைத்தியத்துறையில் பெருமளவில் உலகளாவிய ரீதியாக பயன்படுத்தப்படுகின்றது. முதன் முதலில் இரு கற்பழிப்பு கொலை வழக்கில் கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட இரு பெண்களினதும் இனப் பெருக்க உறுப்பில் காணப்பட்ட விந்து கலங்களை கொண்டு Alec Jeffreys என்பவரால் இரு கொலைகளும் ஒரு நபராலேயே செய்யப்பட்டது என நிரூபிக்கப்பட்டது. அதுமுதல் இன்று உலகளாவிய ரீதியில் கற்பழிப்பு வழக்குகள், குடும்ப உறவு தொடர்புகளை நிர்ணயிக்கும் வழக்குகளிலும் உட்பட பல மருத்துவ சட்டதுறைகளில் சக்திவாய்ந்த நிரூபிக்கும் சான்றாக இத் தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டுவருகின்றது.

DNA / DNA கலப்புப் பிறப்பாக்கம் (DNA - hybridization) பெருமளவில் கூர்ப்பு வழிப்பாதைகளை (Evolutionary pathways) பரிசோதிப்பதற்கும் பயன்படுத்தப்படுகின்றது. DNA தொடர்பைக் கொண்டு அங்கிகளிற்கிடையேயான கூர்ப்புத் தொடர்பை நிர்ணயித்து அதன் மூலம் நிரூபிக்கத்தக்க தெளிவான கூர்ப்பு வழிப்பாதைகள் அமைக்கப்பட்டு கூர்ப்பு விஞ்ஞானம் தெளிவுபட வழிவகுக்கின்றது.

நவீன விவசாய, மருத்துவ துறைகளின் வெற்றி தங்கியிருப்பது அவற்றுடன் தொடர்புள்ளவர்கள் இத்துறையில் பாதிப்பை ஏற்படுத்தும். வைரசுகள், பற்றீரியாக்கள், பங்கசுக்கள், ஒட்டுண்ணிகள், புரதங்கள், சிறிய மூலக்கூறுகள் (மனிதன், தாவரம், விலங்குகள், நீர், மண் போன்றவற்றில் காணப்படும்.) ஆகியவற்றை இனங்காணக் கூடியதிலாகும். தெளிவான இனங்காணலை தொடர்ந்தே அப்பாதிப்பிற்குள்ளானதைத் தடுத்தல், பராமரித்தல் சிகிச்சை செய்தல் என்பவை வெற்றியளிக்கக் கூடியதாக அமையும். இந்தவகையில் தற்போது மூலக்கூற்றியல் இனங்காணல் முறைகள் (Molecular diagnostics procedures) பயன்படுத்தப்படுகின்றன. இவை நீர்ப்பீடனவியல் சார்ந்ததாக (immunological) அல்லது DNA கண்டுபிடிப்பு முறைகளாக (DNA detection methodologies) அமைகிறது. இவ் இனங்காணல் முறைகளின் மூலம் மிகத் தெளிவான, உறுதியான முடிவுகள் பெறக்கூடியதாக உள்ளது. எனவே இத்துறைகளில் DNA தொழில்நுட்பம் மிகவும் வரப்பிரசாதமாக உள்ளது எனலாம்.

உயிரியல் தொழிநுட்பத்தில் மரபணு சிகிச்சையின் (Gene therapy) புதிய பரிணாமமாக அண்மையில் ஸ்கொட்லாந் தில் இயல் வில்மட் உயிரியலாளரின் தலைமையில் செயற்பட்ட குழுவினரால் வழமையான ஆண், பெண் புணரிக் கலங்களின் சேக்கையில்லாது ஆரம்ப நிலைக் கரு கலம் ஒன்றையும் செம்மறி ஒன்றின் பால் சுரப்பிக் கலம் ஒன்றையும் இணைத்து உடற்கல கலப்பு பிறப்பாக்கம் (Somatis hybridization) மூலம் செம்மறி ஆடு ஒன்று பிறக்கச் செய்யப் பட்டுள்ளது. வழமையில் கருப்பையில் ஆண் விந்து பெண் சூலுடன் இணைந்து கருக்கட்டலின் மூலம் உருவாகும் நுகக் கலம் பிரதிபண்ணி பல்கிப் பெருகுவதால் ஒரு உயிர் தோற்றுவிக்கப்படுகின்றது. ஆனால் மேற்குறித்த முறை தாவரங்களில் செய்யப்படும் பதிய முறை (Cloning) இனப்பெருக்க செயன்முறைக்கு ஒப்பானதாக காணப்படுகின்றது. இம்முறை மூலம் எந்தவித அமைப்பு மாற்றம் இன்றி தாய்/தந்தை விலங்கின் ஒத்த அமைப்புடைய வழித்தோன்றல் களை உருவாக்க முடியும். அத்துடன் கூர்ப்பு வழிபாதையில் அமைப்பறிந்து மறைந்து கொண்டு செல்லும் உயிரினங்களையும் தொடர்ந்தும் நிலைப்படுத்தும் விஞ்ஞான முன்னேற்ற யுகம் எதிர்காலத்தில் தோன்றலாம்.

இந்த வகையில் புதுப்புது தாவர, விலங்கினங்களை உருவாக்குதல், பிறவிக் கோளாறுகளிற்கு சிகிச்சை, நீரழிவு போன்ற பரம்பரை நோய்களிற்கு தீர்வு காணல், உணவு பற்றாக்குறைக்குத் தீர்வு எயிட்ஸ், புற்றுநோய் போன்ற நிரந்தர உயிர் கொல்லி நோய்களிற்கு தீர்வு, சிக்கலான குற்றங்களை துப்பு துலக்குதல், பிறவிக் கோளாறுகளிற்கு சிகிச்சை, தேவைக்கேற்ப தாம் விரும்பும் அம்சங்களுடன் கூடிய குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளல் வயோதிபத்தை தள்ளிப் போடுதல்.... என இத்துறை விருத்தியடைந்து வியாபித்துக் கொண்டு சென்று கொண்டிருப்பதால், ''ஜுராசிக் பாக்'' 'ஸ்பைடர் மான்'' (Spider man) போன்ற ஆங்கில பட கற்பனை வடிவங்கள் கூட புதிய பல்வேறின வடிவ உயிரினங்களை தோற்றுவிக்க உதவும் இந்த DNA தொழில் நுட்பத்தால் எதிர்காலத்தில் நிஜவடிவங்களாக மாறக்கூடிய காலம் வெகு தொலைவில் இல்லை.

இளங்கதிர் சஞ்சிகை வளமுடன் மலர்ந்து மணம்பரப்ப


எமது நல்வாழ்த்துக்கள்

# து.சதாசிவம் அன் சன்ஸ்

**வவுனியா வடக்கு**

# இளைய தலைமுறைச்

## சிறப்புப்பகுதி



ஓவியம் : இ. ருஷாந்தன்
விலங்கு மருத்துவ பீடம்

நல்வாழ்த்துக்கள்

**SRI AMMUTHAS**

**GOLD HOUSE**

N0.5, Jaffna Road
Vavuniya
T.P. 024 - 22481

**THE VAVUNIYA COMMUNICATIONS**

N0.5, Jaffna Road
Vavuniya
Local Calls I.D.D Calls, Fax
Photocoping Laminating
T.P. 024 - 22481, : 024-22645
Fax : 22481

With Best Compliments

From

**VinayaGar Traders**

26, B, Mannar Road
Vavuniya.

இளங்கதிர்
வளமுடன் திகழ
நல்வாழ்த்துக்கள்

With Best Compliments

From

**New Empire Bakery**
**Mr. L.S. Karunakaran**

N0. 58B, Trinco Road
Batticaloa.

With Best Compliments

From

**Summer Group**

17, Central Road
Batticaloa.
T.P. 065 - 2687.

*''இளைஞர் பற்றிய நமது சித்தரிப்பில் முக்கிய இடம் பெற வேண்டுவது இளைஞர் பற்றி நமது சமூகம் கொண்டுள்ள எதிர்பார்ப்பு ஆகும். நமது சமூக அமைப்பில் இளைஞர்களின் முன்னேற்றம் மூலமாகவே குடும்பத்தின் முன்னேற்றம் ஏற்படுவதாகக் கொள்ளப்படுகின்றது. இதனால் இளைஞர்களின் குடும்பப் பொறுப்புக்கள் நமது சமூக சிந்தனையில் முக்கிய இடம் பெறுவதை அவதானிக்கலாம்.''*

# இளைஞர் ''பண்பாடு'' சில குறிப்புகள்

கார்த்திகேசு சிவத்தம்பி, முதுதமிழ்ப் பேராசிரியர்

சமூகத்தின் ஒரு முக்கிய குழுமமாக இளைஞரைக் கொள்ளும் பண்பு கடந்த முப்பது வருடங்களாக மேற்கத்தைய சமூகவியல் ஆய்வுகளில் காணப்படுகின்றது.

1967 இல் பிரான்சில் ஏற்பட்ட இளைஞர் எழுச்சி, அந்த எழுச்சி கோரிநின்ற தளமாற்றம் (radicalism) ஐரோப்பிய, வடஅமெரிக்க அறிவுலகை ஒருகலக்குக் கலக்கிற்று.

இதுமாத்திரமல்லாது 1960 களில் தோன்றிய ஹிப்பியசம் (Hippyism), புதிய இளந்தலைமுறை, முதலிய பரம்பரையின் வாழ்க்கை எடுகோள்களை முற்றிலும் நிராகரித்தது என்பதைக் காட்டிற்று. அக்காலத்து அரசியல் ஆதிக்க இறுக்கங்களை எதிர்க்க முடியாத ஒரு இளைஞர் குழாம், போதைப் பொருள் நுகர்வை இளைஞர் பண்பாட்டின் ஓரம்சமாக்கிற்று. இதனால், அந்த இளைஞர் பண்பாட்டை முற்று முழுதாகக் கண்டிக்கும் ஒரு மனோபாவம் வளர்ந்தது.

உண்மையில் ஹிப்பியிசம் என்பது 1960 களில் ஏற்பட்ட இளைஞர் எழுச்சியின் ஒரு விரசமான செல்நெறியேயாகும். அந்த இளைஞர் எழுச்சி சில ஆக்கபூர்வமான வளர்ச்சிகளுக்குக் காலாகவிருந்தது. அக்காலத்தில் தோன்றிய புதிய இசைமரபினை இதற்கு உதாரணமாக எடுத்துக் கூறலாம். ''ரொக்'' (Rock) இசை எனப்படும் இசை இக்காலத்தில் தோன்றியதே. இதன் பிரதான வெளிப்பாட்டுக்கலைஞர்களாக பீட்டிள்ஸ் (Beatles) இசைக்குழுவினர் அமைந்தனர். இந்த இசை இணக்கத்தை ''புதிய ஒலிகள்'' (New Sound) என்றனர்.

இந்தக் காலகட்டத்திலேதான் தலைமுறை இடைவெளி (The Generation gap) எனும் தொடர் வழக்கில் வந்தது. இது ஒருமுக்கிய சமூகவியற் கருதுகோளாகும்.

1960 களில் ஏற்பட்ட புதிய அரசியல், தொழில்நுட்ப மாற்றங்கள் தந்த சமூக அனுபவங்களுக்கும் அதற்கு முந்திய சமூக அனுபவங்களுக்கிடையேயும் பலத்த வேறுபாடுகள் காணப்பட்டன. இதனை ''முதல்'' தலைமுறை உணர்ந்துகொள்ளவில்லை. இதனால், 1960 களில் தோன்றிய இளைஞர்களின் புதிய உணர்வுகளை அக்காலத்து முதிய தலைமுறையினரால் விளங்கிக் கொள்ள முடியவில்லை.

ஐரோப்பிய அரசியல், சமூக ஒழுங்கமைப்பு நிலவிய முறைமையில், 1960 களில் தோன்றிய இளைய தலைமுறை, அதற்கு முந்திய தலைமுறையினரின் சமூக ஒழுங்குமுறைமைகளை முற்றிலும் நிராகரித்தது. விசுவாசம் போன்ற சமூக நிறுவனங்களிற் பெருமாற்றம் ஏற்பட்டது.

அரசியலில் வியட்நாமியப் போர் எதிர்ப்பு இந்த இளம் தலைமுறையின் தாரகமந்திரமாயிற்று. அமெரிக்காவின் வியட்நாமியத் தலையீட்டுக்கெதிரான எழுச்சியின் சிலமுக்கிய அரசியற் கருதுகோள்கள் காணப்பட்டன. ஏகாதிபத்திய எதிர்ப்பு, ஒடுக்குமுறை எதிர்ப்பு என்ற கோஷங்கள் இதன் உட்கிடக்கையாகக் கிடந்தன.

இந்தப் போக்கு மூன்றாவது உலகநாடுகளுக்கும் பரவத் தொடங்கிற்று. இலங்கை ஒரு முக்கியமான உதாரணமாகிற்று.

1970 களின் ஆரம்பத்தில் சிங்கள மக்களிடையே ஓர் இளைஞர் எழுச்சி காணப்பட்டது. ஜாதிக விமுக்தி பெரமுன என்பது இவ் எழுச்சியின் அரசியல் வெளிப்பாடாகும். இது சிங்கள மக்களின் அரசியற் சிந்தனைப் போக்கில் பெருமாற்றத்தை ஏற்படுத்திற்று.

1970 களிலும் அதன்பின்னரும் மேற்கிளம்பிய அரசியற் செல்நெறிகள் இந்த இளந்தலைமுறையினரைப் பொதுவான அரசியல் நீரோட்டத்தினுள்ளே கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டன எனலாம்.

1970 இல் இலங்கைத் தமிழரிடையேயும் தனமாற்றவாத இளைஞர் குழுக்கள் தோன்றின. நீண்ட காலமாகத் தீர்க்கப்படாதிருந்த தேசிய இனப்பிரச்சினையில் இந்தத் தீவிர இளைஞர் இயக்கங்கள் முக்கிய இடம் பெறத் தொடங்கின. இதனால் இலங்கை வரலாற்றில் அதற்கு முன்னர் காணப்படாத மாற்றங்கள் ஏற்பட்டன.

இலங்கைத் தமிழரைப் பொறுத்தவரையில் 1980 களில் நிலவிய மாணவர் இயக்கத்தின் வரலாறு முக்கியமானதாகும். அந்த வரலாற்றிலும் இளைஞர் பங்கு முக்கியமானதாகும்.

1950 களில் தமிழ் நாட்டில் திராவிட முன்னேற்றக்கழகம், தனது தளமாற்ற வாதக் கோஷங்கள் மூலம் அந்தக்காலத்துத் தமிழகத்து இளைஞரிடையே முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்திற்று. மு.கருணாநிதி, கண்ணதாசன் போன்றோர் அந்த இயக்கத்தின் அறுவடைகளே.

இவ்வாறு நோக்கும் பொழுது தமிழிலும் ''இளைஞர் பண்பாடு'' என ஒரு செல்நெறியை இனங் காணக் கூடியதாகவுள்ளது.

இந்த இளைஞர் பண்பாடு அரசியல் முதல் பண்பாட்டுத் துறைகள் வரை சகல நடவடிக்கைகளிலும் தனது முத்திரையைப் பதித்துள்ளது.

இவ்வாறு இளைஞர் பண்பாடு பற்றிய வரலாற்று அம்சங்களை நோக்கும் பொழுது, அது தமிழ்ப்பண்பாடு இளைஞரை எவ்வாறு நோக்கி வந்துள்ளது என்பது ஒரு முக்கியமான வினாவாகும். பொதுவான இந்தியப் பண்பாட்டிற் காணப்படுவது போன்று (இது உலகப் பொதுவான ஒரு பண்பும் ஆகும்) தம்மிடையேயும் முதுமை என்பது அநுபவ முதிர்ச்சியையும் குறிக்கின்ற ஒன்றாகவே இருந்து வந்துள்ளமையைக் காண்கின்றோம்.

துரிதகதியில் ஏற்படும் விஞ்ஞான மாற்றங்கள், தொழில் நுட்பமுன்னேற்றங்கள், முதுமையின் அனுபவ முதிர்ச்சிக்குச் சவால் விடுகின்றன. சமூக அனுபவ வேகம் துரிதப்பட தலைமுறை இடைவெளி ஏற்படுவது இயல்பாகின்றது.

இந்தத்தலைமுறை இடைவெளியின் தன்மையினை விளங்கிக் கொள்ளல் வேண்டும்.

இளைஞர் பற்றிய நமது சித்தரிப்பில் முக்கிய இடம் பெற வேண்டுவது இளைஞர் பற்றி நமது சமூகம் கொண்டுள்ள எதிர்பார்ப்பு ஆகும். நமது சமூக அமைப்பில் இளைஞர்களின் முன்னேற்றம் மூலமாகவே குடும்பத்தின் முன்னேற்றம் ஏற்படுவதாகக் கொள்ளப்படுகின்றது. இதனால் இளைஞர்களின் குடும்பப் பொறுப்புக்கள் நமது சமூக சிந்தனையில் முக்கிய இடம் பெறுவதை அவதானிக்கலாம்.

இன்றைய இளைஞர் நாளைய முதியோன் என்பதும் இன்றைய முதியோன் நேற்றைய இளைஞன் என்பதும் மனத்திருத்தல்பட வேண்டிய உண்மைகளாகும்.

இளமை அதன் எதிர்பார்ப்புகளில் அதன் இலட்சியங்களில் வாழ்கிறது. முதுமை அதன் அனுபவங்களுடன் கிடக்கிறது. இது ஒரு பொதுவான உலக நியதி.

*''இளந்தலைமுறையினரின் வாழ்க்கையில் அமைதியின்மையும் விரக்தியும் வன்செயல்நாட்டமும் தடுமாற்றமும் பெருகுகின்றன. இத்தகைய நிலையில் நல்லதன் நலனும் தீயதன் தீமையும் ஓர்ந்துணர்ந்து விழுமிய அம்சங்கள் வாழ்க்கையில் மேலோங்கவும் எதிர்கால வாழ்வில் பிடிப்பும் நம்பிக்கையும் ஏற்படவும் ஏற்றவகையிற் கலை-இலக்கியங்கள் வளர்த்தெடுக்கப்பட வேண்டியது அவசியமாகும். அவ்வகையில் இளைஞர்களின் பங்கும் மிக முக்கியமானதாகும்.''*

# இளந்தலைமுறையினரும் கலை இலக்கிய ஈடுபாடும்

கலாநிதி க.அருணாசலம், தலைவர், தமிழ்த்துறை

ஒரு சமூகத்தின் அச்சாணி போன்றவர்கள் இளம்பருவத்தினராகிய ஆண்களும் பெண்களுமேயாவர். இன்றைய 'இளசுகளே' நாளைய குடும்பத் தலைவன் - தலைவியாகவும் சமூகத்தை முன்னெடுத்துச் செல்லும் பல்வேறு துறைகளினதும் நிறுவனங்களினதும் தலைவர்களாகவும் நாட்டுத்தலைவர்களாகவும் விளங்கப் போகின்றவர்கள். எந்த ஒரு சமூகம் இளந்தலைமுறையினரை மனம்போன போக்கெல்லாம் செல்லவிடுகின்றதோ நன்நெறியில் ஆற்றுப்படுத்தத் தவறுகிறதோ போர் முதலியன காரணமாக அதிக அளவிற் பறிக்கொடுக்கிறதோ அச் சமூகம் சீரழியும்.

இளந்தலைமுறையினர் தறிகெட்டோடும் உணர்ச்சி வேகமும் இளமைத்துடிப்பும் செயலூக்கமும் உடல், உளவலிமையும் கொண்டவர்கள். இத்தகைய இளைய தலைமுறையினரை நன்னெறிப்படுத்தவும் அவர்கள் உள்ளத்தைப் பண்படுத்தவும் அவர்கள் மனிதவிழுமியங்களைப் போற்றிப் பேணவும் உலகினையும் வாழ்வையும் செவ்வனே புரிந்து கொள்ளவும் எதிர்கால வாழ்விற்குப் பலம்வாய்ந்த ஆரோக்கியமான அத்திவாரத்தை இட்டுக் கொள்ளவும் வாழ்க்கை பற்றிய உண்மைகளையும் ஆரோக்கியமான உணர்வுகளையும் படிப்பினைகளையும் தெள்ளிதில் அறிந்துகொள்ளவும் வாழ்வில் ஏற்படும் வெற்றி தோல்விகளையும் சவால்களையும் இன்பதுன்பங்களையும் மனோபக்குவத்துடனும் மன உறுதியுடனும் எதிர்கொள்ளவும் பிரச்சினைகளுக்கான பரிகாரங்களைக் காணவும் வாழ்வில் ஏற்படும் சோதனைகளைச் சாதனைகளாக்கவும் முதிய தலைமுறையினரின் வழிகாட்டல்களோ சமயப் போதனைகளோ வெறுமனே விஞ்ஞான, தொழில்நுட்ப அறிவோ, செல்வச் செழிப்போ மட்டுமன்றி, கலை - இலக்கிய அறிவும் ஈடுபாடும் மிகமிக அவசியம் என்பதை நாம் மனங்கொள்ளல் வேண்டும்.

'மனித சமுதாயத்தின் எதிர்காலத்தை நிர்ணயிப்பவையான தனிமனித, சமூக பண்பாட்டு ஒழுக்கவிழுமியங்களை உணர்த்த வேண்டிய தேவை இன்று மிகுதியாக உள்ளதென்பதையும் அக்காரியத்தை இலக்கியத்தினால் துல்லியமாகவும் செவ்வையாகவும் செய்ய முடியும் என்பதையும் வலியுறுத்துவது பொருந்தும்' என அறிஞர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

மானுடத்தின் மகோன்னத இயல்புகளை வெளிப்படுத்தி நிற்கும் சிறந்த கலை இலக்கியங்கள் சமூகத்தைச் செப்பனிடவும் பண்பட்டதொரு சமூகத்தை உருவாக்கவும் உதவுகின்றமை மனங்கொளத்தக்கது. மக்களிடத்தே மானிட நேயத்தை வளர்த்தெடுப்பதில் கலை - இலக்கியங்கள் முக்கிய பங்கினை வகிக்கின்றன. ''ஆடுதல், பாடுதல் சித்திரம் கவியாதியினைய, கலைகளில் உள்ளம் ஈடுபட்டென்றும் நடப்பவர் பிறர் ஈனநிலை கண்டு துள்ளுவார்'' என யுகப் பெருங்கவிஞன் பாரதியார் பாடியுள்ளமையும் சிந்திக்கத்தக்கது.

விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றங்களினால் மனிதனின் புறவாழ்க்கை அதிக அளவு வசதிகளையும் வாய்ப்புகளையும் பெற்றுள்ளது என்பதில் ஐயமில்லை. ஆயின் மனிதனது அக வளர்ச்சிக்குக் கலை இலக்கியங்களே மிகமிக இன்றியமையாதன என்பதனை இன்றைய உலக நிழ்ச்சிகள் பலவும் திரும்பத்திரும்ப மெய்ப்பித்து நிற்றலை அவதானிக்கலாம். விஞ்ஞான தொழில்நுட்பத்துறைகள் மெத்தவும் வளர்ந்துள்ள மேலைநாடுகளிலேயே மனநோயாளிகளின் தொகையும் வாழ்க்கையில் வெறுப்புற்றுத் தற்கொலை செய்துகொள்வோரின் தொகையும் அதிகரித்துக் காணப்படுகிறது. நெருக்கடிகள் மிகுந்ததும் இயந்திரமயமாகிக் கொண்டிருப்பதுமான இன்றைய உலகில் போட்டியும் பொறாமையும் காமக்குரோதங்களும் பரபரப்பும் சிக்கல்களும் முரண்பாடுகளும் அமைதியின்மையும் மலிந்து காணப்படுகின்றன.

வாழ்க்கை பற்றிய சிக்கல்களையும் அதன் நெழிவுசுழிவுகளையும் ஏற்ற இறக்கங்களையும் உண்மைகளையும் விஞ்ஞான தொழில் நுட்பத் துறைகளிலும் பார்க்கக் கலை-இலக்கியங்களே அன்று தொட்டு இன்றுவரை மிக அதிக அளவில் உணர்த்தி நிற்கின்றன என்னும் நிதர்சனத்தை நாம் சற்றே சிந்தித்துப் பார்த்தல் அவசியம்.

ஒருவனிடம் எவ்வளவுதான் புத்திக்கூர்மை இருந்தாலும் மிதமிஞ்சிய உழைப்பு இருந்தாலும் அவனிடம் மனிதத்தன்மை - மானிடநேயம் இல்லாதுவிடின் அவன் மனிதனாகமாட்டான்.

**''பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்; அதுஇன்றேல்**
**மண்புக்கு மாய்வது மன்''** எனவும்,

**''அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்**
**மக்கட்பண்பு இல்லா தவர்.''** எனவும் வள்ளுவர் கூறியுள்ளமை மனங்கொளத்தக்கது.

ஓர் இனத்தின் நனிநாகரிகத்தையும் அது போற்றும் விழுமியங்களையும் மரபுகளையும் அதன் கருத்தோட்டங் களையும் இலட்சியங்களையும் விருப்பு வெறுப்புகளையும் யதார்த்த நிலையையும் கலை-இலக்கியங்களே வெளிப்படுத்துகின்றன.

கலை-இலக்கியங்களில் ஈடுபாடு கொள்ளுவோர் அவற்றைப் படித்தல், சுவைத்தல், உண்மைகளையும் படிப்பினை களையும் உணர்ந்துகொள்ளுதல், ஆராய்தல், விமர்சித்தல் தாமே இலக்கியங்களையும் பிறகலைகளையும் படைத்தல் எனப் பல நிலைகளில் நின்று செயற்படலாம். இலக்கியங்களைப் படைப்போர் மனிதநேயம் மிக்கவராகவும் சமத்துவமும் நீதியும் நிறைந்த சமூகத்தை - கிருதயுகத்தைக் காணத்துடிப்பவராகவும் தாம் வாழும் சமுதாயத்திற் பற்றி எரிந்து கொண்டிருக்கும் பிரச்சினைகளைக் கூர்ந்து நோக்கி, அலசி அவற்றுக்கான அடிப்படைகளை இனங்கண்டு காட்டி, அவற்றைத் தீர்ப்பதற்கான மார்க்கங்களையும் கலைத்துவம் குன்றாவகையில் விண்டுகாட்டுபவராகவும் விளங்குதல் அவசியமாகும்.

இலக்கியம் படைப்போர் தாம் எந்த மொழியில் அதனைப் படைக்க விரும்புகின்றாரோ அம்மொழியிலே குறைந்தபட்சப் புலமையாவது பெற்றிருந்தல் அவசியமாகும். கற்றறிந்த முதிய தலைமுறையினர் பலர் அடிக்கடி சுட்டிக்காட்டும் ஒரு குறைபாடு 'இளைய தலைமுறையினர் மத்தியில் வாசிப்புப் பழக்கம் போதிய அளவு காணப்படவில்லை, தமது மொழியாற்றலை வளர்த்துக் கொள்வதிலும் ஆர்வம் காட்டுவதில்லை' என்பதேயாகும். ஆங்கிலம் முதலிய பிறமொழிகளிற் புலமைபெறாவிடினும் சகித்துக் கொள்ளலாம். ஆயின் தமது தாய்மொழியையே செம்மையாகப் பயன்படுத்தத் தெரியாது இளைய தலைமுறையினர் பலர் திண்டாடுகின்றனரே என முதியவர்கள் பலரும் அங்கலாய்க்கின்றனர்; தாய்மொழியைப் பிழையின்றிச் செம்மையாகவும் ஆற்றலுடனும் பயன்படுத்தத் தெரியாதவர்கள் மத்தியிலிருந்து எவ்வாறு தரமான எழுத்தாளர்களும் கவிஞர்களும் தோன்ற முடியும் எனவும் வினா எழுப்புகின்றனர். கலை இலக்கியங்களில் ஈடுபாடு கொள்ளும் இளைய தலைமுறையினர் இவற்றையும் மனங்கொளல் அவசியமாகும்.

நவீன யுகத்தில் வாழ்க்கை செம்மையுற அமைய வேண்டுமானால், ஒருபுறம் விஞ்ஞான, தொழில்நுட்ப முன்னேற்றம்; மறுபுறம் கலை-இலக்கிய ஈடுபாடும் அதன் வளர்ச்சியும், இரண்டும் இணையவேண்டியதவசியமாகும். கலை இலக்கிய ஈடுப்பாட்டினால் இளந்தலைமுறையினர் தமது உள்ளத்தையும் வாழ்வையும் பண்படுத்திக் கொள்ளலாம். அதே சமயம் அவர்களது ஈடுபாட்டினாலும் முயற்சியினாலும் கலை-இலக்கியங்களும் மேன்மேலும் வளர்ச்சியடையும்.

எமது பண்டைய கலை-இலக்கியங்களினதும் மொழியினதும் பெருமைகளை வெறுமனே பன்னிப் பன்னிக் கூறிக் கொண்டிருப்பதில் ஆக்கபூர்வமாக எதுவும் விளையப் போவதில்லை. எமது மொழியையும் கலை-இலக்கிய முயற்சிகளையும் இருபத்தோராம் நூற்றாண்டுக்கு ஏற்றவகையில் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். ''தனித்துவம் குன்றாவகையில் நவீனமயமாக்கம் பெறச் செய்தல் வேண்டும். மேலைநாடுகளின் பயன்மிக்க சிறந்த கலை-இலக்கியங்களை மேன்மேலும் சிறந்த முறையில் தாய்மொழியிற் கொணர்தல் வேண்டும். ஒழுங்கு முறையிலமைந்த பொருத்தமான ஒலிபெயர்ப்பு விதிகளைக் கடைப்பிடித்துச் செம்மையான முறையில் மேலைப்புலமொழிகளின் சொற்களைத் தமிழிற் பெயர்த்தல் வேண்டும். இத்தகைய முயற்சிகளில் முதிய தலைமுறையினர் மட்டுமன்றி இளைய தலைமுறையினரும் தீவிர பங்கு கொள்ளுதல் அவசியமாகும்.

அவ்வகையில் அவர்கள் தீவிர கவனத்திற்கொள்ள வேண்டிய முக்கியவிடயங்கள் சிலவற்றை இங்கு தொட்டுக்காட்டலாம்.

தமிழில் கலை-இலக்கியங்கள் என்றதும் மிக நீண்ட கால வரலாற்றைக் கொண்ட தமிழகக் கலை-இலக்கியங்களையே பலரும் மனங்கொண்டு வந்தனர். ஈழத்துத் தமிழ்க் கலை-இலக்கியங்களின் வரலாறும் கிறிஸ்தாப்த காலத்திலேயே ஆரம்பித்துவிட்டதாகக் கூறப்படினும் கி.பி.பதின்மூன்றாம் நூற்றாண்டிலிருந்தே தெளிவானதும் தொடர்ச்சியானதுமான வரலாற்றைக் காண முடிகின்றது. நீண்டகாலம் தமிழகத்துடன் ஈழம் மிக நெருக்கமான உறவினைக் கொண்டிருந்தமையாலும் பிறகாரணங்களாலும் கி.பி.பதினெட்டாம் நூற்றாண்டுவரை ஈழத்துக்கலை-இலக்கியத் துறையில் தமிழகத்தின் மிகுதியான செல்வாக்கு இடம்பெற்று வந்துள்ளது. அதனால் ஈழத்தின் தனித்துவ அம்சங்களைப் புலப்படுத்தும் கலை-இலக்கியங்கள் கி.பி.பதினெட்டாம் நூற்றாண்டுவரை அதிகம் எழவில்லையெனலாம். தமிழகக் கலை-இலக்கியங்களின் தழுவல்களாகவும் அவற்றின் சாயலைக் கொண்டனவாகவும் அதிகமான ஆக்கங்கள் தோன்றின.

ஆயின், கி.பி பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து இத்தகைய போக்கு மெல்ல மெல்ல மாறுதலடையலாயிற்று. குறிப்பாக, ஆறுமுகநாவலர் காலத்திலிருந்து ஈழத்தின் தனித்துவ அம்சங்களைப் புலப்படுத்தும்வகையிலான ஆக்கங்கள் தோற்றம் பெறலாயின. இதனால் ஈழத்துத் தமிழ்க்கலை இலக்கியப் பாரம்பரியத்தின் தந்தையெனஆறுமுகநாவலர் பலராலும் போற்றப்படுகின்றார். நாவலரைத் தொடர்ந்து இற்றைவரை எழுந்த ஈழத்துக் கலை-இலக்கியங்கள் ஈழத்திற்கே பிரத்தியேகமாகவுரிய அம்சங்களையும் பிரச்சினைகளையும் பிரதிபலிக்கும் வகையில் அமைந்துள்ளமை மனங்கொளத்தக்கது. நாவலர் காலத்திலிருந்து ஈழத்தில் உருவாகிவந்த புதிய சூழ்நிலைகளும் ஈழத்துத் தமிழ் பேசும் மக்கள் தமது நிலைப்பாட்டை உணரத்தொடங்கியமை, சுதந்திரத்திற்குப் பிற்பட்ட இலங்கையின் அரசியல், சமூக, பொருளாதாரத்துறைகளில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள், நெருக்கடிகள், முரண்பாடுகள், இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் செயற்பாடுகள், தேசிய இலக்கியக் கோட்பாடு முக்கியத்துவம் பெறத் தொடங்கியமை முதலியன இதற்குக் காரணங்களாகலாம்.

கலை-இலக்கிய ஈடுபாடு கொண்ட இளந்தலைமுறையினர் இத்தகைய வளர்ச்சிப் போக்கை மேன்மேலும் முன்னெடுத்துச் செல்லும் வகையில் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

ஆறுமுகநாவலர் காலத்திலிருந்து இற்றைவரை ஈழத்துக் கலை-இலக்கிய கர்த்தாக்கள், ஆய்வாளர்கள் எனப் பலதிறத்தினரும் எதிர்நோக்கும் பாரிய பிரச்சினை நூல் வெளியீட்டு வசதிக் குறைவேயாகும். ஆய்வாளர்களோ இலக்கிய கர்த்தாக்களோ தாமே நூற் பிரசுர கர்த்தாவாகவும் விநியோகஸ்தராகவும் விளங்கும் பரிதாபநிலை ஈழத்தில் இன்றும் தொடர்கதையாகின்றது. தமிழில் வெளிவரும் சஞ்சிகைகளும் மிக அதிகமானவை அற்ப ஆயுளிலேயே மடிந்துவிடுகின்றன. ஈழத்துக் கலை-இலக்கியங்களின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு இந்நிலைமை பெருந்தடையாக விளங்குகின்றது. இவற்றுக்கான தீர்வு மார்க்கத்தை கண்டு, விரைந்து செயற்படுத்த வேண்டியது மிக மிக அவசியமாகும். இதற்கு இளைய தலைமுறையினரின் பங்களிப்பும் மிக முக்கியமானதாகும்.

இன்றைய உலகில் வணிகமயப்படுத்தப்பட்ட சூழ்நிலை சகலதுறைகளிலும் பெருஞ் செல்வாக்கைச் செலுத்துகின்றது. வைத்தியர்கள் முதல் விஞ்ஞானிகள் வரை, சிறுகதை எழுத்தாளர் முதல் சினிமா நடிகர்கள் வரை, சிறுவர்கள் முதல் முதியோர் வரை ஏழைகள் முதல் செல்வந்தர் வரை எனப் பலதரப்பினரும் வெவ்வேறு வகைகளிற் பாதிக்கப்படுகின்றனர்.

உலகெங்கும் யாந்திரிகமயப்பட்ட வாழ்க்கைமுறை பெருகிவருகின்றது. முதிய தலைமுறையினர் மட்டுமன்றி இளைய தலைமுறையினரும் இவற்றால் வெகுவாகப் பாதிக்கப்படுகின்றனர். இந்நிலையில் இளந்தலைமுறையினரின்

வாழ்க்கையில் அமைதியின்மையும் விரக்தியும் வன்செயல்நாட்டமும் தடுமாற்றமும் பெருகுகின்றன. இத்தகைய நிலையில் நல்லதன் நலனும் தீயதன் தீமையும் ஓர்ந்துணர்ந்து விழுமிய அம்சங்கள் வாழ்க்கையில் மேலோங்கவும் எதிர்கால வாழ்வில் பிடிப்பும் நம்பிக்கையும் ஏற்படவும் ஏற்றவகையிற் கலை-இலக்கியங்கள் வளர்த்தெடுக்கப்பட வேண்டியது அவசியமாகும். அவ்வகையில் இளைஞர்களின் பங்கும் மிக முக்கியமானதாகும்.

நவீனயுகத்திற்கேற்ப எமது கலை-இலக்கியங்கள் வளர்த்துச் செல்லப்பட வேண்டும். எமது சிந்தனைகளும் கருத்துக்களும் செயற்பாடுகளும் அதற்கேற்றவகையில் அமைதல் வேண்டும். 'கணணியுகம்' எனச் சிறப்பித்துக் கூறக்கூடிய அளவிற்கு இன்று உலகம் முழுவதிலும் சகல துறைகளிலும் கணணியின் செல்வாக்கு மேலோங்கி வருகிறது. அதேபோல் சர்வதேச வலைத் தொடர்பியும் **(Inter Net)** வேகமாகச் செல்வாக்குப் பெற்று வருவதை அவதானிக்கலாம். இவற்றையும் நாம் எமது கலை-இலக்கிய வளர்ச்சிக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இந்நிலையில் இவற்றால் எமது கலை-இலக்கியங்களை எவ்வாறு நவீனமயமாக்கலாம்; இவற்றின் உதவியுடன் கலை-இலக்கிய வளர்ச்சியை எவ்வாறு முன்னெடுத்துச் செல்லலாம் என்பன பற்றி நிதானத்துடன் சிந்தித்து அவ்வத்துறைகளில் வல்லவர்களின் உதவியுடன் செயற்பட வேண்டியது அவசியமாகும்.

மேலைநாடுகள் என்பதால், அங்கு வளர்ந்துவரும் கருத்துக்கள், சிந்னைகள் வாழ்க்கை பற்றிய மதிப்பீடுகள், கொள்கைகள் முதலிய எல்லாமே செம்மையான வாழ்விற்கு ஏற்றவை; உகந்தவை எனத்தவறாகக் கருதி அவற்றை உச்சிமேல் வைத்துப் போற்ற வேண்டியதில்லை. கீழை நாடுகள் என்பதால் அவற்றின் கருத்துக்களையும் வாழ்வியற் சிந்தனைகளையும் மதிப்பீடுகளையும் உதாசீனம் செய்ய வேண்டியதுமில்லை. நல்லவை எங்கிருந்து வரினும் அவற்றை ஏற்றுத் தீயவை எங்கிருந்து வரினும் அவற்றைத் தள்ளியுகப் பெருங்கவிஞன் பாரதி காணவிழைந்த கிருதயுகத்தினை நோக்கி, வீறுநடை போடுவோம்; அதற்குக் கலை-இலக்கியங்களையும் ஏற்ற சாதனமாக்குவோம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இலங்கைவாழ் முஸ்லிம் சமூகத்தினரின் மறுமலர்ச்சிக்காக அயராதுழைத்த சித்தி லெவ்வை ஒரு சந்தர்ப்பத்தில் முஸ்லிம் மக்களை நோக்கி, ''எனதருமை முஸ்லிம்களே! நவீனயுகத்திற்கு விரைந்து வாருங்கள். ஆனால் முஸ்லிம்களாகவே வாருங்கள்'' என வேண்டுகோள் விடுத்தார். அவரது இவ்வேண்டுகோள் ஊன்றிநோக்கத்தக்கது. குறிப்பாகக் கலை-இலக்கியத் துறைகளை நவீனமயப்படுத்த விரும்பும் இளைய தலைமுறையினரும் பெண்களின் விடுதலை தொடர்பாக இதய சுத்தியோடு உழைத்து வருபவர்களும் இதுபற்றி ஆழ்ந்து சிந்தித்தல் மிகமிக அவசியமாகும்.

எவ்வளவுதான் நாம் புதுமை காணத்துடித்தாலும் எல்லாவற்றையும் நவீனமயமாக்க விரும்பினாலும் அவற்றால் எமக்குரிய தனித்துவங்கள் அழிந்துவிடக்கூடாது. எமது சமூகத்தின் ஆத்மாவையே ஈவுஇரக்கமின்றி அமுக்கிக்கொல்லும் அளவிற்கு மேலைநாடுகளின் கீழ்த்தரமான சீரழிவுக் கலாசாரத்தையும் வக்கரித்த கொள்கைகளையும் நாம் வலிந்து ஏற்கக் கூடாது.

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகக் கொடூரமான முறையில் அடக்கி ஒடுக்கப்பட்டு அடிமைகளாக்கப்பட்டு ஆணாதிக்கத்துட் சிக்கித் தவித்த பெண்ணினம் இன்று விடுதலைப் பாதையில் வீறுநடை போடத் தொடங்கியுள்ளது. 'பெண்ணியம்' பற்றிய குரல் இளைய தலைமுறையினரிடையே ஓங்கி ஒலிக்கின்றது. சமூகத்தின் செம்பாதியாக விளங்கும் பெண்ணினம், ''உண்டாக்கப் பாலூட்டிச் சீராட்டி வளர்க்கும்'' தாய்க்குலம் விடுதலைபெற வேண்டும்; சமத்துவமாக வாழ வேண்டும் என்பதை மனிதநேயம் கொண்ட எவரும் ஏற்றுக்கொள்வர். இளைய தலைமுறையினர் பெண்விடுதலையின் பொருட்டும் தமது கலை-இலக்கிய முயற்சிகளைப் பயன்படுத்துதல் அவசியமாகும்.

பெண்விடுதலை பற்றிய காத்திரமான சிந்தனைகள் பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து இற்றைவரை தமிழிலக்கியங்களினூடாகவும் வளர்ந்து கொண்டிருக்கின்றன. அதேசமயம் எமதுநாட்டில் மட்டுமன்றி உலகம் முழுவதிலும் வெவ்வேறு அளவிலும் வெவ்வேறு வகையிலும் பெண்விடுதலை பற்றிய குரல்கள் ஒலித்துக் கொண்டிருப்பதையும் அடிக்கடி அனைத்துலகப் பெண்கள் மாநாடுகள் கூட்டப்படுவதையும் மேலைநாடுகளில் பெண்ணியம் தொடர்பான கருத்துக்களும் சிந்தனைகளும் வேகமாக வளர்ந்து வருவதையும் அதிகரித்து வரும் தொடர்பு சாதன வளர்ச்சி காரணமாக அவை உடனுக்குடன் எமது நாட்டிலும் பரவுவதையும் நாம் கவனத்திற்கொள்வது அவசியமாகும்.

தூயகாதலை உயிரெனப் போற்றிப் புகழ்ந்து பாடியவர் பாரதி. தம்வாழ்நாள் முழுவதும் பெண்விடுதலையை ஓங்கி

*ஒலித்தவர். அத்தகையவர் 'விடுதலைக்காதல்' என்ற பெயரில் மேலைநாடுகளில் இடம் பெற்றுக் கொண்டிருந்த காமக்களியாட்டங்களை அறிந்து,*

*''காதலிலே விடுதலையென் றாங்கோர் கொள்கை*
*கடுகிவளர்ந்த திடுமென்பார் யூரோப்பாவில்:*
*மாதரெலாம் தம்முடைய விருப்பின் வண்ணம்*
*மனிதருடன் வாழ்ந்திடலாம் என்பார் அன்னோர்:*
*பேதமின்றி மிருகங்கள் கலத்தல் போலே.*
*பிரியம்வந்தால் கலந்தன்பு; பிரிந்து விட்டால்,*
*வேதனையொன் றில்லாதே பிரிந்து சென்று*
*வேறொருவன் றனைக்கூட வேண்டும் என்பார்.*

*எனக்கடிந்து கூறியுள்ளமை இளைய தலைமுறையினர் ஊன்றி நோக்கத்தக்கதாகும்.*

*பெண்ணியம் பற்றிய மேலைநாடுகளின் சிந்தனைகளை மிக நிதானமாக ஓர்ந்து நோக்கியும் நல்லதொரு குடும்பம், நல்லதொரு சமுதாயம் என்பவற்றை மனதிற் கொண்டும் சுருதிசேர்த்தார்போல் அளவறிந்தும் ஏற்கவேண்டியதை ஏற்றும் தள்ள வேண்டியதைத் தள்ளியும் கடைப்பிடித்தல் இளையதலைமுறையினருக்கு மிக மிக அவசியமாகும்.*

*கடந்த சில தசாப்தங்களாக எம் நாட்டினருள் இலட்சக்கணக்கானோர் பல்வேறு காரணங்களால் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் மேலைநாடுகளுக்கும் புலம் பெயர்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்களுள் ஒரு பகுதியினர் புலம் பெயர்ந்து செல்லும் நாடுகளிலேயே நிரந்தரமாகத் தங்கிவிட மறு பகுதியினர் ''போக்கும் வரவும்'' என்ற நிலையிற் பரிதவிக்கின்றனர். ஒரு பகுதியினர் ஓரளவு வாய்ப்புகளுடனும் வசதிகளுடனும் வாழ மறு பகுதியினர் உலகின் அதலபாதாளத்துத் துன்பங்களையெல்லாம் அனுபவிக்கின்றனர். இன்னொரு பகுதியினர் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாகத் தங்களது முகவரிகளைத் தொலைத்துக் கொண்டிருக்கின்றனர்.*

*''------- ஒரு பதி னாயிரம்*
*சனிவாய்ப் பட்டும் தமிழ்ச் சாதிதான்*
*உள்ளுடை வின்றி உழைத்திடு நெறிகளைக்*
*கண்டுஎனது உள்ளம் கலங்கிடா திருந்தேன்.*
*ஆப்பிரிக் கத்துக் காப்பிரி நாட்டிலும்*
*தென்முனை யடுத்த தீவுகள் பலவினும்*
*பூமிப் பந்தின் கீழ்ப்புறத் துள்ள*
*பற்பல தீவினும் பரவியிவ் வெளிய*
*தமிழ்ச் சாதி, தடியடி யுண்டும்*
*காலுதை யுண்டும் கயிற்றடி யுண்டும்*
*வருந்திடுஞ் செய்தியும் மாய்ந்திடும் செய்தியும்*
*பெண்டிரை மிலேச்சர் பிரித்திடல் பொறாது*
*செத்திடும் செய்தியும் பசியாற் சாதலும்*
*பிணிகளாற் சாதலும் பெருந்தொலை யுள்ளதம்*
*நாட்டினைப் பிரிந்த நலிவினாற் சாதலும்----''*

*என அன்றைய நிலைமை கண்ட யுகப் பெருங்கவிஞனின் குமுறல் இன்றும் தொடர்கதையாகிக் கொண்டிருப்பதையும் 'தமிழ்ச்சாதி' மட்டுமல்லாது இன்று ஏனைய பல சமூகத்தினரும் இத்தகைய அவலங்களுக்கு ஆளாகிக் கொண்டிருப்பதையும் நாம் மனங்கொளல் வேண்டும்; இவ் அவலங்களைப் போக்கும் வழிவகைகள் பற்றிச் சிந்திக்க வேண்டும்; செயலாற்ற வேண்டும். அவற்றுக்குக் கலை-இலக்கியங்களையும் ஏற்ற சாதனங்களாகப் பயன்படுத்த வேண்டும். புலம் பெயர்ந்தோர் இலக்கியம் அல்லது புகலிட இலக்கியம் எனப்படும் ஆக்கங்களையும் நாம் கவனத்திற்கொள்ள வேண்டும்.*

*பிரச்சினைகளின் களஞ்சியமாக -காப்பகமாக இன்றைய சமூகம் விளங்குகின்றது. மனிதநேயமும் துணிச்சலும் கொண்ட எவரும் பிரச்சினைகளைக் கண்டு நழுவியோட மாட்டார்; மாறாகத் துணிச்சலோடு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து அவற்றைத் தீர்த்து வைக்கவே முயல்வர். 'கஞ்சி குடிப்பதற்கிலார்; -அதன் காரணங்கள்*

இவையென்னும் அறிவுமிலார்'' என்ற நிலையில் வாழும் பாமர மக்களதும், அல்லற்பட்டு ஆற்றாது அழுது கண்ணீர் வடித்துப் புலம்புவர்களதும் ஈன நிலைகண்டு கொதித்தெழுபவனே உண்மைக் கலைஞனாவான் என்பதை நாம் மனங்கொளல் வேண்டும்.

இவற்றை நாம் செவ்வனே புரிந்து கொண்டால், காலம் காலமாகச் சமூக ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் அடக்கி ஒடுக்கிக் கொடுமைப்படுத்தப்பட்ட மக்கள் இன்று விமோசனம் வேண்டி, விழிப்புற்று எழுச்சியுற்றுக் கொண்டிருக்கும் நிலையில், நாம் அவர்களுக்குக் கைகொடுத்து, தோள்கொடுத்து, அவர்களோடு அவர்களாக நாமும் ஒன்று சேர்ந்து, அவர்களுக்காகப் பாடுபட வேண்டும்; அதற்காக நமது சகல கலை இலக்கிய முயற்சிகளையும் பயன்படுத்த வேண்டும்; இவ்வகையில், கடந்த சில தசாப்தங்களாக நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக எம்முன்னால் வளர்ந்து கொண்டிருக்கும் 'தலித்' இலக்கியம் பற்றியும் நாம் தீவிர கவனம் செலுத்த வேண்டியது மிகமிக இன்றியமையாததாகும்.

நீண்ட காலமாகப் பல்கலைக்கழகங்களினாலும் கற்றோர் குழாத்தினராலும் தீண்டத் தகாததாகக் கருதப்பட்டுப் புறக்கணித்தொதுக்கப்பட்டிருந்த நமது பாரம்பரியச் செல்வமான நாட்டாரியல்துறை இன்று பலரதும் கவனத்தை மிகுதியாகவும் ஈர்த்து வருதல் மனங்கொளத்தக்கது. இன்றைய இளந்தலைமுறையினர் கற்றுக் கொள்ள வேண்டிய ஏராளமான செய்திகள், வாழ்க்கை பற்றிய படிப்பினைகள், பிரதேசத்துக்குப் பிரதேசம், கிராமத்துக்கு கிராமம் என வேறுபட்டுக் காணப்படும் வாழ்வியலம்சங்கள், தனித்துவங்கள், எமது முன்னோர் பற்றிய செய்திகள், அவர்கள் பெற்றுக்கொண்ட வாழ்க்கை அனுபவங்கள் என எத்தனையோ அம்சங்கள் நமது நாட்டாரியற் கூறுகளில் நிறைந்து காணப்படுகின்றது.

தவிர்க்க முடியாத பல்வேறு காரணங்களினாற் கடந்த ஓரிரு தசாப்தங்களாகப் பல்கலைக்கழகங்களிலும் வெளியிலும் நாட்டாரியல் பற்றிய விஞ்ஞானபூர்வமான ஆய்வுமுயற்சிகள் அதிக அளவில் மேற்கொள்ளப்படுகின்றன; கிராமவாரியாகவும் பிரதேசவாரியாகவும் நாட்டாரியற் கூறுகளைத் தேடித் தொகுத்து நூல்வடிவம் பெறச் செய்வதிலும் பலர் ஈடுபாடு காட்டி வருகின்றனர். எனினும் நகரமயமாக்கம் நவீனமயமாக்கம் முதலிய இன்றைய சூழ்நிலைகள் காரணமாகக் குறிப்பிடத்தக்க அளவு நாட்டாரியற் கூறுகள் பல அழிந்து கொண்டிருக்கின்றன; அவைபற்றி இன்றைய இளந்தலைமுறையினர் பலர் அறிந்து கொண்டதுமில்லை.

இந்நிலையில் இளந்தலைமுறையினரே அவற்றைத் தேடிச் சேகரிப்பதிலும் நெறிமுறைகட்கேற்ப சேகரித்தவற்றை உரியமுறையில் விஞ்ஞானபூர்வமாகவும் ஆய்வு நெறிமுறைகளுக்கியையவும் வகைப்படுத்தித் தொகுத்து நூல்வடிவம் பெறச் செய்வதிலும்; ஆவணப்படுத்துவதிலும் ஆராய்வதிலும் தீவிர கவனம் செலுத்துதல் வேண்டும். விஞ்ஞான, தொழில்நுட்பத்துறைகளிற் பரிச்சயம் பெறும் இன்றைய இளந்தலைமுறையினர் கணனி, சர்வதேச வலைத்தொடர்பி **(Inter Net)** முதலியவற்றின் உதவியுடன் இவற்றை உரிய முறையிற் பதிவு செய்து பேணும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அவற்றின் மூலம் அழிந்தொழிந்து கொண்டிருக்கும் நமது பாரம்பரியச் செல்வங்களைக் காப்பாற்றிக் கொள்ளலாம். மேலைநாடுகளில் இத்தகைய முயற்சிகள் அதிக அளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளமை நாம் மனங்கொளத்தக்கது.

இசை, நடனம், கூத்து, நாடகம் முதலிய துறைகளில் மிகுதியான ஈடுபாடும் பரிச்சயமுடைய இளைய தலைமுறையினர் அவ்வத்துறைகளின் வளர்ச்சிக்குப் பாடுபடும் அதேவேளை, காலத்தின் தேவையை நிறைவு செய்யும் வகையில் அவற்றை நவீனமயப்படுத்தும் முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்; நிரம்பிய அறிவும் பரிச்சயமும் கொண்ட முதிய தலைமுறையினரின் ஆலோசனைகளையும் இவ்வகையிற் பெற வேண்டியது அவசியமாகும்.

பேராசிரியர் வித்தியானந்தன் முதல் பலர் எமது பாரம்பரிய நாட்டுக்கூத்துக் கலைக்குப் புத்துயிரளித்துள்ளமையும் நவீனமயப்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையும் நவீன அரங்கமுறைகளுக்கேற்பப் பாரம்பரிய நாடக வடிவங்களில் ஏற்றவகையில் மாற்றங்கள் புகுத்தப்படுகின்றமையும் இளைய தலைமுறையினர் கவனத்திற்கொள்ள வேண்டியவையாகும்.

எமது பாரம்பரிய இசைக்கலை பல நெளிவு சுழிவுகளையும் கடந்து காலத்தின் தேவைகளுக்கேற்ப வளர்ந்து வருகின்றது. தனித்தமிழிசை இயக்கத்தின் செயற்பாடுகளைத் தொடர்ந்து இசைக்கலை பெருமைப்படத்தக்க அளவிற்கு இன்று மாற்றங்களையும் வளர்ச்சியையும் பெற்று வருகின்றது. அதே சமயம் நவீனமயப்படுத்தும் முயற்சிகளை மேற்கொள்ளும் போது எமது பாரம்பரிய இசைக்கலையின் ஆத்மாவையே அமுக்கிக் கொல்லும் அளவிற்கு மேலைநாடுகளின் இசைச் செல்வாக்கு மேலோங்காது கவனித்துக் கொள்ளுதல் அவசியமாகும்.

இளந்தலைமுறையினரின் கலை-இலக்கிய ஈடுபாடு என்றவகையில் அதிகமானோர் வாசகர்களாக இருத்தல் கூடும். வெறுமனே பொழுது போக்கிற்காக வாசிக்கும் பழக்கத்தை மேற்கொள்வோர் எவற்றையும் கூர்மையாகவும் ஆழமாகவும் நோக்காது 'நுனிப்புல் மேய்ச்சலா'க நோக்கி, யதார்த்த உலகிலிருந்து விலகிக் கனவுலகிற் சஞ்சரிக்க விரும்புவர். இன்றைய 'இலக்கிய உற்பத்தி' யாளர் பலரும் இத்தகைய வாசகர்களையே அதிகம் விரும்புகின்றனர். கலை-இலக்கியங்களை வெறுமனே விற்பனைப் பண்டமாக்கி மிக விரைவில் அதிகலாபத்தையும் பிரபல்யத்தையும் பெறவிரும்புவோருக்கு இத்தகைய வாசகர்கள் உறுதுணையாகின்றனர்.

இதற்குமாறாகத் தரமான வாசகர்களே சமூகத்திற்கு நன்மை பயக்கும் கலை-இலக்கியங்களை இனங்காண்கின்றனர்; காத்திரமான கலை-இலக்கியங்கள் தோன்றவும் ஆரோக்கியமான வளர்ச்சி ஏற்படவும் வழிவகுக்கின்றனர்.

தரமான- வாசகர்கள் பலர் கலை-இலக்கியங்களின் குறைநிறைகளைச் சரியாக எடைபோடவும் தரமான படைப்புகளை விண்டு காட்டவும் முயல்வர். அந்நிலையில் அவர்கள் வாசகர் என்ற நிலையைக் கடந்து திறனாய்வார்களாகப் பரிணமிக்கலாம். அவ்வாறு பரிணமிக்குமிடத்து அவர்கள் கலை-இலக்கியங்களைக் கருத்தூன்றிக் கற்பதுடனமையாது இன்று பல்கிப் பெருகிவரும் பலவகைத் திறனாய்வுக் கோட்பாடுகளை அறியவும் தெளிவுபெறவும் ஆர்வம் கொள்வர்.

இன்றைய திறனாய்வுலகில் தரமான திறனாய்வாளர்களையே திணறடிக்கச் செய்யும் வகையில் முன் நவீனத்துவம், பின் நவீனத்துவம், கட்டமைப்பியல்வாதம் **(Structuralism)** கட்டவிழ்ப்புவாதம் **(Deconstructionism of Post-Structrualism)** நவீன வரலாற்றியல்வாதம் **(New Historicism)** என வாதங்கள் அதிகரித்துக் கொண்டிருப்பதை அவதானிக்கலாம். ஆரம்ப நிலையிலுள்ள திறனாய்வாளனுக்குப் பல்நெறி சார்ந்த செய்முறைத் திறனாய்வே போதுமானது எனலாம்.

''உலகில் இன்று பல மாறுதல்கள் நிகழ்ந்த வண்ணமுள்ளன. முன்னைய பல நம்பிக்கைகள் தளர்கின்றன; அத்திவாரங்கள் அசைகின்றன; வேர்கள் விடுபடுகின்றன. புதிய திறந்த சந்தைப் பொருளாதாரத்தின் தேவைகளுக்கமைந்த சேவைக்கு எல்லோரும் நிர்ப்பந்திக்கப்படுவதால் மனிதவாழ்வு நோக்கமற்றதாகவும் சாரமற்றதாகவும் மாறிவருகிறதென்றும் பலர் குறைப்படுகின்றனர். மக்கள் நுகர்வோராக்கப்பட்டு அவர்களிடையே நுகர்வுக் கலாச்சாரம் வளர்க்கப்படுகின்றது. மூலைமுடுக்கெல்லாம் புகுந்து வரும் தொடர்புசாதனங்கள் பொதுமக்கள் மத்தியில் புதிய உரிசிகளையும் புதிய இரசனைகளையும் செயற்கைத் தேவைகளையும் தோற்றுவிக்கின்றன. அரசியல், பொருளாதார ஆதிக்க சக்திகளின் கட்டுப்பாட்டிலுள்ள அச்சாதனங்கள் அச்சக்திகளுக்குத் தோதான வகையில் உலகினையும் வாழ்வினையும் புனைந்து காட்டுவதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளன'' என்பர். இத்தகைய சூழ்நிலையில் கலை-இலக்கிய ஆர்வம் கொண்ட இளைய தலைமுறையினர் மிகவும் விழிப்புடன் செயற்பட வேண்டியதவசியமாகும்.

கிருதயுகத்தைக் கேடின்றி நிறுத்த விரதங்கொண்டு அயராதுழைத்த யுகப் பெருங்கவிஞன் பாரதி.

உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின்
வாக்கினிலே ஒளியுண் டாகும்;
வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப் பெருக்கும் மேவு மாயின்.
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிப்பெற்றுப் பதவி கொள்வார்;
தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்.

எனப் பாடியுள்ளதை இளைய தலைமுறையினர் மனங்கொளத்தக்கதாகும்.

**''மனிதன் வாழ்ந்து கொண்டிருக்கின்றான்;**
**மானிடம் செத்துக் கொண்டிருக்கிறது.''**

## இவர்கள் பார்வையில்....

**நேர்கண்டு தொகுத்தவர்:இரா.இரவிசங்கர், இதழாசிரியர்**

*இளந்தலைமுறையினர் பற்றி அவர்களுடைய பிரச்சினைகள், அதற்குரிய காரணங்கள், தீர்வுகள் என்று பல்வேறுபட்ட சிந்தனைகளை ஒருங்கே கொண்டுவரும் முயற்சியில் இளங்கதிர் வெளிவரவுள்ள இவ்வேளையில், முதலில் இளந்தலைமுறையினர் என்று யாரைக் குறிப்பிடுவது என்ற வினா எழுகின்றது.*

*பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும் கல்வி கற்கும் மாணவர்கள் அல்லது ஒரு வயதெல்லையை தீர்மானித்து அதற்குள் அடங்குபவர்கள் அல்லது வேறு ஏதாவதோர் காரணியைக் கொண்டு வகைப்படுத்தப்பட்டவர்களா இளந்தலைமுறையினர் என்ற பிரிவிற்குள் வருகின்றனர்? இந்த வினாவிற்கான விடையும் நாம் இன்று எதிர்நோக்கும் பிரச்சினைகளைப் போல் சிக்கலானதுதான்.*

*சக்தி பெற்றிருந்தும் அறியாதது இளமை. அறிந்திருந்தும் சக்தியற்றது முதுமை என்பது முதுமொழி. ஆனால் வயது அடிப்படையில் பார்க்கும் போது சக்தி இழந்த இளமையையும் சக்தி பெற்ற முதுமையையும் நாம் காணலாம். அவ்வாறாயின் இளமை, முதுமை என்பவை மனம் சம்பந்தப்பட்ட ஒன்று என்ற முடிவிற்கு வரலாமா என்ற வினா எழுகின்றது.*

*இது ஒருபுறம் இருக்க, இந்த இளமையின் தனிப்பண்புகள்தான் என்ன? உளவியல் அறிஞர்களின் கருத்துப்படி, காதல், வலிமை, எதிர்காலம் பற்றிய கனவுகள் என்ற மனவெழுச்சிகள் ஒருபுறமும் குற்ற உணர்வு, சலிப்பு, பாதுகாப்பின்மை, தாழ்வுமனப்பான்மை, விரோதம், வெறுப்பு, விரக்தி என்பவை பிரசவிக்கும் சினம், அச்சம், கவலை, பொறாமை, சலிப்பு என்ற எதிர்மறையான மனவெழுச்சிகள் மறுபுறமாய் இன்றைய இளந்தலைமுறையினர் உள்ளனர்.*

*தமது பெற்றோருக்காக, சமூகத்திற்காக, நாட்டிற்காக எவ்வளவோ செய்ய வேண்டிய அவா இவர்களுக்கு இருப்பினும் செய்கிறார்களா என்பது ஒரு கேள்விக்குறி. எனவே இவற்றைப் பற்றியும், இளைஞர், யுவதிகளின் நடத்தைகள் பற்றியும், அவர்களது பிரச்சினைகள் அதற்கான காரணங்கள் காணப்பட வேண்டிய தீர்வுகள் பற்றியும் சமூகத்தில் பல்வேறு நிலைப்பட்டவர்களிடம் வினாவினால் என்ன என்ற அவா இப்பகுதியினை உருவாக்கியது.*

*பீடாதிபதி, விமர்சகர், அதிபர், வைத்தியர், கலைஞர் என்று பலரை சந்தித்தபோது அவர்களுடைய கருத்துக்கள் சிந்தனையைத் தூண்டுபவையாகவும் ஒரு தெளிவை ஏற்படுத்துபவையாகவும் அமைந்தது உண்மை. இது அவர்களோடு இன்னும் அதிக நேரம் அளவளாவும் ஆர்வத்தை ஏற்படுத்தியது மட்டுமல்ல ஒரு சமூகவியலாளர் ஒரு ஆன்மீகவாதி என்று இன்னும் பலதரப்பட்டவர்களைச் சந்தித்திருக்கலாம் என்ற கவலையை ஏற்படுத்தியது.*

*இனி, அவர்கள் கதைக்கிறார்கள். அவர்களின் பார்வையுடன் நீங்களும் சங்கமமாகுங்கள்.*

**திரு. க. சிதம்பரநாதன்.**

**விரிவுரையாளர், நுண்கலைத்துறை, யாழ். பல்கலைக்கழகம்**

***திருமதி பத்மினி சிதம்பரநாதன்***

**ஆசிரியர், யாழ் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி**

> **"அடக்கப்பட்ட உணர்ச்சிக்கு ஒரு சக்தி உண்டு. இது எங்கேயாவது ஒரு இடத்தில் வெளிப்படுவதற்கான ஒரு சந்தர்ப்பத்தை எப்பவும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும். இவ்வாறு உணர்ச்சிகள் கொந்தளித்துக் கொண்டிருப்பதால் ஒன்றை நோக்கிப் போவது என்பது கடினமான ஒரு செயலாகிறது."**

*இன்றைய இளந்தலைமுறையினருக்குள்ள பிரச்சனைகளாக முன்னிற்கும் தன்மையின்மை, பதட்டம் என்று பலவற்றை கூறினாலும் இவற்றிற்கு அடிப்படைக் காரணங்களை நாம் விளங்கிக் கொள்வது அவசியமாகும்.*

*இன்று படித்து விட்டு சிறப்பு சித்தியுடன் வெளிநாடுகளுக்குச் செல்வதை காண்கிறோம். அங்கு பட்டத்தை மட்டும் பார்க்காமல் அவர்களிடம் பிரச்சனைகளை தீர்க்கும் ஆற்றல் உள்ளதா என்பதையும் பார்க்கிறார்கள். எனவே முன்னிற்கும் தன்மை பிரச்சனைளைத் தீர்க்கும் ஆற்றல் என்பவை ஒரு பிரச்சனையாகத்தான் உள்ளது.*

உண்மையில் எங்கள் கல்விமுறை ஆரம்பத்திலிருந்தே இவற்றை பிள்ளைகளிடம் இல்லாமல் பண்ணிவிட்டது. ஆரம்பத்தில் சிறுபிள்ளையானது தன்னிச்சையாகத் தான்நினைத்தபடி சுயநோக்குடன் நடக்க முயற்சிக்கும். கேள்விமேல் கேள்வியாகக் கேட்கும். சிலர் பொறுமையுடன் பதிலளித்தாலும் அநேகர் அதை தட்டிக் கழிப்பதைத்தான் பார்க்கிறோம். எனவே எங்கள் கல்விமுறையிலும் சரி, வளர்ப்பு முறையிலும் சரி சின்னப்பிள்ளைகள் என்ற உலகம் இல்லை. நாம் சிருஷ்டித்து வைத்துள்ள இந்தப் ''பெரியவர்'' உலகத்தில் கனபேருக்கு இடமில்லை. உதாரணமாக பெண்களுக்கு இடமில்லாமையால் தான் இது ஒரு ஆண்களுக்குரிய உலகமாக பார்க்கப்படுகிறது. எனவே, பிள்ளைகளின் கேள்வி கேட்கிற தன்மை ஆரம்பத்திலிருந்தே மழுங்கடிக்கப்படுகிறது. அதாவது Spontaneity படிப்படியாகக் குறைந்து வருகிறது.

மேலும் எங்கள் கல்விமுறையில் பல பிரச்சனைகள் காணப்படுகின்றன. இந்த உணர்ச்சிகள் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. இப்படித்தான் நடக்க வேண்டும் என்ற கட்டுப்பாடுகளுடன் வளர்க்கப்படுவதால் பிள்ளைகள் தன்னிச்சையாகச் செயல்படும் இயல்பை இழந்துவிடுகின்றனர். மேலும் உணர்ச்சிவசப்படல் என்பது தரக்குறைவாகக் கருதப்படுவதால் மாணவர்கள் படிப்படியாக உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி கட்டுப்படுத்தி அதனை மறந்த நிலைக்கு உட்படுகிறார்கள். மேலும் கல்வி என்பது Facts ஐ சேகரிப்பது மட்டும்தான் என்ற நிலை காணப்படுவதால் இங்கு உண்மையான சிந்தனைகளுக்கு இடமில்லாமல் போய்விடுகின்றது. எனவே மாணவர்கள் பயம் அல்லது வெட்கம் காரணமாக ஒன்றை கேட்கவோ அல்லது சொல்லவோ தயங்குவதால் அவர்களுடைய சிந்தனைகள் மழுங்கடிக்கப்படுகின்றன. மேலும் எமது கல்விமுறையில் பிழை விடுவதற்குரிய சந்தர்ப்பங்கள் மிகக் குறைவு. பிழைகள்தான் படிப்பதற்கும் சிந்திப்பதற்குமுரிய சந்தர்ப்பங்களை ஏற்படுத்துகிறது. எனவே பயப்படாது ஒன்றை செய்ய முயற்சிக்கக்கூட எமக்கு சந்தர்ப்பங்கள் இல்லாதுள்ளது. இவ்வாறு எமது கல்விமுறையில் காணப்படும் பிரச்சினைகள் காரணமாக எமது தனித்தன்மைகளையும் பிரச்சினைகளை தீர்க்கும் ஆற்றலையும் முன்னிற்கும் தன்மையினையும் நாம் இழந்துள்ளோம்.

உதாரணமாக எமது அமைச்சர்களில் ஒருவர் கூறுவது போல் ஒப்பீட்டளவில் எழுத்தறிவு வீதம் அதிகமானதும் நான்கு பெரிய சமயங்கள் உள்ளதுமான எமது நாட்டில் இன்னும் இனப்பிரச்சினையை தீர்க்கமுடியாமல் உள்ளது. ஏனெனில் நாம் எமது உண்மையான நாம் நாமாக நடக்கும் தன்மையினை இழந்ததால், பேசுபவர்கள் எல்லாரும் பேச வேண்டும் என்பதற்காக பேசுகிறார்களேயன்றி உண்மை பேசுவதில்லை. இவ்வாறு தான் தானாக நடப்பதற்குரிய சந்தர்ப்பத்தை எமது கல்விமுறை வழங்குவதில்லை.

இது தமது உணர்ச்சிகளை கட்டுப்படுத்தி வைத்திருக்கும் நிலைக்கு மாணவர்களை தள்ளிவிடுகிறது. இவ்வாறு அடக்கப்பட்ட உணர்ச்சிக்கு ஒரு சக்தி உண்டு. இது எங்கேயாவது ஒரு இடத்தில் வெளிப்படுவதற்கான ஒரு சந்தர்ப்பத்தை எப்பவும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும். இவ்வாறு உணர்ச்சிகள் கொந்தளித்துக் கொண்டிருப்பதால் ஒன்றை நோக்கிப் போவது என்பது கடினமான ஒரு செயலாகிறது. அலைமோதுகின்ற உணர்ச்சியானது மனதை ஒருமுகப்படுத்தி ஒரு இலக்கை நாடி செல்ல விடுவதில்லை. உதாரணமாக புத்தகத்தை எடுத்து படிக்க முயலும்போது அடக்கப்பட்ட சக்தியானது அம்மாணவரை குழப்பும். அதாவது எப்பொழுதும் ஒரு பிரச்சினையானது அவர்களுக்கு முன் இருந்து கொண்டே இருக்கும். எனவே இலகுவாகக் கிடைக்கக்கூடிய sex, போதைமருந்து என்பவற்றில் தம்மை ஈடுபடுத்திக்கொள்வதை இளந்தலைமுறையினரிடம் நாம் காணக்கூடியதாக உள்ளது.

பெற்றோரின் விருப்பம் பொதுவாக பிள்ளைகளின் விருப்பத்துடன் ஒத்திருப்பதில்லை. இவர்கள் தமது பிள்ளைகளின் விருப்பத்தை கணக்கிலெடுக்காது ஒருதலைப்பட்சமாக முடிவுகள் எடுக்கப்படும்போதுதான் உறவுகள் தொல்லையாக வருகின்றது. அதாவது எமது உணர்ச்சிகளை ஏற்றுக் கொள்ளாமல் பெற்றோர், ஆசிரியர், நண்பர்கள் எல்லோரும் அறிவுரை கூற முற்படும்போது உறவானது கசப்பிற்குரியதாக அமைகிறது.

இவ்வாறு அடக்கப்பட்டு இருப்பதால் சிலர் ஒன்றுமே வேண்டாம் என்று தனியப் போய் இருப்பதையும் காண்கிறோம். மற்றைய தொல்லைகளில் இருந்து விடுபட்டு தனிமையில் வாழ்வது ஒருவகையில் எதிர்மறையான சுதந்திரம் என்று கூறப்படுகிறது. ஏனெனில் தனிமை அவர்களுக்கு பிரச்சினையாக மாறும் சந்தர்ப்பங்களும் உண்டு. எனவே உறவுமுறை அவசியமாகின்றது. ஆனால் இவ் உறவுமுறை தான் தானாக செயல்படுவதற்குரிய சந்தர்ப்பத்தை வழங்குவது அவசியம்.

இளையதலைமுறையினரின் உணர்ச்சி அடக்கப்பட்டிருப்பதால் அவர்கள் தங்களிடம் உள்ள மிகப்பெரிய சக்தியை வெளிப்படுத்தாது உள்ளனர். எமது கல்விமுறையில் பிழைவிட்டுத் திருந்துவதற்குரிய சந்தர்ப்பம் இல்லாததால்,

ஒன்றை செய்து பார்த்து விட்டு 'அட என்னிடம் இவ்வளவு திறமை இருக்கா' என்று வியப்படைவதற்குரிய வாய்ப்பு இல்லாதுள்ளது. ஒன்றைச் செய்தால் வெற்றியடைய வேண்டும், இல்லாவிட்டால் செய்யக்கூடாது என்ற பயமும் இதனாலேதான் ஏற்படுகிறது. இது ஒருவகை தாழ்வுச்சிக்கலை எல்லோரிடத்திலும் ஏற்படுத்தியுள்ளது. எனவே அவர்களை தன்னிச்சையாக செயற்பட வைத்து அவரவர் திறமைகளை வெளிப்படுத்த சந்தர்ப்பங்கள் வழங்கப்படுவது அவசியம்.

இவ்வாறான பிரச்சினைகள் காரணமாக எமது மனவளத்தை நாம் இழந்து விட்டோம். ஏற்கனவே வளங்கள் குறைந்துள்ள இந்த நாட்டில் மனவளமும் இல்லாது போனால் ஒன்றுமே செய்ய முடியாது. 'குழு உருவாக்கம்' மூலம் இவ்வாறான பிரச்சினைகளுக்கு தீர்வு காணலாம். இதையே நாம் எமது நாடக உலகிலும் கடைப்பிடிக்கின்றோம்.

ஒரு நண்பர்கள் வட்டத்தில் தன்னிச்சையான சிந்தனை வெளிப்பாட்டிற்கு இடமிருக்கும். அங்கு நாம் பிழைவிடலாம். பிழைவிட்டாலும் யாரும் பேசுவதில்லை. உணர்ச்சிகள் பகிரங்கப்படுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படலாம். மேலும் தமது திறமைகளை கண்டுகொள்வதற்குரிய சந்தர்ப்பம் அங்கு கிடைக்கிறது. எனவே குழு உருவாக்கம் ஒரு சிறந்த முயற்சியாகும். எனினும் அது ஆரோக்கியமற்றதும் நோய் பிடித்ததுமான குழுவாக மாறாதிருப்பது அவசியம்.

ஒவ்வொருவருடைய உணர்வுகளுக்கும் மதிப்பளிக்கின்ற குழுவாக அது இருந்தால்தான் அங்கு ஒவ்வொருவரும் தான் தானாக நடக்க முற்படுவார்கள். எல்லோரும் அவ்வாறு செயற்படும் போது ஒருவரையொருவர் புரிந்துகொண்டு ஒரு சிறந்த நட்பு அங்கு உருவாகும். அத்தோடு என்னிடம் இவ்வளவு திறமை இருக்கிறதா என்ற கேள்வி நாடகம் மூலம் தூண்டிவிடப்படுகிறது. அதாவது நாடக அரங்கானது ஒரு ஊக்கிபோன்று தொழிற்படுகிறது. ஒவ்வொருவரும் தங்களுடைய முழுத் திறமையையும் வளர்ப்பதால் தாழ்வுச்சிக்கலில் இருந்து விடுபடுவார்கள். எனவே சமூகத்துடன் உறுதியாக செயற்படுவார்கள். இவர்களில் ஏற்படும் இந்த மாற்றம் ஒரு அதிர்வைப்போல் படிப்படியாக மற்றவர்களிடமும் மாற்றத்தை ஏற்படுத்தும். எனவே இவ்வாறான குழு உருவாக்கம் பல இடங்களிலும் ஏற்படுமாயின் சமுதாயம் முழுவதிலும் ஒரு மாற்றம் ஏற்படலாம்.

மேலும் குழு உருவாக்கமானது ஆண் பெண் உறவிலுள்ள பதட்டத்தையும் நீக்கிவிடுகிறது. பாடசாலைகளில் தனிய ஆண் பாடசாலை பெண் பாடசாலை என்று சிறுவயதிலேயே பிரித்து வைப்பதால், ஆண் பெண் உறவில் ஒரு பதட்டம் எப்பவும் இருந்து வருகிறது. எனவே பதட்டம் காரணமாக வேறு வேலைகளில் மனதை ஒருமுகப்படுத்தி வேலை செய்ய முடியாமையைக் காண்கிறோம்.

ஆண் பெண் இருவரும் ஒன்றாகத்தான் இருந்தனர் என்று ஒரு கிரேக்க புராணக்கதை கூறுகிறது. அவர்களுடைய சக்தி அதிகமாக இருக்க அதனை குறைக்கும் பொருட்டு ஆணாகவும் பெண்ணாகவும் பிரிக்கப்பட்டதாகவும் அது கூறுகிறது. எனவே பிரிக்கப்பட்டதால் அவர்களுடைய சக்தி, அரைவாசியாகவே காணப்படுகிறது. அது 'ஒன்றாக' திரும்ப வரும்பொருட்டு தமக்குள் அடிபட்டு அடிபட்டு சீரழிந்து போய்க்கொண்டிருப்பதை நாம் காண்கிறோம். மேலே குறிப்பிட்ட குழு உருவாக்கத்தில் ஆணும் பெண்ணும் இருப்பதால் பதட்டம் குறைந்து சகஜமாக பழகும் நிலை ஏற்படுகிறது.

இளம்பருவ ஆண்களையும் பெண்களையும் எடுத்துக்கொண்டால், அனேகமாக ஆண் தான் படிக்கும் நேரத்தில் ஒரு பெண்ணைப்பற்றி யோசித்து கற்பனை பண்ணுவதையும், ஒரு பெண் படிக்கும் நேரத்தில் தன்னை அழகுபடுத்துவது பற்றி கற்பனை பண்ணுவதையும் காணலாம். இது அவர்களது முழுத்திறமைகளையும் வெளிப்படுத்த முடியாமல் செய்கிறது. எனவே அவர்களது பதட்டம் தணிக்கப்படுவது அவசியமாகிறது.

மேலும், வேலைக்குச் செல்லும் பெண்கள் கூட அத்தளத்திலிருந்து தமது குடும்பத்தை பற்றியே நினைக்கின்றனர். எனவே உற்பத்தித் திறன் குறைக்கப்படுகிறது. அதாவது பதட்டம் இருப்பதால் வேலையில் முழுமனதுடன் ஈடுபடுவதில்லை. எனவே அவர்களது மேல்நோக்கிய வளர்ச்சி தடைபடுகிறது.

சமுதாயம் என்ற ஒரு பெரிய வட்டத்திலிருந்து செயற்கையாக ஒரு சிறிய வட்டத்திற்குள் சிலரை கொண்டுவருவதே குழு உருவாக்கமாகும். ஒரு துடிப்பான, சிந்தனையுள்ள, மேல்நோக்கி வளர்கின்ற ஒரு இளையசமுதாயம் உருவாக வேண்டுமாயின் இவ்வாறான குழுக்கள் எல்லா இடமும் உருவாகுவது அவசியம். இது பண்பாட்டு ரீதியில் ஏற்பட வேண்டிய மாற்றமாகும். ஆனால் அதே சமயம் அதே மட்டத்தில் அரசியல் பொருளாதார நிலைகளிலும் மாற்றங்கள் ஏற்பட வேண்டும். இவையெல்லாம் தனித்தனியாக நடக்காது இணைந்து நடக்கும்போதுதான் ஒருநாட்டில் மாற்றம் ஏற்படும்.

***கலாநிதி. W.ஜயதிலக***

***பீடாதிபதி, விவசாயபீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்***

> ***"பட்டமளிப்பின் பின்னர் 'வேலை' என்பது ஒரு உரிமையாக கருதப்படுகிறது. ஆனால் அப்படியல்ல. ஒருவனுக்கு உள்ள குறிக்கோளையும் திறமையையும் வைத்தே அவன் வேலைக்கமர்த்தப்படுகிறான். எனவே அவன் தனது திறமைகளை விருத்தி செய்வதோடு தன்னாலும் முடியும் என்ற நிலையை வளர்ப்பதும் அவசியம்."***

*இளைஞர்களைப் பற்றிய ஒரு எதிர்மறையான மனோபாவம் பொதுவாக இந்நாட்டில் காணப்படுகிறது. இதற்கு பல்கலைக்கழக மாணவர்கள் தங்களுடைய பிரச்சினைகள் எனக் கருதுகின்ற வேலையின்மை, நீண்ட காலத்தை பல்கலைகழகத்துள் கழிக்க வேண்டி இருப்பது போன்றவற்றிற்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகளும் ஒரு காரணமாகும்.*

*படிப்பதற்குரிய சிறந்த சூழ்நிலை பல்கலைக்கழகத்தில் இருந்தாலும் வளங்களிலுள்ள தட்டுப்பாடு, தமது தேவைகளை நிறைவு செய்வதற்குரிய போதுமான பணவசதியின்மை போன்ற காரணங்களால் இளைஞர்கள் ஒருவகை ஏமாற்றத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். தற்போதைய இந்த நிலையானது எதிர்காலத்தில் ஒரு நிச்சயமில்லாத்தன்மையை தோற்றுவித்துள்ளது.*

*கடந்த காலங்களில் மாணவர்கள் முறைகேடானதும் தீவிர அரசியல் கொள்கைகள் கொண்டதுமான நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பினும், அவை அவர்களுடைய தேவைகளை பூர்த்தி செய்ததாக இருக்கவில்லை. உதாரணமாக வேலையில்லாப் பிரச்சினையை எடுத்துக் கொண்டால் மாணவர்கள் அதற்கு எதிர்ப்பை தெரிவிற்கும் முறையாக பிரச்சாரங்களை மேற்கொண்டதையும் பத்திரிகைகளுக்கு எழுதியதையும் அதிகாரத் தொனியில் வேலை கேட்டதையும் காணலாம். அவர்களைப் பொறுத்தவரை பட்டமளிப்பின் பின்னர் 'வேலை' என்பது ஒரு உரிமையாக கருதப்படுகிறது. ஆனால் அப்படியல்ல. ஒருவனுக்கு உள்ள குறிக்கோளையும் திறமையையும் வைத்தே அவன் வேலைக்கமர்த்தப்படுகிறான். எனவே அவன் தனது திறமைகளை விருத்தி செய்வதோடு தன்னாலும் முடியும் என்ற நிலையை வளர்ப்பதும் அவசியம்.*

*பல்கலைக்கழக மாணவரிடையே காணப்படும் ஏமாற்றத்திற்கு இன்னுமொரு காரணமாக அரசாங்கமும் பல்கலைக்கழக நிர்வாகமும் தமது தேவைகளை நிறைவு செய்யத்தக்கவாறு ஒன்றுமே செய்யவில்லை என்ற கருத்தினை நியாயமென நிரூபிப்பதை கொள்ளலாம். இந்தியாவைப் போல் சகல வசதிகளையும் எங்களால் வழங்க முடியாமைக்கு காரணம் அதிக எண்ணிக்கையான மாணவர்களுக்கு எமது வளங்களை கருத்திற் கொள்ளாது பல்கலைக்கழகம் புகும் வாய்ப்பு அளிக்கப்படுவதும், ஒரு தீர்க்கமான பொருளாதார கொள்கைகள் இல்லாமையும் ஆகும். பல்கலைக்கழகங்களை எடுத்தால் கூட சில பீடங்கள் தங்கள் பாடவிதான திட்டத்தினை இதுவரைகாலமும் மீள்பரிசீலனை செய்யாதது ஒரு கவலைக்குரிய விடயமாகும்.*

*கடந்த காலங்களை உற்று நோக்கும் போது எல்லாவிதமான தொடர்பாடல் முறைகளிலும் பல்கலைக்கழக மாணவர்கள் ஒரு முறையற்ற தன்மையினை கொண்டிருந்தார்கள். உதாரணமாக தீர்மானங்களை மேற்கொள்பவரிடமிருந்து தமது தேவைகளை நிறைவு செய்வதற்காக அவர்கள் பகீஷ்கரிப்பில் ஈடுபட்டதையோ சுவரொட்டி பிரச்சாரங்களை வரவேற்க முடியாத மொழி நடையில் நடத்தி பல்கலைக்கழக வளவிலும் வெளி இடங்களிலும் ஒட்டி அவற்றை துப்புரவாக்குவதற்குரிய செலவை ஏற்படுத்தியதையோ குறிப்பிடலாம். இவை எதிர்மறையான அபிப்பிராயத்தை, மக்கள் மத்தியில் ஏற்படுத்தியது. அதாவது கற்றவர்களிடம் முறையான தொடர்பாடல் திறமைகள் இல்லாமையைக் காண்கிறோம்.*

*கடந்த காலங்களில் சங்கத் தலைவர்கள் **(Union leaders)** ஒரு சிறந்த தொடர்பினை பீடாதிபதிகளுடனும், உபவேந்தர்களுடனும், மந்திரிகளுடனும், காரியதரசிகளுடனும் வைத்திருந்தனர். அவர்கள் ஒருபோதும் முறைகேடாக நடக்காததால் அவர்கள் மரியாதையாக பெருந்தன்மையாக நடத்தப்பட்டனர். ஆனால் கடந்த ஓரிரு தசாப்தங்களாக அவர்களிடம் ஏற்றுக் கொள்ள முடியாத நடத்தையினை காண்கிறோம். இதற்கு மாணவர்கள் தங்களை வழிநடத்த ஒரு தகுதிவாய்ந்த தலைவரை தேர்ந்தெடுக்காமையே காரணமாகும். இவை ஒரு எதிர்மறையான மனோபாவத்தை மாணவர்களுக்கெதிராக வளர்த்துக் கொண்டு வருகிறது.*

*இதனை சீர்படுத்துவதற்கான மாற்றங்கள் பல வழிகளுக்கூடாக வரவேண்டியுள்ளது. தற்போதுள்ள மாணவர் சமுதாயத்தில் உருவாக வேண்டிய விழிப்புணர்ச்சியும் வெளிக்காரணிகளில் ஏற்பட வேண்டிய மாற்றங்களும் அவற்றுள் சிலவாகும்.*

தற்கால மாணவர்கள் ஒரு விழிப்புணர்வுடன் காணப்படுகிறார்கள். உதாரணமாக பஸ்ஸினுள் பயணிக்கும் போது தாம் ஒரு பல்கலைக்கழக மாணவன் என்று பொதுமக்களுக்கு அறிவிக்க முடியாத நிலையை உணர்ந்துள்ளனர். அதேவேளை பல்கலைக்கழக ஆசிரியர் பீடத்தை சேர்ந்தவர்களும் பொதுமக்களின் மரியாதையை இழந்து வருகின்றனர். இதற்கு காரணம் அவர்களால் பல்கலைக்கழகத்தை சிறந்த முறையில் நிர்வகிக்க முடியாது என பொதுமக்கள் நினைப்பதாகும். எனவே அரசாங்கமும் பொது நிறுவனங்களும் எரிச்சல் அடைந்து பொறுமை இழந்து, இதற்கு ஏதாவது செய்ய வேண்டும் என்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். பல்கலைக்கழகங்கள் எவ்வளவிற்கு பொதுமக்களுடன் ஒன்று சேர்கின்றனவோ அவ்வளவிற்கு திரும்பவும் பழைய தரத்திற்கே தம்மை வழிநடத்தலாம். அவ்வாறில்லாது பல்கலைக்கழகங்கள் தனிமைப்படுத்தப்பட்டிருந்தால் ஏற்றுக்கொள்ளமுடியாத ஒரு எதிர் கலாச்சாரம் உருவாகிவிடும்.

தலைமைத்துவம் என்பது வழிநடத்தப்படவேண்டிய ஒன்று. எனவே ஒவ்வொரு மாணவரும் தலைமைத்துவத்தின் தரத்திற்கு பொறுப்பானவர்களாக இருக்க வேண்டும். ஒவ்வொரு தனிப்பட்ட மாணவரும் தாங்கள் அதற்கு பொறுப்பில்லையென்றும், தங்களுக்கு அதற்கு அதிகாரமில்லை என்றும் நினைப்பதன் மூலம் அவர்களும் பல்கலைக்கழக சீரழிவிற்கு ஒரு பங்களிப்பை செலுத்துகிறார்கள். எனவே பல்கலைக்கழக தேர்தல் என்று வரும்போது பல்வேறுபட்ட குழுக்கள் கலந்து கொள்வதோடு ஒரு உண்மையானதும் தெளிவானதுமான ஜனநாயகம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். ஆனால் ஒரு குழு அதிகாரம் செலுத்துவதையும் அது மற்றைய ஜனநாயக ரீதியிலான பங்களிப்புக்களை ஊக்கப்படுத்தாத தன்மையையும் காண்கிறோம். தலைமைத்துவத்தின் தரமானது பல வழிகளிலும் தோன்றலாம். எனவே சிறந்த தலைவரை அடையாளம் காணுவது அவசியமாகும். துர்நடத்தையை ஏற்றுக்கொள்கிற ஒரு தலைவரை நாம் எதிர்பார்க்க முடியாது. பிழை செய்த மாணவர்களை ஒரு தலைவர் கண்டிக்க முற்படும்போது அவரது தலைமைத்துவத் தரம் இழக்கப்பட்டதாக கருதப்படுகிறது. ஆனால் கடந்த காலங்களில் சங்கத்தலைவர்கள் பகிடிவதையின் போது பிடிபட்டவர்களுக்காவோ பரீட்சையில் பார்த்தெழுதியமைக்காக பிடிபட்டதற்காகவோ அல்லது சட்ட திட்டங்களை மீறியவர்களுக்காகவோ ஒருபோதும் கதைத்ததில்லை. ஏனெனில் அவர்கள் சட்டதிட்டங்களுக்கு பணிந்தும் அதனையொட்டிவர்களாகவும் இருந்தனர். பல்கலைக்கழகமானது இன்னும் அபிவிருத்தியடையாததால் இன்னும் விழிப்புணர்வு ஏற்படவும் தலைமைத்துவ பயிற்சியினை பெறுவதற்குமான சந்தர்ப்பங்கள் உண்டு.

பல்கலைக்கழக வரலாற்றை எடுத்து நோக்கும்போது முன்னைய மாணவ தலைவர்கள் படிப்பிலும் சரி விளையாட்டிலும் சரி தொடர்பாடல் முறைகளிலும் சரி சிறந்து விளங்கினர். ஆனால் தற்போது பகிடிவதையின் போது பிடிபட்டவர்களோ அல்லது ஏதாவது பிரச்சனைகளில் சம்பந்தப்பட்டவர்களோதான் மாணவத் தலைவர்களாக இருக்கின்றனர். எனவே தெளிவானதும் தீவிரமானதுமான தலைமைத்துவத்தை நாம் எதிர்பார்க்க முடியாது. இன்னும் பார்க்கப் போனால் பல்கலைக்கழகமானது எமது நாட்டின் பிரதிபலிப்பாக காணப்படுகிறது. அதாவது எமது நாடும் தலைமைத்துவத்திலும் ஒழுக்கத்திலும் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகிறது.

### செ.நடராஜா

**முதல்வர், அசோகா வித்தியாலயம், கண்டி**

> **"எமது நாட்டில் அரசாங்கத்திற்கு அரசாங்கம் மாறும் போது கல்வித் திட்டங்கள் மாற்றியமைக்கப் படுவதையும் சிலவேளைகளில் ஒரே அரசாங்கத்தின் மந்திரிகள் மாறும்போது கல்வித்திட்டங்கள் மாற்றியமைக்கப்படுவதையும் காண்கிறோம்."**

தற்கால இளைஞர்கள் சுமார் நாற்பது ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பிருந்தவர்களை விட பலவிதத்திலும் வேறுபாடு மிக்கவர்களாக இருப்பதை என்னால் உணர முடிகிறது. மூன்று முக்கியமான விடயங்களில் இந்த வேறுபாட்டை நாம் காணலாம்.

முதலாவதாக தற்கால இளைஞர்கள் விஷயம் தெரிந்தவர்களாக இருக்கிறார்கள். அதற்கு மாறி வருகின்ற சமூக அமைப்பு வெளிக்களக ஊடகங்களுடைய துரித வியத்தகு வளர்ச்சி என்பன காரணமாகின்றன. இரண்டாவதாக அவர்கள் விஷயம் தெரிந்தவர்களாக இருப்பதால் விவேகமிக்கவர்களாகவும் இருக்கின்றனர். எந்த விடயத்திலும் அது வீட்டுப் பிரச்சினையானாலும் சரி, நாட்டுப் பிரச்சினையானாலும் சரி தாங்கள் நினைப்பது தான் சரி என்ற ஒரு தன்மை இக்கால

இளைஞர்களிடையே ஆழமாக பதிந்துள்ளதை நாம் காண்கிறோம். ஆசிரியர்கள், பெற்றோர்கள், குடும்பத்தில் மூத்தவர்கள், சமூகத் தலைவர்கள், பெரியவர்கள் என்பவர்களுடைய கருத்துக்களை அவர்கள் செவிசாய்த்து ஏற்பதாக என்னால் கருதமுடியவில்லை. அவ்வாறானவர்களிடம் ஆலோசனை கேட்டவர்கள் கூட இறுதியான முடிவை தாங்கள்தான் எடுக்க வேண்டும் என நினைக்கிறார்கள். மூன்றாவதாக, நாம் வாழ்ந்து கொண்டிருப்பது ஒரு அவசர யுகத்திலாகும். எனவே எதிலும் உடனடியான சடுதியான ஒரு தீர்வைத்தான் அவர்கள் எதிர்பார்த்து காரியமாற்றி வருகிறார்கள். முன்னோர் சொற்படி பொறுத்தார் பூமி ஆள்வார் என்பதில் அவர்களுக்கு அறவே நம்பிக்கை குறைந்து வருகிறது. எனவே பொங்கினால்தான் வீட்டை மட்டுமல்ல நாட்டைக் கூட ஆளமுடியும் என்ற ஒரு தன்மையில் இளைஞர்கள் இயங்கிக் கொண்டிருக்கிறார்கள். நமது நாட்டில் மட்டுமல்ல இன்று அகில உலகத்திலும் இத்தகைய ஒரு நிலைதான் வேகமாகப் பரவிக் கொண்டு வருகிறது.

மேலும் இன்றைய இளைஞர்கள் அவர்களுடைய இன, மத, சமூக பிரச்சினைகள் ஒருபக்கம் இருக்க பொதுவாகவே பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியவர்களாக உள்ளனர். பாடசாலை மாணவர்களை எடுத்துக் கொண்டால், **G.C.E. O/L** இற்கும் **G.C.E. A/L** ற்குமிடையே பாரிய இடைவெளியை நாம் காண்கிறோம். **G.C.E. O/L** பரீட்சையில் பல அதிவிசேட சித்தியைப் பெற்ற மாணவர்கள் கூட **G.C.E. A/L** இல் மிகச் சிரமப்படுவதை காண்கிறோம். மிகவும் பரந்துபட்ட ஒரு பாடத்திட்டமாக இந்த **A/L** பரீட்சை அமைந்திருப்பதும் பாடங்களை தெரிவு செய்யும் போது பெற்றோர்களின் வற்புறுத்தலுக்காகவும் ஆசிரியர்களுடைய ஆலோசனைகளுக்காகவும் பாடங்களை தேர்ந்தெடுப்பதும் இதற்குக் காரணங்களாகும்.

மேலும் தமிழ்ப்பாடசாலைகளிலே **G.C.E. A/L** கணித விஞ்ஞான வகுப்புகளுக்கு போதுமான ஆசிரியர்கள் இல்லை. ஆகவே மாணவர்கள் தனியார்களால் நடத்தப்படுகிற 'டியூட்டரி' களைத்தான் நம்பியிருக்க வேண்டியுள்ளது. அங்கு பல விடயங்கள் நடைபெற்றாலும் கல்வியும் நடைபெறுகிறது. ஆனால் ஒட்டுமொத்தமாக பார்க்கும் போது டியூட்டரிகளால் அவர்கள் பெறும் லாபத்தை விட தீமைகள்தான் அதிகமாக இருக்கிறது என்பதை நான் உணருகிறேன். மேலும் வாழ்க்கையே பணயமாக வைத்து படிக்கும் மாணவர்களுள் சர்வகலாசாலைக்கு செல்லக் கூடிய வாய்ப்பு மிகக் குறைந்த விழுக்காடு உள்ளவர்களுக்குத் தான் கிடைக்கிறது. எஞ்சியவர்கள்தான் இன்று ஒரு பெரிய பிரச்சினையாக நமது நாட்டில் இருக்கிறார்கள். எனவே சமூகத்தின் அடிமைத்தனத்திலிருந்த மாணவர்கள் இளைஞர்கள் எல்லோரும் இவ்வாறு திசைமாறிப் போவதற்கும் இந்த பரீட்சை முறைகள் காரணமாகியுள்ளது எனக் கருதலாம். அடுத்து **G.C.E A/L** பரீட்சையில் சித்தியடைந்துவிட்டு தகுந்த வேலையற்று பெற்றோர்க்கு பாரமாக இருப்பவர்கள் நட்டாற்றில் கைவிடப்பட்டவர்கள் போன்ற ஒரு தத்தளிப்பான நிலையில் உள்ளதை காணலாம்.

இதற்குரிய தீர்வு என்ன? இரண்டு அடிப்படை விடயங்கள் மாற்றியமைக்கப்படாவிட்டால் இந்த பிரச்சினைக்கு தீர்வு காண்பது என்பது முடியாத காரியம் ஆகிவிடும். இது ஒரு நாளிலையோ ஒரு வருடத்திலேயோ தீர்த்துவைக்கக்கூடிய பிரச்சினை அல்ல. முதலாவதாக இந்த சமுதாய அமைப்பு முறை மாற்றியமைக்கப்பட வேண்டும். ஏனெனில் இந்த சமுதாய அமைப்பே இளைஞர்களை விரக்தியின் எல்லைக்கு அழைத்துச் செல்கிறது. இரண்டாவதாக, அந்த சமுதாய அமைப்பை மாற்றியமைப்பதற்குரிய ஒரு பூரணமான திருப்தியான வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்த ஒரு கல்வித் திட்டம் அவசியம். ஆனால் எமது நாட்டில் அரசாங்கத்திற்கு அரசாங்கம் மாறும் போது கல்வித்திட்டங்கள் மாற்றியமைக்கப்படுவதையும் சிலவேளைகளில் ஒரே அரசாங்கத்தின் மந்திரிகள் மாறும்போது கல்வித்திட்டங்கள் மாற்றியமைக்கப்படுவதையும் காண்கிறோம். இவ்வாறு மேலெழுந்தவாரியாக செய்யப்படுகின்ற மாற்றங்களால் இலங்கையினுடைய அமைதியின்மைக்கு ஒரு நாளும் தீர்வு காண முடியாது. எனவே சுயநலத்தை மறந்து கட்சி அரசியலை மறந்து ஒரு ஆக்கபூர்வமான கல்வித்திட்டத்தை அனைத்து கல்வியாளர்களையும் கொண்டு அமைத்து நடைமுறைப்படுத்துவதுதான் இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வாக இருக்கும் என்பது எனது கருத்தாகும்.

**தெ.மதுசூதனன்**

***பத்திரிகை இலக்கியத்துறையிலும் விமர்சனத் துறையிலும் ஈடுபட்டுள்ளவர்.***

> **"இன்று எதிர்நோக்கக்கூடிய பிரச்சினைகளை விளங்கிக் கொள்ளக்கூடிய ஆற்றல் இளைஞர் களைத்தான் சார்ந்தது. இளைஞர்களால்தான் அதற்கு தீர்வு கொடுக்கக் கூடியதாக இருக்கும்."**

இன்றைய காலகட்டத்தில் இளைஞர்களுடைய பிரச்சினைகளை நாங்கள் உள் நோக்கும் போது

' ஒரு சில பொதுவான அம்சங்களை நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இன்றைய வாழ்வியல் ஓட்டத்துடன் இளையதலைமுறை இணைந்து கொள்ள முடியாத நிலைக்கு சில காரணங்கள் உள்ளன. கடந்த காலங்களில் எமது முன்னைய தலைமுறையினர், எதிர்காலம் பற்றிய தூர நோக்கற்ற ஆரோக்கியமற்ற சிந்தனைகள் சிரத்தையின்மை காரணமாக, அவர்கள் விட்ட தவறுகள் இன்றைய இளைஞர் சமூகம் மீதான பல்வேறுபட்ட பிரச்சினைகளையும் சுமைகளையும் கொடுத்துள்ளது எனலாம். இன்றைய இளையதலைமுறையினருக்கு இருக்கக்கூடிய ஒரு முக்கிய சவாலான இதனை எவ்வாறு அவர்கள் எதிர் கொள்கிறார்கள் என்பதில்தான் எமது எதிர்காலமே தங்கியுள்ளது.

இன்றைய பிரச்சினைகளை முன்னைய தலைமுறையினர் விளங்கிக் கொள்ள மறுக்கிறதும் அல்லது அவர்கள் எம்மீது சுமத்தும் குற்றச்சாட்டுகளால் அவர்கள்மீது எங்களுக்கு எழக்கூடிய தார்மீகக் கோபங்களும் எங்களை ஒரு இக்கட்டான நிலைக்கு அதாவது நாங்களே எங்கட பிரச்சினையை தீர்க்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறோம். இது இயல்பாக ஒரு புதிய தலைமுறை என்ற இடைவெளியை அதாவது இளைஞர்கள் முதியவர்கள் என்ற போக்கை உருவாக்கிக் கொண்டிருக்கிறது.

இந்த நோக்கில் பார்க்கும் போது இதை வெறுமனே இலங்கை நிலைப்பட்ட பிரச்சினை என்று பார்ப்பதை விடுத்து சர்வதேச ரீதியில் பார்த்தால் கூட இளைஞர்களுக்கும் முதியவர்களுக்குமிடையே ஒரு முரண்பாடு தொடர்ச்சியாக தோன்றிக் கொண்டுதான் வந்திருக்கிறது. ஐரோப்பிய நாடுகளில் 60 களில் ஏற்பட்ட நவீன சிந்தனைகளும் வளர்ச்சிகளும் அறிவியல் மதிப்பீடுகளில் ஏற்பட்ட மாற்றங்களும் இளைஞர்களுக்கும் முதியவர்களுக்குமிடையே ஓர் இடைவெளியை அங்கும் ஏற்படுத்தியது. 65 இற்கு பிற்பாடு லத்தீன் அமெரிக்க நாடுகளில் மாற்றுச் சிந்தனையுடையவர்களாக தங்களுடைய புதிய சிந்தனைகளை வெளிப்படுத்துகின்ற அடிப்படையில் இளைஞர்கள் மேற்கிளம்பி வந்ததும், அது ஏற்கனவே இருந்த சிந்தனையாளர்களான பழைய தலைமுறைக்கும் இளைய தலைமுறைகளுக்கும் இடையே ஒரு முரண்பட்ட உறவுநிலைகளை தோற்றுவித்ததையும் காணலாம். இந்த வகையில் இலங்கையும் இதற்கு விதி விலக்கல்ல.

இலங்கைக்குரிய விசேடமான தனித்துவ நிலைகளிலிருந்து இப்பிரச்சினைகளை துல்லியமாக பார்க்கும் போது தமிழ்ச் சமூகத்தின் சமூக, பொருளாதார அரசியல் பண்பாட்டு சிந்தனைகள் என்ற பல நிலைகளிலும் பல நெருக்கடிகளையும் பல சவால்களையும் இளைய தலைமுறை எதிர்கொள்ள வேண்டி உள்ளது. சிங்கள சமூகத்திற்கும் இவ்வாறான பிரச்சினைகள் இல்லை என்றில்லை. ஆனால் தமிழர் என்ற காரணத்துக்காகவே இளைய தலைமுறை இவ்வாறான பிரச்சினைகளை எதிர்நோக்குகிறது.

இன்று உலகம் ஒரு பூகோளக் கிராமமாக மாறிக் கொண்டிருக்கிற அதேசமயம் எங்களைப் போன்ற சமூகங்களில் குறிப்பாக இனத்துவங்களும் பண்பாட்டினுடைய தனித்துவங்களும் மேற்கிளம்பி வருகின்ற போக்கும் காணப்படுகிறது. சர்வதேச ரீதியில் ஏற்பட்டுவரும் இந்த வளர்ச்சியை முகம் கொடுத்து உள்வாங்காமல் இருக்க முடியாது. இவ்விரண்டையும் எவ்வாறு சமநிலைப்படுத்திப் பார்க்கப் போகிறோம் என்பது இன்றைய இளைய தலைமுறைக்கு ஒரு சவால்தான்.

20 ம் நூற்றாண்டு முடிகிற தருவாயில் நாங்கள் பல்வேறுபட்ட துன்பங்களுக்கும் சுமை அழுத்தங்களுக்கும் உள்ளாகி ஒரு நெருக்கடி சமூகமாக மாறியுள்ளோம். எங்களுடைய சமூகம் சிதறுப்பட்டுப் போயுள்ளது. இதனால் எங்களுடைய வளங்களெல்லாம் சிதைக்கப்பட்டதாக குறுகிய காலத்தில் இழந்து போகத்தக்கதாக வளர்ந்துள்ளது.

21 ம் நூற்றாண்டு பற்றி எதிர்காலவியல் அறிஞர்கள் சொல்கின்ற கருத்துப்படி அது அறிவியலையும் தொழில்நுட்பத்தையும் மையப்படுத்தி அமையப்போகிறது. எனவே இவற்றை மையமாக வைத்துதான் ஒரு சமூகத்தின் மதிப்பீடுகள் இனி அமையப்போகிறது. எனவே எதிர்கால சமூகம் இதை எவ்வாறு எதிர்கொள்ளப் போகிறது என்பதை இளந்தலைமுறை இன்று சிந்திக்க வேண்டும். நாம் எதிர்கொள்ளப்போகிற பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வேண்டிய அதே நேரத்தில் எம்மை சர்வதேச ரீதியில் இணைத்துக்கொள்ளக்கூடிய தேவையும் இன்று இளையதலைமுறை மத்தியில் காணப்படுகிறது.

இளைஞர்கள் என்றால் அனுபவமில்லாதவர்கள் பொறுப்பற்றவர்கள் என்ற கருத்து உள்ளது. 3 ம் உலக நாடுகளை பொறுத்தவரை இந்தக் கருத்து ஒரு மறுசிந்தனைக்குரிய கருத்தாக பார்க்கப்பட வேண்டியது அவசியம். ஏனெனில் அனுபவம், அனுபவம் இல்லை என்பது ஒருபக்கம் பிரச்சினையாக இருந்தாலும், இன்று எதிர்நோக்கக்கூடிய

பிரச்சினைகளை விளங்கிக் கொள்ளக்கூடிய ஆற்றல் இளைஞர்களைத்தான் சார்ந்தது. இளைஞர்களால்தான் அதற்கு தீர்வு கொடுக்கக் கூடியதாக இருக்கும். எனவே இளைஞர்கள் வரலாற்றில் நாம் பார்ப்பதைப் போல் அனுபவமின்மையைக் காரணம் காட்டி இளைஞர்களை தட்டிக்கழிக்க கூடாது.

இளைஞர்கள் என்பவர்கள் பொறுப்பானவர்கள் தான். சமூக அசைவியக்கத்திற்கு ஒரு முக்கியமான தொடர்பு மையமாகவும் பாத்திரமாகவும் இருக்க வேண்டியது பற்றிய ஒரு சிந்தனையாக நாம் இளைஞரை புரிந்து கொள்ள வேண்டும்.

பழைய தலைமுறையினரின் அனுபவங்களை உள்வாங்கி கிரகித்துக் கொள்கிற விழிப்புணர்வு இருக்க வேண்டிய நிலையும் இளைய தலைமுறைக்கு அவசியமாகிறது. அதே நேரத்தில் சமூகத்தின் எதிர்கால அசைவியக்கங்களின் முதன்மைப் பாத்திரமாக இளைய தலைமுறை இருப்பதனால் முதியவர்களை அரவணைத்துக் கொள்கிற ஒரு தலைமைத்துவ பொறுப்பும் இளைஞர்களை சார்ந்தது.

மேலும் அனுபவங்கள் மட்டுமோ அல்லது முதிர்ச்சி மட்டுமோ எமது இன்றைய பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டுவிட முடியாது. இதற்கு அறிவியல்துறை சார்ந்த காரணிகளும் முக்கியமானதாகும். எனவே அறிவியல்துறை சார்ந்த விடயங்களை யார் விரும்பிக் கற்கிறார்கள் என்றால் அது இளைய தலைமுறையாகத்தான் இருக்கும். தொழில்நுட்பத்துறை வளர்ச்சியை வைத்துக் கொண்டுதான் ஒரு சமூகத்தை நாம் மதிப்பிடுகிறோம். சிலவேளைகளில் தொழில்நுட்பத்துறையில் முன்னணி இல்லாவிட்டாலும் அறிவுத்துறையில் முன்னணி இருப்பதான ஒரு சமூகம் இருக்கிறது. ஆகவே இவ்விரண்டையும் இணைத்துப் பார்க்கிற ஒரு சந்ததி எங்களுக்கு வேண்டும்.

இன்றைய கல்விமுறையை எடுத்துக் கொண்டால், இன்று வளர்ந்து வருகிற பல்வேறுபட்ட புதிய சிந்தனைகளை உள்வாங்கக்கூடிய, சிந்தனைகளை பாடவிதானத்தில் உள்ளடக்கி அவற்றை கற்றுக் கொடுக்கக்கூடிய அளவிற்கு எங்கள் ஆசிரியர்களின் கற்பித்தல் முறைகள் எவ்வாறு இருக்கின்றதென்பது முக்கியமானதொரு விடயமாகும். இன்று ஆசிரியர் கற்பித்தல் முறைகளை நோக்கும் போது புதிய வடிவங்களில் கற்றுக் கொண்டு கற்பிக்கும் நிலை குறைவாகத்தான் இருக்கிறது. இதனால் நாங்கள் எதிர்நோக்கக்கூடிய பல்வேறு புதிய பிரச்சினைகளை விளங்கிக் கொள்ளக்கூடிய ஒரு புதிய இளம் சமூகத்தை உருவாக்குவதில் எங்களுடைய பல்கலைக்கழகங்கள் பின்தங்கியிருப்பது கவனிக்கத்தக்கது. இது எங்களை பின்னிப்பிணைந்துள்ள பிரச்சினைகளை அறிவுபூர்வமாக சிந்திப்பதற்கும், புரிந்து கொண்டு ஒரு தீர்க்கமான தீர்வை நோக்கி வழிநடத்திக் கொண்டிருக்கும் ஆற்றல்களை நாம் இழந்து போகும் நிலைக்கும் தள்ளுகிறது. ஆகவே பல்கலைக்கழக பாடங்களை ஒப்புவிப்பதோடு மட்டுமல்ல, அதற்கூடாக புதிய சிந்தனைகளை வழங்குகின்ற புதிய கருத்துக்களை உற்பத்தி செய்கின்ற நிறுவனங்களாகவும் தொழிற்பட வேண்டும்.

இன்று அறிவுத்துறையில் ஏற்பட்டிருக்கிற இடைவெளிகளை நிரப்ப முடியாத நிலை காணப்படுகிறது. குறிப்பாக எங்களுடைய அறிஞர்கள் புலமைவாதிகள் எல்லோரும் நாட்டை விட்டு போகிற அவலம் காணப்படுகிறது. இதனால் எங்களின் ஒவ்வொரு துறைசார்ந்த கற்கைநெறிகளும் ஏதோவொரு விதத்தில் பின்னடைவுக்குள்ளாகக் கூடிய சந்தர்ப்பங்கள் உள்ளன. எனவே இருப்பதையே ஊட்டி ஊட்டி கொடுப்பதும் ஒரு பிரச்சினையாக உள்ளது. இன்றைய பிரச்சினைகளை விளங்கிக் கொண்டும் புதிய சிந்தனைகளை உருவாக்கிக் கொண்டும் வருகின்ற மாணவ சமுதாயம் இன்று இருந்தாலும் அதை இன்னும் ஆழப்படுத்தி அகலப்படுத்த வேண்டிய தேவைகள் தான் இன்று உள்ளது. இதை மாணவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். இந்தக் கடமைகளிலிருந்து நாங்கள் தவறினால், நாம் எவ்வாறு முன்னைய தலைமுறையை குற்றம் சுமத்துகிறோமோ அதேபோல் அடுத்து வருகின்ற சமூகம் எங்கள் மீது குற்றம் சுமத்த வேண்டிய நிலை வரும். எனவே அவரவர் துறை சார்ந்த நிலையில் அதில் சமூக நிலைப்பட்டு தங்களுடைய பிரச்சினைகளை தீர்க்கக்கூடிய வகையில் அவர்கள் சிந்திக்கப்பழக வேண்டும்.

உலகில் தொழில்நுட்பத்துறையில் சமனற்ற வளர்ச்சியும் அறிவுத்துறையில் சமனற்ற வளர்ச்சியும் இன்று தோன்றியுள்ளது. இது ஒரு ஆபத்தை உணர்த்தும் நிலையாக காணப்படுவதால் ஒரு நிதானமாக, சமனாக மதிப்பிட்டுப் பார்க்கக்கூடிய ஒரு இளைய தலைமுறை உருவாக வேண்டும். எங்களாலும் எங்கள் மொழிக்குள்ளும் பல புதிய சிந்தனைகளை கொண்டு வரலாம். எங்களால் முடியும். எங்களாலும் உலகளாவிய ரீதியில் ஏற்பட்டிருக்கிற மாற்றங்களில் தாக்கம் செலுத்த முடியும் என்ற ஒரு தன்னம்பிக்கை கொண்ட சமூகமாக இளையதலைமுறை மாற வேண்டும்.

*German, Japan, France* போன்ற நாடுகள் அவர்கள் தாய்மொழியில்தான் புதிய புதிய சிந்தனைகளை வெளிப்படுத்துகின்றனர். ஆனால் எங்களைப் போன்ற காலனித்துவ ஆட்சிக்குட்பட்ட நாடுகளில் மட்டும்தான் எங்களால் முடியுமா? என்ற கேள்வி எழுப்பப்படுகிறது. இந்த அடிமை மனோபாவத்திலிருந்து நாம் விடுபட வேண்டும். தமிழால் முடியும் என்ற ஒரு நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். இல்லாவிடின் எந்தவொரு சமூகமும் முன்னோக்கி செல்ல முடியாது என்பதை இளைஞர்கள் உணர்ந்து சிந்தித்து செயலாற்ற வேண்டியது கட்டாயமாகும்.

இன்று எங்களுடைய இருக்கைகள் இருப்புக்கள் எல்லாம் கேள்விக்குள்ளாக்கப்பட்டிருப்பதனால் எங்களுடைய முழு வளர்ச்சியும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. எனவே பல்வேறுபட்ட சவால்களை எதிர்கொள்ள வேண்டிய நிலைக்கு நாம் ஆளாகியுள்ளோம். ஒரு சமூகத்தின் எதிர்காலம் தொடர்பாக தெளிவாக திட்டமிட்டு செயலாற்றுவதற்கு எங்களுக்கு சில போதாமைகள் உண்டு. இதனால் தமிழ் சமுதாயத்தில் அண்மைக் காலங்களில் ஏற்பட்டிருக்கக்கூடிய நெருக்கடி நிர்ப்பந்தங்கள் ஏதோ ஒரு விதத்தில் அதிலிருந்து விடுபட வேண்டும் என்ற சிந்தனைப் போக்கினை ஏற்படுத்தியுள்ளது. எனவே இளைய தலைமுறை மத்தியில் வெளிநாட்டு மோகம் காணப்படுகிறது. இது குறிப்பாக அரசியல் அந்தஸ்து கோருகின்ற என்ற போர்வைக்குள் ஒரு வகையான பொருளீட்டல் அடிப்படையிலேயே நடைபெறுகிறது. இதற்கு மாற்றுரீதியில் நம்பிக்கை பெறும் அளவிற்கு அதற்கான சிந்தனையை கொடுக்கக்கூடிய அளவிற்கு வாய்ப்புக்கள் எங்களுக்கு குறைவாக இருப்பது காரணமாகும். உதாரணமாக படித்து பட்டம் பெற்றவர்களுக்கு உடனடியாக இங்கு என்ன வேலை என்ற கேள்வி எழுகிறது. இதற்கு அரசியல் ரீதியாக ஏற்பட்டுள்ள சிக்கற்பாடுகளும் சரியான வேலை வாய்ப்பின்மையும் தமிழர் என்ற காரணத்துக்காகவே எமக்கு கிடைக்க வேண்டிய பல வேலை வாய்ப்புக்கள், அந்தஸ்துகள் கிடைக்காமையும் காரணங்களாகின்றன. அதேநேரத்தில் இன்று இளைஞர்களிடையே காணப்படும் பாதுகாப்பற்ற உணர்வு, அதனால் ஏற்பட்ட நம்பிக்கையீனம் பயப்பிராந்தியத்துடன் வாழவேண்டிய நிர்ப்பந்தம் எல்லாம் சமூகத்தின் மீதான ஒரு நம்பிக்கையீனத்தை உருவாக்கியுள்ளது. எனவே எங்கேயாவது ஓடுவம் எங்கேயாவது தப்புவம் என்ற மனநிலை காணப்படுகிறது.

மேலைத்தேய சிந்தனைகளுடைய தாக்கங்கள் பண்பாட்டுடைய தாக்கங்கள் பொதுவாக கீழைத்தேய நாடுகளில் இருப்பதை காண்கிறோம். காலனித்துவ ஆட்சிக்குட்பட்ட நாடுகளில் ஏதோ ஒரு விதத்தில் இந்த மேற்கத்திய மயப்படுத்தப்படல் என்ற ஒரு நிலைக்கூடாகத்தான் நவீனமயப்படுத்தப்படல் என்ற ஒரு நிலை உருவாகியிருக்கிறது. இதனால் எப்பவும் ஒரு மேற்குமயமாக்கப்பட்ட ஒரு கண்ணோட்டம் இருப்பதும் தவிர்க்க முடியாது. அதாவது எங்களை தாழ்வாகவும் மேற்குலகிலுள்ளவர்களை உயர்வாகவும் கருதுகின்ற ஒரு சிந்தனைப் போக்கு எங்கள் சமூகத்தில் இருக்கிறது. எனவே எங்களுக்கு இருக்கக்கூடிய ஆற்றல்கள் திறமைகள் எல்லாவற்றையும் விட மேற்கு நாடுகள் மீதுள்ள திறமைகள் ஆற்றல்கள் மீதான ஒரு அவா, ஒரு வேட்கை, அதை பார்த்து இன்புற்றிருக்கக் கூடிய தன்மைகள் காணப்படுகின்றன. உலகளாவிய ரீதியில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் பல்வேறுபட்ட சமூகங்களிலும் ஏதாவதொரு தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டுதான் இருக்கும். இத்தாக்கங்களிலிருந்து நாமும் விடு பட முடியாது. அதற்காக மேற்கைத்தான் இங்கு கொண்டுவரவேண்டும் என்பதல்ல உண்மை. உதாரணமாக இன்று மேற்குலக நாடுகளைச் சேர்ந்த கல்வித்துறை ஆய்வாளர்கள் எல்லோரும் ஆய்வின் பொருளாக தேர்ந்தெடுக்கிற விடயங்கள் எல்லாம் பொதுவாக கீழைத்தேயத்தை நாடியுள்ளதை காணலாம். அவர்கள் எங்களை நோக்கி வருகிறார்கள். நாம் அவர்களை நோக்கிப் போகிறோம். எனவே பண்பாட்டு ரீதியாக இந்நாட்டு இளைஞர்கள் கடைப்பிடிப்பதெல்லாம் காலனித்துவ மரபிற்கூடாக வந்த விடயங்கள்தான். ஆனால் இன்று தவிர்க்க முடியாத இந்த மேற்குநாடுகளின் ஆதிக்கச்செல்வாக்கு ஏதோவொரு விதத்தில் கீழைத்தேய நாடுகளை சிந்திக்க வேண்டிய ஒரு கட்டத்திற்கு தள்ளியுள்ளது.

எமது பண்பாட்டிலும் பல்வேறு பிற்போக்கான ஆதிக்கக் கூறுகள் உள்ளன. ஒரு சமூகத்தை ஒதுக்குகின்ற கூறுகள் இருக்கின்றன. சில பிரதேச வேறுபாடுகள் இருக்கின்றன. சாதிய பிரச்சினைகள் இருக்கின்றன. ஆண் மேலாண்மை கூடிய கருத்துக்கள், சிந்தனைகள் உள்ளன. மதங்கள் தொடர்பான ஒரு பாரபட்சமான ஒடுக்கப்பட்ட சிந்தனைகள் உள்ளன. இவை மாற்றம் பெற வேண்டும். கிறிஸ்தவ, சைவ, முஸ்லிம் என்ற மதங்களில் பண்பாட்டு தனித்துவங்கள் இருப்பதும் அவற்றை அங்கீகரிப்பதுமான ஒரு பன்முகப் பண்பாட்டு சிந்தனைகளை வலியுறுத்துபவர்களாக இன்றைய இளைஞர்கள் இருப்பது அவசியம். இதிலிருந்து நாம் விடுபடவில்லை என்றால் நாம் எதிர்காலத்தில் பல்வேறுபட்ட சிக்கல்பாடுகளையும் சவால்களையும் எதிர்கொள்ள வேண்டியவர்களாக இருப்போம்.

***Dr. கொ. றொ. கொன்ஸ்ரன்ரைன்***

**உளவியல், கலை இலக்கிய ஓவியத் துறைகளில் ஈடுபாடுள்ளவர்**

> **"வாழ்க்கையில் ஒரு குறிக்கோள் இருந்தால் பிரச்சினைகள் இருந்தாலும் அவற்றை மறந்துவிடலாம். ஆனால் பிரச்சினையை மேவி அடுத்து என்ன செய்வது என்ற சிக்கலே இன்று காணப்படுகிறது.**
>
> **இளந்தலைமுறையினருக்கு அனேக குறிக்கோள் கள் இருக்கலாம். ஆனால் அவை தீவிரமாக இருந்தால்தான் ஒரு உத்வேகம் இருக்கும்."**

*இன்றைய இளையதலைமுறையினர் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு முக்கிய காரணங்களாக எமது சமூக பொருளாதார அரசியல் முறைகளிலும் கல்வி முறையிலும் உள்ள சிக்கல்களை குறிப்பிடலாம்.*

*உதாரணமாக இன்று எல்லா எண்ணங்களும் அரசியல் மயமாக்கப்பட்டுள்ளது. ஒருவரை தனியான ஒரு நபராக பார்ப்பதில்லை. முதலில் தமிழர் என்று பார்த்து பின் தொழில், கல்வி நிலைகளை பார்த்து எடைபோடும் நிலையே இன்று காணப்படுகிறது. இதனால் தமிழ் இளைஞர் யுவதிகளுக்கு ஒருவகையான தாழ்வு மனப்பான்மை காணப்படுகிறது. எங்களால் ஒன்றும் செய்ய முடியாது, எங்களுக்கு இரண்டாம் இடம்தான் கிடைக்கும் போன்ற எண்ணங்களில் ஓரளவு உண்மை இருந்தாலும் மீண்டும் மீண்டும் அவ் எண்ணங்களை பலப்படுத்துவதைத்தான் காணக்கூடியதாக உள்ளது. எனவே ஒரு இடத்தில் தொடர்ந்து இருக்க முடியாது என்ற மனப்பான்மையில்தான் எல்லோரும் இருக்கின்றனர்.*

*மூன்றாம் உலக நாடுகளுடன் ஒப்பிடும்போது பல்கலைக்கழகங்களிலும் சரி கைத்தொழிலும் சரி இலங்கையில் ஒரு தேக்க நிலையே காணப்படுகிறது. எனவே வேலை வாய்ப்பின்மை என்பது ஒரு பிரச்சினையாக உள்ளது. இது அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்து கொண்டால் சும்மா இருத்தலே சுகம் என்ற அபிப்பிராயத்தை தோற்றுவிக்கிறது.*

*அறிவின் பெருக்கத்துடன் முன்னேற்றமும் ஒன்றாக செல்வதற்குரிய சாத்தியக்கூறு இருந்தாலும் பழைய முறைகளிலிருந்து விடுபடல் கஷ்டமாகத்தான் உள்ளது. உதாரணமாக 40 களில் கடைபிடித்த பிரித்தானிய கல்விமுறைகளையே நாம் இன்னும் பின்பற்றுகிறோம். ஆனால் பிரித்தானியாவில் அது எப்போதோ மாற்றம் பெற்றுவிட்டது. சமூக அரசியல் உளவியல் மனச்சட்டகமானது ஒரு இடத்திலேயே நிலைநாட்டப்பட்டிருப்பதே இதற்குக் காரணமாகும். எனவே இங்கு குறிப்பிட்ட ஒரு நிலைக்குமேல் முன்னேற்றம் இல்லை. இதற்கு வசதியின்மையும் ஒரு காரணமாகும்.*

*மேற்குலக நாகரீகம் இங்கு வருவது என்பது கடினமான ஒரு செயலாகும். ஆனால் மேற்குலக தொழில்நுட்ப விஞ்ஞான அறிவை இங்கு கொண்டு வருவது இலகுவான காரியம். ஏனெனில் அவை இரண்டும் வெவ்வேறு தளங்களில் செயற்படுகின்றன. உதாரணமாக அமெரிக்காவில் நடப்பதை இங்கு உடனடியாக அறிந்து கொள்வதற்குரிய தொடர்பாடல் வசதிகளெல்லாம் இருக்கின்றன. ஆனால் அவற்றை அடைவதற்கான வசதி இளந்தலைமுறையினருக்கு மிகக்குறைவு. வசதிகள் இருக்கும் போது சின்னச்சின்ன பிரச்சினைகள் கூட பெரிதாகத் தெரியாது. ஏனெனில் எல்லா வசதிகளும் இருக்கும் போது மனதை திசை திருப்பி வேறொன்றில் கவனம் செலுத்தக் கூடியதாக இருக்கும்.*

*எமது அரசியல் முறையானது தைரியமாக ஒரு காரியத்தை ஆரம்பிக்கும் குணத்தை ஊக்குவிப்பதில்லை. ஊக்குவிப்புகளெல்லாம் ஏதோவொரு அமைப்பிற்குள் மட்டும் இருப்பதனால் உண்மையாக திறமையுள்ள இளந்தலைமுறையினர் முன்னுக்கு வருவது கஷ்டமாகும். உதாரணமாக பல்கலைக்கழக மாணவர்கள் ஏதோ படித்தால் காணும் என்ற மனோநிலையில் இருப்பதற்கு படித்தபின்னர் வாய்ப்புக்கள் இல்லாமையே காரணமாகும். எனவே வாழ்க்கை மீது ஏற்படும் சந்தேகம் ஒரு விரக்தியை ஏற்படுத்திவிடுகிறது.*

*ஒரு குடியரசானது எப்பொழுதும் ஒரு இனப்பிரச்சினையை அல்லது சமயப்பிரச்சினையை அல்லது ஏதாவதொரு வித்தியாசத்தை வைத்தே தப்பிப்பிழைத்திருக்கும். அதாவது கட்சி அரசியலானது கிழக்காசிய நாடுகளில் ஒரு பாகுபாடு ஏற்படுத்துகிற அரசியலாகவே உள்ளது. ஆனால் மேலைத்தேய அரசியலமைப்பானது கொள்கைகளை*

ஆதாரமாகக் கொண்டது. இவ்வரசியல் அமைப்பானது இலங்கையில் பொதுத்தன்மைவாய்ந்த அபிவிருத்தியை ஏற்படுத்துவதில்லை. அதாவது கொழும்புப் பிரதேசம் மட்டுமே அபிவிருத்தி செய்யப்படுவதால் வேறு இடங்களில் வேலை செய்ய எவரும் விரும்புவதில்லை. எனவே இளந்தலைமுறையினர் கொழும்பை நாடி வரவேண்டியிருப்பதும் அவர்கள் எதிர்நோக்கும் ஒரு பிரச்சினையாகும். புகழ்பெற்ற பாடசாலைகள் யாவும் கொழும்பிலேயே இருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தனியார் துறையானது சிறப்பாக வேலை செய்யும் திறமையை அடிப்படையாகக் கொண்டது. இவை திறமை குறைந்தவர்களை வேலைக்கமர்த்தி தங்கள் ஆரம்ப, பயிற்சியினை வழங்குவதன் மூலம் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பினை வழங்குவதிலிருந்து தவறிவிடுவது அம்மாணவர்களைப் பொறுத்தவரை ஒரு பிரச்சினைதான்.

எங்களுடைய சமூக அரசியல் அமைப்புகள் எங்களுக்குள்ளாகவே பிரதிபலிக்கப்படுகிறது. ஒருவர் யாரென நாம் ஆராய்ந்து பார்த்தால், அவருக்கூடாக வெளிப்படுவது சமூக அமைப்பும் சமூக அரசியல் நிலைப்பாடுகளும் தான். செயற்பாடுகள் வெவ்வேறாக இருந்தாலும் அவையெல்லாம் இதற்கூடாகத்தான் பிரதிபலிக்கப்படுகிறது. எனவே ஒருவரின் முன்னிற்கும் தன்மையின்மை, பொறுப்பின்மை என்பவை இந்த சமூகத்தின் நிலையைத்தான் காட்டுகிறது. இவற்றிற்கு அடிப்படை காரணம் ஆரோக்கியமற்ற அமைப்புகளும் சக்திகளுமாகும்.

தற்கொலைவீதம் இலங்கையில்தான் அதிகம் எனக் கூறப்படுவது எவ்வளவுதூரம் உண்மை என்பது பிரச்சினையாக இருந்தபோதிலும் அதற்கு முக்கிய காரணம் அடுத்த படி என்ன என்ற கேள்விக்குறியாகும். அடுத்தபடி என்ன, அதில் காணப்படும் தடைகள் என்ன என்ற சிந்தனைகள் கூடும் போது தற்கொலை எண்ணங்களும் மேலோங்குகின்றன. இதற்கு வாழ்க்கையில் எதிர்நோக்கும் தோல்விகளும் ஒரு காரணமாகும். எனவே தோல்வி மனப்பான்மையிலிருந்து விடுபடல் அவசியம். வாழ்க்கையில் ஒரு குறிக்கோள் இருந்தால் பிரச்சினைகள் இருந்தாலும் அவற்றை மறந்துவிடலாம். ஆனால் பிரச்சினையை மேவி அடுத்து என்ன செய்வது என்ற சிக்கலே இன்று காணப்படுகிறது.

இளந்தலைமுறையினருக்கு அனேக குறிக்கோள்கள் இருக்கலாம். ஆனால் அவை தீவிரமாக இருந்தால்தான் ஒரு உத்வேகம் இருக்கும். ஒருவர் தமது உருவாக்கும் திறமையையும் உழைப்பையும் போட்டு பலாபலனை எதிர்பார்ப்பது வழமை. ஆனால் எமது நாட்டில் சிறந்த அபிவிருத்தி முறைகள் இல்லாமையினால் இளந்தலைமுறையினருக்கு எதை இலக்காக கருதுவது என்ற பிரச்சினை உள்ளது. ஏதாவதொன்றை இலக்காகக் கொண்டு அதில் சக்திகளை ஒருமுகப்படுத்தி அறிவையும் ஆற்றலையும் செலுத்தி அதை அடைவதற்கான உத்வேகத்தை இச்சமூகம் உருவாக்காததால் ஏனைய ஈடுபாடுகளிலும் அதேமாதிரியான மனோபாவமே காணப்படுகிறது.

கலைத்துறையைப் பொறுத்தவரை இளந்தலைமுறையினரின் ஈடுபாடு அதிகளவில் காணப்படுகிறது. சிங்களவர்களைப் பொறுத்தவரை அவர்களுக்கு வாய்ப்புக்கள் அதிகம். எனவே ஆர்வமும் அதிகம். மேலும் அவர்களின் முன்னணி கலைஞர்கள் எல்லாம் கொழும்பிற்கு வெளியே பரவலாக இருப்பதும் அவர்களைப் பொறுத்தவரை ஒரு அனுகூலம்தான். ஆனால் எமது வாய்ப்புகள் குறைவாகவுள்ளதால் தடைக்கற்களே அதிகம். அத்தோடு எம்மைப் பொறுத்தவரை யாழ்ப்பாணம், மட்டக்களப்பு என்று ஒரு சிறு கூட்டமாகத்தான் கலைத்துறையில் ஈடுபடுவதை காண்கிறோம். இது சந்தர்ப்பங்களை குறைக்கின்றது என்பதே உண்மை. சந்தர்ப்பங்கள் இருந்தால்தானே உத்வேகம் இருக்கும்.

மேலும் போதைப் பொருட் பாவனையெல்லாம் விரக்தியின் வெளிப்பாடுகளே. ஒன்றை அடையக்கூடியதான சமூக அபிவிருத்தி இங்கில்லாததால் எதை நோக்கிப் போவது என்ற விரக்தியே இதற்கும் காரணம். இளமைப்பருவத்தில் அவற்றைப் பாவித்துப் பார்க்க வேண்டும் என்ற உணர்வு வருவது இயற்கை. எனினும் இது ஒன்றை ஈடுசெய்யும் ஒரு வழக்கமாகத்தான் காணப்படுகிறது.

எனவே இன்றைய இளைதலைமுறையினர் எதிர்நோக்கும் இவ்வகையான பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டுமாயின் சமூக அரசியல் முறைகளும், கல்வி முறைகளும் மாற்றம் பெறுவது அவசியம். கல்விமுறை இப்படியே இருந்தாலும் கூட, உண்மையான, ஊக்கமுள்ள திறமையான மாணவர்களை அடையாளம் காணத்தக்கதாக ஆவது அது மாற்றியமைக்கப்பட வேண்டும்.

***"இளைஞர்களின் நம்பிக்கைகளையும் எதிர்பார்ப்புகளையும் சிதறடிக்கும் வகையில் வேலையில்லாத் திண்டாட்டம் விஸ்வரூபம் எடுத்துள்ளது. பணபலமும் அதிகாரபலமும் பெற்றவர்களின் சுயநலவேட்கைக்கும் பேராசைக்கும் ஈவிரக்கமற்றபோக்குக்கும் சமூகநீதி பலியாவதைப் பார்க்கின்ற இளையதலைமுறையினர் சினத்துக்கும் சலிப்புக்கும் ஆட்படுகின்றனர்.***

***சமுதாயத்தை வழிநடத்திச் செல்பவர் மத்தியில் காணப்படும் போலிவேடம், அவர்களுடைய உபதேசங்களுக்கும் உண்மையான செயற்பாடுகளுக்கும் இடையில் நிதர்சனமாகத் தெரியும் பலத்த வேறுபாடு முதலியன இளைஞர்களைக் கொதிப்படைய வைக்கின்றன."***

## தலைமுறை முரண்பாடு

*பேராசிரியர் சி.தில்லைநாதன்*

*தலைமுறை இடைவெளி பற்றியும் இளைய தலைமுறையினருக்கும் முதிய தலைமுறையினருக்கும் இடையிலான முரண்பாடு பற்றியும் இன்று பலவாறாகப் பெருமளவுக்குப் பேசப்படுகிறது. இளைஞர்கள் பொறுமையும் பொறுப்புணர்வும் இல்லாதவர்களாகவும் போராட்ட குணம் மிகுந்தவர்களாகவும் காணப்படுகிறார்கள் என்று ஆதிக்கத்திலுள்ள முதியவர்கள் குறை கூறுகிறார்கள். அதேவேளையில், முதியவர்கள் சுயநலமும் பிற்போக்குத் தன்மையும் பிடிவாதமும் கொண்டவர்களாக இருக்கிறார்கள் என்று இளைஞர்கள் குற்றம் சாட்டுகிறார்கள். இந்நிலையில், இந்தத் தலைமுறை முரண்பாடு குறித்துச் சிந்தித்துப் பார்க்க வேண்டியது அவசியமாகும்.*

*தலைமுறை என்பதற்கு ஒருவரிருந்து வாழும் காலம், பரம்பரை, வமிசாவழி, இனச்சார்பு என்ற கருத்துக்கள் மதுரைத் தமிழ்ப் பேரகராதியில் காணப்படுகின்றன. ஆயினும், ஒருவன் பிறப்பதற்கும் பிள்கைளை அவன் பெறுவதற்கும் இடைப்பட்ட காலப்பகுதியைக் குறிப்பதாகவே அதனை இன்று யாம் கொள்கிறோம். சமூகவியல் ரீதியாக நோக்குமிடத்து, பரம்பரையினைக் காட்டிலும் பிறந்தகாலப் பகுதிக்குரிய பிரக்ஞை கூடிய முக்கியத்துவம் பெறுவதாகும். அந்தவகையில், ஒரேகாலப் பகுதியில் பிறந்தவர்களுக்குப் பொதுவான அனுபவங்கள், ஈடுபாடுகள், விழுமியங்கள், மனப்பாங்குகள், பழக்கவழக்கங்கள், நடையுடைபாவனைகள், உலகநோக்கு முதலானவை கவனத்திற்கொள்ளப்பட வேண்டியவையாகும்.*

மாறுதல் உலகத்தின் இயற்கையாகும். வாழும் உலகினைச் சேர்ந்தவர்களுக்கு, பென்சில் பேனா, கார், சைக்கிள் போன்றனவற்றைப் போலன்றி, இளமையும் வளர்ச்சியும் முதிர்ச்சியும் மரணமும் உண்டு. மனிதவாழ்க்கையை நான்கு படிகளாக வகுத்த இந்துவேதமரபு பற்றி இங்கு எண்ணிப் பார்த்தல் பொருந்தும். ஆசிரமதர்மம் என்று அழைக்கப்பட்ட அம்மரபு வாழ்வினைப் பிரமச்சரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சன்னியாசம் என நான்கு நிலைகளாக வகுத்துள்ளது. மோதலுக்கும் முரண்பாட்டுக்கும் இடமில்லாதவகையில் ஒன்றிலிருந்து மற்றதுக்கு அமைதியாக மாறுவதை உறுதி செய்யும்பொருட்டே அத்தர்மம் வகுக்கப்பட்டிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. மகன் வளர்ந்து பொறுப்பையும் அதிகாரத்தையும் விழையும் வேளையில் தகப்பன் ஒதுங்கி ஓய்வுபெற்றுவிடல் உசிதமானது என்று கருதப்பட்டிருக்க வேண்டும்.

பிரமச்சரியம் என்பது இளமைப் பருவத்தினன் விரதம்காத்து ஆசானிடம் கல்விபெறும் குருகுல நிலையினைக் குறிப்பதாயிற்று. சமய அறிவினையும் உலகியல் அறிவினையும் பெருக்குவதில் ஒருவன் அர்ப்பண சிந்தையுடன் ஈடுபடும் நிலை அதுவாகும். கிருகஸ்தம் என்பது பிரமச்சரியத்தினைத் தொடர்ந்து நடாத்தும் இல்லறவாழ்வினைக் குறிப்பதாகும். அவ்வாழ்வில் மக்கட்பேறு சிறப்பாகக் கருதப்பட்டமையும் பிள்ளைகளுக்கு மிகுந்த உரிமைகளும் சலுகைகளும் வழங்கப்பட்டமையும் தெளிவாகும். மக்கள் வளர்ந்து மணம்புரிந்து நிலைகொண்டபின் பொருளையும் இன்பத்தையும் தேடுவதின்று விடுபடும் தந்தை பொறுப்புக்களையும் அதிகாரத்தையும் மக்களிடம் ஒப்படைத்துவிட்டு இல்லாளுடன் கானகம் சென்று தவம்புரிவது வானப்பிரஸ்த நிலையாகும். இந்நிலையினர் மக்களுக்கும் பிறருக்கும் ஆலோசனைகள் வழங்கி உதவுவதுண்டு. காலாகாலத்தில் வாழ்க்கைப் போரினின்றும் விலகி, அதிகாரத்தையும் பொறுப்பையும் அடுத்த தலைமுறையிடம் ஒப்படைப்பதான வானப்பிரஸ்தம் தொல்காப்பியர் முதலியோரால் விதந்தோதப்படுகிறது. நான்காவது நிலையாகிய சன்னியாசம் என்பது வீடுபேற்றிற்கு ஏதுவானதென்று கருதப்பட்டதும் பற்றுக்களை முற்றாகக் களைவதுமான துறவறமாகும்.

இளைஞர்களுக்கும் முதியவர்களுக்கும் இடையே வேறுபாடுகள் பல உண்டு. உணர்ச்சிவசப்படுகிறவர்கள் என்றும் களிப்பினில் மூழ்குவதில் வேட்கை கொண்டவர்கள் என்றும் நடைமுறைவாழ்க்கை பற்றிய ஆழமான அறிவில்லாதவர்கள் என்றும் இளைஞரைப்பற்றி அரிஸ்ரோட்டில் கூறுவர். அது எவ்வாறாயினும், இளைஞர்கள் ஏனையவர்களுடன் ஒரு சமூகத்தில் வாழுகின்றபோதிலும், தமக்கெனத் தனித்துவமான குணாம்சங்கள் பலவற்றைக் கொண்டிருப்பதால், அவர்களுடைய பண்பாட்டைச் சமூகவியலாளர் ஒரு உப-பண்பாடாக நோக்குவர். இளமைப் பருவம் வளர்ச்சியையும் எதிர்காலத்தையும் நோக்கியதென்றும் தேடலில் ஈடுபடும் அப்பருவத்தில் தெளிவினை எதிர்பார்த்தல் ஆகாது என்றும் கூறப்படுவதுண்டு. தேடல்கள், தவறுகள் மூலமாகக் கற்றுக்கொள்ளவிடாது பிள்ளைகளுக்குக் கடுமையான கட்டுப்பாடுகளையும் நியமங்களையும் வகுப்பதும் முதியோர் இயல்புகளை அவர்களிடம் காண முனைவதும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியனவல்ல.

முதியவர்களுக்கும் இளையவர்களுக்குமிடையில் முரண்பாடு இருக்கத்தான் செய்யும். முட்டாள்கள், பொல்லாதவர்கள், பொறுப்பற்றவர்கள், முதியவர்களை மதியாதவர்கள் என்றெல்லாம் இளைய தலைமுறையினர் மீது குற்றம் சுமத்துவது முதிய தலைமுறையினரின் இயல்பாக என்றுமே இருந்து வந்திருக்கிறது. தம் வாழ்நாளில் தாம் இழந்துவிட்ட சந்தர்ப்பங்களை எண்ணி ஏங்குபவர்களே கூடுதலாகக் குற்றம் கூறுபவர்களாக இருப்பார்கள் என்றும் கூறப்படுவதுண்டு.

இச்சந்தர்ப்பத்தில் நான்கு விடயங்களை மனங்கொள்ள வேண்டும். ஒன்று, ஒவ்வொரு தலைமுறையும் தன் கருத்துக்களும் நிலைப்பாடுகளும்தான் சரியானவை என்று வளர்ச்சியையும் மாற்றத்தையும் ஏற்றுக்கொள்ளாது இசைவாக்கத்துக்கும் இடந்தராது விடாப்பிடியாக நிற்பது பெரும் பிரச்சினையாகிறது. இரண்டு, இருப்பதை வைத்துக்கொண்டு அது எப்படி இருக்க வேண்டும் என்று இளைஞர்கள் எண்ணிப்பார்ப்பார்களே அல்லாமல் அது முன்னர் எப்படி இருந்ததென்பதை அவர்கள் எண்ணிப்பார்ப்பதில்லை என்பதை முதியோர் உணர வேண்டும். மூன்று, இன்று உள்ளவற்றுக்கான பொறுப்பினை இளந்தலைமுறையினர் ஏற்கமுடியாததாயினும் இளந்தலைமுறையினரின் தோற்றத்துக்கான பொறுப்பினைப் பழைய தலைமுறையினர் மறுக்கவியலாது. நான்கு, பழைய தலைமுறையினர் சேகரித்துவைத்திருக்கும் அறிவும் அனுபவமுமே தமது எதிர்கால முன்னேற்றத்துக்கு உத்தரவாதமளிக்கும் என்பதை முற்று முழுதாக ஏற்றுக்கொள்ளும் நிலையில் இன்றைய புதிய தலைமுறையினர் இல்லை.

தலைமுறைகளுக்கு இடையிலான முரண்பாடு என்றும் இருந்தே வந்திருப்பதாயினும், மாறுதல்கள் பெருமளவிலும் வேகமாகவும் இடம்பெறும் நவீனகாலத்தில் அது கூர்மைமிக்கதாகக் காணப்படுகிறது. இளைஞர்களின் முரண்பட்ட போக்கினை வழக்கிலுள்ள நடைமுறைகளுக்கு எதிரான அவர்களது ஆட்சேபனையாகவும் சமூக, ஒழுக்க விழுமியங்கள் மாறுதல்களுக்கு உள்ளாவதன் அறிகுறியாகவும் நோக்காது, மனம் போனபோக்கில் உணர்ச்சிகளின் அடிமைகளாக அவர்கள் நடந்துகொள்கிறார்கள் என்று குறைப்படுவதால் பயனில்லை.

அறிவு, வழமை, சொத்துரிமை முதலானவற்றுக்குப் பெற்றோரிலும் முதியவர்களிலும் தங்கியிருந்த பண்டைய எழுத்தறிவு பரவாத சமூகத்தில் இருந்தளவு மதிப்பினை இன்றைய சமூகத்தில் முதியவர்கள் எதிர்பார்க்கவியலாது. ஆயினும், மூத்தவர்களுடன் அபிப்பிராயபேதம் கொண்டவிடத்து மூத்தவர்களை அவமரியாதை பண்ணும் செயலாக அதனைக் கருதும் நிலை எமது சமுதாயத்தில் இன்றும் உள்ளது. படிப்பறிவற்ற முதியவர்கள் படித்த ஓர் இளைஞன் தம்முடன் இணங்கிப்போனால், ''பார்த்தீர்களா படித்த பிள்ளையின் அழகை?'' என்று வியப்பதும், மறுத்துப் பேசினால், ''படித்துக் கிழித்தும் இதற்குப் புத்தியில்லை'' என்று கடிவதும் அதிகார ஆதிக்கத்தை விட்டுக் கொடுக்க முடியாத அவலநிலையினையே காட்டுவதாகும்.

நவீன சமூகத்தில் தலைமுறை முரண்பாடு முனைப்பாகக் காணப்படுவதற்குப் பல காரணங்கள் உள்ளன. கைத்தொழில் விருத்தி, நகர்மயமாக்கல், கல்வி வளர்ச்சி, சனநாயக சிந்தனைகளின் பரம்பல், வெகுசனத்தொடர்பாடல் வசதிகள் முதலானவற்றின் விளைவாகச் சர்வலோக சிந்தனைகளோடும் வாழ்வோட்டங்களுடனும் அறிமுகத்தினை ஏற்படுத்திக் கொண்ட நவீன இளைஞர்கள் புதிய உணர்வுடனும் எதிர்பார்ப்புக்களுடனும் தம்மைச் சுற்றியுள்ள உலகினை நோக்கத் தலைப்பட்டனர். மரபுவழிக் கட்டுப்பாடுகளைக் கடந்து சுயமுயற்சிகளாலும் சாதனைகளாலும் வாழ்க்கையில் முன்னேறுவதற்கான வாய்ப்புக்களை ஆவலோடு தேட ஆரம்பித்தனர்.

சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவை குறித்து உரக்கப் பேசப்படும் உலகின் உண்மை நிலைமை நோக்கும் இளம் சந்ததியினருக்கு மனக்கசப்பும் விரக்தியுமே மிஞ்சுகின்றன. உலகப் போர் முடிந்தபின்பும் உலகம் அமைதியை வேண்டி அங்கலாய்க்கும் நிலையிலேயே உள்ளது. அரசியல், பொருளாதார நெருக்கடிகளும் முரண்பாடுகளும் உலகின் பல பகுதிகளில் மலிந்து காணப்படுகின்றது. இளைஞர்களின் நம்பிக்கைகளையும் எதிர்பார்ப்புகளையும் சிதறடிக்கும் வகையில் வேலையில்லாத் திண்டாட்டம் விஸ்வரூபம் எடுத்துள்ளது. பணபலமும் அதிகாரபலமும் பெற்றவர்களின் சுயநலவேட்கைக்கும் பேராசைக்கும் ஈவிரக்கமற்றபோக்குக்கும் சமூகநீதி பலியாவதைப் பார்க்கின்ற இளைய தலைமுறையினர் சினத்துக்கும் சலிப்புக்கும் ஆட்படுகின்றனர்.

சமுதாயத்தை வழிநடத்திச் செல்பவர் மத்தியில் காணப்படும் போலிவேடம், அவர்களுடைய உபதேசங்களுக்கும் உண்மையான செயற்பாடுகளுக்கும் இடையில் நிதர்சனமாகத் தெரியும் பலத்த வேறுபாடு முதலியன இளைஞர்களைக் கொதிப்படைய வைக்கின்றன. அரசியல் தலைவர்களைப் பார்த்தால், அவர்களில் அனேகமானவர்கள் அதிகாரத்தையும் இலாபத்தையும் குவிப்பதையே குறியாக வைத்துக்கொண்டு அரசியலை ஒரு வியாபாரமாக நடாத்துகிறார்கள். மக்கள் சேவை, சமுதாய சேவை என்றெல்லாம் மேடைகளில் அவர்கள் தொண்டை கிழியக்கத்துவதை அப்பாவிகளான பொதுமக்களை ஏமாற்றும் எண்ணத்துடன் போடப்படும் கேலிக்கூத்துக்களாகவே புதிய தலைமுறையினர் பார்க்கின்றனர்.

மரபுவழிச் சமுதாயம் பெற்றோரிடத்தும் பெரியோரிடத்தும் வைக்கப்படும் மரியாதையினை அத்திவாரமாகக் கொண்டது. ஊக்கமும் உள்வலியும் உண்மையியற்பற்றும் இல்லாத ஒரு சமுதாய அமைப்பின் மீதும் அதனைக் கட்டிக்காப்பவர்கள் மீதும் இளம் தலைமுறையினர் மரியாதையும் மதிப்பும் கொள்வார்கள் என்று எதிர்பார்க்கலாமா? இலஞ்சம், ஊழல், அரசியலாதிக்கத் துர்ப்பிரயோகம் முதலானவை அதிகரித்துவருவதைப் பற்றியும் பொது வைபவங்கள் மட்டுமன்றிச் சமயவிழாக்களும் இலாபத்தையும் பிரசித்தியையும் கருதி நடாத்தப்படுவதைப் பற்றியும் இன்று பரவலாகப் பேசப்படுகிறது. உலகியல் வாழ்க்கை விழுமியங்களைக் காட்டிலும் ஆத்மீக விழுமியங்களையே உயர்வாக மதிப்பவர்கள் நாங்கள் என்று பெருமையாகப் பேசிக்கொண்டு பொருளுக்கும் பகட்டுக்கும் படாடோபத்துக்கும் பேயாய் அலையும் பெரியவர்களிடத்துப் பிள்ளைகளுக்கு மரியாதை வளருமா? தங்கள் பிள்ளைகளுக்கே அதிகாரவெறியையும் அராஜகத்தையும் காடைத்தனத்தையும் பரிச்சயப்படுத்தும் அரசியல்வாதிகளிடத்து இளைஞர்களுக்கு மதிப்புத் தோன்றுமா?

பழைய தலைமுறையினர் தம் ஆதிக்கத்தை விடாது தொடர்ந்து அனுபவிக்கும் ஆசைமிக்கவர்களாக இருப்பதும் நவீன உலகில் தலைமுறை முரண்பாடு கடுமையடைவதற்கான ஒரு காரணம் என்று கூறப்படுகிறது. விஞ்ஞான விருத்தியின் விளைவான சுகாதார வசதிகளையும் உலகியல் வசதிகளையும் மிகுதியாக அனுபவிக்கும் வாய்ப்புக்களையும் வல்லமைகளையும் சிறப்புரிமைகளையும் பெற்றவர்கள் அவற்றை இழந்துவிட இலேசில் சம்மதிக்கமாட்டார்கள். மேலும் முதுமையை ஒப்புக்கொள்ளத் தயங்கும் பலர் இன்று இளைஞருடன் யாரிகட்டிப் போராட விழைகின்றனர் என்றும் சொல்லப்படுகிறது.

இன்றைய இளைஞர் நாளை முதியவர்கள் ஆவார்கள், ஆகையால் தமக்குரிய காலம் வரும்வரை அவர்கள் காத்திருக்க வேண்டும் என்று கூறப்படுவதுண்டு. ஆளுகிறகாலம் கைகூடும் வரை ஆளப்பட வேண்டியவர்கள் இளைஞர்கள் என்ற கருத்து அரிஸ்டோட்டிலால் இரண்டாயிரத்து நானூறு ஆண்டுகளுக்கு முன் கூறப்பட்டது. ஆனால், நிர்வாகத்துக்கு வேண்டிய ஆற்றலும் மதிநுட்பமும் இன்றைய இளைஞர்களுக்கு இல்லை என்று கூற முடியுமா? முதியவர்கள் அறியாத விடயங்கள் பலவற்றை அறிந்துகொள்ளும் வாய்ப்புக்கள் நவீனகால இளைஞர்களுக்கு உண்டு. முதியவர்களுக்கு எல்லாம் தெரியும் என்றும் இளைஞர்களுக்கு ஒன்றும் தெரியாது என்றும் கருதுவது அறிவுடைமையாகாது. அரிஸ்டோட்டிலுக்கு முன் கிரேக்கத்தில் வாழ்ந்த சோபோகிர்ஸ் எழுதிய அன்ரீகனி என்ற நாடகத்தில், வயதுவந்தவர்கள் வயதில் குறைந்த பிள்ளைகளிடம் போதனை பெறுவதா என்ற வினாவினை எழுப்பிய தந்தையை நோக்கி ஹேமன் என்ற பாத்திரம், ''நான் இளைஞனாகக் காட்சியளித்தால், என் வயதைவிட முக்கியமாகச் செயலைப் பாருங்கள்'' என்று பதிலளித்தது கவனிக்கத்தக்கது. சரியானதை யார் சொன்னாலும் செய்தாலும் அதனை ஏற்றுக்கொள்ள வேண்டுமேயன்றி வயதைப் பற்றி விசாரிக்கக் கூடாதென்பது அதன்மூலம் விளங்குவதாகும். இளைஞர்களின் ஆற்றல்களும் தக்கவாறு சமுதாயத்துக்குப் பயன்பட வேண்டும்.

இளமைப் பருவம் மனித உடலில் மாறுதல் ஏற்படும் பருவமாகும். அப்பருவத்தில் மனோபலமும் உடலாற்றலும் மிகுதியாக இருக்கும். இளைஞர்களுக்கு ஆசைகள் குறைவாகவும் துணிவு கூடுதலாகவும் இருக்கும். மாறுதல்களை வரவேற்கும் அவர்கள் உலகினைச் செம்மைப்படுத்த விரும்புவர்.

**''புதியதோர் உலகம் செய்வோம் -கெட்ட**

**போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்''** (பாரதிதாசன்)

என்ற துடிப்பு அவர்களிடம் மிகுந்திருக்கும். அவர்களுடைய சக்தியையும் இலட்சியப் பற்றையும் அபிவிருத்திப் பணிகளில் ஆற்றுப்படுத்தி சமூக ஒற்றுமையையும் சமாதானத்தையும் சுதந்திரத்தையும் மானிட விழுமியங்களையும் வளர்த்து வலுப்படுத்தலாம். பொறுப்புக்களையும் அதிகாரத்தையும் அளிப்பதன் மூலம், நிகழ்காலச் சமூகத்தை வளம்படுத்துவதிலும் எதிர்காலச் சமூகத்தை உருவாக்குவதிலும் தங்களுக்கும் பாரிய பங்குண்டு என்ற உணர்வினை இளைஞர் மத்தியில் ஏற்படுத்தலாம்.

சமுதாயத்தினால் பொருட்படுத்தப்படுகிறவர்கள்; சமுதாயத்தினைச் சேர்ந்தவர்கள் என்ற பிரக்ஞை மிக முக்கியமானதாகும். அப்பிரக்ஞையினைப் பெறும் இளைஞர்கள் வாழும் சமுதாயத்தில் பிடிப்பும் முதிய தலைமுறையினரிடத்து மதிப்பும் உடையவர்களாக விளங்குவர். முதியோரும் இளையோரும் பல சந்தர்ப்பங்களில் முரண்படலாம். ஆனால், பகைவர்களாதல் சாலாது. பாரம்பரிய வேர்களையும் விழுமியங்களையும் அவை பழையவை என்பதற்காக மட்டும் இளைஞர் புறக்கணித்தல் ஆகாது. புதியவற்றை அவை முன்னர் இல்லாதவை என்பதற்காக மட்டும் முதியோர் அலட்சியப்படுத்தக்கூடாது. நல்லனவற்றையும் மனிதவாழ்க்கைக்கு உகந்தனவற்றையும் அவை எங்கிருந்து வந்தாலும் சரி எவரிடத்திருந்து வந்தாலும் சரி உவந்தேற்றுக்கொள்ள வேண்டும். வளர்ச்சியையும் மாறுதல்களையும் ஏற்றுக்கொண்டு தன்னிலை தவறாது நிற்கவல்ல சமுதாயமே உயிர்வாழும் சமுதாயமாகும். சமுதாயத்தில் மூத்த தலைமுறையினரும் இளைய தலைமுறையினரும் தாங்கள் ஒருவரிலொருவர் பலவகைகளில் எவ்வளவுக்குத் தங்கியுள்ளனர் என்பதைப் பற்றி நிதானமாக எண்ணிப்பார்ப்பது சுவாரஸ்யமும் பயனும் விளைப்பதாகும்.

**''இனிக் கொஞ்ச நேரம் தமிழ் மாணவிகளின் அறைகளெல்லாம் அல்லோலகல்லோலப்படும். நீண்ட கடிதங்கள் எழுதப்படும்; அதில் சோகங் களை கவனமாகத் தணிக்கை செய்யப்பட்டு மற்ற எல்லாம் எழுதப்படும்; வீட்டு நினைவுகள் பகிரப்படும்.''**

# விடை காணா வினா

*அனுஷா பாலேந்திரன், 1 ம் வருடம், விலங்கு விஞ்ஞானமருத்துவ பீடம்*

பல்கலைக்கழகப் பெண்கள் விடுதியின் அந்தப் பகுதி முழுவதுமே பரபரப்பில் மூழ்கியிருந்தது. பெட்டிகளைத் தட்டுவது, புத்தகங்களை அடுக்குவது உடைகளைப் பைகளில் வைப்பது என்று ஒவ்வொருவருக்கும் அவரவர் பரபரப்பு. கூடவே உற்சாகமாய்ச் சின்னச் சின்னப் பகிடிகள், அதற்கு சந்தம் சேர்க்கும் கலீரென்ற சிரிப்பொலிகள்.

அறை எண் 50 மட்டும் இந்த ஆரவாரங்களிலெல்லாம் விலகி சற்றே அமைதியாக இருந்தது. தோளில் 'பாக்'குடன் வெளிப்பட்டாள் மலர்விழி.

''லதா போட்டு வாறன். நீ ஊருக்குப் போவாய்தானே? 'ம்' சரி பிறகு சந்திப்பம். நான் போட்டு வாறன். பை!பை!'' வாயிலிருந்து வார்த்தைகள் விழுந்த வேகத்திலும் துரிதமாக அவள் கால்கள் நடை போட்டன. வீட்டிற்குச் செல்லும் உற்சாகம் அவளிற்கு. நின்று சொல்லிக் கொண்டு போகக் கூடப் பொறுமையில்லை.

ஒரு நீண்ட, ஆழமான பெருமூச்சொன்றெழுந்தது லதாவிடமிருந்து. பின்ன என்ன மைதிலி கொடுத்து வைத்தவள். பெற்றோருடன் கொழும்பு வாசம். விடுமுறை அவளிற்குக் கரும்பு வெல்லம்.

விடைபெறும் சத்தமும், துள்ளலுடன் வீடு செல்லும் மாணவிகளின் ஆரவாரங்களும் வரவர அதிகரித்தன. சும்மாவா முடிந்தது. முதலாம் வருடப் பரீட்சை அல்லவா? அதுவும் தடை தாண்ட வேண்டிய முக்கிய பரீட்சை முடிந்து விட்டதென்றால் உற்சாகத்திற்கா கேட்க வேண்டும். எங்கும் சந்தோஷப் பூக்களின் இனிய சுகந்தம்.

பக்கத்தறை சிங்களப் பிள்ளை வந்து விடைபெற்றுச் சென்றது.

''ஆ யூ நொட் கோயிங் ஹோம்?'' வீட்டிற்குப் போகவில்லையா என்று கேட்டதுமே இதுவரை இழுத்துப் பிடித்த பொறுமை லதாவை விட்டுப் போய்விடுவேன் என்று பயமுறுத்தியது. ''இந்தக் கேள்வியை மட்டும் என்னட்டக் கேக்காதீங்கோ'' என்று கத்த எத்தனித்த நாவைக் கஷ்டப்பட்டுக் கட்டுப்படுத்தினாள்.

தன் கேள்விக்குப் பதில் சொல்லாது நின்ற லதாவைப் பார்த்து மேலும் கதைக்க கேட்டவளிற்குப் பொறுமையில்லை. அவள் சென்று விட்டாள்.

இதோ இன்னும் கொஞ்ச நேரத்தில் எல்லோருமே போய்விடுவார்கள். ஜன்னலை வெறித்தபடி நின்றாள் லதா. கண்ணீர் வரட்டுமா வெளியே என்று கண்களை உத்தரவு கேட்டது. வெளியே தெரிந்த பனி மடிந்த மலையும், பக்கத்தே சலசலக்கும் சிற்றருவியும் எதுவுமே அவளிற்கு சாந்தியைக் கொடுக்கவில்லை.

''அம்மா'' உதடுகள் மெல்ல முனகின. ஆசையால் அம்மாவைக் கட்டிக் கொஞ்ச வேண்டும்போல் மனத்தினுள் ஒரு உத்வேகம். ஆனால்... ஆனால்... யாழ்ப்பாணம் போவதென்றால்...? கேள்வியே கொக்கியாய் கழுத்தை இறுக்கிற்று. ''போவேனா வீட்ட?'' இதயத்தின் 'லப்டப்' உடன் இணையாகப் போட்டியிட்டு ஒலித்தது இந்தக் கேள்வி.

எல்லாச் சந்தடியும் இப்பொழுது ஓய்ந்து விட்டது. கடைசியாகச் சென்ற மாணவியின் காலடியோசை... அதுவும் எங்கோ சென்று... தேய்ந்து மறைந்து...

''டொக், டொக்'' கதவு தட்டப்படும் ஒலி. சென்று திறக்கக் கூட மாட்டேனென்று கால்கள் அடம் பிடித்தன.

'ஓபின்' குரல் கொடுத்தாள். ''ஏய் லதா என்ன டல்லடிக்கிறாய்? சோதினை சோதினை எண்டு உயிரை விட்டாய். இப்ப அதுவும் முடிஞ்சிட்டுது. நீ என்னடா என்றால் ஏதோ சோகச் சித்திரக் கதாநாயகி போல இருக்கிறாய்?'' கடகடவென்று வார்த்தைகளைக் கொட்டிக் கொண்டு உற்சாகப் பூங்கொத்தாய் வந்தாள் துளசி. லதாவின் சக மாணவி. ஆனால் வேறு பீடம்.

சட்டென்று துளசி தன் தவறுணர்ந்தாள். அமைதியாய் ஆதுரத்துடன் லதாவின் தோளைத் தட்டி

''இப்ப என்ன? மற்றவை உடனே போகினம். நீ ஒரு நாலு நாள் கழிச்சுப் போவாய் அவ்வளவுதானே? எண் சாண் உடம்பிற்கு சென்னியே பிரதானம் மாதிரி இலங்கைக்குத் தலையான யாழ்ப்பாணம் போறதெண்டா சும்மாவே? ஏய் பொறுத்தார் பூமியாள்வார் தெரியுமே?'' ஆறுதலாய்த் தேற்றிக் கலகலப்பூட்டினாள்.

சாதாரண நேரமென்றால் ''அதுதான் சிரசே பிரதானமென்று காலமை முகம் மட்டும் கழுவிக் கொண்டு faculty க்குப் போறனீயோ?'' என்று பதிலடி கொடுத்திருப்பாள் லதா. ஆனால் இன்று வாயைத் திறக்கவே முடியவில்லை அவளால்.

''நீ வீட்ட வடிவாய்ப் போகலாம், இப்பத்தானே கப்பல் ஓடுது; பிளேன் போகுது. பிறகென்ன? ஏதாவது ஒழுங்கு செய்து பாரன்'' பரிந்துரைத்தாள் துளசி.

''அதெல்லாம் செய்து போட்டன். கொழும்பில இருக்கிற பெரியப்பாட்ட முந்தியே சொன்னனான். இன்னும் ஒரு பதிலையும் காணேல்ல'' விரக்தியாய் வார்த்தைகள் வெளிவந்தன.

மற்ற மாணவிகள் எல்லாம் பரீட்சைக் காய்ச்சலில் நடுங்கியபோது சற்றுமே அலட்டாமல் திரிந்தவள் லதா. அன்றன்றே படித்ததில் இறுதி நேர அவதி அவளிற்கில்லை. அவளின் பரபரப்பெல்லாம் ஊர் செல்ல ஒழுங்கு செய்வதுதான். அதில்தான் அவள் மும்முரமாக இருந்தாள். தினமும் 'லெட்டர் போட்'டைப் பார்ப்பாள். பெரியப்பாவிடமிருந்து இன்னும்தான் ஒரு தகவலும் இல்லை.

''இங்க நீ இப்ப சும்மா கிடந்து குழம்பாத. இண்டைக்குக் கோவிலுக்கு வாறீயே? அதக் கேக்கத்தான் வந்தனான். உன்ன என்ன கேக்கிறது....'' சொல்லி ஒரு இடைவெளி கொடுத்த துளசி.

''மித்தா விடுதி என்னும் சாம்ராஜ்யத்தின் அறுபதாம் அறை என்னும் சிற்றரசின் மகாராணி உத்தரவிடுகிறேன். நீ இன்று கோவில் வருகிறாய்'' குரலை உயர்த்தி அரச பாணியில் கட்டளையிட்டாள்.

'உத்தரவு மகாராணி' மண்டியிட்டாமோதித்தாள் லதா. கொஞ்சம் இறுக்கம் தளர்ந்தாற் போலிருந்தது. கோவிலுக்குப் போனால் மனம் நிம்மதியாகும் போலிருந்தது.

''அப்ப பின்னேரம் வாறன் இப்ப போட்டு வாறன்'' ராகமாய் இசைத்து விடைபெற்ற துளசி போகிற போக்கில்

''ஒண்ட சொல்ல மறந்திட்டன், நித்யா அக்கா ஃபஸ்ட் கிளாசாம்'' என்று சொல்லிக் கொண்டு போனாள்.

''நித்யா அக்காவோ?'' மனத்தினுள் கேட்டுக் கொண்டாள் லதா. பரீட்சைக்கு இரண்டு மாதங்கள் முன்தான் யுத்தத்தின் கொடிய அரக்கனிற்குத் தன் தாயைப் பறிகொடுத்தவள் நித்யா. ''இங்கு வந்தால் எவ்வளவு கஸ்டம். அதையும் மீறி எங்கட பிள்ளையள் எப்படிப் படிக்குதுகள்'' பெருமையுடன் நினைத்ததில் தன் கவலையை சற்றே மறந்தாள்.

''லதா லெட்டர்'' கூவியபடி போன வேகத்தில் வந்தாள் துளசி. துள்ளி வாங்கி ஆவலாய்ப் பிரித்தாள் லதா.

''ஊருக்குப் போக உடனே வரவும்'' என்று சாராம்சம் கூறியது கடிதம். துள்ளிக் குதித்து ஆரவாரித்துத் தன் மகிழ்ச்சியைத் தோழியுடன் பகிர்ந்து கொண்டாள்.

''ஏய் மறக்காம லெட்டர் தாறன் கொண்டு போ'' சொன்னாள் துளசி.

இனிக் கொஞ்ச நேரம் தமிழ் மாணவிகளின் அறைகளெல்லாம் அல்லோலகல்லோலப்படும். நீண்ட கடிதங்கள் எழுதப்படும்; அதில் சோகங்களை கவனமாகத் தணிக்கை செய்யப்பட்டு மற்ற எல்லாம் எழுதப்படும்; வீட்டு நினைவுகள் பகிரப்படும்.

இதோ உற்சாகமாகி விட்டாள் லதா. இறக்கை கட்டிப் பறக்காத குறைதான்.

அம்மாவுடன் கொஞ்சுவது போல், தங்கையுடன் செல்லமாய்ச் சண்டையிடுவது போல், அப்பாவுடன் ஆனந்தமாய் அளவளாவுவது போல் இன்னும் அம்மம்மாவுடன் கோவில் போவது போல், தோழிகளுடன் சைக்கிளில் ஊர்

சுற்றுவது போல் எத்தனையோ வண்ணக் காட்சிகள் மனத்தினுள். ஊர்க்கோவில், வயல்வெளி, வீட்டிலே நிற்கிற செல்ல 'வைட்டி' இன்னும் தங்கச்சி கடைசியாக எழுதிய புதிதாய்ப் பிறந்த ஆட்டுக்குட்டி எல்லாம் ஒருமுறை நினைவில் அணிவகுத்தன.

''நானும் வீட்ட போறன்'' சுவரிற்குத் தன் சந்தோஷத்தைத் தெரிவித்தாள். வேறு யாருடன்தான் அவள் தன் மகிழ்வைப் பகிர்வது!

பாட்டுக் கேட்க வேணும் போல் ஆசை எழுந்தது. வானொலியை முடுக்கி விட்டாள். இசை முழக்கத்துடன் செய்திகள் ஆரம்பமாகியது.

''வடக்கில் இன்று ஒரு பாரிய இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வடபகுதிக்கான சகல போக்குவரத்துகளும் மறு அறிவித்தல்வரை இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.''

இன்னும் ஏதேதோ சொன்னது வானொலி. கண்கள் இருட்டக் காற்றிழந்த பலூனாய்க் கட்டிலில் விம்மலுடன் சரிந்தாள். அடுக்கப்பட்ட பயணப்பை இவளைப் பார்த்து நகைத்தது.

சிறிது நேரத்தில் கதவு தட்டப்படும் ஒலி. உள்ளே வந்தார்கள் அந்த விடுதியிலிருக்கும் இதர தமிழ் பேசும் மாணவிகள்.

''ஏய் லதா'' ஆதரவாய்க் கூப்பிட்டாள் துளசி. ஆளாளுக்காய் தேறுதல் சொன்னதில் கொஞ்சம் அமைதியானாள் லதா. இத்தனை துன்பங்களிற்குள்ளும் ஒரு ஆறுதல் இந்தத் தோழியரின் உன்னதமான நட்புத்தான்.

இனிச் சில நாட்களிற்கு அங்கு படிப்பிருக்காது. ரேடியோவும், பேப்பருமாய் அலைவார்கள். ஒன்றாக இருந்து கதைப்பார்கள் யாரை யார் தேற்றுவது?

''அம்மாவுக்கு லேசாய் நெஞ்சுவலி வந்ததாம். டொக்டர் உடன கொழும்பில காட்டச் சொன்னவராம். இப்ப என்ன செய்யினமோ?'' கவலையாய்ச் சொன்னாள் சுமதி.

''அக்காவுக்கு முதல் பிள்ளை பிறக்கப் போகுது. இந்த ஷெல்லடியில...'' இது இன்னொருத்தியின் நெடுமூச்சு.

''தம்பிக்கு A/L சோதினை. இனிப் படிப்பு எங்க'' விமலாவின் ஆதங்கம் இது. நாலு பெண்களிற்கு ஒரு ஆண். அவனையே நம்பி இருக்கிறது விமலாவின் குடும்பம்.

''அண்ணாக்கு வாற கிழமை ஃளைட். இப்ப அங்கு இருந்து வாறதெண்டால்...'' சுமைதாங்கியாய் வெளிநாடு புறப்பட்டவனின் பயணமும் தடைப்பட்டு விட்டது. குமுறினாள் மாலா.

''கையில காசும் முடிஞ்சுது எனக்குக் காசில்லாட்டிலும் ஏதோ சமாளிக்கலாம். அங்க சாப்பாடு இருக்கோ இல்லையோ?...'' லலி சொன்னாள்.

பட்டென்று நெற்றிப் பொட்டில் யாரோ அறைந்தது போலிருந்தது லதாவிற்கு.

'ஓ! இவர்கள் ஒவ்வொருவருக்கும்தான் எவ்வளவு பிரச்சினைகள். அதைக் கூட மறந்து எனக்கு ஆறுதல் சொல்ல வந்திருக்கிறார்களே' வியந்தது மனம்.

''இப்ப எனக்கென்ன பிரச்சினை. அம்மாவைப் பிறகு பாத்தால் போச்சு. யாருக்குத் தான் பிரச்சினை இல்லை'' தானே தேற்றித் தெளிந்தாள். தன் சுயநலம் எண்ணி வெட்கினாள்.

சஞ்சலம் மறைந்ததில் ஒரு நிம்மதி, அவளைக் கேட்காமலே மனத்தினுள் பரவியது. வழக்கம் போல் சோகத்தை விழுங்கி இயல்பாய் கலகலக்க ஆரம்பித்தாள்.

''குறிஞ்சிக்குப் போக வேண்டாமே? இப்ப இங்க என்ன கடை போடுறியள்? போங்கோ போய் வெளிக்கிடுங்கோ'' அழுத்தமாய்ச் சொல்ல ஒவ்வொருவராய் வெளியேறினார்கள்.

லதா... தனியாய்... ஆனால் அவள் அழவில்லை. அழமாட்டாள். இதோ கோவிலுக்குச் செல்லத் தயாராகி விட்டாள். பழையபடி குறும்புகள் செய்வாள்; சிரிப்பாள் ஆனால் மனத்தினுள் எங்கோ ஒரு மூலையில் ''வீட்ட போவேனா'' என்ற கேள்வி ஒலித்துக் கொண்டுதான் இருக்கும். அவளிற்கே அவளிற்கு மட்டும்தான் அது கேட்கும். இல்லை அந்தக் குறிஞ்சிக் குமரனிற்கும் கேட்கும். என்றாவது ஒருநாள் அவள் வீட்டிற்குப் போகாமலா விடப் போகின்றாள். ஆனால்... என்று? எப்போது? விடையே காணாத வினா அது.

# “போதையின் பிடிக்குள் எமது நாடு”

ருஸ்னா ராசூக், விவசாய பீடம்

“காப்பாற்றுங்கள்” என்றொரு ஈனக்குரல் ஒலிக்கின்றது. கேட்கவில்லையா? மௌனமாக கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கின்றது. எங்கள் சின்ன இலங்கை - “காப்பாற்றுங்கள்”. போதை அரக்கனின் அசுரப்பிடியில் சிக்கிக் கொண்டு, அணு அணுவாக உயிரை மாய்த்துக் கொண்டிருக்கின்றது எங்கள் சின்ன மணித் தீவு.

இந்து மகா சமுத்திரத்தின் அழகிய மணி முத்து, போதை எனும் கொழுந்து விட்டெரியும் தீயில் நன்றாகவே அகப்பட்டு கொஞ்சம் கொஞ்சமாக மங்கிக் கொண்டு வருகின்றது. இந்த அபாக்கிய நிலைமை மென்மேலும் தொடர விடாமல், மணி முத்தை மீட்டெடுத்து, சுடர் விட்டு ஜொலிக்கச் செய்ய வேண்டியது இளைய தலைமுறையினராகிய எங்களது பெருங்கடமை.

“போதை வஸ்து” எனும் பயங்கரப் பொருள் எங்கள் நாட்டை ஆட்கொண்டது. சமீப காலத்தில் அல்ல. தொன்று தொட்டே போதை பொருட்கள் இலங்கை மக்களிடையே புகுந்து விளையாடத் தொடங்கி விட்டன. விளைவு... இன்று தமக்கென ஒரு உறுதியான இடத்தைப் பிடித்துக்கொண்டு, எமது நாட்டின் முன்னேற்றப் பாதைக்கு ஓர் பெரும் தடைக் கல்லாக அமைந்து விட்டன. வெற்றிலை, பாக்கு, புகையிலை, கஞ்சா போன்ற போதை தரும் பொருட்கள் தொன்று தொட்டு புழக்கத்தில் இருந்து வருகின்றன. உளவியல் ரீதியான திருப்தியைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்திற்காக இத்தகையப் போதை பொருட்களை மனிதன் பயன்படுத்தினான். இன்றும் கூட அந்தப் பொருட்களுக்கு மனிதன் அடிமையாகத் தான் இருக்கின்றான். இத்தகைய தாவரங்கள் முற்காலத்தில் எங்கள் நாட்டில் பேரளவில் பயிரிடப்பட்டன. அக்காலத்தில் போதைப் பொருள் பாவனைக்குத் தடைகள் ஏதும் இருந்திருக்கவில்லையென்றாலும், கால கட்டத்தில், போதைப் பொருள் பாவனை சமூகச் சீரழிவுக்கு வழிகோலிய போது, அதைத் தடுப்பதற்காக பல்வேறு சமூக அமைப்புகள் உருவெடுத்தன.

இலங்கை ஐரோப்பியரின் ஆட்சியின் கீழ் இருந்த கால கட்டத்தில் மேலைத்தேய சட்டதிட்டங்களாலும் சமூக பொருளாதார அமைப்பு மாற்றங்களாலும் நாட்டின் போதைப் பொருள் பாவனை முறையில் மாற்றங்கள் ஏற்பட்டன. போதை பொருட்களை ஐரோப்பியர்கள் ஓர் வருமான மூலமாகப் பாவித்ததுடன் தமது ஆட்சி அதிகாரத்தை விரிவு படுத்தவும் அவற்றை ஓர் அணுகுமுறையாகப் பயன்படுத்தினர். உதாரணமாக, ஆங்கிலேயர் கித்துள் மரத்தில் இருந்து கள் எடுப்பதைத் தடை செய்த அதே வேளையில், தென்னை, பனை போன்ற மரங்களில் இருந்து கள் எடுப்பதை ஊக்கப்படுத்தினர். ஆங்கிலேயர் காலத்தில் தான் ‘அபின்’ எனும் போதைப் பொருளும் அறிமுகப்படுத்தப்பட்டது. அக்கால கட்டத்தில் அபின் முக்கியமாக இந்தியாவிலிருந்தே இறக்குமதி செய்யப்பட்டது. பின்னர் அபின் வர்த்தகம் இலங்கையில் விருத்தியடையத் தொடங்க, ஆங்கிலேயருக்கு ஒரு முக்கிய வருமானம் தரும் பொருளாகவும் அபின் அமைந்தது. அன்று அபின் பாவிக்கத் தொடங்கிய மக்கள் அதன் பின் விளைவை அறிந்திருக்கவில்லை, அபின் பாவித்த மக்கள் கால கட்டத்தில் போதை பொருட்களுக்கு அடிமையாகினர். பிற நாட்டொருவன் வந்து நன்மையடைந்தான். பாவம் நம் நாட்டினர் போதை பொருட்களுக்கு அடிமையாகி சீரழிந்தனர். ஏன் இன்றும் கூட சீரழிந்து கொண்டு தான் இருக்கின்றனர்.

காலகட்டத்தில் நிலைமை மோசமடைந்த போது, அபின் இறக்குமதி தடை செய்யப்பட்டது. ஆனால் கள்ளத்தனமாக அபின் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கடத்தப்பட்டது.

ஆகவே நம் நாட்டில் பாவனையில் உள்ள போதை பொருட்கள் ஒன்று, உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுபவையாக அல்லது வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுபவையாக இருக்கின்றன. உள்நாட்டு போதைப் பொருட்கள் நாட்டில் இயற்கையாக வளரும் தாவரங்களிலிருந்து இயற்கையாகப் பெறப்படுகின்றன அல்லது செயற்கையாகத் தயாரிக்கப்படுகின்றன. வெளிநாட்டுக்குரிய போதைப் பொருட்கள் அந்நாடுகளின் இயற்கைத் தாவரங்களிலிருந்து பெறப் படுவதுடன், அநேகமாகக் கள்ளத்தனமாக இறக்குமதி செய்யப்படுகின்றன. ஆனால் கஞ்சா போன்ற பொருட்கள் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுவதுடன் வெளிநாட்டிலிருந்தும், நம் நாட்டுக்குள் கொண்டு வரப்படுகின்றன. கள்ளு, சாராயம், வெற்றிலை, கஞ்சா, புகையிலை போன்றன உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களில் சில. புகையிலையைப் பயன்படுத்தி நம் நாட்டில் தயாரிக்கப்படுகின்ற சிகரெட்டுக்கள் அபிவிருத்தியடைந்த நாடுகளில் தயாரிக்கப்படும் சிகரெட்டுக்களை விடவும், அதிக நிக்கொட்டின் கொள்ளளவைக் கொண்டுள்ளன.

இலங்கையில் 12 வயதிற்கு மேற்பட்ட 50 சதவீத ஆண்களும் 1 சதவீத பெண்களும் புகை பிடிப்பவர்களாக இருக்கின்றனர். அநேகமாக 30 இற்கும் 40 இற்கும் இடைப்பட்ட வயதுடைய ஆண்களே புகைப்பிடித்தலுக்கு தீவிர

அடிமைகளாக இருக்கின்றனர். 4 சதவீதத்திற்கும் குறைவான பெண்களே புகைபிடித்தலுக்கு அடிமையாக இருக்கின்றனர். புகை பிடிப்பவர்களில் 90 சதவீதமான ஆண்களும் 87 சதவீதமான பெண்களும் தினசரி புகைப்பவர்களாக இருக்கின்றனர்.

நம் நாட்டின் மிகப் பழமை வாய்ந்த போதைப் பொருளாக இருப்பது கள்ளு சாராயம் என்பன. 20 இற்கும் 50 ற்கும் இடைப்பட்ட வயதுடைய ஆண்களே அநேகமாக மது பாவனையால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள். அத்துடன் மதுவிற்கு அடிமையாக உள்ளவர்களின் குடும்பங்களில் வாழ்க்கைச் செலவு, அவர்களால் சமாளிக்க முடியாத அளவிற்கு மிகவும் அதிகமாக இருக்கின்றது. மது பாவனையால் வந்த துன்பம் அதுமட்டுமல்ல, பாதை விபத்துக்களுக்கும், குடும்பத் தகராறுகளுக்கும், சண்டை சச்சரவுகளுக்கும், மற்றும் சட்ட விரோதச் செயல்களுக்கும் முக்கிய காரண கர்த்தாக்களாக இருப்பவர்கள் மது பாவனையாளர்களே. அந்தோ பரிதாபம், ஓர் அற்ப நேர சந்தோஷத்திற்காக மதுவிற்கு அடிமையானவர்கள், தாம் பெரிதென நினைக்கின்ற அந்த அற்ப சந்தோஷம் தான், தம்மைப் பாதாளம் நோக்கி இழுத்துச் செல்கின்றது என்பதை மறந்தே விட்டார்கள்.

வெற்றிலை பாக்கிற்கு, தலை வணங்கி நிற்பவர்கள் அநேகமாகக் கிராம புற மக்கள் தான். வெற்றி பாக்குடன் புகையிலையும் சுண்ணாம்பும் சேர்த்து மெல்லப்படுகின்றது. வெற்றிலையில் நிக்கிட்டின் எனும் போதைப் பொருளும், பாக்கில் அக்ரோலினும் புகையிலையில் நிக்கொட்டினும் அடங்கியுள்ளன. இவற்றின் பாவனை வாய்ப்புற்று நோய்க்கு அத்திவாரமிடுவதை நாம் மறக்கக் கூடாது.

இலங்கையில் மிக அதிக அளவில் வியாபித்திருக்கும் போதைப் பொருளாக கஞ்சா காணப்படுகின்றது. கஞ்சா தாவரத்தின் காய்ந்த இலைகளும், மென்மையான தண்டுகளும் புகையிலையுடன் சேர்த்து புகைக்கப்படுகின்றன. கஞ்சா தாவரம் தென் கீழ் பிரதேசத்தின் அதிகமான பகுதிகளில், ஓர் காட்டு களையாக வளர்கின்றது. கஞ்சாவில் டெற்றாஹைட்ரொக்சி கனபினோல் எனும் போதைப் பொருள் 8% - 9% வரையில் காணப்படுகின்றது. இறைச்சியை மென்மையாக்குவதிலும் ஆயுர்வேத மருத்துவத்திலும் கஞ்சாவானது தொன்று தொட்டு உபயோகிக்கப்பட்டு வருகின்றது.

அநேகமாக கஞ்சாவிற்கு அடிமையாக இருப்பவர்கள் 20 இற்கும் 30 ற்கும் இடைப்பட்ட வயதுடைய ஆண்கள் தான் நீண்ட கால கஞ்சா பாவனையாளர்கள் சலனமற்ற ஒரு நிலைக்கு இழுத்துச் செல்லப்படுகின்றனர்.

வெளிநாட்டுக் குரிய போதைப் பொருட்களாக ஆதிக்கத்தை கைப்பற்றியிருப்பது, ஹெரோயின் ஹவிஷ் அபின் என்பன.

அபின் என்பது ஒரு வித தாவரத்திலிருந்து பெறப்படும் காய்ந்த மரப்பாலாகும். ஆரம்ப காலத்தில் நரம்பு வியாதி மலேரியா காய்ச்சல் போன்றவற்றிற்கு பரிகாரமாகவே அபின் அதிக அளவில் பயன்பட்டது. இருந்தபோதிலும் ஓர் சிறிய அளவில் போதையைப் பெறும் நோக்கத்திற்காகவும் பயன்படுத்தப்பட்டது. அபின், புகையிலையுடன் சேர்த்து புகைக்கப்படுகின்றது. அல்லது தேனீருடன் சேர்த்து பருகப்படுகின்றது. 1982 ம் ஆண்டில், ஆர்சனிக் எனும் நச்சுப் பொருள் கலந்த அபினை உட்கொண்டதால் அபின் பாவனையாளர்கள் பலர் உயிர் இழந்தனர். இதனைத் தொடர்ந்து அபின் அடிமைகளின் கவனம் ஹெரோயின் பாவனைக்குத் திசை திரும்பியது.

தூக்கத்தை ஏற்படுத்தும் நோக்கத்திற்காகவும் நோவுகளில் இருந்து மீட்சி பெறும் நோக்கத்திற்காகவும் அபினைப் பயன்படுத்தியவர்கள் கால கட்டத்தில் அபின் பழக்கத்திற்கு அடிமையாகினர்.

அத்துடன் மருத்துவ சிகிச்சைக்காகப் பயன்படும் மருந்துகளும் போதைப் பொருட்களைச் சிறிய அளவில் கொண்டுள்ளன. இத்தகைய மருந்துப் பொருட்களை அதிகமாக பயன்படுத்துபவர்கள். ஹெரோயின் பழக்கத்திற்கு அடிமையானவர்கள் தான். இவர்கள் இத்தகைய மருந்துகளை மருத்துவ நோக்கத்திற்காக அல்லாமல் போதையைப் பெறும் நோக்கத்திற்காகப் பயன்படுத்துகின்றார்கள்.

இலங்கையில் ஹெரோயின் துஷ்பிரயோகம் 1980 ம் ஆண்டளவில் ஆரம்பமானது. இலங்கையை அண்மித்த நாடுகளில் அதிக அளவிலான ஹெரோயின் மிகக் குறைந்த விலையில் காணப்பட்ட போதிலும், 1980 ம் ஆண்டுவரை ஹெரோயின் நம் நாட்டிற்குள் பிரவேசிக்காதது என்னவோ ஆச்சரியமான விடயம் தான். ஆரம்பத்தில், ஹிப்பிகளும், வெளிநாட்டிலிருந்து வரும் இலங்கையர்களும், தங்களின் சுய பாவனைக்காக, ஹெரோயினை எம் நாட்டிற்குள் எடுத்து வந்தனர். பின்னர் சுற்றுலா பயணிகள் அதிகமாக சஞ்சரிக்கும் இடங்களில் ஹெரோயின் பாவனையும் அதிகரித்தது. நம் நாட்டினர் ஹெரோயின் வியாபாரத்தில் ஈடுபட்டது மட்டுமல்லாமல், அதற்கு அடிமையாகி சட்ட விரோதச் செயல்களிலும் ஈடுபடத் தொடங்கினர்.

ஹெரோயினின் மூல வடிவமாக இருப்பது அபின். அபினைத்தூய்த்தாக்குவதன் மூலமே ஹெரோயின்

பெறப்படுகின்றது. ஹெரோயின் நம் நாட்டிற்குள் பிரவேசிக்கப் பல காரணங்கள் இருக்கின்றன. ஆப்கான், யுத்த காலத்தில், ஹெரோயின் கடத்தப்படும் பாதையாக மாறியது. அதே வேளை சமூக - பொருளாதார அரசியல் மாற்றங்களும் நம் நாட்டினுள் ஹெரோயின் பிரவேசிக்கக் காரணங்களாக இருந்தன. அத்துடன் ஏற்றுமதி- இறக்குமதி சட்ட திட்டங்களாலும் மாற்றங்கள் ஏற்பட்டன. வெளிநாட்டு வர்த்தக வியாபாரங்கள் பெருகின. பலர் தொழில் வாய்ப்புக்களைத் தேடி வெளிநாடுகளுக்கும் பயணமாகினர். மேலும் சுற்றுலாப் பயணிகளின் வருகையும் நம் நாட்டினுள் அதிகரித்தது. இவையெல்லாம் நம் நாட்டினுள் ஹெரோயின் வருகைக்கு இலகுவான வழியமைத்துக் கொடுத்தன.

அபின், கஞ்சா போலல்லாது ஹெரோயின் பாவனை நாட்டினுள் மின்னல் வேகத்தில் பரவியது. மற்ற போதைப் பொருட்களுடன் ஒப்பிடுகையில் ஹெரோயின் மிகப் பயங்கரமானது. அதன் அட்டூழியம் கொடூரமானது. வயதெல்லையின்றி சிறியவர் முதல் பெரியவர் வரை எல்லோரையும் தன் அட்டகாச வலையில் சிக்க வைக்கும் திறமை கொண்டது.

பொதுவாக ஹெரோயினைத் தகரத் தட்டில் வைத்து சூடாக்கும் போது, உருவாகும் புகையை சுவாசிப்பதே வழமையாக ஹெரோயின் பாவனையில் உள்ள முறையாகும். இருந்த போதிலும் நரம்பினூடு ஊசியேற்றும் முறை தற்போது பிரபல்யம் அடைந்து வருகின்றது. 1988 ம் ஆண்டளவில் 1% சதவீதமாக இருந்த, நரம்பினூடு ஹெரோயின் செலுத்தும் முறை, 1992 ம் ஆண்டளவில் 12 மடங்காக அதிகரித்தது. அதுமட்டுமல்லாமல், சட்ட விரோதமான பாலியல் தொடர்புகளில் ஹெரோயின் பாவனையாளர்கள் மிக அதிகமாக ஈடுபாடு காட்டுவதால், ஒரு பெரும் புயலே உருவாகியுள்ளது. ஏனெனில், இத்தகையோர் தான் நாட்டினுள் எயிட்ஸ் எனும் கொடிய நோய் பரவ மூல கர்த்தாவாக இருக்கின்றனர். ஓவென்று கதறியழ வேண்டும் போல் இல்லையா? அழுது இனியென்ன பிரயோசனம்? இந்த ஹெரோயின் மன்னர்கள், ஏற்கனவே நம் இலங்கையை மரணத்தின் வாசலுக்கு கொண்டு வந்து சேர்த்து விட்டனர். கண் கெட்ட பின் சூரிய நமஸ்காரம் செய்து பிரயோசனம் இல்லைதான். என்றாலும், இந்த கொடிய நிலைமை மென்மேலும் தொடராமல், கடும் நடவடிக்கைகள் எடுப்பதன் மூலம் ஊசலாடும் நம் தாய் நாட்டின் உயிரைக் காப்பாற்றலாம். நிச்சயமாக இளைய தலைமுறையினர் நாம் இந்த உன்னத நோக்கத்திற்காக படையெடுக்கத் தான் வேண்டும்.

உயிரையே குடித்துக் கொண்டிருக்கும் இந்த ஹெரோயின் செய்யும் அட்டகாசங்கள் கொஞ்சம் நஞ்சமல்ல. ஹெரோயினுக்கு அடிமையான ஒரு சாதாரண மனிதன், நாளொன்றுக்கு ஹெரோயினுக்காகக் குறைந்தது 150 ரூபாயைச் செலவு செய்கிறான். சுவர்க்கம் என்று ஹெரோயினை அவன் கருதும் போது 150 ரூபாயென்ன? கோடி கோடியாகக் கொடுக்கவும் அவன் தயாராக இருக்கின்றான். இதனால் தான் என்னவோ ஹெரோயின் வியாபாரத்தில் கள்ளத்தனமாக ஈடுபட்டிப்பட்டிருப்பவர்கள், இதயத்தில் ஈரமே இல்லாமல் போய் விட்டது. தாம் செய்வது, ஒரு பெரும் கொடிய செயல் என்பதை அவர்கள் நன்றாகவே உணர்ந்திருந்த போதும், ஒன்றுமே அறியாத அப்பாவி சனங்களையெல்லாம் ஏமாற்றி ஹெரோயின் பக்கம் இழுத்து விட்டு, ஹெரோயின் தான் சொர்க்கபுரி என்று நம்பவைத்து விட்டார்கள். ஹெரோயினுக்கு அடிமையாகி விட்ட இந்த அப்பாவிச் சனங்களும், இந்த நயவஞ்சக வியாபாரிகளை சொர்க்கலோக தேவர்கள் என்று தான் எண்ணிக் கொண்டிருக்கின்றார்கள். நிலைமை இதுவாக இருக்க பாடசாலைக்கு வெண்ணிற உடையில் வெள்ளை உள்ளத்துடன் சென்ற, இந்த பிஞ்சுகளையும் விட்டு வைக்கவில்லை. இந்தச் சொர்க்கபுரி தேவர்கள் துரத்தி துரத்தி ஓடுகிறார்கள். இந்தப் பிஞ்சுகளையும் கூட, பணம் ஒன்றையே தம் கண் முன் நிறுத்தி, இப்படியொரு சீரழிவை ஏற்படுத்தி விட்டனர். இந்தப் பொல்லாத ஹெரோயின் வியாபாரிகள் கடும் சட்ட நடவடிக்கைகளையும் மீறிவந்து, நம் நாட்டைப் பாதாளம் நோக்கி இழுத்துக் கொண்டிருக்கின்றனர். நாம் இதற்கு மேலும் மௌனமாக இருக்கக்கூடாது திரண்டெழ வேண்டும். புதியதோர் திருப்பம் காண கொதித்தெழ வேண்டும் கொழுந்து விட்டெரியும் தீயை அணைக்க.

ஒரேயொரு நிமிடம் உங்கள் கண்களை இறுக மூடிக் கொண்டு சிந்தித்துப் பாருங்கள் தோழர்களே. எத்தனை குடும்பங்கள் இதனால் சீரழிந்தன என்பதை, எத்தனை பெற்றோர் தம் பிள்ளைகளை நினைத்து இரத்தக் கண்ணீர் வடிக்கின்றனர் என்பதை, எத்தனை உயிர்கள் இங்கு ஊசலாடிக் கொண்டிருக்கின்றன என்பதை சிந்தியுங்கள்... சிந்தியுங்கள்... இனியும் தொடரத்தான் வேண்டுமா இந்த அவல நிலை? எமது சின்ன இலங்கை சிதைந்து போவதை எம்மால் ஜீரணிக்கத்தான் முடியுமா? எம் தாய் நாட்டின் ஜீவநாடிகள் நாம், இன்றே புறப்பட வேண்டும். போதைப் பொருட்களை எம் நாட்டிலிருந்து ஒழிக்க வேண்டும். எமது தாய் சிந்திக்கொண்டிருக்கும், இந்த இரத்தக் கண்ணீரில் விழுதிட்டு வீரவாளை கையில் ஏந்தி புறப்படுவோம் போதை அரக்கனை வெட்டி வீழ்த்திட. நாம் முன் வைத்த அடியை பின் வைக்காமல் வெற்றிப் பாதையில் நாம் விரைந்திடுவோம். ஒரு சுந்தர இலங்கையை காண்பதற்கு. அப்பொழுது தான் எமது சின்ன இலங்கையின் இதய சந்தம் என்றென்றும் எம் செவிகளில் ஒலித்துக் கொண்டேயிருக்கும்.

## விழுமியங்களின் பொதுமையும், மெய்யியலும்

திருமதி. மல்லிகா இராஜரத்தினம், மெய்யியல்துறை

விஞ்ஞானத்தோடும், பௌதீக வதீதத்தோடும் மிகவும் நெருக்கமான தொடர்புடைய மெய்யியல், விழுமியங்களின் பொதுமை நிலையினையும் தனது ஆய்வுத் துறையாகக் கொள்கின்றது. பொதுவாக விஞ்ஞானம் பௌதிக உலகின் பொது உண்மைகளை பொது விதிகளை ஆய்கின்ற, நிறுவுகின்ற முறையாகக் கருதப்படுகின்றது. அதே போன்று பௌதீகவதீதம் (Meta-Physics) பௌதீக உலகிற்கும்மப்பால் அல்லது அதற்கு அடிப்படையான விடயங்களை ஆய்கின்ற முறைமையாக விளங்குகின்றது அல்லது கருதப்படுகின்றது. மூல விஞ்ஞானத்தோடும் பௌதீகவதீத நிலையோடும் தொடர்புபடும் மெய்யியல் தனது பிரதான ஆய்வுத் தளமாக விழுமியங்களின் பொதுமையினை அல்லது பொது விழுமியங்களை (Universal values) கொண்டிருந்த தன்மையினை மேலைத்தேச, கீழைத்தேச மெய்யியல் மரபுகள் காட்டி நிற்கின்றன. அந்த வகையிலேயே மெய்யியல் தூய விஞ்ஞானத்தினின்றும் வேறுபடுகின்றது. விஞ்ஞானம் பௌதிக நிலைகளின் பொதுமைகளை அறிய முற்படுகின்றது. மெய்யியல் பௌதிகப் பொதுமைகளோடு மனித விழுமியங்கள் சார்பான, நன்மை, உண்மை, நீதி, அழகு போன்றவற்றின் பொது உண்மை நிலைகளினை அறிய முற்படுகின்றது. இந்தவகையில் மெய்யியல் விஞ்ஞானங்களின் விஞ்ஞானமாக (Science of Sciences) விளங்குகின்றது.

மேலைத்தேச மெய்யியல் வரலாற்றில் விஞ்ஞானிகளது பங்களிப்பு மிகவும் ஆழமாக இருப்பதனை அவதானிக்க முடிகின்றது. எடுகோள் விஞ்ஞான நிலைகளுக்குமப்பால் ஆக்கநிலை விஞ்ஞான முடிவுகளோடு பௌதிகவதீத நிலைகள் தொடர்புபடுவதனையே இவ்வாறான மெய்யியல் மரபுகள் ஞாபகப்படுத்துகின்றன.

சாதாரண அல்லது எடுகோள் விஞ்ஞான முறைமைகளின் முடிவிற்குமப்பால் அடிப்படை உண்மைகளைப் பற்றிய தேடுதலையே ஆக்க நிலை விஞ்ஞானிகள் (Creative Scientists) மேற்கொள்கின்றனர். ஆனால் இன்று பெரும்பாலும் எடுகோள் விஞ்ஞானம் மட்டுமே நடைமுறையில் விஞ்ஞானம் எனக் கருதப்படுகின்றது. இதன் ஆய்வு முறைகள் குறிப்பிட்ட எடுகோள்களைத் தர்க்கரீதியாக நிரூபிக்கும் விஞ்ஞான முறைமைக்குள் வருகின்றன. பௌதிகவதீதம் மூல விஞ்ஞானத்தோடு அல்லது ஆக்க நிலை விஞ்ஞானத்தோடு தொடர்புபடுகின்றது. இந்நிலையில் பௌதிக வதீதத்திற்கும் விஞ்ஞானத்திற்குமிடையில் வேறுபாடுகளைக் காண்பது அரிதாகின்றது. இதனாலேயே பல்வேறு அண்மைக் காலத்து அறிஞர்கள் ''மறைஞானமும் பௌதீகவதீதமும்'', ''மறைஞானமும் புதிய பௌதீகமும்'' போன்ற எண்ணிறந்த நூல்களை எழுதி வருகின்றனர். அதேபோன்று செய்நெறி மெய்யியல் மரபுகளைச் சார்ந்த ஆதிக் கிரேக்க மெய்யியலாளர்களிலிருந்து குறிப்பாகப் பைதகரசிலிருந்து பேட்றன்ட் ரசல் வரை கணிதவியல் விஞ்ஞானத்துடன் மெய்யியல் தொடர்புபட்டுள்ள தன்மையினைக் காணலாம்.

விஞ்ஞானத்தின் ஆழ்நிலைகளும் விபரிப்பிற்குட்படாதவை. விஞ்ஞானி உண்மையில் கூறுகளை உள்ளுணர்வின் (Intution) மூலமாகவே பெற்றுக் கொள்கின்றான். விஞ்ஞானத் துறையில் மிகத் தெளிவாக உள்ள இந்நிலையினை யாரும் விமர்சிப்பதில்லை. அதன் அடிப்படைகளில் யாரும் கேள்விகள் எழுப்புவதில்லை. ஆனால் விழுமியங்கள் பற்றிய பொதுமை நிலைகளை ஆராய முற்படுகின்ற போது அதன் பொதுமைகள் முழுமையான தரிசனமாக (total vision) உள்ளுணர்வு அறியும் நிலை என்பதனை இன்று யாரும் பொதுவாக ஏற்றுக் கொள்வதில்லை. ஆனாலும் அதன் அடிப்படைநிலை மறுக்கப்பட முடியாத உண்மையோடு தொடர்புடையது என்பதனை உணர்வதற்கு மெய்யியலின் ஆரம்பக்காலம் தக்க சான்றுகளைக் கொண்டுள்ளது.

முதன் முதலாக சோக்கிரட்டீஸ் என்ற கிரேக்க மெய்யியலாளர் புறநிலைப் பிரபஞ்ச ஆய்வினின்றும் மெய்யியலை மனித விழுமியங்கள் சார்ந்த துறையாக மாற்றினார். மனிதன் தன்னைத்தானே உணர்ந்து கொள்ள வேண்டும் என்ற கீழைநாடுகளின் மெய்யியல் ஞானம் போன்று சோக்கிரட்டீஸ் என்ற மாபெரும் தத்துவஞானி ''உன்னையே நீ அறிந்து கொள்'' (know thyself) என்றார். மனிதனின் சாரம் பற்றிய அறிவு விழுமியங்களின் பொதுமையினைக் காண்பதற்கு அடிப்படையாகின்றது. பொது நீதி பற்றியும் பொது அழகு பற்றியும் சோக்கிரட்டீசின் பல கருத்துக்களை, அவரது மாணக்கனும், புகழ்வாய்ந்த மெய்யியலாளருமான பிளேட்டோவின் (கி.மு.427-347) உரையாடல் நூல்களில் காணலாம். பிளேட்டோவின் எழுத்துக்களினூடாக சோக்கிரட்டீசின் கருத்துக்களை அறிய முடிகின்றது.

பிளேட்டோவின் முப்பதுக்கும் மேற்பட்ட உரையாடல்நூல்களில் (dialogues) குறிப்பாக குடியரசு (Republic) மிகவும் முதன்மையானது. பொது நீதி பற்றியும், இலட்சிய அரசு பற்றியும் ஆய்வு செய்யும் இந்நூலில் உண்மையான மெய்யியலறிஞன் ''உண்மையை முழுமையாகப் பார்ப்பவன்'' என சோக்கிரட்டீஸ் என்ற பாத்திரத்தினூடாக

வர்ணிக்கப்படுகின்றான். இக்கிரேக்க மெய்யியலாளரின் சிந்தனையின்படி உண்மையின் காட்சியும் (vision of Truth) நன்மையும் இணைந்து செல்கின்றன. யார் உண்மையின் முழு தரிசனத்தையும் பெறுகின்றானோ அவன் பொது நன்மையில் இருந்து விலகிச் செல்வதில்லை. இதனை பகவத்கீதையின் இரண்டாவது அத்தியாயத்தில் இடம்பெறும் ''ஸ்திதப் பிரக்ஞன்'' என்ற கருத்துடன் ஒப்பிடமுடியும்.

இக்கருத்து ஆத்மிக அறிவின் ஊடாக அதாவது தன்னையறிதலின் ஊடாக ஒருவன் எவ்வாறு பொது தர்மத்தினை விளங்கிக் கொள்ள முடியும் என்பதனைப் போதிக்கின்றது. உண்மையின் நிலையான தன்மையினையும் உண்மையின் ஊடாக அமரத்துவ நிலையினையும் அடையும் தன்மையினையும் எடுத்துக் காட்டும் பகவத்கீதையின் சாங்கிய யோக அத்தியாயக் கருத்துக்களை சோக்கிரட்டீசின் இறுதி நிலைகளைச் சித்தரிக்கும் ஃபீடோ (phaedo) என்ற பிளேட்டோவின் உரையாடல் நூல் சித்தரிக்கின்றது. காலதேச வர்த்தமானங்களை கடந்த பொது உண்மை எடுத்துக் காட்டப்படுகின்றது. சோக்கிரட்டீசின் கடைசி வசனங்களாக உருவகிக்கப்படும் ''ஒரு நல்ல மனிதன் இறப்பதில்லை'' என்ற கூற்று பொது நன்மையின் அமரத்துவ நிலையினைக் காட்டுகின்றது.

இத்தகைய அனுபவ நிலைகளை புத்தரும் போதித்தார். தியானத்தினால் வரும் அனுபவம், போதி நிலை, விழுமியங்களுக்கு அடிப்படையாக வேண்டும் என்பதே புத்தரின் செய்தி. இந்திய சிந்தனை வரலாற்றில் அதி உன்னத இடத்தினைப் பெற்றுள்ள புத்தரின் (கி.மு.6 ம் நூற்றாண்டு) சிந்தனைகள் விவரணரீதியான பௌதிக வதீதத்திற்கும் அப்பால் அறிவின் ஒருமை நிலையே, விழுமியம் சார்ந்த மனித மாற்றத்திற்கும், உயர்விற்கும் சமூக மாற்றத்திற்கும் அடிப்படை என்ற உண்மையினை மிகத் தெளிவாக உணர்த்தின.

வெறுமனே தர்க்க ரீதியான விஞ்ஞானமோ, பௌதிகவதீதமோ அதன் அடிப்படைகளுக்குச் செல்வதில்லை. ஆனால் தவிர்க்க முடியாதவாறு எமது கல்வியமைப்பில் இவ்வாறான விடயங்களே போதிக்கப்படுகின்றன. அதனாலேயே புதிய ஆக்கங்களைப் படைக்கும் விஞ்ஞானியையோ, சமூக விஞ்ஞானியையோ நமது கல்வியமைப்பு உருவாக்கித் தரவில்லை. கல்விமுறைமை விஞ்ஞானத்துறையிலோ சமூக விஞ்ஞானத் துறையிலோ மெய்யியலிலோ புதிய சிந்தனைகளை தர வேண்டுமானால் அதன் அறிவு நிலை எண்ணக்கருநிலையற்ற அறிவு முறைக்குள் (non-Conceptual Understanding) ஊடுருவ வேண்டும்.

நவீன மேலைத்தேச மெய்யியலில் புகழ்பெற்ற இமானுவல் காண்ட் (Immanuel Kant 1724-1804) என்ற மெய்யியல் அறிஞரின் மூன்று விமர்சன நூல்களும் ''மெய்யியலின் இத்தகைய பிரதான நிலைகளை எடுத்துக் காட்டுகின்றன. விஞ்ஞான உண்மைகளை விளக்கும் நியதிகளுக்கும், மனிதன் உணரும் செயல் உரிமைக்கும், பண்புகளுக்கும் இடையே முரண்பாடு உள்ளது போன்ற தோற்றம் மேலோட்டமான அறிவின் விளைவு என்பதனைக் காண்ட் விளக்கினார். தூய அறிவு பற்றிய விமர்சனம் (Critique of Pure reason) என்ற அவரது நூல், அறிவாராய்ச்சியியலின் (Epistemology) அடிப்படைகளையும் அறிவின் வரையறைகளையும் விளக்கி பௌதிகவதீத உண்மைக் கருதுகோள் விஞ்ஞான முறை போன்று நிரூபிக்கப்பட முடியாதவை என்ற கருத்தினை முன்வைக்கின்றது. அதாவது கடவுள் இருப்பு, பிரபஞ்சத்தின் தோற்றம், காரணகாரியவிதி, அமரத்துவநிலை போன்றவை விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்பட முடியாதவை. எனவே அடிப்படை உண்மையினை அறிய வேறு அறிவு முறைகளைக் கையாள விரும்பினார். இதனால் இரண்டாவது விமர்சன நூலாக ''நடைமுறை சார் அறிவு பற்றிய விமர்சனம்'' (Critique of Practice reason) என்ற நூலினை எழுதினார். இதில் அறிவியலுக்காக பௌதிகவதீத உண்மைகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இந்த விமர்சக நூலில் பௌதிகவதீதம் சாதாரண அறிவு முறையில் அறியப்படமுடியாதது என்பதனைச் சுட்டிக் காட்டிய காண்ட் இரண்டாவது நூலில் பௌதிகவதீதத்தனை ஏற்றுக்கொள்கிறார்.

மூன்றாவது விமர்சன நூலான ''தீர்மானங்கள் பற்றிய விமர்சனம்'' (Critique of Judgement) என்ற நூலில் முதல் இரு நூல்களில் உள்ள கருத்து இடைவெளியை நிரப்புகின்றார். அழுகு பற்றிய ஆய்வில் பொது அழகினை அறியும் நிலையினைப் பற்றி இந்நூல் மிக ஆழமாக ஆராய்கின்றது. பொது விழுமியங்களின் அடிப்படைகளை மெய்யியலின் நோக்கமாகக் கூறலாம். இதனைக் காண்ட் தனது மூன்றாவது விமர்சன நூலில் மிகத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளார்.

அகநிலைப் பொதுமை (Subsective Universal) என்ற அவரது கருத்து ஆழ்ந்த அகநிலை உணர்வில் எழும் பொதுமைநிலையினை விளக்குகின்றது. உள்முக ஆய்வுகளிலும் (intraspective) பொதுமையான தன்மைகள் அமைகின்றன. இதனைக் காண்ட் மெய்யியலின் இறுதி நோக்கமாகக் காட்டுகின்றார்.

இந்த வகையில் மெய்யியலில் மட்டுமின்றி ஏனைய சமூக விஞ்ஞானத் துறைகளுக்கோ அல்லது அரசியல் துறைக்கோ கலைவிமர்சனத்துறைக்கோ மிகவும் அடிப்படையாக விளங்கும் விழுமியங்கள் பற்றிய ஆய்வில் பொதுமைகள் பற்றிய கருத்துணர்வும் அதனைப் பற்றிய விளக்கமும் அவசியமாகின்றது. இத்தகைய கல்வி முறைமைகளை அறிமுகப்படுத்துவதன் ஊடாக இளைய தலைமுறையினர் மிகவும் பயனடைய முடியும்.

## வண்டித்தடம்

யோ.அன்ரனி யூட் (ஜே.கே) 1ம் வருடம், விலங்குமருத்துவபீடம்

காய்ந்து கிடக்கிறது கால்வாய்
கண்கூச வைக்கிறது கடும்வெய்யில்
இன்று
கால்வாய் தாண்டி நான்
அப்பால் நடக்கையிலே
எப்போதோ ஒரு வண்டி
போட்ட தடம் பார்த்தேன்.

பலகாலம் முன்பிங்கு
மழைபெய்த நாளில்இக்
கால் வாயின் வழியேயும்
நீர் பாய்ந்தது

காலங்களுண்டென்று
காத்திருந்த புல்விதைகள்
முளைவிட்டு வெளிவந்து
தலை சாய்ந்தன

சுயமாக விளைத்ததென்று
சொன்னாலும் நம்பாத
அளவுக்கு அழகழகாய்ப்
பூப்பூத்தன.

கரையோடு வேர்கொண்ட
வயதான மரமொன்றும்
நகர்கின்ற நீர்மீது
மலர்தாவிற்று.

வசந்தம் முடித்து ஒரு
கோடை எழுந்ததிங்கு
நீண்ட தொரு ஊர்வலமாய்
நகர்ந்துவந்த நீர்ப்படுக்கை
குறைந்து தடைப்பட்டு
இடையிடையே தேங்கியது.

சூரியனும் தரையும் அதைப்
போட்டியிட்டு உறிஞ்சிவிட
எஞ்சியது கால்வைத்தால்
நெகிழ்ந்தசையும் ஈரநிலம்.

தாகத்துடனிருந்த
ஈரத்தரையதன் மேல்
தாண்டிச் சென்றவொரு
வண்டியிட்ட தடமொன்றே
இது வரையில் அழியாமல்
இத்தரையில் இருக்கிறது

நீரோடும் போதிந்த
மரவண்டி போயிருந்தால்
அழியாத சுவடொன்றை
வெட்டாமல் போயிருக்கும்.

சூட்டில் தகிக்கின்ற
மணல் மீது போயிருந்தால்
அன்றகாற்று வீசியந்த
அடையாளம் போயிருக்கும்

தாகத்துடனிருந்த
ஈரத்தரையதன் மேல்
ஆழத்தடம் போட்டு
அவ்வண்டி போனபின்பும்
காயம் சுமந்தபடி
காய்கிறது இக்கால்வாய்.

கரையெல்லாம் பூக்களில்லை
வரண்ட நில வன்முட்கள்
இன்னும் மழைபெய்யும்
இவ்வழியே நீர்பாயும்
பூச்சொரிவும்
புல்லசைவும்
கால்வாயை அழகாக்கும்.

*"வடக்கிலும், கிழக்கிலும் வாழும் தமிழ் இளைஞர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுள் இன்று அவர்கள் சுய பாதுகாப்பாக வாழ முடியாமல் இருப்பதே முக்கியமானதாகவுள்ளது. அங்குள்ள இளம் ஆண்களும் பெண்களும் எந்த நேரமும் தாம் கைது செய்யப்படலாம் மானபங்கப்படுத்தப் படலாம் என்ற பயத்தில் வாழ்ந்து கொண்டிருக் கிறார்கள்.....*

*.... தமிழ் இளைஞர்கள் பல்கலைக்கழகங் களுக்கான அனுமதி, தொழில் வாய்ப்புகள், நிலப்பங்கீடு, தமிழ் மொழியினைப் பயன்படுத்துதல் என்பவற்றில் ஒருவித தேய்மானத்துக்குட்பட்டு வந்துள்ளனர்."*

# இலங்கையில் இளைஞர் அமைதியின்மைக்கான காரணங்கள் பற்றியதொரு ஆரம்ப உசாவல்

பேராசிரியர் அம்பலவாணர் சிவராஜா

இலங்கை இன்று எதிர்நோக்கும் பிரச்சினைகளுள் மிகவும் முக்கியமானதொன்று இளைஞர்களிடையே நிலவும் அமைதியின்மையாகும். வடக்கிலோ தெற்கிலோ அல்லது கிழக்கிலோ மேற்கிலோ வாழும் சிங்கள, தமிழ், முஸ்லீம் இளைஞர்கள் அனைவருமே பல்வேறு மனத்தாங்கல்களுடன் வாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்குப் பிரச்சினைகள் உண்டு. அவற்றுக்கு முதலிடம் வழங்கப்பட்டால் தான் இந்நாடு அமைதியான நாடாக முன்னேற முடியும் என்பதை நாம் எல்லோரும் அறிவோம். ஆனால் அவர்கள் எத்தகைய பிரச்சினைகளை எதிர் நோக்குகிறார்கள் என்பதை நாம் எல்லோரும் அறிவோம். ஆகவே இலங்கையில் வாழும் இளைஞர்களின் பிரதானமான பிரச்சினைகள் எவை என்பதை நாம் காண்போம். இளைஞர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுள் பிரதானமானது அந்நியப்படுத்தல் ஆகும்.

**II**

அந்நியப்படுதல் என்ற எண்ணக்கரு கணிசமான அளவு பழமையானதாகும். கார்ல் மாக்ஸ்தான் அந்நியப்படுத்தல் என்பதை ஒரு சமூகவியல் எண்ணக்கரு ஆக்கியவராவார். மார்க்ஸ் தொழிலாளியை ஒரு பாட்டாளி என வர்ணித்தார். (பாட்டாளி என்பவன் தனது உழைப்பைத் தவிர வேறு ஒன்றும் இல்லாதவன்) இதனால் ஒரு தொழிலாளி தனது உழைப்பின் பயனாக உருவாகும் உற்பத்தியினை ஒரு அந்நிய காரணியாகக் கொண்டான் என மார்க்ஸ் வாதிட்டார். இவ்வாறு உற்பத்தியிலிருந்து அந்நியமயமாக்கப்பட்ட தொழிலாளர்கள் உருவாக்கும் உலகத்தில் தொழிலாளி தன்னை இனங்கண்டு கொள்ள முடியாதுள்ளது என வாதிட்ட மார்க்ஸ் இத்தகைய அந்நியமயமாக்கலை மார்க்ஸ் சமூகத்தின் மீது தான் சுமத்தினார்.

## III

இலங்கையில் பெருமளவு இளைஞர்கள் குறிப்பாக படித்த இளைஞர்கள், விசேடமாக படித்த வேலையற்ற கிராமப்புற இளைஞர்கள் ஏன் அமைதியற்று இருக்கிறார்கள் என்பதற்கு விடை காண வேண்டுமாயின் இளைஞர்களின் உண்மையான மனத்தாங்கல்களையும், எத்தகைய பிரச்சினைகளையும் எதிர் நோக்குகிறார்கள் என்பதைக் காணுதல் வேண்டும். உண்மையில் இவர்களது தேவைகளையும் அபிலாசைகளையும் விளங்கிக் கொள்வதில் மாறி மாறி ஆட்சி பீடமேறிய ஆட்சியாளர்கள் தோல்வி கண்டுள்ளனர் என்றே கொள்ள வேண்டும். துர் அதிர்ஸ்டவசமாக இலங்கை அரசியலில் மையப் பொருள் இதுவரையும் இளைஞர்களாக இருக்கவில்லை.

1980 களின் இறுதிப் பகுதியில் 1 மில்லியன் 20,000 பேர்கள் இலங்கையில் வேலையற்றிருந்தனர். மேலும் அரை மில்லியன் ஆட்கள் கீழ் உழைப்பினால் பாதிக்கப்பட்டிருந்தனர். இவர்கள் இலங்கையில் முழு வேலைப்படையில் 26% அல்லது இளைஞர்களின் தொகையில் 49% வீதத்தினர் ஆவர். மேலும் வேலையற்றவர்களுள் 11% ஆனோர் வேலை பெறுவதற்கு 4 வருடங்கள் எதிர்பார்த்திருக்க வேண்டியிருந்தது எனத் தெரியவருகின்றது.

இலங்கையின் இளைஞர்களுள் 76% வீதத்தினர் கிராமங்களிலேயே வாழ்கிறார்கள். இவர்களது குடும்பங்கள் பெரியன என்பதோடு வருமானம் குறைந்தளவுமாகும். அதிகமான பிள்ளைகளையுடையவை. ஆகவே சுமை தனியே தாய் தந்தையர்களுக்குரியன மட்டுமல்ல மூத்த பிள்ளைக்குமுரியதாகின்றது. ஆகவே அத்தகைய மூத்த பிள்ளைகளுக்கு கல்வியைத் தொடர்வதற்கு வாய்ப்பிருக்கவில்லை. கிராமப்புறங்களில் ஆங்கிலம் முறையாகக் கற்பிக்கப்படுவதில்லை. இது வேலை பெறுவதற்கான வாய்ப்பினை மூடிவிடுகிறது. ஆகவே வேலை பெறுவதற்கான உரிமை இவர்களுக்கு மறுக்கப்பட்டதெனலாம்.

## IV

சமகால இலங்கையில் இளைஞர் அமைதியின்மைக்கான காரணங்கள்பல. அவை முறையே: *(i)* சமூகம் அரசியல் மயப்படுத்தப்பட்டமையும் அரசியல் அதிகாரம் தவறாகப் பயன்படுத்தப்பட்டமையும் *(ii)* இளைஞர் அந்நியமயப்படுத்தப்பட்டமையும் ஸ்தாபனங்கள் தமது இடத்தை இழந்து வருகின்றமையும் *(iii)* கல்விக்கும் வேலைவாய்ப்புக்குமிடையே தொடர்பின்மை *(iv)* சமூகச் சமமின்மை காரணமாக எழும் வேறுபாடுகள் *(v)* மொழிக் கொள்கை *(vi)* சாதி அடக்குமுறை *(vii)* பெறுமதிகளின் வீழ்ச்சி *(viii)* இனப்பிரச்சினை[1] என்பனவாகும்.

*(i)* சம கால இலங்கையில் இளைஞர் அமைதியின்மைக்கான காரணங்களுள் அதிகார துஸ்பிரயோகமும் ஒன்றாகும். சமீப காலமாக அரசியல் கட்சிகள் தேர்தல்களில் வெற்றி பெறுவதற்காக சிவில் சமூகத்தினை அரசியல் மயப்படுத்த ஆரம்பித்தன. தேர்தலில் மிகப் பெரும்பான்மையோடு அரசியல் கட்சிகள் வெற்றி பெறத் தொடங்கியதோடு தான் முன்னர் ஒரு போதுமில்லாத அளவு தேர்தலை அடுத்த வன்முறைகளுக்கு வழி வகுத்தன. இதன் காரணமாக தோல்வியடைந்த கட்சிகளைச் சேர்ந்தோரின் பிள்ளைகள் அரசாங்க உத்தியோகங்களிலும் மற்றைய தாபனங்களிலும் பாரபட்சமான முறையில் பழி வாங்கப்பட்டனர். இதனால் இளைஞர்களுள் ஒரு பகுதியினரிடையே அதிருப்தி, அமைதியின்மை என்பன ஏற்படலாயிற்று.

*(ii)* தேசிய அரசியல் ஸ்தாபனங்களாயிருந்தாலென்ன உள்ளூர் மட்டத்திலான ஸ்தாபனங்களாலென்ன அல்லது குடும்பம் போன்ற மரபுரீதியான ஸ்தாபனமானாலென்ன நடைமுறையிலுள்ள ஸ்தாபனங்களிலிருந்து இளைஞர் அந்நியமாகி வருகின்றனர். சமகால இலங்கையர் சமூகத்தில் ஸ்தாபனங்களின் பெறுமதி தாழ்நிலை அடைந்து வருகின்றதோடு கிராமப்புறங்களில் வாழும் இளைஞர்கள் இவற்றில் நம்பிக்கை கொள்கிறார்களில்லை. அதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. *(i)* ஒன்றில் அரசியல் மயப்படுத்தினால் அல்லது ஸ்தாபனங்கள் செயற்படாததினாலேயே நடைமுறையிலுள்ள ஸ்தாபனங்கள் வீழ்ச்சியடைந்து வருவதோடு இவை சமூகத்தில் குறிப்பிடத்தக்க அல்லது அவசியமான கடமைகளை ஆற்றவில்லையென இளைஞர்கள் கொள்கிறார்கள். *(ii)* மாறி வரும் இளைஞர் அபிலாசைகளுக்கு இயைந்தவாறு ஸ்தாபனங்கள் தாக்கமான முறைகளை அபிவிருத்தி செய்யாததால் இளைஞர் மனத் தாங்களுக்கும் அபிலாசைகளுக்கும் எந்தவிதமான குறிப்பிடத்தக்க இடமும் வழங்கப்படவில்லை எனக் கொள்கிறார்கள்.

*(iii)* இலங்கையில் கல்விக்கும் வேலைவாய்ப்பின்மைக்குமிடையிலான தொடர்பின்மையினை பின்வரும் புள்ளி விபரங்கள் சிறப்பாக வெளிப்படுத்துகின்றன:

1987 இல் 484,797 மாணவர்கள் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றினார்கள். அவர்களுள் 95,416 பேர்களே தமது படிப்பினைத் தொடர்வதற்கான பெறுபேறுகளைப் பெற்றனர். ஆகவே 16 வயதையடைந்த 389,386 மாணவர்கள் முன்னேறுவதற்கான வேறு வழிகளைத் தேடும்படி நிர்ப்பந்திக்கப்பட்டனர். அதே வருடத்தில் 112,577 மாணவர்கள் பொதுத் தராதரப்பத்திர உயர்தர பரீட்சைக்குத் தோற்றினார்கள். இவர்களுள் 31,079 பேர்களே தகுதி பெற்றார்கள். இவர்களுள் 6143 பேர்களுக்கே பல்கலைக்கழக அனுமதி கிடைத்தது. ஆகவே 1987 ஆம் ஆண்டில் மட்டும் பொது தராதரப் பத்திர உயர்தர **(G.C.E.A/L)** பரீட்சை எழுதிய 106,434 மாணவர்கள் பல்கலைக் கழகங்களுள் நுழைய முடியாததால் விரக்தியுற்று அதிருப்தி அடைந்துள்ளனர். ஆகவே 1987 இல் மட்டும் 495,815 மாணவர்கள் கிட்டத்தட்ட அரைக் கோடி இளைஞர்கள் பூர்த்தியாக்க முடியாத அபிலாசையுடையவர்களாக மாறினர்.

மேலும் 8 ஆம் 9 ஆம் வகுப்புத் தராதரம் உடையோர்களுள் வேலையற்றோர் விகிதம் 31.5% ஆக இருந்தது. பொதுத் தராதரப் பத்திர சாதாரண தர **(G.C.E.O/L)** தகுதியுடைவர்களுள் 37.5% வேலையற்றிருந்தனர். பொதுத்தராதர பத்திர உயர்தர **(G.C.E. A/L)** தகுதியுடையோர்களுள் 44.1% வேலையற்றிருந்தனர்.

மேற்சொன்ன புள்ளி விபரங்கள் இலங்கையின் கல்விக் கட்டமைவு திருத்தியமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தினை மாத்திரமன்றி கல்விக்கும் வேலைவாய்ப்பின்மைக்குமிடையிலான தொடர்பின்மை யினையும் வெளிப்படுத்துகின்றன.

**(iv)** சமூகச் சமமின்மை என்பதோடு ஒரு இளைஞன் தான் பிறந்த குடும்பத்தின் சமூக பொருளாதார சூழ்நிலைகள் காரணமாக எழுவதாகும். ஒரு குறிப்பிட்ட இளைஞன் தான் பொருளாதார வசதியும் சமூக அந்தஸ்தும் உயர் பதவியும் வகிக்கும் குடும்பத்தில் பிறக்கவில்லை என்பதனால் பல்வேறு பாரபட்சங்களுக்கும் உட்படுகின்றான். இது முதலில் சிறந்த கல்வி பெறும் வாய்ப்பினை பெற முடியாது ஆக்குவதோடு பின்னர் தகுந்த வேலை வசதிகளைப் பெறும் வாய்ப்பினையும் இல்லாது ஆக்கிவிடுகின்றது.

**(v)** கிராமப்புறங்களிலிருந்து வரும் பெரும் எண்ணிக்கையான இளைஞர்கள் ஆங்கிலம் பேசும் மேலைத்தேச வாழ்க்கை முறையினைப் பின்பற்றும் நகரங்களில் வாழ்வோர்களால் சமூகம் ஆக்கிரமிப்புச் செய்யப்படுவதை வெறுக்கிறார்கள். அதாவது சுயமொழிகளில் படித்தவர்களை இவர்கள் ஆங்கிலத்தினை பயன்படுத்தி வீழ்த்துவதை இளைஞர்கள் வெறுக்கிறார்கள்.

**(vi)** இளைஞர்களது அதிருப்திக்கு சாதி அடக்குமுறையும் ஒரு காரணமாகும். தெற்கில் திசமகாறாம தொடக்கம் சப்ரகமுவ ஊடாக மாத்தளை வரையுமுள்ள பகுதிகளிலும் அம்பாறை தொடும் வரையுமுள்ள வடமத்திய மாகாணம் என்பவற்றில் தான் அண்மைக் காலத்தில் பலமான வன்முறை சம்பவங்கள் இடம் பெற்றன. இப் பிரதேசங்களில் வன்முறைகளில் ஈடுபட்டோர் கொயிகம சாதியினைச் சேராத பக்கம் அல்லது வகும்புற அல்லது அவைபோன்ற உபசாதிக் குழுக்களைச் சேர்ந்தவர்களே.

வடக்கிலும் சாதி என்பது அங்கு வாழும் இளைஞர்களுள் ஒரு பகுதியினரின் மனத்தாங்கல்களுள் முக்கியத்துவம் பெற்றிருந்தது. குறிப்பாக அங்கு அரசியல் தலைமைத்துவம் அண்மைக்காலம் வரை சாதியினை அடிப்படையாகக் கொண்டதாக அமைந்திருந்தது.

இதனால் சாதி சம கால இளைஞர்களின் அமைதியின்மைக்குப் பங்களித்திருக்கும் ஒரு காரணியாகும்.

**vii)** இலங்கையர் சமூகத்தில் ''பெறுமதிகள்'' குறைந்து வருகின்றன. காலனித்துவம் அறிமுகப்படுத்திய அரசியல் பொருளாதார மாற்றங்கள் காரணமாக பெறுமதிகள் வீழ்ச்சியடைந்தன. ஏற்றுக் கொள்ளக்கூடிய நடத்தையினை உசாவுவதற்கு இளைஞர்களுக்கு ஒரு இடம் இல்லாமையால் இளைஞர்கள் மயக்கமடை கிறார்கள். அடிப்படைச் சமூகக் கருதுகோள்களான எது சரி, எது கொடுமையானது, எது மனிதத் தன்மையற்றது என்பதைக் கண்டறிய முடியாதுள்ளது. நவீனத்துவத்தை நோக்கிய மாற்றத்தில் தனிப்பட்டவர்கள் சமூகத்தில் ஒன்றுபட்டு வாழ்வதற்கான பெறுமதிகளை இழந்து விட்டனர். உதவி, எளிமை, நேர்மை போன்ற பெறுமதிகள் எமது சமூகத்தில் ஏற்பட்டு வரும் மாற்றங்களினால் குறைந்து வருகின்றன. மதமும், கல்வி கற்றலும் பிரதான மூலங்களாக விளங்கும் எமது சமூகத்தின் கண்ணோட்டத்தில் ஏற்பட்ட மாற்றங்களால் சமூகத்தில் அத்திவாரமே கேள்விக்குறியாகியுள்ளது.

*(viii)* *வடக்கிலும், கிழக்கிலும் வாழும் தமிழ் இளைஞர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளுள் இன்று அவர்கள் சுய பாதுகாப்பாக வாழ முடியாமல் இருப்பதே முக்கியமானதாகவுள்ளது. அங்குள்ள இளம் ஆண்களும் பெண்களும் எந்த நேரமும் தாம் கைது செய்யப்படலாம் மானபங்கப்படுத்தப்படலாம் என்ற பயத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இரண்டாவதாக வடக்கில் கல்விக்கு மிகவும் முக்கியத்துவம் வழங்கி வந்தனர். ஆனால் தற்போது கல்வி கற்க முடியாத நிலை எழுந்துள்ளமையால் (பாடசாலைகளும் பல்கலைக்கழகமும் சரியாக இயங்கவில்லை) இங்குள்ள இளைஞர்கள் மிகவும் மனத்தாங்கல்களுக்குட் பட்டுள்ளனர். உண்மையில் பல்கலைக்கழக நுழைவில் தரப்படுத்தல் முறை அறிமுகம் செய்யப்பட்டதால் தமிழ் இளைஞர்கள் பெரும் மன விரக்திக்குட்பட்டனர். ரெட் றொபேர்ட் கர்[2] என்பவர் தனிப்பட்ட ஒருவர் தனக்கு நியாயப்படி கிடைக்க வேண்டியது கிடைக்காத போது தான் ஒப்பீட்டு தேய்மானம் எழுகிறது என வாதிட்டார். ஒப்பீட்டு தேய்மானம் என்பது மக்களை எதிர்ப்பிலும் வன்முறையிலும் தூண்டிவிடும் மன விரக்தியினை உருவாக்கும் இயந்திரவியல் என விளக்கினார். கர் மேலே சொல்லிய ஒப்பீட்டு தேய்மானம் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் பார்க்கும் போது தமிழ் இளைஞர்கள் தமக்கு உரிய, தமக்குக் கிடைக்க வேண்டியன மறுக்கப்பட்டுள்ளன என உணர்ந்தனர். 1970 களில் இருந்து தமிழ் இளைஞர்கள் பல்கலைக்கழகங்களுக்கான அனுமதி, தொழில் வாய்ப்புகள், நிலப்பங்கீடு, தமிழ் மொழியினைப் பயன்படுத்துதல் என்பவற்றில் ஒருவித தேய்மானத்துக்குட்பட்டு வந்துள்ளனர். கர், மனவிரக்தி என்பது தாக்குதலை ஊக்குவிக்கும் எனவும் தாக்குதல் உணர்வு வன்முறையின் ஒரு வடிவமாகும் எனவும் வாதிட்டார். தமிழ் இளைஞர் வன்முறைகளில் ஏன் இறங்கினார்கள் என்பதற்கு கர்ரின் கோட்பாடு விளக்கமளிக்கிறது.*

*பெருந்தோட்டப் பகுதிகளில் வாழும் தமிழ் இளைஞர்களும் பல்வேறு பிரச்சினைகளையும் எதிர் நோக்குகிறார்கள். கல்வி, சுகாதாரம், குடியிருப்பு, புரதச்சத்துணவு என்பவற்றிலும் உடல் வலுவின்மை என்பதிலும் குறைந்த மட்டம் காரணமாக தேசிய சராசரி வாழ்க்கை மட்டத்திலும் குறைந்த மட்ட வாழ்க்கையையே இவர்கள் வாழ்வதால் இலங்கையின் மற்றைய சமூகத்தவர்களோடு ஒப்பிடும் போது இவர்கள் சகலதுறைகளிலும் பின்தங்கியுள்ளனர். இதன் காரணமாக தோட்டப்புற இளைஞர்களிடையேயும் அமைதியின்மை நிலவுகின்றது. முஸ்லீம் இளைஞர்களும் போதுமான கல்வி, தொழில் வாய்ப்புகள் இல்லாமையாலும் குறிப்பாக பல்கலைக்கழக கல்வியில் போதுமான எண்ணிக்கையான முஸ்லீம்களுக்கு அனுமதி கிடைக்காததினாலும் பிரச்சினைக்குட்பட்டனர். அவர்களுக்கு தமது சமூகத்தின் அடையாளத்தினை வற்புறுத்த வேண்டிய ஒரு பிரச்சினையும் உண்டு.*

## *V*

*ஆகவே இலங்கையின் இளைஞர்கள் பலவிதமான மனத்தாங்கல்களுக்குட்பட்டுள்ளனர் என்பது தெளிவாகின்றது. கடந்த கால கல்விமுறை இளைஞர்களது எதிர்பார்ப்புகளை குறிப்பிடத்தக்களவு உயர்த்தியுள்ளது. கடந்த கால மொழிக் கொள்கைகள், கட்டுப்பாடற்ற நுகர்வுமுறை, சமூக வேறுபாடுகள் என்பன மிகக் குறைந்த எண்ணிக்கையானோர் வாய்ப்புகள் நிறைந்த வாழ்க்கையினை அனுபவிக்க பெரும் எண்ணிக்கையானவர்கள் தேய்மானத்திலும் தேவைகளுக்கும் மத்தியில் வாழ்கின்றனர். இப்பின்னணியில் வாழும் இளைஞர்கள் இவற்றினால் பாதிக்கப்படுகின்றனர். அவர்களுக்கு உதவி பெற ஒருவருமில்லை முறையிடக் கூட ஒருவருமில்லை. அரசியல் வாதிகள் தெரிந்தெடுக்கப்பட்ட பின்னர் நகர்ப்புற உயர்ந்தோர் குழுவுடன் சேர்ந்து விடுகின்றனர். இந்நிலையில் இளைஞர்களது பிரச்சினைகள் கவனமாக ஆராயப்பட்ட அப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது அவசியமானதும் அவசரமானதுமாகும்.*

**குறிப்புகள்**

1. *பார்க்க, இளைஞர் சம்பந்தமான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை.*
2. ***Ted Robert Gurr, Why men Rebel (U.S.A: Mamillan Company, 1966)***

மூன்றாம் பரிசுபெற்ற சிறுகதை

# அவள் தாயாகிறாள்

ந.சந்திரிகா, 1 ம் வருடம், விலங்கு மருத்துவ பீடம்

வீடு கல்யாணக்களை கட்டியிருந்தாலும் சந்தியாவின் மனம் இன்னும் அலைபாய்ந்த வண்ணமே இருந்தது. அவளின் வாழ்நாளில் எதிர்பார்த்திராத திருப்பம் அது. ஆனால் நாளை கல்யாணம் என்னவோ அவளிற்குத்தான். தன் ஊர் பழைய தோழிகள் தன் மாற்றத்தையிட்டு என்ன நினைப்பார்கள் என்று எண்ணிப்பார்த்தாள். ஊர் என்றதும் வீடும் பெற்றோரும் நினைவில் வந்தனர். கண்கள் கலங்கி கண்ணீர் வழிவதை துடைக்க மறந்தவளாய் சிந்தனை வயப்பட்டாள்.

சின்ன வயதில் வாழ்வில் ஏற்பட்ட வெறுப்பு அப்பா பெரிய உத்தியோகம் சம்பளமும் அப்படி. ஆனால் வாழ்ந்தது என்னவோ அம்மாவின் உழைப்பில். அப்பாவின் குடி எந்த வகையில் சேர்த்தியென்று அவளிற்குத் தெரியாது. குடியென்றால் அப்படியொரு குடி. சட்டி, பானை கூட சிலசமயம் சந்தைக்குப் போய்விடும். அவளிற்கு கீழ் இரண்டு தங்கைகள், வீடோ எப்போதும் போர்க்களம் தான். வீட்டில் இருக்கும் ஒவ்வொருவரும் எப்போது வெளியேறுவோம் என்று துடித்துக் கொண்டிருப்பது தான் வழக்கம். படித்த குடும்பம் என்று தெரிந்தவர்க்கெல்லாம் பசியோடு இரவு கழிவதெல்லாம் தெரிய வாய்ப்பில்லை. படிக்கவே முடியாத சூழ்நிலையில் எப்படியோ படித்து பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவியாயும் மாறிவிட்டாள். இனியும் படிப்பு பாழாகக் கூடாது என்றே பேராதனை பல்கலைக்கழகத்தையும் தேர்ந்தெடுத்திருந்தாள்

அவளின் வயதுப் பெண்களுடன் ஒப்பிடுகையில் சந்தியா வித்தியாசமானவள். பொறுமை, அடக்கம், அழகு என்பன அமையப் பெற்றவள். வானில் அலையும் மேகம் தொடங்கி காலில் மிதிபடும் பூண்டுவரை ரசிக்கத் தெரிந்தவள். இசை தான் அவளின் உயிர். இசையில் உணர்வுகள் கரைந்த உன்னதமான மோன நிலையில் தனிமையில் அமர்ந்து கண்களை மூடியிருப்பதில் உள்ள சுகம் - அப்பப்பா அது அவளிற்குத்தான் தெரியும். எத்தனையோ சோதனைகளையும் வேதனைகளையும் விழுங்கிக் கொண்டதற்கு இந்த ரசனையுள்ளம் ஓர் காரணம். இதயமது நொருங்கியபோதும் அவள் அழுது ஆர்ப்பரித்ததில்லை.

இவையெல்லாம் சேர்ந்து அவளை வாழ்வின் பற்றற்ற நிலைக்குத் தள்ளிவிட்டன. திருமணம் என்பதே ஓர் பெண்ணிற்கு கிடைக்கும் பெரிய தண்டனையாய் கருதினாள் அவள். அவளின் ஒரே இலட்சியம் படித்து நல்ல உத்தியோகம் பார்த்து தங்கைகளை நல்வழிப்படுத்துவதே. கைநிறைய உழைக்கும் அம்மா கைநீட்டி செலவழிக்க முடியாமல் நெஞ்சு நிறைய ஆசைகளை சுமந்த வண்ணம் ஞானிபோல் உலாவுவதை எண்ணுகையில் அவள் நெஞ்சு வெடிக்கும்.

வீட்டை விட்டு வெளியேறிய போது தற்காலிகமாக சுமையொன்றை இறக்கி வைத்தது போல் நிம்மதி மனதில் குடிவந்தது. மனது படிப்பில் பதிந்ததும் வீட்டவரை நினைத்து கவலைப்படுவதும் குறைந்து போனது. ஆனால் காலமோ வேறு விதமாய் விளையாடத் தொடங்கியது.

நாளை மணக்கவிருக்கும் வித்தியாதரனை பொறியியல் பீட சிரேஸ்ட மாணவனாக ராகிங் நேரம் சந்தித்தாள். பின்னர் அவள் போகும் இடமெல்லாம் அவன் கண்ணில் பட்டான். அவள் தேடிச் செல்லாமலேயே அவளை நாடி அவனைப்பற்றிய செய்திகள் வந்த வண்ணமிருந்தன. அதை அவள் பெரிதாக நினைக்கவில்லை.

விடுமுறை நாள் ஒன்றில் கொழும்பு சென்றவளை வழியில் இராணுவத்தினர் இறக்கி சோதனை செய்தனர். மொழி தெரியாது தடுமாறிய போது வித்தியாதரன் வலிய வந்து உதவி செய்தான். அவனும் அதே பஸ்சில் பயணிப்பதை அப்போது தான் அவள் அறிந்தாள். அவனது சரளமான ஆங்கிலமும் சிங்களமும் அவளை அயரவைத்தன. அதன் பின்னர் வீடு வரும்வரை அவன் பண்புடன் பழகிய விதம் அவனின் மேல் மதிப்பை ஏற்படுத்தியது. பின்னர் எத்தனையோ சந்தர்ப்பங்கள் ஏதேச்சையானதா, வேண்டுமென்றதா புரியவில்லை. அவன் கதைத்தால் அவளிற்கும் கதைக்கப் பிடித்தது. சரியா, தவறா என்று அவள் சிந்திக்கவில்லை. என்ன எண்ணத்தில் பழகுகிறான் என்று அவள் ஆராயவும் முற்படவில்லை. அவளைப் பொறுத்தவரை அவன் அறிவில் சிறந்தவன், அழகன், பண்பானவன்

எல்லாவற்றிலும் மேலாக எந்தவித கெட்ட பழக்கமும் அற்ற மனத்திற்கு இதமான நண்பன். காலம் கரைந்து அவன் கல்வியும் முடிந்தது. கொழும்பில் எங்கோ நல்ல சம்பளத்துடன் வேலை பார்ப்பதாகவும் கேள்விப்பட்டாள். சிறிது காலத்தின் பின் தாயிடமிருந்து ஓர் கடிதம் வந்தது. அதில் வித்தியாதரன் வீட்டார் அவளை பெண் கேட்டு வந்ததாகவும் அவளிற்கு கல்யாணத்தில் விருப்பம் இல்லாவிட்டாலும் குடும்ப நிலவரத்தை எண்ணி சம்மதிக்குமாறு அம்மா எழுதியிருந்தாள்.

சந்தியா திகைத்துப் போனாள். திருமணமா? தனக்கா? அதுவும் வித்தியாதரனுடனா? திருமணம் என்பது பயங்கரமான ஒன்று என்று மனம் எச்சரித்தது. ஆனால் வித்தியாதரனின் நினைவிலும் ஓர் சுகம் இருப்பதை அவள் உணர்ந்தாள். காதல் என்றவள் அதை கூறத் தயாரில்லை எனினும் அவன் அணுகிய விதம் நன்றாய்ப் பிடித்தது. நன்றாய்த் தெரிந்தவன், என் உணர்வுகளை மதிப்பவன் ஆதலால் பயமில்லை என எண்ணத்தோன்றியது. அவளின் சம்மதக் கடிதம் விரைந்து பறந்து யாழ்ப்பாணம் சென்றது. கல்வி முடிய கல்யாணம் என்று நிச்சயமும் ஆனது. அதன் பின் வித்தியாதரன் தன்னை வந்து சந்திப்பான் என்று எண்ணியிருந்தவளிற்கு ஏமாற்றம் தான். வாழ்த்து மடல்கள் மட்டும் தவறாமல் வந்தது. அவளிற்கு பல்கலைக்கழக வளவினுள் அவனை சந்தித்த சந்தர்ப்பங்களும் பரிமாறிய வார்த்தைகளும் அடிக்கடி நினைவில் வந்தன. இவற்றுக்கெல்லாம் இப்போது புதுப்புது அர்த்தம் புரிந்தது.

காலம் விரைந்தோடி கல்யாண நாளும் வந்தது. கல்யாணம் மண்டபம் ஒன்றில், இரவு தங்குவது ஓட்டலில் என்று தீர்மானித்திருந்தனர். நீண்ட இடைவெளியின் பின் மணவாளக் கோலத்தில் தான் அவள் அவனை சந்தித்தாள். அவன் சிறிது இளைத்து கறுத்துப் போயிருப்பதாய் பட்டது அவளிற்கு. அவள் அதிகம் நாணப்பட்டாள். அவனோ இயந்திரகதியில் இயங்கினான். தனிமை கிடைத்த போது ஓரிரு வார்த்தை அன்பாய் பேசினான். அதுவும் ஒப்பிற்கோ என்று நினைக்கத் தோன்றியது. குரலும் பிசிறு தட்டிப்போய் படபடப்பாய் உணர்ந்தாள். வேலை அலுப்பாய் இருக்கும் என்று சமாதானமும் தேடிக் கொண்டாள்.

மாலை **Hotel** இற்கு அவன் அவளை காரில் அழைத்துச் சென்றான். காருக்குள் அவன் சிகரட் புகைத்த போது திக்கென்றிருந்தது. **University** இல் படித்தவன் எவன் சிகரட் குடிக்கவில்லை இது தவறில்லை என்று நினைத்தாள். **Hotel** அறையினுள் வந்ததும் கட்டியணைத்து முத்தமிட்டு வெளியில் சென்றுவர அனுமதி கேட்டான். அவள் போலிக் கோபத்துடன் சம்மதித்தாள். நேரம் போய்க் கொண்டிருந்தது. அவன் வரவில்லை. ஒரு புறம் பயம் மறுபுறம் நாணமுமாய் அவள் அவனுக்காக கட்டிலில் காத்திருந்தாள்.

பதினொன்றரை மணியளவில் அவன் வந்து கதவைத் தட்டினான். அவள் திறந்தவுடன் நிற்க இயலாமல் அவள் மேல் சாய்ந்துவிட்டான். திகைத்துப் போனவள் அவனை அணைத்தவாறு சென்று கட்டிலில் கிடத்தினாள். அவன் குடித்திருக்கவில்லை. அப்படியானால் என்ன என்று குழப்பமாய் இருந்தது. அருகில் சென்று பார்த்த போது ''டேய் மச்சான் இன்னொரு டோஸ் மற்ற தொடையில் ஏத்தடா'' என்று முணுமுணுப்பது கேட்டது. விறைத்துப் போனவள் காற்சட்டைப்பையினுள் கைவிட்டபோது ஊசியும், போதை மருந்து பாவித்த குப்பியும் வெளியில் வந்தது.

உண்மையை அறிந்த போது அவளிற்கு உலகமே சுழன்றது. மீண்டும் அதே துன்பகர வாழ்வா? இதற்காகவா அவள் தன் இலட்சியத்தை மீறி அவன் கரம் பற்றினாள். சிறிய வயது முதல் தந்தை என்னும் குடிகாரனால் பட்ட துயரங்கள் நினைவில் வந்தது. உண்ண முடியாமல் உறங்க முடியாமல், வீட்டில் இருக்கப்பிடிக்காமல் அமைதியின்றி அலைந்தது கண்முன் நின்றது. அப்பா என்பவனால் சந்தித்த அவமானங்கள் அப்பப்பா!

ஒருநாள் அப்பா நன்றாக குடித்துவிட்டு கடையில் இருந்து சத்தம் போட்டார் என்று கடைக்காரன் வெளியில் தள்ள, அந்த நேரம் பார்த்து சந்தியா தன் தோழிகளுடன் **Tution**இற்கு போய்க்கொண்டிருந்தாள். இது வழமையான சம்பவம் எனினும் தன் நண்பிகளின் முன்னால் அந்தக் கடைக்காரன் அப்பாவை கெட்ட வார்த்தைகளால் திட்டியதும், வளர்ந்த மகள் அருகில் நிற்பதும் தெரியாமல் விழுந்து விழுந்து போகும் அப்பாவும்... அவமானம் தாளமுடியவில்லை. எண்சாண் உடம்பு ஒரு சாணாய் குன்றிப் போய்; பூமி பிளந்து தன்னை விழுங்கக் கூடாதா என்று ஏங்கினாள்.

**Tution** இலும் பாடம் மனதில் பதியாமல் முரண்டு பண்ணியது. **Board** எல்லாம் அப்பா ஆடுவது போல் இருந்தது. வீட்டிற்கு வந்ததும் அவமானம் ஆத்திரமாக மாற அம்மா மேல் பாய்ந்தாள் அவள். ''அம்மா உனக்கு இப்படியும் ஓர் கல்யாணம் தேவையா? குடிகாரன் புருஷன் என்று தெரிந்தும் ஏன் எங்களையும் பெற்றாய். நீ அவமானப்படுவது காணதென்றா எங்களையும் சேர்த்துக் கொண்டாய்'' கத்திவிட்டாள் ஆத்திரத்தில். அம்மா அதற்கு அழுத அழுகை இன்னும் நினைவில் நிற்கிறது.

இப்போது அவளிற்கு ஓவென்று அழவேண்டும் போலிருந்தது. அழுகையோ வரமாட்டேன் என்று சண்டித்தனம் செய்தது. நாளைய தலைமுறை என்னைப் பார்த்து இதே கேள்வியை கேட்க வைக்கக்கூடாது. பொறுத்துப் போகவும்,

ஒத்துப்போகவும் அவள் அம்மாவைப் போல் பழமை வாதியல்ல. அவளைப் பொறுத்தவரை இது ஒரு சின்ன சடங்கு. இனி அவளிற்கும் அவனிற்கும் தொடர்பு ஏதுமில்லை. இந்த நிமிடம் வரை அவள் மனதாலும், உடலாலும் தூய்மையானவள். பட்டது போதும் துணை என்ற நினைவே மனதிலும் வேண்டாம். எத்தனை சமாதானங்கள் சொன்னாலும் மனம் ஆற மறுத்தது. ஏமாற்றப்பட்டுவிட்டோம் என்ற எண்ணம் பூதகரமாக உருவாகி உள்ளத்தை தைத்தது. மெல்ல எழுந்து பெட்டியை அடுக்கத் தொடங்கினாள்.

காலை விடிந்தபோது நித்திரையின்றி கண்கள் எரிந்தன. Bathroom இல் குளிர்ந்த நீரின் அடியில் கண்மூடி நின்றாள். கை தொட்டதால் பட்ட கறைகளும் கழுவியோடுவதைப் போல் உணர்ந்தாள். தான் எடுத்த முடிவு சரியென்ற உறுதி பிறந்தது. வெளியில் வந்த போது வித்தியாதரன் விழித்திருந்தான். இவள் அவனைப் பாராமல் சென்று தலையை வாரினாள். அவன் தலைகுனிந்தபடி சந்தியா என்றழைத்தான். அவள் அவன் மீதேற்பட்ட வெறுப்பில் 'ம்' கொட்டாமலிருந்தாள். அவனே "Very Sorry" சந்தியா நேற்று வெளியில் போகக்கூடாது என்றுதான் நினைச்சிருந்தன் ஆனால் ஏலாமல் போட்டுது இனி அப்படி ஒன்றும் நடக்காது....'' அவள் அவனை முடிக்க விடாது கத்தினாள்.

''என்ன நினைச்சு என்ன கல்யாணம் கட்டினீங்க? உங்களுக்கெல்லாம் என்னத்திற்கு குடும்பம் என்டொண்டு? அநியாயமா என்ர வாழ்க்கையை பாழடிச்சிட்டீங்களே...'' விம்மி அழத் தொடங்கினாள். இவனுடன் என்ன இனிக்கதை என்றெண்ணி பெட்டியுடன் வெளியேற முயன்ற போது எதிர்பாராத விதமாய் அவன் அவள் காலில் விழுந்து கதறிவிட்டான்.

''சந்தியா என்ன மன்னிச்சிடு உன்னை நான் மனப்பூர்வமாக என்னுயிரிலும் மேலா நேசிக்கிறன். University இல் படிக்கேக்க எப்படியோ இந்த பழக்கத்துக்கு கொஞ்சம் அடிமை ஆகிட்டன். இப்ப அது இல்லாம இரவில இருக்க முடியேல்ல. இப்படியொரு கெட்டபழக்கம் எனக்கிருக்கிறதே வீட்டாரிற்கு தெரியாது. தெரிஞ்சாலும் என்னை திருத்தியெடுக்க அம்மா, அப்பா இல்லை. இவ்வளவு காலமும் உன்னை ஏன் நான் சந்திக்கேல தெரியுமா? என்ன தான் துணிவாய் உன் பெற்றோரை கேட்டாலும் நீ சம்மதம் தெரிவித்தவுடன் எனக்கு உன்னை ஏமாத்திரனோ என்று பயம் வந்திட்டுது. உன்ன சந்திச்சால் நான் என்னைப்பற்றி சொல்லிவிடுவேன் என்று எனக்குத் தெரியும். அதுதான் கல்யாணம் முடியட்டும் என்று காத்திருந்தனான்.''

''கல்யாணம் கட்டீட்டா உங்களோட தான் இருக்கோணும் என்றென்ன கட்டாயமா? நான் என்ன கடை பொம்மையா நீங்க நினைக்கிறபடி என்னை ஆட்டிப்படைக்க? எனக்கும் உணர்ச்சிகள் இருக்கென்று நீங்க ஏன் நினைக்கேல்ல. இவ்வளவு நாளும் அடுப்பில தான் இருந்தேன் இப்பதான் நெருப்பிலேயே விழுந்திட்டன் என்று தெரியுது''

''ஐயோ சந்தியா நான் சொல்லிறத கேளு. நான் ஒன்றும் நீ நினைக்கிறமாதிரி கெட்டவனில்ல. மற்றவங்க மாதிரியில்லாம இந்த பழக்கத்திலிருந்து விடுபடோனும் என்று நான் துடிக்கிறேன். நீ மனசு வைச்சா நிச்சயம் என்னை காப்பாத்தேலும். நீயும் என்னை விட்டுட்டுப் போயிட்டா நான் இப்படியே அணுஅணுவாக துடிச்சு செத்து போவேன். அதுக்கு கூட நான் கவலைப்படல. நான் இருக்கும் மட்டும் நீ என்னோட இருக்கணும். எனக்கு எது இல்லாட்டியும் நீ வேணும் சந்தியா நீ வேணும். என்ன தனியா விட்டுட்டுப் போயிடாத சந்தியா...''

அவனைப் பார்க்கையில் பாவமாக இருந்தது. எப்படி இருந்தவன் எப்படி மாறிவிட்டான். என்ன தான் குதர்க்கமாக நினைத்தாலும் கழுத்தில் தொங்கிய தாலியும் அவன் மேல் அவள் கொண்டிருந்த மாசற்ற அன்பும் அவனை உதறிக்கொண்டு போகவிடாமல் தடுத்தன. அவள் குழம்பி நிற்கையில்...

''சந்தியா என் காதலால உன் மனசத்தான் நான் ஆளோனும் என்று நினைச்சேனே தவிர உடம்பை அல்ல. எனக்கு நீ ஆறுமாதம் time தா. அதுக்கிடையில் நான் என்னைத் திருத்திக் கொண்டு நல்ல கணவனா உன்னை சந்திக்கிறன். இன்றைக்கே நான் hospital இல் சேர்ந்திடுறன். என்ன பார்க்க ஒரு நாளைக்கு ஒருக்க எண்டாலும் வருவியா? எனக்கு உன்னை விட்டால் யாருமே இல்ல சந்தியா இந்த அரக்கனிட்ட இருந்து என்ன மீட்க யாருமே இல்ல சந்தியா''

முழங்காலில் மண்டியிட்டு கைகளில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அழும் அவனைப் பார்த்தாள். போதையின் பிடியில் சிக்கித் தவிப்பவனின் சாவிற்கு தானும் ஓர் காரணமாகிப் போகக் கூடாது. இவனை திருத்த வேண்டும். இவன் திருந்தக் கூடியவன். எனக்காக இல்லாட்டாலும் நாளை உலகத்திற்காகவாவது. போதை மருந்திலிருந்து மீண்ட அனுபவம் உள்ளவனால தான் இந்த இளைய தலைமுறையை போதை மருந்திலிருந்து காக்க முடியும். இவன் வேண்டும் இந்த உலகத்திற்கு. இவன் இப்படியே அழிஞ்சு போக விட்டிடக்கூடாது. தாரமா வேண்டாம் ஓர் தாயாக மாறி என்னால இயன்றளவு முயற்சிக்க வேண்டும் என்று எண்ணியவள் எடுத்த அடியை பின்வைத்து அறையை நோக்கி நடக்கத் தொடங்கினாள்.

# பல்கலைக்கழக மாணவர்களின் அமைதியைக் குலைக்கும் புல்லுருவி

வை.நந்தகுமார், சிரேஷ்ட விரிவுரையாளர், புவியியற்றுறை

ஒரு நாட்டினதும், சமூகத்தினதும் அபிவிருத்தியானது அந்நாட்டின் மனிதவள அபிவிருத்தி நடவடிக்கைகளில் தங்கியுள்ளது. குறிப்பாக இளைஞர்களின் செயற்பாடுகள் அவற்றுள் முக்கிய இடத்தைப் பெறுகிறது. இன்று பல்கலைக் கழக மட்டத்திலும், பாடசாலைகளிலும் ஏன் நாட்டிலேயே இளைஞர்களின் நடத்தை பற்றி பலதரப்பட்ட விமர்சனங்கள் தோன்றுகின்றன. இளமைப்பருவம் கூர்மையான கத்தியின் விளிம்பில் நடப்பது போன்று அபாயகரமானதாகும். பாலியல் உணர்வு அரும்பும் வயது, பக்குவப்படாத உணர்வுகளும் உக்கிரமான முறையில் போராடும் களமாக இவ்வாலிபப் பருவம் அமைகிறது. ஒழுக்கப் பிறழ்வுக்கு சிறு தூண்டுதலும் போதுமானதாகும். மேலும் நடைமுறை உலகின் யதார்த்தத்தைப் புரியாமல் கற்பனை உலகில் சஞ்சரிக்கும் வயதாகவும் காணப்படுகின்றது. இக்காலப்பகுதியில் இவர்கள் தங்கள் ஓய்வு நேரங்களை அறியாமைப் பிணியை அகற்றும் அறிவுக் கருவூலங்களைத் தேடுவதையும் தமது பாரம்பரிய கலை கலாச்சார விழுமியங்களை பேணுவதையும் விடுத்து தவறான பாதையைத் தேடுவது தம்மையும், தமது எதிர்காலத்தையும், தமது சமூகத்தையும், தமது நாட்டையும் அழிப்பதாகவே அமைகிறது.

இன்று, இலங்கையில் இளைஞர் தொடர்பான பிரச்சினைகள் பலதரப்பட்டுள்ளன. அரசியல் காரணிகளால் அநாதையானவர்களாகவும், சொந்த இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் வசிக்கின்றவர்களாகவும் தமது அடிப்படைத் தேவைகளைத் தானும் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் வாழ்பவர்களாகவும் உள்ள யதார்த்தத்தை எவரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

''பகிடிவதை'' என்னும் புதிய மாணவர் மீது சிரேஷ்ட மாணவர்களால் தொடுக்கப்படும் ''வதை'' ஆரம்பத்தில் ஆங்கிலேயர்களால் பிரித்தானிய கேம்பிறிஜ், ஒக்ஸ்போட் பல்கலைக்கழகங்களில் அறிமுகப்படுத்தப்பட்டதாக இருந்தாலும், அப்பல்கலைக்கழகங்களில் பகிடிவதையானது, நாகரீகமான முறையால் ஜனநாயக மரபுகளும் சமூகத்தின் கலாச்சார விழுமியங்களுக்கும் ஏற்புடையதாக மனிதத்தன்மைக்குட்பட்ட முறையில் இடம்பெற்றது. இதன் உள்நோக்கம் பல்கலைக்கழகங்களுக்கு புதிதாக அனுமதி பெற்று வரும் மாணவர்களின் பயம், கூச்சம், வெட்கம், அறியாமை போன்றவற்றை அகற்றி சகலரும் சமமாக இருப்பதற்கும் சகோதர மனப்பான்மையுடனும், நட்புடனும் பழகுவதற்கும், தம்மிடம் மறைந்துள்ள திறமைகளை வெளிக்கொண்டு வருவதற்கும் அறிமுகம் செய்யப்பட்ட ஒரு நடைமுறையாகும். இன்று இப்பகிடி வதையானது பல பிரபல பாடசாலைகளிலும் உயர்கல்வி நிறுவனங்களிலும், பல்கலைக்கழகங்களிலும் நாட்டின் சட்டதிட்டங்கள், பண்பாடு மனித அடிப்படை உரிமைகள் யாவற்றுக்கும் அப்பாற்பட்ட முறையில் இடம்பெற்று வருகிறது. அரசாங்கத்தினதும், நிர்வாகிகளினதும் எச்சரிக்கைகளையும் தண்டனைகளையும் மீறி பகிடிவதையானது பாலியல் வன்முறைகளிலும் கொலைகளிலும் கூடப் போய் முடிந்துள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது. அண்மையில் இந்தியாவின் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்று முடிந்துள்ள பல்கலைக்கழக மருத்துவத்துறை மாணவனின் கொலைச் சம்பவம் எங்கும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அதிவிவேகியான அம்மாணவனை பகிடிவதையென்ற பெயரில் இம்சைக்கு உள்ளாக்கி தமது பாலியல் இச்சைக்கு உடன்பாடாமைக்காக சிரேஷ்ட மாணவனினால் அம்மாணவன் கொலை செய்யப்பட்டுள்ளான். கொலை செய்ததோடு மாத்திரம் நிற்காது அந்த மாணவனின் தலை மற்றும் அங்கங்களைத் துண்டு துண்டாக வெட்டி பல இடங்களிலும் கொண்டு சென்று ஒழித்து வைத்ததாகவும் தெரியவருகிறது. இத்தகைய காட்டுமிராண்டித் தனத்தை எந்தவொரு நாகரீகமான சமூகமும் ஏற்குமா?

இவ்வாறான, கொடூரமான பலதரப்பட்ட காட்டுமிராண்டித் தனமான வதைகள் இலங்கையின் பல்கலைக்கழகங்களிலும் இடம் பெற்றுள்ளன. நிர்வாகிகள் என்னதான் நடவடிக்கைகள் எடுத்தாலும் ''வதை''யின் கொடூரம் குறைந்தபாடில்லை. பகிடிவதையின் கொடுமைகளினால் இன்று பல்கலைக்கழகம் செல்ல பலர் அஞ்சுகின்றார்கள். அல்லது பெற்றார்கள் தமது பிள்ளைகளை அனுப்பத் தயங்குகிறார்கள். பல கஷ்டங்கள் தடைகளை எல்லாம் தாண்டி தமது கல்வியைக் கற்று பல்கலைக்கழக அனுமதி கிடைக்கப்பெற்றாலும் பகிடிவதை என்ற காட்டுமிராண்டிச் செயல்களினால் தமது உயர்கல்வியை எவ்வாறு தொடர்வதென அங்கலாய்க்கின்றனர். வடகிழக்கு மக்களின் இன்றைய நெருக்கடியான சூழ்நிலையை பாமர மக்களே யதார்த்தமாகப் புரிந்து கொண்டிருக்கின்ற வேளையில், பல்கலைக்கழக கல்வியைக் கற்கின்ற மாணவர் சமுதாயம் அதனை உணர்ந்து கொள்ளமுடியாமல் இருப்பது குறித்து கற்றோர் உலகம் வெட்கித் தலைகுனியாமல் இருக்க முடியாது.

புதிய மாணவர்களுக்கான அறிமுகமே 'ராகிங்' எனப்படும். 'பகிடிவதை' என்றும் அதனால் மாணவர்கள் மத்தியில் பரஸ்பர அறிமுகம் நட்பு ஏற்படுகிறது. தாழ்வு மனோபாவம் நீக்கப்படுகிறது. மறைந்திருக்கும் ஆற்றல்கள் திறமைகள் வெளிக் கொணரப்படுகிறது என பகிடி வதைக்கான நியாயங்கள் முன்வைக்கப்பட்டாலும் இன்றைய நடைமுறையிலும் பல் கலைக்கழங்களில் பின்பற்றப்படும் 'சித்திரவதை'யானது மேற்கூறிய நோக்கங்களுக்கு ஏற்புடைத்தாக அமையவில்லை.

1921 ம் ஆண்டு பல்கலைக்கழகக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட வேளையில் 115 மாணவர்கள் மட்டுமே கல்வி பயின்றார்கள். 1940 களின் ஆரம்பக்காலப் பகுதியில் இத்தொகை 700 ஆகவும், 1950 களில் 1200 ஆகவும் இன்று 7000 ஆகவும் காணப்படுகிறது. குறைந்தளவு மாணவர்களைக் கொண்ட சூழ்நிலையில் மாணவர்களுக்கிடையிலான அறிமுகம் அல்லது நட்பு பரஸ்பர உறவு உறுதியான நிலையில் கட்டியமைக்கப்படக்கூடியதாக இருந்தாலும் இன்றைய மாணவர் எண்ணிக்கை இத்தன்மைகளை ஈடேற்றுவதாக அமையப் போவதில்லை. மாணவர்களுக்கான நட்பு பரஸ்பர உறவினை ஏற்படுத்துவதற்கான பகிடி வதையானது நட்பின் இலட்சியப் பாதையினை உள்ளடக்கியதாக இருந்தால் அது ஒருவழிப்பாதையாக அமையாது இருவழிப்பாதைகளுடனான கருத்துப் பரிமாற்றங்களுடன் ஏற்படுத்தப்பட வேண்டியதொன்றாகும். சிரேஷ்ட - புதிய மாணவர்களுக்கான பகிடிவதையின் போது இடம்பெறும் உரையாடல்கள் ஒருவழித் தொடர்பாகவும் கட்டளைகளாகவும் அமைகின்றனவே தவிர புதிய மாணவர்களது உணர்வுகளுக்கு மதிப்பளிக்காது அவர்களை தலையாட்டிப் பொம்மைகளாக்குகின்றது. இவை சிரேஷ்ட மாணவர் மீதான ஒரு கசப்புணர்வினை ஏற்படுத்துவதுடன் மீண்டும் அப்புதிய மாணவன் தமக்குப் பகிடிவதைக்கு உட்படுத்திய சிரேஷ்ட மாணவனை சந்தித்து உரையாடுவதற்கே சந்தர்ப்பம் இல்லாமல் தமது கல்வியினை முடித்து வெளியேறும் மாணவர்கள் எத்தனை பேர் உள்ளனர். எனவே, இத் தன்மையானது மாணவர் மத்தியில் ஒரு கசப்பு, அருவருப்பு, பயம் போன்ற உணர்வுகளை உருவாக்குமேயன்றி பரஸ்பர உறவினை நட்பினை வளர்ப்பதற்கு எந்தளவிலும் துணை போகாது.

நட்புபற்றி திருவள்ளுவர் பின்வருமாறு கூறுகிறார்.

**''அழிவி னவைநீக்கி ஆறுய்த்து அழிவின்கண்
அல்லல் உழப்பதாம் நட்பு''**

நட்பானது, நட்புடையாரை அழிவைத் தரும் தீமைகளிலிருந்து நீக்கி, நல்ல வழியில் நடக்கச் செய்யும். அதுமட்டுமன்றி அழிவு வந்த காலத்தில், உடனிருந்து துன்பத்திலும் பங்கு கொள்வதாக இருக்கும். பகிடிவதையின் மூலமாக, நட்பானது ஏற்படுமென எதிர்பார்ப்பது மாணவரை அழிவுப்பாதைக்கு இட்டுச் செல்வதாக இருக்கிறதன்றி, இடுக்கண் வருங்கால் துன்பத்தின் கண் கைகொடுப்பதாக அமையுமென இன்றுள்ள தன்மையில் கொள்ள முடியாதுள்ளது.

சமூகவியலாளர் உளவியலாளர்களது ஆய்வுகளின் அடிப்படையில் பார்க்குமிடத்து, பகிடிவதைகள் மூலம் அல்லது ஒருவரை இம்சைப்படுத்துவதன் மூலம் நட்பினைப் பெறமுடியாது என்பது யதார்த்தமான விடயமாகும். மாணவர்களது திறமைகளை வெளிக் கொணர்வதற்கோ அல்லது வளர்ப்பதற்கோ 'பகிடிவதை' துணை போகின்றதெனக் கொள்வதாக நோக்குதலும் தவறானதே. ஒருவரிடம் மறைந்து கிடக்கும் ஆற்றல்கள் திறமைகள் அமைதியானதும், மகிழ்ச்சியானதும் ஆரோக்கியமானதுமான சூழலிலேயே வெளிக் கொண்டுவரப்படுமேயன்றி பலாத்காரத்தின் மூலமோ, வற்புறுத்தலினாலோ, அதிகாரத்தினாலோ, வெளிக்கொண்டுவர முடியாதென்பதை உளவியலாளர்கள் கூறியுள்ளனர்.

பகிடிவதையின் நோக்கமானது மாணவர்களை இளம் சமுதாயத்தினரை தவறான வழிக்கு அழைத்துச் செல்வதாக அமைகின்றதேயன்றி ஆக்கப்பாதைக்கு எந்தவகையிலும் வழிவகுக்காது. புதிய மாணவர்களாக பல்கலைக்கழகத்திற்கு வரும்போது, பகிடி வதைக்காக பயந்து ஒதுங்கி அதே இன்னல்களுக்குட்பட்ட அதே மாணவர்களே மீண்டும் அடுத்த வருடத்தில் இவ்வதைகளைச் செய்வதில் முன்னிற்பது கவலைக்குரியதாகும். பகிடிவதையானது சட்டரீதியாகவோ, தண்டனைகளை வழங்குவதன் மூலமோ மட்டும் தடைசெய்வதாக அமையாது. மாணவர்களது உளப்பாங்குகளில் நல்ல ஆரோக்கியமான சிந்தனைகள் புகட்டப்பட்டு அவர்களுக்கு நல்ல எதிர்காலத்தை அமைத்துக் கொள்ளக்கூடிய தன்மைகளை பல்கலைக்கழகம் கொண்டிருக்க வேண்டும்.

இன்று இலங்கைப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் மாணவர்களில் 80 வீதத்திற்கு மேற்பட்டோர் கிராமப் புறத்தவராகவும் மாணவ நன்கொடைகளில் தங்கியிருப்பவர்களாகவும் இருப்பதனால், இவர்களது நலன்கள் உரிய முறையில் கவனிக்கப்பட்டு பேணப்பட வேண்டும் என்பதையும் நிர்வாகிகள் கவனத்திற் கொள்ள வேண்டும். வெளி மாவட்டங்களிலிருந்து வருகை தரும் மாணவர்களுக்கு நல்ல தங்குமிட வசதிகள், போசாக்கு மிக்க உணவு என்பன கிடைக்கப் பெறாமையால் மாணவர்கள் இவற்றைப் பெற்றுக் கொள்வதற்காக அலைவதில் தமது காலத்தின் பெரும்பகுதியைச் செலவிடுவதால், இன்று பட்டப் படிப்பினை முடித்து வெளியேறும் மாணவரது தரம் பாதிப்படைந்து செல்கிறது. சமூகத்தினதும், நாட்டினதும் எதிர்காலத்தைக் கட்டி எழுப்பக் கூடிய வகையில் பல்கலைக்கழக மாணவர்களை நிகழ்காலத்தில் பக்குவப்படுத்தி வடிவமைக்கும் உன்னதமான பணியினை வழங்கும், மேற்கொள்ளும் ஒரு நிறுவனமாகவே பல்கலைக்கழகங்கள் அமையப் பெற வேண்டும்.

# எட்டத்தொலைவிலிருந்தோர் கீதம்

**"முகமூடி", இறுதி வருடம், பொறியியற் பீடம்.**

*வன்மம் கலந்து*
*வாழ்தல் கொள்ளாது*
*வாய் நிறைய வார்த்தையும்*
*கை நிறைய எழுத்துமாய்*
*தனித்துத்தானாயினும்*
*தப்பித்தேகினேன்*

*சைக்கிளும் சரமுமாய்*
*சல்லடை போட்ட*
*என் கிராமத்து வீதிகளுக்கு*
*அப்பால்*
*உயிர்ப்பெய்தி*
*மனிதனாய் ஜீவிதம் செய்ய முடியாது*
*மீண்டும்*
*இன்னுமோர் ஓரத்தில்*
*ஜடமாய் உருக்குலைந்தேன்.*

*அடர்த்தியாய்*
*அகலப்பிளந்த வெளிச்சம்*
*வெளியே கொட்டிக்கிடக்க*
*கண்களை மூடி*
*கதைபேசும் நகரத்து மாந்தர்*
*எனக்கான சேதி*
*சொல்லிப்போவரோ?*

*கனன்று கனன்று*
*எரியும் வேள்வித்தீ*
*காவுகொண்டவர்*
*கதைகள் மறந்தும்*
*ஓரவிழிப்பார்வையில்*

*என் மேனியெல்லாம்*
*மின்சாரம் பாய்ச்சி*
*எனை கவ்விக்கொண்டவள்*
*பேச்சும் மறந்து*
*இனி*
*எப்படி வாழ்வு கடப்பேனோ?*

*சுதந்திரத்தின் பெயரால்*
*பேசாதிருக்கும்படி*
*ஜபிக்கப்பட்டோரெல்லாம்*
*பூமிக்கான சேதியோடு*
*வானத்து மனிதர் வருவரென*
*காத்துக்கிடந்தனர்*

*மூக்குத்துவாரம் மட்டுமே*
*முன்பைபோல திறந்து கிடக்க*
*முதுகிலேறி சவாரி போகிற*
*நோக்கத்தோடு*
*சமாதானம் பற்றி*
*செப்பிச் செப்பியே*
*இன்றும் சிலர்*
*உயரப் போயினர்.*

*நான் பேசும் மொழியோடும்*
*துப்பாக்கியில்லாத கையோடும்*
*என் ஊருக்கு போகிற*
*காலம் வரும்வரை*
*எட்டாத் தொலைவில்*
*உழன்று உழன்று*
*உயிர் காப்பேன்.*

# பெண்ணியம் : தெளிவை நோக்கிய ஒரு முயற்சி

தொகுப்பு: பா.பிரதாபன், இரா.இரவிசங்கர்

இன்று பெண்ணியம் என்பது பரவலாக பேசப்படுகின்ற ஒன்றாக மட்டுமல்லாது கூடுதல் கவனிப்பு தேவைப்படுகின்ற ஒன்றா என்ற கேள்வியும் இருந்து வருகிறது. சமுதாயத்தின் உயிர்நாடிகள் என பெருமைப்படும் இளைய தலைமுறையினருக்கு ஒரு தெளிவை வழங்கும் பொருட்டும் அதில் அவர்களது பங்கு என்ன என்பவைபற்றியும் இளங்கதிர் சஞ்சிகையூடாக வழங்கும் பொருட்டு கலந்துரையாடல் ஒன்றை கொழும்பில் உள்ள பெண்கள் கல்வி ஆய்வு நிலையத்தில் (WERC) ஏற்பாடு செய்திருந்தோம்.

பெண்கள் கல்வி ஆய்வு நிலையத்தின் இயக்குனரும் நிவேதினி என்ற சஞ்சிகையின் இதழாசிரியருமான கலாநிதி செல்வி திருச்சந்திரன், சமூக அபிவிருத்தித் துறையில் பணியாற்றும் பொறியியல் பட்டதாரியான சாந்தி சச்சிதானந்தம், தேசிய கல்வி நிறுவகத்தில் திட்டமிடல் பொறுப்பாளராகவும் முஸ்லிம் பெண்கள் கல்வி அமைப்பில் ஒரு தீவிர அங்கத்தவராகவும் உள்ள சுல்பிகா இஸ்மாயில், மற்றும் எழுத்தாளரும் பெண்ணின் குரல் என்ற சஞ்சிகையின் ஆசிரியருமான பத்மா சோமகாந்தன் என்பவர்களுடனான இளங்கதிரின் உரையாடல் வருமாறு.

இளங்கதிர்: **பெண்ணியம் என்றால் என்ன என்பதை சற்று தெளிவு படுத்துவீர்களா?**

சுல்பிகா: ஆரம்பகாலத்தில் பெண்ணிலைவாதம், பெண் அடிமை போன்ற பதங்கள் பாவிக்கப்பட்ட போதிலும் தற்போது தமிழ் நாடெங்கும் Feminism என்ற ஆங்கிலச் சொல்லுக்கு இணையான பெண்ணியம் என்ற பதம் பரவலாக பாவிக்கப்படுகிறது. அது பெண்கள் சம்பந்தமான பிரச்சினைகள், விளைவுகள், தீர்வுகள் போன்ற அம்சங்களை உள்ளடக்கிய ஒரு சித்தாந்தம் ஆகும். இதனை பெண்களின் தற்போதைய அந்தஸ்தை உயர்த்தும் நிலைபற்றிய ஒரு விஞ்ஞானபூர்வமான ஆய்வு எனவும் குறிப்பிடலாம்.

சாந்தி: சாதி, வர்க்க, இனரீதியில் பெண்கள் வேறுபட்டாலும் அடிப்படையில் பெண்களின் பிரச்சினைகள் யாவும் ஒன்றுதான். பெண்கள் பெண்களாக பிறந்ததனால் சமூகத்தால் அவள் ஒடுக்கப்படுகிறாள். எனவே அவர்களது நிலை ஆண்களுக்கு சமமான அந்தஸ்து உயர்வு தொடர்பான ஆய்வே பெண்ணியமாகும்.

இளங்கதிர்: **பெண்கள் ஒடுக்கப்படுகிறார்கள் என்பதை நாம் எப்படிக் காண்கிறோம்?**

சாந்தி: குடும்பத்தில் ஆண் பெண் அசமத்துவ நிலை, வேலை தளத்திலும் சமூகத்திலுமுள்ள கட்டுப்பாடு, வளங்களுக்கெதிரான உரிமைக் கட்டுப்பாடு, வளங்களை ஆள்வதற்கான அதிகாரம் போன்றவற்றில் இதைக் காணலாம். சுருக்கமாகச் சொல்வதாயின் சமூக, பொருளாதார அரசியல் நிலைகளில் பெண்களுக்கெதிரான பல்வேறு விதமான கட்டுப்பாடுகள் காணப்படுகின்றன.

இளங்கதிர்: **இதற்கு யார் காரணம்?**

சாந்தி: சமூகம். அதாவது ஆணை முதன்மைப்படுத்தும் சமூகம் காலம் காலமாக ஆண்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரமும் அதை அவர்கள் பிரயோகிக்கும் போக்குமே அடிப்படை காரணமாகும். இது ஒரு அசமத்துவ நிலையை கொண்டு வருகிறது.

இளங்கதிர்: **சமூகம் என்பதை குடும்பம் எனக்கொள்ளலாமா?**

சாந்தி: குடும்பம் சமுதாயம் என்பவை பின்னிப்பிணைந்த ஒன்றாகும். குடும்பத்தில் சாதாரணமாக அசமத்துவநிலை நிலவுகிறது. இங்கு ஆண் குற்றம் செய்தால் பெண் அடிக்கமுடியாது. ஆனால் ஆண் அடிக்கலாம் என்ற சமூகப்போக்கு காணப்படுகிறது. ஒரு ஆண் தன் மனைவியை அடிப்பது ஊழ்வினையல்ல. அது ஆணுக்கு கொடுக்கப்பட்ட ஒரு அதிகாரம். இது சமத்துவமற்ற நிலையை விளக்குகிறது அல்லவா.

இளங்கதிர்: **சமூகம் என்ற அமைப்பில் பெண்களின் பங்கும் முக்கியமான தொன்றாக நாம் கருதுகிறோம். ஆனால் பெண்கள் அடிமைத்தனத்தினுள் சிக்கியுள்ளனர் என்பதற்கு ஆண்களை மட்டும் குறைகூறுகின்ற நிலைமையே இங்கு உள்ளது. இதுபற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்?**

பத்மா: சமூகம் பெண்ணை அடக்கிவைத்துள்ளது எனும் போது சமூகத்தின் சரிபாதியான பெண்ணும் அதற்குள் அடங்கி நின்றுதானே அடக்குகிறாள் என்கிறீர்கள். நல்ல கருத்துள்ள கேள்விதான். தந்தைவழிச் சமுதாய அமைப்புக் கொண்ட ஆண் மேலாதிக்கச் சமூகம் என்பதாலேயே ஆண்கள் பெண்களை அடக்கிவைத்துள்ளனர் என்ற கருத்து நிலை பெறுகிறது.

இளங்கதிர்: **அப்படியாயின் பெண்களை ஒடுக்குவது அடிமைப்படுத்துவது ஆண்களே என்கிறீர்களா?**

சுல்பிகா: ஆண் முதன்மைப் போக்குடைய சமூகப் போக்கு என்ற தத்துவமே இதற்குக் காரணம். அதனால் தான் வாய்ப்பு, உரிமை என்பவை அவர்களுக்கு அதிகமாக கொடுக்கப்பட அவர்கள் ஒரு குழுவாக இயங்குகின்றனர்.

சாந்தி: ஒடுக்குமுறை என்றால் என்ன? ஆணுக்கு அந்தஸ்து கூட. வளங்கள் கூட. எனவே பெண்கள் கூடக் கொடுக்கக் கொடுக்க சமூகம் குறைவாக தருகிறது. இதையே நாம் சுரண்டல் அல்லது இரு குழுக்களுக்கிடையேயான அசமத்துவ உறவுநிலை என்கிறோம். இதற்கு சமூக அமைப்பு உருவாக்கியுள்ள புல்லுருவிகளும் ஒரு காரணம். அதாவது ஆண்களை முதன்மைப்படுத்தும் சமூகத்திற்கு உடன்பாடாய் சில பெண்களும் இருந்து வருகின்றனர்.

சுல்பிகா: ஆண் அடிமைப்படுத்துதல் என்பது வெவ்வேறு பரிமாணங்களில் வெளிவரலாம். உதாரணமாக, நான் அவளுக்கு சகல உரிமைகளையும் வழங்கியிருக்கிறேன். சகல தீர்மானங்களை மேற்கொள்ளும் உரிமையையும் நான் அவளுக்கு வழங்கியிருக்கிறேன் என்று கூறுபவர்களை உற்று நோக்கும் போது ''நான் கொடுத்திருக்கிறேன். நான் கொடுத்திருக்கிறேன்'' என்பதிலேயே அது வெளிப்படுகிறது. மேலும் மனிதன் குழுக்களாக இயங்கிய காலத்திலிருந்து பாதுகாப்பு வழங்கும் பொறுப்பு ஆணுக்குரியது என நிர்மாணிக்கப்பட்டு அதுவே காலம் காலமாக கைக்கொள்ளப்படுகிறது. உதாரணமாக வெளியே செல்லும் பெண்களுக்கு பாதுகாப்பாக அல்லது துணையாக சிறுவர்களை உடன் அனுப்புவதையும் காண்கிறோம்.

இளங்கதிர்: **ஆண்களும் பெண்களும் உடலமைப்பு ரீதியில் வேறுபாடாக படைக்கப்பட்டது இயற்கையின் நியதிதானே. எனவே தொழில் ரீதியில் இருவரும் வித்தியாசமானவர்களாக இருக்க வேண்டியதை ஏற்றுக் கொள்கிறீர்களா?**

பத்மா: உடல் ரீதியான வேறுபாடு இருப்பதன் காரணமாக ஆண்களைப் போல் பெண்கள் எல்லாத் தொழில்களிலும் ஈடுபடமுடியாது என யோசிக்கிறீர்கள். இந்தியாவிலே சில மாநிலங்களிலே ஆண்களைப்போல பெண்களும் பல மைல்களுக்கப்பால் இருந்து தண்ணீர், விறகு, போன்ற பெரிய பாரத்தை சுமந்து வருவதை அறிகிறோம். உடல் வேறுபாடு காரணமாக தொழில் வேறுபாடு இருக்க வேண்டுமென்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. உடல் வலிமையும் அறிவுத்திறனும் இருந்தால் பால் வேறுபாடின்றித் தொழிலாற்ற முடியும். எல்லா ஆண்களும் எல்லாத் தொழிலும் செய்யக்கூடியவரா யுள்ளனரா? இல்லையே,

இளங்கதிர்: **குடும்பம் என்ற வரையறையில் பிரச்சினைகள் உருவாகுவது வழமைதானே. இதனடிப்படையில் விட்டுக் கொடுக்கும் மனப்போக்குடன் சந்தோஷமாக இருக்கும் குடும்பங்களிடையே பெண் விடுதலை அல்லது பெண்நிலைவாதம் என்ற நிலைப்பாடு அவர்களது உறவுகளில் தாக்கத்தை ஏற்படுத்தாதா?**

பத்மா: 'பிரச்சினைகளை விட்டுக் கொடுத்தல்' என்பதற்கு பெண்விடுதலை குறுக்கே நிற்கிறதா? இல்லையே. பெண்ணுக்கு சமமான அந்தஸ்தைக் கொடுப்பதுதான் முற்போக்கான கருத்து. குடும்பத்துக்குள் ஏற்படும் பிரச்சினைகள், விட்டுக் கொடுத்தல் போன்ற எந்த நிலையிலும் மேற்கொள்ளப்பட வேண்டிய விஷயங்களே! சிலவேளை முற்றுமுழுதான பெண் விடுதலையான நிலை இப்பிரச்சினையைத் தீர்த்து வைக்கவும் கூடும். பிரச்சினைகள் எல்லா உறவுநிலைகளிலும் ஏற்படுவது

சகஜம். விட்டுக்கொடுத்தலும் அப்படியே. இருவருக்கிடையிலும் நல்லபுரிந்துணர்வு இருந்தால் இவையெல்லாம் வெறும் புஸ்வாணமாகி விடும்.

இளங்கதிர்: **பெண்கள் தங்களுக்குள்ளேயே சில கட்டுப்பாடுகளை ஏற்படுத்துவது அவர்களது முன்னேற்றத்திற்கு தடைக் கற்கள்தானே.**

சுல்பிகா: ஆம். உண்மையில் இது ஒரு சமாந்திரப் போக்கே. இது மாற்றப்பட வேண்டும் என்பதோடு படிப்பறிவற்ற பெண்களை மாற்றுவது சுலபம் என்பதையும் நாம் உணர்ந்துள்ளோம்.

பத்மா: சமீபத்தில் கூட கணவன்மார்களால் குடித்துவிட்டு துன்புறுத்தப்பட்ட பெண்கள் எல்லோரும் ஒன்று திரண்டு மலையகத்தில் ஒரு மதுபான விற்பனை நிலையத்தை எரித்த சம்பவத்தை இங்கு நினைவு கூறுவது பொருத்தம் என நினைக்கிறேன்,

சுல்பிகா: உண்மையில் சம அந்தஸ்து நிலையில்தான் வேறுபாடு உண்டேயன்றி மேல் கீழ் நிலைகளில் வேறுபாடுகள் இல்லை.

இளங்கதிர்: **கல்வியமைப்பிலும் சரி தொழில் ரீதியிலும் சரி தற்போது பெண்களுக்கு சம உரிமை உண்டு என்பதையே காணக்கூடியதாக உள்ளது. ஆனால் பெண்கள் சிலவேளைகளில் ஒதுங்கிக் கொள்கிறார்கள் என்ற கருத்தை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா?**

சுல்பிகா: கல்விப் பொதுத்தராதர சாதாரண தரம் வரை கல்வியில் இருவரது பங்களிப்புகளும் சமனாக இருந்த போதிலும் தொழில்வாய்ப்பைப் பொறுத்தவரை ஆண்களுக்கே அங்கு வாய்ப்பு அதிகம். தொழில் உலகம் பெண்களை கீழ் நிலையிலேயே வைத்திருக்கிறது எனலாம். அத்துடன் தொழில்சார் கல்விமுறைகளில் கூட ஆண்களின் ஆதிக்கமே அதிகம்.

பத்மா: இதுவரை நாம் பேசிக்கொண்ட விஷயங்களில் எத்தனை அசமத்துவமான நிலைகளை நீங்களே அவதானித்துள்ளீர்கள். மெல்ல மெல்லத்தான் சமுதாயமும் பெண்ணினமும் விழிப்புறச் சிந்திக்கத் தொடங்கியுள்ளன. பெண்கள் தாமாகவே ஒதுங்குகிறார்கள் என்பதை ஏற்க முடியாது. ஒதுக்கப்படுகிறார்கள் என்றே சொல்ல வேண்டும்.

சாந்தி: மூளை வளர்ச்சியை நாம் எடுத்துக் கொண்டால் பெண்களுக்கு Brain formation அதிகம் என்பார்கள். ஆனால் உதாரணத்திற்கு, இலக்கியவாதிகளை எடுத்துக் கொண்டால் அங்கு குறிப்பிடும்படி பெண்கள் என்று யார் இருக்கிறார்கள்?

இளங்கதிர்: **உண்மையில் பெண்கள் அவற்றில் ஈடுபடாத ஒரு நிலையைத்தான் நாம் காண்கிறோம்.**

பத்மா: இலக்கியத்துறையில் பெண்கள் ஈடுபட்டு முத்திரை பதிக்கக்கூடியளவிற்கு இலக்கியத்தில் ஈடுபடுவோருக்கு ஆழ்ந்த கல்வியறிவும் தீவிர சிந்தனை ஆற்றலும் வேண்டும். இத்தகைய சூழல் அடக்கியொடுக்கப்பட்டு வாழும் பெண்ணினத்திற்கு இலகுவில் எட்டுமா? மேலும் ஆக்க இலக்கியத்துறைக்கு போதிய ஒத்துழைப்பு, வாய்ப்பு, நேரம், வசதிகள் போதாமையும் பின்தங்கியிருப்பதற்கான காரணங்களெனலாம்.

சுல்பிகா: சில துறைகளில் பெண்கள் போக முடியாதுள்ளது. சில இடங்களில் பிரச்சினையை உணர்ந்து பெண்கள் புகுவதால் மனோரீதியாகவும் உடல்ரீதியாகவும் தம்மை வளர்க்கும் பயிற்சியினை பெற்றிருக்கிறார்கள். ஆரம்ப காலத்தில் ஒரு மின்குமிழை மாற்றுவதற்குக்கூட பெண்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

செல்வி: பெற்றோரும் சமூகமும் எப்படி பிள்ளைகளை வளர்க்கின்றனர் என்பதிலேயே அது அதிகம் தங்கியுள்ளது.

சுல்பிகா: சிறுவயதில் விளையாட்டுப் பொருளாக ஆண்களுக்கு தொழில்நுட்பம் தொடர்பான பொருட்களையும் பெண்களுக்கு கலையியல் சம்பந்தமான பொருட்களையும் கொடுப்பதால்தான் இன்னும் பால் இடைவெளி (Gender Gap) பெருத்துக் கொண்டு போகிறது.

செல்வி: எமது பாடப்புத்தகங்களை எடுத்துப் பார்க்கையில், அம்மா சமைக்கிறா, அப்பா பத்திரிகை

வாசிக்கிறார் அல்லது வயலுக்குப் போகிறார் போன்றவற்றின் மூலம் சிறுவயதிலேயே இக்கருத்துக்கள் பதிக்கப்படுகின்றன. எனவே சூழல் தாக்கமும் இதற்கு ஒரு முக்கிய காரணியாகிறது.

இளங்கதிர்: **பிள்ளைகளை வளர்ப்பதில், பிள்ளைகள் தாயுடன் கூடுதலான நேரம் இருப்பதற்குரிய இயற்கை அம்சங்கள் தாயிடம்தானே உள்ளது. இதுபற்றி என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

பத்மா: குழந்தை தாயுடன்தான் வளர வேண்டும். தாய்தான் குழந்தையைச் சீராட்டிப் பாலூட்டி அன்பு காட்டி வளர்ப்பாள். அதே நேரம் குழந்தையையும், வீட்டு வேலையையும் தொழிலையும் பார்க்கும் பெண் அதிக சிரமத்திற்கு உள்ளாகிறாள் என்பதை மறுக்க முடியுமா? அந்த நிலையில் தந்தையும் குழந்தையை வளர்ப்பதில் வீட்டு வேலைகளைச் செய்வதில் அக்கறை காட்ட வேண்டும். வெகு அருமையாக சில ஆண்கள் இப்படி உதவினாலும் பலர் அப்படியல்ல. இது தவறுதானே.

இளங்கதிர்: **சில கலாச்சார கட்டுப்பாடுகள் ஆண் பெண் அசமத்துவ உறவு முறைக்கு வழிகோலுகின்றன என நாம் கருதுகிறோம்.**

சுல்பிகா: கலாச்சாரம் என்பது பல விழுமியங்களை உள்ளடக்கியதோடு சமயம், பொருளாதாரம், கல்வி, சமூக ஸ்தாபனம் போன்ற பல காரணிகளையும் கொண்டது. இது நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது. உதாரணமாக முஸ்லிம்களை எடுத்துக் கொண்டால் முக்காடு அணியும் முறை இடத்திற்கு இடம் வேறுபடுகிறது. சமயங்கள் கூட கலாச்சார அம்சங்கள் மாறுபடலாம் எனக் கூறுகிறது.

சாந்தி: நாம் விரும்பியோ விரும்பாமலோ அது மாறுபடுகிறது. உடைகள் மூலம் நாம் எமது identity ஐத்தான் காட்டுகிறோம். அதாவது நான் யார், எனது சூழல் என்ன என்பவற்றை. எனவே கலாச்சாரம் வேறு identity வேறு.

செல்வி: விதவைகளைப் பொறுத்தவரை அவர்கள் பூணும் தவக்கோலத்தை எவருமே விரும்பவில்லை. எனவே அரைகுறை கலாச்சாரம் அல்லது சாதிக்கலாச்சாரம் என்பதைவிடுத்து ஒரு மறு கலாச்சாரம் அல்லது எதிர்க்கலாச்சாரம் உருவாக வேண்டும்.

இளங்கதிர்: **இந்நிலையில் இதற்கு என்ன தீர்வை முன்வைக்கிறீர்கள்?**

செல்வி: Consciousness raising அவசியம். அதாவது ஆண் பெண் இருபாலாரிடமும் ஒரு மனமாற்றம் ஏற்பட வேண்டும். ஆண்களுக்கும் பெண்களுக்குமுரிய பிரச்சினையை விளக்கிக் கூறி தீர்வு பெற முயல வேண்டும். சித்தாந்த ரீதியில் உறவுகள் நடைமுறைக்கு கொண்டுவரப்படல் வேண்டும். அத்தோடு சமத்துவத்தை ஏற்றுக் கொள்ளும் மனோபக்குவம் வளர வேண்டும்.

சுல்பிகா: பொறுப்புக்களை அனைவரும் உணர வேண்டும். 14 மணி நேரம் வேலை செய்யும் பெண்களின் முச்சுமையானது பகிரப்பட வேண்டும். கல்வியூடாகவும் தொலை தொடர்பு சாதனங்கள் மூலமாகவும் மாற்றங்கள் வெளிப்படுத்தப்படல் வேண்டும். அத்தோடு பெண்கள் முறைப்பாடு செய்வதற்கான துணிவை வளர்த்துக் கொள்ளல் வேண்டும்.

சாந்தி: பெண் என்றால் வடிவு, போகப் பொருள் போன்ற கருத்துக்களே வழமையாக முன்வைக்கப் படுகின்றன. அதைவிடுத்து அவளுடைய சக்தி, வினைத்திறன் என்பவை கருத்தில் கொள்ளப்படல் வேண்டும். அத்துடன் இவை நடைமுறைக்கு வருவதும் அவசியம்.

இளங்கதிர்: **பெண்களே தங்களை கவர்ச்சியாக காட்ட விரும்பும் தன்மைபற்றி என்ன கருதுகிறீர்கள்?**

செல்வி: அழகுணர்ச்சி மானிட அடிப்படை உணர்ச்சியாகும். எல்லோரும் அதை விரும்புவர். அழகு வேறு. பாலுணர்ச்சி வேறு. ஆனால் ஒரு பெண் பலாத்காரப்படுத்தப்பட்டால் அவள் மீதே குற்றம் சுமத்துவதை -அதாவது அவள் ஏன் அங்கு போனாள், அந்த உடை ஏன் அணிந்தாள் போன்ற கேள்விகளை எழுப்பி அவளையே குற்றம் காணும் முறையை நாம் காண்கிறோம்.

சாந்தி: இதற்கு உடனடியாக தீர்வொன்று காணப்பட வேண்டியது அவசியம் என்றாலும் பத்தாயிரம் வருட பிரச்சினையை பத்து வருடத்திற்குள் தீர்ப்பதென்பது சிரமத்திற்குரியதே.

இளங்கதிர்: **மாற்றங்கள் பற்றி பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்ட போதிலும் அவை நடைமுறைக்கு வருவதில்லை.**

சுல்பிகா: *மாற்றம் என்பது ஒரு மெதுவான போக்கு. (Slow Process) எனவே மாற்றம் நடைபெறவில்லை என்பதோ அதனால் கைவிடப்பட வேண்டும் என்றோ நாம் கருதக்கூடாது. இப்பிரச்சினை ஒரு பெரிய விருட்சமாய் வளர்ந்துள்ள இந்நிலையில் ஒரு சில கொப்புகளைத்தான் அகற்ற முடியும். மெல்ல மெல்ல ஆழவேரூன்றிய விருட்சமே அசையும் நிலை ஏற்படும்.*

இளங்கதிர்: ***படிப்பறிவற்ற பெண்களை மாற்றுவது சுலபம் என முன்னர் குறிப்பிட்டதை ஏற்றுக் கொள்கின்றோம். ஆனால் புத்திஜீவிகளாகத் திகழும் இன்றைய படித்த பெண்களுக்குத்தானே அறிவு ரீதியாக சிந்திக்க முடிகிறது. இவர்கள் ஏன் முற்போக்கு சக்திகளாக உருவெடுக்கக் கூடாது? உதாரணமாக பல்கலைக்கழக மாணவிகள் கூட பெண்விடுதலை சார்பான கவிதை, கட்டுரைகளை எழுதி அதில் தமது பெயரை துணிந்து போடாது தகப்பனின் பெயரிலேயே எழுதுகின்றனர். இது எந்தவகையில் பெண்விடுதலையை பெற்றுத்தரும்?***

சாந்தி: *வெளியில் உள்ள போது மாணவிகள் பரபரப்பும் உணர்ச்சியும் மிக்கவர்களாக இருப்பர். பல்கலைக்கழகம் தெரிவானதும் கருத்துநிலை மாறுபடுகிறது. பல்கலைக்கழகம் புகுந்ததும் பிரச்சினைகளை எதிர்த்தும் போராடாமல் சமூக ஏற்றத்தை எதிர்பார்த்து கிடைப்பதை பெற்றுக் கொண்டு ஒதுங்கிப் போவது என்ற நிலையே காணப்படுகிறது. எனவே பல்கலைக்கழகமானது பெண்விடுதலைக்குரிய Entry Point இல்லை என்பது எனது கருத்து. தாக்கமுற்றவர்கள் அல்லது பாதிக்கப்பட்டவர்கள்தான் அதற்கெதிராக போராட முற்படுவர். பல்கலைக்கழக மாணவர்கள் தமக்குள் ஒரு கருத்துடன் காணப்படுவதாலும் பிரச்சினையை எதிர்நோக்காததாலும் அவர்கள் இப்பிரச்சினைகளில் தீவிரம் காட்டாது உள்ளனர். உண்மையில் க.பொ.த,உயர்தரம் முடித்துவிட்டு தொழில்தேடிச் செல்லும் பெண்களே பிரச்சினைக்கெதிராக அறிவுரீதியாக போராடத் தலைப்படுகின்றனர். ஏனெனில் அவர்கள்தான் பாலியல் ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். எனவே கீழ் மட்டத்திலுள்ள பெண்களுக்கு பிரச்சினைகளை விளக்கும் போது அவர்கள் அதை எதிர்த்துப் போராடத் தலைப்படுகின்றனர். ஆனால் மத்தியதரப் பெண்கள் சமூக அந்தஸ்து காரணமாக சமுதாய கட்டுப்பாடுகளை மீறப்பயப்படும் நிலை காணப்படுகிறது.*

இளங்கதிர்: ***இது தொடர்பாக வெவ்வேறு அமைப்புகளில் உள்ள நீங்கள் என்ன திட்டங்களை செயற்படுத்துகிறீர்கள்?***

நால்வரும் :

*I. பால்நிலை எண்ணக்கரு பற்றிய விழிப்புணர்வுக்கான கருத்தரங்குகளை நடாத்துகின்றோம்.*

*II. பல்வேறு கற்கை நெறி, கருத்தரங்குகள் மூலம் இளம் ஆண் பெண்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தல்*

*III. தொடர்பு ஊடகங்கள் மூலம் எமது கருத்துக்களை கருத்தியல் ரீதியாக மட்டுமன்றி ஜனரஞ்சகரீதியாகவும் வெளிப்படுத்தல்*

*IV. பெண்கள் சம்பந்தமான பத்திரிகைகள், வெளியீடுகள் என்பனவற்றின் ஊடாக கருத்துக்களை முன்வைக்கிறோம்.*

*V. கலந்துரையாடல் மூலமும் விழிப்புணர்வை ஏற்படுத்த ஆவண செய்து வருகிறோம்.*

*இவ்வாறு நகர்ந்த எங்கள் உரையாடலின் போது நாம் பேசிய விடயங்களைவிட பேசப்பட வேண்டிய விடயங்கள் அதிகம் இருந்ததை உணரக்கூடியதாக இருந்தது. இளங்கதிரை பொறுத்தவரை கதைத்தவை மிகச் சொற்பம் என்றாலும் இது ஒரு ஆரம்பம் என்பதில் ஐயமில்லை. ஒரு தெளிவு அல்லது ஒரு புதிய சிந்தனை அல்லது ஒரு எழுச்சி இதன்மூலம் குறிப்பாக இளந்தலைமுறையினரிடையே ஏற்படுமாயின் அது ஒரு விடியலை நோக்கிய முன்னோடி நடவடிக்கையாக அமையும்! அமைய வேண்டும் என்பதே எமது அவா.*

***இளங்கதிர் சார்பில் உரையாடியவர்கள்:***
***S.அன்ரனி, பா.பிரதாபன், கிருஷாந்தி ராமையா, P. சுரேந்திரன், இரா.இரவிசங்கர்***

**இரண்டாம் பரிசு பெற்ற சிறுகதை**

***"பெண்களின் வாழ்க்கையில் தாயின் அரவணைப்பு ஒரு சந்தர்ப்பத்தில் மிகவும் முக்கியமானது. குழந்தை ஒன்றை பெற்றெடுக்கும் சந்தர்ப்பம்தான் அது. வெளிநாட்டிலுள்ள நம் பெண்களால் இவ் அரவணைப்பை உணரமுடிகிறதா? பெண்கள்தான் ஒற்றைக்காலில் நின்றாலும் பெற்றோர்கள் யோசிக்க வேண்டாமா? அங்கு அவர்கள் படும் வேதனைகள் இவர்களுக்குப் புரியாதா?"***

# பார்வதி ஒரு பாடம்

சி. கருணாகரன், முதலாம் வருடம் , பொறியியல் பீடம்

காற்று வீசிய சுழற்காற்று ஓய்ந்திருந்தது. இன்று போட் ஓடும் என்ற மன நிம்மதியுடன் தென்னைமரமொன்றின் கீழ் அமர்ந்திருந்தோம், நானும் என் நண்பர்களும். உயரத்தில் பறந்து சென்ற ஹெலிகொப்டர் ஒன்று கண்ணிலிருந்து மறையும் போதுதான் நாயொன்றின் ஊளைச்சத்தம் எங்கள் காதுகளில் தெளிவாக விழுந்தது. அந்தச்சத்தம் எங்கள் நெஞ்சில் புகுந்து இனம்புரியாதவொரு பயத்தை ஏற்படுத்தியது. நண்பர்களுடன் அரட்டையில் இருந்ததனால் கிளாலிக்கரையில் இருக்கின்றோம் என்பது கூட மறந்துவிட்டது. நாங்கள் சுகமாகக் கரையைக் கடந்துவிட வேண்டும் என்று நேர்த்திக்கடனும் போட்டுக்கொண்டோம்.

''மச்சான் டேய்.... என்னடா இன்னும் பல்லவியைக் காணவில்லை''

எங்களுடன் சேர்ந்து வருவதாயிருந்த பட்ச்மேற் பல்லவியைக் காணவில்லை என்று என் நண்பர்கள் கவலைப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

''கடைசி பஸ் வரை காத்திருப்போம் மச்சான்...'' எல்லோரும் ஏகமனமாக தீர்மானித்தோம். பகலவனுக்கு நாங்கள் காத்திருப்பது பிடிக்கவில்லைபோலும். அவனுக்கு ஏற்பட்ட சீற்றம் காரணமாக, எல்லோரும் வியர்த்துக் களைத்து அடிக்கடி தென்னை மரங்களை மாற்றிக் கொண்டிருக்க வேண்டியிருந்தது. வெயில் கொழுத்தினாலும் மழை பெய்யாமலிருந்தது எமது அதிர்ஸ்ட்டம்தான். மணல்ப்புழுதியைக் கிளறியபடி தட்டிவான் ஒன்று வேகமாக வந்து நின்றது. எல்லோருடைய கவனமும் தட்டிவானைப் பார்த்தபடி நிற்க, கடைசியாக பல்லவி இறங்கினாள்.

''நீங்கள் ஏர்லியாக வந்திட்டியளே... இந்த தட்டிவான் இடைவழியில் பிறேக் டவுன், அதுதான் லேட்.... சொறி'' என்றாள் பல்லைக்காட்டியபடி பவ்யமாக.

''சொறி கியலா வந்துறு...'' என்று சொல்லவேண்டும் போல இருந்தது. ஆனால் சொல்ல முடியவில்லை. ஏதாவது பிழைகளைச் செய்வது பின்னர் சொறி சொல்வது இதுதான் இன்று வழமை ஆகிவிட்டது. அதுவும் பெண்கள் தங்கள் பல்லைக்காட்டியபடி சொன்னால், இளைஞர்கள் ஏற்காமலிருப்பார்களா...?

''ரிக்கட் எடுத்துக்கொண்டு வாறன்.... நில்லுங்கோ''

''அதெல்லாம் நாங்கள் எடுத்திட்டோம்.... கடற்கரைக்கு நடவுங்கோ'' என்றபடி கடலைநோக்கி நடந்தோம்.

யாழ்தேவிப்பெட்டிகள் மாதிரி படகுகள் தொடுக்கப்பட்டிருந்தன. எல்லோரும் ஒரே படகினுள் ஏறிக்கொண்டோம். ஒரு படகில் பதினைந்துபேரை ஏற்றவேண்டுமாம், நாங்கள் பதினான்கு பேர்தான் இருந்தபடியால் ஒரு நபருக்காக காத்திருந்தார்கள் படகோட்டிகள். தூரத்தில் ஒருவர் வந்துகொண்டிருப்பது தெரிந்தது. ''வந்தாளப்பா வந்தாளப்ப.... வஞ்சிக்கொடி என வந்தாளப்பா...'' நண்பனின் பாட்டைத் தொடர்ந்து, வந்துகொண்டிருப்பவரை கூர்மையாகப் பார்த்தேன்.

சோகமான முகம், தளர்வான நடை, கையில் ஏதோ பை, கிட்டத்தட்ட எழுபது வயதிருக்கும்.

மிகவும் கஸ்டப்பட்டு படகினுள் ஏறிக்கொண்டவர், எனது பக்கத்தில் அமர்ந்து கொண்டார்.

''பக்கத்து சீட் இலே பாட்டி உட்கார்ந்தா ரேக் இட் ஈசி ஊர்வசி'' பல்லவியின் அறுவை என் காதுகளில் தெளிவாக விழுந்தது. இத்தாக்கத்திற்கு எதிர்த்தாக்கம் கொடுக்க விரும்பாமல் ஆச்சியின் பக்கம் திரும்பினேன்.

''ஆச்சி... நீங்கள் எந்த இடம்?''

''நான் வதிரி ராசா''

''வதிரி என்றால்... செல்லையா பள்ளிக்கூடத்திற்கு....''

''பள்ளிக்கூடத்திற்கு முன்னால் வீடுதான்... நீ எந்த இடம் ராசா?''

என்னுடைய சொந்த இடத்தைச் சொன்னவுடன் ஆச்சி குறுக்குக் கேள்வி ஒன்றைக் கேட்டார்.

''அப்ப உமக்கெப்படி வதிரி தெரியும்?''

''ஆச்சி.... அங்கே பொம்பிளைப்பிள்ளைகள் படிக்குதுகள் தானே, அதுதான் அந்தப்பக்கம் வாறவன்'' என்றான் என் நண்பர்களிலொருவன்.

''ஓம்... ஓம்... விளங்குது தம்பியவை. இந்தக்காலத்தில் படிக்க என்று வெளிக்கிட்டுட்டு பின்னாலேயும் முன்னாலேயும் திரிகிறதுதான் பொழுதுபோக்கு''

ஆச்சி இப்படிக்கூறியதும் அண்மையில் நடந்த பட்டிமண்டபம் ஒன்று என் முன் தோன்றியது. செல்வன் அறிவழகன் வாதிடும்போது,

''இன்றைய இளைஞர்கள் தங்கள் வீடுகளுக்கு உதவிகளைச் செய்யாவிட்டாலும் நம் சமூகத்திற்கு பெரிய தொண்டுகளைச் செய்து கொண்டுதானிருக்கிறார்கள். சிறிய உதாரணத்திற்கு; இன்று ஒரு பெண்... அதாவது யுவதி வீட்டைவிட்டு புறப்படுகிறாளென்றால் அவளுக்குப் பின்னால் செல்வதற்கு எத்தனையோ இளைஞர்கள் தயாராக வாசலில் நிற்பதையும், அவள் வீட்டுக்குத்திரும்பும் போது வீடுவரை கொண்டு வந்து விடுவதையும் நீங்கள் பார்த்திருப்பீர்கள். இதனால் எத்தனையோ பெற்றோர்கள் மனநிம்மதியாக வீட்டிலிருக்கக் கூடியதாயுள்ளது. ஏனெனில் அவர்களுக்கு தெரியும்; யாராவது ஒரு இளைஞர் தங்கள் பிள்ளைகளுக்கு பின்னாலே போய்வருவான் என்பது. இதைவிட வேறு பாதுகாப்பு என்னவிருக்கின்றது. இன்று, இதனால் பெண்களைப் பெற்றவர்கள் பெருமைப்படுகிறார்களே ஒழிய கவலை கொள்வதில்லை....''

நளினமாகவும் நயமாகவும் வாதிட்டதுதான் ஞாபகத்திற்கு வந்தது.

''ஆச்சி.... எங்கே போறியள்? கொழும்புக்கா?'' கதையை வேறுபக்கமாக திருப்ப முயன்றேன்.

''வவுனியாவுக்கு அப்பு''

''வவுனியாவில் யார் இருக்கிறார்கள்.... ஆச்சி?'' நண்பனின் கேள்வி ஆச்சிக்கு அல்வா கொடுத்தமாதிரி ஆகிவிட்டது.

''எனக்கு சொந்தபந்தமென்று இங்கு ஒருவருமில்லை. பிள்ளைகளெல்லாம் வெளிநாட்டிலே இருக்கிறார்கள். அவர்களைப் பார்த்துப் பேசி 10, 15 வருடமிருக்கும். போனதுக்கு ஒருக்கால் கூட என்னைப் பார்க்கவரவில்லை.... நான் பாயிலே படுக்கையிலே விழுந்தால் யார் என்னை எடுப்பது?'' தன் சேலைத்தலைப்பால் மூக்கைப்பிடித்தபடி விம்மிய குரலில் மேலும் தொடர்ந்தார்.

''கடிதங்கள் கனக்கப் போட்டுப்பார்த்திட்டன். ஒருத்தருக்கும் என்னை வந்துபார்க்கிற திட்டமில்லை. எட்டுப்பிள்ளைகளையும் பெற்று என்ன புண்ணியம்?....''

மெதுவாக விம்மிய ஆச்சி இப்போது சத்தமாக அழுவது என் நண்பர்களுக்கும் கேட்டுவிட்டது. பல்லவியுடன் பல்லவி பாடிக்கொண்டிருந்தவர்கள் என்பக்கம் திரும்பினார்கள். பத்துமாதம் சுமந்து பெற்ற தாயின் தவிப்பு பிள்ளைகளுக்கு ஏன் புரியவில்லை. வெளிநாட்டுக் கலாச்சாரத்தில் மூழ்கிவிட்டார்களா? எல்லாம் எங்கள் சமுதாயம் விட்டபிழை. வெளிநாட்டுக்கு இங்கிருந்து பார்சல் அனுப்புவது போல தங்கள் பெண்களையும் அனுப்புகிறார்களே! ஒரே ஒரு வித்தியாசம் பார்சல் பக்கட் பண்ணி அனுப்பப்படுகிறது ஆனால் பெண்கள் பக்கட் பண்ணப்படுவதில்லை.

''எனக்கு வெளிநாட்டு மாப்பிள்ளைதான் வேண்டும் என்று எத்தனையோ பெண்கள் வரிந்துகட்டிக்கொண்டு நிற்கும் போது நீ என்ன கத்துகிறாய்?''

யாரோ கேட்பது போல இருந்தது. கேட்டவனை முறைப்பாகப் பார்த்தேன். அவனும் முறைப்பாகப் பார்த்தான். சிரித்தபடி பார்த்தேன். அவனும் சிரித்தான். உற்றுப் பார்த்தேன். அவனும் உற்றுப்பார்த்தான். என்னைப்போலவே இருக்கிறானே என் முகத்திலுள்ள மச்சம் கூட அவனுடைய முகத்திலும் இருந்தது.

''இன்று பெண்கள் வெளிநாடு செல்வதற்குத் தயாராய் நிற்பது அங்கு பெண்கள் படும் கஸ்டங்களை அறியாததால் தான்டா. உதாரணமாக பெண்களின் வாழ்க்கையில் தாயின் அரவணைப்பு ஒரு சந்தர்ப்பத்தில் மிகவும் முக்கியமானது. குழந்தை ஒன்றை பெற்றெடுக்கும் சந்தர்ப்பம்தான் அது. வெளிநாட்டிலுள்ள நம் பெண்களால் இவ் அரவணைப்பை உணரமுடிகிறதா? பெண்கள்தான் ஒற்றைக்காலில் நின்றாலும் பெற்றோர்கள் யோசிக்க வேண்டாமா? அங்கு அவர்கள் படும் வேதனைகள் இவர்களுக்குப் புரியாதா?'' சிரித்தேன்.

''அப்ப வெளிநாட்டிலுள்ளவர்கள் குழந்தைகள் பெறவில்லையா? அங்கு காசைக் கொடுத்தால் எத்தனை தாய்மார்கள் அரவணைக்கத் தயாராயிருக்கிறார்கள் தெரியுமா?''

அவனும் சிரித்தபடி கேட்டான்.

''உண்மையான அன்பான அரவணைப்பை பணத்தைக் கொடுத்து பெறமுடியுமாடா? உனக்கு விதண்டாவாதம் தான் கதைக்கத் தெரியும். சரி... குழந்தைகளைப் பெற்று விட்டார்கள். குழந்தைகள் வளர்ந்து வயதுக்கு வந்ததும் அங்கத்தைய நாட்டுக்காரர்களுக்கு கட்டிக் கொடுப்பார்களா? மீண்டும் பார்சல் பாசிங் தான். ஆனால் ஒரு வித்தியாசம் இருக்கும். இன்று தமிழ் பேசிக்கொண்டு செல்கின்ற இப் பெண்களின் பிள்ளைகள், நாளை தமிழ் தெரியாத பார்சல்களாகத்தான் இங்கே வரும். ஒரு பெண்ணுக்காக இங்கிருந்து பார்சல் போல போவதற்கு எந்தவொரு ஆண்பிள்ளையும் விரும்பமாட்டான். எனவே இன்னும் சில வருடங்களில் நம்மவர்களை பல பாசைகளிலும் பலவர்ண ஆடைகளிலும் நமது நாட்டின் பல இடங்களிலும் காணக்கூடியதாயிருக்கும். என்ன சரிதானே?

மீசையைத்தடவியபடி கேலியாகப் பார்த்தேன். என்னுடன் வாதிட்டவனும் மீசையைத் தடவினான்.

''பளீர்''

முகத்தில் அறைந்து விட்டான் என்று கோபத்துடன் எழுந்தேவிட்டேன்.

''மச்சான்.... அலை அடிக்கத் தொடங்கிவிட்டது'' கடல் நீரினால் நனைந்து நடுங்கியபடி யாரோ நண்பன் சொன்னபோதுதான் சுயநினைவுக்கு வந்தேன். கடல் அலையினாலும் காற்றினாலும் கடும் குளிரும் தொடங்கியிருந்தது. இந்தக்குளிருக்குள்ளே ஆச்சி என்ன செய்கிறாவோ என்று நினைத்தபடி ஆச்சியைப் பார்த்தேன். தண்ணீர் தலையை நனைக்கக்கூடாதென்று தன் சேலையால் தலையை மூடியபடி குளிரில் ஒடுங்கிக் கிடந்தார்.

வெளிநாட்டிலே, வெளியிலே ஐந்தாறு உடுப்புப் போட்டு மேலாலே சுவற்றரும் போட்டு சிரித்துக் கொண்டு திரியும் பிள்ளைகளுக்கு கிளாலிக்கடலில் கிடுகிடுக்கும் குளிரில் பல் கிடுகிடுக்க தாய் படும்பாடு தெரியப்போவதில்லை. தான் பட்ட கஸ்டங்களை பிள்ளைகளுக்குச் சொல்லி மனம் நோகவும் விடமாட்டாள் தாய். இது அப்பிள்ளைகளுக்குப் புரியப்போவதுமில்லை. தனக்காக யார் இருக்கின்றார்கள் என்ற பயமும் கவலையும் ஆச்சியின் முகத்தில் தெளிவாகத் தெரிந்தன.

''ஆச்சி பிள்ளைகளுக்கு சிற்றிசன் கிடைத்தவுடன் உங்களையும் வெளிநாட்டுக்குக் கூப்பிடுவார்கள் ஒன்றும் யோசிக்காதேயனே....'' என்று நொந்த மனதுக்கு மருந்துகொடுத்தேன்.

''என் வீடுவாசல் எல்லாவற்றையும் விட்டுட்டு வெளிநாடு போகட்டே. ஏன்? எட்டுப்பிள்ளைகளில் ஒரு பிள்ளையாவது என்னுடன் இங்கு வந்திருக்கக் கூடாதே....? நான், என் சொந்தவீட்டிலதான் கடைசிவரை இருக்கோணும். செத்தாப் பிறகு கூட எங்களூர் ஆலம்பிட்டிச் சுடலையில்த்தான் நான் எரியோணும்....''

ஆச்சியின் தீர்க்கமான குரல் ஓயும்போது பெரிய அலையொன்று பாய்ந்தடித்தது. அந்த அலையுடன் மீன் ஒன்று எங்கள் படகினுள் வந்து விழுந்தது. உயிரை விடுவதற்காக துடித்துத்துடித்து மீன் எகிறியது.

***

கடலைக்கடந்த களிப்புடன் அடுத்துக் குளத்தைத் (தாண்டிக்குளம்) தாண்டி விட வேண்டும் என்று எண்ணியபடி நடந்து கொண்டிருந்தோம்.

''இக்மனட என்ட'' - காக்கிச்சட்டையின் குரலைத்தொடர்ந்து வேகமாக நடந்து கொண்டோம்.

''போட்டோ எடுத்ததா?'' மீண்டும் காக்கிச்சட்டையின் குரல்.

''நோ சேர்''

''எகபத்த யன்ட'' -கட்டளையைத் தொடர்ந்து மர நிழலில் ஒதுங்கிக் கொண்டோம். பல்கலைக்கழகத்திற்கு பதினான்கு பேரும் சேர்ந்து வந்தும் படம் எடுக்காத காரணமாக பயணத்தைத் தொடர முடியாத நிலையால் பெருமூச்சொன்றை விட்டுக் கொண்டோம்.

எங்களுக்குப் பின்னால் வந்துகொண்டிருந்த ஆச்சி களைத்து விழுந்து வந்து கொண்டிருந்தார். தன் பிள்ளைகளுடன் ரெலிபோனில் கதைக்கப் போகின்ற சந்தோசம் ஆச்சியின் களைப்பான முகத்திலும் தெளிவாகத் தெரிந்தது.

''ஏய் கிழவி... ஐரென்றிக் காட்'' -என்று அந்த ஆச்சியையும் மறித்தனர்.

''பார்வதிப்பிள்ளை... எங்கே போறாய்?''

ஐரென்றிக்காட் ஐப்பார்த்தபடி காக்கிச்சட்டையின் குரல் எங்களுக்குத் தெளிவாக கேட்டது

''வவுனியாவுக்கு ஐயா''

ஏன் எதற்கு என்ற கேள்விகள் கேட்காதபடியால் வீண் சிரமங்களில்லாமல் வந்து கொண்டிருந்தார் பார்வதி ஆச்சி

''தம்பியவை ஏன் நின்றிட்டியள்?''

''எங்களைப் போட்டோ எடுக்க வேண்டுமாம். அதனால் இன்றைக்கு விடமாட்டார்கள்....''

-ஆச்சிக்குப் புரியும்படியாக விளங்கப்படுத்தி வழியனுப்பி வைத்தோம்.

***

அன்று திங்கட்கிழமை தொடர்ந்து நடைபெற்ற விரிவுரைகளால் சோர்வுடன் அக்பர் இனுள் நுழைந்தேன். மதியச் சாப்பாட்டுக்கான கியூ வழமையைவிட நீளமாகவிருந்தது. எங்களுக்கு எங்கே போனாலும் கியூ தானே என்று நினைத்தபடி அன்றைய பத்திரிகையை எடுத்து ஊர் நிலைமைகள் ஏதாவது இருக்கின்றதா என்று மேலோட்டமாக பார்த்தேன். அந்தப்படத்திலுள்ளவரை எங்கேயோ பார்த்தமாதிரி இருந்தது. படத்தின் கீழே

**மரண அறிவித்தல்**

திருமதி பார்வதிப்பிள்ளை பாலசுப்பிரமணியம் (வடமராட்சி)

> வடமராட்சி வதிரியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி பார்வதிப்பிள்ளை பாலசுப்ரமணியம் வவுனியாவில் அகாலமரணமானார். அன்னார் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் (நில அளவையாளர்) அவர்களின் பாரியாரும் பால்ராஜ் (பிரான்ஸ்), பாலகுமார், பாலறஞ்சன் (ஜேர்மனி), பாலநந்தன், பாலரமணன், பாமினி (கனடா), பாக்கியலக்சுமி, பாலநந்தினி (நோர்வே) ஆகியோரின் அன்புத்தாயாரும் சிவகணேஸ்(கனடா) வரதராஜன் (நோர்வே) ஆகியோரின் மாமியாரும் பபிதா, பிரியா, தர்சன், தர்சி ஆகியோரின் பேத்தியாரும் ஆவார். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.
>
> தகவல்:- பால்ராஜ் (நோர்வே)

அறிவித்தலை வாசித்து முடித்தவுடன் இனம்புரியாத சோகமொன்று என்னைத் தொற்றிக் கொண்டது.

தாங்கள் இருக்கின்ற நாடுகளை மற்றவர்களுக்கு தெரியப்படுத்துவதற்கு தாய் இறந்தாலொழிய வேறொரு சந்தர்ப்பம் கிடையாது என புதல்வர்கள் புரிந்துகொண்டுதான் தாயிடம் வராமல் இருந்தார்களா? இம்மரண அறிவித்தலினூடாக தங்களை விளம்பரப்படுத்தியுள்ளார்களே ஒழிய ஒரு அனுதாப வரியாவது உள்ளதா? அறிவித்தலைப் பார்ப்பவர்கள், வெளிநாட்டுக் குடும்பமென்று சொல்லக்கூடும். இதனால் பார்வதி ஆச்சியின் ஆத்மா சாந்தி அடைந்துவிடுமா?

வதிரியில் வசித்தவர் வவுனியாவில் அகாலமரணம். கொள்ளி போட மகனிருந்தும் கொள்ளி போட வரவில்லை. எட்டுப்பிள்ளையைப் பெற்ற தாயின் எட்டுக்குக்கூட ஒரு பிள்ளையும் ஊரில் இல்லை. ஆலம்பிட்டிச் சுடலையில் எரிய விரும்பிய ஆச்சிக்கு ஆஸ்பத்திரிச் செலவில் அடக்கம். பார்வதி செய்த பாவம் என்று ஊர் உலகம் சொல்லும் ஆனால் பார்வதி ஓர் பாடம் என்பது உலகத்திற்குப் புரியப்போவதில்லை.

## தற்கொலையின் ஆரம்பங்கள்....

பேராசிரியர். டியூடர் சில்வா, சமூகவியற் துறை, பேராதனை வளாகம்

கடந்த 4 தசாப்தங்களாக இலங்கையின் வடக்கிலும், கிழக்கிலும் நடக்கும் அரசியல் பிரச்சினைகளையும் மீறி பாரிய அளவு இளைஞர் தற்கொலைகளை நம் நாடு சந்தித்துள்ளது. இளைஞர் தற்கொலை பிரச்சினையானது அரசியல் பிரச்சினைகளை போலவே அபாயகரமாக இருந்த போதிலும் தொடர்பு சாதனங்களோ அரசியல் பேச்சுவார்த்தைகளே அதற்கு கொடுக்கும் முக்கியத்துவம் மிகவும் அற்பமானதே. இதற்கு காரணம் தற்கொலைகள் பெரும்பாலும் அந்தரங்கமாகவும், வெளிப்படுத்த இயலாததாயும் இருப்பதே.

தற்கொலைக்கான காரணங்கள் பொதுவாக தனிப்பட்ட ரீதியானதாகவோ இன்னொருவருடன் சம்பந்தப் பட்டதாகவோ இருப்பதாலும், தன்னைத்தானே பழிவாங்கும் உணர்வாக இருப்பதாலும், இவை மறைமுகமாக சமுதாய பழிவாங்கலாகவே அமைகிறது.

இத் தற்கொலைகளிற்கு ஏன் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்பது வடபகுதி போராளிகளின் தற்கொலை படையினரின் செயற்பாடுகளினால் தெளிவாக சுட்டிக்காட்டப்படுகிறது.

இலங்கையில் தற்கொலை அதிகரிப்பை விளக்கும் போது அவதானிக்கப்பட்ட காரணங்களாவன விரைவான சமுதாய மாற்றங்கள் அதிகரித்து வரும் இளைஞர்களின் எண்ணிக்கை, மீளக்குடியமர்வுகள், சிறுபான்மை இன இளைஞர் மத்தியில் அமைதியின்மை, ஒடுக்கப்பட்ட சாதி முறை அமைப்பு, விவசாய இரசாயன பொருட்கள் நச்சு பொருட்கள் என்பவை இலகுவாக கிடைத்தல் என்பனவாகும்.

இருந்த போதிலும் நேரடிக் காரணங்கள் பொதுவாக திருமணத்திற்கு முந்திய or திருமணத்திற்கு பிந்திய காதல் விவகாரங்களில் ஏற்படும் பிரச்சினையாக உள்ளது.

துரித மகாவலித்திட்டத்தில் குடியமர்த்தப்பட்ட சனத்தொகையில் செய்யப்பட்ட ஆய்வின் படி காதல் விவகாரங்களில் ஏமாற்றம் தற்கொலைக்கான ஒரு காரணமாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இக்கட்டுரையில் எழுப்பப்படும் முக்கியமான கேள்வி என்னவென்றால், தற்கொலையாளர்களின் மத்தியில் எந்த வகையில் எந்த சந்தர்ப்பங்களில் அன்பு வெறுப்பாக மாற்றப்படுகிறது என்பதும், இவ்வெறுப்பு தனக்கெதிரானதா அல்லது இன்னொருவருக்கெதிரானதா என்பதுமாகும். தற்கொலைகள் பற்றிய கணிப்புகளும் அவற்றின் காரணகாரிய வரலாறும் அவை அன்பு -வெறுப்பு என்ற உணர்வுகளுடன் தொடர்பானது என்பதை வெளிப்படுத்துகிறது. அத்துடன் இளைஞர்களின் அமைதியின்மையையும் அவற்றின் பலாபலன்களையும் இது வெளிச்சமிட்டு காட்டுகிறது.

தற்கொலைகள் பொதுவாக தனக்குள் ஏற்படும் முரண்பாடுகளையும் இன்னொருவருடனான முரண்பாடுகளையும் உள்ளடக்குகின்றது. இம் முரண்பாடுகளை புரிந்து கொள்ள குடும்பத்தினர், உறவினர், சமுதாயத்தினர் என்போரும் ஆய்விற்குட்படுத்தப்பட வேண்டும். அதாவது அவர்கள் ஒரு மனிதன் மேல் செலுத்தும் ஆதிக்கம், வாழ்க்கை தொடர்பான அவர்களின் மனோபாவம், அன்பு, வெறுப்பு தொடர்பான அவர்களின் உணர்வுகள் என்பன ஆராயப்பட வேண்டும். எனினும் தற்கொலையின் உளவியல் காரணங்கள் தனிப்பட்ட ரீதியில் அல்லது சமுதாயம் தொடர்பாகவே ஆராயப்படுகிறது.

### இலங்கையில் தற்கொலைகளின் போக்கு

அண்மையில் இலங்கையானது உலகளாவிய ரீதியில் மிக அதிகமாக தற்கொலை விகிதத்தை காட்டியுள்ளது. இவ் விகிதம் உலகில் மிக அதிக தற்கொலை வீதத்தை காட்டும் ஹங்கேரி, ஒஸ்ரியா, ஜப்பான் ஆகிய நாடுகளை விட அதிகமாக உள்ளது. இலங்கையில் தற்கொலை விகிதமானது 1950 இல் 100,000 க்கு 6.5 என்பதிலிருந்து 1988 இல் 100,000 க்கு 44.3 விகிதமாக உயர்ந்துள்ளது. இது வருட காலப்பகுதியில் 600 விகித அதிகரிப்பைக் காட்டுகிறது.

1960 இல் தற்கொலை விகிதத்தில் ஒரு சடுதியான அதிகரிப்பு JVP புரட்சியுடன் ஏற்பட்டது. இதேபோல் 1979

களில் தமிழ் போராளிகளின் தோற்றத்தினாலும் JVP இன் மீள்எழுச்சியினாலும் ஒரு சடுதியான அதிகரிப்பு காணப்பட்டது.

தற்கொலை விகிதம் பெண்களைவிட ஆண்களில் அதிகமாக இருந்த போதிலும் அதிகரிப்பு முறைகள் இருபிரிவினரிடையேயும் ஒரே விகிதமாகவே அமைந்துள்ளது.

1985 இல் எடுக்கப்பட்ட கணிப்பின் படி மிக அதிகமான தற்கொலைகள் 20 -24 வயதிற்குட்பட்டவர் மத்தியிலேயே காணப்பட்டது. அடுத்ததாக அதிகமான வீதம் வயோதிபர் மத்தியில் காணப்பட்டது.

இலங்கையில் இனவாரியான கணக்கெடுப்பின்படி, அதிகமான தற்கொலைகள் சுதந்திரத்திற்காக போராடும் சிறுபான்மை தமிழ் மக்கள் மத்தியிலும் காணப்படுகிறது. இரண்டாம் இடம் சிங்கள இனத்தவர்களுக்குரியது.

இரு இனத்தவரிடையேயும் சமூக, பொருளாதார அழுத்தமும், அரசியல் நடவடிக்கைகளுமே போராட்டத்துடனும் தற்கொலையுடனும் சம்பந்தப்பட்டுள்ளது.

1981 இல் நடத்திய ஆய்வின் படி மதரீதியாக அதிக தற்கொலை வீதம் கிறிஸ்துவர்கள் மத்தியில் காணப்பட்டது. இரண்டாம் இடத்தை பௌத்தர்களும் 3 ம் இடத்தை இந்துக்களும் பெறுகின்றனர்.

### கணக்கெடுக்கப்பட்ட சனத்தொகை.

துரித மகாவலி திட்டமானது 1990 ம் ஆண்டுகளில் 500,000 குடிமக்களை கொண்டுள்ளது. இது மகாவலி அபிவிருத்தி சபையினால் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது இலங்கை மகாவலி அதிகாரசபையினால் (MASC) நிர்வகிக்கப்படுகிறது. இவர்கள் இக் குடியேற்றத்தின் மீது ஒரு சர்வாதிகார போக்கையே கடைப்பிடிக்கிறார்கள்.

இந்த கணக்கெடுப்பு 27 குடியேற்ற பிரிவுகள் உள்ளடக்கியது. 1983 முதல் 1985 வரை நடந்த தற்கொலைகளின் கணக்கெடுப்புகள் நடத்தப்பட்டன. அதாவது அபிவிருத்தியின் ஆரம்ப காலத்தையும் இவ்வாய்வு உள்ளடக்கியது. பழைய தரவுகள் இறப்பு பதிவுகளையும் குடும்பத்தவருடனான நேர்காணலினாலும் பெறப்பட்டன.

இக்குடித்தொகை பெரும்பாலும் சிங்கள பௌத்தர்களை உள்ளடக்கியது. குடித்தொகை 2.5% அதிகாரிகளையும் 97% குடியேற்றவாசிகளையும் 0.8% ஏனைய தொழிலாளர்களையும் உள்ளடக்கியது.

அதிகாரிகளும் நிர்வாகிகளும் அநேகமானோர் ஆண்கள். குடியேற்ற திட்டத்தில் தனியாக வசிப்பவர்கள் குடியேற்ற வாசிகள் அனைவரும் குடுப்பத்தினருடன் வசிப்பவர்கள். இவர்கள் 47% சுயவிருப்பத்தின் பேரில் குடியேறியோர். 50% வற்புறுத்தப்பட்டு குடியேற்றப்பட்டவர்கள்.

வற்புறுத்தலின் பேரில் குடியேற்றப்பட்டவர்கள் பெரும்பாலும் மகாவலி அபிவிருத்தி திட்டத்தினால் வீடிழந்தோரே. எனவே இவர்களின் மனதில் தாம் இத்திட்டத்தினால் பாதிக்கப்பட்டோர் என்பதாகவே இருக்கிறது.

ஏனையோர் தொழிலாளர்களும் ஆக்கிரமிப்பாளர்களுமே. இவர்களின் வசதி வருமானங்கள் மிக குறைவு.

### கணக்கெடுக்கப்பட்ட குடித்தொகையில் தற்கொலை பற்றிய ஆய்வு.

இக்குடித்தொகையில் இறப்பு விகிதப்படி அதிகமான இறப்புகள் - அதாவது 70% தற்கொலைகளே. தற்கொலை, கொலை, விபத்து, பாம்புகடி என்பனவே 90% இறப்புகளுக்கு காரணம். நோய் வாய்ப்பட்டு இறத்தல் மிக குறைவாகவே நடைபெறுகிறது.

1983 - 1987 வரை தற்கொலை வீதம் 43.7 (இக்குடித்தொகையில்) தேசிய ரீதியில் தற்கொலை வீதம் 41.6.

முதல் 4 வருடங்களில் தற்கொலை வீதம் அதிகரித்த போதும் 5 ம் வருடம் அது 19 இலிருந்து 16 ஆக குறைந்தது.

வருடாந்த தற்கொலை வீதம் அதிகரிப்பையே காட்டியது. முதல் 3 வருடம் குடித்தொகையின் தற்கொலை வீதம் நாட்டின் வீதத்தை விட குறைவாகவே இருந்தது. ஆனால் ஆரம்பகாலத்தில் குடிவரவு குடியகல்வு அதிகமாக இருந்ததால் இத்தரவு நம்பத்தகுந்ததாக இல்லை.

4 ம் வருட இறுதியில் 1986 இல், பெறப்பட்ட 62.4 தற்கொலை வீதம் தேசிய வீதத்திலும் மிக அதிகமாக காணப்பட்டது.

தரவுகள் குடித்தொகைக்கும் நாட்டிற்கும் இடையில் குறிப்பிடத்தக்க வித்தியாசத்தை காட்டாத போதும், குடித்தொகை நாட்டில் தற்கொலை விகித அதிகரிப்பை உறுதிப்படுத்துகிறது.

5 ம் வருடத்தில் வீதத்தில் ஏற்பட்ட சரிவானது சமுதாய நிலைநிறுத்தத்தை குறிப்பிடுகிறது. ஆனாலும் இத்தரவு எதையும் உறுதிப்படுத்தவில்லை.

அதிகமாக தற்கொலை மேற்கொள்வோர் 20-30 வயதிற்குட்பட்ட ஆண்களே. அடுத்ததாக அதே வயது பெண்கள் அதிகமாக தற்கொலை செய்கிறார்கள்.

ஆண்களில் 50 வயதிற்கு மேற்பட்டோரும் அதிகமாக தற்கொலை செய்ததாக கணக்கெடுக்கப்பட்டுள்ளது.

பெண்கள் பொதுவாக திருமணகாலத்திற்கு முந்திய காலகட்டத்திலேயே அதிகம் தற்கொலையில் ஈடுபட, ஆண்களில் திருமணமானவர்களே அதிகம் தற்கொலை செய்கிறார்கள்.

பெண் தற்கொலைக்கு காரணங்களாவன -உடைந்த காதல் விவகாரங்கள், திருமணத்திற்கு முன் கர்ப்பம் தரித்தல், கன்னித்தன்மை இழத்தல் என்பனவாகும்.

ஆண் தற்கொலைக்கு காரணங்கள் -மனைவியால் ஏமாற்றப்படுதல், ஏழ்மை, காதல் விவகாரங்களில் ஏமாற்றம், நோய்வாய்ப்படுதல் என்பனவாகும்.

80% ஆன தற்கொலைகள் திருமணத்திற்கு முந்திய அல்லது திருமணத்தினால் தோற்றுவிக்கப்பட்ட பிரச்சினைகளாலேயே ஏற்படுகின்றன.இக்காரணங்கள் சில தற்கொலைகளின் வரலாற்றை ஆராய்வதன் மூலம் விளக்கப்படுத்தப்படலாம்.

## தற்கொலை வரலாறு I

குடியேற்றப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்த 22 வயதுடைய பிஸ்கோ எனும் பெண் பூச்சிநாசினியை உட்கொண்டு ஏப்ரல் மாதம் 1987 ம் ஆண்டு சிங்கள தமிழ் புதுவருட தினத்தன்று தற்கொலை மரணத்தை தழுவினார். 10 அங்கத்தினரைக் கொண்ட அவரது குடும்பம் அம்பாறையிலிருந்து குடியேற்றப்பகுதி '**C**' இற்கு 1983 ம் ஆண்டு குடிவந்தது. இவர்கள் கொயிரும் சாதியைச் சேர்ந்தவர்கள். ஆயினும் குடும்பம் வறுமையில் சிக்கியிருந்தது. அவர்கள் முன்பு அம்பாறையில் அரசுக்குச் சொந்தமான காணியில் சட்டத்திற்கு முரணாக குடியேறியிருந்தார்கள்.(அம்பாறையில் இருந்தபோது 'பிஸ்கோ' 10 ம் வகுப்பு மட்டுமே படித்திருந்தாள்) மகாவலிக்கு குடியேறிய பின்பு அவர்களது குடும்பநிலை பலவந்தமாக குடியமர்ந்தவர்கள் என்பதில் இருந்து குடியேற்றப்பட்டவர்கள்' என்ற நிலைக்கு முன்னேறியிருந்தது. அங்கு அவர்கள் அரச உதவியுடன் கட்டப்பட்ட ஒரு குடிலில் வாழ்ந்து வந்தார்கள். பிஸ்கோவின் தந்தையார் மதுப்பழக்கத்திற்கடிமையானதுடன் முன் கோபக்காரரும் கூட. அதனாலும் குடும்பத்தில் நிலவிய பொருளாதார நெருக்கடியினாலும் அவர்களுக்கிடையே சச்சரவுகள் வழமையான ஒன்றாக இருந்தது. பிஸ்கோவைப் பொறுத்தவரையில் அழகும் இளமையும் போதுமானளவு குடிகொண்டிருந்தது. ஆனால் சிறுவயதிலிருந்தே 'வலிப்பு', 'ஆஸ்துமா' எனும் இருவியாதிகளும் அவளைத் தொற்றிக் கொண்டன. எத்தனையோ வைத்தியர்களிடம் சென்று காட்டிய போதும் ஒருவராலும் அவளைக் குணப்படுத்த முடியவில்லை. அதனால் அவளின் குடும்பத்தவர்களைப் பொறுத்தவரையில் ஒரு சுமையாகவும் வேண்டப்படாதவளாகவுமே இருந்தாள். அதனால் அவர்கள் அவளை தங்கள் குடும்பத்தின் சாபக்கேடு என்றே அடிக்கடி வர்ணித்தார்கள்.

இந்த சந்தர்ப்பத்தில் தான் 'சரத்' எனும் இளைஞன் அவர்களின் குடியேற்றப்பகுதியில் வாழ்பவன், பிஸ்கோவில் ஈடுபாடு கொண்டான். அவளும் உடன்பட்டாள். இவர்களின் காதல் விவகாரம் இருகுடும்பத்தினருக்கும் மறைத்து இரகசியமாகவே தொடர்ந்தது. பிஸ்கோவைப் பொறுத்தவரையில் சரத்தான் அவள் வாழ்க்கையில் ஆதாரமாயிருந்தான். நாளடைவில் பிஸ்கோ கர்ப்பமானாள். அவள் சரத்தை திருமணம் செய்யுமாறு கோரிய போதும் அவன் மறுத்துவிட்டான். அத்துடன் அவளது கர்ப்பத்திற்குத் தான் காரணமில்லையென மறுத்த போது அவள் ஏமாற்றப்பட்டதை உணர்ந்தாள். பின்புதான் அவனுக்கு வேறு ஒரு பெண்ணுடன் தொடர்பு இருப்பதையும் அவர்கள் திருமணம் செய்ய இருப்பதாயும் அவளுக்கு தெரியவந்தது. காந்தி எனும் அப்பெண் அவர்களுக்கண்மையான குடியேற்றப்பகுதியில் வசித்து வந்தாள். தன் நிராதரவான நிலையை உணர்ந்து கொண்ட பிஸ்கோ காந்தியிடம் சென்று தன் பரிதாபகரமான நிலையை எடுத்துக் கூறினாள்.

காந்தி அதற்கு எதுவித அனுதாபமும் காட்டாததுடன் தான் எந்தநிலையிலும் சரத்தை விட்டு கொடுக்கப் போவதில்லையெனவும் கூறினாள். நாளுக்கு நாள் அவளது துயரம் அதிகரித்துக் கொண்டு போனபோது அவளால் யாரிடமும் தன் நிலையை எடுத்துக் கூறி எவரிடமிருந்தும் அனுதாபத்தையோ ஆறுதலான வார்த்தையையோ பெறமுடியாத நிலையிலிருந்தாள். தானே தன் பிரச்சினைக்குரிய தீர்வைக் காண வேண்டிய நிலையிலிருந்தாள்.

இறுதி முயற்சியாக கருக்கலைப்பிற்காக வைத்திய ஆலோசனையை நாடினாள். அதற்கும் பணம் தேவைப்பட்டதால் அம்முயற்சியும் ஈற்றில் கைவிடப்பட்டது. அதன்பின் எஞ்சிய சிலநாட்களை துயரத்துடன் கழித்தாள். இதன் உச்சக்கட்டமாக புதுவருடத்திற்கு முன்னைய இரவு எல்லோரும் துயிலிலாழ்ந்திருந்த சமயம் தற்கொலைக் குறிப்பொன்றை எழுதி வைத்துவிட்டு விவசாய முயற்சிக்காக வீட்டில் வாங்கியிருந்த பூச்சி நாசினியை உட்கொண்டாள். அவளின் அலறலினால் எழுப்பப்பட்ட அவளின் பெற்றோர் அவளை அண்மையிலிருந்த வைத்தியசாலையில் அனுமதித்தபோதும் அவளின் உயிர் பிரிந்துவிட்டது. அவளெழுதிய தற்கொலைக்குறிப்பில் இறுதி வசனங்கள் பின்வருமாறு காணப்பட்டது:-

''சரத்!

நான் உங்களை இதயபூர்வமாக காதலித்தேன். ஆனால் என்னுடைய நோயின் நிமிர்த்தமாயும் வறுமையின் நிமிர்த்தமாயும் என்னைக் கைவிட்டு விட்டீர்கள். எப்படித்தான் நீங்கள் எனக்கு நம்பிக்கைத்துரோகம் செய்த போதும் நான் உங்களை வெறுக்கவில்லை. என்னுடைய நோய்கள் என் குடும்பத்திற்கு ஏற்கனவே பல கஷ்டங்களை கொடுத்துள்ளன. இவற்றுடன் எங்கள் இறுதிப் பிரச்சினையாலும் எனது குடும்பம் மேலும் கஷ்டத்தை எதிர்நோக்க வேண்டி வருமென்பதால் நான் எனது முடிவைத் தேடிக் கொள்கிறேன்,

தாயாரின் கூற்றுப்படி பிஸ்கோ இதற்கு முன்னரும் தன் ஏனைய குடும்ப அங்கத்தவருடன் சண்டையிட்டுக் கொண்டு தன்னைத்தானே மாய்த்துக் கொள்ள முயற்சித்திருக்கிறாள். மேலும் அவளது மைத்துனி ஒருவரும் அம்பாறையிலிருக்கும் போது கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொண்டதும் இங்கு குறிப்பிட வேண்டிய ஒன்றாகும்.

## தற்கொலை வரலாறுII

வலயம் 'X' ஐச் சேர்ந்த, 34 வயதுடைய நிமால் என்பவனும் ஜனவரி 30, 1995இல் பூச்சிநாசினியை அருந்தி மரணமானான். அவன் கொத்மலையில் வசிக்கும் 8 அங்கத்தவரைக் கொண்ட வறிய குடும்பத்தைச் சேர்ந்தவன். 10 ம் வகுப்பு வரையே படித்திருந்தான். அவர் 1971 ம் ஆண்டளவில் ஜே.வி.பி. வாசிகளுடன் தொடர்பு கொண்டிருந்தவன் என்னுமடிப்படையில் சிறையில் தள்ளப்பட்டான். 1971 தொடக்கம் 1976 வரை சிறைவாசம் அனுபவித்தான். 1976 ல் வெலிக்கடைச் சிறைச்சாலையிலிருந்து மீண்டும் தன் கிராமத்தை அடைந்தபோது கிராமத்தவர்களால் முன்னைய பயங்கரவாதி என்றும் முன்னைய சிறைவாசி என்று வேண்டப்படாதவனாகவே கொள்ளப்பட்டான். அவன் மீதான குற்றப்பதிவினால் அவனால் வேலை ஒன்றினைப் பெறமுடியாது போய்விட்டது.

இந்த சாதகமற்ற சூழ்நிலையில் அனுதாபம் காட்டிய ஒரே ஒரு நபர் மல்லிகா தான். அவளும் வறிய குடும்பத்தைச் சேர்ந்தவள். விரைவில் அவர்களிடையே காதல் மலர்ந்தது. திருமணத்திலும் முடிந்தது. அதன் பின் கொத்மலையை விட்டு நீங்கி வேலைக்காக இடத்திற்கு இடமாக அலைந்தார்கள். ஈற்றில் புதுவாழ்க்கையை ஆரம்பிக்கும் நோக்குடன் மகாவலி குடியேற்றப்பகுதியை அடைந்தனர். ஆயினும் அவர்களின் செல்வாக்கற்ற நிலைமையினால் உரிய காணியைப் பெற முடியாமல் போய்விட்டது. ஆயினும் அப்பகுதியிலேயே சட்ட விரோதமாக ஒரு குடிலை அமைத்துக் கொண்டு குடியேறிவிட்டார்கள். நிமாலும் அன்றாட கூலித்தொழிலாளியாக மாறிவிட்டான். நிமால் வேலைநிமிர்த்தம் நாளின் பெரும் பகுதியை வீட்டிற்கு வெளியே செலவிட்டமையால் மல்லிகாவின் தங்கையை துணைக்கு அழைத்துவந்தார்கள். நிமாலின் நிரந்தரமற்ற மாதாந்த வருமானமான 500/= அவர்களின் உணவிற்கே போதுமானதாயிருக்கவில்லை. ஏனைய குடியேற்றவாசிகளுக்கு வழங்கப்பட்ட உதவிகள் ஒன்றும் இவர்களுக்கு கிடைக்கவில்லை. சிறுவயதிலிருந்தே புகைத்தலுக் கடமையாகவிருந்த நிமால் தற்போது மதுவிற்கும் அடிமையானான். இதனால் அவர்களிடையே அடிக்கடி சண்டைசச்சரவுகள் ஏற்பட்டமையினால் நிமால் இருதடவைகள் தற்கொலைக்கு முயற்சித்துள்ளான். 1984 ம் ஆண்டின் நடுப்பகுதியிலிருந்து நான்காவது மனிதரின் தலையீடும் ஆரம்பமானது. அந்த நான்காவது நபர் 42 வயதுடைய முறைப்படி பட்டப்படிப்பை மேற்கொள்ளாத ஆனால் உள்ளூர் மக்களால் வைத்தியராக கணிக்கப்பட்டவராவார். அவர் திருமணமாயிருந்த போதும் கொத்மலையிலிருக்கும் தன் குடும்பத்தாரிடம் அரிதாகவே விஜயம் செய்தார். நிமாலிற்கும் மல்லிகாவிற்கும் கொத்மலையிலிருந்த போது அறிமுகமில்லாத போதும் தற்போது குடும்ப நண்பனானார். பிரதானமாக இவரின் உதவியினால் மகாவலி குடியேற்ற அதிகாரிகள் இவர்களை வெளியேற்ற எடுத்த நடவடிக்கைகளை எதிர் கொள்ளக் கூடியதாயிருந்தது. இதேவேளையில் மல்லிகாவிற்கும், வைத்திய அதிகாரிக்குமிடையே தொடர்பு உருவாவதை படிப்படியாக உணர்ந்து கொண்டாலும், நிமால் தன் சக்தியற்ற நிலைமையினால் அதை எதிர்க்க முடியாதிருந்தான். இதன் பொருட்டு முன்பிலும் பார்க்க அதிகளவு மதுவருந்த தொடங்கினான். இது மட்டுமன்றி அவனுக்கும்

மைத்துனிக்கும் இடையிலும் தொடர்பு ஏற்பட்டது. இதன் விளைவாக மைத்துனி லதா கர்ப்பமானாள். இது மல்லிகாவிற்கு தெரிய வந்த போது தன் சகோதரியை மீண்டும் தன் தாயார் வீட்டிற்கு அனுப்பி விட்டாள். லதாவின் பிரிவினால் மேலும் பாதிக்கப்பட்டான். மேலும் அவனது மனைவியின் துர்நடத்தை அவனை விரக்தியின் எல்லைக்கே கொண்டு போய்விட்டது. ஒருநாள் அவன்தன் வேலையிலிருந்து முன்னதாகவே வீடு திரும்பியபோது மனைவி வைத்தியரிடம் சென்றுவிட்டதாக அயலவர்கள் கூறினார்கள். அவன் அப்போது அருகிலிருந்த விவசாய மருந்தகத்திற்கு சென்று **M -50** எனும் அதி நச்சுத்தன்மையான பூச்சிநாசினியை வாங்கிக் கொண்டு வைத்தியரை நாடிச் சென்றான். அங்கு தன் மனைவி வைத்தியரிடம் நெருக்கமான நிலையிலிருப்பதை கண்ணுற்றான். அவனின் திடீர் வரவால் அவர்கள் திடுக்குற்றனர். நிமால் தன் மனைவியை திட்டியபடி பூச்சிநாசினியை உட் கொண்டான். இந்தக் கலவரத்தினால் அயலவர்கள் அங்கு சென்று கூடியபோது அவன் ஏற்கனவே இறந்து விட்டிருந்தான்.

## விளக்கவுரை:

கணக்கெடுக்கப்பட்ட பிரதேசத்தில் தற்கொலையே மரணத்திற்கான பொதுவான காரணமாக உள்ளமை இறப்பிற்கும் கொலைகளுக்குமான தடைகள் குறைந்து வருவதையும் காட்டுகிறது. இக்கணக்கெடுப்பின் தரவுகள் முன்னைய மகாவலிதிட்ட கணக்கெடுப்புகளுடன் ஒத்து போவதாக உள்ளது.

தற்கொலை பிரதானமான சாவு முறையாக இருப்பது மட்டுமன்றி இப்பிரதேசத்தில் தோல்வியுற்ற தற்கொலை முயற்சிகளும், தற்கொலை பயமுறுத்தல்களும் அதிகமாக உள்ளது.

மேல் தரப்பட்ட வரலாறுகளின் படியும் நிமால், பிஸ்கோ இருவரும் முன்னே தற்கொலை முயற்சி மேற்கொண்டிருக்கிறார்கள். அத்துடன் பிஸ்கோவின் உறவினர் ஒருவரும் தற்கொலை செய்தமை குறிப்பிடத்தக்கது.

அதாவது சூழலியல் அழுத்தங்களின் பிரதிபலிப்பு பொதுவாக தற்கொலையாகவே அமைகிறது.

மகாவலியின் தற்கொலைகள் நச்சுப்பொருட்கள் இலகுவாக கிடைக்கும் தன்மையுடன் தொடர்புபடுத்துவது தவறாகும். மேல் தரப்பட்ட வரலாறுகள் தற்கொலையை, ஏழ்மை, அதனுடன் தொடர்பான கஷ்டங்கள், சமுதாயத்திலிருந்து ஒதுக்கப்படுதல், தொடர்ச்சியான ஏமாற்றங்கள், நோய், மதுப்பழக்கம், அவமான உணர்வு, அதிகாரமின்மை என்ற யாவற்றினதும் விளைவாக அமைவதை விளக்குகிறது.

அன்பு பிணைப்புகளில் ஏற்படும் பிரச்சினைகளால் உருவாகும் ஏமாற்றம், அவமானம், துன்பம் என்பனவே முக்கிய தூண்டுகோலாக அமைகிறது. ஆனால் மறைமுக காரணம் வாழ்க்கையின் பழைய அனுபவங்களிலேயே தங்கியுள்ளது.

தற்கொலையை ஒரு திடீர் சம்பவமாக கருதுவது தவறாகும். அதேபோல் இப்பிரச்சினை மகாவலி குடியேற்றத்தின் அல்லது புதிய குடியேற்றத்தின் பிரச்சினையாக கருதுவதும் தவறாகும். ஏனெனில் இவ்வரலாறுகள் பிரச்சினைகள் முன்னைய வசிப்பிடங்களிலேயே ஆரம்பமானதை காட்டுகிறது. அண்மையில் மகாவலியில் நடந்த ஒரு சம்பவம் முடிவிற்கு வழிகோலி இருக்கலாமே ஒழிய ஆரம்பம் வேறு ஒரு இடத்தில்தான் அமைந்திருக்கிறது.

உதாரணமாக நிமால் மகாவலிக்கு ஒரு அழையா விருந்தாளியே ஒழிய, மகாவலிக்கு வந்ததன் காரணம் மற்ற இடங்களின் சூழ்நிலை தாங்கமுடியாததே ஆகும்.

மகாவலியில் வாழ்க்கை முறை வழமையான ஏனைய சமுதாயங்களை போன்றதல்ல. இங்கு சமூக தலைவர்கள், மத தலைவர்கள், சப்பிரதாயமான சமூக நிலையங்கள், சாதி பாகுபாடுகள், சமூக நிறுவனங்கள் எதுவும் இல்லை.

வித்தியாசமான நன்கு வேரூன்றிய சமுதாயத்திலிருந்து வந்து குடியேறிகள் இந்த புதிய சட்டத்திட்டங்களுக்கு பழக்கப்பட கஷ்டப்படுகிறார்கள். இந்நிலைமை இங்கு ஏற்படும் திருமண முறிவுகளாலும் இவர்களின் அதிகாரிகளில் தங்கியிருக்கும் இயல்பினாலும் மேலும் மோசமான நிலைக்கு செல்கிறது.

சமூக பிரச்சினைகளிலும் தற்கொலைகளிலும் காதல் விவகாரங்களின் முக்கியத்துவம் நாடாளவியரீதியில் சமூக பிரச்சினை என்பது புரிந்துகொள்ளப்பட வேண்டும்.

காதல் திருமணங்களின் எண்ணிக்கை இலங்கையில் குறிப்பாக மகாவலியில் அதிகரித்து வருவது இவர்களின் சமுதாய தலைவர்கள் இல்லாத தன்மையினால் ஆகும்.

இதன் விளைவாக ஏழைப் பெண்கள் தங்கள் துணையை தேடி அவர்களுடன் உறவை வளர்க்க கஷ்டப்படுகிறார்கள். இங்கு ஏற்படும் ஏமாற்றமும் துன்பமும் பிஸ்கோவுக்கு ஏற்பட்டது போல் தோல்வியிலேயே ஒழுங்கற்ற சமுதாய

பிரச்சினைகளே அவற்றிற்கு ஒரு குறுகியகாலதீர்வாக குடியேறிகளின் முறையற்ற தொடர்புகளுக்கு வழிகோலுகிறது.

இத்தகைய உறவுகளையே (Spencer (1990:186) இலங்கையில் தற்கொலை என்ற கட்டுரையில் குறுகிய இனிமையான அனுபவம் என குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் சில குடியேறிகள் இதனையே 'நரகத்திலும் கொடியது', 'ஒழுங்கற்ற உலகம்', 'கொடுமையான சமுதாயம்' எனவும் விபரிக்கிறார்கள்.

அன்பிற்கு பஞ்சகமான நிலையில் இத்தகைய உறவுகள் ஒரு பாலைவன சோலையாக அமைகிறது. அதனால் இதில் ஏற்படும் தோல்விகள், உண்மையை எதிர்கொள்ள வேண்டிய நிலை என்பன மிகுந்த துன்பகரமாக அமைகின்றன.

பிஸ்கோவின் வரலாறு இதை விளக்குகிறது. நோய்வாய்ப்பட்டு குடும்பத்தாரால் சுமையாக நினைக்கப்பட்ட நிலையில் சரத்தே அவளின் வாழ்க்கையில் ஒரு நம்பிக்கையாக விளங்கினான். கர்ப்பமானபின் அவனால் கைவிடப்பட்டதும் அவளை பொறுத்தவரையில் வாழ்க்கையே அர்த்தமில்லாததாக போய்விட்டது.

தற்கொலைக்கு காரணமான திருமணபந்த பிரச்சினைகள் ஏழ்மையுடன் தொடர்கதையாக காணப்படுகிறது. நிமாலின் வரலாற்றில் நிமாலின் நிலையற்ற வருமானமே மல்லிகாவை வைத்திய அதிகாரியுடன் தொடர்புகொள்ள வைத்தது. அதாவது இவர்களின் பலவீனமும் அதிகாரிகளின் தன்னடக்கம் இல்லாமையுமே தற்கொலைக்கான காரணங்களுள் முக்கியத்துவம் பெறுகிறது.

நிமால் ஏற்கனவே சமுதாய ஏற்றத் தாழ்வுகளினால் பாதிக்கப்பட்டவனாக இருக்கிறான். அவன் முன்பு JVP உறுப்பினராக இருந்தமை ஒரு மனிதன் எப்படி அரசியல் வன்முறையாளனாக அல்லது தற்கொலை செய்பவனாக வாழ்க்கையின் வெவ்வேறு கட்டங்களில் மாறலாம் என்பதை இது விளக்குகின்றது.

இதேபோல் பிஸ்கோவின் வரலாறு ஆண் பெண்களுக்கிடையிலான ஏற்றத் தாழ்வை விளக்குகின்றது. பிஸ்கோ ஏனைய பெண்களைப் போல் திருமணத்தை அதிகாரத்தின் ஒரு வடிவமாகவும், திருமண முறிவு ஒரு துன்பகரமான முடிவாகவும் எண்ணுகிறார்.

இந்தத் தற்கொலையாளர்கள், அன்புக்குரியவர்களால் ஏமாற்றப்பட்டு துன்புறுவது மட்டுமன்றி, தங்களின் பலவீனத்தையும் தங்கள் கட்டுப்பாட்டுக்கு மீறிய செயல்களையும் எதிர் கொள்கிறார்கள்.

### தற்கொலையும் அரசியல் வன்முறையும்:

தற்கொலையானது போராட்டத்தின் ஓர் அம்சமாக வெவ்வேறு வடிவங்களில் இலங்கையில் அண்மைக் காலங்களில் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. அதாவது விடுதலைப் புலிகள், இராணுவத்தினர், JVP யினர் மூன்று பகுதியினரும் தற்கொலையை ஓர் ஆயுதமாக பயன்படுத்துகிறார்கள்.

குறிப்பாக புலிகளின் மத்தியில் இம்முறை அதிகமாக காணப்படுகிறது. அவர்கள் அனைத்து உறுப்பினருக்கும் சயனைட் குப்பிகளை வழங்கி, கைது செய்யப்பட்டால் உடனடியாக தற்கொலை செய்யுமாறு பணிக்கப்பட்டுள்ளார்கள்.

JVP யினரும் தற்கொலைக்கான அறிகுறியையே வெவ்வேறு சுலோகங்களினால் வெளிப்படுத்தி உள்ளார்கள்.

அதாவது ''தாய்நாடு அல்லது மரணம்'', ''இரத்தத்தை சிந்தி வாழ்க்கையை தியாகம் செய்து தாய்நாட்டை காப்பாற்று'' போன்ற சுலோகங்கள் இதற்கு ஆதாரமாக அமைகிறது. JVPயினர் தமது உறுப்பினர்களை தாய்நாட்டின் மேல் பற்றுடையவர்கள் என்றும், எதிரிகளை தாய்நாட்டிற்கு நம்பிக்கை துரோகம் செய்பவர்களாகவும் விபரிக்கின்றார்கள். இது தற்கொலைகளுடன் சம்பந்தப்பட்ட அன்பும் வெறுப்பும் அரசியலுடனும் தொடர்புடையது என்பதை காட்டுகிறது.

இத்தகைய போராட்ட இயக்கங்கள் இளைஞர் மத்தியில் தற்கொலைக்கான உந்துதல் இருப்பதை காட்டுவது மட்டுமன்றி, அவற்றை குரூரமான தமது போராட்டங்களுக்கும் பயன்படுத்துகின்றார்கள். இதன் காரணமாகவே 1987 - 1989 வரையான JVP மீளெழுச்சியை ஓர் அவதானி, ஒரு தலைமுறையின் தற்கொலைகள் என விபரித்துள்ளார். JVP, LTTE இரண்டுமே உறுப்பினர்களின் உள்ளத்திலுள்ள முரண்பாடுகளை வன்முறையாக மாற்றுவதில் வெற்றி கண்டுள்ளன.

ஆங்கில மூலம் தமிழில் : **ஜெ.ஜெயகுமாரி, தே.பாமினி, பூ.கவிதாம்பிகா, பா. தாமரைச் செல்வி**

**(பல் மருத்துவபீடம்)**

# என்னை நான் மீட்க ....

ஏ. குபேரன், முதலாம் வருடம், பொறியியற் பீடம்

என்னுள் நான் மிருகமாய்
ஏதோ ஓர் உணர்வு
என்னுள் உறுத்தி
என்னை விரட்ட

நானும் மனிதனென
நிறுவ முயல்வதற்காய்

ஏறி மேடைதனில்
போலி நடிப்பேற்று
புதுவேடம் அதிற் பூண்டு
மனிதனை மீட்பதாய்
கூசாமல் அங்குரைத்து
மீட்கவும் முனைந்தவேளை

மனிதனின் பொருள்புரியா
கோர மிருகமெல்லாம்
மனிதனை மீட்பதாய்
கங்கணம் கட்டிவிட்டால்
மனிதனின் கதி - என்னாகும்?
என்றென்னைக் கேலியுடன்
கேட்டு நகைப்பது வாய்
உணர்வுகள் உள் உறுத்த

குழப்பம் - பின்
தெளிவு
இது உண்மையென
பிறர்க்கு மட்டும் புத்தி சொல்லும்
என் ''மலட்டு ஞான'' மதை
நானே எனக்கேற்று
மனதை மாறித்(து) என்னுள்
வினாவிய போதினிலே .....

என்னுள் மனிதம்
எத்தனை வீதமென
என்னுள் வினாவியே
என்னை நான் மீட்க
சமூகம் தான் மீளும்
உண்மையை நான் உணர
உன்னைத் திருத்திக்கொள்
சமூகம் திருந்திவிடும்
என்ற முதுஞானி
வார்த்தைகள் என் காதுகளில்
மறைவாக்காய் .........!

## காலம் உனக்கொரு வாழ்வு தரும்

ரமேஷ் அலோஷியஸ், இறுதி வருடம், பொறியியல் பீடம்

*சாரங்கன் நகத்தைக் கொறித்துக் கொண்டிருந்தான். பெரிய பெரிய விஞ்ஞானிகள் எல்லாம் இப்படித்தான், தமக்கு பிரச்சினை என்று வரும்போது செய்வார்களாம். யாரோ ஆசிரியர் வகுப்பறையில் சொன்னது ஞாபகம் வர தொடங்கியதுதான் இந்த நகம் கொறிக்கும் வேலை. ஆனால் இன்னும் ஒரு முடிவுக்கு வர முடியவில்லை. அப்படி என்னதான் அவனுக்கு பிரச்சினை? ஒன்றல்ல இரண்டல்ல, பல. இன்னும் 24 மணி நேரத்தில் சாதித்து முடிக்க வேண்டும். நாளை காலை 12 மணிக்குள் ஒப்படை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்ற கடைசி எச்சரிக்கை இப்போதுதான் போதனாசிரியரால் சொல்லப்பட்டது. இன்னும் தலைப்பு கூட போடப்படவில்லை. மாலை இரண்டுமணிக்கு, அண்மையில் செய்து முடித்த ஆய்வு சம்பந்தமான நேர்முகம் -அதுவும் அந்த ''கடி'' பேராசிரியரிடம். காலையில் கணிதபாட பரீட்சை - தங்களின் வரவு கட்டாயம் எதிர்பார்க்கப்படுகிறது என்று வினயமாக கூறினார் கணிதப் பேராசிரியர். இவற்றுக்கெல்லாம் உடன் தயார் செய்ய வேண்டும். இவை யெல்லாவற்றையும் விட மேலான ஒன்று நிச்சயம் சாதிக்க வேண்டும். அதுதான் இன்று புதிதாக வந்திருக்கும் கனிஷ்ட மாணவிகளின் ''முதல் தரிசனம்'' பெற்ற பெருமையை தேடிக்கொள்ள வேண்டும். எல்லாவற்றையும் யோசிக்க அவனுக்கு தலை சுற்றுகிறது. ''எங்கே நிம்மதி அங்கே எனக்கு உயர்கல்வி கற்க வசதி வேண்டும்'' பாடினான் சாரங்கன்.*

*மேற்கூறிய உதாரணம் பல்கலைக்கழகத்தில் பயிலும் எம்மில் பலருக்கு ஏற்படும் ஒரு நாளாந்த நிகழ்வு. இந்தப் பிரச்சினைக்கு எம்மால் தீர்வு காண முடியுமா? ஆம், நிச்சயமாக முடியும். சரியான அணுகுமுறையும் திட்டமிட்ட நேர ஒதுக்கீடும் வெற்றிக்கனியை பறிக்க அதன் பாதையில் வீறு நடை போடவைக்கும்.*

*எந்த ஒரு மனிதனுக்கும் அவனுடைய செயற்றிறன் அவன் எவ்வளவுக்கு எவ்வளவு தன்னை வருத்திக் கொள்கிறானோ அவளவுக்கவ்வளவு வளர்ச்சியடையும். ஆனால் அந்த ''தன் மெய் உருத்தல்'' அதன் எல்லையை தாண்டி விட்டால் அவன் செயற்றிறன் சடுதியாக மழுங்கிக் கொண்டு போகும் தன்மையே காணப்படுகிறது. இது ஏன்? ஒருவன் தன் முக்கிய வேலைகளை (உதாரணமாக பரீட்சைக்குப் படித்தல்) பின்போட்டுக் கொண்டு சென்று கடைசியில், மிக குறுகிய காலத்தில் தன் வேலைப்பழுவை அதிகரிக்கும் போது, அது பின்வரும் முக்கிய இரண்டு காரணிகளினால் சடுதியான செயற்றிறன் மழுங்கடிப்புக்கு உள்ளாகிறது.*

- *மிக விரைவில் செய்ய வேண்டும் என்ற அவசரத்தன்மை எமது சிந்தித்து சிறந்த முடிவெடுக்கும் ஆற்றலையும் நிதானத்தையும் சிதறடிக்கிறது.*
- *செய்த தவறுகளை நிவர்த்தி செய்து சரியான பாதைக்கு வர மேலதிக நேரம் தேவைப்படுகிறது.*

*எவ்வாறு இப்படியான ஒரு துர் அதிஷ்ட நிலையில் இருந்து நாம் மீண்டு கொள்ளலாம் என சற்று சிந்தித்துப் பார்ப்போம்.*

*முதலில் நாம் எமது செயற்பாடுகளையும் அவை தொடர்பான நடவடிக்கைகளையும் திட்டமிட்ட நேர ஒதுக்கீடு மூலம் ஒருங்கிணைக்க வேண்டும். இவ் ஒருங்கிணைப்புக்கு அவசியமானவை யாவை?*

- *எமது செயற்பாடுகள் தொடர்பான நடவடிக்கைகளை சரியாகத் திட்டமிடல்.*
- *அவற்றை செயற்படுத்துவதற்கான பொருத்தமான காலத்தை ஒதுக்குதல் -நேர முகாமைத்துவம்*

*அடுத்த கேள்வி இந்த திட்டமிடலை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது? இதன் போது எழும் சிக்கல்கள் யாவை? அவற்றை எவ்வாறு எதிர் கொள்ளுதல்?*

*முதலில் நாம் எமது குறிக்கோளை அல்லது லட்சியத்தை (நீண்டகால மற்றும் குறுங்கால) தெளிவாக்கிக் கொள்ள வேண்டும். இவற்றை அடைவதற்கு குறிப்பிட்ட ஒரு காலக்கெடுவை தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.*

*இந்தக் காலக்கெடுவிற்கு ஏற்றபடி எம்முடைய லட்சியங்கள் ஒவ்வொன்றையும் அடைய காய்களை நகர்த்தும் திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும். இத்தகைய திட்டமிடலின் போது அது தொடர்பாக நாம் தொடர்பு வைத்துக்*

கொள்ள வேண்டியவர்களையும் மனதில் வைத்து திட்டமிடல் மிக முக்கியமானதொன்றாகும். ஏனெனில் இவர்களுடனான தொடர்பாடல் எம்முடைய லட்சிய நோக்கில் மிக முக்கியமானவையாக அமையலாம். இறுதியாக இவை அனைத்திற்கும் எழுத்துருக் கொடுத்து அவை எவ்வாறு உருப்பெறுகின்றன என்பதை உன்னிப்பாக அவதானித்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு எமது திட்டம் தீட்டும் பணி முடிந்தாலும் அவற்றை நடைமுறைப்படுத்துகையில் பல்வேறு சிக்கல்கள் எழலாம். அசாதாரண நிகழ்வுகள் (உதாரணமாக பண கஷ்டம்) குறிக்கோளை அடைவதில் முட்டுக்கட்டைகளை ஏற்படுத்தும். இவற்றிலிருந்து தப்பிப்பது அல்லது தாண்டிச் செல்வது எவ்வாறு என்பதை அடுத்துப் பார்ப்போம்.

ஒரு குறிப்பிட்ட லட்சியத்தை அடைகையில் எமது திட்டம் தீட்டும் பணி சில மாதிரிகளை **(models)** கருத்தில் கொண்டே உருவாகிறது. எல்லாருக்கும் அப்பிள் பழம் தலையில் விழுவதும் இல்லை. எல்லாரும் புதிது புதிதாக கண்டுபிடிப்பதும் இல்லை. சில முன் மாதிரியான லட்சியவாதிகளின் வாழ்க்கைப் போக்கை மனதில் கொண்டே எமக்கு ஒரு பாணியை உருவாக்குகிறோம். உதாரணமாக பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை எடுத்தல் என்பது முன்னரைவிட சிறந்த பெறுபேறுகள் பெற்ற நண்பர்கள் எவ்வாறு படித்தார் என்பதை ஆராய்ந்து அதன்படி திட்டமிட்டு படிக்க முற்பட்டதாக அமையலாம். ஆனால் இதனை நடைமுறைப்படுத்துகையில் நண்பரின் கால எல்லை நமக்கு ஒவ்வாததாக அமையலாம். இதனை தவிர்க்க நாம் நமது கால எல்லையை சற்று முன்னோக்கி நகர்த்தினால், இடையில் வரும் தடைகளினால் உருவாகும் தளர்ச்சியை ஈடு செய்ய உதவியாக இருக்கும். நீண்டகால நோக்கங்களை அடிக்கடி மீளாய்வு செய்தல், அவற்றின் உசாத்துணை நோக்குகள் அடையப்பட்டுள்ளனவா என்பவற்றை அடிக்கடி மீளாய்வு செய்தல் தேவையான மேலதிக நடவடிக்கைகளை எடுக்க வசதியாக இருக்கும். குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட வேலையை செய்ய பயிற்சியெடுத்தல் இலக்குகளை இலகுவாக அடைய வழிவகுக்கும். அனாவசியமற்ற கேளிக்கை நிகழ்வுகளிலும் மற்றும் உரையாடல்களிலும் நேரத்தை செலவிடுவதை முடிந்தவரையில் குறைத்துக் கொள்ள வேண்டும். எமது எல்லா நடவடிக்கைகளிலும் சமநிலைப்படுத்தப்பட்ட ஒரு தன்மை இருத்தல் முக்கியமான ஒரு விடையமாகும்.

மேற்கூறிய எல்லா விடயங்களும் திட்டமிடலின் போது பிரச்சினை மிகுந்தவையாக தோற்றமளிக்காது. ஆனால் அவற்றை செயற்படுத்துகையில் ஏற்படும் நடைமுறைச்சிக்கல்களை எவ்வாறு மேற்கொள்கிறோம். செயற்திறன் பற்றிய மீளாய்வு எவ்வாறு செய்யப்படுகிறது. மற்றும் நாம் எப்படிப்பட்ட ஓர் சமநிலைப்படுத்தப்பட்ட வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கிறோம் (வாழ்க்கை என்பது வேலை, விளையாட்டு, அன்பு, கடவுள் பக்தி என்பவற்றில் சமநிலைப்படுத்தப்பட்டு இருப்பின் மட்டுமே முழுமையானதாக இருக்கும்) என்பதிலேயே வாழ்க்கையின் வெற்றி தங்கியுள்ளது. இந்தத் தன்மையை நாம் எம்முள் அவதானிக்க கீழ்வரும் சில குறிப்புகள் உதவியாக இருக்கும்.

- எமது நலன்களில் லட்சியத்தில் ஈடுபாடுள்ள ஊக்கமளிக்கிற ஒரு குடும்பப்பின்னணி இருக்கின்றதா?
- ஓய்வுநேரத்தை செலவு செய்ய எனக்கு ஒரு பொழுதுபோக்கு இருக்கின்றதா?
- ஏதாவது ஓர் சமூக அமைப்பில் நான் அங்கத்தவராக இருக்கின்றேனா?
- தனியாக இருந்து தியானம் செய்வதில் சில நிமிடங்களையாவது செலவிடுகிறேனா?
- ஏதாவது ஒரு விளையாட்டில் அல்லது, உடற்பயிற்சியில் ஈடுபடுகிறேனா?
- திட்டமிட்டு நேரத்தை செலவழிக்குப் பழக்கத்தை கொண்டிருக்கிறேனா?
- சிகரெட் புகைத்தல், கவலைகளை மறப்பதற்காக மதுபானம் பாவித்தல் போன்ற பழக்கங்கள் என்னிடம் இருக்கின்றதா?

இப்படிப்பட்ட மீளாய்வுகளை அடிக்கடி மேற்கொள்ளுதல் எமது ''இன்றைய நிலை'' யினை அறிந்து அதற்கேற்ப எமது செயற்பாடுகளை மாற்றியமைத்து வாழ்வோமாகில் கடைசிநேரத்தில் கடவுள்விட்ட வழி நடப்பது நடக்கட்டும் என்ற தேவையற்ற நிலையில் இருந்து நிச்சயமாக விடுபடலாம்.

**''தெய்வத்தால் ஆகாதெனினும் -முயற்சி**
**தன்மெய்வருத்தக் உதவி தரும்''**

*"முதியோர் கலாசாரத்தில் தமக்கு மதிப்பளிக்கப் படுவதில்லை என இளையோர் அடிக்கடி மனச் சோர்வடைகின்றனர். சில சந்தர்ப்பங்களில் தாம் புறக்கணிக்கப்படுவதாக உண்மையாகவே அவர்கள் உணர்கின்றனர். இந்நிலை தொடர்ந்தால் முதியோர் பண்பாட்டிற்குள் அடங்காதவர்களாக இளையோர் உருவாகக் கூடும்."*

## உளவியல் நோக்கில் இளையோர் பிரச்சினைகள்

எம்.எஸ்.எம்.அனஸ், மெய்யியல் துறை

மனித வளர்ச்சிபற்றிய ஆய்வில் இன்று இளையோர் (Adolescent) உளவியல் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. இளையோர் பற்றிய ஆய்வு அண்மைக்காலத்தில் உருவானதாகும். 1800 களில் இளையோர் முதியோர் என்ற வேறுபாடு இருக்கவில்லை. குழந்தைப்பருவம் முடிவடைந்ததும் முதியோர் பருவத் (Adalthood) திற்கு முக்கியத்துவம் தருவது பழைய மரபாகும். எனினும் கைத் தொழிற்புரட்சி கொண்டுவந்த மாற்றங்கள் மனிதனில் புதிய ஆற்றல்களை எதிர்பார்த்தன. குழந்தைப் பருவத்திற்கும் முதியோர் பருவத்திற்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்கு முக்கியத்துவம் அளிக்கும் தேவை இதனால் ஏற்பட்டது.

பல்வேறு தொழில்துறைகளில் ஈடுபடக்கூடிய திறன்கள் கொண்டவர்களை உருவாக்க இக்கால இடைவெளி பயன்படுத்தப்பட்டது. கட்டாயக்கல்வியும், தொழில் நுட்பப்பயிற்சிகளும் கல்வித்துறை நிதி உதவிகளும் தரப்பட்டு இத்தேவை நிறைவேற்றத்திற்கு இளைஞர் தயார் செய்யப்பட்டனர்.

இளையோர் பருவத்தை குழந்தைப் பருவத்திற்கும் முதியோர் பருவத்திற்கும் இடைப்பட்ட காலப்பகுதி எனப் பொதுவாகக் கூறலாம். மேற்கத்தியமல்லாத பண்பாடுகளில் குழந்தைப்பருவத்திலிருந்து முதியோர் பருவத்திற்கு மாறும் கட்டம் முக்கியத்துவத்துக்குரியதாகக் கருதப்படுவதில்லை. எனவே இளையோர் என்பது சர்வப்பொதுவான அங்கீகாரமுள்ள கோட்பாடு அல்ல. ஆனால் மேற்கத்திய பண்பாட்டிலும் அதனோடிணைந்த பண்பாடுகளிலும் இது ஒரு விசேட தோற்றப்பாடாகக் கொள்ளப்படுகிறது.

### மாற்றம்

இளையோர் பருவம் ஆண்பெண் இருபாலாரினதும் பூப்புப்பருவத்திற் (Puberty) தொடங்குகின்றது. இளையோர் பருவத்தின் முக்கிய பண்பு அதில் நிகழும் மாற்றமே எனக் கொண்டால் அதன் தொடக்கமாகிய பூப்புப் பருவமே ஒரு மாற்றத்துடன்தான் ஆரம்பமாகிறது. இதுவரையுமிருந்த உடலியல் அம்சங்களிலும் கட்டமைப்பிலும் ஏற்படும் மாற்றத்தை பூப்படைதல் அடையாளப்படுத்துகிறது. சந்ததிகளை உருவாக்கக்கூடிய உடலியல் மாற்றங்களை ஆண்களும் பெண்களும் பெற்றுக் கொள்கின்றனர். குழந்தை, உயிரியல் ரீதியில் பெற்றோராகும் தகுதியைப் பெறுகிறது என இதனைச் சுருக்கமாகக் கூறலாம். இங்கு நிகழ்வது உடலியல்ரீதியான மாற்றங்கள் மட்டுமல்ல உளவியல், சமூகவியல் ரீதியான தாக்கங்கள் இதில் ஒன்று கலந்துள்ளன.

பூப்புப்பருவம் 12-13 வயதில் தொடங்குவதிலிருந்து இளமைப்பருவத் (Adolescence)தின் ஆரம்பத்தைத் தொடர்புபடுத்துவர். இளமைப் பருவம் சுமார் 19-20 வயதுகள் வரை நீடிக்கிறது. ஒரு தனிநபரின் வாழ்வில் இளையோர் பருவமானது ஒருவனைக் குழந்தை என்றோ முதியவன் என்றோ கருத இயலாத காலப்பகுதியைக்

குறிக்கிறது. இளையோர் பருவத்தை முதியோர் பருவத்திற்கு இடைமாறும் காலம் **(Transition)** எனக் கூறலாம். இவ்விடைமாறும் காலத்தில் உடலியல் மாற்றங்கள் மனவெழுச்சி மாறுதல்கள், பால், சமூக மாறுதல்கள், கல்வி, அறிவு மாறுதல்கள் எனப்பல வகை உளமாறுதல்களுக்கு ஒரு தனிநபர் முகங்கொடுக்க வேண்டியுள்ளது.

இடைமாறும் காலம் என்றால் அதன் அர்த்தம் மாற்றமாகும். மாற்றங்கள் இலகுவானதாயிருப்பதில்லை. பிரச்சினைகளின் கொந்தளிப்பு மாற்றத்துடன் இணைந்திருப்பதாகும். மாற்றங்கள் ஏற்படும் போது மாற்றத்திற்கு ஏற்றதான தகவமைப்பு **(Adjustment)** தேவைப்படுகிறது. பூப்படைந்ததின் பின்னர் குழந்தையின் தேவைகளில் மேலும் புதிய அம்சங்கள் சேர்கின்றன. எதிர்ப்பாலுடனான ஈர்ப்பு புதிய பிரச்சினைகளைத் தோற்றுவிக்கின்றது. அவன் அல்லது அவள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இதுவரை தான் இருந்த குழந்தை ஸ்தானத்தைத் தொடரமுடியாத நிலை ஏற்படுகிறது. இப்போது சமூகமும் இவர்களிடம் மாறுபட்ட செயல்களை எதிர்பார்க்கிறது. இப்புதிய சூழ்நிலைக்கு இசைவாகவோ எதிராகவோ தம்மைத் தயார்படுத்த வேண்டிய நிலையில் இளையோர் உள்ளனர்.

## குமுறல்

இளையோர் உளவியலின் முன்னோடியான ஸ்டேன்லி ஹோல் **(Stanley Hall)** இளமைப் பருவம் கற்பனை இலட்சியங்களினாலும் பாலியல் உந்துதல்களினாலும் சூழப்பட்ட பிரச்சினைக்குரிய பருவம் என வர்ணிக்கிறார். இவர் இளமைப் பருவத்தை பரிணாமவாதத்துடன் தொடர்படுத்தி ஆராய்ந்துள்ளார். மனிதனின் ஆரம்ப காலப்பகுதி குறிப்பாக பாலப்பருவத்திலிருந்து 12 வயதுவரையிலுமான பகுதியை மனித நாகரிகத்தின் திருத்தமற்ற காட்டுவாசி **(Barbarism)** நிலையுடன் ஒப்பிடுகிறார். ஹோலின் கருத்துப்படி ஒரு தனிநபரின் பரிணாமவளர்ச்சியில் இளமைப் பருவம் ஒரு முக்கிய கட்டமாகும். பரிணாம வளர்ச்சிப்படிகளில் நாகரிகக்கட்டம் முதிர்ச்சியுடையதென்று கருதப்படுமாயின் தனிநபரின் இளமைப்பருவம் அத்தகையதொன்றாகும். உண்மையான 'தனிநபர் தன்மை' இளையோர் கட்டத்திலேயே உருவாவதாக ஹோல் கருதுகிறார். பூப்புப்பருவத்திற்கு ஒருவன் காலடி எடுத்து வைப்பதிலிருந்து முதிர்ச்சிப் பருவத்தை **(Adalthood)** அடையும்வரை அல்லது பெரும்பாலும் 25 வயது வரை இளமைப்பருவத்திற்குரிய காலப்பகுதி நீடிக்கிறது என்பது ஹோலின் கருத்து.

ஒழுங்கின்மையும் போராட்டங்களும் விரோதங்களும் இளமைப்பருவத்தைச் சூழ்ந்துள்ளன. இவற்றினூடாகத்தான் தனிநபர் அடுத்த உயர்மட்டத்திற்கு வந்து சேர்கிறான். எளிமையும் பராமரிப்பும் பாதுகாப்பும் நிறைந்த குழந்தைப் பருவத்தைக் கடந்த பின்னர் குமுறும் கடலில் திசை தெரியாத நிலையில் இளைஞன் விடப்படுகிறான் என ஹோல் குறிப்பிடுகிறார். இளமைப்பருவம் என்பது அவரது கருத்தில் 'குமுறலும் அழுத்தமும்'' **(Strom and Stress)** மிக்க காலப்பகுதியாகும். ஹோலின் இக்கருத்திற்கு விமர்சனங்கள் உண்டெனினும் உளவியலாளர்கள் மத்தியில் இதற்கு அங்கீகாரமும் உண்டு. சில உளவியல் நிபுணர்கள் இப்பருவம் அழுத்தமிக்க காலப்பகுதி என்பதை ஆய்வுகளின் மூலம் காட்டியுள்ளனர். ஏக்கமும், நிராசையும் மனக்குழப்பமும் நிறைந்த காலப்பகுதியாக இதனை அவர்கள் வர்ணிக்கின்றனர். பெற்றாருடன் முரண்பாடு, தன்னைப்பற்றிய கவலை, கல்வி, தொழில், எதிர்காலம் பற்றிய கவலை ஆகியன சூழ்ந்துள்ள காலப்பகுதி இதுவென்றும் அவர்கள் கூறுகின்றனர்.

இளமைப் பருவத்தின் குமுறல்களும் அழுத்தங்களும் அந்தக் கட்டத்திற்குரிய இயல்பான தோற்றப்பாடா அல்லது பண்பாடுகள் அவன்மீது அல்லது அவள்மீது சுமத்தும் தடைகளும் வரம்புகளும்தான் அவனில் அல்லது அவளில் இந்த நிலையைத் தோற்றுவிக்கின்றனவா என்பது கவனத்திற் கொள்ள வேண்டிய கேள்வியாகும். பழங்குடிப் பண்பாடுகளை ஆராய்வோர் அங்கு இளமைப் பருவம் 'குமுறலும் அழுத்தமும்' கொண்டதாக இல்லை என்று சுட்டிக் காட்டுகின்றனர். சுய ஆளுமையைத் தகவமைத்துக் கொள்வதற்காக, தீவிரமான பிரச்சினைகள் தலைதூக்கும் போது பெரும்பாலான இளைஞர்கள் அவற்றுடன் போரிடுவதில்லை என சில உளவியலாளர்கள் கூறுகின்றனர். இளமைப் பருவத்தினர் எதிர் கொள்ளவிருக்கும் பிரச்சினைகளுக்கு ஏற்றவாறு இளையோரின் உளநிலை சாதகமாகவோ பாதகமாகவோ அமையலாம் என்பது இவர்கள் கருத்து.

எவ்வாறெனினும் மாற்றத்திற்கிலக்காகும் இப்பருவத்திற்குரிய தீவிரத்தன்மைகளைக் கருதாதிருக்க முடியாது. 'வளர்தல் எப்போதுமே பிரச்சினைக்குரியதாகும்' ஒவ்வொரு கலாசாரமும் குழந்தைப்பருவம் கடந்த பின்னர் தனிநபரில் ஒரு மாற்றத்தைக் கோருகின்றன. ஆனால் அவனது புதிய கற்பனை உலகமும், மனவெழுச்சிகளும் பாலியல் அவாக்களும் இக்கோரிக்கைகளுக்கு இலகுவாய் அவனைத் தலைசாய்க்க விடுவதில்லை. எதிர்ப்பாலின்

மீது அவனது அவா அதிகரிக்கிறது. சமூகப் பிரச்சினைகளில் அவனது கேள்விகள் தீவிரமாய்க் கிளர்கிறது. சமூக வாழ்க்கைமுறையும், பண்பாட்டுப் பெறுமானங்களும், கல்விநிலையங்களும், சமயங்களும் இளமைப் பருவத்தினனை சமநிலையில் வைத்திருக்க முயல்கின்றன.

## தலைமுறை இடைவெளி

ஒவ்வொரு தலைமுறையும் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டதாகும். கல்வி, அறிவு, நாகரிகம், பாணி, சொற்பிரயோகம், போன்ற அனைத்தும் தலைமுறை இடைவெளிக்குள்ளாகின்றன. மனப்பாங்கிலும் பார்வைகளிலும் ஏன் பழக்கவழக்கங்களிலும் தலைமுறை இடைவெளி, வேறுபாட்டைக் கொண்டிருக்கலாம். 18 வயது மகன் அல்லது மகள் பெற்றாருக்குத் தலைமுறை இடைவெளியின் சின்னம்தான். பழக்கவழக்கங்கள், மனப் பாங்குகள், கல்விப் பிரச்சினைகள், பாலியல் தூண்டல்கள் என்று இத்தியாதி விடயங்கள் தொடர்பாக பெற்றோருக்கும் இளையோருக்குமிடையில் நெருக்கடிகள் அல்லது மோதல்கள் ஏற்படுகின்றன. பெற்றோர் குழந்தை மோதல் **(Conflict)** தவிர்க்க முடியாத ஒன்றென சில உளவியலாளர் கருதுகின்றனர். இந்த மோதலால் தமது பிள்ளைகள் தம்மைவிட்டுப் பிரிந்து செல்வதாகவோ அல்லது பிள்ளைகள் தம்மை நிராகரிப்பதாகவோ பெற்றோர்கள் கவலையடைகின்றனர். எனினும் பிள்ளை வளர்ப்பின் பூர்த்தி பிள்ளை, பெற்றாரைப் பிரிந்து தனித்து வாழ்வதிலேயே உள்ளதென்பதை பெற்றார் ஏற்றுக்கொண்டால் இம்மோதல் அதற்கான ஆயத்தத்தையே குறிக்கிறது. மோதல்களினூடாகத் தனது சுதந்திரத்தை மென்மையாகவோ தீவிரமாகவோ தன் பெற்றாருக்கு அவன் தெரியப்படுத்துகிறான்.

சிக்மன்ட் புரொய்டின் உளப்பகுப்பாய்வுக் கொள்கை **(Theory of Psychoanalysis)** பெற்றார் இளையோர் மோதல் தவிர்க்க முடியாதது மட்டுமல்ல தனிநபரின் சுதந்திரத்திற்கும் அக **(Self)** வளர்ச்சிக்கும் இது அவசியம் எனக் கூறுகிறது. இத்தகைய மோதல்களின் ஊடாக ஒழுக்கப் பெறுமானங்கள், மரபுகள், நம்பிக்கைகள் பற்றி சுயமாகவும் சுதந்திரமாகவும் சோதனை செய்ய இளையோருக்கு சந்தர்ப்பங்கள் ஏற்படுவதாக உளப்பகுப்பாய்வாளர் கருதுகின்றனர்.

### சுயஅடையாளம்

எரிக் எரிக்ஸன் **(Erik Erikson)** தனக்குரிய தனித்துவத்தை அல்லது சுய அடையாளத்தை **(Personal Identity)** த்தேடும் பருவம் என இளமைப் பருவத்தை வரையறுக்கிறார். மனிதன் என்றவகையில் இளையோர் தொடர்ச்சியாகப் பல கட்டங்களைக் கடந்து வந்துள்ளனர். ஒவ்வொரு கட்டத்திற்கும் அவற்றிற்கே உரிய சவாலும் இலக்குகளும் உள்ளன. குழந்தைப்பருவத்திற்கெனச் சில சவால்களும் இலக்குகளும் உள்ளன. குழந்தைப் பருவத்தில் அப்பருவத்திற்குரிய இலக்குகளை வெற்றி கொண்டால் அடுத்த பருவத்திற்குரிய இலக்குகளை வெற்றி கொள்ள அவன் தகுதி பெறுகிறான். தோல்வியுற்றால் அடுத்த பருவத்தின் இலக்கினை வெற்றி கொள்வதில் தடங்கல்களுக்குள்ளாகிறான். (எரிக்ஸன்). இதன் அர்த்தம் முந்திய பருவத்திற்குரிய சவால்களை வெற்றிகொண்டவர்களாகச் சிலர் இளமைப்பருவத்திற் காலடி எடுத்து வைக்கின்றனர். சிலர் பிரச்சினைகளை எதிர்நோக்கியவர்களாகக் காலடி எடுத்துவைக்கின்றனர். இளையோரில் ஆளுமைச் சிக்கல்கள் எழ இந்நிலை காரணமாகலாம்.

ஒரு தனிநபர் குழந்தைப் பருவத்தில் அடிப்படை நம்பிக்கையைப் பெற்றுக் கொள்கிறான். பாதுகாப்பும், பெற்றார் பராமரிப்பும் சுமூகமாக அவனுக்குக் கிடைக்கின்றன. 'நான் நல்ல குழந்தை' பெற்றோர் கூறுவதையே செய்வேன்' என்று அடிக்கடி கூறி மகிழ்கிறான். பள்ளிக் கூடம் சென்றபின்னரும், வெளிவட்டத்து நண்பர்களையும் ஒப்பார்களையும் அல்லது சக இணையாளர் **(Peer)**களையும் பெற்றதன் பின்னரும் அவனது இந்தக் கூற்று நிலைத்திருப்பதில்லை. இப்போது அவன் பெற்றோரின் வட்டத்திற்கு அப்பால் உள்ள சக்திகளோடு தொடர்புகொண்டுள்ளான். நண்பர்கள், ஆசிரியர்கள், நடிகர்கள், விளையாட்டு வீரர்கள் போன்றோர் அவன் எண்ணங்களில் செல்வாக்குச் செலுத்துகின்றனர்.

ஒரு தனிநபரின் அக **(self)** வளர்ச்சியில் இத்தகைய மாற்றங்கள் அதிகத் தொடர்புகளைக் கொண்டுள்ளன. தனிநபர் ஒருவரின் அக வளர்ச்சி அவரின் வாழ்நாள் முழுக்க நீடித்துச் செல்லக்கூடியதாயினும் 'இளமைப்பருவம்' அகவளர்ச்சிக்குரிய பிரதான காலப்பகுதி என உளவியல் கருதுகிறது. இப்பருவம் தாக்கமான, தீவிரமான, நுண்மையான இயல்புகளைக் கொண்ட காலப்பகுதியாகும். எல்லா விடயங்களிலும் இளையோர் சுதந்திரத்தை வற்புறுத்துகின்றனர். தீர்மானங்கள் எடுக்கும் சுதந்திரம், நண்பர்களையும் உறவுகளையும் உருவாக்கவோ

நிராகரிக்கவோ உள்ள சுதந்திரம் போன்றவற்றை அவன் தீவிரமாகச் செயல்படுத்த விரும்புகிறான். இளையோரின் அகவளர்ச்சியில் இவையும் செல்வாக்குச் செலுத்துகின்றன. ''இவை எல்லாவற்றையும் தொகுத்து ஒன்றாக்கும் காலப்பகுதிதான் இளமைப்பருவம்'' என எரிக்ஸன் கூறுகிறார்.

இக்காலப்பகுதியில் உறுதியானதும் ஏற்றுக் கொள்ளக்கூடியதுமான அகக்கருத்தை **(self concept)** உருவாக்க இளைஞர் முயல்கின்றனர். இது அவனது சுயஅடையாளத்தை அல்லது தனித்துவத்தை உருவாக்கும் பிரயத்தனத்தின் பிரதான செயற்பாடாக அமைகிறது. இளையோரின் பெறுமானங்கள், ஆற்றல்கள், விருப்பார்வங்கள், நம்பிக்கைகள் என்பனவும் அவனது சுயஅடையாளத்தை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. எனினும் இது ஒரு சிக்கலான செயற்பாடாகும். இப்போது அவனுக்குள் பல புதிய வளர்ச்சிகள், மாற்றங்கள், போக்குகள் நிகழ்ந்துள்ளன. வழமையான வழிகளிலன்றி அவன் வேறுவிதமாகச் செயற்பட இவை அவனுக்குத் தூண்டுதல்கள் அளிக்கின்றன. இப்பருவத்திற்கே உரிய தீவிரமான மனவெழுச்சிகள் இந்தநிலையை இன்னும் மோசமடையச் செய்யக்கூடும். இதனால், அவனது தனித்துவத்தை நோக்கிய சீரான ஆவல்பூர்த்தி சிதைந்து போவது தவிர்க்க முடியாததாகலாம். அதாவது தனது தனித்துவத்தை நேர்கணியமாக நிலைநாட்டுவதில் அவன் தோல்வி காண்கிறான். இது ஒரு சிக்கல் நிலையாகும். இது 'சுய அடையாளக் குழப்ப நிலையை' **(Identity Confusion)** உருவாக்குவதாக எரிக்ஸனின் உளவியல் கூறுகிறது.

பெற்றாருடனும் ஒப்பாருடனுமுள்ள தொடர்புகள் தனித்துவத்தைத் தேடும் முயற்சியில் இளையோனுக்குப் பெரும் சிக்கலைத் தோற்றுவிக்கின்றன. இவற்றை அவன் சமாளிக்க வேண்டியுள்ளது. பெற்றோருடன் ஒரு தனிநபருக்குள்ள தொடர்பு வாழ்நாள் முழுக்க ஒரு சமமானதாக இருப்பதில்லை. அது மாற்றமடைகிறது. பதின் வயதுக்காலத்தில் **(Teen-age Years)** இம்மாற்றம் ஒரு பிரச்சினை மிகுந்த தோற்றத்தைப் பெறுகிறது. பெற்றோரின் செல்வாக்கிற்கும் ஒப்பாரின் செல்வாக்கிற்குமிடையில் மோதல் உருவாகும் காலப்பகுதி இதுவாகும். பிள்ளை மீதான பெற்றோரின் செல்வாக்கு ஒப்பாரினால் அல்லது சக இணையாளரினால் தடைக்குள்ளாகிறது. பெற்றாரின் கருத்துக்களை ஏற்பதற்கும் மறுப்பதற்கும் இளையோர் ஒப்பாரின் கருத்துக்களை நாடுகின்றனர். குழந்தைமீது இதுவரை காலம் இருந்த செல்வாக்கின் இடத்தை ஒப்பார் மாற்றியமைக்கின்றனர். இதனால் பெற்றோருக்கும் ஒப்பாருக்குமிடையில் மோதல் உருவாக இடமேற்படுகிறது. ஒழுக்கம், மரபு, பழக்கவழக்கம் போன்ற விடயங்களில் பொதுவாகப் பெற்றாருக்கும் ஒப்பாருக்குமிடையில் இணக்கப்பாடு இருப்பதில்லை. இவை யாவும் இளையோரின் சொந்த ஆளுமையிலும் அவனது சமூகம் சார்ந்த அபிவிருத்தியிலும் மாற்றங்களைத் தோற்றுவிக்கின்றன.

இவை மட்டுமன்றி சடுதியாக நிகழும் உயிரியல் ரீதியான பூப்புமாற்றங்களும் பாலியல் ஆவல்களும் சுய அடையாளத் தேடுதலில் நெருக்கடிகளைத் தோற்றுவிக்கின்றன. தன்னைப் பற்றியும் தனது தொழில்கள் பற்றியும் இளையோர் மிகக் கனதியான முடிவுகளை எடுப்பதாக எரிக்ஸன் கூறுகிறார். நான் யார்? நான் எங்கே செல்கின்றேன்? என்ற அடிப்படைக் கேள்விகளும் அவனுக்குள் எழுந்து அவனை வாட்டுகின்றன. இக் காரணங்களாலும் ஏனைய காரணங்களாலும் இளையோர் பருவம் சுயவிளக்கத்திற்கும் சுயதேர்வுக்குமுரிய பருவமென எரிக்ஸன் கூறுகிறார். புதியபுதிய உடையலங்காரங்களுக்கு மாறுவதும் தலையலங்காரங்களில் அதிக நேரத்தைச் செலவிடுவதும் மேற்குறித்த மனோபாவங்களின் அழுத்தத்தின் விளைவு என்பது எரிக்ஸனின் கருத்து. நவநாகரிகப் பாணிகளிலும் அலங்கார மாற்றங்களிலும் இளையோருக்குள்ள ஈடுபாடு முழுவதும் குறைத்து மதிப்பிடப்பட முடியாததாகும். பரிசோதனைகளிலும் புதியவற்றை ஏற்பதிலும் புதிய அறிமுகங்களைப் பெறுவதிலும் அவனுக்கிருக்கும் ஆர்வத்தையே இவை வெளிப்படுத்துவதாக அவர் கருதுகிறார்.

கடந்தகால அனுபவங்களை எதிர்கால எதிர்பார்ப்புக்களுடன் தொகுத்துக் காண்பதில் இளையோர் தவறிழைக்கின்றனர். இதுவும் சுய அடையாள நெருக்கடிக்கு இட்டுச் செல்லக்கூடும் என எரிக்ஸன் கருதுகிறார். இவ்வாறு ஏற்படும் தனித்துவ அல்லது சுய அடையாளக் குழப்பம் தனிநபரைத் தற்கொலைவரைக் கொண்டு செல்லக்கூடும். அல்லது சுயஅடையாளத்தை நிலை நிறுத்துவதில் தொடர்ச்சியாக எழும் முட்டுக்கட்டைகள் 'மறை சுய அடையாளத்தை' **(Nagative Identity)** ஏற்படுத்தலாம். இதன் விளைவாக அவன் தனது அடையாள நெருக்கடிக்கான தீர்வாக தீவிர எல்லைகளைத் தெரிவு செய்ய முற்படுகிறான். குற்றச் செயல்களில், அல்லது போதைவஸ்துப் பாவனையில் அல்லது தற்கொலையில் தனது எண்ணங்களை நிறைவு செய்ய அவன் முயல்கிறான்.

## அறிவுநிலை

பியாஜே (Piaget) யின் சோதனைகள் இளையோரின் உயர்வான அறிவுமட்டத்தை உறுதி செய்கின்றன. முந்திய பருவங்களை விட பகுத்தறிவின் அல்லது மெய்யறிவின் (Reason) வளர்ச்சி ஒரு தனிநபருக்கு இப்பருவத்திலேயே குறிப்பிடத்தக்க எல்லையை வந்து சேர்கிறது. எனினும் இது ஒரு சடுதியான மாற்றம் அல்ல. மனிதனின் அறிவு வளர்ச்சி உள்ளார்ந்திருக்கின்ற உணர்வாகும். பிறப்பிலிருந்தே அறிவு வளர்ச்சியை அவதானிக்க முடியும். ஒரு குழந்தை தனது ஆற்றலுக்குட்பட்ட வகையில் உலகு பற்றிய கருத்தை உருவாக்கிக் கொள்கிறது. முன்-குழந்தைப் பருவத்தில் (Post-Childhood) இவ்வளர்ச்சி முக்கிய வளர்ச்சி மட்டத்தைப் பெறுவதாக பியாஜே விளக்குகிறார்.

இளமைப்பருவத்திற்குரிய அறிவுமட்டத்தையே உண்மையான அறிவு வளர்ச்சியின் ஆரம்பம் என பியாஜே கருதுகிறார். 'தூய கருத்து நிலை அறிவினைக்' கிரகிக்கும் ஆற்றலை மனிதன் இப்பருவத்திற் பெறுகிறான். அதாவது மிக உயர்மட்டத்திலான உளச் செயற்பாட்டைத் தனிநபர் பெறும் பருவம் இதுவாகும். சிக்கலான பிரச்சினைகளுக்கு முடிவுகாணும் ஆற்றல் அவனுக்கு ஏற்படுகிறது. ஒழுக்கப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைக் காணுவதற்கும் கருதுகோள்களுக்கான தீர்வுகளைப் பரிசோதனை செய்வதற்கும் உண்மையானவற்றைத் தேடி அறிவதற்கும் அவனது உளநிலை தகுதி பெற்றுவிடுகிறது. இதனை பியாஜே 'முறைமைசார் செயற்பாட்டுச் சிந்தனை' (Formal Operational Thinking) செயற்படும் பருவம் எனத் தனது பரிபாஷை மூலம் கூறுகிறார்.

## தன்னல மனநிலை

எனினும் இளம்பருவத்தினர் வாழ்க்கைப் பிரச்சினைகளை அடிக்கடி தவறாகப் புரிந்து கொள்கின்றனர். எல்லாப் பிரச்சினைகளிலும் தன்னையே மையப்படுத்தும் அவனது மனோநிலையே இதற்குக் காரணமாகிறது. இது அவனில் அல்லது அவளில் ஊறியிருக்கும் 'தன்னலமையவாதம்' (Egocentrism) உருவாக்கும் பிரச்சினையாகும். வேறுவகையில் கூறுவதாயின் மற்றவர்களின் கருத்துக்களுக்கு இசைந்து செல்லும் ஆற்றல் குன்றியவனாக அவன் உள்ளான். தனது கோரிக்கைகள், தனது முடிவுகள் என்று தனது கருத்துக்களையே அவன் மிகைப்படுத்திக் கருதுகிறான். மேலும் இளைஞர் தமது தேவைகளும் உணர்ச்சிகளுமே தனித்துவமானவை என உறுதியாக நம்புகின்றனர். இது அடிக்கடி அவர்களைச் சமூகத்துடன் அல்லது மற்றவர்களுடன் முரண்பாட்டில் கொண்டுவந்து விடுகிறது.

## உபகலாசாரம்

தீவிரமாகவோ மிதமாகவோ கொந்தளிக்கும் மனோபாவத்தை இளைஞர் வெளிப்படுத்துகின்றனர். அவர்களது ஆற்றல் அபரிமிதமானதாகும். இவர்களைச் சமநிலையில் வைத்திருப்பதும் ஆற்றல்களைப் பயன்படுத்துவதும் முதியோர் பொறுப்பில் பெரிதும் தங்கியுள்ளது. இது ஒரு சிக்கலான பணியாகும். முதியோர் கலாசாரத்தில் தமக்கு மதிப்பளிக்கப்படுவதில்லை என இளையோர் அடிக்கடி மனச் சோர்வடைகின்றனர். சில சந்தர்ப்பங்களில் தாம் புறக்கணிக்கப்படுவதாக உண்மையாகவே அவர்கள் உணர்கின்றனர். இந்நிலை தொடர்ந்தால் முதியோர் பண்பாட்டிற்குள் அடங்காதவர்களாக இளையோர் உருவாகக் கூடும்.

நியூயோர்க் போன்ற பாரிய நகரங்களில் இளையோர் தமக்கென ஒரு உபகலாசாரத்தை (Sub-Culture) உருவாக்கியுள்ளனர். இது சமூகத்தின் மொத்தக் கலாசாரத்திற்கு அல்லது அங்கீகாரத்தில் உள்ள முதியோர் கலாசாரத்திற்கு எதிரானதாக வளரலாம். இவ் உப கலாசாரங்களுக்கென சில சிறம்பம்சங்கள் உள்ளன. இசை ரசனை, நடனம், பொழுது போக்கு, கொச்சைப் பேச்சுமொழி, அரட்டை, அர்த்தமற்ற சொற்பிரயோகம், கார், ஊர்சுற்றுதல் போன்றன இதில் அடங்கும் சில அம்சங்கள். அடிப்படையில் இது ஒரு எதிர்நிலையாகும். சமூகத்தின் சீரான நிலவுகையை இவை தடைபடுத்தக் கூடும். சமூகம் தொடர்ந்து இயங்குவதே மனித நிலைப்பட்ட அவாவாகும். இளையோர், எவ்வாறெனினும் வெகு விரைவில் உபகலாசார மையத்திலிருந்து மொத்தக் கலாசாரப் பரப்பிற்குள் வருவது இன்றியமையாததாகும். ஏனெனில் தேவையாயிருப்பது முரண்பட்ட கலாசாரப் போக்குகள் அல்ல மனிதப் பண்பாட்டின் சீரான நிலவுகையாகும்.

## தணியுமா சுதந்திரத்தாகம்

கோமதி கிருஷ்ணசாமி, 1ம் வருடம், மிருகவைத்திய பீடம்

*அன்று செவ்வானம் செக்கச் சிவந்ததோ*
*செங்கதிரவன் சிந்திய செங்கதிர்களினால் - ஆனால்*
*இன்று செவ்வானம் சிவப்பதோ மண்ணில்*
*சிந்திடும் செங்குருதியின் செவ்வண்ணித்தினால்*

*மண்ணின் விடிவுக்காய் மடிந்தொழிந்த மைந்தர்களால்*
*மயானமாக மாறிய மருதநிலத்தில்*
*மாடகோபுரங்கள் என எழுந்த கல்லறைகள்*
*மௌனராகம் இசையாதோ, மனுநீதியைத்தான் தராதோ*

*ஆறிலும் சாவு நூறிலும் சாவென, எண்ணி*
*அஞ்சா நெஞ்சம் கொண்ட அருந்தவ தமிழன்*
*புறநெஞ்சு காட்டாது புகுந்த போர்க்களம்*
*புகழ்ந்து உரைக்காதோ மறத்தமிழன் வீரத்தை.*

*கொலை வெறியரால் குழந்தையும் குமரியும் கொன்றொழிய*
*குருதியாறு குற்றாலத்து அருவியாய் குழிழ்ந்து பாய*
*விதவைக்கோலம் விண்ணென விண்ணை எட்டும்*
*காலம் தான் மாறாதோ விடிவுகாலம் தான் கனியாதோ*

*அரவணைத்த மண்ணும் ஆழசுவாசித்த காற்றும் விலகியே செல்ல*
*அழும்குழந்தையும் அழுத்தும் சுமையும் அருகியே வர*
*அகதி என்னும் பட்டத்துடன் அலைந்துதிரியும்*
*நிலைமைதான் மாறாதோ, நிம்மதிதான் கிடையாதோ*

*ஆட்சிகள் மாறவே பல கட்சிகள் ஏறும்*
*ஆட்ப்பலமும் போர்ப்பலமும் அண்டியே ஏறும்*
*படுகொலையினால் அப்பாவி மக்கள் அழிக்கப்பட*
*பட்டமும் பதவி உயர்வும் பாய்ந்தே ஏறும்*
*பாழான காலம் அழியாதோ தமிழர் கனவு தான் பலியாதோ*

*அன்று பாரதப்போரை பாரினில் நிறுத்த*
*பார்த்த சாரதி பாகனாய் வந்தான் - ஆனால்*
*இன்று ஈழத்துப்போரை இழுத்து நிறுத்த*
*மனமிரங்கி வருவானா - மறு அவதாரம் எடுப்பானா*

முதலாம் பரிசு பெற்ற சிறுகதை

***"எங்கட சனம் எடுத்ததிற்கும் காசு கொடுத்து கொடுத்து பழக்கிப் போட்டுது. என்ர குடும்ப நிலைமையில இதற்கு தாக்குப் பிடிக்கேலாமல் இருக்கு. அப்பா உங்கயிருந்து படிப்புச் செலவுக்கு அனுப்பின காசெல்லாம் தங்கச்சியை வெளியில எடுக்கிறதுக்கு செலவாகிப் போச்சு. செலவானது கூட பரவாயில்லை. தங்கச்சி உள்ளுக்கிருந்த ஒவ்வொரு நிமிஷமும் ஒவ்வொரு யுகமாக இருந்தது. நான் கம்பஸ் எண்டு சொல்லியும் 'றூம்' எடுக்கேலாமல் இருக்கு. ஏதோ எல்லோரும் கள்ளனைப் பார்த்த மாதிரி பாக்கிறாங்கள்."***

# கொலைகள்

சூசை அந்தனிதாசன், விடுகை வருடம், விலங்கு மருத்துவ பீடம்

வெடிச் சத்தங்களோட விடியிற பொழுது இரண்டு மூன்று நாளாய் ஒன்றையும் காணேல்ல; கண்களைக் கசக்கிக் கொண்டு படுக்கையை விட்டு எழுந்தான் சூரி. வழமை போலவே விளக்கைக் கொழுத்தி, தனது தெய்வமாக பூஜிக்கும் செல்லம்மாவின் போட்டோவைப் பார்த்து விட்டு நிமிர்ந்தவனுக்கு சுவருக்கும் கூரைக்கும் இடையால வந்த வெளிச்சம், ஆதவன் விடியலுக்கு முகவரி கொடுத்து விட்டதை உணர வைத்தது. அவசர அவசரமாக பாயைச் சுருட்டி அறையின் மூலைக்குள் வைத்து விட்டு, பற்பொடியைக் கையில் கொட்டிக் கொண்டு வெளியே வந்தவனுக்கு, ஏதோவொரு இனம்புரியாத பரவசம் அவன் மனதை ஆட்கொண்டது. அப்படியே கிணற்றுக் கட்டில் போய் அமர்ந்து விட்டான்.

கிழக்கு வானம் சிவப்பு வர்ணத்தை மெல்ல மெல்ல பூசிக் கொண்டிருந்தது. தென்றலோடு கலந்து வரும் பறவைகளின் மென்மையான ஓசைகளும் மெல்லிய குளிர்காற்றும் விடிகாலைப் பொழுதின் அமைதிக்கு அழகூட்டிக் கொண்டிருந்தது. அந்த அதிகாலைப் பொழுதின் ஒவ்வொரு அசைவுகளையும் உள்வாங்கிக் கொண்டிருந்தவனுக்கு இந்த அமைதியை யாரோ காயப்படுத்தப்போகிறார்களே என்ற ஏக்கமும் கூடவே இழையோடிக் கொண்டிருந்தது. முதலாளி கடைக் கதவு திறக்கிற சத்தம் கேட்டு நினைவு மீண்டவனாய் கிணற்றுக் கட்டிலிருந்து இறங்கி காலைப் பணிகளைத் தொடர்ந்தான். 'இண்டைக்கு முதலாளி நேரத்திற்கே வந்திட்டார். சனநடமாட்டமும் அதிகமாய் இருக்கு, பெருமாள் கோவில் மணிகூட விடாமல் அடிக்குது. சனம் கோவிலுக்கும் போய் வருகுது போல, காலையில அர்ச்சனைத் தட்டோட கோவிலுக்கு போய் வாற சனத்தை பார்த்தா ஒருவடிவுதான்.' இடைக்கிடையே அவன் கண்கள் றோட்டைப் பார்க்கத் தவறவில்லை. 'வெள்ளை உடுப்போட பெடி பிள்ளைகள் இந்த நேரமே வெளிக்கிட்டுட்டுதுகள். அப்ப 5.30, 6.30 வகுப்பும் தொடங்கியாச்சுப்போல. ஏதோ எல்லாச்சனத்தின்ர முகத்திலும் சந்தோசம் தெரியுது. இதெல்லாம் உண்மையோ அல்லது வெறும் பிரமையோ எண்டுதான் விளங்கேல்ல. ஆண்டவா! இது இப்பிடியே தொடரவேணும்.' சிந்தனையில் மூழ்கியிருந்த சூரியின் வேலைகளை, கடை முதலாளியின் அழைப்புக்குரல் விரைவு படுத்தியது. "சூரியகுமார்... உங்கட சம்பளத்தை ஆஸ்பத்திரிக்கு போக முதல் எடுத்துக்கொண்டு போங்கோ" சொல்லிக்கொண்டே முதலாளி கடைப்பக்கம் திரும்பிவிட்டார்.

புத்தகக்கடை முதலாளி சூரியைப் பொறுத்தவரையில் தெய்வம்தான். செல்லம்மா இருக்கும்போது வைத்திருந்த பெட்டிக்கடைக்கு சாமான்கள் வாங்குவதால் வந்த பழக்கம். செல்லம்மாவைப் பிரிந்ததிலிருந்து அனாதையானவனுக்கு அடைக்கலமென கடையோடு பின்புறத்தில் உள்ள அறையை வாச்சருக்குரிய சம்பளத்தோடு வழங்கியவர். வறுமையோடு கூடி வளர்ந்தவனென்றாலும், பிரகாசமும், வசீகரமும் நிறைந்த இளம்சிரிப்பு, உணர்வுகளைப் பளிச்சென்று சொல்லும் இயல்பான முகம், எளிமையான தோற்றம், வாய்விட்டு சிரிக்கும் வழக்கம் எல்லோரையும் கவர்ந்திருந்தது. இடது கையிலுள்ள பிறப்பு குறைபாட்டைத்தவிர எந்தக் குறையையும் ஆண்டவன் விட்டுவைக்கவில்லை. அவனிலுள்ள உயர்ந்த சிந்தனைகளும் உறுதியான வார்த்தைகளும் முதலாளிக்கு மேலும் நம்பிக்கையை ஏற்படுத்தியிருந்தது.

சம்பளத்தைப் பெற்றுக்கொண்டு ஆஸ்பத்திரி நோக்கிப் புறப்பட்டான். 'யாழ்ப்பாணம் வழமைக்கு திரும்பிக்கொண்டிருக்கிறது. மக்கள் இயல்பு வாழ்க்கைக்கு திரும்பிக் கொண்டிருக்கிறார்கள்' இவற்றைக் கண்டு தனது றலிச் சயிக்கிள் பெடல்கட்டை போடுகின்ற கிரீச்... கிரீச்.. சத்தம்கூட கேக்காதவனாய் சிந்தனையில் மூழ்கி சைக்கிளை வேகமாக்கினான். சயிக்கிளை விட மனம் வேகமாக ஓடியது. ஆஸ்பத்திரி வந்தது கூட தெரியவில்லை.

'அப்பாடா ஒருமாதிரி 8 மணிக்கு முதல் வந்தாச்சு.' என்ற பெருமூச்சுடன் உள்ளே நுழைந்தான். அவனுக்காக O.P.D. வாசலில் காத்துக் கொண்டிருந்தான் ரவி. ''சூரி இந்த முறை எங்கட குழுதான் சத்திர சிகிச்சைப் பிரிவு. முதல் நாளே பிந்தக்கூடாது. நேரத்திற்கே வந்திருக்கலாம் தானே'' ரவியின் தொனியில் ஒரு உரிமையுள்ள கண்டிப்பு இருந்தது.

சூரியைப் பற்றி முழுவிடயங்களையும் அறிந்த உயிர் நண்பன் ரவி. சூரியின் குழுவிற்கு ரவிதான் தலைவரும் கூட. அதற்குரிய ஆளுமையும் அவனுக்கு இருந்தது. உள்ளே நுழைந்தவர்களுக்கு ஆச்சரியமும் சந்தோசமும். எல்லோரும் வழமையை விட சந்தோசமாகவும் கலகலப்பாகவும் இருக்கினம்.

''என்ன சூரி சேட்டின்ர பின்பக்கம் புழுதியாய் இருக்கு''. சூரிக்கு வெறுத்தே போய்ச்சு. 'வேணுமெண்டு சித்திரா கிண்டல் செய்யுறாள்' புழுதியைத் தட்டிக் கொண்டு ''இல்ல இண்டைக்கு நித்திரையால எழும்ப கொஞ்சம் பிந்திட்டுது. அதுதான் வேகமாய் சயிக்கிள் ஓடினது.''

''அது சரி...வேகமாய் ஓடினா ஏன் இப்பிடி கோடுமாதிரி'' சித்திராவின் பகிடி அவனைக் கொஞ்சம் அவஸ்தைப்படவைத்துவிட்டது. 'இவளுக்கு என்ர சயிக்கிளுக்கு பின் மட்காட் இல்லையெண்டு தெரிஞ்சு கொண்டு பிறகும் கேக்கிறாள். அதைப்பார்த்து எல்லாரும் சிரிக்கினம். இதில சிரிக்கிறதுக்கு என்னதான் இருக்கோ தெரியாது. இதற்காக நானேன் வெக்கப்பட வேணும். இந்தச் சயிக்கிளில தானே பத்து வருஷமா ஓடி படிச்சு இன்னும் ஒரு வருஷத்தில டொக்டர் ஆகப் போறன். இதை நினைச்சு நான் பெருமைதான் அடைய வேணும். ஆனா இவையள் 'ராங்கிங் பீரியட்டில' பிறந்த இடத்தை பெருமையாய் சொல்லவேண்டியவியள், இடத்தை கேட்டவுடனே ரவுண் எண்டு தானே சொன்னவியள். சித்திரா கூட சுதுமலை எண்டு எனக்கு தெரியும். சுதுமலை எவ்வளவு வடிவான இடம். வரலாற்றுப் புகழ்மிக்க நிகழ்வுகள் கூட நடந்திருக்கு. அந்த அம்மன் கோவில் கூட எவ்வளவு பெருமைமிக்கது. இப்ப கேட்டாலும் ரவுண்னெண்டுதான் சொல்லுவா. இதில என்னதான் பெருமை இருக்கோ தெரியாது'. மனசுக்குள் முணுமுணுத்தவன் ''என்ர சயிக்கிள் பழசு, பின்மட்காட் இல்லை, அதுதான்'' எல்லோரும் எதிர்பார்த்தது சுத்துவானெண்டு. ஆனால் சூரி இலேசாக சொல்லிவிட்டான். ரவி இதைச் சமாளிக்கிறமாதிரி ''சரி வாங்கோ இண்டைக்கு 'கேஸ்' ஒண்டும் இல்லை. போன கிழமை நடந்த ஒப்பிரேசன்களை 'டிஸ்கஸ்' பண்ணுவம். சேஜன் வரவும் பத்து மணிக்குமேலேயாகும்'' எல்லோரையும் அழைத்தான்.

அப்போதுதான் அந்த வெடிச்சத்தங்கள் கேட்கத் தொடங்கியது. எல்லோரது நெஞ்சிலும் படபடப்பு. தங்களுக்குள் இருந்த ஏதோவென்று தொலைந்து விட்டதைப் போன்ற, இல்லை பறிக்கப்பட்டு விட்டதைப் போன்ற உணர்வும் ஏக்கமும் முகத்தில் படர்ந்து கொண்டிருந்தது. ''அப்ப... இண்டைக்கு காயப்பட்ட சனம்வரும். சேஜன் நேரத்திற்கே வருவார்'' என்றவாறு 'லப் கோர்ட்' டை மாட்டினான் ரவி.

''கொட்டடிப்பக்கம் தான் ஷெல் விழுகுது போல'' சொல்லிக்கொண்டே சித்திரா நடுங்கினாள். ''நல்லாக்கிட்டக் கேக்குது போல கிடக்கு'' கண்ணன் இயல்பாகவே பயந்தவன். கிட்டக் கேட்ட சத்தத்தோட தடுமாறிப் போனான். ரவி ''குறூப்புக்குள்ளேயே ஆலோசகர் மாதிரி ''என்ன செய்தாலும் ஆஸ்பத்திரிக்க விழாது. இதுக்க அப்படி ஷெல்லடிக்கிற அளவிற்கு யார் இருக்கினம். அப்பாவிச் சனம். அதுகும் வருத்தக்காரச் சனம். நீங்கள் பயப்பிடாதேங்கோ''. ரவி சொன்னது ஆறுதலாக இருந்தாலும் சூரியால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. 'ஏன்

வெளியில் இருக்கிற சனம் மட்டும் அப்பாவி இல்லையாக்கும்; உயிரெண்டா இப்ப மலிவாப் போச்சுதாக்கும். மனிதத்தன்மையே இல்லாம குண்டுகளை பொழியுறாங்கள், எங்கட சனம் எப்ப நிம்மதியாய் இருக்கிறது'' தனக்குள்ளேயே குழம்பிப் போய் நின்றான் சூரி.

''சூரி... யோசிச்சுக்கொண்டு நிக்காம ஆயத்தமாகு. சேஜன் வரப்போறார். நீ இப்பிடி கவலைப்பட உனக்கு யார் இஞ்ச இருக்கினம்'' ரவியின் அந்த வார்த்தை அவனை அனாதை என்பதை நினைவுபடுத்தியது போலிருந்தது. எங்காவது தனியாக நின்று ஓவென்று அழவேண்டும் போல இருந்தது அவனுக்கு. அடக்கிக் கொண்டான். மௌனமாகி போனவனனின் கன்னங்களை கண்ணீர் நனைத்துக் கொண்டது.சூரி கடினமான பாதையைத்தான் கடந்து வந்தவன். தனது வாழ்க்கைப் பாதையில் சந்தித்த கஷ்டங்களும் சொல்லடிகளும் தான் அவனை உறுதியுள்ளவனாக்கியது. என்றுமே குழம்பாதவன் இன்று 'எனது உயிர் நண்பனும் கூடவா இப்படிச் சொல்லிவிட்டான். இல்லை.. ரவி அப்படி என்னைத் தாக்கிற மாதிரி சொல்லேல்ல. என்ர நன்மைக்குத்தான் ஏதோ சொல்லிவிட்டான்' தனக்கே ஆறுதல் சொல்லிக் கொண்டான். அனாதையோ என்னவோ எல்லாச் சனத்தையும் தனது சொந்தம் என்று நினைப்பான்.

''ஓ... என்ன இது பெரிய வெடிச்சத்தம். ஆஸ்பத்திரிக்குள்ள போலிருக்குது. சனம் எல்லாம் ஓடுது. இது என்ன அநியாயம் இதுக்கேயும் குண்டைப் போடுறாங்கள்'' சொல்லிக் கொண்டே கண்ணன் ஓட வழிபார்க்கிறான். சூரியின் கையைப் பிடித்து இழுத்தான் ரவி. ''இதுக்க இனி இருக்கேலாது. எங்கேயாவது பாதுகாப்பான இடத்திற்கு போவம்'' சூரிக்கு மனம் பொறுக்கவில்லை. ''ரவி! நாங்களும் ஓடினா... இந்தக் காயப்படுற சனத்தை யார் பார்க்கிறது'' சூரியின் கதையை காதில் போடாது இழுத்துக்கொண்டு ஓடுறான் ரவி.

''இல்லை சூரி நாங்கள் உயிரோட இருந்தால்தான் எங்கட சனத்திற்கு சேவை செய்ய முடியும். இதுக்குள்ளேயே இருந்து சாகிறது எங்களை நாங்களே அழிக்கிறமாதிரி. நிலைமையைப் பார்த்து திரும்புறதுதானே'' ரவி சொல்லிறதில ஞாயமுள்ளதை ஏற்றுக்கொண்டவனாய் எல்லோருடனும் ஒரு ஒதுக்குப் புறத்தில் போய் பதுங்கி விட்டான்.

கண்ணன் எல்லாக் கடவுளையும் கூப்பிடுறான். சித்திராவும் ஏதோ முணுமுணுக்கிறாள். ''ஆஸ்பத்திரிக்குள்ளேயும் அடிக்க வெளிக்கிட்டுடாங்கள் நான் நாளைக்கே கொழும்புக்கு போகப் போறன். அங்க யாரையும் பிடிச்சு முடிஞ்சா தொடர்ந்து படிக்கிறது. இல்லாவிட்டால் வெளியில போக வேண்டியதுதான்'' சித்திராவை ஆமோதித்த மாதிரி கண்ணனும் ''நானும் அப்படித்தான் செய்யப் போறன்'' என்றான். சூரிக்கு ஆத்திரம் பொங்கிக் கொண்டு வந்தது. ''அப்ப படிச்ச எல்லாரும் அங்கால போனா, இஞ்ச இருக்கிற சனத்திற்கு யார் வைத்தியம் செய்யுறது. இப்பிடித்தான்... சில சனம் தாங்கள் தப்பினால் போதும் எண்டு நினைக்குதுகள்'' ''அப்ப இப்பிடியே இந்தப் பிரச்சினைக்க எப்படியிருக்கிறது. அங்கால போனா ஒரு பிரச்சனையும் இல்லை'' என்ற கண்ணனுக்கு, ஏதாவது சொல்லவேணும் போல இருந்தது ரவிக்கு. சுரேஷ் கொழும்பிலிருந்து அனுப்பிய கடிதத்தை ரவி விரித்துக் கொடுத்தான் கண்ணனிடம்.

**நண்பன் ரவி,**

**படிக்கிறதுக்காக இஞ்ச வந்துட்டன். மற்றும்படி இஞ்ச இருக்கிறதில எனக்கு எந்த இஷ்டமுமில்லை. எங்கட சனம் எடுத்ததிற்கும் காசு கொடுத்து கொடுத்து பழக்கிப் போட்டுது. என்ர குடும்ப நிலைமையில இதற்கு தாக்குப் பிடிக்கேலாமல் இருக்கு. அப்பா உங்கயிருந்து படிப்புச் செலவுக்கு அனுப்பின காசெல்லாம் தங்கச்சியை வெளியில எடுக்கிறதுக்கு செலவாகிப் போச்சு. செலவானது கூட பரவாயில்லை. தங்கச்சி உள்ளுக்கிருந்த ஒவ்வொரு நிமிஷமும் ஒவ்வொரு யுகமாக இருந்தது. நான் கம்பஸ் எண்டு சொல்லியும் 'றூம் எடுக்கேலாமல் இருக்கு. ஏதோ எல்லோரும் கள்ளனைப் பார்த்த மாதிரி பாக்கிறாங்கள். நாங்கள் ஒரு தெரிஞ்ச குடும்பத்தோட தான் சேர்ந்து இருக்கிறம். எங்கட வீட்ட எவ்வளவு சந்தோஷமா ஓடி ஆடி இருந்தம். இஞ்ச வீட்டுக்குள்ளேயும் சிறை வாழ்க்கைதான். கோவிலுக்கு கூட தங்கச்சி பொட்டு வைக்காமல் போறதைப் பார்க்க மனசுக்கு கஷ்டமாக இருக்கு. எங்கட கலாச்சாரம் கொஞ்சம் கொஞ்சமா அழிஞ்சு போகுது. அடுத்து எங்கட பீற்றர் மாஸ்ரரை 'பஸ்' இற்க கண்டனான். என்ன நினைச்சாரோ தெரியாது. நான் கதைக்கேல்ல. ஏனெண்டா சோதனையும் கிட்ட வருகுது. சந்தித்தால்**

*நிலைமையை சொல்லு. உங்க பெரிய சத்தமாய் கதைச்சு சிரிச்சு சயிக்கிளில இரவிரவா ஓடித்திரிஞ்சதை நினைக்க, இஞ்ச எல்லாம் வெறுமையாய் இருக்கு. உங்க சத்தம் கேட்டால்தான் பிரச்சினை. இஞ்ச 24 மணிநேரமும் யோசனைதான். தமிழில் யோசிக்க, தமிழில் சிரிக்க ஆசையாய் இருக்கு. ஆனா அதுகூட முடியுதில்லை.*

*நன்றி*
*அன்புடன்*
*சுரேஷ்.*

எதுவுமே பேசமுடியாதவனாய் கடிதத்தை திருப்பிக் கொடுத்தான் கண்ணன். ஆனா சித்திரா வழமைபோலவே தனது கதையை ஆரம்பித்துவிட்டாள். ''எனக்கு கொழும்பில இரண்டு வீடு இருக்கு. சித்தப்பாவும் நல்ல வசதியாய் இருக்கிறார் எனக்கெண்டா எந்தப் பிரச்சினையும் இல்லை.'' 'கொழும்பில இரண்டு வீடு, வெளியில மூண்டு பேர் எண்டு சொல்லுறதில என்னதான் பெருமை இருக்கோ தெரியேல்ல. பிறந்த மண்ணில ஒரு குடிசை இருக்கெண்டு சொல்ல தைரியம் இல்லாத ஆக்கள்' சூரி சொல்ல நினைத்தான் ஆனாலும் அடக்கி விட்டான்.

அவர்கள் கதைத்துக்கொண்டிருந்ததில் வெடிச்சத்தம் ஓய்ந்ததே தெரியவில்லை. ஆனால் அவலக்குரல்கள் தொடர்ந்து கொண்டே இருந்தது. எல்லோரும் மீண்டும் ஒப்பிரேசன் தியேட்டரை சென்றடைந்தனர்.

''10ம் வார்ட்டும் O.P.D.யும் தான் நல்லா சேதமாய் போய்ச்சு. செத்தது, காயத்தைப் பற்றி கணக்கிடேலாமல் இருக்குது. சிவா டொக்டரின் நிலமையும் ரதி நேஸ் இன் நிலைமையும் கவலைக்கிடம். எல்லாரும் விரைவா செயற்படுங்கோ'' சேஜனின் பணிப்பு அவர்கள் வேலைகளை விரைவு படுத்தியது.

'கால்போனது பாதி, கைபோனது பாதி, காயங்களோட அங்கங்கு இரத்த வெள்ளத்தில் சனம் மிதக்குது. 'ஏன்தான் இப்படி சனத்தை கொல்லுறாங்கள், அங்கவீனர்களாக்கி துன்பப்படுத்துறாங்கள்' விறைத்துப்போய் நின்றான் சூரி. தனது சிந்தனைகள் முட்டாள்தனமானதா? என்று கூட அவனை எண்ணவைத்தது. 'எங்கட சனம் உண்மையில அப்பாவிகள்தான். நாங்கள் எவ்வளவு உரிமையோடும் சுதந்திரத்தோடும் வாழுறம் எண்டதில கேள்விக்குறியாத்தான் இருக்குதுகள். இதுதான் வாழ்க்கை எண்டு ஏற்றுக்கொண்ட மாதிரி இருக்கினம்'. ''சூரி'' தோள்மீது தட்டினான் ரவி. ''யோசிக்கிறதை விட்டிட்டு நடக்க வேண்டியதைப்பார்''

சூரியாக்கள் ஒப்பிரேசன் செய்யேலாது. இப்ப பயிற்சிதான். காயப்பட்டவர்களின் ஹிஸ்ரி (History) எடுப்பதும் குருதியை சோதித்துவிட்டு அவர்களை தியேட்டருக்குள் அனுப்புவதும் தான் இன்றைய வேலையாய் இருந்தது. மத்தியானம் சாப்பிடவும் இல்லை. நல்லா களைச்சுப் போனாங்கள். திடீரென்று ஒருபிள்ளை வந்து சூரியின் கையைப்பிடித்து குழறுது. ஏதோ ஒன்று தன்னை அறியாமல் ஏற்பட்டுவிட்டதைப் போன்ற உணர்வு அவனை ஆட்கொண்டது.

''அண்ணா... எங்கட அம்மாவை காப்பாற்றுங்கோ. காலம எனக்கும் தங்கச்சிக்கும் மருந்து எடுக்கிறதுக்காக வந்தனாங்கள். அதில அம்மாவிற்கு இப்படி நடந்திட்டுது'' சரியான காயம்தான். யாரையெண்டு உள்ளுக்கு அனுப்புறது. இருந்தாலும், தான் அனாதையாகி பட்ட கஷ்டங்களை இந்தப் பிள்ளைகள் அனுபவிக்கக் கூடாது என்றோ என்னவோ அந்த அம்மாவை தியேட்டருக்கு அனுப்பிற ஆயத்தங்களைச் செய்தான்.

அவவிற்கு குருதி O⁻ இரத்த வங்கியிலும் இல்லை. O⁻ எடுக்கிறதும் சரியான கஷ்டம். வெளியே வந்தவன், ஒரு பெரியவர் அந்தப் பிள்ளைகளுக்கு ஆறுதல் சொல்லிக் கொண்டிருப்பதில் இருந்து, காயப்பட்டவாவின் கணவனாய் இருக்கலாமென்று ஊகித்துக் கொண்டான். ''ஐயா; இந்தப் பிள்ளைகளினது அம்மா உங்கட மனைவிதானே. இவவிற்கு குருதி O நெகடிவ். இது இஞ்ச இல்லை. உடனடியாக யாரையாவது கூட்டி வாருங்கோ. இரத்தம் நல்லாப் போட்டுது'' சில நிமிடங்களில் பெரியவர் மூவருடன் வந்தார். அதிர்ஷ்டம் இல்லாததுபோல, அவர்களின் குருதியும் பொருந்திப் போகவில்லை. சூரியின் மனம் எதற்கோ வருந்தியது. தயங்கித் தயங்கிச் சொன்னான். ''தம்பி, எவ்வளவு காசெண்டாலும் தரலாம். எங்கேயாவது எடுக்க முடியாதா?'' பெரியவரின் தொனி, காசால் சாதிக்கும் பெரிய அந்தஸ்துள்ள மனிதன் என்பதை அவனுக்கு புரியவைத்தது. ஆனாலும் சூரி இரக்கப்பட்டான் தனக்கும் O⁻ தான் என்பதை அவருக்கு சொல்லவில்லை. ரவியிடம் மிச்ச வேலையைக் கொடுத்துவிட்டு, இரத்தம் கொடுக்க ஆயத்தமானான். இரண்டு மணித்தியாலங்களின் பின் நினைவு தெளிந்து பார்த்தபோது ரவி மட்டும் அருகில்

நிற்கிறான். ''உன்னில இரத்தம் கொஞ்சம் கூட எடுத்தாச்சு, நீ விரும்பினமாதிரி அந்த அம்மாவை காப்பாற்றியாச்சு. சந்தோசமாய் கொஞ்சம் ஓய்வெடு''...

நண்பனின் ஆறுதலில் திடம் பெற்றவனாய் வலிந்த புன்னகையோடு எழுந்தான். ''ஒருக்கா அந்த அம்மாவின்ர 'ஹிஸ்ரி ரிப்போட்டை தா'' ஏதோவொரு ஆவல் அவனுக்கு. 'ஹிஸ்ரி ரிப்போட்டை' பார்த்துக் கொண்டு போனவனிற்கு ஏதோ ஒரு பய உணர்வு மனதைத் தொட்டது. ''எல்லாம் செல்லம்மா ஆச்சி சொன்ன மாதிரி இருக்கு, சீ... இதே பேரில எத்தினை பேர் இருப்பினம்'' தன்னையே சமாதானப்படுத்திக் கொண்டான். இருந்தாலும் இதை ஒருக்கா தெளிவாக்க வேண்டும் போல இருந்தது.

''என்ன சூரி... இதை இப்பிடியே பார்த்துக் கொண்டிருக்கிறாய், இந்த அம்மாவும், அவவின்ர கணவரும் பட்டதாரிகளாம், இரண்டுபேரும் ஒன்றாய்த்தானாம் படிச்சவியள், லவ் பண்ணித்தான் கலியாணமும் செய்தவியளாம்.'' ரவி சொல்லச் சொல்ல சூரிக்கு மிஞ்சியிருந்த குருதியெல்லாம் சூடேறிக் கொண்டிருந்தது. அவனது சந்தேகங்களை உறுதிப்படுத்த ரவி சொன்னது போதுமானதாய் இருந்தது.

'சீ... நான் இவவ காப்பாற்றி இருக்கக் கூடாது. சாகவிட்டிருக்கோணும்' மனம் கொதித்துக் கொண்டிருந்தது. ஆனாலும் எதுவுமே ரவிக்கு அவன் வெளிக்காட்டவில்லை.

''சூரி... நான் சாப்பாடும் எடுத்துக் கொண்டு வந்திட்டன், நீ நல்லா தூங்கி ஓய்வெடுக்க வேணும், வா உன்னை றூமில கொண்டு போய் விடுறன்'' ரவி சொன்னது மட்டும் அவனுக்கு ஞாபகமாய் இருந்தது. எப்படி றூமிற்கு வந்து சேர்ந்தான் என்பது ஞாபகம் இருக்கவில்லை. அந்த அளவிற்கு குழம்பிப் போயிருந்தான். சந்திக்கக் கூடாததை சந்தித்து விட்டதைப் போன்ற உணர்வு, எல்லாம் வெறுமையாக இருந்தது. எல்லாத்தையும் மறக்கவேணும் மாதிரி இருந்தது. பாயில குப்புற விழுந்தவனுக்கு இன்றுதான் செல்லம்மாவின் பிரிவுத்துயர் நெஞ்சை உருக்கியது. குலுங்கிக் குலுங்கி அழுதான். உறங்கவேண்டும் போல இருந்தது. புரண்டு புரண்டு படுத்தான். ஆனால் உறக்கம் அவனை உறவு கொண்டாடவில்லை. தான் தவழ்ந்து, வளர்ந்த அந்த கிராமத்தின் புழுதியில் கால்பதித்த நாட்களும் செல்லம்மாவின் அரவணைப்பும் அவன் மனக்கண்ணில் நிழலாடிக் கொண்டிருந்தது.

'எங்க போனாலும் என்னை இடுப்பில வைச்சுக் கொண்டு போவா, எனக்கு அழ ஆசை. ஆனா அழவிடமாட்டா. 2 ம் வகுப்பு மட்டும் என்னைத் தூக்கிக் கொண்டு போய்தான் பள்ளிக்கூடத்தில விடுவா. அடிக்கடி சொல்லுவா, குடிசையில இருந்தாலும் கோவிலுக்கு பக்கத்தில இருக்கோணும் எண்டு, அந்தக் கோயில்ல வைச்சு குட்டிக்கதையெல்லாம் சொல்லுவா. அந்தப் பெட்டிக்கடைக்குள்ள ஒரு பெட்டி போட்டு இருத்திப்போட்டு சமைச்சு சாப்பாடும் ஊட்டிவிடுவா. சாப்பாட்டோட சேர்த்து பாடத்தையும் ஊட்டுவா' அவனுக்கு ஏதோ ஒரு பாசத்தின் தாக்கம் இவற்றை எல்லாம் நினைக்க வைத்தது. செல்லம்மா பாடத்தோட சேர்த்து வாழ்க்கையின் ஒவ்வொரு படிமானத்தையும் ஊட்டிவிடத் தவறவில்லை. அவனும் வளர பெட்டிக்கடை புத்தகக்கடையாய் மாறிப் போய்ச்சு. செல்லம்மாவின் உடம்பும் முற்றாகவே தளர்ந்து போய்ச்சு. இப்ப சூரிதான் செல்லம்மாவையும் பார்க்க வேண்டிய நிலை.

''எப்படி நீங்கள் அறுபது வயதில என்னை பெத்தனீங்கள், என்ர அப்பாவைப் பற்றி ஒண்டுமே சொல்லுறீங்கள் இல்லை.'' அப்ப சூரிக்கு 15 வயது, கேட்கக்கூடாத கேள்வி. ஆனால் கேட்க வேண்டியதாய்ப் போய்ச்சு.

''உனக்கு எல்லாம் நான் சொல்லத்தான் வேணும். அதைச் சகிக்கிற பக்குவம் வரும் வரைக்கும் தான் இந்த உயிர் ஊசலாடுது. நீ எப்படி பிறந்தாயெண்டு கட்டாயம் சொல்லவேணும். அப்பத்தான் நீயாவது அந்தப்பிழை செய்யாமல் இருப்பாய்.'' சொல்லிக் கொண்டு போன செல்லம்மாவிற்கு கொஞ்சம் கொஞ்சமாய் கண்களும் மங்கத் தொடங்கிவிட்டது. அன்றுதான் அவ எல்லா உண்மையையும் சொல்லிப்போட்டு கண்ணை மூடிய நாள். அன்றைய நாள் அவனால் மறக்கப்பட முடியாத நாள்.

''சீ... நான் மோட்டுத்தனமாய் கேட்டதாலதான் செல்லம்மா ஆச்சி எல்லாத்தையும் சொன்னவ. இல்லாட்டிக்கு இண்டைக்கு இவ்வளவு தூரம் வேதனைப்பட்டிருக்கத் தேவையில்லை''

அப்பத்தான் செல்லம்மா கடைசியா அவனுக்கு சொன்னது மனத்திரையில் விழுந்தது. ''நீ நல்லாப் படிச்சு பெரியாள வரவேணும், அநியாயங்களை எதிர்த்து போராட வேண்டும். அப்பத்தான் என்ர ஆத்மா சாந்தி அடையும்''

''டாங்''.. ''டாங்''... பெருமாள் கோவில் மணிச்சத்தம் விடிந்து விட்டதை நினைவூட்டியது.

''சீ... இதுக்காக நான் சோர்ந்து போகக் கூடாது. செல்லம்மா ஆச்சியின் ஆசையை நிறைவேற்ற வேணும். நான் ஆஸ்பத்திரிக்கு தொடர்ந்து போகத்தான் வேணும்'' புறப்பட்டான் சூரி.

ஆஸ்பத்திரிக்கு சென்றவனுக்கு அவவ பார்க்கிற மனநிலை இருக்கவில்லை. எல்லாரும் 'கிளினிக்ஸ்' இல தங்கட தங்கட வேலையை செய்யுறாங்கள். சூரியால சிந்தனைகளைக் கூட ஒருமுகப்படுத்த முடியவில்லை. தனது மனச்சுமைகளை அள்ளிக் கொட்ட வேணும் போல இருந்தது. அவவின்ர முகத்தை பார்க்கவே வெட்கமாக இருந்தது. 'இல்லை... நான் இவவ பார்க்கவேணும் இவ செய்த கொடுமையை சொல்லத்தான் வேணும்' அவவ அனுமதித்த 'வார்ட்' பக்கம் நோக்கிச் சென்றான்.

''ஓ... என்னட்ட வந்து அழுத பிள்ளைதான் மட்டையால விசிக்கிக் கொண்டிருக்கு. அவ நித்திரை போல கிடக்கு...'' அருகில் சென்றவன் எதுவுமே பேசமுடியாது மௌனித்துப் போய் நின்றான்.

''அண்ணா.... அம்மா ராத்திரியே நினைவு தெளிஞ்சிட்டா. உங்களைப் பற்றித்தான் நடந்தெல்லாம் சொன்னான். தன்னைக் காத்த அந்த தெய்வத்தை ஒருக்காலாவது பார்க்கோணும் எண்டு சொல்லிச் சொல்லி அழுதவ. வேற ஒண்டும் எங்களோடை கதைக்ககேல்ல'' சூரியின் பார்வை அவவின் முகத்தில் விழுந்தது.

''தெய்வம் எண்டு சொன்னாயா? தாயே.... ஒருக்காலாவது பாக்கோணும் எண்டு சொன்னாயா தாயே கருவிலேயே என்னை அழிக்கத் துணிந்த நீ தானே'' அவனது மனக்குமுறலால் உடம்பெல்லாம் நெருப்பாகியது. அவ செய்ததை, செய்யத்துணிஞ்சதை அவனால் ஏற்றுக் கொள்ளேலாமல் இருந்தது. ''உங்கட கலியாணத்திற்கு முதல் நான் பிறந்தா, உங்கட அந்தஸ்தும் கௌரவமும் அழிஞ்சுபோடும் என்பதற்காக என்னை கொல்லத்துணிஞ்ச நீங்கள் தானே... இதால தானா எனக்கு இந்தக்கையும் இப்படி, எல்லாரும் என்னை சொத்திக்கையன் எண்டெல்லாம் சொல்லுறாங்கள். உங்கட உயிருக்கு ஆபத்தெண்டதாலத்தானே எனக்கு இண்டைக்கு உயிர்கிடைச்சது. ஏனம்மா... உங்கட உயிரில இருந்த பற்று என்ர உயிரில இருக்கேல்ல. உங்கட வயிற்றில பிறந்த பிள்ளையை ஒரு புறம்போக்கு ஊர் பிச்சைக்காரிக்கு தூக்கிக் குடுத்திட்டு அந்தஸ்தை காப்பாற்றீட்டீங்க. ஆனா இண்டைக்கு உங்கட உயிரை அந்தப் பிச்சைக்காரி வளர்த்தது காப்பாற்றியிருக்கு. நான் பிறந்த படியால இதெல்லாம் தெரிஞ்சுது. ஆனா பிறக்காத பிஞ்சுகள் எத்தனை எத்தனை கருவோடு கலைந்து போயிருக்கும்'' அவன் கன்னத்தில் விழுந்த கண்ணீர் கூட ஆவியாகிக் கொண்டிருந்தது.

''அண்ணா ஏன் நீங்கள் அழுறீங்கள்... விறைச்சுப்போய் நிக்கிறீங்கள்'' சூரிக்கு எதுவுமே பதிலளிக்க முடியவில்லை. ''அம்மா... எழும்புங்கோ யார் வந்து நிக்கிறது எண்டு பாருங்கோ. ராத்திரி அந்த தெய்வம் எங்கயெண்டு கேட்டீங்களே' அவர்தான் சூரி அண்ணா, டொக்டர் அண்ணா'' கண்களைத்திறந்தவ எதுவுமே பேசவில்லை.. ஏதோ சொல்ல நினைக்கிறா... அந்த முகத்தின் அசைவுகள் நன்றியுணர்வை வெளிப்படுத்திக் கொண்டிருந்ததை புரிந்து கொண்டான். ஆனால் சூரியால் அனுதாபப்படவோ, ஆத்திரப்படவோ முடியாதவனாய் இதழ்களை மட்டும் அசைத்தான்.

ஏதோ சொல்லுறா போல கிடக்கு. ''இல்லத்தம்பி.. இந்த உலகத்தில எவ்வளவு அநியாயம் நடக்குது. இந்த அப்பாவிச்சனம் என்ன செய்தது. ஒரு ஈவு இரக்கமில்லாமல் குண்டுகளைப் போட்டு சனத்தை கொல்லுறாங்கள். இதுக்கு ஒரு முடிவே கிடைக்காதா'' பதில் சொல்லாது அமைதியாய் நின்றான்.

''ஓ... நான் இதுக்கு பதில் சொல்லக்கூடாது. சொன்னா இவ செத்துப்போடுவா. தன்ர பிள்ளையையே கொல்லத் துணிஞ்சவ இதைப்பற்றி கதைக்க என்ன யோக்கியதை இருக்கு'' குமுறிக் கொண்டிருந்தது அவனுள்ளம்.

''ஏன் தம்பி பேசாமல் நிக்கிறீங்கள், நான்... அதிஷ்டவசமாய்த் தப்பிட்டன். ஆனா எத்தினையோ பேர் கை,கால் இல்லாம சிதறிச் செத்துப்போட்டுதுகள்''

சூரிக்கு, ஏதாவது சொல்லவேண்டும் போலிருந்தது.

''இல்லையம்மா... நானும் உங்களை மாதிரி அதிஷ்ட வசமாய்த்தான் தப்பிட்டன். எல்லாரும் இந்த உயிரின் பெறுமதியை தெரியாம அழிக்க வெளிக்கிடுறாங்கள். தாக்கப்படேக்கத்தான் இதைப்பற்றி யோசிக்கிறம். உயிரின்ற பெறுமதியை இப்பவாவது புரிஞ்சிட்டீங்கள்தானே. அதுவொன்றே போதும்'' என்ற பதிலோடு அமைதியாய் விலகிச் சென்றான்.

# கல்வியியற் பேராசிரியருடன் ஒரு நேர்காணல்

தொகுப்பு; மா.அன்புதாஸ்

இவ்வருடம் இளங்கதிரிற்காக நாம் நேர்கண்ட பேராசிரியர் சோ.சந்திரசேகரன் அவர்கள் கொழும்பு பல்கலைக்கழக சமூக விஞ்ஞான கல்வித்துறைத் தலைவரும் கல்வியியல் விரிவுரையாளரும் ஆவார். இவர் பதுளையை பிறப்பிடமாக கொண்டவரெனினும் தனது கல்வியை யாழ் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் பூர்த்தி செய்தவர்.

இவர் கல்வியியலில் உள்ள பிரச்சினைகள் மற்றும் கல்வியில் தமிழ் மொழி மூலம் பயிலும் மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி ஆராய்ந்து வருபவர். இவருடனான எமது நேர்காணல் வருமாறு.

கேள்வி: **கல்வியியல் என்றால் என்ன என்பதை சற்று விளக்குவீர்களா?**

பதில்: கல்வியியல் (Pedagological Science) யாருக்கு, எப்படி எதனை கற்பிக்க வேண்டும் என்றும், கல்வித்துறையிலுள்ள பிரச்சினைகளை இனம் கண்டு அவற்றை தீர்க்கும் முறைபற்றி ஆராய்வதோடு, கல்விமுறையை திட்டமிடுவதும் அதனை நிர்வகிப்பதும் என நீண்ட ஒரு குறிக்கோளை தன்னகத்தே கொண்டுள்ளது. மேலும் வகுப்பறையில் கருத்தரங்கில் எவ்வாறு கற்பிக்க வேண்டும் என ஆசிரியர்களுக்கு பயிற்சியையும் வழங்குகிறது.

கேள்வி: **இலங்கையிலுள்ள கல்விமுறை எவ்வகையானது? மற்றும் இதிலுள்ள பாதகமான நிலைமைகள் என்ன?**

பதில்: உண்மையில் இலங்கையில் நடைமுறையில் உள்ள கல்விமுறை ஒருவழிப்பாதைக்குரியது. (Single track system) என்பார்கள். முதலாம் ஆண்டு முதல் 11 ம் ஆண்டு வரையானதும் பின் A/L உம் ஒருவழிப்பாதை முறையேயாகும். A/L ஆனது 3 வழிபோல் தோன்றினாலும் அவை மூன்றும் பல்கலைக்கழக அனுமதியை குறிக்கோளாக வைத்த ஒரு வழிப்பாதை முறையே ஆகும். (A/L- 3 Acadamic Stream) இக்கல்விமுறை ஒரு கல்விநிலையிலிருந்து இன்னொரு கல்வி நிலைக்கான தயார்படுத்தலாகவே அமைகிறது. இதனால் ஒவ்வொரு நிலையிலும் இருந்து வெளியேறுபவர்கள் (Drop outs) சமுதாயத்தில் தம்மை நிலைப்படுத்த முடியாதவர்களாக காணப்படுகின்றனர். உதாரணமாக உயர்தரப் பரீட்சைக்கு அமரும் 150,000 மாணவர்களில் ஏறத்தாழ 10,000 மாணவர்களே உயர்கல்விக்கு சேர்த்துக் கொள்ளப்பட, ஏனையோர் தமது கல்வியை பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது.

கேள்வி: **இதற்கு நீங்கள் கூறும் தீர்வுகள் அல்லது ஆலோசனைகள் என்ன?**

பதில்: தற்போது உள்ள கல்விமுறை பலருக்கும் 'ஒரு வகையான' கல்வியை மட்டுமே வழங்குகிறது. இம்முறை மாற்றப்பட்டு பலருக்கும் பலவகையான கல்வி வழங்கப்பட வேண்டும். (We have to Provide education for quite a good number of pupils but in diversified fields) கல்விமுறையானது ஆரம்ப, இடைநிலையிலிருந்து உயர்நிலை கல்விக்கான தயார்படுத்தலுடன் நின்றுவிடாது ஒவ்வொரு நிலையிலிருந்து வெளியேறுபவர்களையும் கருத்திற்கொண்டு வகுக்கப்படல் வேண்டும்.

ஒருவழிப்பாதை முறையிலான கல்விக்குப் பதிலாக பல்வழிப்பாதை முறையிலான கல்விமுறையானது (Multi -track system) ஆரம்ப, இடை, உயர் நிலைகளில் புகுத்தப்படல் வேண்டும். இதற்கு உதாரணமாக Vocational education, technical education ஐ குறிப்பிடலாம். இதன்மூலம் ஒவ்வொரு நிலையிலிருந்தும் வெளியேறுவோரின் பிரச்சினையை ஒரு அளவிற்கேனும் தீர்க்கலாம். மேலும் உயர்தரப் பரீட்சையை முடித்தவிட்டு பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத மாணவர்களின் பிரச்சினைக்கு இப்போது நடைமுறையிலுள்ள சட்டக்கல்லூரி, கணக்கியல் கல்லூரி, கணனிக் கல்லூரி போன்ற பல்கலைக்கழகம் அல்லாத உயர்கல்விக் கூடங்களுக்கு (Non -University, higher education) அங்கீகாரம் வழங்கப்படுவதன் மூலமும், உயர் தொழில்நுட்பக் கல்லூரிகள், ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகள், கல்விக் கல்லூரிகள் போன்ற மூன்றாம் நிலை கல்வி நிலையங்களுக்கு 'உயர்கல்வி' என்ற அங்கீகாரம்

வழங்கப்படுவதன் மூலமும், அவற்றிற்கு உயர்தரப்பரீட்சையில் புள்ளிகள் அடிப்படையில் தெரிவு செய்வதன் மூலமும் இதனைத் தீர்க்கலாம். இதை விடுத்து அவர்கள் எல்லோரையும் மீளவும் பரீட்சைக்கு அமர்த்தி அதிலிருந்து தெரிவு செய்வது தவிர்க்கப்பட வேண்டும். சுருங்கக் கூறின், பல்கலைக்கழகத்திற்கு சமமான அல்ல சமாந்திரமான உயர்கல்வி அங்கீகாரம் கொண்ட நிறுவனங்கள் பலவற்றை ஏற்படுத்தி இதனை தீர்த்து வைக்கலாம். அதாவது பல்கலைக்கழக உயர்கல்வியுடன் பல்கலைக்கழகம் அல்லாத உயர்கல்வியையும் வழங்குவதன் மூலம் (Non -University higher education) இதனைத் தீர்க்கலாம்.

கேள்வி: **பரீட்சை என்பது மாணவர்களை பரீட்சிக்கின்ற முறையாக இருக்க வேண்டுமேயன்றி அவர்களை மட்டம் தட்டுகின்ற நோக்கில் அமையக்கூடாது என்பது மாணவர் மத்தியில் நிலவுகின்ற ஒரு கருத்தாகும். இதற்கு நீங்கள் கூறும் விளக்கம் என்ன?**

பதில்: பரீட்சை என்பது மாணவர்கள் எந்நிலையில் உள்ளனர் என்று கண்டறிந்து அவர்களின் தேர்ச்சியை அதிகரிக்க உதவும் கருவி எனலாம். இன்றைய கல்விமுறையின் பிரதான கடமை சான்றிதழ் வழங்குதல் ஆகும். (Accridition) இன்றைய சமுதாயம் சான்றிதழை மையமாகக் கொண்ட சமுதாயமாக மாறி உள்ளது. எனவே இச்சான்றிதழை வழங்க முன் நீங்கள் அதற்குரிய தராதரத்தை அடைந்து விட்டீர்களா என அறிய இப்பரீட்சைமுறை அவசியமாகிறது. ஆனால் பரீட்சை வினாத்தாளானது கற்பித்த விடயம் எல்லாவற்றையும் பரீட்சிப்பதாக அமைவதுடன், எல்லோருக்கும் தெரிந்ததும் எல்லோருக்கும் தெரியாததுமான வினாக்கள் தவிர்க்கப்படுவதுடன், ஒரு விடைத் தாளானது வெவ்வேறு அத்துறை சார்ந்த ஆசிரியர்களால் திருத்தப்படும் போது எல்லோரும் ஏறத்தாழ ஒரேயளவு புள்ளிகளை பெறுகின்ற நிலைமை வரத்தக்கதாக அமைவது அவசியம்.

கேள்வி: **ஏனைய நாடுகளில் ஒருவர் மிக குறுகிய காலத்தில் (15 வயதில்) கலாநிதி பட்டம் பெறுவதை கண்டு வியப்படைகின்றோம். ஆனால் அவ்வாறு தம்மிடையேயுள்ள மாணவர்களின் திறமையை வெளிக்கொணர எமது கல்வி அமைப்பில் ஒரு முறையோ அன்றி அதற்குரிய ஏற்பாடுகளோ இல்லை. இதைப்பற்றி உங்களது கருத்தென்ன?**

பதில்: இலங்கையின் கல்வித் திட்டம் ஒரே வயதுப் பிள்ளைகள் எல்லோரும் ஒரே மாதிரியானவர்கள், ஒரே திறன் கொண்டவர்கள் என்ற அடிப்படையில் வகுக்கப்பட்டது. இது உளவியல் கருத்திற்கு முரணானது. மீத்திறன் உள்ள பிள்ளைகள் (Gifted Children) விரைவாக கல்வி கற்க இங்கு வாய்ப்பில்லை. அவர்களின் திறமை அடக்கப்பட்டுள்ளது. முன்பிருந்த Double Promotion முறையும் நீக்கப்பட்டுள்ளது. மேலை நாடுகளில் உள்ளதுபோல் மீத்திறன் உள்ளவர்களுக்கான விசேட பாடசாலைகள் இல்லை. ஆனால் மனவளர்ச்சி குன்றிய பிள்ளைகளுக்கான பாடசாலைகள் இலங்கையில் உண்டு. எனவே மீத்திறன் உள்ள மாணவர்களை இனம்கண்டு போதிக்க ஏதுவாக மேலைநாடுகளில் உள்ளதுபோன்று இங்கும் அவ்வாறான பாடசாலைகள் உருவாக்கப்படல் வேண்டும்.

கேள்வி: **இன்று இலங்கையில் பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டு வருவதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

பதில்: இலங்கையை கொங்கொங், தாய்வான் போன்று புதிய கைத்தொழில் நாடாக (Newly industrialized country) மாற்றுவதற்கு ஏறத்தாழ 120,000 பட்டதாரி மாணவர்கள் பல்கலைக்கழகங்களில் பயில வேண்டும். தற்போது 30000 வரையிலான பட்டதாரி மாணவர்களே உள்ளனர். இந்த வகையில் பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படல் வேண்டும். ஆனால் முன்பிருந்த பல்கலைக்கழகங்களில் நிலவுகின்ற விரிவுரையாளர்கள் மற்றும் ஏனைய வேலையாட்களின் பற்றாக்குறை காரணமாக புதிய பல்கலைக்கழகங்களை அங்கீகரிக்க முடியாதுள்ளது. இதற்கு அவர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் குறைவாக உள்ளமை பிரதான காரணமாகும். இன்று சமூக நிர்ப்பந்தம் காரணமாக உருவாகியுள்ள சப்பிரகமுக, ரஜரட்டை மற்றும் தென்கிழக்கு பல்கலைக்கழகங்கள் வெற்றிகரமாக இயங்கமுடியவில்லை என்பது கண்கூடு.

பல்கலைக்கழகங்கள் முழுநேர, இலவச கல்வியை வழங்கும் நிறுவனங்கள். இதனால் திறந்த பல்கலைக்கழகங்கள் பகுதி நேர கல்வியை வழங்குவதுடன் செலவும் குறைவாக அமைவதால் திறந்த பல்கலைகழகங்களின் தோற்றம் ஒரு முன்னேற்றகரமான நடவடிக்கையாக அமையலாம்.

கேள்வி: **பல்கலைக்கழக அனுமதி கிடைத்ததும் ஏறத்தாழ இரண்டு வருடங்கள் காத்திருக்க வேண்டியிருக்கிறது. இதனால் பல்கலைக்கழகம் வந்தபின் கல்வி பயில்வதிலுள்ள ஈடுபாடு குறைந்து செல்வதை காணக்கூடியதாக உள்ளது. இந்நிலையில், ஏன் பல்கலைக்கழகத்திற்கு மாணவர்கள் காத்திருக்கும் காலத்தை குறைக்கக்கூடாது? அல்லது இல்லாமல் செய்யக்கூடாது?**

பதில்: உண்மையில் இது 80 களின் பிற்பகுதியில் ஏற்பட்ட அசம்பாவிதங்களின் காரணமாக ஏற்பட்டதேயாகும். எனினும் இது தற்போது குறைந்து வருவதை காணக்கூடியதை அவதானிக்கலாம். அத்துடன் உயர்கல்வி மூலம் வேலையில்லாப் பிரச்சினையை சிறிது காலத்திற்கு பிற்போடுவதும் ஒரு நோக்கம் என கூறுபவர்களும் உண்டு. அந்த வகையில் இதுவும் தவிர்க்க முடியாததாக அமையலாம்.

இருப்பினும் இந்த இருவருட காலத்தில், அவர்களின் கற்கைநெறிக்கேற்ப வேலை அனுபவங்களை பெறுகின்ற வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தல், ஆங்கில அறிவை விருத்தி செய்ய காத்திரமான ஆங்கில கற்கை நெறியை ஏற்படுத்தல், மற்றும் நவீன விஞ்ஞான தொழில்நுட்பம் பற்றிய ஒரு அறிமுகத்தை ஏற்படுத்துதல் என்று பல மாற்றுவழிகளை நடைமுறைக்கு கொண்டு வரலாம். இக்காலப்பகுதிக்குள் வேலை செய்யும் மாணவர்களும் உளர். எனவே இவ்விரண்டு வருட இடைவெளியை பிரயோசனப் படுத்த முடியும்.

மேலும், இவ்விடைவெளி காரணமாக பல்கலைக்கழக அனுமதி கிடைத்ததும் பல்கலைக்கழகம் செல்லாது இருப்பவர்களும் உளர். இதை அண்மைக்கால புள்ளிவிபரங்கள் நிரூபிக்கின்றன.

கேள்வி: **பல்கலைக்கழக கல்வியை முடித்து வெளியேறும் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பது கடினமாக உள்ளது. இதைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?**

பதில்: பல்கலைக்கழக கல்வியின் ஒரே நோக்கம் வேலைவாய்ப்பு பெறுவதல்ல. சமுதாயத்தில் உயர்ந்த, சிந்தனைத்திறன் மிக்க, தர்க்க ரீதியாக ஆய்வு செய்யத்தக்க, புதிதாக ஒன்றை கற்கக்கூடிய ஆற்றலுள்ள பிரஜைகளை உருவாக்குவதே பிரதான நோக்கம் ஆகும்.

மேலும் மேலை நாட்டு அறிஞர்கள் சிலரின் கருத்துப்படி வேலையற்ற பட்டதாரிகள் சிலர் நாட்டில் இருப்பது நாட்டின் முன்னேற்றத்திற்கு அவசியம். இது தனிநபரை பொறுத்தவரை பிரச்சினையாக இருக்கலாம். ஆனால் ஒரு புதிய திட்டத்தை அரசு ஆரம்பிக்கும்போது பட்டதாரிகளை அந்த நேரத்தில் பயிற்றுவிப்பது சிரமமாகும். அதனால் திட்டத்தை நடைமுறைப்படுத்த காலதாமதம் ஏற்படலாம்.

மேலும் பல்கலைக்கழகத்தில் பாடத்துறைகளின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எனவே வேலை வாய்ப்பை பெற்றுத் தரக்கூடிய பல்வேறு துறைகள் பல்கலைக்கழங்களில் புகுத்தப்படல் வேண்டும். அத்துடன் இலங்கையில் அரச பாட ஏற்பாட்டின்படி அரச கல்வி நிறுவனங்களில் கல்விகற்று அரச சான்றிதழுடன் வேலை வாய்ப்பை தேடும்போது நிராகரிக்கப்படுமாயின் தவறு நிச்சயம் பாட அமைப்பிலேயே உள்ளது எனலாம்.

கேள்வி: **கல்வியில் பின்தங்கிய மாவட்டங்களாக கருதப்பட்ட மாவட்டங்கள் இன்றும் அதே நிலையிலேயே உள்ளன. இந் நிலையை போக்க என்ன ஆலோசனை கூறுகிறீர்கள்?**

பதில்: பின்தங்கிய மாவட்டங்களில் கல்வித்துறையை முன்னேற்ற பல்கலைக்கழக அனுமதிக்கு இட ஒதுக்கீட்டை பேணுவதுடன் அப்பிரதேசங்களில் சிறந்த ஆசிரியர்களைக் கற்பிக்கச் செய்வதற்கு கூடிய சம்பளம், வசதி போன்ற ஊக்குவிப்புக்களை வழங்க வேண்டும். உள்ளூர் சமூகத்திற்கு கல்வி வழங்குவதில் கூடிய அதிகாரம் வழங்கி, வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலமும் கல்வியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதன் மூலமும் அப்பிரதேசங்களின் கல்வியை வளர்க்க முடியும். பிரதேச மக்கள் அரசாங்கத்தை மட்டும் நம்பியிருக்காது தாமே முன்வந்து கல்வியை முன்னேற்ற அக்கறை காட்ட வேண்டும். ஆசிரியர்களை கட்டாயச்சேவை செய்யுமாறு பின்தங்கிய பிரதேசத்திற்கு அனுப்புவது நடைமுறைச்சாத்தியமில்லை.

கேள்வி: **இலங்கையின் கல்வித்துறை விரிவுபடாமைக்கான காரணங்கள் என்ன?**

பதில்: இலவசக் கல்வி யாருக்கென்று உருவாக்கப்பட்டதோ அது அவர்களை சென்றடைவதில்லை. நடுத்தரவர்க்கம், வசதிபடைத்தோரே இலவசக்கல்வியை அதிகம் அனுபவிக்கின்றனர். வருமானம்

குறைந்தோர் மிகக் குறுகிய காலத்துக்கே இலவசக் கல்வியைப் பெறுகின்றனர். மேலும் இலங்கையின் கல்வித்துறை அரசின் பூரண கட்டுப்பாட்டிலேயே உள்ளது. உலகில் வேறெங்கும் இவ்வாறான நிலை இல்லை. மேலும் குறிப்பாக சிறுபான்மையினர் அரச கல்வியையே நம்பியுள்ளனர். இவையே பிரதான காரணங்களாகும்.

இருப்பினும், கல்வித்துறையில் தனியார் துறையினரை அனுமதித்து அவற்றை கட்டுப்படுத்த ஒரு மத்தியதர கட்டுப்பாட்டு சபையை ஏற்படுத்தி அல்லது பல்கலைக்கழகங்களுடன் இணைத்து செயற்பட அனுமதிப்பதன் மூலம் கல்வி அமைப்பை விரிவுபடுத்தலாம்.

கேள்வி: **முஸ்லிம் சமூகத்தினரின் கல்விநிலையும் அண்மைக்கால கல்வி மறுமலர்ச்சியும் பற்றி உங்கள் கருத்து என்ன?**

பதில்: அறுபதுகளில் முஸ்லிம் சமூகத்தினர், மலையக தமிழர் ஆகியோர் கல்வியில் பின்தங்கியவர்களாக புள்ளிவிபரப்படி பாகுபடுத்தப்பட்டனர். இருப்பினும் 90 களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் மலையகத் தமிழர் மட்டுமே குறிப்பிடப்பட்டிருந்தனர். எனவே இதிலிருந்து நாம் முஸ்லிம் சமூகத்தின் கல்வி வளர்ச்சியை அவதானிக்க முடியும். அண்மைக்காலமாக முஸ்லிம் சமூகத்தினர் கல்வியில் மிகவும் முன்னேறி வருவதற்கு பிரதான காரணம் அவர்களில் பெரும்பான்மையானோர் ஈடுபடும் வர்த்தகத்துறையிலுள்ள நிச்சயமற்ற தன்மையாகும். மற்றும் கல்வியின் அவசியத்தை உணரத்தலைப்பட்டதையும் குறிப்பிடலாம். இம்மறுமலர்ச்சியின் பெரும்பங்கு கிழக்கிலங்கை முஸ்லிம்களையே சாரும். இதற்கு அங்கு அவர்கள் செறிவாக வாழ்வதும் ஒரு காரணமாகும். ஏனைய பகுதிகளில் இவர்கள் வாழ்ந்தாலும் இவர்கள் ஏனைய சமூகத்தினருடன் போட்டியிட வேண்டி உள்ளது. அத்துடன் அங்கு அவர்களுக்கு கிடைக்கும் கற்பதற்கான வசதிகள் கிழக்கிலங்கையுடன் ஒப்பிடும்போது குறைவானதே. இருப்பினும் முஸ்லிம் மாணவர்கள் விஞ்ஞான கல்வியில் பின்தங்கியே உள்ளனர். இதற்கு பல்கலைக்கழக விஞ்ஞானம் சார்ந்த துறைகளுக்கு அனுமதி பெறும் மாணவர்களின் எண்ணிக்கையை உதாரணமாகக் காட்டமுடியும். எனினும் அவர்கள் இத்துறையிலும் கவனம் செலுத்த ஆரம்பித்துள்ளனர் என்பதையே அண்மைக்காலங்களில் அவதானிக்க முடிகிறது.

கேள்வி: **மலையக தமிழ் சமுதாயம் கல்வியில் முன்னேறாமை அல்லது அவர்களது சனத்தொகைக்கேற்ப பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறாமை பற்றி உங்கள் கருத்தென்ன?**

பதில்: மலையக மக்களின் சனத்தொகை வீதத்தின் அடிப்படையில் பார்க்கும் போது மொத்த பல்கலைக்கழக அனுமதியில் ஆகக்குறைந்தது 500 மாணவர்களாவது பல்கலைக்கழக அனுமதியைப் பெறவேண்டும். ஆனால் இது ஏறத்தாழ 100 ஆக உள்ளது.

இதற்கு பலகாரணங்களை நாம் குறிப்பிட முடியும்.

1. இவர்கள் 60 களில்தான் உயர்தரப் கல்வியில் **(A/L)** ஆர்வம் காட்ட தொடங்கினர். அதிலும் இவர்களது விஞ்ஞானத்துறை உயர்கல்வி எழுபதுகளிலேயே ஆரம்பித்தது. இவர்கள் உயர்கல்வியின் முக்கியத்துவத்தை பிந்தியே உணர்ந்து அதில் நாட்டம் கொள்ளத் தொடங்கியமையும் **(Late -starters)** இதனால் கல்வியில் நன்கு முன்னேறியுள்ள நீண்ட கல்விப் பாரம்பரியத்தைக் கொண்ட ஏனைய மாவட்ட மாணவர்களுடன் போட்டியிட இயலாமையும் இதற்கு காரணமாகும்.

2. ஏனைய மாவட்டங்கள் போலல்லாது இவர்களுக்கு ஒரு நீண்ட கல்விப்பாரம்பரியமோ, அன்றி முன்னுதாரணமாகக் கொள்ளக்கூடிய கல்வியில் முன்னேறிய உயர் மத்திய வகுப்பினரோ மலையகத்தில் இல்லாமையும் மற்றொரு காரணமாகும். மலையகத்திலிருந்து நன்கு படித்தவர்களும் அங்கிருந்து வெளியேறி வேறு இடங்களில் வாழ்கின்ற நிலைமையும் காணப்படுகிறது. அத்துடன் ஏனைய பிரதேசங்களில் உள்ளது போன்று புகழ் பூத்த நீண்ட கல்விப்பாரம்பரியம் கொண்ட பாடசாலைகள் இல்லாமையும் காரணங்களாகும்.

மத்திய உயர்வகுப்பு அவர்களுடன் இணைந்திராது விலகி வேறு இடத்தில் வாழ்வதால் அவர்களிடையேயான இடைத்தாக்கம் **(Interaction)** ஏற்பட வாய்ப்பின்மையும் இதற்கு ஏதுவாக அமைகின்றது. அத்துடன் இவ் உயர் மத்திய வகுப்பினர் முன்னுதாரணமாக இருக்கும் அளவிற்கு அவர்களும் கல்வியில் முன்னேறவில்லை.

3. மேலும் மலையகத்தை பொறுத்தமட்டில் ஏனைய சமூகத்தினர் கொண்டுள்ளது போன்று பல்வேறு தொழில் செய்யும் மக்களைக் கொண்ட அமைப்பில்லை. இங்கு பெரும்பாலானவர்கள் பெருந்தோட்டத் தொழிலாளிகளே. இதனால் மக்களின் பல்வேறு கோணங்களினான சிந்தனையும் தடுக்கப்பட்டுள்ளது. சுருங்கக் கூறின் பெருந்தோட்டத்துறை தொழில் அமைப்பே அவர்களது கல்வி முன்னேற்றத்திற்கு தடையாக உள்ளது. பெருந்தோட்டம் என்பது ஒரு பொருளாதார அலகு. அங்கு கல்வி வளர்ச்சிக்கு சாதகமான சூழ்நிலை இருக்க முடியாது.

4. மலையகத்தைப் பொறுத்தவரை அரசியல் தலைமையே அங்குள்ள எல்லாவற்றையும் கையாளுகிறது. யாழ்ப்பாணத்தில் உள்ளது போன்று கூட்டுறவுத் தலைமை, கல்வித் தலைமை, விவசாயத் தலைமை போன்று பல்வேறுபட்ட தலைமை கொண்ட அமைப்புகள் தோன்றாமையும் மலையக மக்களின் கல்வி முன்னேற்றமின்மைக்கு காரணமாகும்.

கேள்வி: **வளர்ந்துவரும் விஞ்ஞானத்துறையாலும் தொழில்நுட்ப வளர்ச்சியாலும் ஏற்படும் அபிவிருத்தியை கருத்திற் கொண்டு எமது கல்விமுறை எவ்வாறு எதிர்காலத்தில் மாற்றியமைக்கப்பட வேண்டும் என எண்ணுகிறீர்கள்?**

பதில்: நாம் இன்று பூகோளமயமாக்கலுக்கு உள்ளாக்கப்பட்டு இருக்கிறோம். இதன் வெளிப்பாடே இன்று நாம் பெற்றிருக்கும் நவீன தொழில்நுட்பமாகும். உதாரணமாக கணணிமயமாக்கலை குறிப்பிடலாம்.

எனவே நாம் புதிய நூற்றாண்டின் தேவைகள், நிலைமைகளுக்கேற்ப கல்விமுறையை மாற்றி அமைப்பதுடன் அதற்கேற்ப மாணவர்களை ஆயத்தப்படுத்தல் வேண்டும். அதாவது 21 ம் நூற்றாண்டானது விஞ்ஞான தொழில்நுட்ப அறிவையும் தகவல்களையும் மையமாகக் கொண்ட நூற்றாண்டாக அமைய உள்ளது.

**(Knowledge and information based century)** எனவே எதிர்காலவியல் நோக்குடன் கூடிய கல்வியை மாணவர்களுக்கு வழங்குதல் வேண்டும். அதாவது கல்வி முறையானது 'கற்பதற்கு கற்றலாகிய திறனைப்' **(learning to learn)** பெறக்கூடிய வகையில் அமைக்கப்படல் வேண்டும். பழைய அறிவு காலாவதி ஆகும்போது புதிய அறிவினைத் தாமே சுயமாக கற்கக்கூடிய வகையில் கல்விமுறை ஒழுங்கு செய்யப்பட வேண்டும். இம்முறை ஓரளவு இன்று தென்படத் தொடங்கியுள்ளது வரவேற்கக்கூடிய ஒரு முக்கிய விடயமாகும்.

கேள்வி: **இறுதியாக இன்று யாழ் மாவட்டம் கஷ்டப் பிரதேசமாக அண்மைக்கால போர்நிலைமைகளால் கணிக்கப்படுகிறது. இதனால் யாழ் மாவட்ட மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதியில் ஏற்பட்ட வீழ்ச்சியை மீண்டும் ஈடுசெய்யலாம் என நினைக்கிறீர்களா?**

பதில்: பல்கலைக்கழகத்தின் மொத்த அனுமதியில் 40 சதவீதம் திறமை அடிப்படையிலும் 50 சதவீதம் மாவட்ட அடிப்படையிலும் 5 சதவீதம் கஷ்டப்பட்ட மாவட்டத்திற்கும் 5 சதவீதம் அங்கவீனர்களுக்கும் தேசிய ரீதியில் வேறு துறைகளில் பங்களித்தவர்களுக்கும் வழங்கப்படுகின்றது.

கஷ்ட பிரதேசத்திற்கு 5 சதவீதமே ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன் பல மாவட்டங்கள் இன்றும் இந்த முறைமூலமே பல்கலைக்கழக அனுமதியைப் பெறுகின்றனர். இதனால் யாழ் மாவட்டத்தில் தற்போது ஏற்பட்டுள்ள வீழ்ச்சியை இது முற்றாக ஈடுசெய்யும் எனக் கூறமுடியாது. இதை விடுத்து திறமை அடிப்படையில் அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை கூட்டப்படுமாயின் யாழ் மாவட்டம் இதைவிட கூடிய எண்ணிக்கையை பெறும் என்பது வெளிப்படை. யாழ்.மாவட்ட மாணவர் அனுமதி வீழ்ச்சியடையும் போது பல்கலைக்கழகங்களில் தமிழ் மாணவர் வீதாசாரம் பெருவீழ்ச்சி காணக்கூடிய நிலைமையுண்டு. கடந்த அனுமதி ஆண்டுகளில் போர் நிலைமையின் மத்தியிலும் யாழ்.மாவட்டம் கூடிய அனுமதியைப் பெற்று தமிழர் பிரதிநிதித்துவத்தைப் பேணி வந்துள்ளது. இது தொடராவிட்டால் தமிழரின் உயர்கல்வி உரிமை பாதிப்புக்குள்ளாகும்,

**நேர்கண்டவர்கள்:மா.அன்புதாஸ், P.சுரேந்திரன், பொ.நக்கீரன், இரா,இரவிசங்கர்.**

# நான் அகதியாயிருக்கலாம்

என். எஸ். பி. கரன்
முதலாம் வருடம், விலங்கு மருத்துவ பீடம்

நான்
வான் நட்சத்திரங்களை
வரவழைக்க முயன்றிருந்தால்
முடவனாக்கப்பட்டிருக்கலாம்

மண்ணில் நடப்பதற்கு
மனக்கோட்டையிட்ட என்னை
முடவனாக்கிக் கடலுக்குள்
தள்ளிவிட்டான் கடவுள்

காரணமின்றி
காட்சிகள் மாறும் நாடகம்
பரவாயில்லை
நாடகம் நிறுத்தப்பட்டு
நடிகன் சொல்லப்பட்டால்
நானுமோர் நடிகன்
என்செய்வேன்

புயலைப்பிடித்து என்
வாய்க்குள் திணித்து - பின்
இதுதான் உலகம்
இருந்தும் சகித்து வாழ்

என்னால்முடியாது
முடியவே முடியாது
எதிர் நீச்சலிட முடியா கோழை அல்லன்
ஆனாலும்
என்னைப் போல் என்னிலட்சியங்களை
அகதியாக்கி விட மாட்டேன்
ஏனென்றால் என் வாழ்க்கை
அன்பில் குழைந்து
அழகாய் வடித்த
சிற்பம்

# அகதி

எம். எச். ஜெய்புன்நிஸா
3ம் வருடம், கலைப்பீடம்

மணம் இழந்தால் மலர் அகதி
மலரை இழந்தால் மரம் அகதி
தந்தையை இழந்தால் தனையன் அகதி
கணவனை இழந்தால் மனைவி அகதி
நாட்டை இழந்தால் மன்னன் அகதி
வீட்டை இழந்தால் குடும்பம் அகதி
பாதையை இழந்தால் பயணம் அகதி
சில்லை இழந்தால் வண்டி அகதி
ஒளியை இழந்தால் சூரியன் அகதி
நிலவை இழந்தால் இரவு அகதி
நீராவியை இழந்தால் மேகம் அகதி
நீரை இழந்தால் மீன் அகதி
மீனை இழந்தால் ஆறு அகதி
ஆற்றை இழந்தால் நாடு அகதி
நாட்டை இழந்தால் மக்கள் அகதி
பல்லை இழந்தால் சொல் அகதி
துடுப்பை இழந்தால் தோணி அகதி
குருவை இழந்தால் சிஷ்யன் அகதி
துணையை இழந்தால் நண்பன் அகதி
கண்ணை இழந்தால் பார்வை அகதி
கனவை இழந்தால் தூக்கம் அகதி
உணவை இழந்தால் வயிறு அகதி
பாவையை இழந்தால் பையன் அகதி
பகலை இழந்தால் இரவு அகதி
பணத்தை இழந்தால் பை அகதி
பொலிவை இழந்தால் முகம் அகதி
மூச்சை இழந்தால் ஆன்மா அகதி
அம்பை இழந்தால் வில் அகதி
ஆனால் இவைகள் எல்லாம் அகதிகள்
அல்ல இதயத்தில் என்றும் அன்பை
இழந்தவளே உண்மை அகதி அகதி

## வளாகத்தின் வசந்தத்தில் தொங்கி நிற்கும் தொடர்பாடல்

*''நிறைய வம்பன்கள்'', தெய்யோஸ், பொறியியற் பீடம்*

இம்முறை இளங்கதிர் இளைய தலைமுறைச் சிறப்பிதழ் என காற்றுவாக்கில் கேள்விப்பட்டோம். இளைய தலைமுறையின் இனிய வாழ்வின் ஒரு எல்லையில் நிற்கும் நாம், பொருத்தமான ஆக்கம் ஒன்றை தடம் பதிப்போம் என்று யோசித்தோம். இவ்வளவு காலமாக வெளிவந்த ஆக்கங்களைப் பார்க்கின்ற போது பெண்கள் ஆண்களைப் பற்றியும் ஆண்கள் பெண்களைப் பற்றியும் நிறையவே தாக்கி கட்டுரைகள் வந்துள்ளன. தங்களைத் தாங்களே குறைவாக எடைபோட்டு தாழ்வு மனப்பான்மையால் கண்ணோட்டம் விடுபவர்களும், மகத்துவம் என்று சொல்லி மடைத்தனம் செய்பவர்களுமாக வளாகம் தனது வாஞ்சையிழந்தே இருக்கிறது. இவை எல்லாம் ஒரு அதீத கற்பனையின் வெளிப்பாடுகளோ என எண்ணத் தோன்றுகிறது. ஒரு சிலர் அதை விட ஒரு படி மேலே போய் சீதனம், காதல், கத்தரிக்காய் என்று நிறையவே அலசிப் போய்விட்டார்கள். ஆனால் இவர்கள் ஒரு நிதர்சனத்தை மட்டும் மறந்துவிட்டார்கள். இதை விட முக்கிய பிரச்சனை அதைப்பற்றி ஒருவரும் எழுதுவதாயில்லை.

நாம் இன்று வளாக வாழ்வின் இறுதிக்கட்டத்தை நெருங்கும் வேளையில், எம்மை ஒரு கணம் எடைபோட்டோம். நாம் சாதித்தவை என்ன? நாம் இழந்தவை என்ன? நாம் சாதித்தவற்றை விட இழந்தவை தான் கூடுதல் போல இருக்கின்றது. பல்கலைக்கழகம் என்றவுடன் மரநிழல்களிலும் மைதானக் கல் இருக்கைகளிலும் கவலையின்றி பரஸ்பர சிநேகிதமாய் பழகிடும் ஆண்-பெண் கூட்டமே முதலில் நினைவில் வரும். ஆனால் கழக வாழ்வில் கல்லிருக்கைகள் கனவாய்ப் போனதேன்?

எமது பல்கலைக்கழகத்தில் இது ஒரு புரையோடிப் போன ஒரு மூட நம்பிக்கையா? கலாசாரப் பின்னணியின் தாக்கமா? வயதுக்கேற்ற பக்குவமின்மையா? தாழ்வு மனப்பான்மையா? இவற்றுள் எது அல்லது எவை இதற்கான காரணம் அல்லது காரணங்கள் என்று எமக்கு சரியாகத் தெரியவில்லை.

முதலிலே இது பொறியியற் பீடத்திற்கான தனிப்பட்ட ஒரு பிரச்சினை போல எமக்குத் தோன்றியது. ஆனால் வேறு சில பீட மாணவ, மாணவிகளின் உறவு நிலைகளிலும் இதேபோக்குகளை அவதானிக்க முடிந்தது. எனவே இது எமது பல்கலைக்கழகத்திற்குரிய தனிப்பாணியிலான ஒரு வித கலாசாரம் போலுள்ளது என எண்ணத் தோன்றியது!

வளாகத்திற்கு வரமுன் எத்தனை எத்தனை எதிர்பார்ப்புகள், தடி எடுக்காத வாத்திமார், தேவையானால் மட்டுமே விரிவுரை செல்வது, சுற்றுலாக்கள் பகிஷ்கரிப்புகள் என்று அடுக்கிக் கொண்டே போகலாம். அதோடு 'ரியூசனிலை' எங்களோடு கதைக்காத பெண்பிள்ளைகள் இங்கு வந்தபின் கதைப்பினம் என்றவாறு கனவு இப்படியே நீண்டு கொண்டே போகும். எல்லாம் சரி ஆனால் ஆண்-பெண் தொடர்பாடல் மட்டும் பழைய 'ரியூசன் கிளாஸ்' மாதிரித்தான். ஆகவே அதைப்பற்றி எழுதத்தானே வேண்டும். பொதுவாக ஆண்-பெண் சமாச்சாரங்கள் என்றால் அலசல், கண்ணோட்டம் என்று தொடங்கிவிடுவார்கள். ஆனால் உண்மையாக எமது நோக்கம் அதுவல்ல. இப்படியான ஒரு பிரச்சினை இங்கே இருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட வேண்டும். அதற்கு ஏதாவது ஆக்கபூர்வமான பரிகாரம் தேட வேண்டும் என்பதாகும்.

பேராதனை வளாகத்தில் சகோதர இன மாணவர்களோடு ஒப்பிட்டுப் பார்க்கின்ற போது எமது இன மாணவர்களிடையே தொடர்பாடல் (Interaction) இல்லையென்றுதான் கூறவேண்டும். பல்கலைக் கழகத்தில் இயங்குகின்ற சங்க உறுப்பினர்களைத் தவிர மற்றைய மாணவர்கள் தொடர்பாடலை மிக குறைவாக வைத்துள்ளனர்.

இந்த சங்க உறுப்பினர்கள் கூட ஏதோ ஒரு கடமையுணர்வோடு நட்புறவு குறைந்த நிலையில்தான் செயற்படுகின்றார்கள் போல இருக்கின்றது என்றாலும் விதிவிலக்காக இருப்பவர்களும் உண்டு.

சில மாணவர்களின் பழக்கவழக்கங்களும் இதற்கான ஒரு காரணமாக அமையலாம் என எண்ணுகிறோம். எமது பீடத்திலே ஒரு சில மாணவர்கள் ''வாளிகள்'' என்கின்ற பட்டத்தை கொண்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது. இங்கு நாம் எமது கருவுடன் முரண்படுவதாக உங்களுக்கு தோன்றலாம். அளவுக்கு மீறிய தேவையற்ற தொடர்பாடல்கள் இருபாலர்களையும் பாதிக்கச் செய்யும். ஒருவர் மீது ஒருவர் வெறுப்புக்கொள்ள இது வழிசமைக்கும். பொதுவாக பெண்கள் தரப்பிடமிருந்து வருகின்ற சில விமர்சனங்கள் சாதாரண மாணவனைக் கூட பாதிப்படையச் செய்கிறது. இதனால் சாதாரண மாணவர்கள் தொடர்பாடல்களை ஏற்படுத்த தயங்குகிறார்கள்.

பாடசாலைகளில் ஆண்கள், பெண்கள் என்று பிரித்து வைத்துதான் பாடம் போதிக்கப்படுகின்றது. ஆண்கள் பெண்களோடு எவ்வாறு பழக வேண்டும் என்பதில் ஆசிரியர்கள் மிக கவனமாக இருக்கின்றார்கள். இது தேவையானதொன்று. அந்த பருவத்தில் அப்படியான ஒரு கட்டுப்பாடு அவசியம்தான். அது மேற்கத்தைய கலாச்சாரத்தோடு முரண்படலாம். அதைப்பற்றி கதைக்க நாம் விரும்பவில்லை. அந்தக் காலகட்டத்தில் தான் ஆண்கள் பெண்களையும், பெண்கள் ஆண்களையும் கேலி செய்யும் படலமும் ஒரு போட்டிமிக்க ஒரு நிலையும் உருவாகின்றது. வகுப்பு மாணவனை இன்னொரு மாணவியுடன் இணைத்து கதை பரப்பும் கேலிகளும் இடம் பெறுகின்றது. இது தவிர்க்க முடியாததொன்று. ஆனால் இதை பல்கலைக்கழக மட்டத்தில் அனுமதிப்பது சற்றும் ஏற்றுக் கொள்ள முடியாததொன்று.

எனினும் இவற்றையும் ஒரு கேலி நிகழ்வாக எடுத்துக் கொள்ளலாம். எனினும் பெரும்பான்மையான மாணவ, மாணவிகள் இதை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்பது மட்டும் உறுதி. இவ்வாறான கேலிகளிலிருந்தும் வீணான விமர்சனங்களிலிருந்தும் தப்புவதற்காக தொடர்பாடலை அறவே வெறுப்பவர்களும் இருக்கின்றார்கள். இன்னும் ஒரு சில ஆண்டுகளின் பின் இந்த பரந்த உலகின் பல்வேறு மூலைகளில் பலரோடும் தொடர்பாடல்களை வளர்க்க வேண்டிய நாம் அன்றைய பாடசாலை நிலைக்கு எம்மை தள்ள நாம் அனுமதிக்க கூடாது. இது ஒரு கணம் உங்களை சிந்திக்க வைக்கவில்லையா?

எமது வளாகத்திற்கு பல்வேறுபட்ட பாடசாலைகளிலிருந்து மாணவர்கள் வருகின்றார்கள். ஆண்கள் பெண்களுக்கான தனியான பாடசாலைகளிலிருந்தும், கலவன் பாடசாலைகளிலிருந்தும் வருகின்றார்கள். கலவன் பாடசாலைகளிலிருந்து வருகின்ற மாணவர்களிடம் பொதுவாக ஆண்கள் - பெண்கள் தொடர்பாடல் சகஜமாகவே இருக்கின்றது. இம்மாணவர்கள் வளாகத்தில் சாதாரணமாக பழகும் போது மற்றைய மாணவ சமுதாயத்தில் அதை இலகுவாக ஜீரணிக்க முடியவில்லை என்பதை அவதானிக்கமுடிகின்றது. இது ஏன் என்பதுதான் எமக்கு புரியவில்லை. இது இயலாமையின் வெளிப்பாடா? அல்லது வேறு ஏதாவதா எனத் தெரியவில்லை?

ஏனைய பல்கலைக்கழகங்களுடன் ஒப்பிடுகின்ற போது எமது வளாகத்தில் தான் இந்தப் பிரச்சனை இருப்பது புலனாகின்றது. இதற்கு மற்றைய பல்கலைக்கழங்களில் தமிழ் பேசும் மாணவர்கள் மிகக்குறைவு. அதன் நிமித்தம் பழக வேண்டிய ஒரு கட்டாய சூழல் தான் அவ்வாறான ஒரு அந்நியோன்ய நிலைக்கு பேண வழி சமைக்கின்றதா என சிந்திக்கத் தோன்றியது. எனினும் இதை ஒரு முழுமையான காரணமாக ஏற்றுக் கொள்ள முடியாது. எமது வளாகத்தில் சகோதர இன மாணவர்கள் பெருந்தொகையில் இருந்தும் அவர்களுக்கிடையில் சிறந்த நட்புறவு நிலவுவது இதற்கு ஒரு சாட்டையடியாக அமையாதா? அப்படியாயின் தமிழர்களின் கலாசார பின்னணிதான் காரணமா?

சற்று வித்தியாசமாக நோக்கின், பெண்கள் ஆண்களுடனோ அல்லது ஆண்கள் பெண்களுடனோ சகஜ நிலையான ஒரு நட்புறவு இருப்பின் சிலவேளைகளில் அவர்களது திருமண காலத்தில் சில சிக்கல்களை ஏற்படுத்தலாம் என ஆண்கள், பெண்கள் மட்டத்தில் கருதப்பட்டிருக்கலாமா? காதலிக்கும் மாணவர்களோடு மற்றைய மாணவர்கள் சிறந்த தொடர்பாடலை ஏற்படுத்த தயங்காமை இதற்கு ஒரு சான்றாக அமைகிறது போல உள்ளது. ஆண்கள் பெண்கள் ஒரு சகஜமான உறவுகளை வைத்திருப்பின் ஏதாவது காதல் வளர வழி கோலுமோ என நினைத்துத்தான் தொடர்பாடல்களை சற்று தொலைவில் வைத்தார்களோ தெரியவில்லை.

சிரேஷ்ட மாணவர்கள் பகிடிவதை காலகட்டத்தில் அரசியல்வாதிகளாக களத்தில் இறங்குவதை அவதானிக்க முடிகின்றது. பகிடிவதையில் இறுதியாக ''ராகிங் முடிந்தவுடன் கதைக்க வேணும். உங்கடை சீனியஸ் சிஸ்ரர்கள் போல நடக்காமல் கதைக்க வேணும்... சிரிக்க வேணும்...'' என்பார்கள். அதற்கு கனிஷ்ட மாணவிகளும் பலமுறை தலையசைத்து, நாணிக்கோணி உடன்படுவார்கள். ஆனால் பின்பு நடப்பது என்ன?

''ராகிங் முடிந்தபின் அவரவர் அவர்பாடு, காணாதவர்கள் போல நடந்து கொள்வார்கள். இந்நிலைதான் ஏன் என்று தெரியவில்லை. இது ஒரு தொடர்கதையாகவே இருக்கின்றது. இந்த முகமூடி நாடகம் தேவைதானா? சிரேஷ்ட மாணவர்களிடம் உள்ள எண்ணமோ அவர்கள் பார்க்கட்டும் நாமும் பார்ப்போம் சிரிப்போம் என்பதாகும். (எல்லாம் அனுபவரீதியான உண்மைகள்தான்) சிரிக்கவே இந்நிலை என்றால் ஒரு சீரிய தொடர்பாடலை வைத்திருக்க முடியுமா? இல்லைத்தானே? மறுபுறத்தில் கனிஷ்ட மாணவர்களோ தாமாக கதைக்க தயக்கம். இதற்கு பல காரணங்கள் இருக்கத்தான் செய்கிறது.

1. தாமாக சிரிக்க அவர்கள் சிரிக்காமல் விடப்படலாம்.
2. தாம் வயதில் இளையவர்கள் என்கிற எண்ணம்
3. சிரேஷ்ட மாணவர்கள் கதைத்தால் கதைப்போம் என்கிற சிந்தனை.
4. என்ன விடயத்தை கதைப்பது.

சில வேளைகளில் இவற்றிற்கான காரணங்கள் சரி போலவும் தென்படுகிறது. எனினும் இதற்கான உண்மையான காரணங்கள் ஆராயப்பட வேண்டியது முக்கியமானது போல தெரியவில்லையா? எப்படியோ இருதரப்பாரும் இவ்வாறு நடந்து கொண்டால் பகிடி வதையின் நோக்கம் தான் என்ன?

மாணவர்களே இது பல்கலைக்கழகம். இதை பாடசாலையாக மாற்ற முயற்சிக்க வேண்டாம். சிரேஷ்ட மாணவர்களே! நீங்கள் தான் ஏன், உங்கள் கனிஷ்ட மாணவிகளை எவ்வாறு எந்தவிதமான அனுமதியின்றி சுதந்திரமாக பகிடிவதைக் குட்படுத்தினீர்களோ அதேபோல் அதன் முடிவின் பின்னரும் அவர்களோடு ஒரு சிறந்த நட்புறவுகளை ஏற்படுத்தத் தயங்காதீர்கள். சில சமயங்களில் உங்களது வார்த்தைப் பிரயோகங்கள் நிச்சயமாக கனிஷ்ட மாணவிகளை நிலைகலங்கச் செய்திருக்கும். இப்படியான நிலைமைகளைத் தவிர்க்க முயற்சி செய்யுங்கள்.

ஆகவே பகிடிவதை காலகட்டத்தில் ''நாம் கதைப்பம் சிரிப்பம் நீரும் கதைக்க வேணும்'' என்ற வாக்குறுதிகளை அளிக்கமுன் அவற்றை நடைமுறைப்படுத்துவோம் என திடசங்கற்பம் பூணுங்கள். இதேபோல் கனிஷ்ட மாணவிகளே! நீங்களும் உங்களுடன் எந்தவித அறிமுகமின்றி தொடர்பாடல்களை ஏற்படுத்திய சிரேஷ்ட மாணவர்களுடன் கதைக்க தயங்காதீர்கள். சமுதாயம் கலாச்சாரம் என்ற கனமான பதங்களை பயன்படுத்தி விலகி விடாதீர்கள். ஆண்-பெண் தொடர்பாடல்கள் இங்கு மட்டுமல்ல உலகின் எந்தவொரு பாகத்திலும் மிகமுக்கியமானது. வீட்டினுள் முடங்கப் போகும் பெண்கள் நீங்கள் இல்லை. உலகின் பல்வேறு பாகங்களில் தடம்பதிக்க இருக்கும் மங்கையர்கள் என்பதை மறந்துவிடாதீர்கள்.

ஆண்கள், பெண்களோடு கதைக்கின்ற போது அவர்களின் முன்னிலையில் தம்மைப் பிழையாக வெளிப்படுத்தி விடுவோமா என எண்ணி தமது தொடர்பாடல்களை குறைத்துக் கொள்ளுகிறார்கள். மறுதலையாக பெண்களின் நிலையும் அவ்வாறு அமையலாம்.

இதைவிட பெண்கள் தரப்பிலிருக்கும் சீனியர் மாணவிகளின் ஆலோசனைக் குழுக்களின் (advice groups) பிழையான வழிநடத்தல்களும் பிரதான பங்கை வகித்ததாக தெரியவருகிறது. சிரேஷ்ட மாணவிகளால் கனிஷ்ட மாணவிகளுக்கு வளாகச் சூழல் நடைமுறைகள் பற்றியும் ஆண் மாணவர்களுடன் பழக வேண்டிய முறைகள் பற்றியும் தவறான விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன என்பதை அறிந்தோம்.

இவ்வகையான தவறான ஆலோசனைகள் ஒரு சிலரின் நடத்தையால் அவர்களுக்கு ஏற்படும் கசப்பான நிகழ்வுகளின் பிரதிபலிப்புகளாக இருக்கலாம். ஒருசில நிகழ்வுகளுக்காக ஒரு முழுசமுதாயத்தையும் தப்பாக எடைபோடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. இதன்விளைவாக ஒரு சமுதாயத்தின் வளர்ச்சி தடைப்படுகிறது என்பதை இவ் ஆலோசனைக் குழுக்கள் கவனத்தில் எடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்.

ஆனால் தற்போது சிரேஷ்ட கனிஷ்ட தமிழ் மாணவிகள் வெவ்வேறு விடுதிகளில் பரந்து இருப்பதால் இதன் தாக்கத்திலிருந்து ஓரளவு விடுபட்டிருப்பார்கள் என எண்ணுகிறோம். வேகமாக வளர்ந்து வரும் இந்த கணணியுகத்தில் தன்னிச்சையாக செயற்படும் குழுக்களின் பிழையான வழிநடத்தலை பெண்கள் கருத்தில் கொள்ள மாட்டார்கள் என நம்புகிறோம்.

இதனாலேயோ என்னவோ அண்மையில் எமது பீடத்திற்கு தெரிவான மாணவ, மாணவிகளிடையே நல்லதொரு தொடர்பாடல் முறைகள் இருப்பது அவதானிக்க கூடியதாகவுள்ளது. இது எமக்கு நம்பிக்கையூட்டுவதாக இருக்கிறது. இது எமது நோக்கத்திற்கான ஒரு ஒளிக்கீற்றாக அமையட்டும்.

இறுதியாக எது எவ்வாறு இருந்த போதிலும் இதற்கு மேல் எம்மால் எதையும் யோசிக்க முடியாமல் இருக்கிறது. இதற்கான சரியான காரணங்களை அறியும் பொறுப்பை உங்களிடம் கையளிக்கின்றோம். எது எப்படியாக இருந்த போதும் மாணவர்களின் கேலிப் பேச்சுக்களும் ''சள்'', ''வாளி'' போன்ற தேவையற்ற வார்த்தைப் பிரயோகங்களும் கொண்ட பல்கலைக்கழகத்திற்குரிய ஒரு கலாச்சாரமே இந்த தொடர்பாடல் எமது வளாக வாயிலே தொங்கி நிற்க பிரதான காரணம் என உறுதியாக கூறுகிறோம். இனி பொறுப்பேற்கும் தமிழ்சங்க செயற்குழு இது தொடர்பான ஒரு கலந்துரையாடல் ஒன்றை ஒழுங்குபடுத்தி இதற்கான ஒரு சிறந்த பரிகாரத்தை காண வேண்டுகின்றோம்.

''தொங்கி நிற்கும் தொடர்பாடலை
தொலை தூரம் போக்கிடவே
தோளோடு தோள் கொடுக்க
உங்களை நாம் வேண்டுகிறோம்''

*''இப்ப பஜீரோவும் வேண்டாம், செல்ரெல்லும் வேண்டாம். என் கனவு சிதையா வாழ்வு தந்தாலே போதும் என்ற நிலை. அதிலையும் பஜீரோ வேண்டவே வேண்டாம். அதுவும் யாழ்ப்பாணத்திலை பஜீ ரோவிலை போனால் கண்ணிவெடி யிலை கயிலாயம் போக வேண்டியது தான். எங்கடை சின்னச் சின்னக் கனவுகளெல்லாம் எவ்வளவு சிம்பிளாகச்சிதைந்து போகுது. கண் காணாத இடத்திலை நான் கார் ஓட்டினாத்தான் என்ன? கவச வாகனம் ஓட்டினாத்தான் என்ன? சொந்த ஊரிலை ஓடுற மாதிரி வருமே?''*

## கனவு சிதைந்ததொரு வாழ்வு

ப.பீரதீபன், இறுதிவருடம், பொறியிற் பீடம்

''செல்வியின்ரை இரண்டாவது பிள்ளை செப்ரிசீமியா வந்து செத்துப் போச்சுது. செல்வி பாவம். அதுவும் ஆம்பிளைப் பிள்ளை எண்டதால சரியான கவலை அதுக்கு. செல்விக்கு....'' என்றவாறு மேலும் தொடர்ந்தது அம்மாவின் கடிதம். வீட்டு விஷயம் கனக்க கிடக்கவும் அம்மா ஏன் செல்வியைப் பற்றி எனக்கு எழுதிறா? நாட்டு நிலைமை மோசத்தை விளக்கிறதுக்காக எழுதிறாவோ? இல்லாட்டி யாழ்ப்பாணத்திலை வாற புது வியாதிகளை எனக்கு அறிமுகப்படுத்தோணுமெண்டு செப்ரிசீமியா பற்றி எனக்குத் தெரிஞ்சிருக்காதெண்டு எழுதுறாவோ? இல்லாட்டி உன்னோட படிச்ச செல்வி இரண்டு பிள்ளை பெத்து ஒன்று செத்தும் போச்சுது நீ இன்னும் கூட படிச்சுக் கொண்டுதானிருக்கிறாய் என்று குத்திக் காட்டுறாவோ? இதிலை நான் யோசிக்கிறதிலை கடைசியாய்ச் சொன்னதாத்தான் இருக்கும். ஏனென்றால் படிக்கிற காலத்திலேயே நான் செல்வியோட கதைக்கிறதில்லை எண்டது அம்மாவுக்குத் தெரியும். செல்விக்காண்டி நான் பரிதாபப்படப் போறதில்லையென்டுறதும் தெரியும். உந்தக் கடிதம் நிச்சயம் குத்திக் காட்டுறதுக்காய்த்தான் இருக்கும்.

செல்வியைப் பற்றி ஒருக்கால் யோசிச்சால் அவான்ரை லெவல் தான் ஞாபகத்துக்கு வரும். இவ்வளவுக்கும் செல்வி ஒன்றும் ஆஹோ ஓஹோ என்று வடிவெண்டுமில்லை. ஆனாலும் பொம்பிளைப் பிள்ளையள் எல்லாருக்கும் A/L

படிச்சு முடிக்குமட்டும் பொதுவாக இருக்கிற லெவல் செல்விக்குமிருந்தது.

உந்தப் பொம்பிளைப் பிள்ளையள் எல்லாரும் இப்பிடித்தான். படிக்கிற காலத்தில ஊர்வசி, ரம்பை என்ற நினைப்பு. எல்லாரும் சொல்றாங்கள் எண்டு தான் நானும் சொல்றன். ஆனால் சத்தியமாக எனக்கு ஊர்வசியையும் தெரியாது, ரம்பையையும் தெரியாது. சிலவேளை ஊர்வசிக்கும் ரம்பைக்கும் லெவல் இல்லாமலே இருந்திருக்கும். யார் கண்டது. எப்பவுமே அரைகுறையள் தான் கூட ஆட்டம் காட்டுறதுகள். சைக்கிள்ளை வரேக்கையே தூரத்தில வாற பெடியள் யார் யாரெண்டு பார்த்திற்று கிட்ட வரேக்கை தலையைக் குனிஞ்சு கொண்டு போகுங்கள். நான் நினைக்கிறது பொம்பிளையளுக்கு கடவுள் கழுத்தைப் படைச்சதே கீழே தொங்கப் போடத்தானோவென்று. ஆனால் அதுகள் அப்படியில்லை. தங்களுக்குத் தெரிஞ்ச ஆட்களைக் கண்டு சிரிக்குங்கள். அதிலை இருந்து தான் எனக்குத் தெரிஞ்சுது உதுகள் தூரத்திலேயே யார் யார் வாறதெண்டு பார்த்திற்று கிட்ட வர பார்க்காத மாதிரிப் போகுதுகளெண்டு. எங்கடை தமிழ்ப் பெட்டையளுக்கு ஒரு நினைப்பிருக்குப் போலை. மற்றவை காணாமல் எதுவும் செய்யலாம் மற்றவை கண்டாத் தான் கலாசாரத் துரோகமென்று. எல்லாம் போலி நடிப்பு.

எனக்கு செல்வியிலை ஆத்திரம் வந்ததுக்கு முதற் காரணம் என்னெண்டால் நான் பெடியளோட பகிடிவிட்டுக் கதைச்சுக் கொண்டு றோட்டிலை வரேக்கை நேரெதிராய் செல்வி வந்து கொண்டிருந்தது. பெடியளின்றை பகிடிக்கு சிரிச்சுக் கொண்டு நான் முன்னுக்கு நிமிர்ந்து பார்க்க நேரெதிரே வந்த செல்வி நினைச்சுது தன்னைத்தான் பார்த்து நான் சிரிக்கிறனென்று. அவ உடனே நான் ஏதோ செய்யக்கூடாததை செய்து போட்டன் எண்டது மாதிரி கழுத்தை வெட்டி மற்றப்பக்கம் முறிப்பெண்டு முறிச்சா. எனக்கு வந்த ஆத்திரத்திற்கு இப்ப விட்டாலும் கழுத்தை அப்படியே முறிச்செறிவன். அவாக்கு ஒரு நினைப்பு தன்னைப் பார்த்து சிரிக்க நாங்கள் ஆசைப்படுறம் என்று.

ஊரிலை பெட்டையளின்ரை லெவல் எல்லாம் **A/L** படிக்கும் மட்டும் தான். அண்ணாவின்ரை பெடியள் அடிக்கடி கதைப்பாங்கள் **"A/L** படிச்சு முடிக்குமட்டும் இவை இவைக்கு ஒவ்வொரு செற் இருக்கும். ரிசல்ட்ஸ் வந்து **F** கொடி பறக்கத் தொடங்கினால் செற்றெல்லாம் உடைஞ்சு ஒவ்வொருத்தரும் தனித்தனியத் திரிவினம். அப்ப தான் காய் போடச் சரியான தருணம்'' என்று. அது மாதிரித்தான் எனக்கும் சத்தியமாக நடந்தது. படிக்கேக்கை நான் படிச்சது ரவுணிலை. செல்வி படிச்சது பக்கத்தில உள்ள பள்ளிக் கூடத்திலை. ரவுணிலை நான் 75 எடுத்தாலும் ஊரிலை கதைக்காதுகள். ஆனால் செல்வி ஊரிலை 35 எடுத்தாலும் ''செல்வி சரியான கெட்டிக்காரியாம். அவளுக்குத்தானாம் **highest** மாக்ஸாம்'' என்று சின்னத்தவ்வல் தொடக்கம் அம்மம்மா மட்டும் கதைப்பினம். கோயிலுக்குப் போனாலும் ''கந்தையரின்ரை பெட்டை நல்ல ரிசல்ட் எடுப்பாளாம் மெய்யே தம்பி'' என்று என்னட்டையே கேப்பாங்கள் ''இல்லை அவள் பெயில் விடுவாள். நான் தான் பாஸ் பண்ணுவன்'' என்று என்னெண்டு சொல்லுறது ''ஓமோம், அவாக்குத் தான் எல்லாம் **Highest** '' என்று சொல்லிப் போட்டு ''ரிசல்ட்ஸ் வரட்டும் பார்ப்பம்'' என்று பொருமிக் கொண்டு நிற்க வேண்டியது தான்.

செல்வியும் வஞ்சகமில்லாமல் **A/L** சோதனையிலும் **Highest** க்குத்தான் செய்து விட எனக்குக் கம்பஸ் கிடைச்சுட்டுது. அப்பதான் அந்த அதிசயம் நடந்தது. நான் றோட்டிலை வர செல்வி என்னைப் பார்த்துச் சிரிக்கிற மாதிரி இருந்தது. எனக்கு ஒரு டவுட் ''பின்னாலை யாரேன் பழசுகள் வருகுதுகளோ? இல்லாட்டி யாரேன் பெட்டையள் வருதுகளோ? என்று. திரும்பி ஒருக்காப் பார்த்தன். ஆனால் பின்னாலை யாருமில்லை. அட செல்வி என்னைப் பார்த்துத்தான் சிரிக்குது. பொதுவாக ஆம்பிளையளுக்கு தன்மானம் என்ற ஒன்று கொஞ்சம் கூட இருக்கிறது வழமை. ஆனால் சிலதுகளுக்கு மருந்துக்கும் இருக்காது. அது வேற விஷயம். அப்ப தான் என்ரை தன்மானம் விழிப்படைஞ்சுது. ''நான் சாதாரண மனிசனாய் இருக்கேக்கை என்னைப் பார்த்துச் சிரிச்சா உனக்குக் குறைஞ்சு போகும். கம்பஸ் கிடைக்குமெண்டவுடன் சிரிச்சா ஒன்றும் குறையாது போல'' என்று உள்மனம் உசுப்பேத்த, அண்டைக்குத்தான் வாழ்க்கையிலை சந்தோஷமான நாள். செல்வி யாரென்றே எனக்குத் தெரியாதது போல நெவர் மைண்ட் ஸ்ரைலிலை எடுத்தெறிஞ்ச பார்வையோட சிரிக்காம நான் என்ரை பாட்டிலை போனதை நினைக்க எனக்கு இண்டைக்கும் சந்தோஷம் தாங்க முடியேல்லை. பழிக்குப் பழி. மனிசனாய் இருக்கேக்கை மதிக்காதவனை மறந்தும் மதிக்கக்கூடாது என்பது என்ரை ஆழ்மனசிலை பதிஞ்சு போன விடயம்.

இந்தப் படிப்பை வைச்சு செல்விக்கு நான் அடிச்ச லெவலிற்குத் தான் பின்னுக்கு படிப்பாலை சரியாக் கஷ்டப்பட்டிட்டனோ என்று நான் யோசிக்கிறதுண்டு. படிப்பு வாழ்க்கையின்ரை ஒவ்வொரு படியினையும் எத்தனை சந்தோஷத்தை தியாகம் செய்திருக்கிறன். அதை இப்ப யோசிச்சாலும் கவலை தான்.

இந்தியன் ஆமி போனாப்பிறகு எல்லாச் சனமும் கொழும்பு கண்டி என்று **trip** அடிக்க நாங்கள் மட்டும் **A/L** க்கு படிச்சதும் பிறகு சண்டை தொடங்க **A/L** ம் இல்லாமல் **Trip** ம் இல்லாமல் வானத்திலை பொம்பர் எண்ணினது தான் மிச்சம். அட அதுதான் பரவாயில்லை. எங்கடை தலைமுறையே வளர்ந்து ஒரு பருவத்திற்கு பதமாய் வந்து இனித்தான் வாழ்க்கையை அனுபவிக்கோணும் என்றிருக்க, கணக்காய் எய்ட்ஸ் எண்டதை கண்டு பிடிச்சாங்கள். அதுக்குப் பிறகு செல்வி மட்டுமில்லை எல்லாப் பெடி பெட்டையளைப் பார்த்தும் ஒதுங்க வேண்டியதாய் போச்சு. கல்யாணம் செய்யவே கன ரெஸ்ற் செய்யோனும் என்ற நிலை.

முந்தியொருநாள் சேர்ச்சிலை நடந்த கூட்டத்திலை **(f)** பாதர் ஒராள் சொன்னார் ''வடபகுதிப் பிரச்சினையளாலை அங்குள்ள சிறார்கள் உளவியல் ரீதியாகப் பாதிக்கப்படப் போகிறார்கள். ஓடியாடித் திரிய வேண்டிய வயதிலை, அச் சுதந்திரம் மறுக்கப்பட்டு இருப்பதன் தாக்கம் பின்னாளில் இருக்கும்'' என்று. அப்ப உடனேயே எனக்கு கேள்வி ஒன்று கேட்கோணும் என்று ஆசை வந்தது. ''நாங்கள் கல்யாணம் கட்டி குடும்பமாக இருக்க வேண்டிய வயதிலை படிச்சுக் கொண்டிருக்கிறது பிற்காலத்திலை பாதிப்பைத் தராதோ'' என்று. ஆனால் என்னெண்டு கேட்கிறது. கேட்டால் ''தம்பிக்கு இப்ப உதுதான் தேவைப்படுது என்பாங்கள்'' அதுக்காண்டி பேசாம இருக்கோணும். எப்பவுமே போலியாக நடிக்கோணும். போலியாக நடிச்சால் தான் நல்ல பெடியன் என்பாங்கள். வெளிப்படையாச் சொல்ல வேண்டியதைச் சொன்னால் ''ஒற்றை ரோட்'' என்று சிம்பிளாகச் சீல் குத்திப் போடுவாங்கள்.

முந்தி நாங்கள் பள்ளிக்கூடம் போக பஸ்ஸிற்கு காத்து நிற்கேக்க அதாலை போற அம்மா ஆட்களுக்குத் தெரிஞ்ச எஞ்சினியர் எங்களைக் காரிலை ஏத்திக் கொண்டு போறவர். அப்ப சின்னனிலை நாங்கள் அவரைப்பற்றி ''எவ்வளவு நல்ல மனுஷன் , தங்க மனசு'' எண்டெல்லாம் கதைக்கிறனாங்கள். எனக்கும் கம்பஸ் கிடைச்சவுடனேயே கனக்க கனக்க கற்பனை. ''அவரை மாதிரியே நல்ல பேரெடுக்கோணும். அப்படியே பஜீரோவிலை போகேக்கை றோட்டிலை போற தெரிஞ்ச பெரியாக்களை ''ஐயா ஏறுங்கோ'' என்றும் ''அம்மா என்ன தனியாப் போறியள். இதிலை ஏறுங்கோ'' என்றெல்லாம் நல்ல பணிவாய்க் கதைத்து உதவி செய்யோணும், அம்மாவை அப்படியே பஜீரோவிலை கொண்டு போய் கோயில்ல விட்டுட்டு அவடத்தடியிலை நானும் பக்தியாய் நிண்டால் அம்மாவுக்கும் எவ்வளவு சந்தோஷமாய் இருக்கும்'' என்றெல்லாம் கற்பனை விரிந்ததுண்டு. ஆனால் இப்ப பஜீரோவும் வேண்டாம், செல்ரெல்லும் வேண்டாம். என் கனவு சிதையா வாழ்வு தந்தாலே போதும் என்ற நிலை. அதிலையும் பஜீரோ வேண்டவே வேண்டாம். அதுவும் யாழ்ப்பாணத்திலை பஜீரோவிலை போனால் கண்ணி வெடியிலை கயிலாயம் போக வேண்டியதுதான். எங்கடை சின்னச் சின்னக் கனவுகளெல்லாம் எவ்வளவு சிம்பிளாகச் சிதைந்து போகுது. கண் காணாத இடத்திலை நான் கார் ஓட்டினாத்தான் என்ன? கவச வாகனம் ஓட்டினாத்தான் என்ன? சொந்த ஊரிலை ஓடுற மாதிரி வருமே?

எத்தனை எதிர்பார்ப்புகள். செல்வி தொடக்கம் என்னோடை படிச்ச எல்லாரும் தங்கடை சொந்தக் காலிலை நிற்கிற பலம் பெற்றிருக்க நாங்கள் மட்டும் இப்பவும் யாரையேன் நம்பியிருந்தபடி. என்னோடை படிச்சவன் கம்பஸ் கிடைக்காததாலை வீட்டுக்கு காசனுப்புறான். உலகத்தையும் நல்லாப் படிச்சிற்றான். நாங்கள் இன்னும் சின்னப் பெடியனாய் எங்களுக்குள் நினைத்துக் கொண்டிருக்கிற வாழ்வு, சமூகத்திலையிருந்து முழுசாக அன்னியப்பட்டு நிற்கிற நிலை. இந்த வயதிலை குடும்பத்திற்கு உதவி செய்யாம பிறகு எப்ப உதவி, என்ரை கடனைத் தீர்க்கிறது. அப்படியெண்டால் விலாசத்திற்காகவா இந்தப் படிப்பு. நினைக்க நினைக்க வேதனையாய் இருந்திச்சு.

''மச்சான் கோர்ஸ் வேர்க் போட்டாச்சே? அட உதென்ன லெற்றரோட இருந்து யோசிக்கிறாய்? பெட்டையள் யாரேன் விசாரிக்குதுகளோ? என்று கேட்டுக் கொண்டு உள்ளுக்கை வந்வனைப் பார்க்க எனக்கு அந்த நேரத்திலை எரிச்சல் எரிச்சலாய் வந்துது. லெற்றர் வந்தால் பெட்டையிட்டையிருந்தெண்டும் கதைச்சால் வாளியெண்டும் கல்யாணம் கட்ட வேண்டிய வயசிலை கத்தித் திரியுற எங்கட நிலையை நினைக்க கேவலமாக இருந்திச்சு. ச் சாய்... நாங்கள் முழு மனிசனாய் மாற இன்னும் வருஷங்கள் தேவையோ?

With Best Compliments

From

# JEYA BOOK CENTRE

**Importers & Distributers of all kind of printed books**

Medical
Engineering
Computer
Management
Science books
School text books
Children books
Reference books
General readings etc... etc...

**Jeya Book Centre**
No. 91-99 Upper ground floor
Peoples' park complex
Colombo - 11
Tel : 438227, Fax : 332939

**Branch :**
688, Galle Road,
Colombo - 03
Tel : 580594



சங்க நிகழ்வுகளுடன்
ஓர் சங்கமம்

With Best Compliments
From

**JESCOM PRINTERS**

**N0. 1, Jesuit Street**
**Batticaloa.**

With Best Compliments
From

**Vel Murugan Stores**

**N0. 19, U.D.A. Building**
**Market**
**Batticaloa.**

நல்வாழ்த்துக்கள்

**நலம் விரும்பி**

# தமிழ் நாட்டுக்கூத்து மரபை ஆராய்ந்தே 'மனமே' நாடகம் எழுதப்பட்டது

மறைந்த பேராசிரியர் பி.ஆர்.சரச்சந்திர

*மறைந்த பேராசிரியர் எதிரிவீர சரச்சந்திர சிங்களப் பேராசிரியராக விளங்கியும் ஆக்க இலக்கியத்தில் ஈடுபட்டதோடு அவைக்காற்றும் கலைகளிலும் தனது பங்களிப்புகளை செய்தவர். சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நாவல்கள் எழுதியதோடு பல வானொலி நாடகங்களையும் பல மொழி பெயர்ப்புகளையும் படைத்திருக்கிறார். கேரள குமரன் ஆசான் பரிசு இலங்கையரான இவருக்கு வழங்கப்பட்டது பெருமைப்பட வேண்டிய விடயமாகும். இவர் இலங்கையின் தூதுவராக பிரான்ஸில் செயற்பட்டதோடு ஐக்கிய நாடுகள் கல்வி, விஞ்ஞான பண்பாட்டு நிறுவனத்துடன் (UNESCO) நெருங்கி செயற்பட்டவருமாவார். இவர் எமது பல்கலைக்கழக முன்னால் உபவேந்தர் என்பதும் குறிப்பிடத்தக்கது.*

*இவரின் 'மனமே' என்ற மரபுவழி சிங்களநாடகம் சிங்கள நாடகத்துறையில் ஒரு மைல்கல்லாக கணிக்கப்படுகிறது. இதன்மூலம் அவர் சிங்கள நாட்டிய நாடக வடிவத்திற்கு உயிர் கொடுத்தார் என்றால் அது மிகையாகாது. இந்த மரபுவழி நாட்டுக்கூத்துக்கு ஊற்றுக்கண் எமது தமிழ் வடமொழி, தென்மொழி நாட்டுக்கூத்துக்களும் அசைவுகளும் மெட்டுகளும்தான் என்று அவர் கூறியிருப்பது எம்மை பெருமைப்பட வைக்கிறது.*

*பேராசிரியர் எதிரிவீர சரச்சந்திரவின் மறைவையொட்டி 11.09.96இல் தமிழ்ச்சங்கம் நடத்திய நிகழ்வையிட்டு அவரின் கட்டுரையை இங்கு தருகிறோம்.*

வரலாற்றின் எல்லா காலகட்டத்திலும் தமிழ், பண்பாடுகளுக்கிடையே பரஸ்பர உறவுகள் இருந்து வந்தன. இன்றைய சிங்கள கிராமிய கலாச்சாரத்தை ஆராயும் பொழுது இவ்வுண்மை ஐயந்திரிபட வெளிப்படுகிறது. இலங்கையின் சில பாகங்களில் உள்ள சடங்கு முறைகள் பத்தினி, ஐயனார் ஆகிய இந்து தெய்வங்களின் வழிபாட்டினை ஆதாரமாகக் கொண்டவை. ''மடுவ'' போன்ற பத்தினி வழிபாட்டுடன் தொடர்புடைய சடங்குகள் சிலப்பதிகாரத்தை ஆதாரமாகக் கொண்டவை. இந்து சடங்குகளை அடிப்படையாகக் கொண்டே பலவிதமான நாட்டுக்கூத்து வடிவங்கள் உருவாகின. உதாரணமாக ''சொக்கறி'' எனப்படும் கூத்து வயலில் நெல்லை அறுவடை செய்து சூடுமிதிக்கும் களத்தில் ஆடப்படுவதாகும். ''கமத்த'' என அழைக்கப்படும் சூடு மிதிக்கும் களம் வட்ட வடிவமான அமைப்பைக் கொண்டது. ''சொக்கறி'' கூத்து எழுந்த பின்னணி அதற்கு உரிய அரங்கை வட்டக்களரியாக அமைக்கும் தேவை உண்டாக்கியது. புராதன நாடக அரங்குகளான ஆங்கில நாட்டின் ''மம்மர்'' நாடகங்கள் சமஸ்கிருதத்தின் மெருகு பெற்ற நாடக வடிவங்கள் ஆகியவற்றிலும் இத்தகைய வட்டக்களரி முறையைக் காணலாம்.

தேரவாத பௌத்த மதம் இந்து மதத்திலிருந்து பல அம்சங்களை உள்வாங்கியும் ஜீரணித்தும் கொண்டது. இந்து கடவுளர்களை பக்தி செலுத்தி வணங்கும் முறைகள் பௌத்தத்தில் தமிழ் மரபு ஊடாக புகுந்து கொண்டன. உதாரணமாக விஷ்ணு, ஸ்கந்தகுமார (கதிர்காமக் கந்தன்), சரஸ்வதி, விநாயகர் (கனதெவியோ) ஆகிய வணக்க முறைகள் பௌத்தரிடம் பரவி உள்ளன. சரஸ்வதி கல்விக்குரிய தெய்வமாகும். கணேசர் வியாபாரம், தொழில் முயற்சி ஆகியவற்றின் வெற்றியை வேண்டி வழிபடும் தெய்வம். இத்தெய்வங்களை பௌத்தர்கள் வழிபடுகின்றார்கள் என்று சொல்வதைவிட காணிக்கையாகச் செலுத்தி அவற்றின் பாதுகாப்பையும் அனுக்கிரகத்தையும் வேண்டுகிறார் என்பதே பொருத்தமானது. வாழ்க்கையின் துன்பங்களையும் பிரச்சினைகளையும் தணிப்பதற்கும் தீர்ப்பதற்கும் இக்கடவுளரின் பாதுகாப்பு வேண்டப்படுகிறது. தேரவாத பௌத்தத்தின் இத்தகைய நோக்கு தம்மபதத்தில் உள்ள பின்வரும் வசனங்களில் வெளிப்படுகிறது.

''மானிடர் பயத்தின் காரணமாக இயற்கை பொருட்களான மலைகளையும் அடர்ந்த காடுகளையும் சோலைகளையும் வணங்குகிறார்கள். இது அவர்களுக்கு நிலையான ஆறுதலையும் துன்பங்கள் யாவற்றில் இருந்தும் விடுபட்டு கொள்வதற்கான வழியையும் கொடுப்பதில்லை''

சடங்கு முறையில் அமைந்த கிராமிய நாடக அரங்கினைப் பற்றியே நான் இதுவரை குறிப்பிட்டேன். ஆனால் இது உண்மையில் இரசிப்பதற்கும் சுவைப்பதற்கும் உரிய முழுமை பெற்ற நாடக வடிவம் அல்ல. அத்தகைய நாடகவடிவம் சிங்களத்தில் உருவாவதற்கு தமிழ் மரபில் வளர்ச்சி பெற்ற ''தெருக்கூத்து'' உந்துதலாக அமைந்தது. நவீன நகரம்சார் சிங்கள அரங்கக்கலை தெருக்கூத்தில் இருந்து உருவான நாடகம் மூலமே உருப்பெற்றது. இந்நாடகம் ஏனைய இலக்கிய வடிவங்களான கவிதை, புனைக்கதை ஆகியவற்றையும் விட உயர்ச்சி பெற்று முன்னணியில் நிற்கும் கலை வடிவமாக சிறப்புப் பெற்றுள்ளது.

தமிழில் இருந்து தெருக்கூத்து அல்லது வீதி நாடகம் தென்பகுதியில் உள்ள சிங்கள கிராமங்களுக்கு ஒரு சுற்று வழியின் மூலம் வந்து புகுந்தது. தெருக்கூத்து (முதன் முதலில்) யாழ்ப்பாணத்தில் உள்ள கத்தோலிக்கர்களால் சமயக் கருத்துக்களைப் பரப்புவதற்காக கையாளப்பட்டது. கத்தோலிக்க சமய கருத்துக்களை கொண்ட கதைகளை சொல்வதற்கு தெருக்கூத்தை ஒரு சாதனமாக இவர்கள் கொண்டனர். இக்கூத்தை அவர்கள் ''கர்நாடகம்'' என அழைத்தார்கள் என்ற தகவலை சேர்.சிற்றம்பலம் கார்டினர் அவர்களுடைய நெருங்கிய உறவினர்களிடம் இருந்து நான் தெரிந்து கொண்டேன்.

இந்த வகை நாடகங்களை ''பிலிப்புசின்னோ'' என்பவர் எழுதினார். நாட்டுக்கூத்து என்று பரவலாக அழைக்கப்படும் இந்த வகையான ஜனரஞ்சகமான கலை வடிவம் யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி கிழக்கு மாகாணத்திலும் நிலவியது. நாட்டுக்கூத்தில் தென்மோடி, வடமோடி என இருவகைகள் உள்ளன. வடமோடி என்னும் வடிவமே சிங்களவரால் பின்பற்றப்பட்டது. தென்மோடி நாடகக் கூத்தில் இன்னிசை, கலிப்பா, கொச்சகம், வெண்பா, பரணி முதலிய இடைக்கால இசைப்பா வடிவங்கள் பயன்படுத்தப்பட்டன.


இதற்கு மாறாக வடமோடி நாட்டுக்கூத்தில் பழைய இராகங்கள் பயன்படுத்தப்பட்டன. இந்த இனிய இராகங்கள் சிங்கள கிராமவாசிகளையும் நகர்சார் நாடகப் பிரியர்களையும் கவர்ந்தன. 'டவர்' மண்டபத்தில் மேடை ஏற்றப்பட்ட நாடகங்களின் இனிமையான பாடல்கள் ஊடாக சிங்கள மக்கள் மத்தியில் இந்திய இசையின் இராகங்களை இரசிக்கும் இரசனை உணர்வும் விருப்பும் வளர்ந்தன. தமிழ்நாட்டுக்கூத்து மரபில் உள்ள பல்வேறு வடிவங்களை ஒப்பிட்டும் ஆராய்ந்தும் ''மனமே'' என்னும் நாடகத்தை நான் எழுதி நெறிப்படுத்தி மேடையேற்றினேன். இந்நாடகம் பார்வையாளர்களின் பெருவரவேற்பை பெற்றது. அவர்களின் இதயத்தை தொட்டது.

தமிழ் நாட்டுக்கூத்தில் உள்ள இனிமையான பாடல்களில் பரிச்சியம் பெற்று இருந்த சிங்கள நாடகப் பிரியர்கள் மனமே நாடகத்தின் இசையை விரும்பி இரசித்தனர். தமிழ் நாடகத்தின் இசை வடிவங்கள் நீண்ட வரலாற்றை உடையவை. அவற்றின் அமைப்பு பரவலாக மக்கள் அறிந்துள்ள இராகங்களை தழுவியவை.

உதாரணமாக ''உருத்து'' என்பது பாடல்களுக்கு இனிமை சேர்க்கின்றது. ''உருத்து'' என்பதன் பொருள் ''ஆபரணம்'' என்பதாகும். உருத்து விரைந்து பாடப்படுவது. இது பாடலுக்கு ஒரு தனிப்பட்ட இரசனையையும் இனிமையையும் அளிக்கும். உருத்து வேறு இசை வடிவங்களில் இல்லாத நாடகத்தில் மட்டும் காணப்படுவதான ஒரு சிறப்பு அம்சமாகும். ஒரு குறிப்பிட்ட நாடக பின்னணிக்கு உருத்து விசேட மெருகு ஒன்றை கொடுக்கின்றது. நாடகத்தின் குறித்த கட்டத்தின் உணர்வு நிலையை வெளிக்கொணர இது உதவுகின்றது.

புராதன கூத்து வகைகளான ''சொக்கறி'' ''கோலம்'' போல் அல்லாது நாடகம் முழுமைபெற்ற மரபு ஒன்றை கொண்டு உள்ளது. அரங்கில் நடித்துக் காட்டுவதில் பயனில்லை எனக்கருதப்படும் பகுதிகளை எடுத்துச் சொல்லும் கட்டியக்காரன் ஒருவன் நாடகத்தில் அதன் கதையை நடத்திச் செல்ல உதவுகிறான். இதேவேளை நடிப்பின் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டிய சுவையான விடயங்கள் பார்வையாளருக்கு நடித்துக் காட்டப்படும் நாடகத்தில் நடிகமாந்தர் வட்டமாக சுற்றி வந்து ஆடும் மரபு உள்ளது. இதை சிங்களத்தில் பறிற்கிறமன என்பர். இவ்விதம் சுற்றி ஆடுவதால் நடிகர்கள் மேடையில் தோன்றும் இடம் மாற்றப்படுகிறது. இம்முறை சமஸ்கிருத நாடக மரபிலும் உள்ளது. பொருட்களை கொண்டு சித்தரித்து காட்டவேண்டிய செயல்களை அங்க அபிநயத்தின் மூலம் நடிகர்கள் சித்தரிப்பர். இம்முறை தொண்மைக்கால அரங்க முறையுடன் நாடகம் கொண்டுள்ள நெருங்கிய உறவை எடுத்துக் காட்டுகிறது. ஆந்திர பிரதேசத்தில் ''பாகவ மேள நாடகம்'' என்னும் அரங்க கலை உள்ளது. இதைப்போல் வங்காளத்தில் ''யாத்திரா'' என்னும் வடிவம் உள்ளது. சிங்கள மக்கள் மத்தியில் காணப்படும் நாட்டுக்கூத்தும் இவை போன்றே தொண்மைக்கால சமஸ்கிருத நாடகத்தில் இருந்து உருவான சனரஞ்சகமான நாடக வடிவமாகும். இவ்வரங்கங்கலை வடிவங்கள் உயர் குழாம் ஒன்றின் குறுகிய வட்டத்தில் இருந்து நாடகத்தை விடுவித்து மக்களின் மத்தியில் எடுத்துச் செல்வதற்கு செயற்பட்ட முயற்சிகளின் விளைவுகள் ஆகும்.

**நன்றி:தினகரன் 01.09.96**



***இப் படத்தில அமர்நதிருப்பவர்கள (இடமிருந்து வலமாக):-*** க.திருமாவினி (செயறகுழு உறுபபினா), ப.பிரதீபன(தலைவர்), கலாநிதி க.அருணாசலம் (பெருநதலைவர்), பேராசிரியர் சி.எம்.மத்தும பண்டார (துணை வேந்தர்), வை நந்தகுமார் (பெரும் பொருளாளர்), சி.பரணீஸ்வரன் (செயலாளர்), வீ.நிரஞ்சனா (செ உ)

***நின்று இருப்பவர்கள் (இடமிருந்து வலமாக):-*** செ.கண்ணதாசன் (செ.உ), க.திருச்செல்வம் (செ உ) ஏ.சீ.பி.முஹமட் (உப தலைவர்), இ.சசிதரன் (செ உ), மு.இ.மு.சதாத் (செ.உ), தா.ஸ்ரீராமநாதன் (இளம்பொருளாளர்), இரா.இரவிசங்கர் (இதழாசிரியர்), ந.கிருஷ்ணமேனன் (செ.உ), மா.அன்புதாஸ் (செ.உ)

***இல்லாதிருப்பவர்:-*** வெ குணசேகரன் (செ.உ)

# தமிழ்ச் சங்க நிர்வாகம்
# 1996 - 97

| | |
|---|---|
| பெருந்தலைவர்: | கலாநிதி. க.அருணாசலம் |
| பெரும் பொருளாளர்: | வை.நந்தகுமார் M.A |
| தலைவர்: | செல்வன். ப.பிரதீபன் |
| உபதலைவர்: | செல்வன்.ஏ.சீ.பீ.முஹமட் |
| செயலாளர்: | செல்வன். சி.பரணீஸ்வரன் |
| இளம் பொருளாளர்: | செல்வன். தா. ஸ்ரீராமநாதன் |
| இதழாசிரியர்: | செல்வன். இரா.இரவிசங்கர் |
| செயற்குழு உறுப்பினர்கள்: | செல்வன்.வெ.குணசேகரன்<br>செல்வன். ந.கிருஷ்ணமேனன்<br>செல்வன். மு.இ.மு.சதாத்<br>செல்வன். மா.அன்புதாஸ்<br>செல்வன். இ.சசிதரன்<br>செல்வன். செ.கண்ணதாசன்<br>செல்வன். க.திருச்செல்வம்<br>செல்வி. சு.திருமாலினி<br>செல்வி. வீ.நிரஞ்சனா |

*"விழா மேடையேற்றத்துடன் ஒரு நாடகத்தின் வாழ்வு முடிந்து போவதே வழக்கமாக உள்ளது. பரிசு பெறும் நாடகங்களாவது தொடர்ந்து மேடையேற்றப்பட வேண்டும். வெளியிடங் களுக்கும் கொண்டு செல்லப்பட வேண்டும். பல மேடையேற் றங்கள் மூலம்தான் நடிகர்கள் நன்கு தேர்ச்சிபெற முடியும். நாடகமும் மெருகு பெறும்."*

## தமிழ்ச்சங்க நாடக விழா '96 - சில குறிப்புகள்

*கலாநிதி. எம்.ஏ.நுஃமான், தமிழ்த்துறை*

ஈழத்துத் தமிழ் நாடக வளர்ச்சியில் பேராதனைப் பல்கலைக்கழகமும், பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கமும் பெரும் பங்காற்றியிருக்கின்றன. பல்கலைக்கழக ஆசிரியர்களும் மாணவர்களும் நாடக முயற்சிகளில் பங்கேற்று உழைத்திருக்கிறார்கள். பேராசிரியர்களான க.கணபதிப்பிள்ளை, சு.வித்தியானந்தன், திரு.கந்தையா, சி.சிவசேகரம், சி.தில்லைநாதன் ஆகியோரின் பங்களிப்பு இவ்வகையில் குறிப்பிடத்தக்கது. நாடகப் பிரதியாக்கம், தயாரிப்பு, நெறியாள்கை போன்ற துறைகளில் இவர்கள் பங்காற்றியுள்ளனர். நடிப்புத்துறையில் மாணவர்களே தொடர்ந்தும் பங்களிப்புச் செய்து வந்துள்ளனர். ஆயினும் சமீபகாலமாக நாடகத்துறையில் ஆசிரியர்களின் இடத்தையும் மாணவர்களே நிரப்பி வருகின்றனர். பிரதியாக்கம், தயாரிப்பு, நெறியாள்கை, நடிப்பு என்று எல்லாத்துறைகளிலும் மாணவர்கள் பங்கேற்று நாடகத்துறையில் தங்கள் ஆற்றலை வெளிக்காட்டியுள்ளனர்.

தொடக்க நிலையில் மாணவர்களின் நாடகங்கள் பல சிரிப்பூட்டுவதையே பிரதான நோக்கமாகக் கொண்ட அங்கதபாணி நாடகங்களாகவே இருந்தன. ஆயினும் 1960 களின் பிற்பகுதியில் கொழும்பிலும் பின்னர் யாழ்ப்பாணத்திலும் தமிழ் அரங்கத்துறையில் முளைவிட்டு வளர்ந்த தீவிர தமிழ்நாடக இயக்கம் நாடளாவிய ரீதியில் தன் தாக்கத்தைச் செலுத்தியுள்ளது என்பதை சமீபகாலமாக மாணவர் எழுதித் தயாரித்தளிக்கும் பல்கலைக்கழக நாடகங்களிலும் அவதானிக்க முடிகின்றது. கடந்த சில ஆண்டுகளாக பேராதனைத் தமிழ்ச்சங்க நாடக விழாக்களில் மேடையேறிய நாடகங்கள் தீவிர தமிழ் நாடக இயக்கத்தின் அறுவடைகளாகவே அமைந்துள்ளன எனலாம்.

கடந்த ஆண்டு இறுதியில் (டிசம்பர் 7 ம் திகதி) பொறியியல் பீட ஈ.ஓ.ஈ. பெரேரா அரங்கில் நிகழ்ந்த தமிழ்ச்சங்க நாடக விழாவில் மேடையேறிய நாடகங்கள் தீவிர நாடக இயக்கத்தின் தாக்கத்தை நன்கு புலப்படுத்தின. இவ்விழாவில் அலைநடுவில், குழப்பம், அரும்பு, கருவறை, கண் நீர்த்துளிகள் ஆகிய ஐந்து நாடகங்கள் மேடையேறின. உண்மையில் இந்த ஐந்து நாடகங்களும் நடுவர்களுக்கு ஒரு சவாலாகவே அமைந்தன. ஒவ்வொன்றும் அதன் அதன் பாங்கில் சிறப்பாகவே இருந்தன. வழக்கம் போலவே குறுகியகால அவகாசத்தில் குறைந்த ஒத்திகைகளுடன் அவசர அவசரமாகத் தயாரித்து மேடையேற்றப்பட்ட நாடகங்கள் இவை. ஆயினும் அவை அவற்றுக்கே உரியவகையில் நிறைவாகவே இருந்தன. இன்னும் அவகாசம் எடுத்து அதிக ஒத்திகைகளுடன் மேடையேற்றி இருந்தால் அவற்றின் மெருகு வியப்பூட்டுவதாகவே அமைந்திருக்கும் என்று தோன்றியது.

மேடையேறிய நாடகங்களுள் அலைநடுவில் தவிர ஏனையவை நவீன பாணியில் அமைந்த குறியீட்டு நாடகங்கள் எனலாம். அரும்பு, கருவறை ஆகியவை யதார்த்த பாணியும் குறியீட்டுப் பாணியும் கலந்த அமைப்பைக் கொண்டிருந்தன. அலைநடுவில் முற்றிலும் யதார்த்தபாணி நாடகம் எனலாம். ஆரம்ப கால யதார்த்த நாடகங்களைப் போல மேடையெங்கும் புகைநிறைய அடுப்பு எரித்து றொட்டி சுடும் காட்சியைக் கூடப் புகுத்தியிருக்கிறார்கள் என்றாலும் அதுவே முதற் பரிசு பெற்றது.

இங்கு ஒவ்வொரு நாடகத்தைப் பற்றியும் சுருக்கமாக நோக்கலாம்.

**1. கண்ணீர்த்துளிகள்:** நவீன அபத்த நாடகப் (Absured Theatre) பாணியில் அமைந்த நாடகம். கண்ணீர்த்துளிகள் அல்ல கண் -நீர்த்துளிகள் என்று தலைப்பிலேயே ஓர் அர்த்த வேறுபாட்டைச் சுட்ட நெறியாளர் முயன்றார்.

மழை பெய்வதுடன் நாடகம் தொடங்குகிறது. குடை பிடித்து நிற்கிறார்கள். பின் விளையாட்டு, அதன் பின் வேலை தொடர்கிறது. திடீரென்று ஒரு பெண் நான் ஏன் அழுகிறேன் என்று வியப்படைகிறாள். சாமியார், கண்மருத்துவர், மனநோய் நிபுணர் ஒவ்வொருவராக வந்து பார்த்து மருத்துவம் செய்கின்றனர். திரும்பவும் திரும்பவும் அவள் நான் ஏன் அழுகிறேன் என்று வியந்து கலங்குகிறாள்.

இறுதியில் அவளே 'நான் கண்டு பிடித்து விட்டேன்' என்று குதிக்கிறாள். மழையில் நனைந்த தலையில் இருந்தல்லவா தண்ணீர் கன்னங்களில் கசிந்து கொண்டிருக்கிறது. அதைத் தவறாகத் தான் அழுவதாக நினைத்தேன் என்கிறாள். எல்லாரும் யுரேக்கா, யுரேக்கா என்று பாடுகிறார்கள்.

நாடகப் பொருளில் அபத்த நாடகத்துக்குரிய தன்மை பளிச்சென்று தெரிகின்றது. என்றாலும் கதைப்பின்னலும் கட்டமைப்பும் பலவீனமாக இருந்தன. அபத்த நாடகங்கள் மனித வாழ்வின் மனித நடத்தையின் அபத்தத்தை முகத்தில் அறைந்தாற் போல் பார்வையாளரின் உணர்வு நிலைக்குக் கொண்டுவரும் ஆற்றல் உடையன. கண்ணீர்த் துளிகளில் அங்கதம் வெளியிட்ட அளவு அபத்தம் வெளிப்படவில்லை. அது பிரதியின் பலவீனம் தான். நாடகத் தயாரிப்பு ஓரளவு சிறப்பாகவே இருந்தது.

**2. கருவறை:** இன்றைய இனமுரண்பாடு, விடுதலைப் போராட்டம், ராணுவ ஒடுக்குமுறை என்பவற்றை தமிழ்ச் சமூகம் எவ்வாறு எதிர்நோக்குகின்றது என்பது பற்றிய நாடகம். சிறைச்சாலையும் சிறைச்சாலைக்கு வெளியே உள்ள சமூகமும் ஒரேமேடையில் அமைக்கப்பட்டிருந்தன. நான்கு சிறைக்கைதிகள், நான்கு இராணுவத்தினர், பொது மக்களும் கைதிகளின் உறவினர்களுமான உறுப்பினர்கள் சிலர். இவர்கள்தான் நாடக பாத்திரங்கள். விடுதலைப் போராட்டத்தில் உறுதி கொண்டவன், அதனை நோக்கிச் செல்பவன், தெளிவற்ற நிலையில் உள்ளவன், எதிலும் சம்பந்தப்படாத அப்பாவி என கைதிகள் வகைப்படுத்தப்பட்டிருந்தனர். பிரச்சினைகளில் இருந்து தப்பிச் சென்று சொகுசாக வாழ முனைபவர், பிரச்சினைகளின் தீவிரத்தை உணர்ந்தாலும் அதற்கு முகங் கொடுக்க முடியாதோர், பிரச்சினையைச் சந்திக்க முனையும் இளைஞர்கள், பாதிக்கப்பட்ட அப்பாவிகள் என சமூக உறுப்பினர்கள் வகைப்படுத்தப்பட்டிருந்தனர். இராணுவத்தில் கொடுமை செய்வோரும் மனிதாபிமானம் உள்ள சிலரும் அடங்குவர்.

பார்வையாளர்களாக இருப்பதை விடப் பங்காளிகளாக வேண்டும். ஒற்றுமைப்பட்டால்தான் பிரச்சினைகளைத் தீர்க்கலாம் என்பதே நாடகம் வலியுறுத்தும் செய்தியாகும். கடைசியில் இது வெளிப்படையாகவும் கூறப்படுகின்றது. பிரச்சினையைச் சிலவகைப்பாடுகளுக்குள் எளிமைப்படுத்தியது இந்த நாடகப் பிரதியின் பலவீனம் எனலாம். எனினும் மேடையமைப்பு, நடிப்பு என்பன ஓரளவு சிறப்பாகவே அமைந்தன. இவ்விரு நாடகங்களும் பரிசு பெறத் தவறிவிட்டன.

**3. அரும்பு:** மலையகத் தேசிய உணர்வைப் பிரதிபலிக்கும் நாடகம். நாடகத் தொடக்கத்தில் இருந்தே மேடையின் ஒரு பகுதியில் இருவர் மலை உடைப்பதில் ஈடுபட்டுக் கொண்டுள்ளனர். இது நாடகம் முழுவதும் ஒரு குறியீடாக இடம் பெறுகின்றது. மறுபுறத்தில் மலையகக் குடும்பம் ஒன்றின் ஊடாக இன்றைய மலையக வாழ்வு சித்திரிக்கப்படுகின்றது. அறியாமை, குடிப்பழக்கம், கல்வி வாய்ப்பு மறுக்கப்படுதல், அரசியல்வாதிகளும் அரசு ஊழியர்களும் மக்களைச் சுரண்டுதல், இதன் ஊடாக இளைய தலைமுறை ஒன்று படித்து முன்னேறி மலையகத்தை முன்னேற்ற முயல்தல் என்பன காட்டப்படுகின்றன. மக்கள், வாழ்க்கை நெருக்கடிகளில் இருந்து விடுதலையை நோக்கி விழிப்புணர்வு பெறுதலை நாடகம் உணர்த்துகின்றது. பிரதியாக்கம், நடிப்பு, நெறியாள்கை என்பவற்றின் அடிப்படையில் முன்குறிப்பிட்ட இரண்டு நாடகங்களையும் விட இது சிறப்பாக அமைந்திருந்தது. அவ்வகையில் அரும்பு மூன்றாம் இடத்தைப் பெற்றது.

**4. குழப்பம்:** தமிழர் விடுதலைப் போராட்டத்தின் இன்றைய காலகட்டத்தில் காணப்படும் குழப்ப நிலையை இந்த நாடகம் நாடகத் தன்மையுடன் ஓரளவு சிறப்பாகச் சித்தரித்தது. மேடையின் இடது பக்கத்தில் பண்டார வன்னியன் நாடகம் நடந்து கொண்டுள்ளது. மேடையின் வலதுபுறத்தில் ரசிகர்கள் நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். பண்டார வன்னியன் அன்னியப் படைகளுக்கு எதிராகப் போர் நடத்துகின்றான். வீரவசனங்கள் பேசி தளபதிக்கு உத்தரவுகள் இட்டுக் கொண்டிருக்கின்றான். தளபதி அப்போதைக்கப்போது யுத்த நிலைமைகளை மன்னனுக்கு அறிவித்துக் கொண்டிருக்கிறான். நாடக ரசிகர்கள் மன்னனுக்கு ஆதரவாகவும் எதிர்ப்பாகவும் கட்சி கட்டி யுத்தம் பற்றி வாதிக்கின்றனர். இடையில் கடலை வியாபாரி தன் வியாபாரத்திலேயே கண்ணாயிருக்கிறான். அன்னிய

படைகள் அப்பாவி மக்களையும் கொல்வதாகச் செய்தி வருகின்றது. அதனால் ரசிகர் மத்தியில் குழப்பம் அதிகரிக்கின்றது. பண்டார வன்னியன் மேடையை விட்டு ரசிகர் மத்தியில் வருகிறான். நாடகத்தைக் குழப்ப வேண்டாம் என்கிறான். நீங்கள் குழப்பினாலும் நான் நாடகத்தைத் தொடர்ந்து நடத்துவேன் என உரத்த குரலில் சூழ் உரைக்கின்றான்.

விடுதலைப் போராட்டம் பற்றிய இன்றைய குழப்பநிலைக்கு ஒரு குறியீடாக இந்த நாடகம் அமைந்தது. இந்த நாடகத்தில் நாடக எண்ணம் **(Dramatic idea)** சிறப்பாக அமைந்தது. பிரதியாக்கம், அரங்க அமைப்பு, நடிப்பு முன் குறிப்பிட்ட மூன்று நாடகங்களையும் விட இது முன்னணியில் நின்றது. அவ்வகையில் இது இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

***5.அலைநடுவில்:*** இந்த நாடகமே முதற் பரிசு பெற்றது. மேற்பார்வைக்கு இது ஒரு யதார்த்த நாடகம் தான். மீனவர் வாழ்க்கையைப் பகைப்புலமாகக் கொண்டது. ''மீன்'' இவர்கள் வலைக்குள் அகப்படுவதைப் போலத்தான் இவர்களும் கவலைகளுக்குள் அகப்பட்டுக் கொண்டவர்கள். இவர்களுக்கு வாழ்வை அளிப்பதும் இந்தக் கடல்தான். இவர்கள் வாழ்வை கழிப்பதும் இந்தக் கடல்தான்'' என்று நாடகத்தின் தொடக்கத்தில் கூறப்படுகின்றது. தொடக்கம் முதல் முடிவுவரை நாடக அரங்கை ஒரு சோகமே கவிந்து கொள்கின்றது.

ஒரு ஏழை மீனவ குடும்பத்தின் துன்பக் கதையைச் சொல்கிறது நாடகம். ஒரு தாயின் இரண்டு ஆண் மக்கள் அடுத்தடுத்துக் கடலுக்குப் பலியாகின்றனர். அவள் ஏற்கனவே பலரைப் பலிகொடுத்தவள். அந்தத் தாயின் அந்தரிப்பே நாடகத்தின் மையம்.

மைக்கல் கடலில் காணாமல் போனான். அவனது தம்பி அன்ரனி அவனைத் தொடர்ந்து கடலுக்குப் போகிறான். தாய் அவனைத் தடுக்க முனைகிறாள். முடியவில்லை. சகோதரி றோசி தாய்க்குப் பின்வருமாறு சொல்கிறாள். ''கடலுக்குப் போறதுதான் இங்கு ஆண்பிள்ளைகளின் வாழ்க்கை. அது எத்தினை பேரின்ரை உயிரை விழுங்கிட்டுதென்றாலும் கடலுக்குப் போகாமலும் எங்கடை வாழ்க்கைப் படகு ஓடாது தானே'' கடைசியில் அன்ரனியும் கடலில் மூழ்கிப் போகிறான்.

தாய் சொல்கிறாள்: ''அன்ரனியையும் கடல் விழுங்கிவிடும்... எனக்குப் புருஷன் இருந்தவர். அவருக்கு ஒரு தகப்பன் இருந்தவர். அதைவிட இந்த வீட்டில் ஆறு பெடியள் இருந்தாங்கள். ஆறு ஆம்பிளப் பிள்ளைகள்... அவங்களைப் பெத்தெடுக்க எவ்வளவு கஸ்டப்பட்டனான். சிலரின்ரை உடம்பு கிடைச்சுது.. சிலர்ரை கிடைக்கேல்லை. எல்லாரும் போட்டாங்கள். பீட்டரும் ஜோனும் புயல்லை துலைஞ்சு போனாங்கள்...''

அன்ரனியின் சவ அடக்கத்துக்கான ஏற்பாட்டுடன் நாடகம் முடிகின்றது.

எந்த ஒரு நல்ல நாடகத்துக்கும் நாடகப் பிரதியே மையமாக இருக்கின்றது. அலைநடுவில் நல்ல நாடக பிரதியாக்கத்துக்குரிய பரிசையும் பெற்றது. சிறந்த நடிகர், சிறந்த நடிகை, சிறந்த நெறியாள்கை, சிறந்த மேடையமைப்பு ஆகியவற்றுக்கான பரிசுகளும் இதற்கே கிடைத்தன. பிரதியின் கனதி நாடகம் முழுவதிலும் ஊடுருவி இருந்தமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இந்த நாடகத்தில் கடல் ஒரு குறியீடுதான். இன்றைய அரசியலைப் பிரதிபலிக்கும் ஒரு அரசியல் நாடகமாக இதனைப் பொருள்கொள்வதற்கும் அதிக வாய்ப்புகள் இருந்தன. இந்தப் பலதளப் பொருண்மை நாடகத்தின் பலமாக அமைந்தது. வெளிப்படையாக அரசியல் பிரச்சினைகளை அலசிய ஏனைய நாடகங்களைவிட இது வெளிப்படுத்திய அரசியல் இன்னும் ஆழமானதாகும். இக்காரணங்களால் இது முதல்பரிசுக்கு உரியதாகியது.

பொதுவாக நோக்கின் நாடக விழா திருப்திதருவதாகவே அமைந்துள்ளது. மாணவர்களின் நாடகத்திறனை அது நன்கு வெளிப்படுத்தியது. நாடகப் பிரதியாக்கத்தில் கூடிய கவனமும் போதிய ஒத்திகையும் இருந்தால் இவர்கள் இன்னும் சாதிக்க முடியும் என்றே கூற வேண்டும். விழா மேடையேற்றத்துடன் ஒரு நாடகத்தின் வாழ்வு முடிந்து போவதே வழக்கமாக உள்ளது. பரிசு பெறும் நாடகங்களாவது தொடர்ந்து மேடையேற்றப்பட வேண்டும். வெளியிடங்களுக்கும் கொண்டு செல்லப்பட வேண்டும். பல மேடையேற்றங்கள் மூலம்தான் நடிகர்கள் நன்கு தேர்ச்சிபெற முடியும். நாடகமும் மெருகு பெறும். மாணவர்கள் இதனை மனங்கொள்வது நல்லது.



நாடகவிழா - 96இல் 'கருவறை'



நாடகவிழா - 96இல் 'அரும்பு'



நாடகவிழா - 96இல் 'குழப்பம்'



தமிழ்ச்சங்கம் ஏற்பாடு செய்திருந்த
நாடகப் பயிற்சிப் பட்டறை




நாடகவிழா - 96இல் ''கண்ணீர்த்துளிகள்''



நாடகவிழா - 96இல் 'அலைநடுவில்'

## நாடக விழா 96 இல் பங்குபற்றியோர்

**கண் நீர்த்துளிகள்**

நடிகர்கள் : ச. ஞானாகரன் , செ. றுக்ஷான், சி. ரவிச்சந்திரன், வி. சுதாகர், ப. சிவவாசன், நே. ராஜரூபன், தா. சுதர்சன், இரா. பார்த்தீபன், நா. ஜெயலிங்கம்,ம. அமுதராஜ், கோ. நந்தகுமார், ப. குகநேசன், ந. குமுதினி, ம. குமாரதாஸ்

பாடகர்கள் : சா. ஜெயந்தன், இ. தர்சினி, தி. ராஜ்குமார், ஏ. குபேரன்

மேடையமைப்பு, ஒப்பனை : டி. ஜெயச்சந்திரமௌலி, ஜீ. முரளீதரன்

இசையமைப்பு : தி. ராஜ்குமார்

நெறியாள்கை : ம. அமுதராஜ்

**அலை நடுவில் ....**

நடிகர்கள் : சி. கஜன், பொ. நக்கீரன், தி. விஜயரேகா, வை. மஞ்சுளா, செ. கிள்ளிவளவன், சி. வேணு, வை. யதீபன், கா. சீலன், ந. ராதாகிருஷ்ணன், கி. கிருந்திகரன், இ. சுஜாந்தி, தி. பிரமிளா, தி. பாமினி.

பிற்பாட்டு : ச. கிருபால், வி. துளசி

இசை : ப. நிமலன், பே. பாலமுரளி, சி. பகீரதன்

அரங்க நிர்வாகம் : ச. கஜந்தன், க. முருகமூர்த்தி, த. கஜேந்திரன், பா. மணிமாறன்

ஒப்பனை : ச. பிரபாரூபன், ஞா. ஞானரஞ்சன், த. தரணீஸ்வரன், இ. ஜெயரூபி

ஒளியமைப்பு : ஐ. ராகவன், யோ. தனரஞ்சன்

பிரதியாக்கம் : ச. கிருபால்

நெறியாள்கை : க. நரேந்திரநாதன்

**கருவறை**

நடிகர்கள் : ப. சிறீதரன், த. கேதீசன், கீதா கனகசிங்கம், கிருஷாந்தி ராமையா, எம். எச். அபூஸயீத், சிவரதி சிவபாலன், நந்தகுமாரி நல்லையா, பி. சுரேந்திரன், பொன். ஜெகதீஸ்வரன், செ. கண்ணதாசன், சி. பரணீஸ்வரன், பா. மோகனதாஸ், ம. மகீரதன், சு. சத்துருக்கன், தா. புவிராசன்

பின்னணி இசை : பிரியா சேவியர், ந. சுபாகரன், துஷியந்தி சிவசம்பு

பிற்பாட்டு : யூட் பாலநாதன், அருந்தவி குலராஜசிங்கம்.

மேடையமைப்பு : பொன். ஜெகதீஸ்வரன், எம். எச். எம். ரினோஸ்

ஒளியமைப்பு : செந்தில்குமரன், விஜயகுலன்

பின்னணி : சாரதா செல்வரட்ணம், கோகிலா கோபாலப்பிள்ளை

உதவிநெறியாள்கை: அருந்தவி குலராஜசிங்கம்

பிரதியாக்கம்/ நெறியாள்கை : இரா. இரவிசங்கர்.

**அரும்பு**

நடிகர்கள் : ரி. சேந்தன், ஜே.எஸ். ஜெயமாறன், கே. கிரிதரன், வை. பிரதாபன், எஸ். வரதராஜ், ஏ. கிருஷ்ணகுமார், எஸ். சந்தனசாமி, வி. துஷ்யந்தன், சீ. எம். மொறாயஸ், வீ. மயூநதன், என். நிலானி, கே. திருச்செல்வம், எஸ். சிவமலர், வீ. சந்திரிகா, ரீ. வனிதா, கே. உஷாயினி, பி குருபரன்,

ஒளியமைப்பு : கே. முரளிதரன், ரீ. உதயசீலன்

மேடையமைப்பு : எஸ். சிறிராஜன், எஸ். மகிந்தன் கே. முரளிதரன்

பாடல்கள் : ரீ. திருச்செல்வம், வீ. மயூரன்

பிற்பாட்டு : வீ. எம். ஜெயசீலன், வீ. சந்திரிக்கா

இசை : எஸ். செந்தில்குமார், கே. பாலமுரளி

பிரதியாக்கம் : வீ. மயூரன்

நெறியாள்கை : கே. திருச்செல்வம்

**குழப்பம்**

நடிப்பு : சி. சிவசுதன், சீ. ரவீந்திரன், ஏ.எம். ஜிப்ரி, ந. ராஜ்குமார், வே.தி. சசிதரன், ச. மயூரதாஸ், ஜெ. விஜித்தா, பா. அனுஷா, பா. பிரதாபன், ந. சந்திரிக்கா, ப. பிரிதிவிராஜ், பா. ஜெ. ஜசீந்திரன், சு. கண்ணன், வி. துஷ்யந்தா.

உதவியாளர் : செ. கௌரிதிலகன், யா. நடராஜா

ஒளியமைப்பு : அ. ஜனார்த்தனன்

ஒப்பனை : ரஜிதரன்

பாடல், இசையமைப்பு : கி. யூ. பாலநாதன்

பிரதியாக்கம் நெறியாள்கை : இ. ருஷாந்தன்.

## 'அபிமன்யு' மரபுவழி நாட்டுக்கூத்தில் பங்கேற்றோர்

பங்கேற்றோர் : அருட்சகோதரர் சூ.கருணாகரன், பா. சாய்ஸ்கந்தன், கி. லே. ஜுட் முரளிதரன், க. நரேந்திரநாதன், கி.ம. மொறாயஸ், ம. அமுதராஜ், ம. சுபேந்திரன், ந. கல்யாணி, ச. கிருபால், சி. மேனகா

பிற்பாட்டு : ப. பிரதீபன், சு. கீதாஞ்சலி, சி. சபேசன், வை. மஞ்சுளா, சி. ஜெயசீலன், தி. விஜயரேகா, பெ. ஜெயக்குமார், வி. சுகர்ணா

டோலக் : சி. பகீதரன்

பொங்கற் : ப. பிரதீபன்

ஒளியமைப்பு : சி. பிரபாகரன், தா. ஸ்ரீராமநாதன், ந. முரளிதாஸ்

ஒப்பனை : தி. பாலகுமார், வே. கஜேந்திரன், ந. யோகராஜா, பா. சஞ்சயன், ந. மதிவளன்

பிரதியாக்கம் : கி. லெ. ஜுட் முரளிதரன்

நெறியாள்கை : கி. லெ. ஜுட் முரளிதரன், சி. சபேசன், பா. சாய்ஸ்கந்தன், ப. பிரதீபன், தா. ஸ்ரீராமநாதன்

# நாடகப்பட்டறையும் அதன் எதிரொலிகளும்

சூ.அன்ரனிதாசன், இறுதி வருடம், விலங்கு மருத்துவ பீடம்

உள்ளதை உள்ளம் உணர்ந்தபடி, உணர்ச்சியும் கற்பனையும் கலந்து உருவாவது இலக்கியம். இந்த இலக்கியத்தில் முக்கிய கூறாக விளங்கும் மனிதனை, அவனது உணர்ச்சிகளை, முரண்பாடுகளை உணர்ந்து கொள்ள ஊடகமாய், எம் தமிழ்பண்பாட்டின் வெளிப்பாட்டில் இன்றியமையாததொன்றாய் நாடகம் திகழ்கின்றது. ஈழத்தமிழ் நாடக வரலாற்றில், நாடகங்கள் பொழுதுபோக்கு அம்சமாக மட்டுமன்றி, கருத்துக்களை தெரிவிக்கின்ற, மக்களிடையில் எழுச்சியை ஏற்படுத்துகின்ற பலம்வாய்ந்த சாதனமாக பரிணமித்திருப்பதோடு, இன்று கல்வியாகக்கூட நோக்கப்படுகின்றது. பல்கலைக்கழக புகுமுகத் தேர்வில்கூட பாடமொன்றாக உருப்பெற்றிருப்பதுடன், பல்கலைக்கழக பட்டப்படிப்பிலும் ஒரு பாடமாக கற்பிக்கப்படுகின்றது.

நாடகம் என்பது ஒரு அவைக்காற்றுக்கலை **(Performing art).** இது மேடையை மையமாகக் கொண்டு நிகழ்த்துபவர்கள், பார்வையாளர்கள் இணைவில் உருவாகின்ற கலையாகும். நாடகத்தில் அனைத்து கலைகளின் சங்கமத்தை நாம் காண்கிறோம். எழுத்தாளன் பிரதியை எழுதுகையில் இலக்கியத்தையும், காட்சியமைப்பாளன், ஒப்பனையாளன் மூலம் ஓவியக்கலை, கட்டிடக்கலை, சிற்பக்கலை என்பவற்றையும், இசையமைப்பாளன், நடன அமைப்பாளன் மூலம் இசைக்கலை, நடனக்கலை என்பவற்றையும் கொண்டிருப்பது நாடகக் கலைக்குரிய சிறப்பாகும்.

இவ்வாறு தமிழ் இலக்கிய வரலாற்றில் முக்கியத்துவம் பெற்றுவிட்ட நாடகக்கலை வடிவத்தில் சமகால நிகழ்வுகள் தாக்கங்களை ஏற்படுத்தியிருக்கிறது என்பது ஏற்றுக்கொள்ளப் படவேண்டியதே. எவ்வாறாயினும் எம் ஈழத்தமிழ் வரலாற்றில் நாடகங்கள் ஆற்றிய பங்கு அளப்பரிய தென்றே சொல்லலாம். குறிப்பாக ஈழத்தமிழ் நாடக வரலாற்றில் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதொன்றாகும். தற்போதைய நெருக்கடியான சூழ்நிலைகளுக்கிடையிலும் வளாகத்தினுள் நிகழ்ந்துவரும் நாடகவிழாக்கள், கலைவிழாக்கள் என்பவற்றில் மட்டுமல்லாமல், கண்டி, கொழும்பு, திருக்கோணமலை போன்ற வெளியிடங்களிலும் ஒழுங்குபடுத்தப்படுகின்ற கலை நிகழ்ச்சிகளில் கூட முக்கியத்துவம் பெற்றிருப்பது இதற்கு சான்றாகவுள்ளன. இவ்வாறு தமிழ்ச் சங்கத்தினால் ஒழுங்குபடுத்தப்படுகின்ற நாடக விழாக்களும் கலை விழாக்களும் ஆர்வலர்களுக்குரிய சந்தர்ப்பங்களை வழங்கி, ஊக்கப்படுத்தி வருங்கால கலைஞர்களை உருவாக்கி விடுகின்றது. ஆனால் பல்கலைக்கழகத்தினுள் மாணவர்கள் நுழையும் போது நிறைந்த ஆர்வம் கொண்டிருக்கின்ற போதிலும் சிறந்த பயிற்சி பெற்றவர்களாய் இருப்பது குறைவே. இதை ஈடுசெய்கின்ற வழிமுறைகளிலொன்றாய் தமிழ்ச்சங்கத்தினால் ஒழுங்கு படுத்தப்படுகின்ற நாடகப் பயிற்சிப்பட்டறைகள் மிகவும் முக்கிய பங்கை வகிக்கின்றது.

இவ்வாண்டு தமிழ்ச்சங்கம் ஒழுங்குபடுத்தியிருந்த இரண்டு நாள் நாடகப் பயிற்சிப்பட்டறை, ஆர்வலர்களுக்கு மிக்க பயனை அளித்திருந்தது. இதில் முப்பதிற்கும் அதிகமான மாணவர்கள் கலந்து கொண்டனர். ஆனாலும் இது ஒழுங்கு செய்யப்பட்ட காலம் நாடக விழாவிற்கு அண்மையில் இருந்ததால் பல மாணவர்கள் பங்கேற்க முடியாமல் போனதும், நேரத்தின் பற்றாக்குறையும் ஒருவகையில் இந்நிகழ்விற்கு எல்லை போட்டிருந்தது. இந்நாடகப் பட்டறை கலாநிதி மௌனகுரு அவர்களின் தலைமையில் நடைபெறவிருந்தும் அவரது வருகையின்மை, பிரசன்னமாய் இருந்தவர்களுக்கு ஏமாற்றத்தையும் வருத்தத்தையும் அளித்தது. இருந்த போதும் அவரது வழிவந்த கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை விரிவுரையாளர் திரு.பால.சுகுமாருடன் அதே பல்கலைக்கழக உதவி விரிவுரையாளர் திரு.தயாபரன், திரு.இன்பமோகன் ஆகியோரது நெறிப்படுத்துகை, பங்கு பற்றியோருக்கு குறிப்பிடத்தக்க பலனை அளித்திருந்தது. இந்நாடகப் பட்டறையில், பயிற்சிகளுடன் கூடிய விளக்கங்களும் விரிவுரைகளும் இடம் பெற்றிருந்தன. இதில் நாடகத்தின் தோற்றமும் அதன் வரலாறும் இன்றுவரையான

வளர்ச்சிப்படிகள் பற்றியும் இன்னும் இன்றைய நாடக அரங்குகள் பற்றியும், நாடகத்தில் நடிப்பு முறைகள், நெறியாள்கைக் கலை, மேடைப்பிரிவு, அசைவுகள், காட்சியமைப்பு, ஒப்பனை போன்றவை பற்றிய விளக்கங்களும் பங்கேற்றவர்களுக்கு அளிக்கப்பட்டன. எல்லாவற்றிற்கும் மேலாக பயிற்சிகளுக்கு அதிகளவு முக்கியத்துவம் வழங்கப்பட்டிருந்தமை சிறப்பானதாக இருந்தது. இறுதியில் இடம்பெற்ற கலந்துரையாடலில் எமது பல்கலைக்கழக நாடகங்களின் வளர்ச்சியும், அதில் தாக்கங்களை ஏற்படுத்திய காரணிகள் பற்றிய கருத்துக்களும் முன்வைக்கப்பட்டிருந்தன. இக்கருத்துக்கள் எங்கள் பல்கலைக்கழக அரங்க அளிக்கைகள் பற்றி சிந்திக்க தூண்டியிருக்கிறது.

வருடா வருடம் பல நாடகங்கள் இங்கு மேடையேற்றப்பட்டு வருகின்ற போதிலும், அண்மைக்காலங்களில் சமகால பிரச்சினைகளை விதைந்துரைக்கக் கூடிய வகையில் தமது சொந்த முயற்சிகளாகவும், இன்றைய காலத்திற்கு ஒன்றிப்போகக் கூடிய வகையிலுள்ள, மொழி பெயர்ப்பு நாடகங்களாகவும் இன்னும் தமிழ் மக்களோடு புரையோடிப் போயிருக்கின்ற பிரச்சினைகளை வெளிக்கொணரும் நாடகங்களாகவும் அளிக்கை செய்யப்பட்டு வருகின்றன. இன்னும் நாடக விழாக்களில் பங்குபற்றும் நாடகங்களின் எண்ணிக்கை அதிகரிப்பும், அதில் ஈடுபாடு உடையவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு இருப்பதையும் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. இது ஒரு வகையில் இங்கு வளர்ச்சியைக் காட்டி நிற்கின்றது. இருந்த போதும் ஒரு பார்வையில் வளர்ச்சிப் படிகளில் ஏறினாலும் மறுபார்வையில் இந்த நாடகங்களின் தரங்கள் எந்த அளவில் இருக்கின்றன என்பதில் கேள்விகள் எழத்தான் செய்கின்றன.

பல்கலைக்கழக நாடகங்களின் தரம் சிறப்பானதாக அமையவில்லையென்றால் அதனோடு கூட காரணங்களும் இருக்கத்தான் செய்கின்றன. உண்மையில் இங்கு உருவெடுக்கிற ஒவ்வொரு நாடகமும், பிரசவத்தில் தாய்படும் வேதனையிலும் அதிகமான வேதனைகளை கொடுத்தே உருவெடுக்கின்றது. இதற்கு எமது முதல் நோக்கமான பல்கலைக்கழக பாடநெறிகளின் அழுத்தங்களும் அதனால் போதிய நேரத்தை செலவிட முடியாமல் இருப்பதும் முக்கிய காரணங்களாகின்றன. இவற்றோடு பல கற்கை நெறிகளும் கொண்ட இப்பல்கலைக்கழகத்தில் மாணவர்களை ஒருங்கிணைப்பதில் ஏற்படும் கஷ்டங்களும் போதிய பயிற்சியின்மையும் கூடவே பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இன்னும் இன்றைய கால பிரச்சினைகளால் மறைமுகமாகவோ அல்லது நேரடியாகவோ பாதிக்கப்பட்ட நிலையில் மாணவர்களின் மனநிலை இருப்பதும் இங்கு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. பேராதனை நாடக உலகு எதிர்நோக்கும் முக்கிய எல்லை அதன் ரசிகர்கள்தான். பேராதனையில் மேடையேறியவர்கள் உலகின் எந்த மேடையிலும் துணிவாக ஏறலாம் என்ற கருத்துக்கள் உருவாகுமளவிற்கு சில ரசிகர்களின் வேதனைக்குரிய செயல்கள் மத்தியில் தான் நாடக நிகழ்வுகள் நடைபெறுகின்றன. அதிலும் நாடகத்தை ஒரு பொழுது போக்காக மட்டும் கருதும் மாணவர்களுக்கு, நாடக மேடைக்கு பின்னே நிகழும் வலிகள் புரிவதில்லை போலும்.

இவ்வளவு தடைகளுக்கு மத்தியிலும் நாடகங்களை அளிக்கை செய்யும் மாணவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள். ஆனால் இவ்வாறான மாணவர்களின் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு, முறையான ஊக்குவிப்பு, ஆக்கபூர்வமான விமர்சனங்கள் வழங்கப்படாமை, முக்கியமாக இந்தக் கலையில் துறைபோனவர்களின் விமர்சனங்கள் கிடைக்காமை என்பன இங்கு நாடக வளர்ச்சியில் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறதென்றே சொல்லலாம். பொதுவாக ஏற்கனவே நாடகத்துறைக்கு அறிமுகமான தேர்ச்சி பெற்றவர்களால் இயக்கப்படுகின்ற நாடகங்கள் விமர்சிக்கப்படுமளவிற்கு, மாணவர்களினால் அளிக்கை செய்யப்படும் நாடகங்கள் ஒருபோதுமே விமர்சிக்கப்படாமல் இருப்பது ஏனென்றும் தெரிவதில்லை. இன்னும் இப்பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரை நாடகங்கள் பற்றிய அறிவுரைகளையோ அல்லது விளக்கங்களையோ தேர்ச்சி பெற்றவர்களிடமிருந்து பெறமுடியாமல் இருப்பதும், இன்றுவரையில் நுண்கலைத்துறைப் பிரிவு ஆரம்பிக்கப்படாமல் இருப்பதும் பாதிப்பை ஏற்படுத்தியே இருக்கின்றது.

இவைகள் எல்லாம் தமக்கு பின்னால் இருக்கும் தடைகள் என்ற உணர்வை மறந்துவிட்டு தங்கள் முயற்சிகளின் பயனாக அளிக்கை செய்யப்படும் இந்த நாடகங்களுக்கு வரலாற்றுப் பதிவுகள் ஏதாவது இருக்கின்றதா என்றால் எவராலும் பதில் கூறமுடியாது. இவ்வாறான நிரந்தர பதிவுகள் இல்லாமை பல்கலைக்கழக நாடகவளர்ச்சியில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. ஈழத்தமிழ் இலக்கியத்தில் ஏனைய கலை வடிவங்களைப் போலல்லாது நாடகங்களுக்கு தமிழில் தரமான பிரதிகள் இல்லாமை அல்லது சுயமொழி நாடகப் பிரிதியுருவாக்கம் இல்லாமை இன்றுவரை பலராலும் குறை கூறப்பட்டே வருகின்றது. இந்த வகையில் தமக்கே உரிய கலைத்துவ, கலாச்சார வடிவங்களில் உருவான மாணவர்களின் சொந்த ஆக்கங்கள் பதிவுக்கு வராமை வேதனைக்குரியது. இதே

வேளையில் இந்நாடகங்கள் பதிப்புரிமை பெற தகுதி பெற்றனவா என்ற கேள்விகூட எழுப்பப்படுகின்றன. மாணவ வட்டத்தினுள் இருந்து செய்யப்படுகின்ற இந்த முயற்சிகள் தரத்தின் எல்லைக்கோட்டை தாண்டாவிட்டாலும் அவைகள் மீள்பரிசீலனை செய்யப்பட்டோ அல்லது திருத்தங்களுக்குட்பட்டோ நூலுருப் பெறுமானால் இந்தக்குறையில் ஒருபங்கையாவது நிவர்த்தி செய்ய முடியுமாயிருக்கும். எமது சங்க நிகழ்வுகளில், பழைய நூலுருப்பெற்ற நாடகங்கள் இங்கு மறு பிறப்பெடுத்து சிறப்பான பாராட்டுக்களைப் பெற்றிருப்பதை இங்கு நினைவூட்டவேண்டும். எனவே ஆக்கபூர்வமான நாடகங்கள் நூலுருப்பெறாமல் போவது எமது இலக்கியத்திற்கும், நாடக வளர்ச்சிக்கும் இழப்பாகி விடுகின்றது.

சிறப்பாகச் சொல்லப் போனால், எமது கலாச்சாரத்தை அடியொற்றிய, இன்று மறைந்துவரும் பாரம்பரிய கூத்துக்கலை வரலாற்றில், பேராதனைப் பல்கலைக் கழகத்தின் பங்களிப்புகள் பொன்னெழுத்துக்களால் பதிக்கப்பட வேண்டியவைகள் ஏனோ தெரியவில்லை இன்னும் அச்சில் கூட ஏறவில்லை. பலமாத கடினப் பயிற்சிகளின் பின் மேடையேற்றப்படும் இப்பாரம்பரிய கலை வடிவம் மாணவர்களால் நவீன ரசனைக்கும் கலைக்கையாளுகைக்கும் ஏற்ற வகையில் சுருக்கி குறைந்த பயிற்சிகளுடன் சிறந்த முறையில் அளிக்கை செய்யப்பட்டு வருகின்றது. இவ்வகையில் தமிழ்ச்சங்க தயாரிப்பில் வழங்கப்படுகின்ற இக்கூத்துக்கலை, செல்வன் ஜே.குருஸின் நெறியாள்கையில் 1992 ல் ''வாலி வதை'' என்ற கூத்தும் 1993 ல் ''இராவணன் வதம்'' என்ற கூத்தும் இவரைத் தொடர்ந்து செல்வன் **C.J.**முரளிதரன் நெறியாள்கையில் 1994 ல் கர்ணன் என்ற கூத்தும் 1995 இல் சமுதாயப் பிரச்சினைகளை மையமாகக் கொண்ட ''புதுயுகம் படைப்போம்'' என்ற கூத்தும் 1996 ல் ''அபிமன்யு'' என்ற கூத்தும் மாணவர்களின் தமது சொந்த முயற்சியில் உருவாக்கி வளாகத்தினுள் மட்டுமன்றி வெளியிடங்களிலும் பலதடவைகள் மேடையேற்றப்பட்டு பலரது பாராட்டுக்களையும் பெற்றிருந்தன. ஆனாலும் இது எவரது விமர்சனங்களுக்குட்பட்டோ அல்லது நிரந்தரப் பதிவாய் நூலுருப் பெற்றதாகவோ இல்லை. இவைகள் இலக்கியத்திற்கு ஏற்படுகின்ற இழப்புக்கள் மட்டுமல்லாமல் எதிர்காலச் சந்ததியினருக்கு ஏற்படும் இழப்பாகிவிடுகின்றது. இந்தப் பொறுப்புக்களை யார் எடுப்பது என்பதில் தான் பிரச்சினையே எழுகிறது. ஆனாலும் ஈழத்தமிழ் நாடக உலகம் பல்கலைக்கழகத்திடம் பலமாய் வேண்டி நிற்கிறது. எனவே தற்போது நிகழ்ந்துவரும் தமிழ்ச்சங்க பணிகளான நாடக விழா, கலை நிகழ்வுகள், நடிகர்களை புடம்போடும் நாடகப் பயிற்சிப்பட்டறைகள், இதுபற்றிய கலந்துரையாடல்கள் இன்னும் தொடர வேணும். மொழிபெயர்ப்பு நாடகங்களை போலல்லாது எங்கள் கலாச்சார விழுமியங்களுடன் உருவான நாடகங்கள், சிறப்பாக கூத்துக்கள் நூலுருப் பெறவேண்டும். இதில் இப்போது இருப்பதை விட கொஞ்சம் அதிகமாய் விரிவுரையாளர்களின் ஒத்துழைப்பை மாணவர்கள் எதிர்பார்க்கின்றார்கள். இன்னும் இரசிகர்களின் நேர்மறையான ஒத்துழைப்பை எதிர்கால நாடக உலகம் வேண்டி நிற்கிறது. எனவே இரசிகர்கள் வெறும் பார்வையாளர்களாய் இல்லாமல் அவர்களும் பங்காளர்கள் என்பதை உணர வேண்டும். சரியான விமர்சனங்களும், இதில் முக்கியமாக நாடக விமர்சகர்களால் நியாயமான முறையில் விமர்சிக்கப்பட வேண்டும். நாடக வளர்ச்சியில் பல்கலைக்கழகத்தால் வழங்கக்கூடிய இன்னொரு பங்களிப்பு அதன் நாடகப் பரிசோதனை முயற்சிகள். இங்கு பரிசோதனை முயற்சிகளுக்குரிய வளங்கள் வசதிகள் நாடகத் தேர்ச்சி பெற்ற மாணவர்கள், விரிவுரையாளர்கள் இருப்பினும் மிகச் சில பரிசோதனை முயற்சிகளே நடைபெறுகின்றன. எனவே நாடகப் பரிசோதனை முயற்சிகள் தொடரப்பட வேண்டும்.

இவ்விடத்தில் அவசியமான இன்னொரு விடயமும் ஆராயப்பட வேண்டும். நாடகங்களின் தரம் உயர்வதால், ரசிகர்களால் விளங்கிக் கொள்ள முடியாமலும் ரசிகர்களை கருத்துக்கள் சென்றடையாமலும் இருப்பதாக ஒரு அபிப்பிராயமும், இல்லை... நாடகங்களின் தரங்கள் உயர்வதற்கேற்ப ரசிகர்கள் தம்மை வளர்த்துக் கொள்ளல் வேண்டும். அல்லாவிடில் கலைகள் நிலையானவைகளாக வளர்ச்சியடையாதவையாக இருந்துவிடும் என இன்னொரு அபிப்பிராயமும் நிலவுகின்றது. இவ்விரு அபிப்பிராயங்களையும் திருப்தி செய்யும் விதத்தில் பல்கலைகழக நாடகங்கள் எவ்வாறு வழிநடத்திச் செல்வது என்ற கேள்விக்கும் விடை காணப்பட வேண்டியதாகவுள்ளது.

எனவே இங்கு முன்வைத்த கருத்துக்களுடன் சம்பந்தப்பட்டவர்களும் தமிழ்ச்சங்கமும் இங்கிருக்கும் குறைகளைக் களைந்து எதிர்காலத் திட்டங்களை திடசங்கத்துடன் எடுத்துக் கொள்வோமாயின் இப்பல்கலைக்கழகத்தில் எதிர்கால நாடக வளர்ச்சி மிகப் பிரகாசமானதாய் தெரியும் என்பது மட்டுமல்ல, தமிழன்னைக்கு ஆற்றிய மிகப் பெரிய தொண்டாகவும் அமையும்.

***"நம்மைப் பற்றி நாம் கொண்டுள்ள கவலைகள் சார்ந்து கவிதையை எடுத்தோமென்றால் கவிதையின் மையம் சிதைந்துபோய்விடக்கூடும். ஆகவே கவிதையின் மையத்தை உற்றுணர்ந்து வரிகளிலிருந்து நாம் பெறும் அனுபவங்கள் மையத்தை அடுத்தடுத்து இயக்குபவைகள்தான் என்பதை நாம் சோதனை செய்து கொள்ள வேண்டும்."***

## கவிதை பற்றிக் கதைப்போம்....வாருங்கள்

*தொகுப்பு : சுமைரா அன்வர், கிருபால் சரவணமுத்து*

எப்பொழுதுமே ஒரு புதுமையைப் புகுத்துவதில் பேராதனைத் தமிழ்ச் சங்கத்துக்கு ஓர் தனித்துவம் உண்டு. அந்த வகையிலே கடந்த ஐப்பசித் திங்கள் இருபத்தேழாம் நாள் கவிதைப்பட்டறை ஒன்றைத் தமிழ்ச் சங்கம் நடாத்தியது. மேற்படி தலைப்பைப் பார்த்ததும் எமக்கும் அந்நிகழ்வில் பங்குபற்ற வேண்டும் என்ற அவா ஏற்பட அந்நிகழ்வில் கலந்து கொண்டோம். நான்கு பேச்சாளர்கள் கலந்து கொள்வதாக இருந்த இந்நிகழ்வில் கலாநிதி M.Aநுஃமான் அவர்களும், கவிஞர் மு.பொ (மு.பொன்னம்பலம்) அவர்களும் பங்கு கொண்டு கவிதை பற்றியும் அதன் பலவிதமான பரிணாம வளர்ச்சி பற்றியும் பல அரிய கருத்துக்களைப் பரிமாறினர். கவிஞர் சு.வில்வரத்தினம் அவர்களும் செ.யோகராசா அவர்களும் நிகழ்வில் கலந்து கொள்ளவில்லை.

கவிதை என்றால் என்ன என்பது பற்றி கவிஞர் எம்.ஏ.நுஃமான் முதலில் விளக்கம் அளிக்க முயன்றார். கவிதை பற்றி நிலவும் பலவகைப்பட்ட கருத்துக்களைக் குறிப்பிட்டு அவை பற்றிக் கருத்துரை வழங்கினார். ஒரு காலத்தில் யாப்போசை கவிதையின் பிரதான அடையாளமாக இருந்தது. யாப்பில் எழுதப்பட்டவை எல்லாம் கவிதையாகக் கருதப்பட்டன. தற்காலத்தில் யாப்பின் இடத்தை அச்சமைப்பு பிடித்துக் கொண்டதாகத் தெரிகிறது. மேல் இருந்து கீழ் நோக்கி சிறுசிறு வரிகளாகக் அச்சிடப்படும் ஒன்று கவிதையாகக் கருதப்படுகிறது. இவை இரண்டும் கவிதை பற்றிய தவறான கருத்தின் அடிப்படையில் அமைந்துள்ளன என்பதை அவர் விளக்கினார். பின்னர் நல்ல கவிதையின் பண்புகளைப் பல்வேறு கவிஞர்களின் நல்ல கவிதைகள் பலவற்றைப் படித்துக் காட்டி விளக்கினார். மனித அனுபவம், உணர்வு, சிந்தனை என்பன எவ்வளவு ஒரு நல்ல கவிதையில் வெளிப்பாடு பெறுகின்றன என்பதை மஹாகவி, நீலாவணன், பசுவையா, சோலைக்கிளி, தருமு சிவராமு போன்றோரின் கவிதைகள் மூலம் விளக்கினார். கவிதைக்குப் பொருள் வரையறை இல்லை. எதுவும் பொருளாக அமையலாம். நாய்கள், பூனை, மரம், எதுவும் நல்ல கவிதைக்குப் பொருளாக அமையலாம் என்பதற்கு நடுநிசி நாய்கள், நாய்க்குரைப்பின் காலம், விருட்ச மனிதர்கள் போன்ற கவிதைகளை உதாரணம் காட்டினார்.

புதுக்கவிதையில் வரிப்பிரிப்பு ஒரு காரண காரியத் தொடர்புடன் அமையவில்லை, பெரும்பாலும் மனம்போன போக்கிலேயே அமைகின்றன என்பதற்குச் சில எடுத்துக் காட்டுகள் காட்டினார். ஒரு இளம் கவிஞரின் பின்வரும்

கவிதையும் உதாரணமாகக் காட்டப்பட்டது.

மழைமேகக்
குடைபிடிக்கும்
வறுமையினலங்காரம்
மனத்துள்
கவலைக் குன்றுகளாய்
வெடிக்க
கண்ணீரருவிகள்
கால்வாய்களை
கன்னங்களில் வெட்டும்

இக் கவிதையினைப் பின்வருமாறும் எழுதலாம் :

மழைமேகக் குடைபிடிக்கும் வறுமையினலங்காரம் மனத்துள் கவலைக் குன்றுகளாய் வெடிக்க .....
கண்ணீரருவிகள் கால்வாய்களைக் கன்னங்களில் வெட்டும்!

இங்குள்ள அமைப்பினை நாம் உற்று நோக்கும்போது இது இயற்கையாகவும் வாசிப்பதற்கு எளிமையானதாகவும் இருக்கிறது. அப்படியானால் ஏன் உடைத்து எழுத வேண்டும்? என்னும் வினா எம்முள் எழுகிறது. மேலுள்ள முறையில் கவிதையினை எழுதும்போது அதைக் கவிதை என்று ஏற்றுக் கொள்ளத் தயங்குவார்கள்.

அப்படியானால் கவிதை என்பதைப் பார்க்கும்போது

1. **மேலே குறிப்பிட்டபடி வரிசையமைப்பிலுள்ளதா?**
2. **கவிதையின் உள்ளார்ந்த பண்புகளில் உள்ளதா?**
3. **அச்சிடும் அமைப்புத்தான் கவிதையினைத் தீர்மானிக்குமா?**
4. **எதுகை மோனை உள்ளவை மட்டும்தான் கவிதையாகுமா?**

எனும் கேள்விகள் எழுகின்றன. எனினும் கவிதையில் இதைவிட வேறுபல அம்சங்கள் இருக்க வேண்டும். மனித உணர்வுகள் அடங்கியிருக்க வேண்டும். ஒரு மனித உணர்வின் வெளிப்பாடாய் இருக்க வேண்டும்.

கவிதை என்பது ஊஞ்சலைப் போன்றது. ''மேலும் போகும், கீழும் வரும் '' எனவே ஒரு கவிதைக்கு ஒரேயொரு கருத்து மட்டும்தான் உண்டென வாதிட முடியாது. ஒரு கவிதையினை எழுதியவன் ஒரு பொருளில் எழுதியிருக்கலாம். அந்தக் கவிஞனின் கவிதையினை வாசிக்கும் ஒரு வாசகன் வேறு ஒரு கருத்தைக் கொடுக்கவும் முடியும். உண்மையில் கவிஞன் அக் கவிதையினை எழுதும்போது கொள்ளாத கருத்தினைக் கொடுக்க முடியும். ஒரு கவிதை அது எழுந்த சூழலில் குறித்த ஒரு கருத்தைப் புலப்படுத்துகிறது. காலதேச வர்த்தமானங்களுக்கேற்ப அதன் கருத்துக்கள் வித்தியாசப்படலாம். இதற்கு சிறந்த உதாரணமாக மஹாகவி பாரதி சுதந்திரப் போராட்ட காலத்தில் பாடிய பாடல்களைக் கொள்ளலாம். அதேபோல் ஆண்டாளின் கவிதைகளை நோக்கும்போது அவற்றை ஆன்மீக ரீதியானதும் பாலியல்ரீதியானதுமான இருவேறு கோணங்களுக்குள்ளே கொண்டு வரலாம்.

உண்மையான கவிஞன் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு சிறந்ததொரு விளக்கம் கவிஞர் மு.பொ அவர்களால் கொடுக்கப்பட்டது. நல்லகவிதையின் பண்புகளையும் அதை நுகரும் முறைகளையும் விளக்கும் முறையில் சுந்தரராமசாமி அவர்கள் எழுதிய '' கவிதையை நேசிக்கும் விதம்'' எனும் கட்டுரை வாசிக்கப்பட்டது. இக் கட்டுரை பிச்சமூர்த்தி பற்றிய அவரது நூலில் இருந்து எடுக்கப்பட்டது. அதில் இருந்து சில பகுதிகள் வருமாறு:

''ஒரு கவிதையை நாம் படிக்கும் போது வாழ்க்கையைச் சார்ந்த ஓர் அனுபவமோ அல்லது மற்ற ஒரு கவிதையின் வரியோ அல்லது நம் இலக்கியத் தேர்ச்சி சார்ந்த அறிவோ நமக்கு வரலாம். அப்போது இந்த நினைவை விட்டுக் கவிதைக்கு நாம் அவசரமாகச் செல்ல வேண்டும். அந்தளவுக்கு எமது கவிதை மீது எமக்கு நேசமிருக்கவேண்டும். நம் நினைவுகள் சார்ந்து கவிதையை நம் பக்கமிழுத்து நம் பெருமையின் பிரகடனத்துக்கோ அல்லது ஆசுவாசத்துக்கோ கவிதையை உபயோகப்படுத்திக் கொள்வோமென்றால் நிச்சயமாக நமக்குக் கவிதை மீது நேசமில்லை என்பதற்கு இது ஒரு அடையாளமாகும்.

கவிதை அநேக உட்சலனங்கள் கொண்டது. ஏற்ற இறக்கங்கள், அழுத்தம், அழுத்தமின்மை தரும் வார்த்தைகளும் அதில் அருமையாக இடம்பெற்றிருக்கக் கூடும். நம்மைப் பற்றி நாம் கொண்டுள்ள கவலைகள் சார்ந்து கவிதையை எடுத்தோமென்றால் கவிதையின் மையம் சிதைந்துபோய்விடக்கூடும். ஆகவே கவிதையின் மையத்தை உற்றுணர்ந்து வரிகளிலிருந்து நாம் பெறும் அனுபவங்கள் மையத்தை அடுத்தடுத்து இயக்குபவைகள்தான் என்பதை நாம் சோதனை செய்து கொள்ள வேண்டும்.

கவிதையில் ஒவ்வொரு வரியும் முக்கியமானது. அதற்கு மேல் வரிக்குள் நிற்கும் வார்த்தைகள் வரிகளின் பிரிவுகள், பந்தியைச் சுற்றும் அதிக இடைவெளி, இடம்பெறும் அடையாளங்கள், இடம்பெறாத அடையாளங்கள் எல்லாமேமுக்கியமானவையாகும். அநேக கவிதைகளில் முதல்வரி மனதை ஈர்ப்பதாகவும் முத்தாய்ப்பில் இறங்கும் வரிகள் அடுத்தும் அமைகின்றன. பிச்சமூர்த்தியின் கவிதைகள் முத்தாய்ப்பில் அழகும் வலுவும் கொள்ளக்கூடிய கவிதை வகைகளைச் சார்ந்தவை.

கவிதையென்பது நிதானமாய்ப் படிக்கும்போது ஒரு இசையிழையை எமக்கு ஊட்டக்கூடியது. அந்த இழை நாம் தேர்ந்தெடுத்த நம்முடைய இழையாக இருக்க வேண்டும். நாம் மிகவும் விரும்பும் இசையின் இழை வார்த்தைகளை நம் உணர்வுகளில் பொருத்த நமக்குதவுகிறது.

உரைநடை எழுத முடியாத கவிஞன் கவிதை எழுத முடியாது ..... என்னால் நடக்க இயலாது, நடனம் மட்டுமே ஆட முடியும் என்று எந்தக் கலைஞனும் சொல்ல முடியாது. பாரதிக்குப் பின்வந்த நவீன கவிஞர்களில் பொருட்படுத்தப்பட வேண்டியவர்கள் மிகக் குறைவானவர்கள். புதுமைப் பித்தனையோ அல்லது பிச்சமூர்த்தியையோ நாம் பொருட்படுத்தும் போது அவர்கள் தனியான கவிதை வழி கொண்டவர்கள் மட்டுமல்ல. தனியான உரைநடையையும் கொண்டவர்கள் என்பதை நாம் கவனத்தில்'கொள்ள வேண்டும்''. இக் கட்டுரையை அடுத்து கலந்துரையாடல் தொடர்ந்து நிகழ்ந்தது.

நல்ல கவிதையினை உருவாக்குவதற்கு என்ன செய்ய வேண்டும் எனும் வினா எழுந்தபோது கவிஞரும் கலாநிதியுமான நுஃமான் அவர்கள் ''அறுபதுகளில் புதுக்கவிதை பிரபலமாகாத காலம் கண்டதையெல்லாம் எழுதினோம். கவிதைகளைப் படித்து கவிதை பற்றி உணர்ந்து கொண்டோம். இந்த விடயங்களை மட்டுமே இளைஞர்கள் கையாள வேண்டுமென்று சொல்வது கஷ்டமென்று நாம் கூறலாம். நிறையக் கவிதைகள் படிக்க வேண்டும். நல்ல கவிதைகளில் பரிச்சயம் இருக்க வேண்டும். எமைச் சூழவிருக்கும் வெளிஉலகம் பற்றிய பிரக்ஞை இருக்க வேண்டும். கவிதையிலே பார்வை மிக முக்கியம். உவமை, உருவகம், இவை முக்கியமல்ல. இவை புறம்பான சட்டங்கள் தான். எந்தளவுக்கு உலகப் பார்வை ஆழமாக இருக்கின்றதோ அந்தளவுக்குப் படைப்பாற்றல் மிளிரும். கவித்துவம் ''சும்மா வருவது என்றோ'' ''கருவிலே திருவுடையார்'' என்றோ ''சரஸ்வதி வந்து நாவில் அமர்வாள்'' என்றோ தொடர்ந்தும் எதிர்பார்த்திருப்பது புத்திசாலித்தனமாகாது.

ஒரு கவிஞனின் பல படைப்புகளை ஒரே பார்வையில் நோக்கும்போது அக் கவிஞன் தன்னைத்தானே பிரதி பண்ணுவது போலவும் கவிகள் ஒரே தன்மை வாய்ந்தவை போலவும் இருப்பதை அவதானிக்கலாம். இந்நிலைமையிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் சிறந்த படைப்புகளையும், வித்தியாசமான படைப்புக்களையும் உருவாக்கும் ஆற்றலைப் பெற முடியும். ஈழத்துக் கவிஞன் சோலைக்கிளி தன்னைத் தானே பின்பற்றும் தாக்கத்துக்குள்ளாகியிருக்கிறார் என கவிஞர் மு.பொ தனது நூலொன்றில் குறிப்பிட்டுள்ளமை பலரது கவனத்துக்கும் உட்பட்டது. அதற்குக் கவிஞர் மு.பொ, ''சோலைக்கிளி தொடர்ந்தும் அஃறிணைப் பொருட்களையே கையாண்டு வருகின்றமை அவரது கவிதைப் பாணி ஒரேவிதமாக அமைவதற்கு காரணமாகிறது'' என்றார்.

சோலைக்கிளியின் ''காக்கை நாய்ச் சவாரி'' எனும் கவிதையை வாசித்துக் காட்டி நாய் காகம் ஆகியவற்றைக் கொண்டு மனித வாழ்க்கையின் அவலத்தை சோலைக்கிளி உணர்த்தியிருப்பதில் ஒரு கவித்துவ வீச்சு இருக்கிறது என்பதை எம்.ஏ.நுஃமான் சுட்டிக் காட்டினார்.

இன்றைய இளம் கவிஞர்கள் தம் கவிதை வளத்தைப் பெருக்குவதற்கு உதவியாக மஹாகவி, முருகையன், நீலாவணன் போன்ற ஈழத்துக் கவிஞர்களினதும், பாரதி, பாரதிதாசன், பிச்சமூர்த்தி, புதுமைப்பித்தன், கு.ப.ரா போன்ற தமிழகக் கவிஞர்களின் கவிதைகளை வாசிப்பதன் மூலம் வளர்த்துக் கொள்ளலாம் என ஆலோசனையும் கூறப்பட்டது.

# இலங்கையில் தமிழ்- முஸ்லிம் உறவு

தொகுப்பு : சி.சுதாகரன், இறுதி வருடம், பொறியியற்பீடம்

தமிழ்ச்சங்க வருடாந்த நிகழ்வுகளின் வரிசையில் முதுபெரும் எழுத்தாளர் சுபைர் இளங்கீரன், முதுபெருங்கவிஞர் தருமு சிவராமு ஆகியோரின் நினைவாக 18.02.997 அன்று கலைப்பீட புவியியல் அரங்கில் நிகழ்ந்த நிகழ்வின் ஒரு பகுதியாக காலத்தின் தேவையறிந்து கலாநிதி S.H ஹஸ்புல்லா (முதுநிலை விரிவுரையாளர், புவியியல்துறை) அவர்கள் இந்த நாட்டின் தமிழ் முஸ்லிம் உறவு பற்றி பேசப்படாத பல அம்சங்களை வெளிக்கொணரவும், கருத்திலெடுக்கப்பட்டு கருமமாற்றவும், ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்கு இவைகள் இட்டுச் செல்லப்பட வேண்டும் எனும் நோக்கிலும் நிகழ்த்திய உரையின் தொகுப்புரை.

**கோட்பாட்டு ரீதியாக இன உறவுகள் :**

முதலில் இலங்கையின் தமிழ் - முஸ்லிம் உறவு என்ற அம்சம் ஆய்வுப் பொருளாக இப்பேச்சில் எடுத்துக் கொள்ளப்பட்டது. இதில் இவ்விரு மக்களுக்கிடையில் எவ்விதமான உறவுகள் கடந்த காலத்தில் காணப்பட்டன. தற்போது காணப்படுகின்றன. எதிர்காலத்தில் எவ்வாறு காணப்பட வேண்டும் என்ற அம்சங்கள் கோட்பாட்டு ரீதியாக நோக்கப்பட்டது.

இதில் இந்த இரு மக்கள் குழுக்களுக்கிடையிலான இன உறவுகளில் இன உறவை ஏற்படுத்துகின்ற அடிப்படைகளும் இன முரண்பாட்டைத் தோற்றுவிக்கின்ற அடிப்படைகளும் ஆராய்ந்து அணுகப்பட்டது. குறிப்பாக இனங்களுக்கிடையிலான உறவும் முரண்பாடுகளும் இன நலன் அடிப்படையிலும், இன உணர்வு அடிப்படையிலும் அதே நேரத்தில் சமூக, பொருளாதார அடிப்படையிலும் அல்லது அரசியல் அடிப்படையிலும் ஏற்படலாம் என்பது விளக்கப்பட்டது.

இந்த அம்சங்களைத் தமிழ் - முஸ்லிம் உறவில் தெளிவாக விளங்கிக் கொள்வதற்கு முதலில் இவ்விரு மக்கள் குழுக்களும் எந்த அளவு தனித்துவமான இனப் பண்புகளைக் கொண்டவர்கள் என்ற அம்சம் தெளிவாக அறியப்பட வேண்டும் என்பது கூறப்பட்டது.

**தமிழினம் :**

தமிழ் மக்கள் இனரீதியாக, குழு ரீதியாக, மொழி ரீதியாக, மொழி வழிவந்த கலாச்சார, பண்பாட்டு ரீதியாக, வரலாற்று ரீதியாக ஒரு தனித்துவமான இனமாக அல்லது ஒரு மக்கள் குழுவாகக் கொள்ளக்கூடிய பண்புகளைக் கொண்டிருக்கின்றார்கள். இதனை ஆய்வுகளும், நிதரிசன இன வெளிப்பாடுகளும் தெளிவாகக் காட்டி நிற்கின்றன. அந்த அடிப்படையில் தமிழ் மக்கள் தனித்துவமான இனமாகக் கொள்ளப்பட்டு இம் மக்கள் குழுவுடனான முஸ்லிம் மக்களின் இன உறவுகள் நோக்கப்படுவது பொருத்தமானது என்பது இப்பேச்சில் முன்வைக்கப்பட்டது.

**முஸ்லிம்கள் :**

அதேநேரத்தில் முஸ்லிம்கள் ஒரு தனித்துவமான இனமா? என்ற அம்சம் ஒரு வினாவின் அடிப்படையில் இப்பேச்சில் நோக்கப்பட்டது. காரணம், முஸ்லிம்கள் சமயரீதியான ஒரு குழுவாக இருப்பதனால் எவ்வகையில் அக்குழு ஒரு தனித்துவமான இனக்குழுவாக நோக்கப்பட முடியும் என்ற வினா இப்பேச்சில் எழுப்பப்பட்டது.

முஸ்லிம்கள் சமய அடிப்படையில் ஒரு தனித்துவமான இனமாகக் கொள்ளப்பட முடியுமா என்ற அம்சம் கோட்பாட்டு ரீதியான, ஆய்வுரீதியான பல வினாக்களை எழுப்புகின்றன. இந்த அம்சம் மிகக் கவனமாகப் பரீட்சிக்கப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டது. இந்த அடிப்படையில், இலங்கையில் முஸ்லிம்கள் ஒரு தனித்துவமான இனமா? அல்லது குழுவா? இம் மக்கள் தனித்துவமான வரலாற்றுப் பாரம்பரியங்களைக் கொண்டவர்களா? என்பதிலும் சாதக பாதக ஆய்வுகள் நிறைய உள்ளன.

இவ்வினாக்களுக்கெல்லாம் விடைகாண உலகளாவிய ரீதியில் இஸ்லாம் சமயத்தைப் பின்பற்றுகின்ற முந்நூறுக்கும் அதிகமான மக்கள் குழுக்களாகக் காணப்படும் முஸ்லிம்கள் சமய அடிப்படையைக் கொண்ட இனமாகக் கருதப்படுகின்றார்கள் என்ற ஆய்வுரீதியாக நிரூபிக்கப்பட்ட அம்சம் இங்கு முன்வைக்கப்பட்டது.

உதாரணமாக, மத்தியகிழக்கில் இஸ்லாமியத் தனித்துவத்தை அடிப்படையாகக் கொண்ட இனங்களையும், இந்தியாவிலும் கிழக்காசியாவிலும் இஸ்லாமிய சிறுபான்மையினர் எவ்வாறு தனி இனமாகக் கொள்ளப்படுகின்றனர்

என்ற அம்சங்கள் எடுத்துக்கூறப்பட்டன. ''இஸ்ரேலிஸ்'' என்பவரின் ஆய்வுப்படி சீனாவில் காணப்படும் சிறுபான்மை முஸ்லிம்கள் இன, கலாச்சார அமைப்புரீதியாக சீனர்களாக இருந்தும்கூட முஸ்லிம் வழிவந்த தனித்துவமான இனமாகத் தங்களைக் கருதுவதும் அவ்வினத் தன்மையற்ற மற்ற மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்ற தன்மையும் இவரின் ஆய்வுகளில் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. அதே போலத் தென்இந்தியாவில் தமிழ்பேசும் முஸ்லிம்களையும் கேரளாவில் கேரள மொழிபேசும் முஸ்லிம்களையும் ஆராய்ந்த அறிஞர்களும் கூட இம்மக்களை மொழிரீதியாக அல்லாமல் சமயரீதியில் தனித்துவமான மக்களாக அடையாளம் கண்டிருக்கிறார்கள். இம்மக்கள் மத்தியில் சமய வழிவந்த இனப்பண்புகள் அபிவிருத்தி அடைந்திருக்கின்ற தன்மை ஆய்வில் அடையாளம் காணப்பட்டுள்ளது என்பது விளக்கப்பட்டுள்ளது. இதே அம்சங்கள் தாய்லாந்திலும், பர்மாவிலும், நைஜீரியாவிலும் செய்யப்பட்ட ஆய்வுகளில் வெளிக்கொணரப்பட்டிருக்கின்றன என்ற அம்சம் விளக்கப்பட்டது.

ஆகவே முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் ஒரு சமய வழிமுறை வந்த ஒரு தனித்துவமான மக்கள் குழுவாக அல்லது ஒரு தனித்துவமான இனமாகக் கொள்கின்ற / கொள்ளப்படுகின்ற தன்மை உலகளாவிய ரீதியில் காணப்படுகின்றது என்பது இப்பேச்சில் எடுத்துக் கூறப்பட்டது.

இதனடிப்படையில் இலங்கையில் சிங்கள மக்கள் மத்தியிலும் தமிழ் மக்கள் மக்கள் மத்தியிலும் சமமாகப் பரந்து வாழ்ந்துவரும் முஸ்லிம் மக்கள் தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளும் அதே நேரத்தில் தாங்கள் ஒரு தனித்துவமான இனம் என்றும், தனித்துவமான இனமாகக் கொள்ளப்பட வேண்டும் என்றும் கடந்த காலங்களில் வற்புறுத்தி வந்திருக்கின்றனர். தாம் தனித்துவமான இனம் என்ற மனோபாவம் இம்மக்கள் மத்தியில் மிக உறுதியாகக் காணப்படுகின்றமை ஆய்வுகளிலிருந்தும் நடைமுறையிலும் அவதானிக்கப்பட்டுள்ளது என்பது இப்பேச்சில் விளக்கப்பட்டது.

அந்த அடிப்படையில் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் தனித்துவமான இரு இனக்குழுக்களாகக் கொள்ளப்பட்டு இவ்விரு இன மக்களுக்கிடையிலான சாதகமான அத்துடன் முரண்பாடான உறவுகளின் அடிப்படைகள் இப்பேச்சில் ஆய்வுபூர்வமாக நோக்கப்பட்டது.

**தமிழ் - முஸ்லிம் உறவின் அடிப்படைகள் :**

இலங்கையில் புவியியல் ரீதியாக, பொருளாதார ரீதியாக, சமூக ரீதியாக, தமிழ் முஸ்லிம்உறவு முரண்பாடற்ற அடிப்படையில் காணப்படுகின்றது.

இலங்கையின் வட-கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கியதாக தொடர்ச்சியான புவியியல் அமைப்பு முஸ்லிம் - தமிழ் உறவின் அடிப்படையாகக் காணப்படுகின்றது.

இப்பிரதேசத்தில் வாழும் மக்களில் 87%மானோர் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டுள்ளனர். இங்கு தமிழர்கள் பெரும்பான்மையினராயும், முஸ்லிம்களும் சிங்களவர்களும் சிறுபான்மையினராகவும் வாழ்கின்றார்கள். முஸ்லிம்களும் தமிழர்களும் வட-கிழக்கில் ஒரே பிரதேசத்தில் வாழ்தல், ஒரே மொழியைப் பேசுதல் என்பதன் அடிப்படையில் இவர்களிடையே மிக நெருங்கிய உறவு பல வழிகளிலும் ஆழமாக நிலவ வேண்டியதற்கு நியாயமுள்ளது. இது பல்லாண்டுகளாக நிதரிசனமாகக் காணப்படுகின்றது. இவ்விரு மக்கள் குழுக்களின் கலாசார ஒற்றுமைகள் என்னும்போது மொழிரீதியாக தங்களைத் தமிழராகக் கொள்கின்ற முஸ்லிம்கள் தமிழ் மொழி ரீதியாகவும், தமிழ் கலாச்சார பாரம்பரிய ரீதியாகவும் பல ஒற்றுமைத் தன்மைகளைக் கொண்டிருக்கின்றனர். இதன் வெளிப்பாடுகளில் ஒன்றுதான் இன்று நினைவுவிழா எடுக்கும் எழுத்தாளர் சுபைர் இளங்கீரன் போன்றோர் தமிழுக்குத் தொண்டாற்றியுள்ளது பற்றி இங்கு எடுத்துக் கூறப்பட்ட விரிவுரைகளாகும்.

பொருளாதார அடிப்படையில் வட-கிழக்கானது ஒரு வளம் நிறைந்த பிரதேசமாக இருப்பதால் இம்மக்களிடையே நில அடிப்படையிலோ வேறு எவ்வழியிலோ பெரும்பிரச்சனைகள் கடந்த காலங்களில் இருக்கவில்லை. அதேபோல் தொழில்ரீதியில் வர்த்தகத்தில் முஸ்லிம்கள் தேர்ச்சியாகவும் தமிழர்கள் விவசாயத்திலும், கல்வியிலும் சிறப்புற்றிருப்பதாலும் பொருளாதாரரீதியாக முரண்பாடுகள் கடந்த காலங்களில் ஏற்படவில்லை. ஆதலால் இம்மக்களின் கடந்த பல நூற்றாண்டு வரலாறுகளின்படி இவர்கள் பொருளாதார, சமூக அடிப்படையில் முரண்பாடுகள் இல்லாமல் வாழ்ந்து வந்துள்ளார்கள். இவ்வொற்றுமைக்கான அடிப்படைகள் இன்றும் காணப்படுகின்றது என்பதுவும் முன்வைக்கப்பட்டது.

**தமிழ் முஸ்லிம் முரண்பாடுகள் :**

வட-கிழக்கில் தமிழ் முஸ்லிம் முரண்பாடானது 1985ம் ஆண்டிற்குப் பிறகுதான் ஏற்பட்டது. இங்கு ஏற்பட்ட யுத்த நிலைகளே இதற்குக் காரணமாகும். இன முரண்பாடுகள் இப்பிரதேசத்தில் அதிகரிக்கப்பட்டுள்ளதை அமெரிக்கரான ''றிட்ச்சாசன்'' என்பவரின் ஆய்வினை மேற்கோள்காட்டி, இதற்கான காரணம் 1985ற்குப் பிறகு இவ்விரு

இனங்களுக்கிடையில் கொள்கைரீதியாக கருத்துரீதியாக பல மாற்றங்கள் ஏற்பட்டு வந்தமை இங்கு சுட்டிக் காட்டப்பட்டது. இதில் தமிழ் மக்கள் 1983ற்குப் பிறகு வட-கிழக்கில் ஏற்படுத்தப்பட்ட அரசியல் சூறாவளியில் சிக்கி உயிர்ச் சேதம், பொருட்சேதம் என அடைந்ததால் கொள்கைரீதியாக தமது தனித்துவத்தை மேலும் வலுப்படுத்திக் கொள்ள வேண்டும் எனும் வேகமான இன உணர்வு பெற்றுள்ளனர். அதனால் தனித்தமிழ் ஈழத்திற்காக இம்மக்கள் போராட முனைந்தனர்.

முஸ்லிம்கள் மத்தியிலும் இதே காலப்பகுதியில் உலகளாவியரீதியில் ஆயதுல்லா கொமெய்னியின் புரட்சியைத் தொடர்ந்து தூய்மைப்படுத்தப்பட்ட இஸ்லாம் என்னும் மறுமலர்ச்சி ஏற்பட்டது. இதனூடாக இன, சமய ரீதியான தனித்துவமும், இனத்துவமும், இங்குள்ள இச்சமய ரீதியான முஸ்லிம் மக்கள் குழுவிடம் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதை நாம் காணலாம். இந்த முரண்பாட்டுக் காலப்பகுதியில் முஸ்லிம்களின் சமய அடிப்படையிலான அல்லது இன உணர்வானது அரசியல் அபிலாசைகளுடன் இணைந்ததாகக் காணப்படுவதற்குக் காரணம் தமிழ் மக்களின் வட-கிழக்குப் பிரதேசத்தை தனித் தமிழ்த் தாயகமாக மாற்ற வேண்டும் என்ற கொள்கைரீதியிலான மாபெரும் அபிலாசையின் பிரதிபலிப்பேயாகும் என்பது தெரிவிக்கப்பட்டது. இதற்கு ஆதாரமாக இலங்கை இந்திய ஒப்பந்தம் அதன் மூலமாக வட-கிழக்கு ஒருமொழி அலகாகி அதிகாரம் என்பது வட-கிழக்குக்கு நிதர்சனமாவதையும் இதேபோல் தமிழ் மக்கள் முன் தீர்வாக வைக்கப்பட்ட (படுகின்ற) எந்த ஒரு அரசியல் தீர்விலும் அதிகாரம் என்பது மத்திய அரசின் மட்டத்திலிருந்து பிரதேச மட்டத்திற்கு பரவலாக்கப்படுகின்ற தன்மை காட்டப்படுவதால் இந்த முஸ்லிம் மக்கள் பரவலாகும் அதிகாரத்தைத் தனித்துவம் என்றரீதியில் தங்கள் வயப்படுத்த ஆவலாக உள்ளார்கள் என்பது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் உதயத்தின் மூலம் நிதரிசனமாகவுள்ளது எனக் கூறினார். ஆகவே இந்த இரு மக்கள் குழுக்களுக்கிடையில் அரசியல் அபிலாசையுடன் இணைந்ததாக முரண்பாடும் வளர்ந்து வந்ததையும் இவைகள் வெளிச் சக்திகளால் தூண்டப்பட்டு உரமிடப்பட்டன என்பதையும் மறுக்காமல் இவைகளால் விளைந்த கலவரங்களால் வீணாக இவ்விரு இன மக்களும் உயிரிழப்பும் பொருட் சேதமுமே ஏற்பட்டது என்பது எடுத்துக் கூறப்பட்டது.

**தமிழ் முஸ்லிம் முரண்பாட்டைக் குறைக்க என்ன செய்ய வேண்டும் ?**

அடுத்து தமிழ் முஸ்லிம் முரண்பாட்டைக் குறைக்க முயற்சிக்கும் தன்மைகள் கவனத்திற் கெடுக்கப்பட்டது. இதில் வடக்கு கிழக்கு என்பது தமிழ்பேசும் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட அரசியல், புவியியல் அலகு என்பது இங்கு வாழும் இவ்விரு இன மக்களும் மொழி, சமூக, பண்பாட்டு, பாரம்பரியரீதியாக பல ஒத்த தன்மைகளைக் கொண்டுள்ளதால் இம்மக்கட் சமூகம் ஒருவருக்கொருவர் பங்களிப்பாக இருந்து சமூக கல்வி, பொருளாதார நலன்களைப் பெருக்கி நல்ல எதிர்காலத்தை ஏற்படுத்தக்கூடிய சாதகத் தன்மைகள் வடக்குக் கிழக்கு என்ற மொழி ரீதியிலான அலகில் தங்கியுள்ளதைக் குறிப்பிட்டார்.

அடுத்து வடக்குக் கிழக்கின் தமிழ் முஸ்லிம் மக்களின் பரம்பலின் அடிப்படையில் நோக்கி, இது ஒரு மொழிரீதியான அலகாக ஏற்றுக் கொள்ளப்படாவிடின், தமிழர்களின் பிரதேசம் ஒரு தொடர்ச்சியற்றதாகக் காணப்படுவதால் ஒரு புவியியல்ரீதியான ஓர் அலகுப் பிரதேசமாக மாற்றப்பட முடியாது என்பதையும், அதேபோல் அரசியல் வானில் இன்று பேசப்படும் அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் தனித்துவம் என்பது அங்கு தமிழ் முஸ்லிம் மக்கள் பிரிக்க முடியாமல் ஒன்றாக வாழுகின்ற தன்மையினால் நிதரிசனமற்றதாக்கப்படுகின்றது என்றும் சுட்டிக்காட்டி மொழிரீதியான உணர்வினால், ஒருமைப்பாட்டினால் அமைந்த ஒரு அலகுக்குள் இரண்டு இனங்களுக்கும் சாதகமாக அமையக் கூடிய வாய்ப்புக்கள் அதிகம் உள்ளதை வலியுறுத்தினார்.

**முடிவுரையாக :**

இவ்வுரையின் முடிவுரையாக, தமிழ் முஸ்லிம் முரண்பாடுகளைக் குறைப்பதற்கு, வட-கிழக்கு என்பது ஒரு மொழிரீதியான அலகாக ஏற்றுக் கொள்ளப்பட்டு தமிழ் பெரும்பான்மை மக்களின் அரசியல் அபிலாசைகள் நிறைவு செய்யப்படும் அதே நேரத்தில் இங்கு வாழும் சிறுபான்மை மக்களின் அரசியல் அபிலாசைகள், இனத் தனித்துவம் என்பன புறக்கணிக்கப்படாது நடவடிக்கைகள் முன் கொணரப்பட வேண்டும் எனவும் குறிப்பாக முஸ்லிம் மக்கள் சுதந்திரமாக நடமாடித் தாங்கள் சாதாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆயுத மற்றும் நீதியான உடனடிப் பாதுகாப்பு உத்தரவாதம் குறுங்காலத்தில் செய்யப்படவேண்டும் எனவும் அத்துடன் சமூகப் பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள் இவ்விரு மக்கள் குழுக்கள் முன் வைக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தினார். இந்நடவடிக்கைகள் சிறிய காலத்தில் ஏற்படுத்தப்பட்ட முரண்பாட்டை நீக்கி இன ஐக்கியத்தோடு கூடிய நீண்டகால சுபீட்சத்திற்கு இம்மக்களை இட்டுச் செல்லும் எனக் கூறித் தமது உரையை முடித்தார்.

## சங்கத்தின் பாதையிலே .... சந்தித்த சந்தோஷங்கள் மட்டும்.

பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச் சங்கத்தின் பாதையில் 62வது செயற்குழு சந்தித்த சங்கடங்களை இங்கே எழுதுவதா? இல்லை சந்தோஷங்களை எழுதுவதா? இல்லை எழுதாமலே விடுவதா? என்று நான் எழுதும் இக்கணம்வரை யோசித்ததுண்டு. சங்கடங்களை எழுதினால் மனச் சந்தோஷம் மறைந்து விடும். சந்தோஷத்தை எழுத நினைத்தால் சங்கடங்களே முன்வந்து நிற்கின்றன. அப்படியாயின் சங்கப் பாதையில் சந்தித்தவற்றை எழுத முயற்சிப்போம்.

எமது செயற்குழுவை நாம் பொறுப்பேற்றவுடன் உடனடியாக எம்மால் நிகழ்வுகளைத் தொடங்க முடியாமலிருந்தது. அனைத்துப் பீடங்களும் பரீட்சைக் காலத்தில் இருந்தமையே இதற்குரிய முக்கிய காரணமாயமைந்தது. ஆனால் அதன் பின்னரும் நிகழ்வைப் புதிய மாணவர் வரவேற்பு நிகழ்வில் ஆரம்பித்து விடுவோமென்றால், சில பீடங்களிலிருந்து மாணவர் வந்திருக்கவில்லை. சில பீடங்களுக்கு விடுமுறையாக இருந்தது. இவ்வாறாக தொடர் முட்டுக்கட்டைகள். இதனாற் தான் நாம் முதலில் நடத்திய புதிய மாணவர் வரவேற்பைத் தவிர்ந்த மற்றைய நிகழ்வுகளிற்கு கூடியவரையில் பீடங்களின் விடுமுறைகளைப் பார்ப்பதில்லையென்ற முடிவுக்கு வந்தோம். உண்மையில் இப்படியொரு முடிவு எடுத்திருக்காவிட்டால் ஏழு பீடங்களைக் கொண்ட பேராதனை வளாகத்தில் நிகழ்வுகள் நடாத்தவே முடியாமலிருக்கும் என்பது எமது அபிப்பிராயம்.

இங்கு கல்வி பயிலும் மாணவர்கள் எழுதும் சிறுகதை, கவிதையாயினும் சரி நாடகங்களாயினும் சரி அது பற்றிய பூரண அறிவு பெறாதவர்களாலேயே படைக்கப்படுகின்றன. பூரண அறிவு பெறாமலேயே மாணவர்கள் இவ்வளவு தூரம் சாதிக்கின்றார்கள் என்றால் அவர்களுக்கு சமகால இலக்கியப் போக்கையும் கொஞ்சம் அறிமுகப்படுத்தினால் என்ன? என்று நாம் முக்கிய இரு நிகழ்வுகளை நடாத்தினோம். அந் நிகழ்வுகளான கவிதை பற்றிக் கதைப்போம் வாருங்கள், நாடகப்பயிற்சிப்பட்டறை என்பன ஆர்வலர்களுக்கு மிகுந்த பயனளித்தது என்றால் அது மிகையில்லை.

வழமையாக நினைவுப் பேருரை என்று நினைவு விழாவிற்குரியவரைப் பற்றிப் பேசுவதே வழமை. இது மாணவர்களையும் பெரும் சங்கடத்தில் ஆழ்த்துவது உண்மை. நாம் நினைவுப் பேருரையில் மாணவர்களிற்குத் தேவையான சில விடயங்களைப்பற்றி பேசுமாறு விரிவுரையாளர்களைக் கேட்டிருந்தோம். அவர்களும் சிறந்த முறையில் நல்லதொரு பேருரையாற்றிருந்தனர். அவை மாணவர் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றமை எமக்கும் உற்சாகத்தைக் கொடுத்தது. அத்துடன் நாம் மூன்று நாட்கள் தொடர்ச்சியாக முதன்முறையாக "தமிழ்த்திரைப்பட விழா" ஏற்பாடு செய்திருந்தோம். அத்துடன் நாடகவிழா, தனிநபர் நடிப்புப் போட்டி என்பவற்றில் போட்டி முடிவுகள் அறிவிக்க இருக்கும் இடைப்பட்ட நேரத்தில் இன்றைய தகவ புரட்சியான இன்ரனெற், இலத்திரனியல் அஞ்சல் பற்றிய சிறு அறிமுக உரையை ஏற்பாடு செய்திருந்தோம். இவை ( ப தேவையான பொது விடங்களை இவ்வாறான நேர இடைவெளிகளில் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தலாம் ு நாம் நினைக்கின்றோம். ஏனெனில் தமிழ்ச் சங்கம் அறிவியற் பாதையிலும் தனது கவனத்தைச் செலுத்த வேண்டும். எம்மால் மிகவும் திறமையாக திட்டம் தீட்டி அதனைத் திறம்பட செய்ய முடியவில்லை.

இனிவரும் செயற்குழுக்கள் முன்பே திட்டம் தீட்டி இவ்வாறான அறிவியல் விடயங்களில் கவனம் செலுத்துதல் நன்று. இவை பற்றிய அறிமுக உரையோடு மட்டும் நின்று விடாது நாம் அதன் செயன்முறை விளக்கத்திற்காக கணணிக் கண்காட்சியொன்றும் ஒழுங்கு செய்திருந்தோம். பேராதனைப் பல்கலைக்கழகத்திலேயே முதன் முதலாக கணணிக் கண்காட்சி நடாத்திய பெருமை எம்மையே சேரும்.

இம்முறை நாடக விழாவில் ஐந்து நாடகங்கள் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் அவை ஒவ்வொன்றும் தனித் தனித் தன்மையோடு சிறப்பாயிருந்தன. இவை பற்றிய விமர்சனங்களை நாம் விரிவுரையாளர்களிடமிருந்து எதிர்ப்பார்க்கின்றோம். ஈழத்து நாடக வளர்ச்சியில் நாம் எந்தக் கட்டத்தில் இருக்கின்றோம் என்பது எமது மாணவர்களுக்கு விமர்சனமாய் முன்வைக்கப்பட்டால் அவர்கள் தம்மை வளர்த்துக் கொள்ளலாம் என நாம் கருதுகின்றோம். இந்த வகையில் கலைப்பீடத்தில் நுண்கலைத்துறை இல்லாதது ஒரு பெரிய இழப்பாகவே நாம் கருதுகின்றோம். இம்முறை நாடக விழா முழுக்க முழுக்க மாணவர்களின் பங்களிப்பிலேயே நடைபெற்றது மிகவும் சந்தோஷத்தைக் கொடுத்த ஒரு விடயம். பரிசுகளையும் நாடகவிழாச் செலவுகளையும் அவர்களே பொறுப்பேற்றிருந்தனர். இதே போன்று விரிவுரையாளர்களையும் அணுகினால் அவர்கள் ஏதாவது நிகழ்வை தங்கள் பங்களிப்பில் நிகழ்த்துவார்கள் என்று நாம் நினைக்கின்றோம். எமக்கிருந்த வேலைப்பளுவால் நாம் எல்லா விரிவுரையாளர்களோடும் அணுகிப் பேச முடியவில்லை. இனிவரும் செயற்குழு இம் முயற்சியினை மேற்கொண்டால் நிச்சயம் அவர்களுக்கு நல்ல ஒத்துழைப்பு விரிவுரையாளர்களிடமிருந்து கிடைக்கும் என்பது எமது எண்ணம்.

இம்முறை இளங்கதிர் வெளியீட்டு நிதிக்காக திருமலையில் "குறிஞ்சி நாதம்" என்ற பல்சுவைக் கதம்ப நிகழ்ச்சி மேடையேற்றப்பட்டது. இது திருமலை வாழ் மக்களின் ரசனைக்கும் பெருவிருந்தாயமைந்தது குறிப்பிடத்தக்கது. திரு-

மலை வாழ் மாணவர்களின் அளப்பரிய பங்களிப்பாலேயே இந்நிகழ்வு சாத்தியமானது. தமிழ்ச் சங்கத்தின் இந் நிகழ்வுக்காய் ஒரு கிழமைக்கு முன்பே சென்று தம் உடலுழைப்பை வழங்கிய மாணவர்களும் இந்த விடயத்தில் போற்றப்பட வேண்டியவர்கள். நான் அறிந்த வரையில் தமிழ்ச் சங்க நிகழ்வொன்றிற்காய் தமது விரிவுரைகள், ஆய்வுகூட வகுப்புகள் என்ற கல்வியியல் நடவடிக்கைகளைத் தியாகம் செய்து நிகழ்ச்சியை மேடையேற்ற முன் வந்த கலைஞர்களைக் கண்டதில்லை. இவ்வளவு ஆர்வமான மாணவர் குழாமுடன் நாமும் இணைந்து பணியாற்றினோம் என்று எங்கு சொல்லியும் பெருமிதப்படலாம். இச் செயல் வீரர்களுக்கு இம் முப்பதாம் இளங்கதிர் முழுக்கடப்பாடுடையது.

இவ் இதழிற்கு இன்னொரு சிறப்புண்டு உங்களுக்குத் தெரியுமா? இவ்விதழ் உலகம் பூராவும் உலா வரப்போகிறது. இனி நீங்கள் இளங்கதிரை இன்ரநெற்றிலும் பார்க்கலாம். ஆம். இனிமேல் உங்கள் படைப்புக்களை தரமாக எழுதுங்கள். ஏனெனில் இனி அவை பற்றிய விமர்சனம் உலகெங்குமிருந்தும் வரும். இவ் இளங்கதிர் சஞ்சிகையினை இன்ரநெற்றில் வெளியிட எம்முடன் பலர் ஒத்துழைத்தார்கள். பொறியியற் பீட கணித விரிவுரையாளராகவிருந்து பின்னர் மேற்படிப்புக்காய் அமெரிக்காவில் வதியும் திரு. த. கிருபாகரன் அவர்களின் முழு ஒத்துழைப்பு இல்லாவிடில் இச்சாதனை எமக்கு சாத்தியமாகியிராது. மற்றும் இங்கிருந்து எமக்கு உதவிகள் பலபுரிந்த பொறியியற்பீட விரிவுரையாளர் கலாநிதி வி. முத்துக்குமார சாமி, போதானாசிரியர்கள் கெ. உமாகாந்தன், ம.பத்மதேவன், நண்பர்கள் ந. பார்த்திபன், து. வசீகரன், வே. எ. மனோராஜ் ஆகியோருக்கும் எமது நன்றிகள்.

இம்முறை சில நிகழ்வுகளை நடாத்த என்று நாம் யோசித்திருந்தும் எமது சக்திக்கு மேலான காரணங்களால் நடாத்த முடியாமல் போய்விட்டது. சிங்கள மொழி வகுப்புக்களை நடாத்துவதற்கு துணை வேந்தரிடம் அனுமதி பெற்றிருந்தும் தகுதியான விரிவுரையாளர்கள் முன் வராதமையினால் நடைமுறைப்படுத்த முடியாமல் போய்விட்டது. தொடரும் செயற்குழு அதனை நிச்சயம் நடாத்திக் காட்டும் என்ற நம்பிக்கை எமக்குண்டு. விரிவுரையாளர்கள் மட்டும் பங்குபற்றும் பட்டி மண்டபம் மற்றும் சில நிகழ்வுகளை நடாத்த உத்தேசித்திருந்தோம். அதுவும் கால நேரங்கள் பொருந்தாமையால் நடாத்த முடியவில்லை. ஆனால் இவ்வளவு சிரமத்திற்கு மத்தியில் "காலத்தின் காலடி" என்னும் நாட்டுக் கூத்துப் பிரதிகளின் தொகுப்பு நூல் இம்முறை இளங்கதிரோடு வெளிவருகின்றது. இந்நூல் தமிழ்ச்சங்கத்தால் வெளியிடப்படும் முதலாவது நூல் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறாக இங்கு எழுதப்போனால் எவ்வளவோ எழுதலாம். ஆனாலும் சந்தோஷங்களை மட்டுமே உங்களுடன் பகிர்ந்து கொள்ள ஆசை என்பதால் இத்துடன் நிறுத்துவோம். எத்தனையோ வேதனைகளையும் சிலரின் ஏளனக் பேச்சுக்களையும் முதுகுக்குப் பின்னால் விமர்சிப்பவர்களையும் முகம் தெரியாமல் விமர்சிப்பவர்களையும் சுவர்களில் மட்டும் விமர்சிப்பவர்களையும் தாண்டி எம் செயற்குழு சிலவற்றை செய்து காட்டி இருக்கின்றது. இந்த வேதனைகளுக்கு எல்லாம் எம் நிகழ்வுகள் பற்றிய விரிவுரையாளர்களின் ஆர்வமான விசாரிப்புகளும் உற்சாகமான பங்களிப்புக்களுமே ஆறுதல் படுத்திய மருந்து எனலாம். அந்த வகையில் விரிவுரையாளர் என்ற நிலையிலில்லாது எம்மோடு நட்புறவோடு பழகிய எல்லா விரிவுரையாளர்களுக்கும் சிரம் தாழ்த்திய நன்றிகள். எமக்குத் தந்தையைப் போன்றும் நண்பர்களைப் போன்றும் என்ன தேவையென்றாலும் உதவிகளாகவும் ஆலோசனைகளாகவும் ஒத்துழைப்பு வழங்கிய எம் பெருந்தலைவர், பெரும் பொருள[illegible]ருவரையும் என்றும் நாம் மறக்கமாட்டோம். வரையறை போடாத இவர்களின் துணையுடனேயே எம்மால் இவ்வளவு தூரம் சிலவற்றை செய்து காட்ட முடிந்தது.

இந்த இடத்தில் எம் இதழாசிரியர் பற்றியும் நான் குறிப்பிடாவிடில் உண்மையில் குற்றவாளியாகிவிடுவேன். அச்சுப் பிழைபார்ப்பதும் பெண்கள் விடுதிகளுக்கு அடிக்கடி செல்வதுமே இதழாசிரியரின் தலையாய வேலை என்பது போலச் செயற்படும் இதழாசிரியர் போலல்லாது வித்தியாசமான சிந்தனைகளுடனும் அதற்குரிய முயற்சியும் நம்பிக்கையுமுடைய இரா. இரவிசங்கரை இதழாசிரியராகப் பெற்றதையிட்டு நாம் மிகுந்த பெருமையடையலாம். அவர் பணியின் மகத்துவம் இளங்கதிரினை வாசிக்கும் பொழுது நீங்கள் உணர்வீர்கள். எனக்கு வாய்ந்த செயற்குழு உறுப்பினர்களின் ஆர்வமும் ஒத்துழைப்புமே இளங்கதிர் தவிர்ந்த ஓர் வெளியீட்டிற்கு எம்மை பயமின்றி கால் வைக்கத் தூண்டியதெனலாம்.

ஆர்வமிக்க விரிவுரையாளர், மாணவர் குழாத்துடன் இணைந்து நாமும் சிலவற்றை இவ் வளாகத்தில் செயற்படுத்தினோம் என்ற அந்த இனிமையான நினைவுகளுடன், இனிவரும் செயற்குழு தமிழ்ச்சங்கத்தை இன்னும் முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்லும் என்ற நம்பிக்கையுடனும் அதற்கான வாழ்த்துக்களுடனும் என்னையும் இணைக்கின்றேன்.

நன்றி

தலைவர்,
தமிழ்ச் சங்கம்.

பிரியமுடன்
**பிரதீபன்**

# செயலாளர் அறிக்கை 96/97

பேராதனைப் பல்கலைக் கழகத் தமிழ்ச் சங்கத்தின் வரலாறு 1926 இல் இருந்தே ஆரம்பிக்கின்றது. ஆயுள்ரீதியாகப் பார்க்கும்போது 70 வயதைத் தமிழ்ச் சங்கம் அடைந்து விட்டாலும் தமிழ்ச் சங்கத்திற்கு நாம் 62 வது செயற்குழு. தமிழ்பேசும் மக்களுக்கென்றே பிரத்தியேகமாக ஏற்படும் பிரச்சனைகளால் சில வருடங்கள் செயற்குழுக்கள் செயற்பட முடியாமல் போய்விட்டது. ஆனால் தமிழ்ச் சங்க இதழாகிய இளங்கதிர் 1948 இலேயே முதன் முதலாய் வெளியிடப்பட்டது. அந்த வகையில் இவ்விதழ் 30 வது இதழ். துரிதப்பட்ட 96/97 கல்வியாண்டில் எமது பெருந்தலைவர் கலாநிதி. க.அருணாசலம், பெரும்பொருளாளர் திரு.வை.நந்தகுமார் ஆகியோரின் நேரடி வழிநடத்தலின் கீழ் நாம் செய்து முடித்த நிகழ்வுகளை அறிக்கையாகத் தொகுத்து சமர்ப்பிப்பதில் பெருமையடைகிறேன்.

### 28.02.96 ''பொதுக்கூட்டம்''

தமிழ்ச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் 96/97 கல்வியாண்டுக்கான செயற்குழு தெரிவும் புவியியல் அரங்கில் இடம்பெற்றன. எமது செயற்குழு தமிழ்ச் சங்கத்தைப் பொறுப்பேற்றுக் கொண்டது.

### 04.03.1996 ''கலைவிழாவும் இளங்கதிர் வெளியீடும்''

எமது சங்கத்தினுடைய முக்கியமான நிகழ்வாகிய கலைவிழாவும் இளங்கதிர் வெளியீட்டு விழாவும் இரு அமர்வுகளாக நடைபெற்றது. காலை அமர்வு, ஹெட்டியாராச்சி கலை அரங்கில் காலை 9.00 மணிக்கு கலாநிதி க.அருணாசலம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. துரதிர்ஷ்ட வசமாக தமிழ்சங்க கொடியேற்றல் நடைபெறாத போதிலும் தமிழ்த்தாய் வாழ்த்துடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. முதல் நிகழ்வாக ''பாரதியின் கனவுகளில் இன்று நனவாகி இருப்பது பெண் விடுதலையே!'' என்ற பட்டிமன்றத்தில் கொழும்பு, மொறட்டுவை பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க கலாநிதி துரை.மனோகரன் அவர்கள் நடுவராக கடமையாற்றினார். அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற கருத்தரங்கில் ''அதிகாரப்பகிர்வு இனப்பிரச்சினைக்கு தீர்வாகுமா?'' என்ற தலைப்பில் பேராசிரியர் அ.சிவராஜா அவர்களும் ''அதிகாரப்பரவலாக்கம் -தடைகளும் நிலைப்பாடுகளும்'' என்ற தலைப்பில் எஸ்.மனோரஞ்சன் அவர்களும் உரையாற்றினர்.

மாலை அமர்வு E.O.E பெரேய்ரா அரங்கில் மாலை 5.00 மணிக்கு இடம்பெற்றது. பிரதம விருந்தினராக பேராசிரியர் சி.தில்லைநாதன் அவர்களும் சிறப்பு விருந்தினராக பேராசிரியர் த.யோகரட்னம் அவர்களும் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர். மங்கள விளக்கேற்றலையும் தமிழ்த்தாய் வாழ்த்தையும் தொடர்ந்து S.லதாமதியினதும் S.துஷ்யந்தியினதும் பரதநாட்டியம் இடம்பெற்றது. கவிஞர் வ.ஐ.ச.ஜெயபாலன் அவர்கள் இளங்கதிர் வெளியீட்டை தொடர்ந்து ஆய்வுரையை சமர்ப்பித்தார். இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற ''நினைவுகளே நிலைமாறாயோ'' என்ற பேராதனை வளாக மாணவர்கள் அளித்த கவிதா நிகழ்வையும், கொழும்பு பல்கலைக்கழக மாணவர்கள் அளித்த ''ஈர்க்குத்தலைகள்'' என்ற நாடகத்தையும், மொறட்டுவை பல்கலைக்கழக மாணவர்கள் அளித்த ''ஓகோ பிரொடக்ஷன்'' என்ற நாடகத்தையும் தொடர்ந்து நிகழ்ச்சிகள் இனிதே நிறைவு பெற்றன. இதில் கலந்துகொண்டு சிறப்பித்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

### 28.08.96 ''புதிய மாணவர்களுக்கான வரவேற்பு விழா''

பல்கலைக் கழகத்திற்கு புதுத் தென்றலாய் வந்த தமிழ்பேசும் புதிய மாணவர்களை வரவேற்கும் முகமாக E.O.E பெரெய்ரா அரங்கில் சங்கத் தலைவர் ப.பிரதீபன் தலைமையில் வெகுசிறப்பாக நடைபெற்றது.

கீழைத்தேய இசைநிகழ்ச்சி, ''காதலின் பின் திருமணமா? திருமணத்தின் பின் காதலா?'' என்ற தலைப்பிலான பட்டி மண்டபம், பெண்கள் தனியே வழங்கிய வில்லிசை, நகைச்சுவை நாடகம், தாள லயம், மேலும் மேலைத்தேய இசை போன்ற கலை நிகழ்ச்சிகள் புதிய மாணவர்களால் சிறப்பே அளிக்கப்பட்டது. மேலும் பெருந்தலைவர்,

பெரும்பொருளாளர், ஆகியோர் வரவேற்புரை வழங்கி புதிய மாணவர்களை இனிதே வரவேற்றனர்.

இந்நிகழ்வில் நடைபெற்ற பட்டி மண்டபத்திற்கு தலைமை வகித்த தமிழ்த்துறை விரிவுரையாளர் திரு.வ.மகேஸ்வரன் அவர்களுக்கும் மேலும் கலைநிகழ்ச்சிகளை நெறிப்படுத்தி மெருகூட்ட உதவிய சிரேஷ்ட மாணவ மாணவிகளுக்கும், மேலைத்தேய இசை நிகழ்ச்சிக்கு ஒத்தாசை புரிந்த செல்வன்.ச.செந்தில்குமரனுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

### 5,6,7.09.96 ''புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்''

கொழும்பு ஜெயா புத்தகசாலையின் புத்தகக் கண்காட்சியும் விற்பனையும் விஞ்ஞானபீட மாணவர் பொது அறையில் எம்மால் ஒழுங்கு செய்யப்பட்டது. இக் கண்காட்சியும் விற்பனையும் செவ்வனே நடந்தேற தமது பங்களிப்பை நல்கிய மாணவ, மாணவிகளுக்கு எமது நன்றிகள்.

### 11.09.96 ''பேராசிரியர் எதிரிவீர சரத்சந்திர, பேராசிரியர் ம.மு.உவைஸ் இவர்களின் நினைவிலே ஒரு நிகழ்வு''

இருபெரும் பேராசிரியர்களான எதிரிவீர சரத்சந்திர, ம.மு.உவைஸ் ஆகியோரை நினைவுகூர்ந்து புவியியல் அரங்கில் தலைவர் ப.பிரதீபன் தலைமையில் ஒரு நிகழ்வு நடாத்தப்பட்டது. பெருந்தலைவர் கலாநிதி.க. அருணாசலம் அவர்களின் உரையைத் தொடர்ந்து கலைப்பீடாதிபதி K.N.O. தர்மதாச, முந்நாள் கல்விப் பணிப்பாளர் ஜனாப் S.M.A ஹசன் ஆகியோர் நினைவுரைகள் ஆற்றினர். பேராதனை வளாகத்தில் பேராசிரியர் எதிரிவீர சரத்சந்திரவுக்கு நினைவுவிழா எடுத்த முதற்சங்கம் தமிழ்ச்சங்கமே என்ற கலைப்பீடாதிபதியின் வாழ்த்து எமக்கு மேலும் பெருமை சேர்த்தது. இந் நிகழ்வில் பேராசிரியர் ம.மு.உவைஸ் அவர்களது வாழ்க்கைக் குறிப்பு, இஸ்லாமிய தமிழ் இலக்கியத்திற்கு அவர் ஆற்றிய தொண்டுகள், அவரால் வெளியிடப்பட்ட, மீட்கப்பட்ட இலக்கிய நூல்கள் என்பவற்றின் விபரங்கள் அடங்கிய சுருக்கக் குறிப்பு ஜனாப். S.M.A ஹசன் அவர்களால் தமிழ்ச் சங்கத்திற்கு வழங்கப்பட்டது. இதன் ''போட்டோ பிரதிகள்'' தேவையான மாணவ மாணவிகளுக்கு இலவசமாய் எம்மால் விநியோகிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் கலைப்பீட மாணவர் M.I.M சதாத்தின் நினைவுக்கவிதை இடம்பெற்றது. இந்நிகழ்வின் சிறப்பு நிகழ்ச்சியாக ''சமுதாய மேம்பாட்டிற்கு பெரிதும் உழைப்பவர்கள் ஆடவரா? மகளிரா?'' என்ற தலைப்பிலான பட்டி மண்டபம் பொறியியற்பீட போதனாசிரியர் திரு.வ.பவகரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் நினைவுப் பேருரையாற்றிய கலைப்பீடாதிபதி பேராசிரியர் K.N.O தர்மதாச முந்நாள் கல்விப் பணிப்பாளர் ஜனாப் S.M.A ஹசன் ஆகியோருக்கும் பட்டி மண்டபத்திற்கு தலைமை தாங்கிய பொறியியற்பீட போதனாசிரியர் திரு. வ.பவகரன் அவர்களுக்கும் மேலும் இந்நிகழ்வில் பங்கேற்றும் வருகைதந்தும் சிறப்பித்த அனைவருக்கும் எமது நன்றிகள்.

### 26.09.96 ''தார்மீக மன்றத்திற்கோர் தார்மீக உதவி''

கண்டி E.P.I கல்வி நிறுவனத்தின் தார்மீக கலைமன்றத்தின் கலைவிழாவில் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்கி எமது மாணவர்களின் நாடகம் ஒன்று அளிக்கப்பட்டது. இந்நாடகத்தை மெருகூட்ட உதவிய பொறியியற்பீட போதனாசிரியர்.பா.பாலநந்தகுமார் அவர்களுக்கும், இந்நாடகத்தில் பங்கேற்ற முதலாம் வருட பொறியியற்பீட மாணவ மாணவிகளுக்கும் எமது நன்றிகள்.

### 04,05,06,10.96 ''திரைப்பட விழா''

என்றுமில்லாதவாறு தொடர்ச்சியாக 3 நாட்களுக்கு தமிழ்த் திரைப்பட விழா நடைபெற்றது. இவ்விழாவில் V.சேகரின் ''பொண்டாட்டி சொன்னா கேட்டுக்கனும்'', பாரதிராஜாவின் ''முதல்மரியாதை'', K.பாக்கியராஜின் ''சுந்தரகாண்டம்'' ஆகியன கலைப்பீட திரையரங்கில் காண்பிக்கப்பட்டது. இத்திரைப்படவிழா சிறப்பே நடந்தேற உழைப்பு வழங்கிய அனைவருக்கும் எமது நன்றிகள்.

### 19.10.96 ''மொரட்டுவையில் ஒரு பட்டி மண்டபம்''

மொறட்டுவ பல்கலைக் கழக தமிழ் இலக்கிய மன்றத்தின் அழைப்பையேற்று அவர்களால் நடாத்தப்பட்ட ''வாணிவிழா''வில் சிறப்பு நிகழ்வாய் இடம்பெற்ற கொழும்பு, மொறட்டுவை, பேராதனைப் பல்கலைக் கழகங்களுக்கிடையேயான பட்டிமண்டபத்தில் எமது பல்கலைக் கழகத்தின் சார்பாக தமிழ்ச் சங்கம் அனுப்பி வைத்த குழுவில் M.I.M சதாத் (கலைப்பீடம்) பொ.நக்கீரன் (பொறியியற் பீடம்), பா.பிரதாபன் (விஞ்ஞான பீடம்) ஆகியோர் பங்கேற்றுச் சிறப்பித்தனர். இவர்களுக்கு எமது நன்றிகள்.

### 27.10.96 ''கவிதை பற்றிக் கதைப்போம் வாருங்கள்''

கவிதை பற்றியதொரு தெளிவை ஏற்படுத்துமுகமாக எம்மால் ஒரு கவிதைப் பயிற்சிப் பட்டறை ஒழுங்கு செய்யப்பட்டது. இதில் கலாநிதி.M.A.நுஃமான், கவிஞர்.மு.பொன்னம்பலம், கவிஞர் சு.வில்வரத்தினம், சிரேஷ்ட விரிவுரையாளர் செ.யோகராசா ஆகியோர் கலந்து கொள்வதாக இருந்தும் தவிர்க்க முடியாத காரணத்தால் கவிஞர் சு.வில்வரத்தினம், செ.யோகராசா ஆகியோர் கலந்து கொள்ளவில்லை. எனினும் 30 க்கு மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்ற இந்நிகழ்வை மற்றைய இருவரும் மிகவும் சுவாரசியமாக நடாத்திக் காட்டினர். இந்நிகழ்வில் மிகவும் ஆர்வத்தோடு கலந்து கொண்ட கலாநிதி M.A. நுஃமான், கவிஞர் மு.பொன்னம்பலம் ஆகியோருக்கும், பங்கேற்ற மாணவ மாணவிகளுக்கும் எமது நன்றிகள்.

### 26.11.96 ''பேராசிரியர் க.கைலாசபதி அவர்களின் நினைவில் ஒரு நிகழ்வு''

மேற்படி நிகழ்வு பெருந்தலைவர் க.அருணாசலம் அவர்களின் தலைமையில் E.O.E பெரெய்ரா அரங்கில் நடைபெற்றது. பெருந்தலைவரின் சிறிய நினைவுரையுடன் இன்றைய சூழலில் மாணவர்களுக்கு தெளிவில்லாத ஆனால் பொதுப்படையான அரசியல் விடயமான ''இலங்கையின் சிறுபான்மை இன மக்களும் அரசியல் யாப்புகள் வரைதலும்'' என்ற தலைப்பில் அரசியல் விஞ்ஞானத்துறைப் பேராசிரியர் அம்பலவாணர் சிவராஜா அவர்கள் பேருரையாற்றினார். இதற்கு கிடைத்த பலரது வரவேற்பு எமக்கு மகிழ்வளித்தது. இதனைத் தொடர்ந்து கடந்த செயற்குழுவால் அறிமுகப்படுத்தப்பட்ட ''தனிநபர் நடிப்புப் போட்டி'' நடைபெற்றது. இப்போட்டிக்கு நடுவர்களாகப் பொறியியற் பீட விரிவுரையாளர்கலாநிதி R. சாந்தினி, திரு.S.V. ஸ்ரீதர், பொறியியற்பீட போதனாசிரியர் திரு.பா.பாலநந்தகுமார் ஆகியோர் இருந்து ஆண்கள் பிரிவில் 1ம் இடத்திற்கு பொ.நக்கீரன் (பொறியியற்பீடம்), 2ம் இடத்திற்கு ப.குகநேசன் (பொறியியற்பீடம்), இ.ருஷாந்தன் (விலங்கு மருத்துவபீடம்) 3ம் இடத்திற்கு ப.சிறீதரன் (பல்மருத்துவபீடம்) ஆகியோரையும் பெண்கள் பிரிவில் கலைப்பீட மாணவிகள் சி.சாந்தி, இரா. சர்மிளாதேவி, சி.மா. சத்தியநாயகி ஆகியோரை முறையே 1 ம்,2 ம் 3 ம் இடங்களுக்கும் தெரிவு செய்தனர். இப்போட்டிக்கு பெண் போட்டியாளர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே இருந்தமை குறையாக இருந்தது. மேலும் இந்த நிகழ்வில் Internet பற்றி ஒரு அறிமுக உரையை பொறியியற்பீடப் போதனாசிரியர் திரு.ந.சிவகுமார் நிகழ்த்தினார். இந்நிகழ்ச்சியில் உரையாற்றியும், நடுவர்களாகக் கடமை புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். அத்துடன் நிகழ்ச்சியில் பங்கு கொண்ட கலைஞர்களுக்கும் விசேடமாக இந்நிகழ்ச்சிக்கான பரிசுகளையும், செலவினையும் வழங்கிய பொறியியற்பீடப் போதனாசிரியர்கள் அனைவருக்கும் என்றென்றும் நன்றிகள்.

### 30.11.96, 1.12.96 ''நாடகப் பயிற்சிப் பட்டறை''

நாடகவிழாவிற்கு முன்பதாக போட்டி நாடகங்களின் தரத்தை உயர்த்துமுகமாக ஒரு நாடகப் பயிற்சிப் பட்டறை கிழக்குப் பல்கலைக் கழக நுண்கலைத்துறை விரிவுரையாளர் திரு.பாலசுகுமார், உதவி விரிவுரையாளர்கள் திரு.இன்பமோகன், திரு.தயாபரன் ஆகியோரின் அனுசரணையுடன் நடாத்தப்பட்டது. இதில் 30 க்கு மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றி நிறைந்த பயனைப் பெற்றனர். இப்பட்டறையை சிறப்புடன் நடாத்த உதவிய கிழக்குப் பல்கலைக் கழக விரிவுரையாளர்கள், இப்பட்டறைக்கான செலவின் ஒரு பகுதியை பொறுப்பேற்ற பல்மருத்துவ பீட இறுதி வருட மாணவர்கள், பங்கேற்ற மாணவ மாணவிகள் அனைவருக்கும் எமது நன்றிகள்.

### 07.12.96 ''நாடக விழா''

இரா.இரவிசங்கரின் ''கருவறை'', பா.மயூரனின் ''அரும்பு'', சு.கிருபாவின் ''அலைநடுவில்'' இ.ருஷாந்தனின் ''குழப்பம்'' சி.பகீரதியின் ''கண்ணீர்த் துளிகள்'' ஆகிய 5 நாடகங்கள் இவ்விழாவில் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது. **E.O.E.**பெரெய்ரா அரங்கில் நடந்த இவ்விழாவில் கடந்த வருடம் போலல்லாது ஒவ்வொரு நாடகமும் வெவ்வேறு பிரச்சினைகளை வெவ்வேறு கோணங்களில் அணுகியமை ரசிகர்களுக்கு நல்ல தீனியாக இருந்தது.

இப்போட்டிக்கு கலைப்பீட விரிவுரையாளர்கள் கலாநிதி.**M.A.** நுஃமான், ஜனாப் **M.S.M** அனஸ், பல்மருத்துவபீடத்தைச் சேர்ந்த டாக்டர் திருமதி தவவதனி பவகரன், பொறியியற் பீடத்தைச் சேர்ந்த போதனாசிரியர் திரு.பா.பால நந்தகுமார் ஆகியோர் நடுவர்களாக இருந்து 1 ம், 2 ம், 3 ம் இடங்களுக்கு முறையே ''அலை நடுவில்'', ''குழப்பம்'', ''அரும்பு'' ஆகிய நாடகங்களைத் தெரிவு செய்தனர். அத்துடன் சிறந்த நடிகர், சிறந்த நடிகை, நினைவில் நின்ற நடிகர், நினைவில் நின்ற நடிகை, சிறந்த நெறியாளர் என்பவற்றுக்கானோரும் சிறந்த பிரதியும் நடுவர்களால் தெரிவு செய்யப்பட்டன. இவ்விழாவில் நடுவர்களாக இருந்த அனைத்து பெரியோருக்கும் நன்றிகள்.

மேலும் இடையிற் கிடைத்த நேர இடைவெளியில் பொறியியற் பீடப் போதனாசிரியர் திரு.வ.பவகரன் இன்றைய விஞ்ஞானத் தகவல் புரட்சியான **"internet, e.mail"** பற்றிய விளக்கங்களை கூறி ஒரு உரையாற்றினார். இவருக்கும் எமது நன்றிகள்.

பரிசில்கள் எமது பெரும் பொருளாளர் திரு.வை.நந்தகுமார் அவர்களால் நிகழ்ச்சி இறுதியில் வழங்கப்பட்டது. முதற் பரிசுக்குரிய சுற்றுக் கேடயம் 2 ம் வருட பொறியியற் பீட மாணவர்கள் தமது மறைந்த நண்பன் பிறையன் ஞாபகார்த்தமாகவும், சிறந்த நடிகருக்கான பரிசை மிருக வைத்தியபீடத்தைச் சேர்ந்த இறுதி வருட மாணவர்களும் சிறந்த நடிகைக்குரிய பரிசை ''பல்கலைக்கழக ரஜனி ரசிகர்'' சார்பில் பொறியியற்பீட அன்பர் ஒருவரும், நினைவில் நின்ற நடிகர், நடிகைக்கான சுழற் கேடயங்களை சென்ற முறை 1 ம் பரிசைத் தட்டிச் சென்ற ''காட்டாறு'' நாடகக் குழுவும், மேடையமைப்பிற்கான செலவை பொறியியற்பீட இறுதி வருட மாணவ அன்பர் ஒருவரும், மிகுதிப் பரிசுகளிற்கான செலவும், இந்நிகழ்விற்கான செலவும் பொறியியற் பீட இறுதிவருட மாணவர்கள் (தெய்யோஸ்) உம் அன்பளிப்பாக வழங்கி இவ்விழாவை ஒரு மாணவர் விழாவாக சிறப்பித்தது மிக்க மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். இவர்கள் அனைவருக்கும் நாம் என்றென்றும் நன்றியுடையவர்களாவோம்.

இந்நாடக விழாவிற்காக உழைத்தும், பங்கு கொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

### 28-12-96 ''குறிஞ்சி திருமலையில் குறிஞ்சி நாதம்''

இயற்கை எழில் கொஞ்சும் திருக்கோணமலையில் எமது பல்கலைக்கழகம் முதன் முறையாக பலத்த பிரயத்தனங்களுடன் ''குறிஞ்சி நாதம்'' எனும் ஒரு பல்சுவைக் கதம்ப நிகழ்ச்சி நடாத்தப்பட்டு பெரு வரவேற்பைப் பெற்றது. காலை மாலை என இருமுறை நிகழ்ச்சியாக பலத்த கரகோஷங்களுக்கு மத்தியில் இனிதே நிறைவேறியது. காலையில் பாடசாலை மாணவர்களுக்கும், இலவசமாக ஆதரவற்ற சிறார்களுக்காக இந்நிகழ்வு நடாத்தப்பட்டது. மாலையில் எமது பெரும் பொருளாளர் திரு.வை.நந்தகுமார் தலைமையில், நகரபிதா திரு.பெ.சூரியமூர்த்தி அவர்களின் வாழ்த்துரையுடனும், திரு.தங்கத்துறை, பா.உ. அவர்களின் சிறப்புரையுடனும் சிறப்பே நிகழ்ந்தது.

இந்நிகழ்வில் ப.நிமலன், சி.பகீரதன் ஆகியோரின் நெறியாள்கையில் உருவான ''வாத்திய ப்ருந்தா'' கீழைத்தேய இசை நிகழ்ச்சி, எம்மால் நடாத்தப்பட்ட நாடக விழாவில் 1 ம் இடம் பெற்ற ''அலை நடுவில்'' நாடகம், ப.சிறிதரனின் ''ஒரு வேட்டி ஐம்பராகிறது'' நகைச்சுவை நாடகம், சிவரதி சிவபாலனின் பரத நாட்டியம், எமது சங்கத்தால் தயாரிக்கப்பட்டு **C.J.**முரளிதரனின் பிரதியாக்கத்தில் உருவான 'அபிமன்யு' மரபுவழி நாட்டுக்கூத்து, எமது சகோதர சங்கமாகிய சங்கீத நாட்டிய சங்கத்தின் அனுசரணையுடன் தொகுக்கப்பட்ட ''கீதாமிர்தம்'' மேலைத்தேய இசை நிகழ்ச்சி என்பன எல்லோரையும் குறிஞ்சியின் நாதத்தில் ஆழ்த்தி மகிழ்வான மனநிறைவைக் கொடுத்தது.

இந்நிகழ்வு எமது சங்கத்தின் நடவடிக்கை வடக்கு கிழக்கில் எமது பெயர் கூறுமளவிற்கு நடந்தது மட்டுமன்றி எமது சங்க நிதி நிலைமையை சீராக்க பெரிதும் உதவியுள்ளது குறித்து நாம் மகிழ்ச்சியும், பெருமையுடன் மனநிறைவும் அடைய வழிவகுத்துள்ளது.

பல சிரமங்களுக்கு மத்தியில் இந்த நிகழ்வுக்கான ஏற்பாடுகள் நடந்தன. கவனிப்பாரற்றுக் கிடந்த திருமலை கலாசார மண்டபத்தினை புதுப்பொலிவுறச் செய்து, நிகழ்ச்சிகளை செவ்வனே நிகழ்த்த அரங்க அமைப்புக்களையும், நிகழ்ச்சி ஏற்பாடுகளையும் செய்து திருமலையில் களம் அமைக்க என்னுடன் தோளோடு தோள் நின்று உழைத்த சக மாணவர்கள், பல்கலைக் கழகமல்லாத எனது நண்பர்கள் அனைவருக்கும் நாம் என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்.

திருமலையில் எமக்கு பேருபசரிப்பு நல்கி, நிதி, உணவு, தங்குமிடம், வாகனம், விளம்பரம், பொருள், மனத்தென்பு என்பன வழங்கி இந்த நிகழ்வுக்கான வெற்றிக்கு வழி அமைத்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

மேலும் இந்நிகழ்விற்கான சிறப்பு நன்றிகளாக திரு. பெ.சூரியமூர்த்தி, திருமலை நகரபிதா அவர்களுக்கும், பல்கலைக்கழகமல்லாது எம்முடன் இறுதிவரை நின்று உடலுழைப்பு வழங்கிய நண்பர்களுக்கும் பெரிதோ, சிறிதோ எமக்கு நிதியுதவி வழங்கிய அன்பர்களுக்கும், ஆரம்ப காலங்களில் என்னுடன் முழுமூச்சாக நின்று உழைத்த டாக்டர் சி.மதியழகன் அவர்களுக்கும், உணவு, இடவசதி செய்து உபசரித்த அன்பர்களுக்கும் உரித்தாகுக.

அத்துடன் தரமான நிகழ்ச்சி ஒன்றைப் பார்த்த திருப்தியை ரசிகர்களுக்கு அளித்த எமது மாணவ மாணவியருக்கும் பங்கு கொண்டு சிறப்பித்த அனைவருக்கும் நன்றிகள்.

29.12.96 அன்று எமக்கு ''அன்பு இல்லம்''த்தினால் விடுக்கப்பட்ட அழைப்பையேற்றுச் சென்று அங்குள்ளோரைச் சந்தித்து அளவளாவக் கிடைத்த சந்தர்ப்பம் எமது மாணவர் யாவருக்கும் இது மனதில் இருந்து அகற்ற முடியாத அனுபவமாக இருந்தது. அன்பு இல்லத்திற்கு எமது நன்றிகள்.

### 18.02.97 ''முதுபெரும் எழுத்தாளர் சுபைர். இளங்கீரன், முதுபெரும் கவிஞர் தருமு சிவராமு இவர்களின் நினைவில் ஒரு நிகழ்ச்சி''

இவ்விரு கலைஞர்கள் நினைவாக புவியியல் அரங்கில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் பெருந்தலைவர் கலாநிதி.க.அருணாசலம் அவர்களின் உரையைத் தொடர்ந்து இன்று கேள்விக்குறியாகி வரும் ''இலங்கையில் தமிழ் முஸ்லிம் உறவு'' பற்றி பேருரை ஒன்று கலாநிதி S.H. ஹஸ்புல்லா, முதுநிலை விரிவுரையாளர், புவியியற்துறை அவர்களால் நிகழ்த்தப்பட்டது. இவ்வுரையைத் தொடர்ந்து கலந்துரையாடல் ஒன்றும் அவரால் நடாத்தப்பட்டு மாணவர் இது குறித்து தெளிவுபெற வழிசமைத்தது குறிப்பிடத்தக்கது. இதனைத் தொடர்ந்து ''அறிவுக் கதவைச் சரியாகத் திறந்தால்'' எனும் தலைப்பிலான கவியரங்கம் பொறியியற்பீட போதனாசிரியர் திரு.வ.பவகரன் தலைமையில் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து தமது கல்விச் சாலையையே கேள்விக்குள்ளாக்கும், ''சமூக முன்னேற்றத்திற்குப் பல்கலைக் கழகங்கள் அவசியமா? அவசியமில்லையா?'' என்ற தலைப்பிலான பட்டிமண்டபம் தமிழ்த்துறை விரிவுரையாளர் திரு.வ.மகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பேருரை ஆற்றிய கலாநிதி S.H.ஹஸ்புல்லா பெரும்தலைவர் மற்றும் கவியரங்கத்திற்கு தலைமையாற்றிய திரு.வ.பவகரன், பட்டி மண்டபத்திற்கு தலைமையாற்றிய திரு.வ.மகேஸ்வரன் ஆகியோருக்கும் இந்நிகழ்ச்சிகளில் பங்குகொண்டு சிறப்பித்த மாணவ மாணவியருக்கும் இப்படியான நிகழ்வுகளுக்கு சமூகமளித்து உற்சாகப்படுத்திய அனைவருக்கும் எமது நன்றிகள்.

### 08.02.97 ''பெண்கள் பிரச்சினை பற்றியோர் கலந்துரையாடல்''

பெண்கள் மீதான ஒடுக்குமுறைகள் பிரச்சனைகள் பற்றிய கலந்துரையாடல் ஒன்று கொழும்பு கல்வி ஆய்வு மையத்தில் அவர்களின் அனுசரணையுடன் ஒழுங்கு செய்யப்பட்டது. பேராதனையிலிருந்து சிறுதொகை மாணவ குழாம் சென்று கலந்துரையாடி சிறப்பித்து இருந்தனர். பெண்கள் தொடர்பான இக் கலந்துரையாடலில் ஆய்வுமையம் சார்பாக செல்வி திருச்சந்திரன், பத்மா சோமகாந்தன், சுல்பிகா இஸ்மாயில், சாந்தி சச்சிதானந்தம் ஆகியோர் கலந்து சிறப்பித்து இருந்தனர். இவர்களுக்கு எமது நன்றிகள்.

### 10.03.97 ''கணணிக் கண்காட்சியும் புத்தக விற்பனையும்''

Internet -E Mail போன்ற தகவற் புரட்சி ஆக்கங்கள் பற்றிய சிறு அறிமுக செய்ன்முறை விளக்கத்திற்காக இக்

கண்காட்சி விஞ்ஞானபீட பொது அறையில் நடாத்தப்பட்டது. இந்நிகழ்வு கண்டி C.I.S. நிறுவன ஆதரவில் ஒரு நாள் நடந்தது. முதன்முதலாக வளாகத்தில் நடாத்தப்பட்ட இக் கணணிக் கண்காட்சியில் பல மாணவர்களும் ஆசிரியர்களும் கண்டு பயன்பெற்றதையிட்டு நாம் பெருமையடைகிறோம். இக் கண்காட்சி சிறப்புற உழைத்த அனைவருக்கும் எமது நன்றிகள்.

### 17,18.03.97 ''புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்''

எமது சங்கத்தின் செயற்பாடுகளில் மீண்டும் ஒருமுறை இக் கண்காட்சியும் விற்பனையும் கொழும்பு ஜெயா புத்தகசாலையில் ஆதரவுடன் இடம்பெற்றது.

2 நாட்கள் தொடர்ச்சியாக நிகழ்ந்த இந்தக் கண்காட்சி விற்பனையில் அநேக மாணவர்கள் பயன் பெற்றனர். இக் கண்காட்சியும் விற்பனையும் வெற்றிகரமாக முடிய உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது நன்றிகள்.

### ''கவிதை, சிறுகதைப் போட்டிகள்''

''இன்றைய இளைய தலைமுறையும் நாளைய எதிர்காலமும்'' என்ற கருப்பொருளிலான கவிதை, கட்டுரை, சிறுகதை என்பவற்றிற்கான போட்டிகள் நடாத்தப்பட்டன. இரண்டு வருடங்களாக நடாத்தப்படாமல் இருந்த இப்போட்டிகள் மீண்டும் எமது செயற்குழு காலத்திலேயே நடாத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. ஆனாலும் இப்போட்டிகளில் மாணவர்களின் பங்களிப்பு மிகவும் குறைவாகக் காணப்பட்டது வேதனைக்குரியதாக இருந்தது. அடுத்தடுத்த வருடங்களில் இப்போட்டிகளில் ஆர்வத்தோடு பங்குபற்றுமாறு மாணவர்களுக்கு அறைகூவல் விடுக்கிறோம்.

இப்போட்டியில் சிறுகதையில் 1 ம், 2 ம், 3 ம் பரிசுகளை முறையே சூசை அன்ரனிதாசனும் (விலங்கு மருத்துவபீடம்) சி.கருணாகரன் (பொறியியற் பீடம்) ந.சந்திரிகா (விலங்கு மருத்துவ பீடம்) ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

போட்டிக்கு வந்த கவிதைகளில் ஒரேயொரு கவிதை மட்டும் இளங்கதிரில் பிரசுரிக்கத் தகுதி பெற்றது. தரமான கவிதைகள் வராமையினால் இப்போட்டிக்கான பரிசுகள் வழங்கப்படவில்லை.

கட்டுரைப்போட்டிக்கு எதுவிதமான ஆக்கங்களும் சமர்ப்பிக்கப்படாதது மிகவும் வேதனைக்குரியதும், எமது தமிழ் மாணவர் தங்கள் ஆற்றலை வெளிக்கொணரவில்லை என்பதுவும் ஆகும்.

இப்போட்டிக்கு நடுவராக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி. துரை.மனோகரன் கடமையாற்றினார். இவருக்கும் இப்போட்டியில் ஆர்வம் காட்டியோருக்கும் எமது நன்றிகள். எதிர்வரும் போட்டிகளில் தமிழ்பேசும் மாணவர்கள் முழு ஆர்வத்துடன் முயற்சியுடனும் பங்குபற்றி, இப்போட்டிகள் தரமான ஆக்கங்களுக்கிடையே இடம்பெற வைப்பார்கள் என நம்புகிறோம்.

எமது செயற்குழு நடவடிக்கைகள் பரந்தளவாக இம்முறை இருந்தமையால் எமது செயற்குழு உறுப்பினர்கள் முழுமூச்சுடன் உழைத்தனர். முக்கியமாக எம்முடன் தோளோடு தோள்நின்று உழைத்த சக மாணவர்கள், எமக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வழிநடத்திய எமது பெருந்தலைவர் கலாநிதி.க.அருணாசலம், பெரும்பொருளாளர் திரு.வை.நந்தகுமார் ஆகியோருக்கு எமது விசேட நன்றிகள்.

மேலும் நாம் சங்கத்தைப் பொறுப்பு எடுத்த வேளை, சங்கத்தின் நிதி நிலைமை ஆரோக்கியமானதாக இருக்கவில்லை ஆயினும் எமது பெருமுயற்சியால் இந்நிலைமை ஓரளவு சீராக்கப்பட்டுள்ளது. எமது காலத்தில் இடம்பெற்ற நிகழ்வுகளை விட இன்னும் தரமான, பயனுடைய நிகழ்ச்சிகளை எமது வருங்கால செயற்குழு செய்து முடிப்பார்கள் என்ற நம்பிக்கையில் அவர்களை வாழ்த்தி விடைபெறுகிறேன்.

நன்றி

**சி.பரணீஸ்வரன்**

**செயலாளர்.**

## என்றும் நன்றியுடன்.....

எந்தவொரு இதழுமானது தனி ஒரு மனிதனின் முயற்சியினால் மட்டும் உருவாகுவதில்லை. அநேகருடைய ஆலோசனைகளையும் சிந்தனைகளையும் உழைப்பையும் ஒன்றாகக் கொண்டே ஒரு மலர் உருவெடுப்பதுண்டு. அந்த வகையில் இவ்விதழின் மலர்விற்கு உறுதுணையாய் நின்ற அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்வதில் மகிழ்வடைகின்றோம்.

- முதற்கண் இம்மலர் சிறப்புற ஆசிகள் நல்கிய துணைவேந்தர், பெருந்தலைவர் மற்றும் பெரும்பொருளாளர் அவர்களுக்கும்
- நல்லாக்கங்களை தந்துதவிய பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் சக மாணவ மாணவிகளுக்கும்
- அட்டைப்படத்தையும் உட்படங்களையும் தந்துதவிய நண்பர்களுக்கும்
- கலந்துரையாடலை சிறப்பித்த செல்வி திருச்சந்திரன், சுல்பிகா இஸ்மாயில், சாந்தி சச்சிதானந்தன் மற்றும் பத்மா சோமகாந்தன் அவர்களுக்கும், கலந்துரையாடலை ஒழுங்குசெய்து தொகுப்பதில் உதவிய பத்மா சோமகாந்தனுக்கும், கலந்துரையாடலை பெண்கள் கல்வி ஆய்வு நிலையத்தில் நடத்த அனுமதி தந்த செல்வி திருச்சந்திரன் அவர்களுக்கும்
- இளங்கதிரின் நேர்காணலுக்காக நேரம் ஒதுக்கித்தந்த பேராசிரியர் சோ.சந்திரசேகரன், திரு.திருமதி. சிதம்பரநாதன், திரு.தெ.மதுசூதனன், வைத்தியகலாநிதி. கொ.றொ.கொன்ஸ்ரன்ரைன், திரு.நடராஜா மற்றும் கலாநிதி ஜயதிலக அவர்களுக்கும்
- கட்டுரைகளை சரிபார்த்துதவிய தமிழ்த்துறை விரிவுரையாளர் திரு.மகேஸ்வரன் அவர்களுக்கும்
- இளங்கதிரின் வளர்ச்சிக்காய் தனிப்பட்ட முறையில் எனக்கு ஆலோசனைகள் வழங்கிய பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் நண்பர்களுக்கும்
- இளங்கதிர் வெளியீட்டுக்கு நிதி சேகரிக்கும் முகமாக திருமலையில் தமிழ்ச்சங்கம் நடத்திய ''குறிஞ்சி நாதம்'' நிகழ்ச்சியில் பங்கேற்றும் உதவியும் புரிந்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும்
- விளம்பரங்களை உவகையுடன் தந்து எமக்கு உற்சாகமளித்த வர்த்தக அன்பர்களுக்கும், விளம்பரங்களை சேர்க்க எம்முடன் இணைந்து கொண்ட தோழர்களுக்கும்
- அச்சுக் கோர்வையினை சரிபார்ப்பதில் உதவிய நண்பர்கள் ஜெகதீஸ்வரன், செந்தில்குமார், சிவசுதன், சந்திரிகா, கோகிலா மற்றும் ஜனனிக்கும்
- தனிப்பட்ட முறையில் பலவகைகளிலும் தோளோடு தோள்நின்று உதவிய மதுசூதனன் அவர்களுக்கும் நண்பன் சுரேந்திரனுக்கும்
- இம்மலரை மிகவும் குறுகிய காலத்திற்குள் அச்சிட்டுத் தந்த 'டெக்னோ பிரின்ட்'டாருக்கும்
- மற்றும் தமிழ்ச்சங்க பெருந்தலைவர், பெரும்பொருளாளர், தலைவர், செயலாளர், பொருளாளர், செயற்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும்

இத்தால் எனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவர்களது பணி இனிவரும் காலங்களிலும் இளங்கதிரை மெருகூட்ட வேண்டும் என்று வாழ்த்தி விடைபெறுகிறேன்.

நன்றி

**இதழாசிரியர்**

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
நூலகம்

TECHNO PRINT
TEL: 077-301920